(2 VOLS) 165-1-1856

VOL. II.

CATECHETICAL SERMON

ON THE

GOSPELS

Qb: 52

M86

115365

65-1-1886

CATECHETICAL SERMONS

ON THE

GOSPELS.

VOL. II

From 329 to 648.

115365



செபம் இயேசுவினிமித்தமாகக் கேட்கப்படுமென்று செபிக்கிறோம்.

9. நாம் செபத்திலே என்னத்தைக் கேட்க வேண்டும்.

நமது ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் அடுத்த சகல ந[illegible]மைகளை[illegible]. ஏனென்றால் நீங்கள் என் நாமத்திலே பிதா[illegible]க் கேட்கப்போகிற யாவையும் உங்களுக்குக் கொடுப்பார்[illegible]ன்று இயேசு இரட்சகர் நமது வாக்கியத்திலே சொல்லுகி[illegible]ர்.

10. கிறிஸ்துநாதர் எந்த முகாந்தரத்தினால் நம்மைச் செ[illegible]பண்ணும்படிக்கு ஏவுகிறார்.

௧. தாம் நமது செபங்களைக் கேட்டுக்கொடுப்போமென்ற [illegible] வாக்குத்தத்தத்தினால். இந்த வாக்குத்தத்தத்தையும் அ[illegible] இரட்டிப்பான ஆணையினால் உறுதிப்படுத்தி: மெய்யாகவே, மெய்யாகவே, உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நா[illegible]மத்திலே பிதாவைக் கேட்கப்போகிற யாவையும் உங்களுக்குக் கொடுப்பார் என்கிறார் (௨௩).

௨. நமது செபத்தின் மூலமாய் நமக்கு வரும் சந்தோஷத்தினால். ஏனென்றால் இரட்சகர்: உங்கள் சந்தோஷம் நிறைந்ததாயிருக்கக் கேளுங்கள், அப்போது வாங்குவீர்கள் என்கிறார். நாம் கேட்ட காரியத்தை அடைந்தோமேயானால், [illegible] சந்தோஷம் நிறைவுள்ளதல்லவா.

11. பராபரன் சிலவிசை மனுஷரு[illegible] செபங்களைக் கேட்கிறதில்லையே. அப்படியிருக்க கிறிஸ்துநாதர்: நீங்கள் என் நாமத்திலே பிதாவைக் கேட்கப்போகிற யாவையும் [illegible]டுப்பாரென்று எப்படிச் சொல்லலாம்.

நாம் இயேசுநாதர் நா[illegible]த்திலே நமது நன்மைக்கென்றும் பிரயோசனத்துக்கென்றும் கேட்கப்போகிற யாவையும் அடைவோம் என்று அ[illegible]ர் நமக்கு வாக்குத்தத்தங் கொடுத்திருக்கிறார். மனுஷரோ சி[illegible] விசை தங்களுக்குக் கெடுதியான காரியங்களை, அதாவ[illegible]த்திய சீவனுக்குத் தடையாயிருக்கக் கூடிய ஐசுவரிய[illegible]ம், நீடிய ஆயுசு முதலியவைகளைக் கேட்கிறார்கள். ப[illegible]அப்படிப்பட்ட காரியங்களைச் சிலவிசை மனுஷருக்குக் [illegible]டுக்கிறதில்லை. மேலும் அவர் கிறிஸ்துநாதர் நாமத்தினாலே செய்யப்பட்ட செபத்தைக் கேட்போமென்று வாக்குத்த[illegible]ங் கொடுத்திருக்க, அவர்கள் அவரு[illegible]ய நாமத்தினாலே, அதாவது அவரை [illegible]சுவாசிக்கிற மெய்ய[illegible] விசுவாசத்தோடும், அவருடைய சித்தத்துக்கு அடங்கி[illegible] கீழ்ப்படித[illegible]டுங் கேட்காமலிருப்பதால, ஒன்றும் அடைய[illegible]மல் போகிறார்கள்.

படிப்பினை.

12. சுவிசேஷவாக்கியத்தின் இந்தப் பங்கிலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

செபத்தைப் பற்றிய கிறிஸ்துமார்க்கத்தின் முக்கிய போதகத்தைக் குறித்து நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. செபம் பண்ணுகிறது நமது கடமையாயிருக்கிறது, ஏனென்றால் நமது இரட்சகர்: கேளுங்கள், அப்பொழுது வாங்குவீர்கள் என்றதினாலே, அதுக்கு நம்மை ஏவி எழுப்புகிறார். மேலும் பராபரனுடைய கர்த்தர் அதைப் பற்றி விசேஷித்த கற்பனை கொடுத்துச் சொல்லுகிறதாவது: நெருக்கப்படுகிறநாளிலே நம்மை நோக்கிக் கூப்பிடு, அப்போது உன்னை விடுவிப்போம்; அதற்காக நீ நம்மை மகிமைப்படுத்துவாய் என்கிறார் (சங். ௫௰, ௰௫).

உ. நாம் நமது பட்சமுள்ள பிதாவாகிய பராபரனை நோக்கிச் செபம்பண்ண வேண்டும். ஏனென்றால் அவர் மாத்திரம் நமக்கு ஒத்தாசை செய்யக் கூடியவரும் சித்தமுள்ளவருமாயிருக்கிறார். தகப்பன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல், கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார் (சங். ௱௩, ௰௩). அவரைப்பற்றி நாமும் எசாயா தீர்க்கதரிசியோடு சொல்லக் கூடியதாவது: தேவரீர் எங்கள் பிதாவாமே, அபிரகாம் எங்களை அறியான். இஸ்ரவேலுஞ் சு நாங்கள் அறியப்பட்டவர்களும் அல்ல. கர்த்தாவே, தேவரீர் எங்கள் பிதாவும் எங்கள் மீட்பருந்தானே. இது பூருவகாலமுதல் உம்முடைய நாமம் (எசா. ௬௩, ௰௬).

௩. நாம் இயேசுநாதர் நாமத்திலே, அதாவது அவரை விசுவாசிக்கிற மெய்யான விசுவாசத்தோடு எப்போதுஞ் செபம் பண்ணவேண்டும். நாம் செபம்பண்ணி: எங்கள் பரமபிதாவே, நேசகுமாரன் நிமித்தம் எங்கள் செபத்தைக் கேட்டருளும் என்று சொல்வோமாக. ஏனென்றால் நாம் அப்படிச் செபம் பண்ணுகிறபோது, பராபரனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறவரும், நமக்காக வேண்டுதல் செய்கிறவருமாகிய இயேசுநாதர் நமக்காகப் [illegible] பேசுகிறார்.

௪. நமது செபம் கேட்கப்படுமோ என்பதைப் பற்றி நாம் சந்தேகப்படக் கூடாது. ஏனென்றால் இயேசுநாதர் நமது செபங்களைக் கேட்போம் என்று வாக்குத்தத்தங் கொடுத்தருமல்லாமல், ஆணையினாலும் இதை உறுதிப்படுத்தினர்.

இரண்டாம் பங்கு.

13. சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கிலே என்ன அடங்கியிருக்கிறது.



சீஷர்கள் அடையப்போகிற பெரிய வெளிப்படுத்தலைப் பற்றிய வாக்குத்தத்தம்.

14. கிறிஸ்துநாதர் இந்த வெளிப்படுத்தலைப் பற்றி என்ன வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார்.

இதுகளை உவமைகளாய் உங்களுடனே பேசினேன்; ஆனால் வேளைவரும், அப்போது நான் உவமைகளாய் அப்புறம் உங்களுடனே பேசாமல், வெளிப்பொருளாகப் பிதாவை உங்களுக்கு அறிவிப்பேன் என்று நமது வாக்கியத்திலே சொல்லுகிறார் (உரு).

15. கிறிஸ்துநாதர் உவமைகளாய் சீஷர்களோடு எப்படிப் பேசினர்.

அவர் தமது மரணத்தைப்பற்றிப் பேசி: உங்களை விட்டுப் போகிறேன் என்றும், தமது உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசி: நீங்கள் என்னை மறுபடியுங் கண்டு சந்தோஷப்படுவீர்கள் என்றுஞ் சொன்னர்.

16. இந்த அவருடைய வார்த்தைகள் தெளிவாயிருக்கதில்லையா.

ஆம், அது தன்னிலேதான் தெளிவாயிருந்தது. ஆனல் சீஷர்கள் அதை அறியக் கூடாமல், உவமை என்று நினைத்தார்கள்.

17. வேளைவரும், அப்போது உவமைகளாய் அப்புறம் உங்களுடனே பேசாமல், வெளிப்பொருளாகப் பிதாவை உங்களுக்கு அறிவிப்பேன் என்று கிறிஸ்துநாதர் சொல்லுகிறாரே, அது எந்தவேளை.

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்மேல் ஊற்றப்படுகிற வேளையாம். அப்போது அவர்கள் அதிக அறிவை அடைந்து, இயேசுநாதர் நாமத்தினால் சரியாய்ச் செபம் பண்ணி, பரம பிதாவாகிய பராபரனாலே கேட்கப்படக் கூடியவர்களாயிருந்தார்கள். ஆதலால் இரட்சகர்: அந்தநாளில் என் நாமத்திலே கேட்பீர்கள்; உங்களுக்காகப் பிதாவை நான் கேட்பேன் என்று உங்களுக்குச் சொல்லேன், ஏனெனில் நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் பராபரனிடத்திலிருந்து வந்ததை விசுவாசித்தபடியினாலே பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார் என்று நமது வாக்கியத்திலே சொல்லுகிறார் (உசு. உஎ).

18. சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்ற பிற்பாடு கிறிஸ்துநாதர் அவர்களுக்காகச் செபம்பண்ணவில்லையா.

ஆம், அவர் அவர்களுக்காகச் செபம்பண்ணினர். அவர் இந்நாள் வரைக்கும் நம்மெல்லாருக்காகவுஞ் செபம் பண்ணுகிறார். ஆகிலும் அவர் அவர்களுக்காக, அவர்கள் பரி

சுத்த ஆவியைப்பெறுமுன் செபம் பண்ணினதுபோல் செபம் பண்ணவில்லை. இயேசுநாதர் தாம் லோகத்திலிருந்தபோது இருந்த நிலைமைக்கும், தாம் லோகத்தை விட்டுப்போனபிறகு இருக்கிற நிலைமைக்கும் வித்தியாசம் உண்டென்பதைக் காட்டி: நான் பிதாவிடத்திலிருந்து புறப்பட்டு லோகத்திலே வந்தேன், மறுபடியும் லோகத்தைவிட்டுப் பிதாவண்டைக்குப் போகிறேன் என்றார் (௨௮).

[illegible]ஸ்துநாதர் எப்போது பிதாவிடத்திலிருந்து புறப்பட்டு லோகத்திலே வந்தார்.

தாம் மனுஷனாகப் பிறந்தபோது.

20. அவர் எப்போது லோகத்தைவிட்டு பிதாவண்டைக்குப்போனார்.

அவர் பரத்துக்கு ஏறினபோது. ஏனென்றால் அவர் இன்னம் காணப்படாத பிரகாரமாக எங்கும் நிறைந்தவராயிருந்தும், காணப்படுகிற பிரகாரமாக இப்போது பூமியில் இல்லை.

21. சீஷர்கள் இந்த வார்த்தைகளை அறிந்தார்களா.

ஆம், அவர்கள் அவருடனே: இதோ, இப்போது நீர் உவமை ஒன்றுஞ் சொல்லாமல், வெளிப்பொருளாய்ப் பேசுகிறீர் என்றார்கள் (௨௯). ஆம், அவர்கள் இயேசுநாதருடைய தேவத்துவத்தைப் பற்றியும், அவர் எல்லாத்தையும் அறிந்திருக்கிறதைப் பற்றியும், அவர் பிதாவிடத்திலிருந்து புறப்பட்டு, லோகத்திலே இரட்சகராக வந்ததைப்பற்றியும், அவருடைய இரட்சிப்பின் உத்தியோகத்தைப் பற்றியும் நல்ல அறிக்கை பண்ணினார்கள். ஆதலால் அவர்கள்: நீர் எல்லாத்தையும் அறிந்திருக்கிறீர் என்றும், உம்மை ஒருவன் கேட்க உமக்குத் தேவையில்லை என்றும் இப்போது அறிந்திருக்கிறோம்; இதினாலே நீர் பராபரனிடத்திலிருந்து வந்ததை விசுவாசிக்கிறோம் என்றார்கள் (௩௰).

## படிப்பினை.

22. சுவிசேஷ வாக்கியத்தின் இந்த இரண்டாம் பங்கினாலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. கிறிஸ்துநாதருடைய சீஷர்களால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. நாம் நமது சுய புத்தியினாலே மெய்க்கிறிஸ்து மார்க்க போதகங்களை அறியக்கூடாது. அது நமக்கு வெளிப்பொருளாயிராமல், மறைபொருளாயிருக்கிறது. ஏனென்றால் சென்ம சுபாவமான மனுஷன் பராபரனுடைய ஆவி



யின் நியாயங்களை ஏற்றுக்கொள்ளான்; ஏனெனில் அதுகள் அவனுக்குப் பைத்தியமாயிருக்கிறது. அதுகள் ஞானப்பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறபடியினாலே, அவன் அதுகளை அறியமாட்டான். (௧ கொரி. ௨, ௧௪).

உ. நாம் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே தேறவேண்டும். அப்படியே கர்த்தருடைய சீஷர்கள் அவருடைய பிரசங்கத்தினாலே மெய் அறிவில் தேறி: இப்போது நீர் எல்லாத்தையும் அறிந்திருக்கிறீர் என்றும், உம்மை ஒருவன் கேட்க உமக்குத் தேவையில்லை என்றும் அறிந்திருக்கிறோம் என்கிற நல்ல அறிக்கை பண்ணினார்கள்.

II. கிறிஸ்துநாதரைப்பற்றி நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. அவர் நம்மை பராபரனோடு ஒப்பரவாக்கின நமது மத்தியஸ்தராயிருக்கிறார். அவர் சீஷர்களுக்கு: உங்களுக்காகப் பிதாவை நான் கேட்பேன் என்று உங்களுக்குச் சொல்லேன், ஏனெனில் நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் பராபரனிடத்திலிருந்து வந்ததை விசுவாசித்தபடியினாலே பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார் என்றார் (௨௬. ௨௭). அதினால் அவர் நம்மைப் பராபரனோடு ஒப்பரவாக்கினார் என்றும், பரமபிதா இயேசு கிறிஸ்துவினிமித்தம் நம்மைச் சிநேகிக்கிறார் என்றும் ரூபிக்கிறார். ஒரே பராபரனும், பராபரனுக்கும் மனுஷருக்கும் ஒரே மத்தியஸ்தரும் உண்டு. இவர் எல்லாருக்காகவுந் தம்மை மீட்கும் பொருளாக ஒப்புக்கொடுத்த மனுஷனான கிறிஸ்து இயேசுதானே என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறான் (௧ தீமோ. ௨, ௫).

உ. கிறிஸ்துநாதர் எல்லாத்தையும் அறிந்த தேவனாயிருக்கிறார். ஆதலால் நாமும் அவரைக் குறித்து: நீர் எல்லாத்தையும் அறிந்திருக்கிறீர். உம்மை ஒருவன் கேட்க உமக்குத் தேவையில்லை என்று இப்போது அறிந்திருக்கிறோம் என்று சொல்லலாம். நாம் இதை எப்போதும் நினைத்து, எல்லாத்தையும் அறிந்திருக்கிற அவருக்கு நாம் கடைசிநாளில் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாயிருப்பதால், எல்லாத்திலும் அவருடைய சித்தப்படியே நடக்க வேண்டும். நாம் இதை நம்மாலே தான் செய்யக் கூடாதவர்களாயிருக்கிறபடியால், நாம் பராபரனை நோக்கிப் பெருமூச்சு விட்டு கேட்கவேண்டியதாவது: எங்கள் அருமையுள்ள பிதாவே, உமது நேசகுமாரன் வரும்போது, அவரை நாங்கள் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டு அவருக்கு உண்மையாய் ஊழியஞ்செய்ய ஆயத்தமாயிருக்கும்படிக்கு உமது நேசகுமாரனும்

எங்கள் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னிக்க உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், ஆமேன்.

## கர்த்தர் பரத்துக்கேறின பண்டிகை.

(ஞானப்பாட்டு ௭௪. ௭௬.)

சுவி. மாற்கு ௧௬, ௧௪—௨௰.

பிற்பாடு பந்தியிருக்கிற பதினொருவருக்கு அவர் தம்மை வெளிப்படுத்தி, எழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமல் போனதின் நிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தையும் இருதயக் கடினத்தையும் அதட்டினார். 15 அவர் இவர்களுக்குச் சொன்னதாவது; நீங்கள் லோகமெங்கும் போய், சிருஷ்டியாயிருக்கிற யாவருக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். 16 விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோவெனில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். 17 விசுவாசிக்கிறவர்களைப் பின்செல்லும் அடையாளங்களாவது: என் நாமத்தினால் பிசாசுகளைத் துரத்திவிடுவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; 18 சர்ப்பங்களை நீக்கிவிடுவார்கள்; சாவுக்கு இனமான யாதொன்றைக் குடித்தாலும், அது அவர்களுக்குச் சேதம் பண்ணாது; ஆரோக்கியமில்லாதவர்கள்மேல் கைகளை வைப்பார்கள், அப்போது குணமாவார்கள் என்றார். 19 கர்த்தரோவென்றால் அவர் இப்படிப் பேசினதுக்குப் பிற்பாடு, பரமண்டலத்துக்கு ஏறெடுத்துக்கொள்ளப்பட்டு, பராபரனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். 20 அவர்கள் புறப்பட்டு, எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தரோவெனில் அவர்களோடே கிரியையை நடப்பித்து, பின்செல்லும் அடையாளங்களினால் வசனத்தைத் திடப்படுத்தினார்.

1. இன்றைக்கு எந்தப் பண்டிகையைக் கொண்டாடுகிறோம்.

கர்த்தர் பரத்துக்கேறின பண்டிகையை. நமது இரட்சகராகிய இயேசுநாதர் காணப்படுகிற பிரகாரமாக இந்தப் பூமியை விட்டுப் பரத்துக்கு ஏறினார் என்பதை இந்த நாளிலே ஆசரிக்கிறோம்.

2. கிறிஸ்துநாதர் ஏன் பரத்துக்கு ஏறினார்.

௧. வேத எழுத்து நிறைவேறும்படியாக. ஏனென்றால் கிறிஸ்து பாடுபட்டு, மரித்து, உயிரோடெழுந்து, பரத்துக்கு ஏறுவார் என்கிற தீர்க்கதரிசனம் அவரைக் குறித்துச் சொல்லப்பட்டிருந்தது. பராபரன் ஆர்ப்பரிப்போடும், கர்த்தர் எக்காள சத்தத்தோடும் ஏறுகிறார். பராபரனைக் கீர்த்தனத்தின்மேல் கீர்த்தனம் பண்ணுங்கள், நம்முடைய இராசாவைக்



கீர்த்தனத்தின்மேல் கீர்த்தனம் பண்ணுங்கள் (சங்கீ. ௪௭, ௬. ௭).

௨. கிறிஸ்துநாதர் மனித இரட்சிப்புக்காகச் செய்ய வேண்டிய யாவையும் செய்து முடித்தபடியால் பரத்துக்கு ஏறினார். அவர் மனிதரை மீட்டு இரட்சிக்கும்படியாக லோகத்திலே வந்தார். இந்த வேலையை அவர் நிறைவேற்றி முடித்த பிற்பாடு, இவ்வுலகத்தை விட்டுத் தமது பரம பிதாவண்டைக்குத் திரும்பிப்போனார். அவர் அதைப்பற்றி: நான் பிதாவிடத்திலிருந்து புறப்பட்டு லோகத்திலே வந்தேன், மறுபடியும் லோகத்தைவிட்டு பிதாவண்டைக்குப் போகிறேன் என்றார் (யோவா. ௧௬, ௨௮).

௩. நமக்கு மோட்சத்தில் இடத்தை ஆயத்தம் பண்ணும்படியாக. கிறிஸ்துநாதர் சகலத்தையும் செயித்த வெற்றி வேந்தராக நமக்கு மோட்சத்தில் இடம் உண்டுபண்ணும்படி போயிருக்கிறார். அவர் தாம் பரத்துக்கேறுவதைக் குறித்துத் தமது சீஷர்களோடு பேசிச் சொன்னதாவது: நான் போய் உங்களுக்கு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினேனேயாகில், நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படிக்கு, நான் மறுபடியும் வந்து, உங்களை என்னண்டையில் சேர்த்துக்கொள்ளுவேன் என்றார் (யோவா. ௧௪, ௩).

3. நாம் இந்தப் பண்டிகையைச் சரியாய்க் கொண்டாடுவதெப்படி.

௧. நமது இரட்சகர் வெற்றி வேந்தராய்ப் பரத்துக்கேறினதற்காகவும், அவர் பரத்துக்கேறினதினால் நிறைவேற்றிமுடித்த இரட்சிப்பின் கிரியை... நாம் அவரை ஸ்தோத்திரிக்க வேண்டும். ஆதலால் நாம் தாவீது சங்கீதக்காரனோடு: என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமத்தை எல்லாம் மன்னித்து, உன் நோய்களை எல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கிமீட்டு, உன்னைக் கிருபையாலும் இரக்கங்களாலும் முடிசூட்டினார் என்று சொல்வோமாக (சங். ௱௩, ௨-௪).

௨. நம்மை மீட்டு இரட்சித்து, பரத்துக்கு ஏறி, பராபரனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, நமக்காக வேண்டுதல் செய்கிற நமது அருமை இரட்சகரை நாம் மெய் விசுவாசத்தோடு பற்றிக்கொள்ள வேண்டும். நாம் அவரை உண்மையாய் விசுவாசித்தால், பவுல் அப்போஸ்தலனோடு நாமும்: ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பவன் ஆர், கிறிஸ்துவானவர் மரித்தவர், இதிலும் அதிகமாக அவர் எழுந்திருந்தவருமாமே, அவர் பராபரனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறாரே,

அவர் நமக்காக வேண்டுதலும் செய்கிறாரே என்று சொல்லலாம் (ரோ. ௮, ௩௪).

௩. நாம் இச்சீவனிலே ஞானப்பிரகாரமாக கிறிஸ்துநாதரோடு பரத்துக்கேறவேண்டும். நாம் இப்படிச்செய்ய நமக்குப் பரம சிந்தை தேவை. இதற்கென்று பவுல் அப்போஸ்தலன் நம்மை எழுப்பிப் புத்திசொல்லுகிறதாவது: நீங்கள் கிறிஸ்துவுடனே கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து பராபரனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கும் இடத்திலுள்ள மேலானதுகளைத் தேடுங்கள்; பூமியின்மேல் உள்ளதுகளை அல்ல, மேலானதுகளைச் சிந்தியுங்கள் என்கிறான் (கொலோ. ௩, ௧. ௨).

௪. நாம் பாக்கியமான மரணவழியாய் பராபரனண்டைக்கும் நமது இரட்சகரண்டைக்கும் பரத்துக்கேற வாஞ்சையாயிருக்க வேண்டும். அதின் பேரில் பவுல் அப்போஸ்தலன் வாஞ்சையாயிருந்து: பிரிந்துபோய், கிறிஸ்துவுடனே இருக்க எனக்கு ஆசையுண்டு, ஏனெனில் அது மெத்தவுந் தாவிளை என்கிறான் (பிலிப். ௧, ௨௩).

4. இந்நாளுக்காகக் குறிக்கப்பட்ட சுவிசேஷ வாக்கியம் எதைப்பற்றியது.

இயேசுநாதர் பரத்துக்கு ஏறினதைப் பற்றியது.

5. கிறிஸ்துநாதர் எப்போது பரத்துக்கு ஏறினார்.

தாம் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்த நாற்பதாம் நாள்.

6. எந்த இடத்திலிருந்து பரத்துக்கு ஏறினார்.

எருசலேமுக்கருகான ஒலிவமலையிலிருந்து.

7. அப்போது கூட இருந்ததார்

அவர் தமது சீஷர்களாகத் தெரிந்துகொண்ட பதினொரு அப்போஸ்தலர்கள். ஏன் பதினொருபேர் மாத்திரம் இருந்தார்கள் என்றால், இயேசுநாதரைக் காட்டிக்கொடுத்த பன்னிரண்டாஞ் சீஷனாகிய யூதாஸ்காரியோத்து அவருடைய உயிர்த்தெழுதலுக்குமுன் நான்றுகொண்டு செத்தான்.

8. கிறிஸ்துநாதர் சீஷர்களை விட்டுப் பரத்துக்கேறுமுன் அவர்களுக்கு உபதேசம்பண்ணிச் சொன்னதென்ன.

௧. அவர் அவர்கள் அவிசுவாசத்தின் நிமித்தம் அவர்களைக் கடிந்துகொண்டார். ஏனென்றால் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தம்மை உயிரோடெழுந்தவராக வெளிப்படுத்தியிருந்தும், அவர்கள் அதை விசுவாசிக்கவில்லை. அதைப்பற்றி அவர்: பிற்பாடு பந்தியிருக்கிற பதினொருவருக்குத் தம்மை வெளிப்படுத்தி, எழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை, அவர்கள் நம்பாமல் போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவா



சத்தையும் இருதயக் கடினத்தையும் அதட்டினார் என்று நமது வாக்கியத்திலே சொல்லுகிறது (௰௪).

௨. அவர் அவர்களுக்குப் பரிசுத்த அப்போஸ்தல ஊழியத்தை ஒப்புக்கொடுத்தார். இந்த உத்தியோகம் என்னவென்றால்: அவர்கள் லோகம் எங்கும் போய், இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற யாவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று பிரசங்கித்து, அவர் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறதாம். அதைப்பற்றி இயேசுநாதர் கற்பித்ததாவது: நீங்கள் லோகம் எங்கும்போய்ச் சிருஷ்டியாயிருக்கிற யாவருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்பதே (௰௫. ௰௬).

௩. மனுஷர் சுவிசேஷத்தின் பரிசுத்த போதகத்தை விசுவாசிக்கும்படிக்கு, சீஷர்கள் விசுவாசத்துக்கு உதவியாகச் செய்யும் அடையாளங்களும் அற்புதங்களும் இன்னதென்று காட்டினார். எப்படியென்றால், அவர்கள் பிசாசுகளைத் துரத்தி, தாங்கள் படித்திராத பாஷைகளைப் பேசி, சர்ப்பங்களை நீக்கிவிட்டு, விஷமுதலிய சாவுக்கினமானதைக் குடித்தாலும் யாதொரு சேதமுமற்று, நோவாளிகளின்மேல் கைகளை வைப்பதினால் அவர்களைச் சுகப்படுத்துவார்களென்பதுதான். இதைப்பற்றி இயேசுநாதர் நமது வாக்கியத்திலே: விசுவாசிக்கிறவர்களைப் பின் செல்லும் அடையாளங்களாவது: என் நாமத்திலே பிசாசுகளைத் துரத்திவிடுவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள், சர்ப்பங்களை நீக்கி விடுவார்கள், சாவுக்கு இனமான யாதொன்றைக் குடித்தாலும், அது அவர்களுக்குச் சேதம்பண்ணாது, ஆரோக்கியமில்லாதவர்கள்மேல் கைகளை வைப்பார்கள், அப்போது குணமாவார்கள் என்கிறார் (௰௭. ௰௮).

9. இதெல்லாம் நிறைவேறிற்று.

ஆம், நிறைவேறிற்று என்பதற்குத் திருச்சபை சரித்திரமும் அப்போஸ்தலர் நடபடியும் சாட்சி. கர்த்தர் பரத்துக்கு ஏறினபிற்பாடு அப்போஸ்தலர் பெந்தெக்கொஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியைப் பெற்று பற்பல நவமான பாஷைகளைப் பேசினார்கள் என்றும் (நடபடி ௨, ௰௪), பேதுரு அப்போஸ்தலன் ஒரு சப்பாணியையும் (நடபடி ௩, ௪), எட்டு வருஷம் வியாதியாயிருந்த ஏநேயா என்றவனையுங் குணமாக்கினான் என்றும் (நடபடி ௯, ௩௪), பவுல் அப்போஸ்தலன் மெலித்தா என்கிற தீவில் இருக்கையில் தன் கையைச் சுற்றிக்கொண்ட விஷமுள்ள பாம்பை தீயிலே உதறி, சேதம் ஒன்

றும் இல்லாதிருந்தான்) என்றும் எழுதியிருக்கிறது (நடபடி. உ௮, ௫).

10. கிறிஸ்துநாதர் எப்படி பரத்துக்கு ஏறினார்.

கர்த்தரோவென்றால் அவர்களுடனே பேசினதற்குப் பிற்பாடு பரமண்டலத்துக்கு ஏற்றெடுத்துக்கொள்ளப்பட்டார், என்று நமது வாக்கியத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அதின்படியே இயேசு இரட்சகர் பூமியைவிட்டு காணப்படுகிற பிரகாரமாக வரவர உயரத்துக்கு ஏறினார். ஒரு மேகம் அவரை சீஷர்கள் கண்களுக்கு மறைக்கிறவரையில், அவர்கள் அவரைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

11. அப்போ கிறிஸ்துநாதர் எங்கே ஏறினார்.

பரமண்டலத்துக்கு, அதாவது, வானத்துக்கு ஏறினார்.

12. அவர் எந்த வானத்துக்கு ஏறினார்.

பராபரனை அவருடைய மகத்துவத்திலும் மகிமையிலுங் காண்கிற எல்லாப் பாக்கியவான்களுந் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் இருக்கிற வானத்துக்கு.

13. அவர் எந்த சுபாவத்தின்படி ஏறினார்.

தமது மனுஷ சுபாவத்தின்படி. ஏனென்றால் தம்முடைய தேவசுபாவத்தின்படியே, பிதாவுக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் இருக்கிற வல்லமையும் மகிமையும் அவருக்கும் உண்டு. ஆதலால் அவர் அதின்படி உயர்த்தப்படக் கூடாது. பின்னை எதினால் என்றால், அவர் தமது மனித சுபாவத்தின்படி சிலுவையின் மரணபரியந்தந் தாழ்த்தப்பட்டது எப்படியோ, அப்படியே அவர் பிதாவின் மகிமையினால் அதாவது, அவருடைய மகிமையான வல்லமையினால் மரித்தோரிலிருந்து எழுந்து, வானத்துக்கு ஏறினதினால் உயர்த்தப்பட்டார்.

14. கிறிஸ்துநாதர் மனித சுபாவத்தின்படி இப்பூமியில் இல்லையா.

ஆம், இருக்கிறார். ஏனென்றால் அவர் பராபரனுடைய வலது பாரிசத்தில் உளுக்கார்ந்திருக்கும்படிக்குப் பரமண்டலத்துக்கு ஏறினார். அவர் பரமண்டலத்துக்கு ஏற்றெடுத்துக்கொள்ளப்பட்டு, பராபரனுடைய வலது பாரிசத்தில் உளுக்கார்ந்தார் என்று நமது வாக்கியத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

15. பராபரனுடைய வலது பாரிசம் என்பதென்ன.

அவருடைய தெய்வீக வல்லமையும் எல்லாச் சிருஷ்டிகளின் மேலிருக்கிற ஆளுகையுமாம். ஏனென்றால் மனிதனுடைய வல்லமை அவனுடைய கையில், விசேஷமாய் அவனுடைய வலது கையிலிருப்பதால், பராபரனுடைய வல்ல



மை இங்கே உவமையாக அவருடைய வலது பாரிசம் அல்லது வலது கை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

16. கிறிஸ்துநாதர் பராபரனுடைய வலது பாரிசத்தில் உளுக்கார்ந்திருக்கிறார் என்பதற்கு அர்த்தம் என்ன.

அவர் அளவில்லாத நித்திய தேவ வல்லமையைப் பெற்றுக்கொண்டு, சர்வ லோகத்தின் மேலும் ஆளுகை செய்கிறார் என்பது அதற்கு அர்த்தமாம்.

17. கிறிஸ்துநாதர் மனித சுபாவத்தின்படியே இந்த தேவ வல்லமையை அடைந்திருக்கிறாரா.

ஆம், தேவ சுபாவத்தின்படியே அவர் அநாதியாய் தேவ வல்லமையுடையவராயிருக்கிறதுபோல், அவர் பரத்துக்கேறின பிற்பாடு தமது மனித சுபாவத்தின்படியும் இந்த தேவ வல்லமையை அடைந்திருக்கிறார். அதைப்பற்றி அவர்: வானத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றார் (மத். உ௮, ௰௮).

18. கிறிஸ்துநாதர் பரத்துக்கேறின பிற்பாடு என்ன சம்பவித்தது.

அவர் தமது சீஷர்களுக்குக் கொடுத்த கற்பனையும் வாக்குத்தத்தமும் நிறைவேறிற்று. அப்போஸ்தலர் பெந்தெக்கோஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, அவர்கள் சுவிசேஷத்தை, அதாவது நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய சந்தோஷ செய்தியைப் பிரசங்கிக்கும்படிக்கு லோகம் எங்கும் புறப்பட்டுப்போனார்கள். கர்த்தர் அவர்கள் பிரசங்கத்தை அநேக அற்புத அடையாளங்களினால் திடப்படுத்தினார். அதைப்பற்றி நமது வாக்கியத்திலே: அவர்கள் புறப்பட்டு, எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தரோவெனில் துணையாயக் கிரியை நடப்பித்து, பின்செல்லும் அடையாளங்களினால் வசனத்தைத் திடப்படுத்தினார் என்று எழுதியிருக்கிறது (உ௰).

படிப்பினை.

19. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. கர்த்தராகிய கிறிஸ்துவால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. அவர் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்து, பரத்துக்கேறி பராபரனுடைய வலது பாரிசத்தில் உளுக்கார்ந்திருக்கிறார். அதுதான் நம்முடைய வாக்கியத்திலே தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிற காரியம். அதை நாம்

நமது கிறிஸ்தமான விசுவாச அறிக்கையிலே: இயேசு கிறிஸ்து மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தருளினர், பரமண்டலங்களுக்கேறி, சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய பராபரனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார் என்று விசுவாசிக்கிறேன் என்பதாய் அறிக்கையிடுகிறோம்.

௨. அவர் தமது மனிதசுபாவப்படியேயும் சர்வத்துக்கும் வல்லவராயிருந்து, காணப்படாத பிரகாரமாய் நம்முடனே கூட இருக்கிறார். அவர் பரத்துக்கேறினதுமல்லாமல், பராபரனுடைய வலதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கிறார். அதாவது, அவர் காணப்படாத பிரகாரமாக எங்கும் நிறைந்தவராயிருந்து, சகலத்தையும் ஆளுகை செய்யும்படிக்கு, நித்திய தேவவல்லமையையும் மகிமையையும் அடைந்திருக்கிறார். அதினிமித்தம் அவர்: இதோ, நான் லோகமுடிவு மட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் (மத். ௨௮, ௨௰) என்கிற தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார்.

௩. கிறிஸ்துநாதர் நமக்காக வானத்தைத் திறந்திருக்கிறார். ஏனெனில் அவர் நமக்கு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணும்படியாகவே வானத்துக்கு ஏறினர்.

௪. நாமும் இரட்சிக்கப்பட்டு பரத்துக்கேற விரும்பினால், அங்கே ஏறிப்போயிருக்கிற இயேசு இரட்சகரை மெய் விசுவாசமாய்ப்பற்றிக் கொள்ளவேண்டும். ஏனென்றால் குமாரன் பேரில் விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு, குமாரனை விசுவாசியாதவன் ஜீவனைக் காண்பதில்லை, பராபரனுடைய கோபம் அவன்மேல் நிலை நிற்கும் (யோவா. ௩, ௩௬). இதினிமித்தம் கிறிஸ்துநாதர் பரத்துக்கேறுகையில்: விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்பதைப் பிரசங்கிக்கக் கற்பித்தார் (மாற். ௰௬, ௰௬).

௫. நாம் எப்போதும் பரமகாரியங்களைக் குறித்துச் சிந்தித்து, அதின் பேரில் வாஞ்சையாயிருக்கவேண்டும். நமது பொக்கிஷம் எங்கேயோ, அங்கே நமது இருதயமும் இருக்கும். நமது பொக்கிஷமாகிய இயேசு இரட்சகர் வானத்திலிருக்கிறார். நமது இருதயம் பரமண்டலத்தை நோக்கியிருந்தால், நாம் அவரை அங்கே முகமுகமாக அவர் இருக்கிற வண்ணமாய் அவரைப் பார்ப்போம். ஆகலால் நாம் அதின் பேரில் வாஞ்சையாயிருந்து பவுல் அப்போஸ்தலனோடே: நமது சஞ்சரிப்பு பரமண்டலங்களிலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராகிய இயேசு இரட்சகரை வரப் பார்த்துக்கொண்டும் இருக்கிறோமென்று சொல்வோமாக (பிலிப். ௩, ௨௰).



தாவீது சங்கீதக்காரனும் இந்த வாஞ்சைக்கு ஆவலாகிச் சொல்லுகிறதாவது: மான் தண்ணீர் நதிகளின்மேல் வாஞ்சையாய்க் கதறுமாப்போலே, என் ஆத்துமா உம்முடைய மேல் வாஞ்சையாய்க் கதறுகிறது, பராபரனே. என் ஆத்துமா ஜீவனுள்ள தெய்வமாகிய பராபரன்மேல் தாகமாயிருக்கிறது. நான் எப்போது பிரவேசித்து, பராபரனுடைய சந்நிதியில் காணப்படலாம் என்கிறான் (சங். ௪௨, ௨. ௩).

II. பரிசுத்த அப்போஸ்தலரால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. அவிசுவாசம் மகா பெரிய பாவம். ஏனென்றால் அதினிமித்தம் இயேசு இரட்சகர் தமது சீஷர்களைக் கடிந்துகொண்டார். எழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை, அவர்கள் நம்பாமல் போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தையும் இருதயக் கடினத்தையும் அதட்டினர். ஆம், அவர் எல்லா அவிசுவாசிகளைப் பற்றியும்: விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று சொல்லுகிறார்.

௨. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறதும் பரிசுத்த சாக்கிரமெந்துகளைப் பரிமாறுகிறதும் உண்மையுள்ள போதகரின் உத்தியோகம். ஏனென்றால் இயேசுநாதர் இந்த இரண்டு காரியங்களுக்காகத் தமது சீஷர்களுக்குக் கட்டளை கொடுத்துச் சொன்னதாவது: நீங்கள் லோகம் எங்கும் போய், சிருஷ்டியாயிருக்கிற யாவருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்றார் (௰௬). இயேசு இரட்சகர் இங்கே தமது சீஷருக்குப் புதிய ஏற்பாட்டின் முதலாம் சாக்கிரமெந்தாகிய ஞானஸ்நானத்தைப் பரிமாறும்படிக்கு எப்படி உத்தரவுகொடுத்தாரோ, அப்படியே சில நாட்களுக்கு முன்னே: என்னை நினைக்கிறதற்காக இப்படிச் செய்யுங்கள் என்று சொல்லி, புதிய ஏற்பாட்டின் இரண்டாம் சாக்கிரமெந்தாகிய பரிசுத்த இராப்போசனத்தைப் பரிமாறும் படிக்கும் கட்டளையிட்டார்.

௩. கர்த்தருடைய வசனமும் பரிசுத்த சாக்கிரமெந்துகளும் நமது இரட்சிப்புக்கடுத்த கிருபையின் எத்தனங்களாயிருக்கிறதினுல், அவைகள் மெய்விசுவாசத்தோடு கையாடப்படவேண்டும். ஏனென்றால் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று நமது இரட்சகர் சொல்லுகிறார்.

௪. நமது காலத்தில் அற்புதங்களும் அடையாளங்களும் தேவையில்லை. கிறிஸ்துநாதர் அப்போஸ்தலருடைய

பிரசங்கத்தை அநேகவிதமான அடையாளம், அற்புதங்களி னால் திடப்படுத்தினாரென்று நமது வாக்கியம் சொல்லுகிறது. அது திருச்சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆதிகாலத்துக்கு அவசியமா வேண்டியதாயிருந்தாலும், கிறிஸ்துவைப் பற்றிய போதகம் லோகம் எங்கும் திடப்படுத்தப்பட்டிருக்கிற இந்த நம காலத்துக்கு அற்புதங்கள் அவசியம் வேண்டியதில்லை.

20. கிறிஸ்துவைப்பற்றும் நமது விசுவாசத்தை நாம் எதினாலே திடப்படுத்தலாம்.

பராபரனுடைய வசனத்தினாலும் பரிசுத்த சாக்கிர மெந்துகளினாலுந்தான். ஏனென்றால் அவைகளே நமது இரட் சிப்புக்கடுத்த கிருபையின் எத்தனங்களாம். நாம் அவைக ளைக் கையாடுகிறதோடு பரிசுத்த ஆவியானவர் நமது விசுவா சத்தைத் திடப்படுத்தும்படிக்கு அவரையன்றி நாம் இயேசு இரட்சகரை அறிந்து, கர்த்தரென்று அழைக்கக் கூடாது. ஆதலால் நாம் அவரை நோக்கி:

மெய்யான விசுவாசத்தைத்
தந்து, வாழ்வில் சாவில் எங்களை
காப்பாற்ற, நாங்களும் உட்கருத்தாக
இப்போ தேவரீரை வேண்டிக்கொள்வோமாக, தேவாவியே.
வெளிச்சமே, ஒளிவிடும்,
இயேசுவை நன்றாய் அறிவியும்,
மோட்சத்தைத் திறந்த அவர்க்குள்ளாக
நிற்கவும் அடியார் வாத்தியாவீராக, தேவாவியே

என்று சொல்வோமாக (ஞானப்பாட்டு அச, க. உ).

இந்த நமது பராபரனாகிய பரிசுத்த ஆவிக்கு பிதா வோடும் குமாரனோடும் என்றென்றைக்கும் கனமும் மகிமை யும் துதியும் உண்டாவதாக, ஆமேன்.

## கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின சா-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு அஎ.)

சுவி. யோவா யகு, உசா—யசா, ச.

பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவ ரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்தியத்தி னுடைய ஆவி என்ற தேற்றரவாளன் வரும்போதோவெனில், அவர் எனக்காகச் சாட்சிகொடுப்பார். 27 நீங்களும் சாட்சிகொ டுப்பீர்கள்; ஏனெனில் ஆதிமுதலாய் என்னுடனேகூட இருந்தீர்கள்.



1 நீங்கள் இடறல் படாதபடிக்கு, இதுகளை உங்களுக்குச் சொன் னேன். 2 உங்களை ஆலயத்துக்குப் புறம்பாக்குவார்கள் என்கிறதும் தவிர, வேளை வரும், அப்போது உங்களைக் கொல்லுகிறவனெல் லாந் தான் பராபரனுக்கு ஆராதனை செலுத்துகிறவன் என்று நினைப் பான். 3 அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினாலே, இதுகளை உங்களுக்குச் செய்வார்கள். 4 அந்த வேளை வரும்போ தோவெனில், நான் அதை உங்களுக்குச் சொன்னேனென்று உங்க ளுக்கு நினைப்புண்டாக, இதுகளை உங்களுடனே பேசினேன். ஆனால் இதுகளை உங்களுக்கு ஆதிமுதலாய் நான் சொன்னதில்லை; ஏனெ னில் உங்களுடனேகூட இருந்தேன் என்றார்.

1. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தில் எத்தனை பங் குண்டு.

இரண்டு பங்கு.

### முதலாம் பங்கு.

2. முதலாம் பங்கு எதைப் பற்றியது.

இயேசுநாதர் பரிசுத்த ஆவியானவரைக் குறித்துக் கொடுத்த வாக்குத்தத்தத்தைப் பற்றியது.

3. அவர் பரிசுத்த ஆவியை ஆருக்கு அனுப்ப வாக் குத்தத்தங்கொடுத்தார்.

தம்முடைய சீஷர்களுக்கு. அதைப்பற்றி அவர் நமது வாக்கியத்திலே சொல்லுகிறதாவது: பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலி ருந்து புறப்படுகிறவருமாகிய சத்தியத்தினுடைய ஆவி என்ற தேற்றரவாளன் வரும்போதோவெனில், அவர் எனக்காகச் சாட்சிகொடுப்பார் என்கிறார்.

4. இந்த வாக்கியத்திலே பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இயேசுநாதர் சொல்லுகிறதென்ன.

அவர் இன்னார் என்பதையும், அவர் மனிதரிடத்தில் செய்யும் உத்தியோகம் இன்னதென்பதையுந் தெரிவிக்கிறார்.

5. பரிசுத்த ஆவியானவர் ஆர்.

அவர் பிதாவினிடத்திலும் குமாரனிடத்திலுமிருந்து புறப்படுகிற ஆவியாகிய மெய்யான தேவன், தேவத்துவத் திலே மூன்றாம் ஆள். அவரைப்பற்றி இயேசுநாதர் நமது வாக்கியத்திலே: பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படு கிறவருமாகிய சத்தியத்தினுடைய ஆவி எனக்காகச் சாட்சி கொடுப்பார் என்று சொல்லுகிறார்.

6. பரிசுத்த ஆவி பிதாவிடத்திலும் குமாரனிடத்தி லுமிருந்து புறப்படுகிறார் என்பதற்கு அர்த்தம் என்ன.

அவர் தமது தேவசுபாவத்தைப் பிதாவிடத்திலும் குமாரனிடத்திலுமிருந்து பெற்றுக்கொண்டார் என்பதே அதற்கு அர்த்தமாம். இது எப்படி சம்பவித்ததென்பதை நாம் அறியக் கூடாது. ஏனெனில் இது மகா பெரிய இரகசியம். பராபரனுடைய குமாரனாகிய இயேசுநாதர் எப்படி பிதாவிடத்தில் அநாதியாய்ப் பிறந்தார் என்பதை நாம் அறியக் கூடாதிருக்கிறதுபோல், பரிசுத்த ஆவியானவர் பிதாவிடத்திலுங் குமாரனிடத்திலுமிருந்து எப்படி புறப்படுகிறார் என்பதையும் அறியக் கூடாது.

7. பரிசுத்த ஆவியின் உத்தியோகத்தைக் குறித்து இயேசுநாதர் என்ன சொல்லுகிறார்.

அவர் அவரைத் தேற்றரவாளன் என்று அழைப்பதால், அவருடைய ஆற்றித்தேற்றுதலின் உத்தியோகத்தைக் குறித்தும், அவரைச் சத்தியத்தினுடைய ஆவி என்று அழைத்து: அவர் எனக்காகச் சாட்சிகொடுப்பார் என்று சொல்லுவதால், அவருடைய போதக உத்தியோகத்தைக் குறித்தும் பேசுகிறார்.

8. இயேசுவானவர் அவரை ஏன் தேற்றரவாளன் என்று அழைக்கிறார்.

அவர் விசுவாசிகளை அவர்களுடைய ஆத்தும, சரீர இக்கட்டுகளிலே ஆற்றித்தேற்றிப் பலப்படுத்துகிறபடியால்.

9. அவர் அவரை ஏன் சத்தியத்தினுடைய ஆவி என்று அழைக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் போதிப்பிக்கிறவார்த்தை எல்லாம் முழுசத்தியமாயிருக்கிறபடியால். அதினிமித்தம் கிறிஸ்துநாதர்: உம்முடைய வசனமே சத்தியம் என்று சொல்லுகிறார் (யோவா. ௰௭, ௰௭).

10. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்காக என்ன சாட்சிகொடுக்கிறார்.

கிறிஸ்துநாதர் பராபரனுடைய நித்தியகுமாரனும், நமக்காகப் பிறந்த மெய்யான மனுஷனுமாயிருக்கிறார் என்றும், அவர் நமக்காகப் பாடுபட்டு, மரித்து, உயிர்த்தெழுந்து, பரத்துக்கேறினதினால், நம்மைப் பாவம், நித்திய மரணத்திலிருந்து மீட்டு இரட்சித்தார் என்றும் சாட்சிகொடுக்கிறார்.

11. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்கு எப்படி சாட்சிகொடுக்கிறார்.

௧. தமது ஏவுதலால் எழுதப்பட்ட சத்திய வேதத்தினால். தீர்க்கதரிசனம் பூருவத்தில் மனுஷன் சித்தத்தினால் வராமல், பராபரனுடைய பரிசுத்த மனிதர் பரிசுத்த ஆவியி



ஞல் ஏவப்பட்டுப் பேசினார்கள் (௨ பேது. ௧, ௨௧). இவர்
பேரிலே விசுவாசிக்கிறவன் எல்லாம் இவருடைய நாமத்தினாலே
பாவமன்னிப்பைப் பெறுகிறானென்று தீர்க்கதரிசிகள் எல்லா
ரும் இவருக்குச் சாட்சிகொடுக்கிறார்கள் (நடபடி. ௰, ௪௩).

௨. தமது வெளியரங்கமான வெளிப்படுதலினால்.
கிறிஸ்துநாதர் ஞானஸ்நானம் பெற்ற சமயத்திலே பரிசுத்த
ஆவியானவர் புறாருபாய் அவர் மேலிறங்கி: அவர் மெய்யான
மேசியாவும் சர்வலோகத்தின் இரட்சகருமாயிருக்கிறார் என்
று யோவான் ஸ்நானகனுக்குச் சாட்சிகொடுத்தார். அதைப்
பற்றி அவன் தானே சொல்லுகிறதாவது: நானே சலத்தி
னல் உங்களை ஞானஸ்நானம் பண்ணுவிக்கிறேன், ஆனால் என்
னிலும் பலத்தவர் வருகிறார். அவருடைய பாதரட்சையின்
வாரை அவிழ்க்க நான் பாத்திரவான் அல்ல, அவர் உங்களைப்
பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம்
பண்ணுவிப்பார் என்றான் (லூக். ௩, ௰௬).

௩. பராபரனுடைய வசனத்தின் பிரசங்கத்தினால்.
எப்படியென்றால், பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலருக்
கும் கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியர் யாவருக்கும்
கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்கவும் அவருக்காகச் சாட்சி
கொடுக்கவும் அதிகாரங் கொடுக்கிறார். அதினிமித்தம் இயேசு
இரட்சகர் தமது சீஷர்களைப்பற்றி: நீங்களும் சாட்சிகொடுப்
பீர்கள், ஏனெனில் ஆதிமுதலாய் என்னுடனே கூட இருந்
தீர்கள் என்று சொல்லுகிறார்.

௪. விசுவாசமுள்ளவர்களுடைய இருதயத்திலே பரா
பரனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று அந்த ஆவியே
நம்முடைய ஆவியுடனே கூட சாட்சிகொடுக்கிறார் (ரோ.
அ, ௰௬).

படிப்பினை.

12. சுவிசேஷ வாக்கியத்தின் இந்தப் பங்கினாலே நாம்
என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. பரிசுத்த ஆவியானவரைப்பற்றி நாம் கற்றுக்
கொள்ளுகிறதாவது:

௧. அவர் மெய்யான தேவனாயிருக்கிறார். ஏனென்
றால் அவர் பிதாவிடத்திலிருந்து புறப்படுகிறார், அதாவது
தமது தெய்வீக சுபாவத்தை அடைந்திருக்கிறார் என்று
நமது வாக்கியம் சொல்லுகிறது. ஆதலால் அவர் மெய்யான
தேவனாயிருக்க வேண்டும். அதை நமது விசுவாசப்பிரமா
ணத்திலும்: பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன்,

அதாவது, மெய்யான தேவனாகிய பரிசுத்த ஆவியானவர் பேரில் நம்பிக்கையாயிருக்கிறேன் என்று சொல்லி அறிக்கையிடுகிறோம்.

உ. பரிசுத்த ஆவி பிதாவிடத்திலுங் குமாரனிடத்திலுமிருந்து புறப்படுகிறார். அவர் பிதாவிடத்திலிருந்து புறப்படுகிறாரென்று இயேசுநாதர் தமது வாக்கியத்திலே சொல்லுகிறார். ஆனால் அவர் குமாரனிடத்திலிருந்தும் புறப்படுகிறாரென்று விசுவாசிக்கிறோம். ஏனெனில் கிறிஸ்துநாதர் தாமே பரிசுத்த ஆவியை அனுப்புவதாகச் சொல்லுகிறார். மேலும் அவர் உயிர்த்தெழுந்த பிற்பாடு சீஷர்களுக்குத் தரிசனையாகி, அவர்கள்மேல் ஊதி, அவர்களுடனே: பரிசுத்த ஆவியை வாங்குங்கள் என்றார் (யோவா. உ௰, உஉ). ஆதலால் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவினிடத்திலிருந்தும் புறப்படுகிறார் என்று சொல்லுகிறோம்.

ங. பரிசுத்த ஆவியானவர் நம்மைச் சகல இக்கட்டிலும் ஆற்றித்தேற்றி, சகல பெலவீனத்திலும் நம்மைப் பெலப்படுத்துகிற தேற்றரவாளனாயிருக்கிறார். ஏனெனில் நாம் எப்படி எதை வேண்டிக்கொள்வோம் என்று அறியோம், ஆவியானவர் தாமே நமக்காகச் சொல்லுக்கடங்காத பெருமூச்சுகளால் வேண்டுதல் செய்கிறார் (ரோ. அ, உசா).

ச. நாம் பரிசுத்த ஆவியானவருடைய வார்த்தையை, அதாவது சத்திய வேதத்தையும் அதிலிருந்து எடுக்கப்பட்ட பிரசங்கத்தையும் ஏற்றுக்கொண்டு அதின்படியே நடக்க வேண்டும். ஏனென்றால் சத்தியத்தினுடைய ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர் நம்மைத் தப்பிதமான வழியிலே அல்ல, சத்தியவழியிலே நடத்துகிறார்.

II. அப்போஸ்தலரால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. இயேசுவுக்காகச் சாட்சிகொடுக்கிறது கர்த்தருடைய உண்மையுள்ள எல்லா ஊழியக்காரரின் முக்கிய உத்தியோகம். அவர்கள் லோகத்தின் ஒன்றான இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய போதகத்தைச் சுறுசுறுப்பாய் மனிதருக்குப் பிரசங்கிக்க வேண்டும். பரிசுத்த ஆவி எனக்காகச் சாட்சிகொடுப்பார், நீங்களும் சாட்சி கொடுப்பீர்கள் என்று இயேசு தமது சீஷர்களுக்குச் சொல்லுகிறார். ஆகையால் உண்மையுள்ள தேவ ஊழியர் யாவரும் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பிரசங்கிப்பார்கள். ஆம், அவர்களில் ஒவ்வொருவனும் பவுல் அப்போஸ்தலனோடு: நான் இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையுண்ட அவரையே ஒழிய, வேறொன்றையும் உங்களுக்குள் அறிந்திருப்பதைக்



காரியம் என்று எண்ணிக்கொண்டில்லை என்று சொல்லக்கடவான். (க கொரி. உ, உ).

உ. நாம் எல்லாரும் இயேசுநாதருக்காகச் சாட்சி கொடுக்க வேண்டும். நாம் அவரை விசுவாசித்து, நமது விசுவாசத்தை வாயினால் அறிக்கையிடும்படியாகப் பரிசுத்த ஆவியானவரும் பராபரனுடைய எல்லா ஊழியக்காரரும் கிறிஸ்துவுக்காகச் சாட்சி கொடுக்கிறார்கள். ஆதலால் நாம் மனுஷருக்கு முன்பாக இயேசுநாதரை அறிக்கையிட்டு, வார்த்தைகளினாலே அவருக்கு சாட்சி கொடுக்க வேண்டும். அதைத்தான் இரட்சகர் நம்மிடத்தில் கேட்டு: எவனாகிலும் மனிதர் முன்பாக என்னை அறிக்கை பண்ணினால், அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதா முன்பாக அறிக்கை பண்ணுவேன், ஆனால் எவனாகிலும் மனிதர் முன்பாக என்னை மறுதலித்தால், அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதா முன்பாக மறுதலிப்பேன் என்றார் (மத். ௰, ஙஉ. ஙங). மேலும் நாம் இயேசு இரட்சகரின் முன்மாதிரியின்படியே தேவபத்தியோடு உண்மையாய் நடக்கவும், நம்முடைய நடக்கையினாலும் அவருக்குச் சாட்சி கொடுக்கவும் பிரயாசப்பட வேண்டும். அதற்கென்று பவுல் அப்போஸ்தலன்: கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது என்று புத்திசொல்லுகிறான் (பிலிப். உ, ரு). இயேசுநாதரும்: என்னிடத்திலே கற்றுக்கொள்ளுங்கள், ஏனென்றால் நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன் என்கிறார் (மத். ௰க, உகூ).

## இரண்டாம் பங்கு.

**13.** சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கு எதைப்பற்றியது.

இயேசுவினுடைய சீஷர்களுக்கு வரப்போகிற துன்பங்களைப் பற்றியது.

**14.** இயேசு தமது சீஷர்களுக்கு எந்தத் துன்பங்களை முன்னறிவிக்கிறார்.

ஆலயத்துக்குப் புறம்பாக்கப்படுதலும் வேதனையுள்ள மரணத்தை அடைதலுமாகிய இருவித துன்பங்களை அவர்களுக்கு முன்னறிவிக்கிறார். ஏனெனில் உங்களை ஆலயத்துக்குப் புறம்பாக்குவார்கள் என்கிறதுந் தவிர, வேளை வரும், அப்போது உங்களைக் கொல்லுகிறவன் எவனும் தான் பராபரனுக்கு ஆராதனை செலுத்துகிறவன் என்று நினைப்பான் என்று இயேசுநாதர் தமது வாக்கியத்தில் சொல்லுகிறார் (௰சா, உ).

15. ஆலயத்துக்குப் புறம்பாக்குதல் என்றால் என்ன.

வெளியரங்கமான பாவங்களில் நடக்கிற குணப்படாத பாவிகளை பராபரனுடைய சபையின் ஐக்கியத்துக்கும், சபையாரின் நன்மை தீமை முதலிய காரியங்களுக்கும் விலக்கி வைக்குதலாம்.

16. இயேசுநாதர் தமது சீஷருக்கு எவ்விதமான மரணம் உண்டாகுமென்பதை முன்னறிவிக்கிறார்.

பெலவந்தத்தால் உண்டாகும் கொடூரமான மரணம். ஏனென்றால் அவர்கள் மற்ற மனுஷரால் கொல்லப்படுவார்கள். ஆம், அவர்களைக் கொல்லுகிறவனெல்லாம் தான் பராபரனுக்கு ஆராதனை செலுத்துகிறவன் என்று நினைப்பான் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார்.

17. அப்போஸ்தலரை அப்படியே கொன்றுபோட்ட மனுஷர் ஆர்.

யூதர்கள். மெய்க்கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தி, நிர்மூலமாக்கத் தேடின அவர்கள் தாங்கள்: பராபரனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறதாக நினைத்தார்கள். அவ்வளவு குருட்டாட்டம் அவர்களுக்கு இருந்தது.

18. அவர்கள் அவர்களை எப்படிக் கொன்றுபோடக் கூடும்.

பிதாவை அறிகிற மெய்யறிவு அவர்களுக்கு இல்லாததினால்தான். அதைப்பற்றி இயேசுநாதர்: அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினாலே, இதுகளை உங்களுக்குச் செய்வார்கள் என்கிறார் (௩).

19. கர்த்தர் அறிவித்த இந்தத் துன்பங்கள் யாவும் சீஷர்களுக்குச் சம்பவித்ததா.

ஆம், கர்த்தர் சொன்னபடியே அவர்களுக்குச் சம்பவித்தது. எப்படியென்னில், அப்போஸ்தலர் எருசலேம் தெய்வாலயத்தில் பிரசங்கம் பண்ணுகையில், அவர்கள் அதுக்குப் புறம்பாக்கப்பட்டு, காவலிலே வைக்கப்பட்டதுந்தவிர, வாரினால் அடிக்கப்பட்டு, இயேசுவின் நாமத்தைப்பற்றி இனி பேசாதிருக்கக் கற்பிக்கவும் பட்டார்கள். இதுவுமன்றி, ஏரோதே இராசா அப்போஸ்தலனாகிய யாக்கோபைச் சிரச்சேதம் பண்ணினான். சின்ன யாக்கோபென்ற அப்போஸ்தலன் தெய்வாலய உப்பரிகையிலிருந்து தாழத்தள்ளப்பட்டு, தடியால் அடியுண்டு இறந்தான். பேதுரு, அந்திரேயா என்ற அப்போஸ்தலர்கள் சிலுவையில் அறையப்பட்டார்கள். பவுல் அப்போஸ்தலன் பட்டையத்தால் போக்கிவிடப்பட்டான். பர்த்தொலொமேயு அப்போஸ்தலன் உயிரோடு தோல் உரிக்கப்பட்டு மாண்டான் என்று சொல்லப்படுகிறது. இப்படியாக



யோவான் அப்போஸ்தலனையும் இன்னும் ஒரு அப்போஸ்தலனையுந் தவிர மற்ற யாவருங் குரூர மரணத்துக்குத் தப்பிப் போனதில்லை.

20. கிறிஸ்துநாதர் அதை ஏன் சீஷர்களுக்கு முன்னறிவித்தார்.

அவர்கள் இடறல் படாமல் ஆயத்தமாயிருக்கும்படிக்கு, அதாவது இந்தத் துன்பங்கள் நிமித்தம் இயேசு இரட்சகரை விசுவாசிக்கிற விசுவாசத்தை விட்டு மருள விழாதபடிக்கு. ஆதலால் நீங்கள் இடறல் படாதபடிக்கு இதுகளை உங்களுக்குச் சொன்னேன் என்று கர்த்தர் நமது வாக்கியத்தில் சொல்லுகிறார்.

21. கர்த்தர் இவைகளை ஏற்கனவே தமது சீஷர்களுக்குத் தெரிவிக்காமல், அவர்களை விட்டுப்போகிற சமயத்தில் ஏன் சொன்னார்.

அவர்கள் இதுவரையில் அவரோடிருந்தபடியால், அவர்களுக்குத் துன்பமுமில்லை, துக்கம் துயரம் என்பதுமிருந்ததில்லை. அவர் இவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டி, நான் இவைகளை ஆதிமுதலாய் உங்களுக்குச் சொன்னதில்லை, ஏனெனில் உங்களுடனே கூட இருந்தேன் என்றார் (௪).

படிப்பினை.

22. சுவிசேஷ வாக்கியத்தின் இந்த இரண்டாம் பங்கிலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

௧. தெய்வபத்தியுள்ள மெய்க்கிறிஸ்தவர்கள் யாவரும் அநேகவித துன்பம், உபத்திரவங்களைச் சகிக்க வேண்டும். ஏனென்றால் கிறிஸ்துவுக்குள் தெய்வபத்தியாய்ச் சீவனம் பண்ண மனதாயிருக்கிற யாவருந் துன்பப்படுவார்கள் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறான் (௨ தீமோ. ௩, ௰௨).

௨. குணப்படாதவர்கள் பராபரனைச் சரியாய் அறியாமலிருக்கிறதே அவர்கள் விசுவாசிகளைத் துன்பப்படுத்துகிறதற்குக் காரணமாயிருக்கிறது. யூதர் இயேசுநாதரைக் கொன்றுபோடுகிறதற்கும் அதுவே காரணம். ஏனென்றால் அவர்கள் தெய்வ இரகசியமான ஞானத்தை அறிந்துகொண்டிருந்தார்களானால், மகிமையினுடைய கர்த்தரைச் சிலுவையில் அறைவதில்லை என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறான் (௧ கொரி. ௨, ௮). அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினாலே இதுகளை உங்களுக்குச் செய்வார்கள் என்று இயேசுநாதர் நமது வாக்கியத்திலே சொல்லுகிறார் (௩).

௨. ஒரு மெய்க்கிறிஸ்தவன் புறம்பாக்கப்பட்டாலும், கிறிஸ்துவின் நிமித்தம் தன் ஜீவனைக் கொடுக்க வேண்டியவனாயிருந்தாலும், அவன் இடறல்பட, அதாவது மெய்விசுவாசத்தைவிட்டு மருளவிழக் கூடாது. கர்த்தர் அதைத் தம்முடைய சீஷர்களிடத்திலும் எல்லா மெய்விசுவாசிகளிடத்திலும் கேட்கிறார். ஏனென்றால் அவர்: முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் என்றும் (மத். ௰, ௨௨), மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்போது ஜீவனுடைய கிரீடத்தை உனக்குத் தருவோம் என்றும் சொல்லுகிறார் (அறி. ௨, ௰).

23. நாம் நம்மால் தானே கர்த்தராகிய கிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசத்தில் உறுதியாயிருக்கக் கூடுமா.

கூடாது. கிறிஸ்துவை விசுவாசிக்கிற மெய்விசுவாசத்தை நம்மில் உண்டுபண்ணி, உறுதியாக்குகிறவர் பரிசுத்த ஆவியாகிய பராபரன். அவர் அதிலே நம்மைத் திடப்படுத்திக் காப்பாற்ற நாம் எப்போதும் அவரைக் கெஞ்சி வேண்டிக்கொள்ள வேண்டும்.

திரியேக பராபரனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக, ஆமேன்.

## பெந்தெகொஸ்தே பண்டிகையின் க-ம் நாள்.

(ஞானப்பாட்டு ௬௰.)

சுவி. யோவா. ௰௪, ௨௩—௩௧.

இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: ஒருவன் என்னைச் சிநேகித்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனை என் பிதா சிநேகிப்பார்; அவனண்டைக்கு நாங்கள் வந்து, அவனிடத்தில் வாசம் பண்ணுவோம். 24 என்னைச் சிநேகியாதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது. 25 நான் உங்களுடனே இருக்கக்கொள்ள, இவைகளை உங்களுக்குச் சொன்னேன். 26 ஆனால் பிதா என் நாமத்தினாலே அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே உங்களுக்கு எல்லாவற்றையும் போதித்து, நான் உங்களுக்குச் சொன்னதெல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். 27 சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குத் தருகிறேன்; லோகந் தருகிறதுபோல நான் உங்களுக்குத் தரேன்; உங்கள் இருதயம் கலங்கவும் வேண்டாம், பயமாயிருக்கவும் வேண்டாம். 28 போய் உங்களண்டைக்கு வருகிறேனென்று நான்



உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்கள்; என்னைச் சிநேகித்தீர்களானால், பிதாவண்டைக்குப் போகிறேனென்று நான் சொன்னதற்காகச் சந்தோஷப்படுவீர்கள்; ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவர். 29 அது சம்பவிக்கும்போது நீங்கள் விசுவாசிப்பதற்காக, இப்போது அது சம்பவியாததற்கு முன்னே அதை உங்களுக்குச் சொன்னேன். 30 இனி உங்களுடனே வெகுவாய்ப் பேசேன், ஏனெனில் இந்த லோகத்தின் பிரபு வருகிறான்; ஆனால் அவனுக்கு என்னிடத்தில் ஒன்றும் இல்லை. 31 நானோவெனில் பிதாவைச் சிநேகிக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கற்பித்தபடியே செய்கிறேன் என்றும் லோகம் அறியும்படிக்கு, எழுந்திருங்கள், இவ்விடம் விட்டுப் போவோம் வாருங்கள் என்றார்.

1. நாம் இன்றைக்குக் கொண்டாடுகிற பண்டிகைக்கு என்ன பெயர்.

பெந்தெகொஸ்தே பண்டிகை என்னும் பெயர். கிரேக்க வார்த்தையாகிய பெந்தெகொஸ்தே என்பதற்கு அர்த்தம் ஐம்பது. இப்பண்டிகை கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின ஐம்பதாம் நாளில் ஆசரிக்கப்பட்டபடியால், இதற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது.

2. இந்த நாளிலே சம்பவித்த விசேஷம் என்ன.

கர்த்தர் உயிர்த்தெழுந்த ஐம்பதாம் நாளும், அவர் பரத்துக்கேறின பத்தாம் நாளுமாகிய இன்றைக்குக் கர்த்தருடைய வாக்குத்தத்தமாகிய பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்மேல் ஊற்றப்பட்டார். ஏனென்றால் அக்கினியின் நாக்குகள் போலான பிரிக்கப்பட்ட நாக்குகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்களில் ஒவ்வொருவன் மேலும் வந்திருந்தது. எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவி தங்களுக்கு விளம்பக் கொடுத்தபடி மறுபாஷைகளிலே பேசத்துவக்கினார்கள் என்று இந்நாளின் திருபவாக்கியத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

3. இந்தப் பெந்தெகொஸ்தே பண்டிகையை நாம் சரியாய்க் கொண்டாடும்படிக்குச் செய்ய வேண்டியதென்ன.

௧. நாம் பரிசுத்த ஆவியானவர் இன்னார் என்பதைத் தியானித்து அறிய வேண்டும்.

௨. அவருடைய உத்தியோகமும், அவர் நமக்குச் செய்து வருகிற உபகாரங்களும் இன்னதென்று நாம் சிந்திக்க வேண்டும்.

௩. அவர் நமக்குச் செய்துவருகிற உபகாரங்களுக்காக நாம் நன்றியறிதலுள்ளவர்களாய் அவருக்கு உட்கருத்தான ஸ்தோத்திரஞ் செலுத்த வேண்டும்.

௪. அவரை நம்முடைய இருதயங்களில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4. பரிசுத்த ஆவியானவர் ஆர்.

அவர் தேவத்துவத்தில் மூன்றாம் ஆளும், அநாதியாய்ப் பிதாவினிடத்திலும் குமாரனிடத்திலுமிருந்து புறப்படுகிற மெய்யான தேவனுமாய் இருக்கிறார்.

5. பரிசுத்த ஆவியானவருடைய உத்தியோகம் என்ன.

௧. நாம் எதை விசுவாசிக்க வேண்டும், எப்படி நடக்க வேண்டும் என்று பிரசங்கிக்கப்படும் பாராபரனுடைய வசனத்தினாலே நமக்குப் போதிப்பிக்கிற போதகராயிருக்கிறார்.

௨. நம்முடைய சகல இக்கட்டுகளிலேயும் தம்முடைய பரிசுத்த வசனத்தினாலே நம்மை ஆற்றித்தேற்றிப் பலப்படுத்துகிற நமது தேற்றரவாளனாயிருக்கிறார்.

௩. நம்முடைய பாவங்களினிமித்தம் தம்முடைய பரிசுத்த வசனத்தின்படியே கடிந்துகொள்ளுகிற நமது கிருபையுள்ள காவலராயிருக்கிறார். பரிசுத்த ஆவியானவருடைய இந்த மூன்று உத்தியோகங்கள் பரிசுத்தமாக்குதல் என்கிற கிரியையிலே அடங்கியிருக்கிறது.

6. பரிசுத்தமாக்குதல் என்பதற்கு அர்த்தமென்ன.

மனுஷன் பாராபரனுக்கு முன்பாக நீதியும் பரிசுத்தமும் உள்ளவனாக எண்ணப்படுவதற்கு, அவனைப் பாவத்திலிருந்து சுத்திகரிக்குதலாம்.

7. பரிசுத்த ஆவியானவர் நம்மை எதினாலே பரிசுத்தமாக்குகிறார்.

௧. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசத்தினாலே. இருதயங்களை ஆராய்ந்திருக்கிற பாராபரன் விசுவாசத்தினால் இருதயங்களைச் சுத்தமாக்கினார் என்று பேதுரு அப்போஸ்தலன் சாட்சிகொடுக்கிறான் (நடபடி. ௰௫, அ. ௯).

௨. பரிசுத்தமும் பாராபரனுக்குப் பிரியமுமான குணத்தினாலும் நடக்கையினாலும். ஏனென்றால் ஆவியின் கனி: சிநேகம், சந்தோஷம், சமாதானம், நீடிய சாந்தம், தயவு, நற்குணம், விசுவாசம், மெந்தனவு, இச்சையடக்கம் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறான் (கலா. ௫, ௨௨). ஆதலால் பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பரிசுத்தமாக்கும்படிக்கு என்ன செய்கிறார் என்றால், அவர் நமக்குள் கிறிஸ்துவைப் பற்றும் மெய்விசுவாசத்தை உண்டுபண்ணி, அதிலே நம்மை உறுதியாக்கித் திடத்தி, காப்பாற்றி, நாம் பரிசுத்தமும் பாராபரனுக்குப் பிரியமுமான நடக்கையாய் நடக்கும்படிக்கு நம்மை ஏவி எழுப்புகிறார்.

8. பரிசுத்த ஆவியானவர் எந்த எத்தனங்களினால் நம்மைப் பரிசுத்தமாக்குகிறார்.



கிருபையின் எத்தனங்களாகிய பாராபரனுடைய வசனத்தினாலும் பரிசுத்த சாக்கிரமெந்துகளினாலுந்தான். எப்படியெனில், ஞானஸ்நானத்திலே பரமபிதா நமக்குப் பரிசுத்த ஆவியையும், நம்மை நீதிமான்களும் பரிசுத்தவான்களுமாக்குகிற இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தையுங் கொடுக்கிறார். அதைப்பற்றி பவுல் அப்போஸ்தலன்: அவர் நாம் தம்முடைய கிருபையினாலே நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுடைய நம்பிக்கையின்படி சுதந்தரராவதற்கு; நம்மை நாம் செய்திருந்த நீதியின் கிரியைகளினாலல்ல, தம்முடைய இரக்கத்தின்படியே மறுஜெனன முழுக்கினாலும், தாம் நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நம்முடைய மேல் பரிபூரணமாக ஊற்றின பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் இரட்சித்தார் என்கிறான் (தீத். ௩, ரு-எ). பரிசுத்த ஆவியானவர் இன்னம் எப்படி நம்மைப் பரிசுத்தமாக்குகிறார் என்றால், பாராபரனுடைய வசனத்தைக் கவனமாய்க் கேட்டு, வாசித்துத் தியானிக்கிறவர்களுடைய இருதயங்களிலே விசுவாசத்தை உண்டாக்கித் திடப்படுத்தி, பெலன் கிறிஸ்தமான நடக்கைக்கு அவர்களை ஏவி எழுப்பி, பெலனளிக்கிறார். விசுவாசம் கேள்வியினாலும், கேள்வியோ பராபரனுடைய வசனத்தினாலும் வரும் என்று பரிசுத்த பவுல் சொல்லுகிறான் (ரோ. ௰, ௰எ). இதுவுமல்லாமல் பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த இராப்போசனத்தினாலும் பரிசுத்தமாக்குகிறார். நாம் அதிலே இயேசு கிறிஸ்துவினுடைய திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் நமது இரட்சிப்புக்கென்று வாங்கும்போது, நம்முடைய இரட்சகரோடு அன்னியொன்னிய ஐக்கியமாயிருக்கும்படி பரிசுத்த ஆவியானவர் அதினால் நமது விசுவாசத்தைப் பலப்படுத்துகிறார். இப்படியே கிறிஸ்துவானவரும்: என் மாமிசத்தைப் புசித்து, என் இரத்தத்தைக் குடிக்கிறவன் எனக்குள்ளும் தரித்திருக்கிறான், நான் அவனுக்குள்ளுந் தரித்திருக்கிறேன் என்றார் (யோவா. ௬, ரு௬).

9. பரிசுத்த ஆவியானவர் நமக்குச் செய்து வருகிற உபகாரங்களுக்காக நாம் எப்படி அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும்.

நாம் அவரை வாயினால் புகழ்ந்து ஸ்தோத்திரித்து, விசேஷமாய் இருதயங்களில் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. அதற்காக நாம் செய்யவேண்டியதென்ன.

௧. நம்முடைய இருதயங்களைப் பிரகாசிப்பிக்கிறவரும், சகல சத்தியத்திலும் நம்மை வழி நடத்துகிறவருமாகிய

தம்முடைய பரிசுத்த ஆவியை பராபரன் நமக்குக் கொடுக்க வேண்டுமென்று நாம் அவரை வேண்டிக்கொள்ளவேண்டும். இதற்கென்று நாமும் தாவீது சங்கீதக்காரனோடு பெருமூச்சு விட்டு: கர்த்தாவே, சுத்த இருதயத்தை எனக்குச் சிருஷ்டியும், பராபரனே; நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதிதாய் உண்டாக்கும். உம்முடைய முகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். உம்முடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை எனக்குத் திரும்பக் கட்டளையிடும். உற்சாகமான ஆவி என்னைத் தாங்கட்டும் என்று கேட்கக் கடவோம் (சங்கீ. ௫௧, ௰௨-௰௪). ஆம், இந்தப் பரிசுத்த ஆவியானவரையே நமது இருதயங்களில் வரவழைத்து:

இறங்கும், தெய்வ ஆவியே,
அடியார் ஆத்துமத்திலே
பாவத்திரளை மாற்றும்,
தேவன்பின் தீயை அதில் மூட்டும்,
நீர் வீசுஞ்சோதியால் அன்பாய்
எச்சாதியாரையும் ஒன்றாய்
மெய் விசுவாசத்துக்குச் சேர்க்கும்
தமைக்குத் தோத்திரங்கள் ஏற்கும்.
அல்லேலூயா, அல்லேலூயா

என்று சொல்வோமாக (ஞானப்பாட்டு ௭௬, ௧).

௨. நாம் பரிசுத்த ஆவியானவருடைய ஏவுதலுக்கு இடங்கொடுத்து, கீழ்ப்படியவேண்டும். அவர் நம்மைச் சிநேகம், மனத்தாழ்மை, நீண்டசாந்தம் முதலிய விசுவாசத்தின் கனிகளுக்கு ஏவுகிறபோது, நாம் இந்தப் பரமபோதகருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். ஏனெனில் எவர்கள் பராபரனுடைய ஆவியினாலே ஏவப்பட்டு நடக்கிறார்களோ, அவர்கள் பராபரனுடைய புத்திரராயிருக்கிறார்கள் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறான் (ரோ. ௮, ௰௪).

11. இந்நாளின் சுவிசேஷவாக்கியம் எதைப்பற்றியது.

இயேசுநாதரை உண்மையும் உட்கருத்துமாய்ச் சிநேகிக்கிறவர்களுக்கு வரும் பெரிய ஆசீர்வாதத்தைப் பற்றியது.

12. அவர்களுக்கு ஆசீர்வாதம் வருமென்று சொல்லுகிறதார்.

நம்முடைய இரட்சகர்தாமே இந்த நாளின் வாக்கியத்தில் அதை நமக்கு அறிவிக்கிறார். அதாவது: ஒருவன் என்னைச் சிநேகித்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளு



வான், அவனை என் பிதா சிநேகிப்பார், நாங்கள் அவனண்டைக்குவந்து, அவனிடத்தில் வாசம்பண்ணுவோம் (௨௩).

13. கிறிஸ்துவைச் சரியாய்ச் சிநேகிக்கிறவன் ஆர்.

பராபரனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, தன்னாலானமட்டும் பராபரனுடைய கற்பனையின்படி நடக்கப் பிரயாசப்படுகிறவன்தான். நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையுஞ் செய்தீர்களானால், நீங்கள் என் சிநேகிதராயிருக்கிறீர்கள் என்றும் (யோவா. ௰௫, ௰௪), ஒருவன் என்னைச் சிநேகித்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவானென்றும் இயேசுநாதர் சொல்லுகிறார். ஏனெனில் பராபரனுடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறதே அவரைச் சிநேகிக்கிற மெய்யான சிநேகம். பராபரனுடைய வசனத்துக்கு விரோதமாய் நடக்கிற மனுஷன் பராபரனை உண்மையாய்ச் சிநேகிக்கிறவன் அல்ல. என்னைச் சிநேகியாதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளான் என்று கர்த்தர் சொல்லுகிறார் (யோவா. ௰௪, ௨௪).

14. கிறிஸ்துவைச் சிநேகிக்கிறவர்களுக்கு வரும் ஆசீர்வாதம் என்ன.

தம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு அநேக ஆசீர்வாதங்களை அளிப்போமென்று இரட்சகர் இந்த வாக்கியத்திலே வாக்குத்தத்தங் கொடுக்கிறார்.

15. அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே அவரைச் சிநேகிக்கிறவர்களுக்கு வரும் முதலாம் ஆசீர்வாதம் என்ன.

அவர்கள் பராபரனால் சிநேகிக்கப்படுவார்கள். ஒருவன் என்னைச் சிநேகித்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனை என் பிதா சிநேகிப்பார் (௨௩). என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன் (வாக். ௮, ௰௭).

16. கிறிஸ்துவைச் சிநேகிக்கிறவர்களைப் பிதாவாகிய பராபரன் மாத்திரமா சிநேகிப்பார்.

இல்லை. அவர்களைப் பிதா மாத்திரமல்ல, குமாரனும் பரிசுத்த ஆவியும் சிநேகிப்பார்கள். ஏனெனில் தாம் இந்த லோகத்திலிருக்கிற தம்முடையவர்களை எப்படிச் சிநேகித்துக்கொண்டிருந்தாரோ, அப்படியே முடிவுபரியந்தம் அவர்களைச் சிநேகித்தார் என்று குமாரனாகிய பராபரனைக் குறித்து எழுதியிருக்கிறது (யோவா. ௰௩, ௧). பரிசுத்த ஆவியானவரும் அவர்களைச் சிநேகிப்பார். ஏனென்றால் அவர் சிநேகத்தின் ஆவியாயிருக்கிறார். அதினால் அவர் அவர்களைச் சிநேகத்துக்கு ஏவி எழுப்பி, அவர்களைச் சிநேகிக்கிறார்.

17. கிறிஸ்துவைச் சிநேகிக்கிறவர்களுக்கு வரும் இரண்டாம் ஆசீர்வாதம் என்ன.

திரியேக பராபரன் அவர்கள் இருதயங்களில் வாசம் பண்ணுவார். ஏனென்றால், அவனண்டைக்கு நாங்கள் வந்து, அவனிடத்தில் வாசம் பண்ணுவோமென்று கிறிஸ்துநாதர் சொல்லுகிறார் (௨௩).

18. ஆர் வந்து அவர்கள் இருதயங்களில் வாசம் பண்ணுவார்.

திரியேக பராபரன் கிறிஸ்துவைச் சிநேகிக்கிற ஒவ்வொரு மனுஷனண்டைக்கும் வந்து, அவன் இருதயத்தில் வாசம் பண்ணுவார். இதைப்பற்றி இரட்சகர்: இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் நம்முடைய சத்தங் கேட்டு, கதவைத் திறந்தால், அவனண்டைக்கு நாம் உட்பிரவேசித்து, அவனோடே இராப்போசனம் பண்ணுவோம், அவன் நம்மோடும் இராப்போசனம் பண்ணுவான் என்கிறார் (அபி. ௩, ௨௰).

19. பராபரன் அவர்களுடைய இருதயங்களில் வாசம் பண்ணுகிறதாவதென்ன.

பராபரன் அவர்கள் இருதயங்களைத் தமது கிருபையினாலே சந்தோஷிப்பித்து, அவைகளை உயிருள்ள மெய்யான விசுவாசம், சிநேகம், நம்பிக்கை, ஆறுதலால் நிரப்பி, பாவத்திற்காகக் கடிந்து கொள்ளுகிறதாம்.

20. கிறிஸ்துவைச் சிநேகிக்கிறவர்களுக்கு வரும் மூன்றாம் ஆசீர்வாதம் என்ன.

பரிசுத்த ஆவியின் ஒத்தாசை. கிறிஸ்துவைச் சிநேகிக்கிறவர்களுடைய இருதயங்களிலே பிதாவும் குமாரனும் மாத்திரமல்ல, பரிசுத்த ஆவியுங் கூட வாசமாயிருப்பார். அவர் அவர்களைப் போதித்து, அவர்களுக்குண்டாகுஞ் சகல துன்பங்களிலும் இயேசு இரட்சகரின் வார்த்தையை நினைப்பூட்டி, அவர்களை ஆற்றித் தேற்றுவார். அதைப்பற்றி கிறிஸ்துநாதர் தமது வாக்கியத்திலே சொல்லுகிறதாவது: நான் உங்களுடனே இருக்கக்கொள்ள இதுகளை உங்களுக்குச் சொன்னேன். ஆனால் பிதா என் நாமத்திலே அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே உங்களுக்கு எல்லாத்தையும் போதித்து, நான் உங்களுக்குச் சொன்னதெல்லாத்தையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் என்றார் (௨௫. ௨௬).

21. கிறிஸ்துவைச் சிநேகிக்கிறவர்களுக்கு வரும் நாலாம் ஆசீர்வாதம் என்ன.

இயேசு இரட்சகரின் சமாதானம். ஏனென்றால் சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன் என்று அவர் நம்முடைய வாக்கியத்தில் சொல்லுகிறார் (௨௭).



22. அவர் அவர்களுக்குக் கொடுக்கிற சமாதானம் எப்படிப்பட்டதாயிருக்கிறது.

அது புறம்பான லோக சமாதானமாயிராமல், உள்ளானதும் நித்தியமுமான சமாதானமாயிருக்கிறது. புறம்பான சமாதானமும் சமாதானப் பிரபுவாகிய இயேசுவால் வந்தாலும், அவர் அதை எப்போதும் விசுவாசிகளுக்குக் கொடுக்கிறதில்லை. ஆதலால் லோகந் தருகிறதுபோல் நான் உங்களுக்குத் தரேன் என்கிறார். லோக சமாதானம் நிலை நிற்காது: இரட்சகர் தருகிற உள்ளான சமாதானமோ என்றென்றைக்கும் நிலை நிற்கும்.

23. அந்தச் சமாதானம் என்ன.

மெய்விசுவாசிகள் அடைந்திருக்கிற பராபரனுடைய கிருபையும் நல்மனச்சாட்சியுமாம். ஏனென்றால் பராபரனுடைய கிருபையையும் நன்மனச்சாட்சியையும் சந்தோஷத்தையும் அடைந்திருக்கிறவன் எவனோ, அவனுடைய இருதயத்திலே மெய்யான சமாதானம் உண்டு.

24. அந்தச் சமாதானத்தைக் கொடுக்கிறவர் ஆர்.

நமது இரட்சகராகிய பராபரன் அதைக் கொடுக்கிறார். பரிசுத்த ஆவியின் பெலத்தினாலே இயேசு இரட்சகரை விசுவாசிக்கிற மனுஷருடைய இருதயத்தில் இந்தச் சமாதானம் உண்டு. அவன் பவுல் அப்போஸ்தலனோடே கூட: இப்போதும் நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய்ப் பராபரனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோமென்று சொல்லக்கூடும் (ரோ. ௫, ௧).

25. கிறிஸ்துவைச் சிநேகிக்கிறவர்களுக்கு வரும் ஐந்தாம் ஆசீர்வாதம் என்ன.

அவர்களுக்குண்டாகும் சகல இக்கட்டிலும் பராபரனால் அவர்களுக்கு வரும் ஆறுதல். இயேசுநாதர் தங்களை விட்டுப்போகிறதற்காகச் சீஷர்கள் விசனப்பட்டார்கள். அதினிமித்தம் கர்த்தர் அவர்களை ஆற்றித்தேற்றிச் சொல்லுகிறதாவது: உங்கள் இருதயம் கலங்கவும் வேண்டாம், பயமாயிருக்கவும் வேண்டாம். போய் உங்களண்டைக்கு வருகிறேன் என்று நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்கள். என்னைச் சிநேகித்தீர்களானால் பிதாவண்டைக்குப் போகிறேன் என்று நான் சொன்னதற்காகச் சந்தோஷப்படுவீர்கள். ஏனென்றால் என் பிதா என்னிலும் பெரியவர். அது சம்பவிக்கும்போது நீங்கள் விசுவாசிப்பதற்காக, இப்போது அது சம்பவியாததற்கு முன்னே அதை உங்களுக்குச் சொன்னேன் என்கிறார் (௨௭ – ௨௯).

26. கிறிஸ்துநாதர் பிதாவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் ஒத்த நித்திய பராபரனுச்சே, பின்னை எப்படி அவர் பிதா என்னிலும் பெரியவரென்று சொல்லலாம்.

கிறிஸ்துநாதர் இவ்விடத்தில் தமது மனித சுபாவத்தைப்பற்றிப் பேசுகிருர். தமது மனித சுபாவத்தின்படியே இயேசுநாதர் இப்பூமியில் தமது தாழ்ந்த நிலைமையிலிருக்கையில் பிதாவுக்குச் சிறியவராயிருந்தார். தமது தேவ சுபாவப்படியோ அவர் பிதாவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் ஒத்த நித்திய பராபரன் தான்.

27. கிறிஸ்துவைச் சிநேகிக்கிறவர்களுக்கு வரும் ஆறும் ஆசீர்வாதம் என்ன.

அவர்கள் இந்த லோகத்தின் பிரபுவாகிய பிசாசுக்கு நீக்கமாய்க் காக்கப்பட்டு இரட்சிக்கப்படுவார்கள். இனி உங்களுடனே வெகுவாய்ப் பேசேன், ஏனெனில் இந்த லோகத்தின் பிரபு வருகிறான், ஆனால் அவனுக்கு என்னிடத்தில் ஒன்றும் இல்லை என்று கிறிஸ்து சொல்லுகிறார் (௩௰). பிசாசு பராபரனுடைய சம்மதியின்படியே இயேசுவைச் சோதித்தாலும், அவருக்கு யாதொரு தீங்கும் கேடும் செய்யக் கூடாதிருந்தது எப்படியோ, அப்படியோ அது இயேசுவைச் சிநேகித்து அவரோடு ஐக்கியமாயிருக்கிற விசுவாசிகளண்டைக்கு வந்து அவர்களைச் சோதித்தாலும், அவர்களைக் கெடுக்கவும் அழிக்கவும் அதினால் கூடாது.

28. பிசாசு ஏன் லோகத்தின் பிரபு என்றழைக்கப்படுகிறது.

அது லோக மக்களின்மேல் ஆளுகை செய்து, அவர்களைத் தன் இச்சித்தத்தின்படி பாவத்துக்குத் தூண்டிவிடுகிறதினால் தான்.

29. கிறிஸ்துநாதர் எதினால் நம்மைச் சிநேகத்துக்கு ஏவி எழுப்புகிறார்.

தம்முடைய சுய முன்மாதிரியினால். அதைப்பற்றி அவர்: நானோவெனில் பிதாவைச் சிநேகிக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கற்பித்தபடியே செய்கிறேன் என்றும் லோகம் அறியும்படிக்கு, எழுந்திருங்கள், இவ்விடம் விட்டுப்போவோம் வாருங்கள் என்று நம்முடைய வாக்கியத்தில் சொல்லுகிறார். அவர் பிதாவைச் சிநேகித்ததுபோல், நாமும் அவரைச் சிநேகிக்க வேண்டும் என்று பிரிய சித்தமாயிருக்கிறார்.

30. பிதாவானவர் கிறிஸ்துநாதருக்குக் கற்பித்திருந்ததென்ன.

அவர் மனுஷசாதிக்காகப் பாடுபட்டு மரிக்க வேண்டுமென்பதைத்தான். இதின்படியே நமது இரட்சகர் பாடுக



ளுக்கும் மரணத்துக்கும் எதிர்கொண்டுபோய், நம்மையுந் தமது பிதாவையுஞ் சிநேகிக்கிற அளவில்லாத சிநேகத்தைக் காட்டினார்.

## படிப்பினை.

31. நாம் இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. கர்த்தராகிய பராபரனால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. அவர் தம்முடையவர்களை உட்கருத்தாய்ச் சிநே
கிக்கிறார். ஏனென்றால் ஒருவன் என்னைச் சிநேகித்தால்
அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனை என்
பிதா சிநேகிப்பார் என்று கிறிஸ்து சொல்லுகிறார். உ
உலகத்தின் பகைக்கு விரோதமாக நமக்கு ஆறுதல் கொடுக்
கிறது. கர்த்தரே நம்மைச் சிநேகிக்கிறவராயிருந்தால், லோக
பகை, பொறுமையால் நமக்குச் சேதம் ஒன்றும் இல்லை. அதி
னிமித்தம் தாவீது சங்கீதக்காரன்: கர்த்தர் எனக்கு இருக்
கிறார், பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்
என்கிறான் (சங். ௧௰௮, ௬).

உ. அவர் தம்மை விசுவாசித்துச் சிநேகிக்கிறவர்க
ளுக்குள் வாசம் பண்ணுகிறார். ஆம், அவர் அவர்களுடைய
இருதயங்களைச் சந்தோஷிப்பித்து, ஆற்றித்தேற்றி, காப்பாற்
றுகிறார். ஏனென்றால் கர்த்தராகிய பராபரன் நமது இருத
யத்தில் வாசமாயிருந்தால், நமக்கு ஆறுதலும், சந்தோஷம்,
சமாதானம், மனமகிழ்ச்சியும் உண்டு. எவனுடைய இருத
யத்தில் பராபரன் வாசம் பண்ணுகிறாரோ, அவன் லோக
வாழ்வை நேசித்துத் தேடமாட்டான். அவன் துன்பகாலத்
தில் பயப்படுகிறதும் நம்பிக்கையற்றுப் போகிறதுமில்லை.
அவன் தன் பராபரனுக்குள் மனமகிழ்ச்சியுள்ளவனாய்ப் பரி
சுத்த சங்கீதக்காரனோடே: பின்னை யார் எனக்குப் பரமண்டலங்
களில் இருக்கிறார், உம்மோடே நான் இருக்கையில் பூமியில்
எனக்கு வேறே விருப்பமில்லை, என் மாமிசமும் என் இரு
தயமும் மாளும்போது, பராபரன் என்றென்றைக்கும் என்
இருதயத்தின் கன்மலையும் பங்குமாயிருக்கிறார் என்று சொல்
லுவான் (சங். எ௩, ௨௫. ௨௬).

II. சீஷர்களிடத்தில் எல்லா விசுவாசிகளுங் கற்றுக்
கொள்ளுகிறதாவது:

க. நாம் நமது இரட்சகராகிய இயேசுவை உண்மை
யாய்ச் சிநேகிக்க வேண்டும். ஏனெனில் யாதொருவன் கர்த்

தராகிய இயேசு கிறிஸ்துவைச் சிநேகியாதேபோனால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவான் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான் (க கொரி. யசு, உஉ). ஆதலால் நாம் தாவீது சங்கீதக்காரனோடே: என் பெலனாகிய கர்த்தாவே, உம்மை உட்கருத்தாய்ச் சிநேகிப்பேன். கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என்னை விடுவிக்கிறவரும், என் பராபரனும், நான் நம்பியிருக்கிற என்னுடைய துருகமும், என் கேடயமும், என் இரட்சிப்பின் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறாரென்று சொல்வோமாக (சங். யஅ, உ. ந).

உ. நாம் பராபரனுடைய வசனத்தையும் உண்மையாய்ச் சிநேகித்து, கைக்கொண்டு, அதின்படியே நடக்க [illegible]டும். ஏனென்றால் இயேசு இரட்சகரை உண்மையாய்ச் சிநேகிக்கிறவன் அவருடைய திருவசனத்தையும் உண்மையாய்ச் சிநேகித்து, அவர் திருச்சித்தப்படி நடக்கப் பிரயாச[illegible] அவரைச் சிநேகியாதவன் அவருடைய வசனத்தைக் கைக்[illegible]கொள்ளுகிறதில்லை. ஆனால் பராபரனுடைய வசனத்தைக் கே[illegible]டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள் [illegible]ன்று கர்த்தர் சொல்லுகிறார் (லூக். யக, உஅ).

32. நாம் நமது சுய பெலத்தினாலே இயேசு இரட்சகரை விசுவ[illegible]சிக்கவும், அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளவும் கூடும[illegible]

கூடா[illegible] சிநேகத்தின் ஆவியாகிய பரிசுத்த ஆவியானவரே அ[illegible] நமக்குள் உண்டுபண்ணுகிறவர். ஏனென்றால் நாங்களாய் யாதொன்றைச் சிந்திக்க எங்களாலே தாம் சமர்த்தராயிருக்கிறோம் என்கிறதில்லை, எங்கள் சாமர்த்தியம் பராபரனாலே உண்டாயிருக்கிறது என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறான் (உ கொரி. ந, ரு). ஆதலால் பராபரனாகிய கர்த்தர் தமது பரிசுத்த ஆவியின் கிருபையை நமக்களிக்க வேண்டுமென்று நாம் இடைவிடாமல் செபம்பண்ண வேண்டும். அதற்கென்று இயேசு இரட்சகர் நம்மை எவி எழுப்பி, இந்த நமது செபம் கேட்கப்படுமென்று நமக்கு வாக்குத்தத்தங் கொடுத்துச் சொல்லுகிறதாவது: இப்போதும் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருந்தால், எத்தனை அதிகமாய்ப் பரமபிதாவானவர் தம்மைக் கேட்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பார் என்கிறார் (லூக். யக, யந). நாம் தாவீது சங்கீதக்காரனோடும்: உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் படிப்பியும்; ஏனெனில் தேவரீர் என் பராபரன். உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக என்று செபிப்போமாக.



இந்த அருமைப் பராபரனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவருக்குச் சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக, ஆமேன்.

## பெந்தெக்கொஸ்தே பண்டிகையின் உ-ம் நாள்.

(ஞானப்பாட்டு எஅ.)

சுவி: யோவா. ந, யசு — உக.

அதேனெனில் பராபரன் தம்முடைய ஒரே பேறான குமாரனை,
அவர்பேரில் விசுவாசிக்கிறவன் எல்லாம்கெட்டுப்போகாமல், நித்திய
ஜீவனை அடைவதற்காக, தந்த அத்தன்மையாய் லோகத்தைச் சிநே
கித்தார். 17 ஏனெனில் பராபரன் தம்முடைய குமாரனை லோகத்
தில், லோகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அனுப்பாமல், அவரா
லே லோகம் இரட்சிக்கப்படுவதற்காக அனுப்பினார். 18 அவர்பேரில்
விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசி
யாதவனோவெனில், பராபரனுடைய ஒரே பேறான குமாரனுடைய
நாமத்தின்மேல் விசுவாசியாமல் போனபடியினாலே, அப்போதே
ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருக்கிறான். 19 வெளிச்சம் லோ
கத்திலே வந்திருந்தும், மனுஷர் வெளிச்சத்தைப் பார்க்க இருளைச்
சிநேகித்ததே ஆக்கினைக்குள்ளாக்குதலாயிருக்கிறது; ஏனெனில்
அவர்களுடைய கிரியை பொல்லாததாயிருந்தது. 20 அதேதென்
றால் பொல்லாங்கு செய்கிறவனெல்லாம் வெளிச்சத்தைப் பகைத்
து, தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு வெளிச்சத்தண்டை
வராதிருக்கிறான். 21 ஆனால் உண்மையைச் செய்கிறவன், தன்
கிரியைகள் வெளியாகும்படிக்கு, வெளிச்சத்தண்டை வருகிறான்;
ஏனெனில் அதுகள் பராபரனுக்குள் செய்யப்பட்டிருக்கிறது என்
றார்.

1. பெந்தெக்கொஸ்தே பண்டிகை பழைய ஏற்பாட்
டின் காலத்திலும் கொண்டாடப்பட்டது.

ஆம், இஸ்ரவேல் சனம் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்பட்ட ஐம்பதாம் நாளிலே கர்த்தர் சீனாய் மலையில் அதற்குரிய நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். இதற்காகப் பழைய ஏற்பாட்டின் காலத்தில் பெந்தெக்கொஸ்தே பண்டிகையைக் கொண்டாடினார்கள். அவர்கள் பஸ்காப் பண்டிகை முதல் பெந்தெக்கொஸ்தே பண்டிகை வரையில், ஏழுவிசை ஏழு நாள் அதாவது ஏழுவாரம் எண்ணிக்கொண்டபடியால், அது வாரங்களின் பண்டிகை என்றும் பேர்கொண்டது. மேலும் அது முதற் கனிகளைச் செலுத்தும் பண்டிகை என்றும் சொல்லப்பட்டது. ஏனென்றால், கோதுமை அறுப்பு முடிந்ததற்காக இஸ்ரவேலருடைய சகல வீடுகளிலுமிருந்து இரண்டு

அப்பங்கள் முதற்பலனாக இந்த நாளில் கர்த்தருக்குக் கொண்டுவரப்பட்டது.

2. கிறிஸ்தவர்களாகிய நாமும் இந்தப் பண்டிகையைக் கொண்டாட வேண்டியது அவசரமா.

ஆம். பராபரன் பெந்தெக்கொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியை நமக்கு அனுப்பின மகா பெரிய உபகாரத்தை நாம் நன்றாய்த் தியானிக்கிறது மிகவும் அவசரமான காரியம். ஏனென்றால் பராபரன் தமது ஆவியை நமக்கு அனுப்பினாலொழிய, நாம் ஒருக்காலும் இரட்சகரை விசுவாசிக்கவும், அவரால் இரட்சிக்கப்படவுங் கூடாதவர்களாயிருப்போம்.

3. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தில் எத்தனை பங்குண்டு.

இரண்டு பங்குண்டு.

## முதற்பங்கு.

4. முதற்பங்கு எதைப் பற்றியது.

உன்னத பராபரன் பாவிகளாகிய மனுஷருக்குப் பாராட்டின சொல்லிமுடியாத சிநேகத்தைப் பற்றியது.

5. பராபரனுடைய இந்தச் சிநேகத்தைப் பற்றிப் பேசுகிறதார்.

நமது அருமை இரட்சகராகிய இயேசுநாதர். பரிசேயரில் தலைவனாகிய நிக்கொதேமு என்பவன் தான் எப்படி பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசித்து இரட்சிக்கப்படலாம் என்பதைக் கேட்டறியும்படிக்கு இயேசு இரட்சகரண்டை இராத்திரியிலே வந்தான். அப்போது அவர் அவனுக்கு அதைப்பற்றிப் போதித்து, பராபரனுடைய பெரிய சிநேகத்தைக் குறித்துப் பேசிச் சொன்னதாவது: பராபரன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அவர்பேரில் விசுவாசிக்கிறவன் எல்லாம் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை அடைவதற்காகத் தந்த அத்தன்மையாய் லோகத்தைச் சிநேகித்தார். ஏனெனில் பராபரன் தம்முடைய குமாரனை லோகத்தில், லோகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அனுப்பாமல், அவராலே லோகம் இரட்சிக்கப்படுவதற்காக அனுப்பினார் என்றார் (௰௬-௰௭).

6. இரட்சகர் சொன்ன இந்த வார்த்தையின்படி பராபரன் ஆரைச் சிநேகித்தார்.

லோகத்தை. ஏனென்றால் அத்தன்மையாய் லோகத்தைச் சிநேகித்தார் என்று எழுதியிருக்கிறது.

[illegible] என்பதினால் கர்த்தர் குறிக்கிறதென்ன.



இவ்வுலகத்தில் முன் இருந்தவர்களும், இப்போது இருக்கிறவர்களும், இனி இருப்பவர்களுமாகிய எல்லா மனுஷருமே இங்கே லோகம் என்பதினால் குறிக்கப்படுகிறார்கள்.

8. பராபரன் மனிதரைச் சிநேகிக்கிற தமது சிநேகத்தை எதினால் விசேஷித்து வெளிப்படுத்தினார்.

தமது ஒரே பேறான குமாரனைத் தந்த அத்தன்மையாய் லோகத்தைச் சிநேகித்தார் என்று இயேசுநாதர் நமது வாக்கியத்தில் சொல்லுகிறார்.

9. பராபரனுடைய ஒரே பேறான குமாரன் ஆர்.

நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துநாதர். ஏனென்றால் அவர் கன்னிமரியாளிடத்திலின்று பிறந்த மெய்யான மனுஷனும், பிதாவிடத்தில் அநாதியாய்ப் பிறந்த மெய்யான தேவனுமாயிருக்கிறார்.

10. பராபரன் தமது குமாரனை எப்போது லோகத்துக்குத் தந்தருளினார்.

[illegible]ம் குறித்த காலம் வந்தபோது. அதைப் பற்றிப் பவுல் அப்போஸ்தலன்: பராபரன் காலம் நிறைவேறுதல் வந்தபோது, ஸ்திரியினிடத்தில் பிறந்தவரும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை அனுப்பினார் என்கிறார் (கலா. ௪, ௫). இயேசுநாதர் மனுஷனாகி, நம்முடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் ஏற்றுக்கொண்டபடியால், நம்முடையவரானார்.

11. என்னத்துக்காகத் தந்தருளினார்.

அவரை விசுவாசிக்கிறவனெல்லாங் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை அடைவதற்குத் தான்.

12. மனுஷர் யாவரும் கெட்டுப்போனவர்கள் தானோ.

ஆம், கெட்டுப்போனவர்கள் தான். ஏனென்றால் நம்முடைய ஆதித்தாய் தகப்பன்மாராகிய ஆதாமும் ஏவாளும் பராதீசிலே பராபரனுக்கு விரோதமாகப் பாவஞ் செய்த பிற்பாடு அவர்களும் அவர்கள் பின் சந்ததியாராகிய எல்லா மனுஷரும் சிங்காரத்தோட்டத்திலிருந்து, ஆம், வானத்திலிருந்தும் துரத்திவிடப்பட்டார்கள். அவர்களுக்கு ஒரு இரட்சகர் அனுப்பப்பட்டாலொழிய அவர்கள் என்றென்றைக்குங் கெட்டுப்போய் நரக ஆக்கினைக்குள்ளானவர்களாயிருப்பார்கள்.

13. இந்த ஆக்கினையிலிருந்தும் நிர்ப்பந்தத்திலிருந்தும் மனிதரை மீட்டு இரட்சித்ததார்.

பராபரனுடைய ஒரே பேறான குமாரன். அதற்காகவே அவர் மனிதனானார். ஆம், மனிதர் யாவரும் நரக ஆக்கினையிலிருந்து இரட்சிக்கப்பட்டு, நித்திய சீவனை அடையும்

படிக்கு, அவர் எல்லாருக்காகவும் தம்முடைய ஜீவனை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து, தமது இரத்தத்தைச் சிந்தினார். அதைப்பற்றி இயேசு இரட்சகர்: பராபரன் தம்முடைய குமாரனை லோகத்தில், லோகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அனுப்பாமல், அவராலே லோகம் இரட்சிக்கப்படுவதற்காக அனுப்பினார் என்று நம்முடைய வாக்கியத்தில் சொல்லுகிறார் (௰எ).

14. ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதாவதென்ன.

நரக ஆக்கினைக்கு ஒப்புக்கொடுக்கிறதேயாம். பராபரன் தம்முடைய குமாரனை லோகத்தில், லோகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அனுப்பாமல், அவராலே லோகம் இரட்சிக்கப்படுவதற்காக அனுப்பினார் என்கிற வார்த்தையினாலே கிறிஸ்துநாதர் தாம் மனுஷரை நரக ஆக்கினைக்கு ஒப்புக்கொடுக்க வராமல், அவர்கள் இழந்துபோன மோட்சத்தை மறுபடியும் அவர்களுக்குச் சம்பாதித்துக் கொடுக்கும்படிக்கு வந்தேன் என்று சொல்லுகிறார். இதை அவர்: மனுஷனுடைய குமாரன் மனுஷருடைய ஆத்துமாக்களைக் கெடுக்க அல்ல, இரட்சிக்க வந்தார் என்றதினால் தெளிவாய் அறிவிக்கிறார் (லூக். ௯, ௫௬).

15. இது இப்படியிருக்க, அநேக மனுஷர் இரட்சிக்கப்படாமல் கெட்டுப்போகிறதற்குக் காரணம் என்ன.

அவர்கள் பராபரனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு இரட்சகரை விசுவாசியாமலிருக்கிறதே அவர்கள் கெட்டுப்போகிறதற்குக் காரணம். ஏனென்றால் பராபரன் தம்முடைய குமாரனை, அவர் பேரில் விசுவாசிக்கிறவன் எல்லாம் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்குத் தந்தருளினார். ஆனால் மனுஷரில் மிச்சமானவர்கள் அவரை விசுவாசியாமல், அவரை அசட்டைசெய்து தள்ளியிருப்பதால், இரட்சிக்கப்பட மாட்டார்கள். ஆகலால் கிறிஸ்துநாதர்: அவர் பேரில் விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படமாட்டான்; விசுவாசியாதவனோவென்னில், பராபரனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசியாமல் போனபடியினாலே, அப்போதே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருக்கிறான் என்று நம்முடைய வாக்கியத்தில் சொல்லுகிறார் (௰அ).

16. பராபரனுடைய குமாரனை விசுவாசிக்கிறதாவதென்ன.

பராபரனுடைய குமாரனாகிய இயேசு இரட்சகர் மெய்யாகவே நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்றும், அவர் மூலமாய் நாம் நித்திய ஜீவனை அடைவோம் என்றும்,



அவர் பேரில் நமது முழு நம்பிக்கையையும் உறுதியாய் வைக்குதலாம். அப்படியே இயேசுவை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படமாட்டான். அதாவது, நரக ஆக்கினைக்கு ஒப்புக்கொடுக்கப்படான். ஆனால் அவர் பேரில் விசுவாசியாமல் அவிசுவாசத்தில் நிலைநிற்கிறவன் அப்போதே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருக்கிறான். ஏனென்றால் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று கர்த்தர் சொல்லுகிறார் (மாற்கு ௰௬, ௰௬).

## படிப்பினை.

17. சுவிசேஷ வாக்கியத்தின் இந்த முதற்பங்கினாலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. மனுஷரைப்பற்றி நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. மனுஷர் யாவரும் சுபாவத்தின்படியே கெட்டுப்போய்ச் சபிக்கப்பட்ட நிலைமையிலிருக்கிறார்கள். நாமும் சுபாவத்தின்படியே மற்றவர்களைப்போல் கோபத்துக்கு உள்ளானவர்களாயிருந்தோம் (எபே. ௨, ௩). அதாவது, கிறிஸ்து இரட்சகர் நமக்காக இவ்வுலகத்துக்கு வந்தாலொழிய, நாம் என்றைக்கும் நரக ஆக்கினைக்குள்ளானவர்களாயிருப்போம் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறான்.

௨. ஒரு மனுஷனாவது பராபரனுடைய சிநேகத்திலும் கிருபையிலும் பங்கடையக் கூடாதவனாயிருக்கிறதில்லை. ஏனென்றால் பராபரன் லோகத்தை, அதாவது முழு மனுஷசாதியையும் சிநேகித்து, எல்லா மனுஷருக்காகவும் தமது ஒரே பேறான குமாரனை லோகத்திலே அனுப்பினார். பராபரன் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட்டு, சத்தியத்தின் அறிவுக்கு வரச் சித்தமுள்ளவராயிருக்கிறார் என்பதைப் பரிசுத்த ஆவி பவுல் அப்போஸ்தலனைக் கொண்டு நமக்கு நிச்சயப்படுத்துகிறார் (௧ தீமோ. ௨, ௪).

II. கர்த்தராகிய பராபரனைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. அவர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறார். ஏனென்றால் மனிதர் தங்கள் பாவங்களினிமித்தம் என்றைக்கும் கெட்டுப்போக வேண்டியவர்களாயிருக்கையில், பராபரன் அவர்கள் பேரில் இரங்கி, அவர்கள் எல்லாரையும் மீட்டு இரட்சிக்கும்படியாகத் தமது நேசமுள்ள ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்தில் அனுப்பினார். பராபரனுடைய இந்த இரக்கத்தைப் பற்றி தாவீது சங்கீதக்காரன் சொல்லுகிறதா

வது: கர்த்தர் மன உருக்கமும் இரக்கமும் நீண்டசாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். நித்திய காலமாக வழக்காடார், என்றென்றைக்குங் கோபம் வைக்கார். அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார் என்கிறான் (சங். ௱௩, அ-ய).

௨. மனுஷசாதியைச் சிநேகிக்கிற பராபரனுடைய சிநேகம் சொல்லிமுடியாத பெரியதாயிருக்கிறது. நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர் தாமே இந்தப் பரமபிதாவின் சிநேகத்தின் பேரில் ஆச்சரியப்பட்டு: அத்தன்மையாய்ப் பராபரன் லோகத்தைச் சிநேகித்தாரென்று நம்முடைய வாக்கியத்தில் சொல்லுகிறார். மெய்தான், சர்வத்திறதும் வல்ல பராபரன் தம்முடைய சத்துருக்களாகிய ஏழைப்பாவிகளும்: கெட்டுப்போன மனுஷருமாகிய நம்மில் ஒருவனும் கேட்டுக்குள்ளாகாமல் நித்திய சீவனை அடையும்படிக்குத் தம்முடைய ஒரே பேறான நேச குமாரனைச் சிலுவையின் சங்கிலேஷமான மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து, அத்தன்மையாய் நம்மைச் சிநேகித்தாரென்பதை நாம் சிந்திக்கும்போது, பராபரனுடைய மகா பெரிய சிநேகத்தின் பேரில் நாம் ஆச்சரியப்படுகிறது நியாயம். பராபரனை நாம் சிநேகித்தோம் என்பதிலல்ல, நம்மை அவர் சிநேகித்து, தம்முடைய குமாரனை நம்முடைய பாவங்களின் நிமித்தங் கிருபையுண்டாக்குதலாக அனுப்பினதிலே சிநேகம் உண்டாயிருக்கிறது (௧ யோ. ௪, ௰).

௩. நம்முடைய இரட்சிப்பு பராபரனுடைய சிநேகத்தினாலுங் கிருபையினாலும் உண்டாயிருக்கிறது. எனென்றால் இரட்சிப்பின் பிரிவு பராபரனுடைய சொல்லிமுடியாத சிநேகத்தினால் உண்டானதென்பதைக் காட்ட கிறிஸ்துநாதர்: பராபரன் தம்முடைய ஒரே பேறான குமாரனை, அவர் பேரில் விசுவாசிக்கிறவன் எவனுங் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை அடைவதற்காகத் தந்த அத்தன்மையாய் லோகத்தைச் சிநேகித்தார் என்கிறார். அதற்கொத்தபடியே பவுல் அப்போஸ்தலனும்: கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதுமல்ல, இது பராபரனுடைய ஈவு என்று சொல்லுகிறான் (எபேசி. ௨, அ).

III. கிறிஸ்துநாதரைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. அவர் பராபரனுடைய ஒரே பேறான குமாரனாயிருக்கிறார். நம்முடைய வாக்கியத்திலும் அப்படியே தம்மை [illegible]க்கிறார். பேதுரு அப்போஸ்தலனும் அவரை:



நீர் சீவனுள்ள பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்துவாயிருக்கிறீர் என்று அறிக்கையிட்டான் (மத். ௰௬, ௰௬).

௨. மனிதர் யாவருடைய இரட்சிப்புக்கென்றும் இயேசு இரட்சகர் உலகத்தில் வந்தார். பராபரன் தம்முடைய ஒரே பேறான குமாரனை லோகத்துக்கு, அதாவது எல்லா மனுஷருக்குக் தந்தருளினார் என்று இயேசுநாதர் சொல்லுகிறார். பவுல் அப்போஸ்தலன் அவரைப்பற்றி: ஒரே பராபரனும், பராபரனுக்கும் மனுஷருக்கும் ஒரே மத்தியஸ்தரும் உண்டு; இவர் எல்லாருக்காகவுந் தம்மை மீட்கும்பொருளாக ஒப்புக்கொடுத்த மனுஷனான கிறிஸ்து இயேசு தானே என்று சொல்லுகிறான் (௧ தீமோ. ௨, ௫). அவன் வேறொரு இடத்திலும்: பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு லோகத்திலே வந்தாரென்கிறது உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்குப் பாத்திரமுமான வார்த்தை என்கிறான் (௧ தீமோ. ௧, ௰௫).

௩. நாம் இரட்சிக்கப்பட வேண்டுமானால் நம்முடைய இரட்சகரை மெய்யான விசுவாசத்தினால் பற்றிக்கொள்ள வேண்டும். இதை இயேசுநாதர் தாமே நமக்குப் போதித்து: பராபரன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அவர் பேரில் விசுவாசிக்கிறவன் எவனுங் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடைவதற்காகத் தந்தார் என்கிறார். ஆம், அவர் பேரில் விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். குமாரன் பேரில் விசுவாசிக்கிறவனுக்கு நித்திய சீவன் உண்டு, குமாரன் பேரில் விசுவாசியாதவனோ சீவனைக் காண்பதில்லை, பராபரனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றும் சொல்லுகிறார் (யோவா. ௩, ௩௬).

## இரண்டாம் பங்கு.

**18.** சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கு எதைப்பற்றியது.

பராபரனையும் அவருடைய சிநேகத்தையும் அசட்டை பண்ணுகிற மனுஷருடைய பெரிய அசட்டையையும் நன்றிகேட்டையும் பற்றியது.

**19.** இதை அவர்கள் எப்படி காண்பிக்கிறார்கள்.

அவர்கள் பராபரனுடைய சிநேகத்தை ஏற்றுக்கொள்ளவும், இயேசு இரட்சகரைப் பற்றும் விசுவாசத்தினால் நித்திய சீவனைப் பெற்றுக்கொள்ளவும் மனதற்றவர்களாயிருக்கிறதினால் காண்பிக்கிறார்கள். அதினிமித்தம் இயேசுநாதர் நம்முடைய வாக்கியத்திலே முறையிட்டு: வெளிச்சம் லோகத்

திலே வந்திருந்தும், மனுஷர் வெளிச்சத்தைப் பார்க்க இருளைச் சிநேகித்ததே ஆக்கினைக்குள்ளாக்குதலாயிருக்கிறது, ஏனெனில் அவர்களுடைய கிரியைகள் பொல்லாதவையாயிருக்கிறது என்கிறார் ([illegible]).

20. ஆக்கினைக்குள்ளாக்குதல் என்பதினால் கிறிஸ்துநாதர் குறிக்கிறதென்ன.

குணப்படாதவர்களுடைய நரக ஆக்கினையைத்தான்.

21. லோகத்தில் வந்த வெளிச்சம் என்பதினால் யாரைக் குறிக்கிறார்.

தம்மைத்தாமே. ஏனென்றால் அவர் லோகத்திலே வந்து, எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான வெளிச்சமாயிருக்கிறார் (யோவா. ௧, ௯).

22. இங்கே சொல்லப்பட்ட இருள் என்ன.

அவிசுவாசமும், அவிசுவாசத்திலிருந்து வருகிற சகல பாவங்களும் தான்.

23. பாவம் ஏன் இருள் என்று அழைக்கப்படுகிறது.

அது பெரும்பாலும் அந்தரங்கமாய் இரகசியத்திலே செய்யப்படுகிறபடியால் தான். பாவஞ்செய்கிறவர்கள் வெளிச்சத்துக்கு வரமாட்டார்கள் என்று இரட்சகர் சொல்லுகிறார். ஆம், பொல்லாங்கு செய்கிறவன் எவனும் வெளிச்சத்தைப் பகைத்து, தன் கிரியைகள் அதட்டப்படாதபடிக்கு வெளிச்சத்தண்டை வராதிருக்கிறான். ஆனால் உண்மையைச் செய்கிறவன் தன் கிரியைகள் வெளியாகும்படிக்கு வெளிச்சத்தண்டை வருகிறான். ஏனெனில் அதுகள் பராபரனுக்குள் செய்யப்பட்டிருக்கிறது என்றார் (௨௰, ௨௧).

### படிப்பினை.

24. சுவிசேஷவாக்கியத்தின் இரண்டாம் பங்கினாலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

௧. மனுஷரில் மிச்சமானவர்கள் பராபரனுடைய சிநேகத்தை அசட்டைசெய்கிற நன்றிகேடராயிருக்கிறார்கள். பராபரன் அளவற்ற சிநேகத்தினால் ஏவப்பட்டு, எல்லா மனுஷருக்காகவும் தம்முடைய ஒரேபேறான குமாரனைக் கொடுத்திருந்தும், அவரை விசுவாசிக்கிறவர்கள் மெத்தக் கொஞ்சம் பேராயிருக்கிறார்கள். மிச்சமானவர்கள் வெளிச்சத்தைப் பார்க்கப் இருளையும், இயேசுவையும் அவருடைய இரட்சிப்பையும் பார்க்கப் பாவத்தையும் லோக ஆசை இச்சைகளையும் சிநேகிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.



௨. மனுஷர் கெட்டுப்போகிறதற்கு அவர்கள் சொந்தக் குற்றமே காரணம். ஏனென்றால் பராபரன் தம்முடைய குமாரனை எல்லா மனுஷசாதியின் இரட்சிப்புக்கென்றுந் தந்தருளினார். இந்த வெளிச்சம் எல்லா மனுஷருக்காகவும் பிரகாசிக்கிறது. ஆகிலும் அநேகம் பேர் வெளிச்சமாகிய இயேசு இரட்சகரை ஏற்றுக்கொள்ள மனதாயிராமல், வெளிச்சத்தைப் பார்க்க இருளை அதிகமாய்ச் சிநேகிக்கிறார்கள். அப்படிச் செய்த இஸ்ரவேல் சனத்துக்குப் பராபரன் தீர்க்கதரிசியைக்கொண்டு: இஸ்ரவேலே, நீ உன் சகாயமாகிய நமக்கு விரோதமானது உன்னுடைய கேடு என்கிறார் (ஓசே. ௰௩, ௯).

௩. நாம் எல்லாப் பாவங்களுக்கும் விசேஷமாய் அவிசுவாசத்துக்கும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஏனென்றால் நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக்கிறோம். ஆதலால் நாம் பாவத்தின் இருளிலே நடவாமல் விசுவாசத்தின் வெளிச்சத்திலே பிழைத்து, பரிசுத்தமாய் நடக்கவேண்டும். அதற்கென்று இயேசு இரட்சகர் நம்மை ஏவி எழுப்பி: மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துகிறதற்காக உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்று புத்தி சொல்லுகிறார் (மத். ௫, ௰௬.)

25. நாம் நமது சுயமாய் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, வெளிச்சத்திலே நடக்கக்கூடுமா.

கூடாது. நான் என் சுயபுத்தியினாலும் பலத்தினாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவும், அவரைச் சேர்ந்து அண்டிக்கொள்ளவுங் கூடவேகூடாது என்று நம்முடைய ஞானோபதேசக்குறிப்பிடத்திலே படித்திருக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுலும்: பரிசுத்த ஆவியினாலொழிய ஒருவனும் இயேசுவைக் கர்த்தர் என்று சொல்லக்கூடாது என்கிறான் (௧ கொரி. ௰௨, ௩). ஆதலால் நாம் எப்போதும் பரிசுத்த ஆவியின் ஒத்தாசையையும் பெலனையுந் தேடி:

கர்த்தாவின் சுத்த ஆவியே,
நீர் எங்கள் ஆத்துமத்திலே
இறங்கி வாசம் பண்ணும்,
பரவெளிச்சமாகிய
உம்மாலே எங்கள் சீர்பட
தெளிந்த நெஞ்சுங் கண்ணும்
தந்து, வந்து
மெய்ச் செபத்தை நற்குணத்தைப் போதியும்,
மெய்ச் சந்தோஷத்தை அளியும் (ஞானப்பாட்டு ௮௰, ௧).

என்று கேட்போமாக.

இந்த நமது ஆத்துமாக்களின் உத்தம தேற்றரவாளனுக்கும் பரம பிதாவுக்கும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கும் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக, ஆமேன்.

# திரித்துவத்தின் பண்டிகை

(ஞானப்பாட்டு ௯௪.)

சுவி. யோவா. ௩, ௧—௰௫.

யூதரில் தலைவனாகிய நிக்கொதேமு என்று பேர்கொண்ட ஒரு
மனுஷன் பரிசேயரில் இருந்தான். 2 இவன் இராத்திரியிலே இயே
சுவண்டையில் வந்து, அவருடனே: ரபீ, நீர் பராபரனாலே வந்த
போதகர் என்று அறிவோம்; ஏனெனில் ஒருவனும் தன்னுடனே
பராபரன் இருந்தாலொழிய, நீர் செய்கிற இந்த அடையாளங்க
ளைச் செய்யக் கூடாது என்றான். 3 இயேசு அவனுக்குப் பிரத்தியுத்
தாரமாக: மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்,
ஒருவன் மறுபடியும் பிறந்தாலொழிய, பராபரனுடைய இராச்சி
யத்தைக் காணக்கூடாது என்றார். 4 நிக்கொதேமு அவருடனே:
மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படி பிறக்கலாம்; அவன்
இரண்டாந்தரந் தன் தாயின் கர்ப்பத்துக்குள் பிரவேசித்துப் பிறக்
கக்கூடுமோ என்றான். 5 இயேசு பிரத்தியுத்தாரமாகச் சொன்னதா
வது: மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், ஒரு
வன் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்தாலே ஒழிய, பராபரனு
டைய இராச்சியத்துக்குள் பிரவேசிக்கக்கூடாது. 6 மாமிசத்தினால்
பிறந்தது மாமிசமாயிருக்கிறது, ஆவியினாலே பிறந்தது ஆவியாயி
ருக்கிறது. 7 நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான்
உனக்குச் சொன்னதற்காக அதிசயப்படாதே. 8 காற்று தனக்குச்
சித்தமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய்;
அது எங்கேயிருந்து வருகிறதென்றும் எங்கே போகிறதென்றும்
அறியாய். ஆவியினாலே பிறந்தவன் எல்லாம் அந்தப்படியே இருக்கி
றான் என்றார். 9 நிக்கொதேமு அவருக்குப் பிரத்தியுத்தாரமாக:
இவைகள் சம்பவிக்கக் கூடுகிறது எப்படி என்றான். 10 இயேசு அவ
னுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: நீ இஸ்ரவேலின்
போதகனாயிருந்தும், இவைகளை அறியாயோ. 11 மெய்யாகவே மெய்
யாகவே உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச்
சொல்லி, நாங்கள் கண்டதுக்குச் சாட்சி கொடுக்கிறோம்; ஆனால்
எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளீர்கள். 12 நான் உங்களுக்குப்
பூமிக்கடுத்த காரியங்களைச் சொல்ல நீங்கள் விசுவாசியாதேபோனா
னால், பரம காரியங்களை உங்களுக்குச் சொன்னேனானால், எப்படி
விசுவாசிப்பீர்கள். 13 பரமண்டலத்திலிருந்து இறங்கின பரமண்
டலத்திலுள்ள மனுஷனுடைய குமாரனேயொழிய, ஒருவனும் பர
மண்டலத்துக்கு ஏறினதில்லை. 14 மோசே வனாந்தரத்தில் சர்ப்பத்
தை உயர்த்தின வண்ணமாய் மனுஷனுடைய குமாரனும், 15 அவர்
பேரில் விசுவாசிக்கிறவன் எல்லாங் கெட்டுப்போகாமல், நித்திய
ஜீவனை அடையுந்தற்காக உயர்த்தப்படவேண்டியது என்றார்.



1. நாம் இன்றைக்குக் கொண்டாடுகிற பண்டிகைக்குப் பேர் என்ன.

பரிசுத்த திரித்துவத்தின் பண்டிகை.

2. பரிசுத்த திரித்துவமாவதென்ன.

தேவத்துவத்திலிருக்கிற பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியேக பராபரனே பரிசுத்த திரித்துவமாம்.

3. எத்தனை தேவர்கள் உண்டு. ஒரே தேவனா, மூன்று தேவர்களா.

ஒரே தேவன் உண்டு. அவராலும் அவரைக் கொண்டும் எல்லாம் உண்டாயிற்று. ஆனால் இந்த ஒரே தேவவஸ்துவிலே பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய மூன்று ஆட்கள் உண்டு. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். இவர் ஒருவரே நாம் விசுவாசிக்கவும் பணிந்துகொள்ளவும் வணங்கவும் வேண்டிய நித்திய பராபரன்.

4. ஒரே பராபரன் மாத்திரம் உண்டென்று வேதத்தில் எங்கே எழுதியிருக்கிறது.

௫. மோசே ௬, ௪: இஸ்ரவேலே, கேள்; நம்முடைய பராபரனாகிய கர்த்தர் ஒரே கர்த்தரானவர்.

5. மூன்று ஆட்கள் உண்டென்பதை வேதத்தில் எங்கே வாசிக்கிறோம்.

மத். ௨௮, ௰௯: நீங்கள்போய், சகல சாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுங்கள். இதையன்றி வேதத்திலுள்ள இன்னும் அநேக வாக்கியங்களிலும் இதை அறியலாம்.

6. பிதாவாகிய பராபரனைப்பற்றி நாம் விசுவாசிக்கிறதென்ன.

தேவத்துவத்திலே முதலாம் ஆளாகிய அவர் அநாதியாய்க் குமாரனைச் ஜெனிப்பித்து, நம்மையும் மற்றெல்லா வஸ்துக்களையும் உண்டாக்கி, அவைகளைக் காப்பாற்றி வருகிறார் என்றும், வானத்துக்கும் பூமிக்கும் சிருஷ்டிகராகிய அவர் ஒருவரே சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனாயிருக்கிறார் என்றும் விசுவாசிக்கிறோம்.

7. குமாரனாகிய பராபரனைப்பற்றி நாம் விசுவாசிக்கிறதென்ன.

தேவத்துவத்திலே இரண்டாம் ஆளாகிய இயேசுகிறிஸ்து தமது பரமபிதாவினிடத்தில் அநாதியாய்ப்பிறந்த மெய்யான தேவனும், கன்னிமரியாளிடத்தில் பிறந்த மெய்யான மனுஷனுமாயிருக்கிறார் என்றும், மனிதராகிய நமக்காகப் பாடுபட்டு மரித்து அடக்கம்பண்ணப்பட்டு உயிரோடெழுந்து பரமண்டலத்துக்கு ஏறினார் என்றும், அதினால் அவர் நம

மைப் பராபரனுடைய கோபம், மரணம், நரகத்திலிருந்து மீட்டு இரட்சித்தாரென்றும் விசுவாசிக்கிறோம். அவர் இவை எல்லாவற்றையும் செய்ததினாலே நாம் அவரை நம்முடைய இரட்சகர் என்று அழைக்கிறோம்.

8. பரிசுத்த ஆவியாகிய பராபரனைப் பற்றி நாம் விசுவாசித்து அறிக்கையிடுகிறதென்ன.

தேவத்துவத்திலே மூன்றாம் ஆளாகிய அவர் அநாதியாய்ப் பிதாவிடத்திலிருந்தும், குமாரனிடத்திலிருந்தும் புறப்படுகிறார் என்றும், நம்மைப் பரிசுத்தமாக்குகிறார் என்றும் விசுவாசித்து அறிக்கையிடுகிறோம். ஏனென்றால் ஞானஸ்நானத்தில் இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே அவர் நம்மைப் பரிசுத்தமாக்கி, இந்த விசுவாசத்திலே நம்மைக் காப்பாற்றுகிறார்.

9. இந்நாளின் பண்டிகை ஏன் திரித்துவத்தின் பண்டிகை என்னப்படுகிறது.

நாம் இந்நாளை பரிசுத்த திரித்துவத்தின் மகிமைக்கென்று கொண்டாடுகிறபடியால் தான். ஏனெனில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கர்த்தராகிய பராபரனுக்கென்று அதாவது, முழுதிரித்துவத்துக்கென்று பூசிக்கப்பட்டிருந்தும், நாம் பராபரனை நன்றாயறிந்து, மகிமைப்படுத்திப் புகழும்படியாக இந்த நாளை விசேஷித்து நியமித்திருக்கிறது. அதேனென்றால் நம்மைச் சிநேகித்து, நம்முடைய மாமிசத்தையும் இரத்தத்தையும் ஏற்றுக்கொள்ளும்படிக்கு இவ்வுலகத்திலே தம்முடைய நேசகுமாரனை நம்மண்டைக்கு அனுப்பின பிதாவின் மகிமைக்கென்று விசேஷமாய்க் கர்த்தர் பிறந்த பண்டிகையையும், வெற்றிவேந்தனாக மரித்தோரிலிருந்தெழுந்த கிறிஸ்துவின் மகிமைக்கென்று விசேஷமாய்க் கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையையும், வெளியரங்கமாய் அக்கினியின் நாக்குகள்போல் அப்போஸ்தலர் மேல் இறங்கின பரிசுத்த ஆவியின் மகிமைக்கென்று விசேஷமாய்ப் பரிசுத்த ஆவியின் பண்டிகையையும் எப்படிக் கொண்டாடுகிறோமோ, அப்படியே நாம் இந்த மூன்று பெரிய பண்டிகைகளிலே தியானித்த காரியங்களை நமக்கு நன்றாய் நினைப்பூட்டிக்கொள்ளும்படியாக இந்த ஞாயிற்றுக்கிழமையிலே பரிசுத்த திரித்துவத்தின் பண்டிகையைக் கொண்டாடுகிறோம்.

10. பரிசுத்த திரித்துவத்தின் பண்டிகையை நாம் சரியாய்க் கொண்டாடும் படிக்குச் செய்ய வேண்டியதென்ன.

௧. நாம் நம்முடைய பராபரனாகிய கர்த்தரை அதாவது, திரியேகப் பராபரனை அறிந்துகொள்ளும்படியாகப் பிரயாசப்பட வேண்டும். ஏனெனில் இந்த அறிவிலே நமது



இரட்சிப்பு அடங்கியிருக்கிறது. அதைப்பற்றி இயேசுநாதர் சொல்லுகிறதாவது: ஒன்றான மெய்த்தெய்வமாகிய உம்மையும் நீர் அனுப்பின இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய சீவனாயிருக்கிறது என்கிறார் (யோவா. ௧௭, ௩).

௨. பராபரனுடைய உபகாரங்களை நினைத்து அவைகளுக்காக அவரைப் புகழ்ந்து ஸ்தோத்திரம்பண்ண வேண்டும். பிதாவாகிய பராபரன் நம்மைப் படைத்து, இந்நாள்வரைக்கும் பராமரித்து வருகிறபடியாலும், குமாரனாகிய பராபரன் தமது பாடுகளினாலும் மரணத்தினாலும் நம்மை நித்திய நரகத்திலிருந்து மீட்டிரட்சித்தபடியாலும், பரிசுத்த ஆவியாகிய பராபரன் நம்மை இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பரிசுத்தமாக்குகிறபடியாலும் அவரைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்க வேண்டும். ஆம், பராபரனைத் துதிக்கும் துதி எப்போதும் நம்முடைய வாயிலிருக்கத் தாவீதோடு நாமுஞ் சொல்ல வேண்டியதாவது: கர்த்தரை எல்லாக்காலத்திலுந் தோத்திரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மை பாராட்டும். சிறுமையானவர்கள் அதைக் கேட்டு மகிழுவார்கள். என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோம் என்பதே (சங். ௩௪, ௧-௩).

௩. நாம் நம்முடைய பராபரனாகிய கர்த்தரைப் பணிந்து வணங்க வேண்டும். அதைப்பற்றி இரட்சகர்: பராபரனாகிய கர்த்தரைப் பணிந்து, அவர் ஒருவருக்கு ஆராதனை செய்வாயாக என்கிறார் (மத். ௪, ௰). நாம் எல்லா நாட்களிலும் விசேஷமாய் இந்த நாளிலும் நமது பராபரனாகிய கர்த்தரை நோக்கி, இரட்சிப்புக்கான இந்த அறிவிலே அவர் நம்மை வழி நடத்தவும், நித்திய சீவனுக்கென்று அதிலே நம்மைக் காப்பாற்றவும் வேண்டிக்கொள்ள வேண்டும்.

௪. நமது அருமையுள்ள பிதாவாகிய பராபரனுக்கு ஊழியஞ் செய்ய சாக்கிரதையுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஏனென்றால் நாம் பராபரனாகிய கர்த்தரை அறிந்து, அவரை நம்முடைய தகப்பனாகவும், சிருஷ்டிகராகவும், மீட்பராகவும், இரட்சகராகவும், நம்மைப் பரிசுத்தமாக்குகிற தேற்றரவாளனாகவும் புகழக் கற்றுக்கொண்டோமானால், நாம் அவருடைய பிள்ளைகளாக அவருக்குக் கீழ்ப்படியவும், அவருடைய ஊழியக்காரராக அவருடைய கட்டளையின்படி நடக்கவும், அவருடைய சீஷர்களாக அவருடைய மகிமைக்கென்று பிழைக்கவும், அவருடைய பரிசுத்தவான்களாக மெய்யான விசுவாசத்திலும் கிறிஸ்தமான சிநேகத்திலும், அதாவது கபடற்ற

நீதியிலும் பரிசுத்தத்திலும் சீவனம் பண்ணக் கூடியவர்களாயிருப்போம்.

11. இந்நாளின் சுவிசேஷ வாக்கியம் எதைப் பற்றியது.

நம்முடைய இரட்சகர் நீக்கொதேமோடு பண்ணின சம்பாஷணையைப் பற்றியது.

12. அந்த நீக்கொதேமு ஆர்.

அவன் ஒரு பெரிய மனுஷன். ஏனென்றால் அவன் பரிசேயனும், யூதரில் தலைவனும், இஸ்ரவேலில் போதகனுமாயிருந்தான் என்று நம்முடைய வாக்கியம் சொல்லுகிறது.

13. அவன் இயேசுநாதரண்டைக்கு எப்போது வந்தான்.

இராத்திரியிலே.

14. ஏன் இராத்திரியிலே வந்தான்.

யூதருக்குப் பயந்ததினிமித்தம். ஏனென்றால் அவன் இயேசுநாதர் செய்த அற்புதங்களினாலே அவர் மேசியாவும் சர்வலோகத்தின் இரட்சகருமாயிருக்கிறாரென்று அறிந்துகொண்டான். ஆதலால் அவன் அவருக்கு: ரபீ, நீர் பராபரனாலே வந்த போதகர் என்றறிவோம். ஏனெனில் ஒருவனுந் தன்னுடனே பராபரன் இருந்தாலொழிய நீர் செய்கிற இந்த அடையாளங்களைச் செய்யக் கூடாது என்றான். ஆகிலும் அவன் இந்தத் தன்னுடைய விசுவாசத்தை வெளியரங்கமாய் அறிக்கையிடத் துணிந்ததில்லை. ஏனென்றால் யூதர், விசேஷமாய்ப் பரிசேயர் இயேசுநாதரைப் பகைத்து, அவரையும் அவருடைய சீஷர்களையும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்களென்று அவன் நன்றாய் அறிந்திருந்தான். இதுதான் அவன் இராத்திரியிலே இயேசு இரட்சகரண்டைக்கு வந்ததுக்குக் காரணம்.

15. நீக்கொதேமு இயேசுநாதரோடே எதைப் பற்றிப் பேசினான்.

இரட்சிப்பின் வழியை, அதாவது மனிதன் இரட்சிக்கப்படவேண்டியதெப்படியென்பதைப் பற்றித்தான்.

16. இயேசுநாதர் இரட்சிப்புக்கு எந்த வழியைக் காண்பிக்கிறார்.

மறுஜெனனமாகுதலின் வழியை. ஏனென்றால் அவர்: மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், ஒருவன் மறுபடியும் பிறந்தாலொழிய பராபரனுடைய இராச்சியத்தைக் காணக் கூடாது என்றார் (௩).

17. மறுபடியும் பிறக்க வேண்டுமென்கிற வார்த்தையினால் இயேசுநாதர் என்னத்தைக் குறிக்கிறார்.



இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நாம் பராபரனுடைய பிள்ளைகளாக வேண்டும் என்பதை. சுபாவத்தின்படியே நாம் எல்லாரும் கோபத்திற்குள்ளான வர்களாயிருக்கிறோம். ஆனால் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நாம் பராபரனுடைய பிள்ளைகளும் நித்திய ஜீவ சுதந்தரருமாவோம். ஏனென்றால் எத்தனை பேர் அவரை ஏற்றுக்கொண்டார்களோ, தம்முடைய நாமத்தின் பேரில் விசுவாசிக்கிற அத்தனை பேருக்கும் அவர் பராபரனுடைய பிள்ளைகளாகிறதற்கு அதிகாரங் கொடுத்தார் (யோவா. ௧, ௰௨). நாம் பிள்ளைகளேயானால் சுதந்தரருமாயிருக்கிறோம், பராபரனுடைய சுதந்தரரும், கூட மகிமைப்படக் கூடப் பாடு பட்டோமானால், கிறிஸ்துவுடன் சுதந்தரருந் தானே (ரோ. ௮, ௰௭).

18. மறுஜெனனத்தை நமக்குள் நடப்பிக்கிறவர் ஆர்.

பரிசுத்த ஆவியானவர். அவர் முதல் முதல் ஞானஸ்நானத்திலே நமக்கு இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக்கொண்டு, நம்மைப் பரிசுத்தமாக்கிப் பராபரனுடைய பிள்ளைகளாக்குகிறார். ஞானஸ்நானத்தைப்பற்றி பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறதாவது: பராபரன் மறுஜெனனமுழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் என்கிறான் (தீத்து ௩, ௫. ௭).

19. கர்த்தர் கொடுத்த இந்த உத்தரவு நீக்கொதேமுக்கு விளங்கிற்று.

இல்லை. ஆதலால் அவன்: மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறக்கலாம். அவன் இரண்டாந்தரந் தன் தாயின் கர்ப்பத்துக்குள் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்று கர்த்தரைக் கேட்டான் (௪).

20. இயேசுநாதர் அதை அவனுக்கு விஸ்தரித்ததெப்படி.

மறுபிறப்பு தண்ணீரினாலும் ஆவியினாலும், அதாவது பரிசுத்த ஞானஸ்நானத்தினால் ஆகும் என்று இயேசுநாதர் தெரிவித்து: மெய்யாகவே, மெய்யாகவே, உனக்குச்சொல்லுகிறேன், ஒருவன் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்தாலொழிய பராபரனுடைய இராச்சியத்துக்குள் பிரவேசிக்கக் கூடாது என்கிறார் (௫).

21. மனிதன் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறக்கவேண்டியது ஏன்.

நாம் எல்லாரும் பாவத்திலே கர்ப்பந்தரிக்கப் பட்டுப் பிறந்திருக்கிறதினாலும், பாவத்தினிமித்தம் பராபரனுடைய இராச்சியத்துக்குப் புறம்பானவர்களாயிருக்கிறதினாலுந்தான்.

ஆதலால் கிறிஸ்து: மாமிசத்தினால் பிறந்தது மாமிசமாயிருக்கிறது, ஆவியினால் பிறந்தது ஆவியாயிருக்கிறதென்று சொல்லுகிறார் (௬).

22. மாமிசத்தினால் பிறக்கிறதாவதென்ன.

பாவியாகவே பாவமுள்ள தாய்தகப்பன்மாரிடத்தில் பிறக்கிறதாம்.

23. ஆவியினால் பிறக்கிறதாவதென்ன.

பரிசுத்த ஆவியினாலே பராபரனுடைய பிள்ளையாகப் பிறக்கிறதாம். அப்படிப் பிறந்தவன் பரிசுத்தமும் ஆவியுமான மனிதனாயிருக்கிறான்.

24. பரிசுத்த ஆவியினால் உண்டான பிறப்பை நாம் சரியாய் அறியக் கூடுமா.

கூடாது. ஏனெனில் காற்று வீசுகிறதை அதின் சத்தத்தைக் கொண்டு கேட்கிறோம். ஆகிலும் அது எங்கேயிருந்து வருகிறது, எங்கே போகிறது என்பதை அறியாதிருக்கிறோம். இது இப்படியிருக்கக்கொள்ள நாம் பரிசுத்த ஆவியின் வல்லமையை எப்படி அறியக்கூடும். அதைப்பற்றி இயேசுநாதர்: நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டுமென்று நான் உனக்குச் சொன்னதற்காக அதிசயப்படாதே. காற்று தனக்குச் சரிபோனவிடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய். ஆகிலும் அது எங்கேயிருந்து வருகிறதென்றும் எங்கே போகிறதென்றும் அறியாய். ஆவியினால் பிறந்தவன் எல்லாம் அந்தப்படியாயிருக்கிறான் என்கிறார் (எ. அ).

25. இந்த உத்தரவு நீக்கொதேமுக்குத் திருப்தியைக் கொடுத்ததா.

இல்லை. அவன் மறுபடியும் இதுகள் சம்பவிக்கக் கூடுகிறதெப்படி என்று கேட்டான்.

26. அதற்கு இயேசுநாதர் என்ன உத்தரவு கொடுத்தார்.

அவன் இயேசுவின் வார்த்தையை நம்பாமல், பராபரனுடைய இரகசியங்களைப் பற்றி விசாரித்தபடியால், அவர் அவனைக் கடிந்துகொண்டு சொன்னதாவது: நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும், இதுகளை அறியாயோ. மெய்யாகவே, மெய்யாகவே, உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதற்குச் சாட்சிகொடுக்கிறோம். ஆனால் எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளீர்கள். நான் உங்களுக்குப் பூமிக்கடுத்த காரியங்களைச் சொல்ல நீங்கள் விசுவாசியாதேபோனால், பரமகாரியங்களை உங்களுக்குச் சொன்னேனாகில் எப்படி விசுவாசிப்பீர்கள் என்கிறார் (௰-௰௨).



27. பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்தவர்கள் ஆரால் இரட்சிக்கப்படுவார்கள்.

நமக்கு இரட்சிப்பைச் சம்பாதிக்க வானத்திலிருந்திறங்கினவரும், நமக்கு வழியை ஆயத்தம்பண்ண வானத்திற்கு ஏறினவருமாகிய நம்முடைய இரட்சகராலே தான். ஏனென்றால் அவர் நம்முடைய பாக்கியத்திலே: பரமண்டலத்திலிருந்திறங்கின பரமண்டலத்திலுள்ள மனுஷனுடைய குமாரனே ஒழிய ஒருவனும் பரமண்டலத்துக்கு ஏறினதில்லையென்று சொல்லுகிறபடியால் (௰௩), அவரை மெய்யான விசுவாசத்தினால் பற்றிக்கொள்ளுகிற யாவரும் வானத்துக்கு ஏறுவார்கள்.

28. இயேசுநாதர் அதை எந்தத் திருஷ்டாந்தத்தினால் விளங்கப்பண்ணுகிறார்.

௪ மோசே உக-ல் எழுதியிருக்கிற வெண்கல சர்ப்பத்தின் திருஷ்டாந்தத்தினாலே. ஏனென்றால் இஸ்ரவேல் சனங்கள் வனாந்தரத்தில் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களினாலே கடிக்கப்பட்டு, அவர்களில் அநேகம் பேர் மடிந்துபோனபோது: மோசே கர்த்தருடைய கட்டளையின்படியே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டுபண்ணி, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தான். அப்போது கொள்ளிவாய்ச் சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டவன் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்துப் பிழைத்தான். அதுபோல் நரக பாம்பாகிய பிசாசினால் கடிக்கப்பட்ட நாம் எல்லாரும் சிலுவையில் தொங்கின இயேசு சுவாமியை விசுவாசமாய் நோக்கிப் பார்ப்போமானால், நாமும் இரட்சிக்கப்படுவோம். மோசே வனாந்தரத்தில் சர்ப்பத்தை உயர்த்தின வண்ணமாய், மனுஷனுடைய குமாரனும், அவர் பேரில் விசுவாசிக்கிறவன் எல்லாம் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை அடைவதற்காக உயர்த்தப்பட வேண்டியது என்று கிறிஸ்து சொல்லுகிறார் (௰௪. ௰௫).

## படிப்பினை.

29. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. நீக்கொதேமுவிடத்தில் நாம் கற்றுக் கொள்ளுகிறதாவது:

௧. மனிதனுடைய விசுவாசம் துவக்கத்திலே மிகவும் பெலவீனமுள்ளதாயிருக்கிறது. ஏனெனில் நீக்கொதேமு

துவக்கத்தில் மிகவும் பெலவீன விசுவாசமுள்ளவனாயிருந்து, பகற்காலத்தில் இயேசுவண்டைக்குவரத் தன் சாதியாரினிமித்தம் பயந்து, இராக்காலத்தில் அவரண்டைக்கு வந்தான். அவன் விசுவாசம் பலமானபோதோவெனில், இயேசுநாதருடைய மரணத்துக்குப்பின் எல்லா யூதருக்கும் தன் சாதியாருக்கும் முன்பாக வெளியரங்கமாய் அவரைத் தன் இரட்சகர் என்று அறிக்கையிடுகிறவனாய் அவர் நல் அடக்கம் பண்ணப்பட உதவி செய்தான்.

உ. மனுஷர் எல்லாரும் விசுவாசத்துக்கடுத்த காரியங்களிலே சுபாவத்தின்படி ஞானக்குருடர்களாயிருக்கிறார்கள். நீக்கொதேமு மறுபிறப்பைப்பற்றிய போதகத்தைக் கிரகித்தறியக் கூடாதவனாயிருந்ததுபோல், நாமும் இருக்கிறோம். சென்ம சுபாவமான மனுஷன் பராபரனுடைய ஆவியின் நியாயங்களை ஏற்றுக்கொள்ளான். ஏனெனில் அதுகள் அவனுக்குப் பைத்தியமாயிருக்கிறது. அதுகள் நியாயப்பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறபடியினாலே, அவன் அதுகளை அறியமாட்டான் (௧கொரி. உ, ௰௪).

௩. நாம் விசுவாசத்துக்கடுத்த காரியங்களைப்பற்றிப் பயமின்றி விசாரிக்கக் கூடாது. நீக்கொதேமு மனுஷனுடைய மறுபிறப்பு எப்படியாகும் என்று அறிய மனதுள்ளவனாய்: இதுகள் சம்பவிக்கக் கூடுகிறது எப்படி என்று கேட்டபோது, நாம் இதற்குமுன் கேட்டபடி இயேசுநாதர் அவனைக் கடிந்துகொண்டார்.

II. கர்த்தராகிய கிறிஸ்துவினிடத்தில் நாம் கற்றுக் கொள்ளுகிறதாவது:

அவர் நமக்கு மோட்சத்தின் வழியைக் காண்பிக்கிற மெய்யான போதகராயிருக்கிறார். அப்படியே நீக்கொதேமு: ரபீ, நீர் பராபரனாலே வந்த போதகர் என்று அறிவோம் என்றான். மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், ஒருவன் மறுபடியும் பிறந்தாலொழிய, பராபரனுடைய இராச்சியத்தைக் காணக் கூடாது என்று இயேசுநாதர் சொன்னபடியால் (௩), இரட்சிப்படைய விரும்புகிறவன் மறுபடியும் பிறக்க வேணும், அதாவது பராபரனுடைய பிள்ளையாக வேண்டும் என்று நமக்குப் போதிக்கிறார். மனுஷன் மறுபடியும் பிறந்து, பராபரனுடைய பிள்ளையாகிறதற்குச் செய்ய வேண்டியதென்னவென்றால்:

a. அவன் ஞானஸ்நானம் பெறவேண்டும். ஏனென்றால் ஒருவன் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்தாலொழிய, பராபரனுடைய இராச்சியத்திற்குள் பிரவேசிக்கக் கூடாது என்று கிறிஸ்துநாதர் சொல்லுகிறார் (௫).



b. அவன் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்து, கிறிஸ்துவை உண்மையாய் விசுவாசிக்க வேண்டும். அதைத் தெரிவிக்க இயேசுநாதர் நீக்கொதேமுக்கு மோசே வனாந்தரத்தில் சர்ப்பத்தை உயர்த்தின வண்ணமாய் மனுஷனுடைய குமாரனும், அவர்பேரில் விசுவாசிக்கிறவன் எல்லாங் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை அடைவதற்காக உயர்த்தப்பட வேண்டியதென்றார் (௰௪. ௰௫). அப்படியே அவர் மாற்.௰௬, ௰௬-ல் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்கிறார்.

c. பரிசுத்த ஆவியானவர் தன்னைச் சகல நற்கிரியைகளுக்கும் ஏவி எழுப்பும்படி அவன் அவருக்கு இடங் கொடுக்க வேண்டும். ஏனென்றால் ஆவியினால் பிறந்தது ஆவியாயிருக்கிறது. அதாவது, பரிசுத்த ஆவியினால் பிறந்த மனிதன் மாமிசத்தின்படியல்ல, ஆவியின்படியே பரிசுத்தமாய் நடக்கிறான். ஏனென்றால் எவர்கள் பராபரனுடைய ஆவியினால் ஏவப்பட்டு நடக்கிறார்களோ, அவர்கள் பராபரனுடைய புத்திரராயிருக்கிறார்கள் (ரோ. ௮, ௰௪). பரிசுத்த ஆவியானவர் நம்மை நித்திய சீவனின் பாதையிலே நடத்திவரப் பிரியசித்தமுள்ளவராயிருக்கிறார்.

30. இந்தப் பரிசுத்த ஆவியானவரை நாம் எப்படி அடையலாம்.

செபத்தினாலே தான். ஏனென்றால் இப்போதும் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருந்தால், எத்தனை அதிகமாய்ப் பரம பிதாவானவர் தம்மைக் கேட்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பார் என்று இயேசு சொல்லுகிறார் (லூக். ௰௧, ௰௩). ஆதலால் நாம் அடிக்கடி தாவீதோடு பெருமூச்சு விட்டு கேட்க வேண்டியதாவது: பராபரனே, உம்முடைய முகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். உம்முடைய இரட்சிப்பின சந்தோஷத்தை எனக்குத் திரும்பக் கட்டளையிடும். உற்சாகமான ஆவி என்னைத் தாங்கட்டும் (சங். ௫௧, ௰௧. ௰௨). உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் படிப்பியும். ஏனெனில் தேவரீர் என் பராபரன். உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக (சங். ௧௪௩, ௰).

திரியேக பராபரனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவருக்குச் சதாகாலமாய் கனமும் மகிமையுந் துதியும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக, ஆமேன்.

# திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௧-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௨௩௬.)

சுவி. லூக்கா ௧௬, ௧௯—௩௧.

ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பர
மும் விலையேறப்பெற்ற புடவையுந் தரித்துக்கொண்டு, அநுதின
முஞ் சம்பிரமமாய் வாழ்ந்திருந்தான். 20 ஆனால் லாசரு என்ற
நாமமுள்ள தரித்திரன் ஒருவன் இருந்தான். அவன் பருக்கள்
நிறைந்தவனாய் அவன் வாசலண்டையிலே கிடந்து, 21 ஐசுவரிய
வானுடைய பந்தியிலிருந்து விழுந் துணிக்கைகளால் தன் பசியை
ஆற்ற ஆசையாயிருந்தான். ஆனால் நாய்களும் வந்து அவன் பருக்
களை நக்கிற்று. 22 அப்புறஞ் சம்பவித்ததேதென்றால், தரித்திரன்
மரித்து; தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய்
விடப்பட்டான். ஆனால் ஐசுவரியவானும் மரித்து அடக்கப்பட்
டான். 23 அவன் நரகத்திலே வேதனைகளில் இருக்கும்போது,
தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடி
யிலே லாசருவையுங் கண்டான. 24 அப்போது அவன்: தகப்பனா
கிய ஆபிரகாமே, நீர் என்மேல் இரங்கி, லாசருவை தன் விரலின்
நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ண
அனுப்பும்; அதேதென்றால் இந்தச் சுவாலையிலே வேதனைப்படுகி
றேன் என்று கூப்பிட்டான். 25 ஆனால் ஆபிரகாம் சொன்னதா
வது: மகனே உயிரோடிருக்கக்கொள்ள, நீ உன் நன்மைகளையும்
லாசரு அப்படியே தீமைகளையும் அநுபவித்துத் தீர்ந்ததென்று
நினைத்துக்கொள்; இப்போது இவனோ தேற்றப்படுகிறான், நீயோ
வேதனைப்படுகிறாய். 26 இதுகளெல்லாந் தவிர, இவ்விடத்திலி
ருந்து உங்களண்டைக்குக் கடந்துபோகவும், அல்லது அவ்விடத்
திலிருந்து எங்களண்டைக்குக் கடந்துவரவும், மனதுள்ளவர்களுக்
குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்
பிளப்பு உறுதிபண்ணப்பட்டிருக்கிறது என்றான். 27 அப்போது
அவன் சொன்னதாவது: அப்படியானால், தகப்பனே, நீர் அவனை
என் தகப்பன் வீட்டுக்கு அனுப்ப உம்மை வேண்டிக்கொள்ளு
கிறேன். 28 ஏனெனில் எனக்கு ஐந்து சகோதரர் உண்டு; அவர்
களும் இந்த வேதனையுள்ள இடத்துக்கு வாராதபடிக்கு, இவன் அவர்
களுக்குத் திடச்சாட்சியாய் அறிவிக்கத் தக்கதாகத் தானே என்
றான். 29 ஆபிரகாம் அவனுடனே: அவர்களுக்கு மோசேயுந் தீர்க்க
தரிசிகளும் உண்டு; அவர்களை அவர்கள் கேட்கட்டும் என்றான்.
30 அவனோவெனில்: அப்படி அல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே,
மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களண்டைக்குப்போனால், குணப்
படுவார்கள் என்றான். 31 ஆனால் அவன் இவனுடனே: அவர்கள்
மோசேயையுந் தீர்க்கதரிசிகளையுங் கேளாவிட்டால், மரித்தோரி
லிருந்து ஒருவன் எழுந்தாலும் ஒப்பார்களென்று சொன்னான்
என்றார்.



1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தில் எத்தனை பங்குண்டு.

இரண்டு பங்கு.

## முதலாம் பங்கு.

2. முதலாம் பங்கு எதைப் பற்றியது.

ஐசுவரியவானுடையவும், ஏழை லாசருவினுடையவும் சீவியத்தைப் பற்றியது.

3. ஐசுவரியமுள்ள மனுஷன் பேர் என்ன.

அவனுடைய பேர் வேதத்தில் சொல்லப்படவில்லை. ஏனென்றால் நாம் குணப்படாதவர்களுடைய பேர்களை நினைவுகூர அவர்கள் பாத்திரவான்களல்ல.

4. அவன் எப்படி சீவனம் பண்ணினான்.

௧. வீண்பெருமையுள்ளவனாய்ச் சீவனம் பண்ணினான். ஏனென்றால் ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற புடவையுந் தரித்துக்கொண்டிருந்தான் என்று நமது வாக்கியம் சொல்லுகிறது. இரத்தாம்பரம் இராசமகிமைக்கு அடையாளம்.

௨. பெருந்தீண்டியிலும் செல்விக்கையான வாழ்விலும் சீவனம் பண்ணினான். ஏனென்றால் அவன் அநுதினமுஞ் சம்பிரமமாய், அதாவது சந்தோஷமும் மகிழ்ச்சியுமாய்ப் பிழைத்தான். இம்மையில் சரீரசந்தோஷம், பாக்கியத்தைக் கொடுக்கக் கூடிய காரியங்களில் அவனுக்குக் குறைவு ஒன்றுமில்லை.

௩. இவன் இரக்கமற்றவனாய்ச் சீவனம் பண்ணினான். ஏனெனில் நாய்கள் வந்து, எளிய லாசருவின் பருக்களை நக்கி, அவனுக்குக் கொஞ்சம் உதவி ஒத்தாசை செய்திருந்தும், அந்த ஐசுவரியமுள்ள மனுஷன் தன் மேசையிலிருந்து விழுந் துணிக்கைகளை முதலாய்த் தன் வாசலில் கிடக்கிற அந்த ஏழை லாசருவுக்குக் கொடுக்கப் பிரியப்படாத இரக்கமற்ற கல்நெஞ்சனாயிருந்தான்.

5. ஏழை லாசரு எப்படிச் சீவனம் பண்ணினான்.

௧. பெரிய தரித்திரத்திலே. ஏனென்றால் அவன் தன் அன்றாட அப்பத்தை இரந்து கேட்கவேண்டியதாயிருந்தது. அவனைப்பற்றி நம்முடைய வாக்கியத்திலே: ஆனால் இலாசரு என்ற நாமமுள்ள தரித்திரன் ஒருவன் இருந்தான். அவன் பருக்கள் நிறைந்தவனாய் ஐசுவரியவானுடைய வாசலண்டையிலே கிடந்து, அவனுடைய பந்தியிலிருந்து விழுந் துணிக்கைகளால் தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தானென்று இரட்சகர் சொல்லுகிறார்.

உ. பெரியவியாதியிலும் நிர்ப்பந்தத்திலும். ஏனென்
ருல் அவனுக்கு நோவுண்டாக்குகிற பருக்கள் அதிகமாயிருந்
தது. அவனுக்கு இரங்கி உதவிசெய்ய யாரும் மனங்கொள்ள
வில்லை. ஆனால் நாய்கள் அவனண்டைவந்து, அவன் பருக்
களை நக்கி, அவனுக்குக் கொஞ்சம் உதவி ஒத்தாசைசெய்தது.
ங. மெய்த்தெய்வபத்தியிலும். ஏனென்றால் அவன்
மகா பெரிய அவதியிலும் இடுக்கண்ணிலும் அகப்பட்டிருந்
தும், தன் பத்தியைவிடாமல்பொறுமையுள்ளவனுயிருந்தான்.
இரக்கமற்ற அந்த ஐசுவரியவான் மேல் பொருமைகொண்
டான் என்ருவது, அவனுக்கு இந்த அந்தப் பொல்லாப்பு வர
விரும்பினுன் என்ருவது இங்கே சொல்லப்பட்டிருக்கிறதில்
லை. அவன் தன் துன்பத்தைப் பொறுமையாய்ச் சகித்தான்.
6. நான் இளைஞனுயிருந்தேன், முதிர் வயதும்
ஆனேன், ஆனால் நீதிமான் கைவிடப்பட்டதையும், அல்லது
அவன் வித்து அப்பந் தேடுகிறதையுங் கண்டேன் இல்லை
என்று சங்கீதக்காரன் சொல்லுகிருனே (சங். ங எ, உ௫),
அப்படியிருக்க இந்த ஏழை லாசரு இவ்விதமாய்ச் ஜீவனம்
பண்ணினதேன்.

நீதிமான் ஒருக்காலும் அப்பந் தேடமாட்டான் என்
கிற அர்த்தம் தாவீதின் வார்த்தைகளுக்கில்லை. ஏனென்ருல்
அவன் தானே நாபாலிடத்திலும் அபிமெலேக்கிடத்திலும்
அப்பங் கேட்டான். வேறே அநேகந் தெய்வபக்தியுள்ளவர்க
ளும் அப்பந் தேடினுர்கள். ஆனால் அவனுடைய வார்த்தைக்
கு அர்த்தம் என்னவென்ருல், நீதிமான் அப்பந் தேடினுலும்,
அதாவது விசனத்தோடே புசித்தாலும், இரந்து ஜீவனம்
பண்ணினுலும், அவன் பராபரனுல் கைவிடப்படான். இதற்கு
இந்த ஏழை லாசரு ஒரு திருஷ்டாந்தம். ஏனென்ருல் அவன்
பிச்சையெடுத்து உண்டு, குடித்தும், பராபரன் அவனைக் கை
விடாமல்; நாய்கள் மூலமாயாவது அவனுக்கு ஒத்தாசையை
யும் ஆறுதலையும் செய்தார்.

## படிப்பினை.

7. இதினுல் நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகி
ரும்.

I. ஐசுவரியவானிடத்தில் நாம் கற்றுக் கொள்ளுகிற
தாவது:

க. ஐசுவரியமுள்ளவர்கள் பொதுவாகத் தங்கள்
ஐசுவரியத்தினுலே பெரிய பாவங்களுக்குச் சோதிக்கப்படு
வார்கள். மெய்தான், அநேக தெய்வபத்தியுள்ள மனிதர் ஐசு
வரியவான்களாகவே இருந்தார்கள். திருஷ்டாந்தமாக ஆபிர



காம், தாவீது, அரிமத்தியா ஊர் யோசேப்பு முதலியவர்கள்
இப்படிப்பட்டவர்கள்தான். ஆனால் நாம் இந்த ஐசுவரிய
முள்ள மனுஷனிடத்தில் பார்க்கிறபடி, ஐசுவரியம் மனிதரை
வீண்பெருமை, அகந்தை, பெருந்தீண்டி, இரக்கமில்லாமை
முதலிய பாவங்களுக்கு உள்ளாக்குகிறது. பிள்ளைகளே, திர
வியங்கள் பேரிலே நம்பிக்கையாயிருக்கிறவர்கள் பராபரனு
டைய இராச்சியத்தில் பிரவேசிக்கிறது எத்தனை அரிது. ஐசு
வரியவான் பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கிற
தைப் பார்க்க ஒட்டகம் ஊசியின் காதிலே நுழைகிறது எளி
தாயிருக்குமென்று இரட்சகர் சொல்லியிருக்கிருர் (மாற். ம,
உச. உ௫).

உ. உடையில் காட்டும் பெருமையும், ஜீவனத்தில்
காட்டும் போசனப்பிரியமும் பெருந்தீனியும், எளிய பிறத்தி
யானுக்குக் காட்டும் இரக்கமில்லாமையும், இவை போன்ற
இன்னம் அநேகங்களும் பெரும்பாவங்களாயிருக்கிறது. இரு
தயத்தின் அவிசுவாசத்தையுங் குணப்படாமையையுங் காட்
டுகிற இந்தப் பாவங்களில் ஐசுவரியமுள்ள மனுஷன் நிலைத்
திருந்தபடியால், நரகத்திலே தள்ளப்பட்டான். சோதோ
மின் சனங்கள் இந்தப் பாவங்களிலே நடந்தபடியால், அக்
கினியினுலும் கெந்தகத்தினுலும் வெந்தழிந்து போனுர்கள்.
இதோ, உன் சகோதரியாகிய சோதோமுக்கு இருந்த அக்கி
ரமம் பெருமை என்பது. அப்பத்தின் பரிபூரணமும் பிரயாச
மில்லாத சாங்கோபாங்கமும் அவளுக்கும் அவள் குமாரத்தி
களுக்கும் இருந்தது. ஆனால் சிறுமையும் எளிமையுமான
வன் கையை அவள் பலப்படுத்தாதே போனுள் (எசேக்.
மசு, சகூ).

ங. நாம் இந்த ஐசுவரியவானுடைய திருஷ்டாந்தத்
தில் பார்க்கிறபடியே, குணப்படாதவர்கள் இவ்வுலகில் சுகித்
து வாழ்ந்திருப்பார்கள். அதைப்பற்றி ஆசாப் முறையிட்டுச்
சொல்லுகிறதாவது: ஆகாதவர்களின் சாங்கோபாங்கத்தை
நான் காண்கையில், வீம்புக்காரர்மேல் பொருமையானேன்.
நரசீவ வருத்தத்தில் அகப்பட்டிரார்கள், வேறே மனுஷரோ
டே உபாதையடையார்கள். இதோ, அவர்கள் ஆகாதவர்க
ளாமே. ஆகிலும் என்றும் சுகசீவிகளாயிருந்து, ஆஸ்தியைப்
பெருகப் பண்ணுகிருர்கள் (சங். எங, ங. ௫. மஉ).

II. ஏழை லாசருவினிடத்தில் நாம் கற்றுக்கொள்ளு
கிறதாவது:

க. பராபரனுக்குப் பயந்து தெய்வபத்தியாய் ஜீவ
னம் பண்ணுகிற எளியவர்களும் பராபரனுடைய கிருபைக்
குப் பங்குள்ளவர்களாயிருக்கிருர்கள். அதைப்பற்றி சாலொ

மோன் சொல்லுகிறதாவது: இருவழித் திரியாவரக்காரனாகிய ஐசுவரியவானைப் பார்க்கிலும், தன் உத்தமத்திலே நடக்கிற தரித்திரனே வாசி (வாக். உ௮, ௬).

௨. தெய்வபத்தியுள்ளவர்கள் இவ்வுலகில் வெகு துன்பங்களைச் சகிக்க வேண்டும். இதற்கு தரித்திரத்திலும் வியாதியிலுந் தன் காலத்தைப் போக்கின இந்த ஏழை லாசரு ஒரு திருஷ்டாந்தம். இதுதான் பராபரன் ஏற்படுத்தின ஒழுங்கு. நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்ப் பராபரனுடைய இராச்சியத்துக்குள் பிரவேசிக்க வேண்டும் (நடபடி ௰௪, ௨௨).

### இரண்டாம் பங்கு.

8. சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கு எதைப் பற்றியது.

ஏழை லாசருவின் மரணத்தையும், ஐசுவரியவானுடைய மரணத்தையும் பற்றியது.

9. ஏழை லாசரு தன் மரணத்துக்குப்பின் எங்கே போனான்.

ஆபிரகாமுடைய மடியிலே, அதாவது மோட்சத்துக்குப்போனான். யூதரின் முற்பிதாவும் விசுவாசிகளின் தகப்பனுமாகிய ஆபிரகாம் மரணவழியாய் மோட்சத்துக்குள் பிரவேசித்திருந்தான். அந்த இடத்துக்கே எளிய லாசருவின் ஆத்துமமுந் தெய்வதூதரால் கொண்டுபோகப்பட்டது. அப்புறம் சம்பவித்ததேதென்றால், தரித்திரன் மரித்து, தெய்வதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான் என்று நமது வாக்கியம் சொல்லுகிறது (௨௨).

10. ஐசுவரியமுள்ள மனுஷன் மரிக்கவில்லையா.

ஆம், ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான் என்று நம்முடைய வாக்கியத்தில் எழுதியிருக்கிறது.

11. அவன் மாத்திரமா அடக்கம் பண்ணப்பட்டான். லாசரு அடக்கம் பண்ணப்படவில்லையா.

ஏழை லாசருவும் அடக்கம் பண்ணப்பட்டான். ஆனால் இவன் அடக்கம் யாதொரு சிறப்பு, ஆடம்பரத்தோடு நடவாததால், அதைப்பற்றி ஒன்றுஞ் சொல்லப்படவில்லை. ஐசுவரியவானுடைய அடக்கமோ மிகுந்த சிறப்போடும் வெகு ஆடம்பரத்தோடும் நடந்திருந்தபடியால், அதைப்பற்றி மாத்திரம் எழுதியிருக்கிறது.

12. ஐசுவரியவானுடைய மரணத்திற்குப்பின் அவனுக்குச் சம்பவித்ததென்ன.



அவன் நரகத்திலே வேதனைகளில் இருந்தான். அவன் நரகசுவாலையிலிருந்து ஒரு துளி தண்ணீருக்கு ஏங்கி, தன் சீவகாலத்தில் கவனியாமல் அசட்டைபண்ணின ஏழை லாசருவைக்கொண்டு தனக்கு ஒத்தாசை செய்ய ஆபிரகாமை நோக்கிக் கதறிக் கூப்பிட்டான். அதைப்பற்றி நமது வாக்கியம் சொல்லுகிறதாவது: அவன் நரகத்திலே வேதனைகளில் இருக்கும்போது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும், அவன் மடியிலே லாசருவையுங் கண்டான். அப்போது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் என்மேல் இரங்கி, லாசருவைத் தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ண அனுப்பும், அதேனென்றால் இந்தச் சுவாலையிலே வேதனைப்படுகிறேனென்று கூப்பிட்டான். (௨௩. ௨௪).

13. ஆபிரகாம் அவனுக்கு என்ன உத்தரவு சொன்னான்.

௧. மகனே, உயிரோடிருக்கக்கொள்ள நீ உன் நன்மைகளையும், லாசரு அப்படியே தீமைகளையும் அநுபவித்துத் தீர்ந்ததென்று நினைத்துக்கொள் என்று சொல்லி, பராபரனுடைய நீதியை நினைப்பூட்டினான் (௨௫).

௨. இதுகள் எல்லாந் தவிர, இவ்விடத்திலிருந்து உங்களண்டைக்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களண்டைக்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உறுதிபண்ணப்பட்டிருக்கிறது என்று சொல்லி (௨௬), மோட்சத்திலிருந்து நரகத்துக்கும், நரகத்திலிருந்து மோட்சத்துக்கும், போக்குவரவு செய்யக் கூடாதென்று காண்பித்து, அவன் விரும்பின ஒத்தாசை அவனுக்கு இல்லை என்று மறுத்தான்.

14. அப்போது ஐசுவரியவான் வேண்டிக்கொண்டது என்ன.

அப்படியானால் தகப்பனே, நீர் லாசருவை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்ப உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன், ஏனெனில் எனக்கு ஐந்து சகோதரர் உண்டு, அவர்களும் இந்த வேதனையுள்ள இடத்துக்கு வராதபடிக்கு, இவன் அவர்களுக்குத் திடச்சாட்சியாய் அறிவிக்கத் தக்கதாகத் தானே என்றான் (௨௭. ௨௮).

15. அதற்கு ஆபிரகாம் கொடுத்த உத்தரம் என்ன.

ஐசுவரியவான் கேட்ட இந்த விண்ணப்பத்தையும் அல்லத்தட்டி, குணப்படாத அவன் சகோதாரரண்டைக்கு லாசரு போவது அவசரமல்லவென்று காண்பித்தான்.

ஏனென்றால் அவர்களுக்குப் பராபரனுடைய வசனம், அதாவது மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதிய ஆகமங்கள் இருக்கிறபடியால், அவர்கள் நரக வேதனைக்கு வராதபடிக்கு எப்படி நடக்கலாம் என்று அவைகளால் கற்றுக்கொள்ளலாம என்றான். அதைக் குறித்து நம்முடைய வாக்கியத்தில்: ஆபிரகாம் அவனுடனே: அவர்களுக்கு மோசேயுந் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களை அவர்கள் கேட்கட்டும் என்றான் என்று எழுதியிருக்கிறது (௨௯).

16. இந்த உத்தரவு ஐசுவரியவானுக்குத் திருப்தியைக் கொடுத்ததா.

இல்லை. ஆதலால் அவன் மறுபடியும்; அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களண்டைக்குப்போனால், குணப்படுவார்கள் என்றான் (௩௰).

17. ஆபிரகாம் கடைசியாக அவனுக்கு என்ன உத்தரவு கொடுத்தான்.

அவர்கள் மோசேயையுந் தீர்க்கதரிசிகளையுங் கேளாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்தாலும் ஒப்பார்களென்று சொன்னான் (௩௧).

படிப்பினை.

18. இந்த இரண்டாம் பங்கினால் நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. ஏழை லாசருவால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. தெய்வபக்தியுள்ளவர்களுடைய துன்பம் எப்போதும் இருக்கிறதில்லை. அதற்கு மரணத்திற்கு முன்னே முடிவு வராவிட்டாலும், மரணத்தோடு அது முடியும். கர்த்தர் நீதிமானை என்றென்றைக்குந் தள்ளாடவொட்டார் (சங். ௫௫, ௨௨).

௨. தெய்வபக்தியுள்ளவர்களாகிய விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் மரணத்திற்குப் பிற்பாடு மோட்சத்துக்குள் சேர்ந்து, நித்திய ஆறுதலாலுஞ் சந்தோஷத்தாலுந் தேற்றப்படும். இப்போது இவன் தேற்றப்படுகிறானென்று ஆபிரகாம் லாசருவைப்பற்றிச் சொன்ன வார்த்தை இறந்துபோன தெய்வபக்தியுள்ள எல்லா ஆத்துமாக்களையும் பற்றிச் சொல்லப்படும். கர்த்தருக்குள் சாகிற மரித்தோர் இது முதலாய்ப் பாக்கியவான்கள் என்று எழுது; ஆம், தங்கள் வேலைகளை விட்டு இளைப்பாறத்தானே என்று ஆவியானவர் சொல்லுகிறார். அவர்கள் கிரியைகளோ அவர்களுடனே கூடப் பின்செல்லுகிறது (அபி. ௧௪, ௧௩).



II. ஐசுவரியமுள்ள மனுஷனால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. குணப்படாதவர்களுடைய செல்வத்தையும் வாழ்வும் எப்போதும் இருக்கிறதில்லை. அந்த ஐசுவரியவான் உயிரோடிருக்கையில் ஒரு குறைவும் இருந்ததில்லை. அவன் மரணத்திற்குப் பிற்பாடு ஒரு துளி தண்ணீர் முதலாய் கிடையாதவனாயிருந்தான். ஐசுவரியவான் தன் மரணத்தில் ஒன்றும் எடுத்துப்போவதில்லை, அவன் மகிமை அவனைப்பின் சென்று இறங்குவதுமில்லை என்று தாவீது சங்கீதக்காரன் சொல்லுகிற வார்த்தையின்படியே சம்பவிக்கும் (சங். ௪௯, ௰௭).

௨. தங்கள் பாவங்களில் நிலைத்திருந்து இறந்துபோன குணப்படாதவர்கள் நரகத்தில் சேர்ந்து, என்றென்றைக்கும் அழியாத நித்திய அக்கினியின் வேதனையை அநுபவிப்பார்கள். இந்தச் சுவாலையிலே வேதனைப்படுகிறேன் என்று ஐசுவரியவான் கூப்பிட்டதுபோல், குணப்படாதவர்கள் எல்லாரும் நரகத்திலே கூப்பிடுவார்கள். அவர்களைக்குறித்து: அவர்கள் வெளியேபோய், நமக்கு விரோதமாய்ப் பாதகஞ்செய்த மனுஷருடைய பிரேதங்களைப் பார்ப்பார்கள். ஏனெனில் அவர்களுடைய பூச்சி சாகாமலும், அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும். அவர்கள் எல்லா மாமிசத்துக்கும் அரோசிகமாயிருப்பார்கள் என்று எழுதியிருக்கிறது (எசா. ௬௬, ௨௪).

III. தரித்திரனாகிய லாசருவாலும் ஐசுவரியவானாலுங் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. மனுஷனுடைய ஆத்துமா சாகாததாயிருக்கிறது. ஏனெனில் சரீரம் செத்துப்போனாலும், ஆத்துமா என்றைக்கும் உயிரோடிருக்கும். அதைப்பற்றி நமது இரட்சகர்: ஆத்துமத்தைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தைக் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படாமல், ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் நரகத்திலே கெடுக்கத்தக்க வல்லவருக்கே பயப்படுங்கள் என்றார் (மத். ௰, ௨௮).

௨. இச்சீவனுக்குப்பின் மனுஷருடைய ஆத்துமாக்கள் போய்ச் சேருகிறதற்கு மோட்சம், நரகமாகிய இரண்டு இடம் மாத்திரம் உண்டு. இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலே மரிக்கிற நீதிமான்களாகிய விசுவாசிகள் மோட்சத்துக்கும், அவிசுவாசத்திலுங் குணப்படாமையிலும் மரிக்கிற அநீதிமான்களாகிய அவிசுவாசிகள் நரகத்துக்கும் போவார்கள். குமாரன் பேரில் விசுவாசிக்கிறவனுக்கு நித்திய சீவன் உண்டு. குமாரனை விசுவாசியாதவனோ சீவனைக் காண

பதில்லை. பராபரனுடைய கோபம் அவன் மேல் நிலை நிற்கும் (யோவா. ௩, ௩௬).

IV. ஐசுவரியவானுடைய ஐந்து சகோதரர்களிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. குணப்படாமையில் நிலைத்திருக்கிற பாவிகளோடு கூட்டுறவாயிருக்கிறவர்கள் கெட்டுப்போவார்கள் என்பது நிச்சயம். இந்த ஐந்து சகோதரர் ஐசுவரியவானோடு பிழைத்து, அவனுடைய சகல பாவங்களையும் பின்பற்றியிருந்தார்கள். ஆதலால்தான் ஐசுவரியமுள்ள மனுஷன்: அவர்களும் நரகத்துக்கு அதாவது, வேதனையுள்ள இடத்துக்கு வருவார்கள் என்று பயந்திருந்தான். கீலைத்தொடுகிறவன் கறைப்பட்டுப்போகிறதுபோலே, பெருமைக்காரரோடு கூட்டுறவாயிருக்கிறவன் அவனுக்குச் சரிசாயலாவான் (ஏசுசீராக். ௰௩, ௧).

௨. இரட்சிக்கப்பட வேண்டுமென்றிருக்கிறவர்கள்: மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து பிரசங்கம் பண்ணவேண்டும் என்கிற இவைபோன்ற வேறு விசேஷித்த வெளிப்படுதலுக்குக் காத்திராமல், பராபரனுடைய வசனத்தை நம்பி விசுவாசிக்கவேண்டும். அவர்களுக்கு மோசேயுந் தீர்க்கதரிசிகளும் உண்டு. அவர்களை அவர்கள் கேட்கட்டும். அவர்கள் அவர்களைக் கேளாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்தாலும் ஒப்பார்களென்று ஆபிரகாம் சொன்னான் (௨௯—௩௧). நாம் இரட்சிக்கப்படவேண்டுமானால், லாசருவைப் போல் இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலே மரணபரியந்தம் உறுதியாயிருந்தும், சகல துன்பங்களையும் பொறுமையாய்ச் சகித்து, ஐசுவரியவானை நரகத்துக்குக் கொண்டுபோன அவிசுவாசம், உலக ஆடம்பரம் முதலிய சகல பாவத்துக்கும் நம்மை எச்சரிக்கையாய்க் காக்கவேண்டுமென்று பராபரனுடைய வசனம் நமக்குப் புத்தி சொல்லிப் போதிக்கிறது. இந்த வசனத்தை நாம் கருத்துங் கவனமுமாய்க்கேட்டு, நமது கர்த்தராகிய பராபரனை நோக்கி: அவர் தமது பரிசுத்த ஆவியைக்கொண்டு நம்மை தமது வழிகளிலே நித்திய சீவனுக்கென்று நடத்தும்படியாக எப்போதும் கெஞ்சிக்கேட்போமாக.

நமது அருமை இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவுக்குப் பரம பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் என்றென்றைக்கும் துதியும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக, ஆமேன்.



## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௨-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௨௬௰.)

### சுவி. லூக். ௰௪, ௰௬—௨௪.

அவரோவெனில் அவனுக்குச் சொன்னதாவது: ஒரு மனுஷன்
பெரிய விருந்தைப்பண்ணி, அநேகரை அழைத்து, 17 விருந்துவே
ளையில்: வாருங்கள், எல்லாம் ஆயத்தமாயிற்று என்று அழைக்கப்
பட்டவர்களுக்குச் சொல்ல, தன் ஊழியக்காரனை அனுப்பினான்.
18 அவர்கள் எல்லாரும் ஏகமாய் வரக்கூடாதென்று மனுக்கேட்கத்
தொடங்கினார்கள். முந்தினவன் அவனுடனே: ஒரு வயலைக்கொண்
டேன், நான் புறப்பட்டுப்போய், அதைப் பார்க்க எனக்குத் தேவை
யாயிருக்கிறது; என்னை மன்னிக்க உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன்
என்றான். 19 வேறொருவன்: ஐந்து ஏர்க்குண்டைக் கொண்டேன்,
அதுகளைச் சோதிக்கப் போகிறேன்; என்னை மன்னிக்க உன்னை
வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். 20 வேறொருவன்: பெண்ணை
விவாகம் பண்ணினேன், இதின் நிமித்தம் நான் வரக் கூடாது
என்றான். 21 அந்த ஊழியக்காரன் வந்து, தன் எசமானுக்கு இது
களை அறிவித்தான். அப்போது வீட்டுக்கு எசமான் கோபமடைந்து,
தன் ஊழியக்காரனுடனே: நீ சீக்கிரமாய்ப் பட்டணத்தின் தெருக்
களிலும் வீதிகளிலும் புறப்பட்டுப்போய், தரித்திரரையும் ஊன
ரையுஞ் சப்பாணிகளையுங் குருடரையும் இங்கே உள்ளே அழைத்து
வா என்றான். 22 ஊழியக்காரன்: ஆண்டவரே, நீர் கற்பித்தபடி
செய்யப்பட்டது; இன்னம் இடம் உண்டென்றான். 23 அப்போது
எசமான் ஊழியக்காரனுடனே: நீ வழிகளிலும் வேலிகள் அருகே
யும் புறப்பட்டுப்போய், என் வீடு நிறையும்படிக்குச் சனங்களை உள்
ளே வர வருந்தி அழை. 24 ஏனெனில் அழைக்கப்பட்ட அந்த மனு
ஷரில் ஒருவனும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லை என்று உங்களுக்
குச் சொல்லுகிறேன் என்றானென்று சொன்னான்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியம் எதைப் பற்றியது.

இயேசுநாதர் சொன்ன பெரிய விருந்தின் உவமையைப் பற்றியது.

2. இந்தப் பெரிய விருந்து என்ன.

இயேசு கிறிஸ்துவினால் நமக்குச் சம்பாதிக்கப்பட்ட பராபரனுடைய கிருபையைப்பற்றிய சுவிசேஷ பிரசங்கமாம். இந்தச் சுவிசேஷத்தின் தொகுப்பு பராபரனுடைய குமாரன் பேரில் விசுவாசிக்கிறவனுக்கு நித்திய சீவன் உண்டு என்று இயேசுநாதர் சொன்ன வார்த்தையில் அடங்கியிருக்கிறது. இயேசுநாதர் பெ
புதிய ஏற்பாட்டின் இந்தப் பிரசங்கத்தை இயேசுநாதர் பெரிய விருந்துக்கு ஒப்பிடுகிறார்.

3. இந்தச் சுவிசேஷம் பழைய ஏற்பாட்டின் காலத்திலே அறிவிக்கப்பட்டதில்லையா.

ஆம், அறிவிக்கப்பட்டது. எப்படியென்றால் நமது ஆதித்தாய் தகப்பன்மார் பாவத்தில் விழுந்தவுடனே பராபரனாகிய கர்த்தர்: ஸ்திரியின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என்று சொல்லி, உனக்கும் ஸ்திரிக்கும், உன்னுடைய வித்துக்கும் அவளுடைய வித்துக்கும் பகையை உண்டாக்குவோம், இவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிகாலை நசுக்குவாய் என்ற ஆதிச் சுவிசேஷத்தை அறிவித்தார் (௧ மோ, ௩, ௰௫). பேதுரு அப்போஸ்தலன்: இவர் பேரில் விசுவாசிக்கிறவன் எல்லாம் இவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுகிறான் என்று தீர்க்கதரிசிகள் எல்லாரும் இவருக்குச் சாட்சிகொடுக்கிறார்கள் என்றான் (நடபடி ௰, ௪௩). ஆனால் பழைய ஏற்பாட்டின் காலத்திலே இந்தச் சுவிசேஷம் யூதருக்கு மாத்திரம் அறிவிக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டின் காலத்திலோ அது லோகமெங்கும் எல்லாச் சாதியாருக்கும் பிரசித்தம் பண்ணப்படுகிறது. இப்படி லோகம் எங்கும் பரம்பின சுவிசேஷப் பிரசங்கமே இங்கே சொல்லப்பட்ட பெரிய விருந்தாம்.

4. இந்த விருந்தை ஆயத்தம் பண்ணினது ஆர்.

ஒரு மனுஷன் பெரிய விருந்து பண்ணினான் என்று கிறிஸ்துநாதர் நமது வாக்கியத்திலே சொல்லுகிறார்.

5. அந்த மனுஷன் ஆர்.

பரம பிதாவாகிய பராபரன் தாமே. ஏனென்றால் அவர் தமது சுபாவப்படி மனுஷனாயிராமல் ஆவியாயிருந்தும், தம்முடைய சிநேகத்தின் நிமித்தமுந் தயவினிமித்தமும் ஒரு மனுஷனுக்கு ஒப்பிடப்படுகிறார். அவர் தமது நேசகுமாரனை எல்லா மனுஷரின் இரட்சிப்புக்கென்று இந்த உலகத்தில் அனுப்பினபோது, இந்தப் பெரிய விருந்தைப் பண்ணினார்.

6. இந்த விருந்து பெரிய விருந்தென்று அழைக்கப்படுவானேன்.

௧. அதைப்பண்ணினவர் மகா பெரிய கர்த்தர். அதாவது, சர்வத்திற்கும் வல்ல நித்திய பராபரன்.

௨. இந்த விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களின் தொகை ஏராளம்.

௩. அதில் அடங்கியிருக்கிற நன்மையும் மகிமையும் மகா உயர்ந்தது.

7. இந்த விருந்துக்குக் கர்த்தர் யாரை அழைக்கிறார்.

எல்லா மனுஷரையும். அவர் எல்லாரையும் அழைத்தபடியால் தான் அநேகரை அழைத்தார் என்று இயேசுநா



தர் நமது வாக்கியத்தில் சொல்லுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல்: இப்போதோவெனில் குணப்படவேண்டுமென்று எங்கும் எல்லா மனுஷருக்கும் பராபரன் கற்பிக்கிறார் என்று சொல்லுகிறான் (நடபடி ௰௭, ௩௰).

8. கர்த்தர் மனுஷரை யாரைக்கொண்டு அழைக்கிறார்.

தமது ஊழியரைக் கொண்டு. ஏனென்றால் விருந்து வேளையில்: வாருங்கள், எல்லாம் ஆயத்தமாயிற்றென்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்ல தன் ஊழியக்காரனை அனுப்பினானென்று நமது வாக்கியம் சொல்லுகிறது (௰௭).

9. கர்த்தருடைய அந்த ஊழியக்காரர் யார்.

௧. மனுஷ அவதாரம் எடுத்து ஊழியக்காரன் ரூபங்கொண்ட கிறிஸ்துநாதர் தாம். அவர்: குணப்படுங்கள், ஏனென்றால் வானராச்சியம் சமீபமாய்ச் சேர்ந்தது என்றும் (மத். ௪, ௰௭), பிரயாசப்பட்டுப் பாரஞ் சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள் என்றும் சொல்லி, இந்தப் பரம விருந்துக்கு எல்லாரையும் வரவழைக்கிறார் (மத். ௰௧, ௨௮).

௨. அப்போஸ்தலரும் உண்மையுள்ள எல்லாப்போதகருமாம். எல்லா மனுஷருக்கும் பராபரனுடைய திருச்சித்தத்தைத் தெரிவித்து, இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைப் பிரசங்கித்து, அவர்களை நித்திய மோட்சபாக்கியத்துக்கென்று அழைக்கும்படியாகப் பராபரன் அவர்களை அனுப்புகிறார். ஆதலால் அவர்கள் பவுலோடே: பராபரன் எங்களைக் கொண்டு புத்திசொல்லுகிறதாய், நாங்கள் கிறிஸ்துவுக்காகத் தானாபதிகளாயிருக்கிறோம் என்று சொல்லலாம் (௨ கொரி. ௫, ௨௰).

10. கர்த்தர் இந்த விருந்திலே நமக்குக் கொடுக்கிற நன்மைகள் எவை.

அவர் இந்த விருந்திலே நமக்குப் பாவமன்னிப்பையும், மெய்யான நீதியையும், பரிசுத்த ஆவியின் ஈவையும், நித்திய ஜீவனையும், தொகுத்துச்சொன்னால் நமது இரட்சிப்புக்கு வேண்டிய சகல நன்மைகளையுங் கொடுக்கிறார். ஆதலால்: வாருங்கள், எல்லாம் ஆயத்தமாயிற்றென்று சொல்லுகிறார்.

11. மனுஷர் யாவரும் இந்த விருந்துக்கு வந்தார்களா.

இல்லை. அநேகர் அதற்கு வர மனதில்லாமல் மனுக்கேட்டு விலகினார்கள். அதைப்பற்றி நமது வாக்கியம் சொல்லுகிறதாவது: அவர்கள் எல்லாரும் ஏகமாய் வரக் கூடாதென்று மனுக்கேட்கத் தொடங்கினார்கள். முந்தினவன் அவ

னுடனே: ஒரு வயலைக்கொண்டேன், நான் புறப்பட்டுப்போய் அதைப்பார்க்க எனக்குத் தேவையாயிருக்கிறது, என்னை மன்னிக்க உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.—வேறொருவன் ஐந்து ஏர்க்குண்டைக் கொண்டேன், அவைகளைச் சோதிக்கப்போகிறேன், என்னை மன்னிக்க உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.—வேறொருவன்: பெண்ணை விவாகம் பண்ணினேன், இதின் நிமித்தம் நான் வரக் கூடாது என்றான் (௰௮—௨௰).

12. வயலைக்கொண்டேன் என்கிற வார்த்தையினால் குறிக்கப்படுகிறவன் ஆர்.

பெருமைக்காரன். ஏனென்றால் அவன் வானராச்சியத்தைப் பார்க்கத் தன் வயலைச் சிநேகிக்கிறான். அவனுக்கு இந்த லோகத்திலே கனமும் மகிமையும் இருப்பதால், அவன் பெருமைக்காரனாயிருந்து இந்த விருந்தை அசட்டைப்பண்ணி வரக் கூடாதென்று சொல்லுகிறான்.

13. ஐந்து ஏர்க்குண்டைக் கொண்டேன் என்கிற வார்த்தை யாரைக் குறிக்கிறது.

பொருளாசைக்காரனை. ஏனென்றால் அவன் மோட்சத்தைப் பார்க்கத் தன் வியாபாரத்தையும் லாபத்தையும் ஏர்க்குண்டுகளையும் அதிகமாய்ச் சிநேகிக்கிறான்.

14. பெண்ணை விவாகம் பண்ணினேன் என்கிற வார்த்தை எப்படிப்பட்டவனைக் குறிப்பிக்கிறது.

மாமிச இச்சையைச் சிநேகிக்கிறவனை. ஏனென்றால் அவன் பராபரனையும் நித்திய சீவனையும் பார்க்க லோக இச்சையையும் செல்விக்கையையும் நாடித்தேடுகிறான். அவர்களைப் பற்றிப் பவுல் அப்போஸ்தலன்: அவர்கள் பராபரனைப் பார்க்கச் செல்வத்தைச் சிநேகிக்கிறவர்களாயிருக்கிறார்கள் என்கிறான் (௨ தீமோ. ௩, ௪).

15. மனுஷன் விவாகம் பண்ணுகிறதும், வயல் முதலானவைகளை வாங்குகிறதும் பாவமா.

பாவமல்ல. ஏனென்றால் பராபரன் தாமே சமுசார மார்க்கத்தை ஏற்படுத்தி, கொள்வினை கொடுப்பினை முதலிய காரியங்கள் நடந்தேறி வர இடங்கொடுத்தார். ஆகிலும் நாம் நம்முடைய ஆத்தும இரட்சிப்பைப் பார்க்கப் பூமிக்கடுத்த காரியங்கள் பேரில் பற்றுதல் வைத்து, அவைகளை அதிகமாய்ச் சிநேகிக்கக் கூடாது. ஆஸ்தி வளர்ந்தால் இருதயத்தை அதின்மேல் வைக்காதிருங்கள் என்கிற சங்கீதக்காரனுடைய வார்த்தையைக் கவனித்து (சங். ௬௨, ௰௧), உலக காரியங்களைப் பார்க்க நாம் பராபரனையும் நித்திய மோட்சபாக்கியத்தையுஞ் சிநேகிக்க வேண்டும்.



16. பின்னை இந்த விருந்துக்கு வந்தவர்கள் ஆர்.

௧. தரித்திரரும், ஊனர், சப்பாணிகள், குருடரும், அதாவது தங்கள் பாவங்களினிமித்தம் மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவினிடத்திலன்றி வேறெங்கும் ஆறுதலடையக் கூடாதென்று விசுவாசிக்கிற ஞானதரித்திரரும், ஊனரும், சப்பாணிகளும், குருடருமாம். அப்போது வீட்டுக்கு எசமான் கோபம் அடைந்து, தன் ஊழியக்காரனுடனே: நீ சீக்கிரமாய்ப் பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் புறப்பட்டுப்போய், தரித்திரரையும், ஊனரையும், சப்பாணிகளையும், குருடரையும் இங்கே உள்ளே அழைத்துவா என்றான். ஊழியக்காரன்: ஆண்டவரே, நீர் கற்பித்தபடி செய்யப்பட்டது, இன்னம் இடம் உண்டென்றான் (௨௧. ௨௨).

௨. வழிகளிலும் வேலிகளருகேயும் அகப்பட்டவர்கள், அதாவது அஞ்ஞானிகள். பழைய ஏற்பாட்டின் காலத்திலே யூதரும் அவர்களைச் சேர்ந்த சிலரும் பராபரனுடைய சனமாயிருந்தார்கள். அஞ்ஞானிகளோ பராபரனுடைய சபைக்குப் புறம்பானவர்கள். இவர்கள் பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறபடி, இஸ்ரவேலருடைய காணியாட்சிக்குப் புறம்பான அந்நியரும், வாக்குத்தத்தின் உடன்படிக்கைக்குப் பரதேசிகளும், நம்பிக்கையில்லாதவர்களும், இந்த லோகத்தில் பராபரன அற்றவர்களுமாயிருந்தார்கள் (எபேசி. ௨, ௰௨). ஆனால் புதிய ஏற்பாட்டின் காலத்திலே நம்முடைய பிதாக்களும் முன்னே அஞ்ஞானிகளாயிருந்த மற்றச் சனங்களும் இந்த விருந்துக்கு அழைக்கப்பட்டதுமல்லாமல், அதுக்கு வந்தும் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நமது இரட்சகர் சொல்லுகிறதாவது: அப்போது எசமான் ஊழியக்காரனுடனே. நீ வழிகளிலும் வேலிகளருகேயும் புறப்பட்டுப்போய், என் வீடு நிறையும்படிக்குச் சனங்களை உள்ளேவர வருந்தி அழை என்றான் என்கிறார் (௨௩).

17. ஊழியக்காரன் அவர்களை எதினால் உள்ளே வர வருந்தி அழைக்கிறான்.

பராபரனுடைய வசனத்தின் பிரசங்கத்தினாலே.

18. வரமாட்டோம் என்று அசட்டைபண்ணுகிறவர்களுக்கு என்ன சம்பவிக்கும்.

௧. அவர்கள் பராபரனுடைய கோபத்தைத் தங்கள் மேல் குவித்துக் கொள்ளுகிறார்கள். ஏனென்றால் எசமான் கோபமடைந்தான் என்று நமது இரட்சகர் சொல்லுகிறார்.

௨. அவர்கள் இந்தப் பாக்கியமான விருந்துக்கும், ஆம், நித்தியமோட்சபாக்கியத்துக்கும் புறம்பாகத் தள்ளப்படுவார்கள். ஏனென்றால் கிறிஸ்துநாதர்: அழைக்கப்பட்ட அந்த

மனிதரில் ஒருவனும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னான் என்கிறார் (௨௪). அதற்கொத்தபடி நம்முடைய இரட்சகர் வேறிடத்திலே: குமாரன் பேரில் விசுவாசிக்கிறவனுக்கு நித்திய சீவன் உண்டு, குமாரனை விசுவாசியாதவனோ சீவனைக் காண்பதில்லை, பராபரனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்கிறார் (யோவா. ௩, ௩௬).

படிப்பினை.

19. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. கர்த்தராகிய பராபரனால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. அவர் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார். அதினிமித்தம் அவர் தம்முடைய ஊழியக்காரரை எல்லா மனுஷசாதிகளண்டைக்கும், வரமாட்டோம் என்று சொல்லுகிறவர்களண்டைக்குங் கூட அனுப்புகிறார். ஏனென்றால் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறபடியே, பராபரன் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட்டுச் சத்தியத்தின் அறிவுக்கு வரச் சித்தமுள்ளவராயிருக்கிறார் (க தீமோ. உ, ௩).

உ. மனுஷரைச் சிநேகிக்கிற பராபரனுடைய சிநேகமும், அவர் அவர்கள்மேல் வைக்கிற கிருபையும் மகா பெரியது. ஏனென்றால் நாம் எல்லாரும் ஞானதரித்திரரும் ஞானகுருடரும், பரதீசிலிருந்து துரத்திவிடப்பட்டு, வழிகளிலும் வேலிகளருகேயும் திரிகிறவர்களுமாயிருக்கையில், பராபரன் நமக்கிரங்கி, நமது இரட்சிப்புக்கென்று தமது ஒன்றான குமாரனை இந்த லோகத்தில் அனுப்பினார். பராபரனுடைய இந்தச் சிநேகத்தைப் பற்றி நம்முடைய இரட்சகர் சொல்லுகிறதாவது: பராபரன் தம்முடைய ஒரே பேறான குமாரனை; அவர் பேரில் விசுவாசிக்கிறவன் எல்லாங் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை அடைவதற்காகத் தந்து அத்தன்மையாய் லோகத்தைச் சிநேகித்தார் என்றார் (யோவா. ௩, ௰௬).

௩. குணப்படாதவர்கள் பேரிலிருக்கும் பராபரனுடைய கோபம் மகா பயங்கரமாயிருக்கும். தமது கிருபையை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் மேல் பராபரன் எவ்வளவு இரக்கமுள்ளவராயிருக்கிறாரோ, அவ்வளவு அதை அசட்டைபண்ணுகிறவர்கள் பேரில் அதிக கோபமாயிருக்கிறார். பொல்லாப்பை நடப்பிக்கிற எந்த மனுஷ ஆத்துமாவின் மேலும்,



முந்தி யூதன் மேலும் கிரேக்கன் மேலுங்கூட உபாதியும் வியாகுலமும் வரும் (ரோ. உ, ௯).

II. பராபரனுடைய ஊழியக்காரராகிய உண்மையுள்ள போதகரால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

அவர்கள் பராபரனால் நம்மண்டைக்கு அனுப்பப்பட்டு, அவருடைய பெரிய விருந்துக்கு நம்மை அழைத்து, நித்திய சீவனுக்கு வழி நடத்துகிறவர்களாயிருக்கிறார்கள். ஆதலால் நாம் அவருடைய சத்தத்தைக் கேட்டு: உங்கள் வழிகாட்டிகளுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள், ஏனெனில் அவர்கள் உங்கள் ஆத்துமங்களுக்காகக் கணக்கு ஒப்புவிப்பவர்களாய் விழித்திருக்கிறார்கள் என்ற அப்போஸ்தலனுடைய புத்திமதியின்படியே செய்வது அவசியம்.

III. பராபரனுடைய பெரிய விருந்துக்கு வரமாட்டோமென்று சொன்ன நன்றிகெட்ட மனுஷரால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. வானராச்சியத்தைப் பார்க்கத் தங்கள் ஐசுவரியம், கனம், செல்விக்கையை அதிகமாய்ச் சிநேகிக்கிற அநேக மனுஷர் உண்டு. இப்படிப்பட்டவர்கள் தான் பராபரனுடைய பெரிய விருந்தை அசட்டைபண்ணி, அதுக்கு வரமாட்டோமென்று சொன்னவர்கள். இவர்களைப்பற்றி அப்போஸ்தலன் முறையிட்டுச் சொல்லுகிறதாவது: அநேகர் நடக்கையைக் குறித்து, அவர்கள் கிறிஸ்துவின் சிலுவையின் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரஞ் சொன்னேன், இப்போதோவெனில், அழுகையோடுஞ் சொல்லுகிறேன். பூமிக்கடுத்த சிந்தையான அவர்களுடைய முடிவு அழிவுதானே, அவர்கள் தேவன் வயிறு, அவர்கள் மகிமை அவர்கள் இலச்சையிலிருக்கிறது என்றான் (பிலிப். ௩, ௰அ. ௰௯).

உ. நாம் பரம காரியங்களைப் பார்க்க இப்பூமிக்கடுத்த காரியங்களை அதிகமாய்ச் சிநேகிக்கக் கூடாது. ஏனென்றால் நன்றிகெட்ட மனுஷரோடு கூட நாமும் பரம விருந்துக்குப் புறம்பே தள்ளப்பட்டுப் போகாதபடிக்கு, நாம் உலகத்தை வெறுத்து, வான இராச்சியத்தைச் சிநேகித்து, பொருளாசை, பெருமை, ஆசை இச்சைகள் முதலியவைகளுக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஏனெனில் இவைகளெல்லாம் பராபரனுடைய ஐக்கியத்துக்கும் விருந்துக்கும் நம்மைப் புறம்பாக்குகிறது. லோகத்தையாகிலும் லோகத்திலுள்ளதுகளையாகிலும் சிநேகியாதிருங்கள். ஒருவன் லோகத்தைச் சிநேகித்தால், அவனில் பிதாவின் சிநேகம் இல்லை. ஏனெனில் மாமிசத்தினுடைய இச்சையும், கண்களுடைய இச்சையும்,

ஜீவனத்தின் பெருமையுமென்ற லோகத்திலுள்ள தெல்லாம் பிதாவினால் உண்டாயிராமல், லோகத்தினால் உண்டாயிருக்கிறது (௧யோ. ௨, ௰௫. ௰௬).

௩. குணப்பட்டுக் கிறிஸ்துவண்டை வராதவர்களுக்குப் பாவமன்னிப்பு, தேவகிருபை, இரட்சிப்பு முதலிய எந்த நன்மையும் இல்லை. அழைக்கப்பட்ட அந்த மனுஷரில் ஒருவனும் என் விருந்தை ருசி பார்ப்பதில்லையென்று நமது இரட்சகர் நம்முடைய வாக்கியத்திலே சொல்லுகிறார்.

IV. விருந்துக்கு வந்தவர்களாலே நாம் கற்றுக் கொள்ளுகிறதாவது:

௧. கிறிஸ்துவுக்குள் நமக்கு ஒப்புவிக்கப்பட்ட பராபரனுடைய கிருபையை நாம் அசட்டைபண்ணக் கூடாது. கர்த்தராகிய பராபரன் தமது ஊழியக்காரரைக் கொண்டு: வாருங்கள், எல்லாம் ஆயத்தமாயிற்று என்று அறிவிக்கையில், கிருபையின் கதவு திறந்திருக்கிறது. இந்தக் கிருபையின் காலத்திலே அவர்: நாம் எவ்வளவு எளியவர்களும அநேக பாவங்களைச் செய்தவர்களுமாயிருந்தாலும் தம்முடைய விருந்துக்குவர இடங் கொடுக்கிறார். ஆனால் இச்சீவியம் முடிந்தபிற்பாடு கிருபையின் கதவும் சாத்தப்படும். ஆதலால் கர்த்தர் கண்டுபிடிக்கப்படுகையில் அவரைத் தேடுங்கள், அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள் என்று எசாயாதீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் புத்தி சொல்லுகிறார் (எசா. ௫௫, ௬).

௨. பராபரன் தம்முடைய இந்த விருந்துக்கு வர நமக்குக் கிருபையளித்து, இயேசுகிறிஸ்து மூலமாய் நமக்குப் பாவமன்னிப்பு, நித்திய சீவன் முதலிய உன்னத நன்மைகளைக் கொடுத்த மகாப் பெரிய சிநேகத்துக்காகவும் இரக்கத்துக்காகவும் நாம் அவருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செலுத்தவேண்டும். ஆம், பரம நன்மைகளில் நம்மைக் கிறிஸ்துவுக்குள் சகல ஞான ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதித்த பராபரனும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவுமானவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நாமுஞ் சொல்லக் கடவோம் (எபே. ௧, ௩).

20. நாம் நம்மாலே தான் இந்த விருந்துக்கு வரக் கூடியவர்களா.

கூடியவர்களல்ல. ஆதலால் நாம் பராபரனை நோக்கி: என்னை இழும், உமக்குப் பின்னாலே ஓடுவோம் என்று சொல்லி (உன்னதப்பாட்டு ௧, ௪), அவர் தம்முடைய பரிசுத்த ஆவியினால் நம்மை அதுக்குக் கொண்டுவந்து சேர்க்க அவரைக் கெஞ்சிக் கேட்போமாக.



இந்த நமது அருமைப் பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் சதாகாலங்களாய் மகிமையுண்டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௩-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௨௬௰.)

### சுவி. லூக். ௰௫, ௧—௰.

சகல ஆயக்காரரும் பாவிகளும் அவர் வசனங்களைக் கேட்க, அவ
ரண்டைக்குச் சேருகிறவர்களாயிருந்தார்கள். 2 அப்போது பரிசே
யரும் வேதபாரகரும்: இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு, அவர்களு
டனே சாப்பிடுகிறார் என்று முறுமுறுத்தார்கள். 3 அவரோவென்னில்
அவர்களுடனே சொன்ன உவமையாவது: 4 உங்களில் எந்த மனு
ஷனாகிலும் நூறு ஆடுடையவனாயிருந்து, அதுகளில் ஒன்றை
இழந்தால், தொண்ணூற்றொன்பதையும் வனாந்தரத்தில் விட்டு, இழந்
ததைக் கண்டு பிடிக்கும் மட்டும் அதைத் தேடிப்போகானோ.
5 கண்டு பிடித்தால்; அவன் அதைச் சந்தோஷமாய்த் தன் தோள்
கள் மேல் போட்டுக்கொண்டு, 6 வீட்டுக்கு வரும்போது, சிநேகித
ரையும் அயலகத்தாரையுங் கூட வரவழைத்து, அவர்களுடனே:
என்னோடே சந்தோஷமாயிருங்கள்; அதேனெனில் காணமல்போன
என்னுடைய ஆட்டைக் கண்டுபிடித்தேன் என்பான். 7 இப்படி
யே குணப்படுதல் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்
களைப் பார்க்க, குணப்படுகிற ஒரே பாவியின் பேரிலே பரமண்ட
லத்தில் சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்
லுகிறேன். 8 அல்லது, எந்த இஸ்திரியாகிலும் பத்து வெள்ளிக்கா
சை வைத்திருந்து, ஒரு வெள்ளிக்காசை இழந்தால், விளக்கைக்
கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கும் மட்டா
கக் கவனமாய்த் தேடாளோ. 9 கண்டு பிடித்தால், அவள் சிநேகிதி
களையும் அயல் வீட்டுக்காரிகளையுங் கூட வர வழைத்து: என்னோ
டே சந்தோஷமாய் இருங்கள்; அதேனெனில் நான் இழந்திருந்த
வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன் என்பாள். 10 இப்படியே
குணப்படுகிற ஒரே பாவியின் பேரிலே பராபரனுடைய தூதருக்கு
முன்பாகச் சந்தோஷம் உண்டாகிறதென்று உங்களுக்குச் சொல்
லுகிறேன் என்றார்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தில் அடங்கியிருக்கிறதென்ன.

இயேசுநாதர் சொன்ன இரண்டு ஆறுதலான உவமைகள்.

2. அவர் இந்த உவமைகளைச் சொன்னதற்கு முகாந்தரம் என்ன.

அவர் சகல ஆயக்காரரையும் பாவிகளையும் ஏற்றுக்கொண்டு, அவர்களோடு சாப்பிடுகிறார் என்று வேதபாரகரும் பரிசேயரும் முறுமுறுத்ததே அதற்குக் காரணம். இதைப்பற்றி சுவிசேஷவாக்கியஞ் சொல்லுகிறதாவது: சகல ஆயக்காரரும் பாவிகளும் அவர் வசனங்களைக் கேட்க அவரண்டை சேருகிறவர்களாயிருந்தார்கள். அப்போது பரிசேயரும் வேதபாரகரும்: இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு, அவர்களுடனே சாப்பிடுகிறார் என்று முறுமுறுத்தார்கள். (௧. ௨).

3. இங்கே சொல்லப்பட்ட ஆயக்காரரும் பாவிகளும் ஆர்.

ஆயக்காரர் சுங்கத்தண்டல் வாங்குகிறவர்கள். இவர்கள் ரோமரிடத்தில் சுங்கத்தண்டலைக் குத்தகைக்கு ஒப்புக்கொண்டு, யூதரிடத்தில் அதிக அநியாயவரி வாங்கினார்கள். இதினிமித்தம யூதர் அவர்களை அநீதக்காரராகவும் பொருளாசைக்காரராகவும் எண்ணி, எப்போதும் பகைத்தார்கள். பாவிகள் என்னப்பட்டவர்கள் விபசாரம், குடிவெறி, அநியாயம் முதலிய பாவங்களைச் செய்தவர்கள். இவர்களும் தங்களைப் பரிசுத்தவான்கள் என்று எண்ணின வேதபாரகர், பரிசேயரால் பகைக்கப்பட்டார்கள்.

4. இயேசு இரட்சகர் இந்த ஆயக்காரரையும் பாவிகளையும் ஏன் ஏற்றுக்கொண்டார்.

அவர்களுடைய பாவவழியிலிருந்து அவர்களை இரட்சிக்கும்படிக்குத்தான். ஏனென்றால் நம்முடைய வாக்கியம் சொல்லுகிறபடி, அவர்கள் தங்கள் பாவங்களில் நிலைத்திருக்கும்படியாக அல்ல, பராபரனுடைய வசனத்தைக் கேட்கும்படியாக இயேசுநாதரண்டைக்கு வந்தார்கள்,

5. இயேசுநாதர் இந்த நோக்கத்தோடு அவர்களை ஏற்றுக்கொண்டிருக்கப் பரிசேயரும் வேதபாரகரும் ஏன் முறுமுறுத்தார்கள்.

தாங்களே விட்டு விலகின அப்படிப்பட்ட பாவிகளோடு சேருகிறது பரிசுத்தவான்களுக்கு ஆகாதென்று அவர்கள் எண்ணினபடியால் தான். இதினால் அவர்கள் அவருக்கு விரோதமாக முறுமுறுத்து, அவர் பாவிகளைப்போலிருக்கிறாரென்று அவர் பேரில் குற்றஞ் சாட்டினார்கள். மனுஷனுடைய குமாரன் வந்திருந்து சாப்பிட்டுக் குடிக்கிறார். அதற்கு அவர்கள்: இதோ, போசனப்பிரியனும் மதுபானனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறார்கள் என்று இயேசுநாதர் சொன்னார் (மத். ௰௧, ௰௯).

6. இயேசுநாதர் அவர்களை எப்படி அடக்கினார்.



அவர் சொன்ன இரண்டு உவமைகளின் மூலமாய் இப்பேர்ப்பட்ட பாவிகளையும் ஏற்றுக்கொள்ளுகிறது தமக்குத் தகும் என்று காட்டினதினால்.

7. இவ்விடத்தில் இயேசுநாதர் சொன்ன முதலாம் உவமை என்ன.

காணாமல்போய்த் திரும்பக் கண்டுபிடிக்கப்பட்ட ஆட்டைப்பற்றிய உவமை. அதாவது: உங்களில் எந்த மனுஷனாகிலும் நூறு ஆடு உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்றை இழந்தால், தொண்ணூற்றொன்பதையும் வனாந்தரத்தில் விட்டு, இழந்ததைக் கண்டு பிடிக்குமட்டும் அதைத் தேடிப் போகானோ. கண்டு பிடித்தால், அவன் அதைச் சந்தோஷமாய்த் தன் தோட்கள்மேல் போட்டுக்கொண்டு, வீட்டுக்கு வரும்போது, சிநேகிதரையும் அயலகத்தாரையுங் கூட வரவழைத்து, அவர்களுடனே: என்னோடு சந்தோஷமாயிருங்கள், அதேனெனில் காணாமல்போன என்னுடைய ஆட்டைக் கண்டுபிடித்தேன் என்பான். இப்படியே குணப்படுதல் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைப் பார்க்க, குணப்படுகிற ஒரே பாவியின் பேரிலே பரமண்டலத்தில் சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (௪-௭).

8. நூறு ஆடுகளுடைய அந்த மனுஷன் ஆர்.

நம்முடைய ஆத்துமாக்களின் மெய்யான மேய்ப்பரும், தமது ஆடுகளுக்காகச் சீவனைக் கொடுத்தவருமாகிய இயேசு இரட்சகர்.

9. அந்த நூறு ஆடுகள் ஆர்.

எல்லா மனுஷரும்.

10. காணாமல் போன அந்த ஆடு ஆர்.

குணப்படாமையினால் பராபரனை விட்டுப் பிரிந்து, இவ்வுலக வனாந்தரத்தில் திரிகிற பாவிகள் எல்லாரும்.

11. தொண்ணூற்றொன்பது ஆடுகள் ஆர்.

நல்ல மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் உறுதியாய் நிலைத்திருக்கிற நீதியும் விசுவாசமுள்ள பராபரனுடைய பிள்ளைகள் தான்.

12. அந்த மேய்ப்பன் காணாமல் போன ஆட்டைத் தேடுகிறானா, அதாவது கர்த்தர் பாவிகளைக் குணப்படுதலுக்கு எவி எழுப்புகிறாரா.

ஆம், அதற்காகவே அவர் இந்த லோகத்தில் வந்தார். ஏனென்றால் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் மனுஷனுடைய குமாரன் வந்தார் என்று அவர் தாமே சொல்லுகிறார் (லூக். ௰௯, ௰).

13. கிறிஸ்துநாதர் பாவிகளை எதினாலே தேடுகிறார்.

தம்முடைய வசனத்தின் பிரசங்கத்தினாலே: அதினால் அவர்: குணப்படுங்கள், ஏனென்றால் வான ராச்சியம் சமீபமாய்ச் சேர்ந்ததென்றும் (மத். ௪, ௧௭), பிரயாசப்பட்டுப் பாரஞ் சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள் என்றுங் கூப்பிடுகிறார் (மத். ௧௧, ௨௮).

14. ஒரு ஆடு கண்டு பிடிக்கப்பட்டால், அதாவது ஒரு பாவி குணப்பட்டால் என்ன சம்பவிக்கும்.

௧. கிறிஸ்துநாதர் அதை வீட்டுக்குக் கொண்டுபோகிறார், அதாவது குணப்படுகிற மனுஷனைக் கிறிஸ்தமான சபையின் ஐக்கியத்திலே சேர்க்கிறார்.

௨. கர்த்தராகிய கிறிஸ்துவுக்கு மாத்திரமல்ல, அவருடைய சிநேகிதருக்கும் அயலகத்தாருக்கும் பெரிய சந்தோஷம் இருக்கும். அவர் அவர்களுடனே: என்னோடு சந்தோஷமாயிருங்கள், அதேனெனில் காணாமல் போன என்னுடைய ஆட்டைக் கண்டு பிடித்தேன் என்பார் (௬).

15. அவருடைய சிநேகிதரும் அயலத்தாரும் ஆர்.

குணப்படுகிற பாவியின் பேரில் சந்தோஷப்படுகிற பரிசுத்த தேவதூதர்களும், வானத்திலிருக்கிற அர்ச்சயசிஷ்டவான்களுந் தான். ஏனென்றால் இப்படியே குணப்படுதல் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைப் பார்க்க, குணப்படுகிற ஒரே பாவியின் பேரிலே பரமண்டலத்தில் சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று இரட்சகர் சொல்லுகிறார் (௭).

16. நீதிமான்களுக்குக் குணப்படுதல் தேவையில்லையா.

அவர்களுக்கும் அன்றாடகக் குணப்படுதல் அவசியந் தேவையாம். அவர்களுந் தினந்தோறும்: பிதாவே, எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்து விடும் என்று கேட்க வேண்டியவர்கள் தான். ஆகிலுந் துணிகரமும் வெளியரங்கமுமான பாவங்களை நடப்பித்தவர்கள் செய்யவேண்டிய விசேஷ குணப்படுதல் இவர்களுக்கு அவசியமல்ல.

17. இவ்விடத்தில் இயேசுநாதர் சொன்ன இரண்டாம் உவமை என்ன.

இழந்துபோய் மறுபடியுங் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு வெள்ளிக்காசைப்பற்றிய உவமை. அதைக் குறித்து நமது வாக்கியம் சொல்லுகிறதாவது: எந்த ஸ்திரியாகிலும் பத்து வெள்ளிக்காசை வைத்திருந்து, ஒரு வெள்ளிக்காசை இழந்தால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கு மட்டாகக் கவனமாய்த் தேடாளோ. கண்டு



பிடித்தால், அவள் சிநேகிதிகளையும் அயல்வீட்டுக்காரிகளையுங் கூட வரவழைத்து: என்னோடே சந்தோஷமாயிருங்கள், அதேனெனில் நான் இழந்திருந்த வெள்ளிக்காசைக் கண்டு பிடித்தேன் என்பாள். இப்படியே குணப்படுகிற ஒரே பாவியின் பேரிலே பராபரனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (௮—௰).

18. இந்த ஸ்திரியார்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துநாதர். அவர் மனுஷருக்காகப்படுகிற கவலையினிமித்தம் தம்மை ஒரு தாய்க்கு ஒப்பிடுகிறார்.

19. பத்து வெள்ளிக்காசு என்ன.

மனுஷர் தான். ஏனெனில் அவர்கள் ஆதிச்சிருஷ்டியில் பராபரனால் அவருடைய மகிமைக்கென்று உண்டாக்கப்பட்டு, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் அவருடைய ரூபத்தைக் காட்டுகிற மேன்மையும் நல்லதுமான நாணயமாயிருந்தார்கள்.

20. இழந்து போன வெள்ளிக்காசு ஆர்.

எல்லாப் பாவிகளும். ஏனெனில் அவர்கள் தங்கள் பாவத்தினாலே தேவசாயலை இழந்துபோனபடியால், காணாமல்போன வெள்ளிக்காசுக்கு ஒப்பானவர்களாயிருக்கிறார்கள்.

21. இஸ்திரி கொளுத்தின அந்த விளக்கு என்ன.

பராபரனுடைய வசனமே. அதைப்பற்றி தாவீது: உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமானது என்கிறான் (சங். ௱௰௯, ௱௫). கிறிஸ்து தமது வசனத்தின் பிரசங்கத்தினாலே பாவிகளைக் குணப்படுதலுக்கு ஏவுகிறபோது இந்த விளக்கைக் கொளுத்துகிறார்.

22. அந்த ஸ்திரி வீட்டைப் பெருக்கினது எதைக் குறிக்கிறது.

கர்த்தர் அனுப்புகிற சிலுவையின் துன்பங்களைத் தான். இந்தத் துடைப்பத்தினால் அவர் நம்முடைய இருதயங்களைப் பெருக்குகிறார், அதாவது நம்மைக் குணப்படுதலுக்கென்று தூண்டிவிடுகிறார்.

23. இழந்த வெள்ளிக்காசு திரும்பக் கண்டு பிடிக்கப்பட்டால் என்ன உண்டாகும்.

மகா பெரிய சந்தோஷம். ஏனெனில் இஸ்திரியானவள் இழந்த தன் வெள்ளிக்காசைக் கண்டு பிடித்தபடியால், அவள் சிநேகிதிகளையும் அயல் வீட்டுக் காரிகளையுங் கூட வரவழைத்து: என்னோடு சந்தோஷமாயிருங்கள், அதே

னென்றால் நான் இழந்திருந்த வெள்ளிக்காசைக் கண்டு பிடித்தேன் என்று சொல்லி, அவர்களோடு சந்தோஷப்படுகிறது போல், நமது இரட்சகரும் குணப்படுகிற ஒரே பாவியின் பேரில் சந்தோஷப்படுகிறார். ஆம், பரிசுத்த தேவதூதர்களும் அவரோடு கூட சந்தோஷப்படுகிறார்கள். ஏனென்றால் இப்படியே குணப்படுகிற ஒரே பாவியின் பேரிலே பராபரனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷம் உண்டாகிறதென்று கர்த்தர் நமது வாக்கியத்தில் சொல்லுகிறார் (ய).

24. ஆனால் தேவதூதர் நீதிமான்கள் பேரில் சந்தோஷப்படுகிறதில்லையா.

ஆம், அவர்கள் பேரிலும் சந்தோஷப்படுகிறார்கள். ஆனால் பொதுவாக எப்போதும் நம்மிடத்திலிருக்கிற ஒரு காரியத்தின் பேரிலல்ல, இழந்துபோய் மறுபடியுங் கண்டு பிடிக்கப்பட்ட காரியத்தின் பேரில் நமக்கு எப்படி அதிகச் சந்தோஷம் இருக்கிறதோ, அப்படியே குணப்படுகிற ஒரே பாவியின் பேரில் அவர்களுக்கு அதிகச் சந்தோஷம் இருக்கும்.

## படிப்பினை.

25. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் நாம் கற்றுக் கொள்ளுகிறதென்ன.

I. பரிசேயர், வேதபாரகரால் நாம் கற்றுக் கொள்ளுகிறதாவது:

க. குணப்படாத மனுஷர் எப்போதும் தெய்வபத்தியுள்ளவர்களுடைய கிரியைகளைத் தூஷணிக்கிறார்கள். கிறிஸ்துநாதர் எவ்வளவான நல்ல கிரியைகளைச் செய்தாலும், அவைகள் வேதபாரகர் பரிசேயரால் தூஷணிக்கப்பட்டது. அவர் பாவிகளை ஏற்றுக்கொண்ட இந்த நல்ல கிரியையைவிட இன்னம் உத்தமமானதென்ன. ஆகிலும் பரிசேயர் அதை அற்பமாக எண்ணி: இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு, அவர்களோடு சாப்பிடுகிறாரென்று தூஷணித்தார்கள்.

உ. மற்றவர்களை அசட்டைபண்ணுகிறதே மாயக்காரருடைய தெய்வபத்தி. அப்படி இந்தப் பரிசேயர் தங்களையே பரிசுத்தமுள்ள மனிதராக எண்ணி, மற்ற யாவரையும் ஆயக்காரராகவும் பாவிகளாகவும் பாவித்து, அவர்களோடு சாப்பிடாமலும் பேசாமலும் இருந்தார்கள்.

ங. நாம் இப்படிப்பட்ட மாயைக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். உன்னுடைய பத்தி மாயமற்றதும், கர்த்தருக்குச் செய்யும் ஊழியம் கபடற்றதுமாயிருக்கப் பார் (வசபிரா க, ஙங).



II. கர்த்தராகிய கிறிஸ்துவால் நாம் கற்றுக் கொள்ளுகிறதாவது:

க. அவர் குணப்படுகிற ஒரே பாவியையுந் தள்ளாமல், எல்லாரையுங் கிருபையாய் ஏற்றுக் கொள்ளுகிறார். ஆயக்காரரும் நம்முடைய வாக்கியத்தில் சொல்லப்பட்ட மற்ற மனிதரும் பெரிய பாவிகளாகவே யிருந்தார்கள். ஆனால் அவர்கள் தங்கள் பாவங்களை விட்டுக் குணப்பட்டு, கிறிஸ்துநாதரண்டைக்கு வந்தபோது, அவர் அவர்களை ஏற்றுக் கொண்டார். அப்படியே அவர் இப்போது குணப்படுகிற எல்லாப் பாவிகளையும் ஏற்றுக்கொள்ளுகிறார். ஏனெனில் அவர் பாவிகள் எல்லாருடைய ஆறுதலுக்கென்றும் இரட் சிப்புக்கென்றும் இந்த லோகத்திலே வந்தார் என்று பவுல் அப்போஸ்தலன் சாட்சியிட்டு: பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு லோகத்திலே வந்தார் என்கிறது உண்மையும் எல் லா அங்கிகரிப்புக்குப் பாத்திரமுமானவார்த்தை, அவர்க ளில் நான் பிரதானமானவன் என்கிறான் (க தீமோ. க, யரு). கர்த்தரும் தம்மண்டை வருகிற பாவிகள் யாவரையும் ஏற் றுக்கொள்ள பிரிய சித்தமாயிருந்து: என்னண்டைக்கு வரு கிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை என்று சொல்லி (யோவா. சு, ஙஎ), பிரயாசப்பட்டுப் பாரஞ் சுமந்தவர்களா கிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள், நான் உங்களை இளைப்பாற்றுவேனென்று கூப்பிட்டு அழைக்கிறார் (மத். யக, உஅ).

உ. கர்த்தராகிய கிறிஸ்து பாவிகளைக் குணப்படுதலுக்கென்றும் இரட்சிப்புக்கென்றும் இழுக்க அவர்களைத் தேடுகிறார். இதை அவர் காணாமல் போன ஆட்டையும் வெள்ளிக்காசையும் பற்றிய உவமைகளினால் காட்டுகிறார். ஏனென்றால் மேய்ப்பன் காணாமல் போன தன்னுடைய ஆட்டையும், ஸ்திரீ தான் இழந்த வெள்ளிக்காசையும் எப்படித் தேடினார்களோ, அப்படியே கிறிஸ்துநாதரும் காணாமல் போன பாவிகளைத் தம்முடைய பரிசுத்த வசனத்தினால் தேடுகிறார். ஆதலால் அவர் தாமே: பெலனுள்ளவர்களுக்கு வயித்தியன் தேவையாயிராமல், பிணியாளிகளுக்குத் தேவையாயிருக்கிறான், நான் நீதிமான்களை அல்ல, பாவிகளைக் குணப்படுதலுக்கு அழைக்க வந்தேனென்று சொல்லுகிறார் (மத். கூ, யஉ. யங).

ங. மெய்க்கிறிஸ்தவன் குணப்படாத மனுஷரோடு சாவகாசம்பண்ணக் கூடும். ஏனென்றால் பாவமற்ற பரிசுத்தமுள்ள இயேசு சுவாமி பாவிகளோடு சாவகாசம் பண்ணினார். அதைக் கண்ட பரிசேயர்: அவர் பாவிகளை ஏற்றுக்

கொண்டு, அவர்களோடு சாப்பிடுகிறாரென்று இடறல் பட்டார்கள். ஆனால் ஒரு மெய்க்கிறிஸ்தவன் பாவிகளோடு சாவகாசம் பண்ணினாலும், பாவமான காரியங்களில் அவர்களோடு கூட்டுறவுபண்ணப் படாது. அவன் அப்படிச் செய்வானேயாகில், அவர்களோடு கூட அவனும் பராபரனால் தண்டிக்கப்படுவான். ஒரு மெய்க்கிறிஸ்தவன் குணப்படாதவர்களோடு எப்படி சாவகாசம் பண்ணவேண்டுமென்றால், நமது இரட்சகரின் முன்மாதிரியின்படியே, அவர்களைக் குணப்படுதலுக்கும் நீதியின் வழியில் நடத்துதலுக்கும் ஏவி எழுப்பத்தக்கதாய்ச் சாவகாசம் பண்ணவேண்டும். அதைப்பற்றித் தாவீது: பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன், பாவிகள் உம்மண்டைக்குத் திரும்புவார்கள் என்கிறான் (சங். ௫௧, ௰௩). ஒரு கிறிஸ்தவன் அப்படிச் செய்யக் கூடாத சமயத்தில், தானும் அவர்களோடு கெட்டுப் போகாதபடிக்கு, குணப்படாதவர்களுடைய ஐக்கியத்தையும் சாவகாசத்தையும் விட்டு விலகுவது நன்மை. ஏனென்றால் ஆகாதவர்களுடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், சரசக்காரர் உளுக்கார்ந்திருக்கிற இடத்தில் உளுக்காராமலும், கர்த்தருடைய வேதத்தின் மேல் பிரியமாயிருந்து, அவருடைய வேதத்தில் இரவும் பகலுந் தியானிப்பாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங். ௧, ௧. ௨).

III. ஆயக்காரராலும் பாவிகளாலும் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. நாம் நம்முடைய பாவங்களை விட்டுக் குணப்படவேண்டும். அப்படியே இந்த ஆயக்காரரும் பாவிகளும் செய்தார்கள். அதற்கென்று கிறிஸ்துநாதர்: குணப்படுங்கள், வானராச்சியம் சமீபமாய்ச் சேர்ந்ததென்று எல்லாருக்கும் புத்தி சொல்லுகிறார் (மத். ௪, ௰௭).

௨. நாம் குணப்பட்டு மனந்திரும்பிக் கிறிஸ்துவண்டைக்கு வரவேண்டும். அப்படியே ஆயக்காரரும் பாவிகளும் செய்தார்கள். அவர் அவர்களையும் ஏற்றுக்கொண்டார். வேறொருத்தரிடத்திலும் இரட்சிப்பில்லை, வானத்தின் கீழே மனுஷரில் வேறொரு நாமம் அதினால் நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்று கட்டளையிடப்பட்டதும் இல்லை (நடபடி. ௪, ௰௨).

IV. காணாமல்போன ஆட்டையும் வெள்ளிக்காசையுங்கொண்டு நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. மனுஷராகிய நாம் எல்லாரும் சுபாவத்தின்படியே அவைகளைப்போல் காணாமல் போனவர்களாயிருக்கிறோம்.



எசாயா சொல்லுகிறபடி, நாம் எல்லாரும் ஆடுகளைப்போல் வழிதப்பித் திரிந்தோம் (எசா. ௫௩, ௬). பராபரன் நம்மைத் தம்முடைய சாயலாகச் சிருஷ்டித்திருந்தும், நம்முடைய ஆதித்தாய் தகப்பன்மாருடைய பாவத்தினாலே நாம் இந்த மகிமையான சாயலை இழந்துபோனோம்.

௨. கிறிஸ்துநாதர் நம்மைத் தேடிக் கண்டுபிடித்தார். அவர் பரிசுத்த ஞானஸ்நானத்தின் மூலமாய் நம்மைத் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு, தமது பரிசுத்த வசனத்தினாலும் சிலுவையினாலும்: நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்களென்று அநுதினமுங் கூப்பிட்டு, ஓயாமல் நம்மைத் தேடுகிறார்.

௩. கிறிஸ்துநாதர் நம்மைத் தேடுகிறபோது, நாம் அவரை விட்டு ஓடிப்போகக் கூடாது. அப்படிச் செய்வோமானால், நித்திய ஆக்கினைக்குள்ளாவோம். குமாரன் பேரில் விசுவாசிக்கிறவனுக்கு நித்திய சீவன் உண்டு, குமாரனை விசுவாசியாதவன் சீவனைக் காண்பதில்லை, பராபரனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் (யோவா. ௩, ௩௬).

V. பரிசுத்த தேவதூதர்களால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

நாம் மற்ற மனுஷருடைய குணப்படுதலுக்காகச் சந்தோஷப்பட வேண்டும். ஏனெனில் குணப்படுகிற ஒரே பாவியின் பேரிலே பராபரனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷம் உண்டாகிறதென்று கிறிஸ்துநாதர் சொல்லுகிறார் (௰). பரிசுத்த தேவதூதர் நம்மைக் காப்பாற்ற நாம் விரும்புவோமேயானால், நாம் அவர்களை நமது குணப்படுதலாலே சந்தோஷப்படுத்தி, கர்த்தரை நோக்கி: கர்த்தாவே, எங்களைத் திருப்பும், அப்போது திரும்பப்படுவோமென்று எப்போதும் கெஞ்சிக் கேட்கக் கடவோம்.

நமது பராபரனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவருக்கு என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௪-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௱௮௫.)

சுவி. லூக். ௬, ௩௬—௪௨.

* ஆனபடியினாலே உங்கள் பிதா இரக்கமுள்ளவராய் இருக்கிறது போல், நீங்களும் இரக்கமுள்ளவர்களாகுங்கள். 37 குற்றமாய்

நிர்ணையாதேயுங்கள்; அப்போது குற்றமாய் நிர்ணைக்கப்படாதிருப்பீர்கள். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதேயுங்கள்; அப்போது ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள். விடுதலைபண்ணுங்கள்; அப்போது விடுதலை பண்ணப்படுவீர்கள். 38 கொடுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுத்திக் குலுக்கிச் சரிந்து விழும் நல்ல அளவை உங்கள் மடியிலே கொடுப்பார்கள். ஏனெனில் எந்த அளவால் அளக்கிறீர்களோ, அதினால் உங்களுக்குத் திரும்ப அளக்கப்படும் என்றார். 39 அவர் பின்னையும் அவர்களுக்குச் சொன்ன உவமையாவது: குருடனுக்குக் குருடன் வழிகாட்டலாமோ, இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவோ. 40 சீஷன் தன் போதகனுக்கு மேல்பட்டவனாயிராமல்; தேறினவனெல்லாந் தன் போதகனைப்போல் இருப்பான். 41 ஆனால் நீ உன் சுயகண்ணிலுள்ள உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலுள்ள சிராயைப் பார்க்கிறதென்ன. 42 அல்லது, நீ உன் கண்ணிலுள்ள உத்திரத்தைக் காணாமல், உன் சகோதரனுடனே: சகோதரனே, நான் உன் கண்ணிலுள்ள சிராயை எடுத்துப்போடட்டும் என்று எப்படி சொல்லக் கூடும். மாயக்காரா, முந்த உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பிற்பாடு உன் சகோதரன் கண்ணிலுள்ள சிராயையும் எடுத்துப்போட வகை பார்ப்பாயாக என்றார்.

1. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தில் அடங்கியிருக்கிறதென்ன.

நாம் நம்முடைய பிறத்தியானுக்கு இரக்கங்காட்ட வேண்டுமென்கிற நல்ல புத்திமதி.

2. அதைச் சொன்னதார்.

கிறிஸ்துநாதர். அவர் நம்முடைய வாக்கியத்தில்: உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல், நீங்களும் இரக்கமுள்ளவர்களாகுங்கள் என்று சொல்லுகிறார்.

3. இரக்கமாயிருக்கிறது என்றால் என்ன.

வருத்தப்படுகிற ஏழைப் பிறத்தியான் பேரில் மனதுருகி, கூடியமட்டும் அவனுக்கு உதவிசெய்கிறதாம்.

4. அப்படியிருக்க வேண்டியது ஆர்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும்.

5. நாம் எப்படி இரக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

நம்முடைய பரம பிதாவின் முன்மாதிரியின்படியே. ஏனென்றால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல், நீங்களும் இரக்கமுள்ளவர்களாகுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அதேதெனெனில் அவர் நல்லவர்கள் பேரிலும் பொல்லாதவர்கள் பேரிலுந் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியர் பேரிலும் அநீதியர் பேரிலுந் தமது மழையை வருஷிக்கப்பண்ணி, மித்துருவுக்கும் சத்துருவுக்கும்



இரக்கத்தைக் காண்பிக்கிறார். அப்படியே ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய பிறத்தியான் சிநேகிதனாயிருந்தாலுஞ் சரி, பகைஞனாயிருந்தாலுஞ் சரி, தன்னால் கூடிய உதவி ஒத்தாசையை அவனுக்குக் காட்ட வேண்டும்.

6. பராபரன் இரக்கமுள்ளவராகவே இருக்கிறார். ஆனால் ஒரு மனுஷன் அவரைப்போல் இரக்கமுள்ளவனாயிருக்கக் கூடியதெப்படி.

ஒரு கிறிஸ்தவனுடைய இரக்கம் பராபரனுடைய இரக்கத்தைப்போல் அவ்வளவு உத்தமமுள்ளதாயிருக்கும் என்பது இயேசுநாதர் சொன்ன இந்த வார்த்தையின் அர்த்தமல்ல. ஏனென்றால் பராபரனுடைய இரக்கம் அளவற்றதும், எல்லா மனுஷர்மேலும் உள்ளதுமாயிருக்கிறது. ஆனால் கிறிஸ்துநாதர் இந்தத் தம்முடைய வார்த்தையினால்: ஒரு கிறிஸ்தவன் தன் பரம பிதாவின் முன்மாதிரியைப் பின்பற்றி, தன்னாலானமட்டும் பிறத்தியானுக்கு இரக்கங் காட்ட வேண்டுமென்கிற ஒரு பிரமாணங் கொடுக்கிறார்.

7. நாம் பிறத்தியானுக்கு எந்த இரக்கத்தைக் காட்ட வேண்டியது.

௧. அவனைக் குற்றமாய் நிர்ணையாதிருத்தல். ஏனென்றால் குற்றமாய் நிர்ணையாதிருங்கள், அப்போது குற்றமாய் நிர்ணைக்கப்படாதிருப்பீர்களென்று கர்த்தர் சொல்லுகிறார் (௩௭).

௨. அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதிருத்தல். ஏனெனில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதேயுங்கள், அப்போது ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்களென்று இயேசுநாதர் சொல்லுகிறார்.

௩. அவனுக்கு மன்னித்தல். அவன் நமக்குத் தீமையும் அநியாயமும் செய்திருந்தாலும், நாம் சரிக்குச் சரிக்கட்டாமல் மன்னிக்க வேண்டும். விடுதலைபண்ணுங்கள், அப்போது விடுதலைபண்ணப் படுவீர்களென்று இரட்சகர் சொல்லுகிறார்.

௪. அவனுக்கு ஒத்தாசைசெய்து, நமக்குண்டான லோக நன்மைகளால் அவனுடைய சரீரப்பிழைப்புக்கு உபகாரஞ் செய்தல். கொடுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படுமென்று கர்த்தர் சொல்லுகிறார் (௩௮).

8. குற்றமாய் நிர்ணைக்கிறதாவதென்ன.

பிறத்தியானைப் பற்றிச் சிநேகமில்லாமல் குற்றமாய் நினைக்கிறதும் பேசுகிறதுந்தான்.

9. ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதாவதென்ன.

பிறத்தியானைப் பற்றி முகாந்தரமில்லாமல் கேட்டுக்குரிய மனுஷனாக எண்ணுகிறதாம்.

10. நாம் பிறத்தியானைக் குற்றமாய் நிர்ணைக்கவும், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவுங் கூடாதானால், அதிகாரிகள் மனுஷனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதெப்படி.

பராபரன் நியாயாதிபதிகள் முதலிய அதிகாரிகளை ஏற்படுத்தி, அவர்கள் குற்றவாளிகளைத் தண்டிக்கிறதற்கு அவர்களுக்கு அதிகாரங் கொடுத்திருக்கிறதினால்தான். அதைப் பற்றி பவுல் அப்போஸ்தலன்: அதிகாரி விருதாவாய்ப் பட்டயத்தைப் பிடித்திரான், ஏனெனில் பொல்லாப்புச் செய்கிறவன்மேல் கோபாக்கினை வர அவன் நீதியைச் சரிக்கட்டுகிற தெய்வ ஊழியக்காரனாயிருக்கிறான் என்று சொல்லுகிறான் (ரோ. ௰௩, ௪).

11. ஒரு கிறிஸ்தவன் பிறத்தியானுக்கு இரக்கங் காட்ட வேண்டியதேன்.

தனக்கும் இரக்கங் கிடைக்கும்படியாகத்தான். ஏனெனில் கிறிஸ்துவானவர்: குற்றமாய் நிர்ணையாதேயுங்கள், அப்போது குற்றமாய் நிர்ணைக்கப்படாதிருப்பீர்கள்; ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதேயுங்கள், அப்போது ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலை பண்ணுங்கள், அப்போது விடுதலை பண்ணப்படுவீர்கள்; கொடுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று சொன்னார் (௩௭. ௩௮). கிறிஸ்துவின் சீஷர் பிறத்தியானுக்கு என்ன செய்கிறார்களோ, அதைப் பராபரன் அவர்களுக்குஞ் செய்கிறார். பிறத்தியானுக்கு உண்மையாய் இரக்கத்தைக் காண்பிக்கிறவன் பேரில் பராபரனும் இரக்கமுள்ளவராயிருக்கிறார். பிறத்தியானைக் குற்றமாய் நிர்ணைக்காதவனும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதவனும் எவனோ, அவன் பராபரனால் அவருடைய நடுத்தீர்ப்பின் நாளிலே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். தன் சத்துருவுக்குச் சரிக்கட்டாமல் மன்னிக்கிறவனுக்குப் பராபரன் அவன் பாவங்களையெல்லாம் மன்னிக்கப் பிரிய சித்தமாயிருக்கிறார். நாம் நமக்குண்டான நன்மைகளில் கூடுமானதைப் பிறத்தியானுக்குக் கொடுத்தால், பராபரன் அதை நமக்குத் திரும்பக் கொடுப்பார். ஏனெனில் ஒருவன் எந்த அளவால் அளக்கிறானோ, அந்த அளவால் திரும்ப அவனுக்கு அளக்கப்படும். அதைப்பற்றி நமது இரட்சகர் நமது வாக்கியத்திலே சொல்லுகிறதாவது: அமுத்திக் குலுக்கிச் சரிந்து விழும் நல்ல அளவை உங்கள் மடியிலே கொடுப்பார்கள், ஏனெனில் எந்த அளவால் அளக்கிறீர்களோ, அதினால் உங்களுக்குத் திரும்ப அளக்கப்படும் (௩௮). அதாவது, நீங்கள்



நிறைந்தனமாய்ப் பிறத்தியானுக்கு இரக்கஞ் செய்தீர்களானால், பராபரனும் உங்களுக்கு நிறைந்தனமாய் இரக்கஞ் செய்வார் என்கிறார்.

12. ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய இரக்கத்தினாலே பராபரனிடத்தில் இரக்கம் பெற்றுக்கொள்ளுகிறானோ.

இல்லை. ஏனெனில் கிறிஸ்துவின் பாடுகளினாலும் மரணத்தினாலும் மாத்திரம் நமக்கு இரக்கம் சம்பாதிக்கப்பட்டிருக்கிறது. மெய்விசுவாசத்தினால் கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளுகிறவனுக்கன்றி வேறொருவனுக்கும் பராபரனுடைய இரக்கங் கிடைக்காது. மெய்விசுவாசம் எங்கேயிருக்கிறதோ, அங்கே பிறத்தியானுக்குக் காண்பிக்க வேண்டிய இரக்கமுங் கூட இருப்பது அவசியம். நாம் பிறத்தியானுக்குக் காண்பிக்கிற இரக்கம் உயிருள்ள விசுவாசத்துக்கு அடையாளமும், பராபரனிடத்தில் கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொண்டோம் என்பதற்கு அத்தாட்சியுமாயிருக்கிறது. ஏனெனில் கிறிஸ்துவினிமித்தம் பிறத்தியானுக்கு மனப்பூர்வமாய் நன்மை செய்கிறவனுக்கு சிநேகத்தைச் செனிப்கிற மெய்விசுவாசமுண்டு. ஆதலால் நமது இரக்கம் பராபரனுடைய இரக்கத்தைச் சம்பாதியாமல், நம்முடைய விசுவாசத்துக்கு அடையாளமாயிருக்கிறது.

13. அதிகாரி, குரு, எசமான் முதலியவர்களைத் தவிர மற்றவர்கள் தங்கள் பிறத்தியானைக் கடிந்துகொள்ள உத்தரவில்லையா.

உண்டு. ஆகிலும் பிறத்தியானை அவனுடைய பாவத்தினிமித்தங் கடிந்துகொள்ளுகிறவன் கிறிஸ்துநாதர் அதைப் பற்றிச் சொல்லுகிற வார்த்தைகளை நன்றாய்க் கவனித்து, பிறத்தியானிடத்திலிருக்கிற பாவங்களுந் தப்பிதங்களும் தன்னிடத்திலிருக்கிறதோ, இல்லையோவென்று தன்னைத்தான் நன்றாய்ச் சோதித்துப் பார்க்க வேண்டும்.

14. குற்றமுள்ளவன் மற்றவர்களைத் தண்டிக்கவுங் கண்டிக்கவுங் கூடாதா.

கூடாது. அதைக் கர்த்தர் நமக்கு மூன்று உவமைகளினால் தெளிவாய்க் காட்டுகிறார்.

௧. இதைப்பற்றி அவர் சொன்ன முதலாம் உவமை என்ன.

குருடனுக்குக் குருடன் வழிகாட்டலாமோ. இருவரும் பள்ளத்தில் விழுவார்களல்லவோ. அதாவது, ஒரு குருடன் வேறொரு குருடனை வழிநடத்தக் கூடாதது எப்படியோ, அப்படியே குற்றமுள்ள மனுஷன் மற்றவர்களைக் கடிந்

துகொள்ளவும் இரட்சிப்பின் வழியில் நடத்தவுங் கூடாத வனாயிருக்கிறான்.

௨. இரண்டாம் உவமை என்ன.

சீஷன் தன் போதகனுக்கு மேற்பட்டவனாயிராமல், தேறினவன் எல்லாந் தன் போதகனைப்போலிருப்பான் (௪௰). அதாவது, ஒரு துன்மார்க்கப் போதகனிடத்தில் ஒரு சீஷன் துன்மார்க்கத்தை மாத்திரங் கற்றுக்கொண்டு, தன் போதகனுக்கு மேற்பட்டவன், அதாவது சன்மார்க்கனாயிராமல் அவனைப்போல் எப்படி துன்மார்க்கனாயிருக்கிறானோ, அப்படியே தெய்வபத்தியில்லாத ஒருவனிடத்தில் தெய்வபத்தியற்ற வேறொருவன் ஒரு நன்மையையுங் கற்றுக்கொள்ள மாட்டான்.

௩. மூன்றாம் உவமை என்ன.

நீ உன் சுய கண்ணிலுள்ள உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலுள்ள சிராயைப் பார்க்கிறதென்ன. அல்லது, நீ உன் கண்ணிலுள்ள உத்திரத்தைக் காணாமல், உன் சகோதரனுடனே: சகோதரனே, நான் உன் கண்ணிலுள்ள சிராயை எடுத்துப் போடட்டுமென்று எப்படிச் சொல்லக் கூடும். மாயக்காரா, முந்த உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பிற்பாடு உன் சகோதரன் கண்ணிலுள்ள சிராயையும் எடுத்துப்போட வகை பார்ப்பாயாக (லூக. ௬, ௪௨). ஒருவன் தன் சுய கண்ணிலே ஒரு பெரிய உத்திரத்தை வைத்துக்கொண்டு, பிறத்தியான் கண்ணிலுள்ள சிராயை எடுக்கக் கூடாததுபோல், ஒருவன் தான் பாவமும் அக்கிரமமும் நிறைந்தவனாயிருக்கக்கொள்ள, மற்றவர்களைக் கடிந்துகொள்ளுகிறதுந் தண்டிக்கிறதும் பயித்தியமும் மாயமுமாயிருக்கிறது.

## படிப்பினை.

15. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. கர்த்தராகிய பராபரனால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. அவர் நமது பாவங்களை எல்லாம் மன்னித்து, நமக்கு எல்லா நன்மைகளையுஞ் செய்யச் சித்தமாயிருக்கிற இரக்கமுள்ள பராபரனாயிருக்கிறார். அவருடைய இரக்கத்தைக் காண்பித்து: உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்களென்று கிறிஸ்துநாதர் சொல்லுகிறார். பராபரனுடைய இந்த இரக்கத்தைக் குறித்து தாவீது இராசா சாட்சிகொடுத்து: தகப்பன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல், கர்த்தர் தமக்குப்



பயந்தவர்களுக்கு இரங்குகிறார் என்று சொல்லுகிறான் (சங். ௱௩, ௰௩). அப்படியே யோனா தீர்க்கதரிசி பராபரனுடைய இரக்கத்தை உயர்த்தி: தேவரீர் இரக்கமும் மன உருக்கமும் நீடியசாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவருமான தேவனென்று அறிவேன் என்றான் (யோனா. ௪, ௨).

II. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய புத்திமதியினால் நாம் கற்றுக் கொள்ளுகிறதாவது:

௧. நாம் பிறத்தியான் பேரில் இரக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஏனெனில் அவர்: உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாகுங்கள் என்கிறார். மேலும் அவர் மலைப்பிரசங்கத்திலே: இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனென்றால் அவர்கள் இரக்கம் பெறுவார்களென்று சொல்லி, பிறத்தியானுக்கு உண்மையாய் இரக்கங் காண்பிக்கிறவர்களைப் புகழுகிறார் (மத். ௫, ௭).

௨. நாம் பிறத்தியானுக்கு அவனுடைய பாவங்களை மன்னிக்க வேண்டும். அப்படிப்பட்ட குணம் நமக்கு இருக்க வேண்டுமென்பதை நமது இரட்சகர் தெரிவித்து நமது வாக்கியத்திலே: விடுதலை பண்ணுங்கள், அப்போது விடுதலைபண்ணப்படுவீர்கள் என்கிறார். தன் இருதயத்தில் கோபத்தை வைத்துக்கொண்டு பிறத்தியானுக்கு மன்னிக்கமாட்டேன் என்கிறவன் பராபரனிடத்தில் பாவமன்னிப்பையடையக் கூடாது. அதைப்பற்றி நமது கர்த்தர்: மனுஷருக்கு அவர்கள் தப்பிதங்களை மன்னியாதே போனீர்களாகில், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பாரென்று தெரிவாய்ச் சொல்லுகிறார் (மத். ௬, ௰௫). ஆதலால் எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்து விடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்து விடும் என்று கர்த்தர் படித்துக் கொடுத்த செபத்தை உண்மையுள்ள இருதயத்தோடு சொல்லவேண்டும் (மத். ௬, ௰௨).

௩. நாம் நம்முடைய பிறத்தியானுக்கு அவன் இக்கட்டிலே சந்தோஷமாய் உதவி செய்யவேண்டும். ஏனெனில் நாம் நம்முடைய துன்பங்களிலே நமது பரம பிதா நமக்கு ஒத்தாசைசெய்து, தமது ஆசீர்வாதத்தை நமக்குத் தர எப்படி விரும்புகிறோமோ, அப்படியே நாம் நமது பிறத்தியானுக்குச் சந்தோஷமாய் உதவி செய்து, நமக்குண்டான நன்மைகளில் அவனுக்குப் பங்கு கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். இதைப்பற்றி நமது இரட்சகர்: கொடுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப் படுமென்று சொல்லுகிறார்.

சங்கீதக்காரனும் இதற்குச் சாட்சிகொடுத்துச் சொல்லுகிறதாவது: இரங்கிக் கடன்கொடுத்துத் தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியமுள்ளவன் (சங். ௱௰௨, ௫). சிறுமைப்பட்டவன் மேலே கவனிப்பான் சிந்தையுள்ளவன் பாக்கியவான். கர்த்தர் அவனைத் தீங்குநாளிலே விடுவிப்பார். கர்த்தர் அவனைத் தற்காத்து, அவனை உயிரோடே வைப்பார். பூமியின் மேலே பாக்கியவானாயிருப்பான். அவனை அவன் சத்துருக்களின் மனதுக்கு ஒப்புக்கொடார். கட்டிலின்மேல் பிணியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார். அவனுடைய வியாதியிலே அவன் படுக்கையை எல்லாம் மாறப்பண்ணுவீர் (சங். ௪௧, ௨-௪).

௪. நாம் அவசரமில்லாத குற்ற நிர்ணைப்புக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அதாவது, நாம் நம்முடைய பிறத்தியானைப்பற்றிச் சிநேகமில்லாமையாய் நினைக்கவும், அவன் பேரில் பொல்லாப்பாய்ப் பேசவும், முகாந்தரமில்லாமல் அவனைத் தெய்வபத்தியற்ற மனுஷனாக எண்ணவுங் கூடாது. ஏனெனில் நாமே பாவிகளாயிருந்து தப்பிதங்களைச் செய்கிறோம். நம்முடைய கண்ணிலுள்ள உத்திரத்தைக் கவனியாமல், பிறத்தியானுடைய கண்ணிலுள்ள சிராயைப் பார்க்கிறோம். அதாவது, நாம் செய்கிற நம்முடைய பெரிய பாவங்களை நாம் உணராமல், பிறத்தியானுடைய சின்னக்குற்றங்கள், தப்பிதங்களை உடனே கவனிக்கிறோம் என்பது நமக்குத் தெரியும். ஆதலால் குற்றமாய் நிர்ணையாதேயுங்கள், அப்போது குற்றமாய் நிர்ணைக்கப்படாதிருப்பீர்கள்; ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதேயுங்கள், அப்போது ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலை பண்ணுங்கள், அப்போது விடுதலைபண்ணப்படுவீர்களென்று கிறிஸ்துநாதர் சொன்ன புத்திமதியைக் கவனிக்கக் கடவோம்.

௫. மற்றவனைக் கடிந்துகொள்ளுகிறவன், தான் கடிந்துகொள்ளுகிற அந்தப் பாவங்களைச் செய்யாதவனாயிருக்க வேண்டும். அதைக் குறித்து கிறிஸ்துநாதர்: முந்த உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பிற்பாடு பிறத்தியான் கண்ணிலுள்ள சிராயை எடுத்துப்போட வகை பார்ப்பாயாக என்கிறார். இதைப் போதகர் முதலான தெய்வ ஊழியரும், அதிகாரிகளும், எசமான், எசமானிச்சிகளும், மற்ற மனுஷருடைய பாவங்களைக் கண்டிக்கும்படியாகப் பராபரனால் நியமிக்கப்பட்ட மனுஷரும் நன்றாய்க் கவனிக்க வேண்டும். ஏனெனில் பிறத்தியான் செய்கிற பாவங்களை நாமே செய்வோமானால், நாம் அவனைத் தண்டிக்கிறதெப்படி. அது வெட்கமான காரியமாயிருக்குமே. ஆதலால் சீராக்: நீ மற்ற



வர்களைப் படிப்பிக்கிறதற்கு முன்னே நீயே நன்றாய்ப்படி, நீ மற்றவர்களை இரட்சிக்கிறதற்கு முன்னே உன்னைத் தானே இரட்சியென்று புத்தி சொல்லுகிறான் (சீராக். ௰௮, ௰௯. ௨௰).

௬. நாம் இன்னம் பாவச்சங்கிலிகளால் கட்டப்பட்டவர்களாயிருக்கக்கொள்ள, மற்றவர்களைத் தண்டித்து, குற்றமாய் நிர்ணைத்து, ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்போமானால், நாம் மாயக்காரராயிருப்போம். அப்படிச் செய்கிறவர்களை இயேசுநாதர் மாய்க்காரர் என்று அழைத்து: மாயக்காரா, முந்த உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பிற்பாடு உன் சகோதரன் கண்ணிலுள்ள சிராயையும் எடுத்துப்போட வகை பார்ப்பாயாக என்றார். மாயக்காரர் பராபரனுடைய கண்களுக்கு முன்பாக அருவருப்புள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களை கிறிஸ்துவானவர் தம்முடையவர்களாக அறிக்கையிடாமல்: ஒருக்காலும் உங்களை அறிந்ததில்லை, அக்கிரம செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்களென்று அறிக்கைபண்ணுவேன் என்றார் (மத். ௭, ௨௩). ஆதலால் நாம் மற்றவர்களைக் குற்றமாய் நிர்ணைக்கிறதற்கும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதற்கும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

16. இப்படிப்பட்ட சிநேகமும் இரக்கமும் நிறைந்த கிரியைகளை நாம் நமது சுய பலத்தினால் செய்யக் கூடுமோ.

கூடாது. சிநேகத்தின் ஆவியானவர் அவைகளை நமக்குள் உண்டுபண்ண வேண்டும். ஆம், அவர் நம்முடைய கடினமானதும் பொல்லாததும் இரக்கமற்றதுமான இருதயங்களை மாற்றி, நம்மை மெய்யான சிநேகத்துக்கு ஏவி எழுப்பவேண்டும். ஆதலால் நாம் எப்போதும் பரிசுத்த ஆவியின் ஒத்தாசையைத் தேடி, பெருமூச்சுவிட்டு கேட்க வேண்டியதாவது:

பரத்தின் மதுரப்பனி,
நீர் எங்கள் உள்ளத்துருகி
அன்பால் நிரம்பப்பண்ணும்.
சகோதரர் ஒன்றாகிய
சிநேகத்தைக் கெடுக்கிற
பொறாமையும் வண்கண்ணும்
வாடி மாறி,
நல் இணக்கம் மெய் இரக்கம் நேசக்கட்டும்
சாந்தம் அன்பும் வளரட்டும் (ஞானப்பாட்டு ௮௰, ௭).

இந்தப் பரிசுத்த ஆவியானவருக்குப் பரம பிதாவோடும் இயேசு இரட்சகரோடும் இப்போதும் எப்போதும் கனமும் மகிமையுந் துதியும் உண்டாவதாக, ஆமேன்.

# திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ரு-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௩௨.)

## சுவி. லூக். ரு. ௧—௰௧.

பின்னையுஞ் சம்பவித்ததேதென்றால், கும்பு பராபரனுடைய வச
னத்தைக் கேட்க அவரை நெருக்கி நிற்கையில், அவர் கெனேசரேத்
தென்ற சிறு கடலண்டையிலே நின்றிருந்து, 2 கடல் கரையிலே
இரண்டு படவுகளை நிற்கக் கண்டார். மீன் பிடிக்கிறவர்களோ
வென்றால் அதுகளை விட்டு இறங்கி, வலைகளை அலைசிக்கொண்டிருந்
தார்கள். 3 அப்போது அந்தப் படவுகளில் ஒன்றுக்குள்ளே ஏறி
னார்; அது சீமோனுடையதாயிருந்தது. அதைக் கரையிலிருந்து
சற்றே தள்ள, அவர் அவனை வேண்டிக்கொண்டு, அந்தப் படவில்
உளுக்கார்ந்திருந்து, கும்புகளைப் போதகம் பண்ணினார். 4 வச
னித்து முடித்த பின்பு, அவர் சீமோனுடனே: நீ ஆழத்திலே தள்
ளிக் கொண்டுபோய், மீன்வேட்டைக்கு உங்கள் வலைகளைத் தாழவி
டுங்கள் என்றார். 5 சீமோன் அவருக்கு பிரத்தியுத்தாரமாக: ஐயரே,
இராமுழுதும் நாங்கள் பிரயாசப்பட்டு, ஒன்றும் பிடித்ததில்லை;
உம்முடைய வார்த்தையின் படியோவென்றால் வலையைத் தாழ விடு
வேன் என்றான். 6 அவர்கள் இப்படி செய்து, வெகு ஏராளமான
மீன்களைச் சேர்த்துக்கொண்டார்கள். அவர்கள் வலையோவெனில்
கிழிந்தது. 7 அப்போது வேறே படவிலிருந்த பங்காளிகள் வந்து
தங்களுக்கு ஒத்தாசை பண்ண, அவர்களுக்குச் சைகை காட்டினார்
கள். அவர்கள் வந்து, இரண்டு படவுகளையும் அமிழ்ந்தத் தக்க பார
மாக நிரப்பினார்கள். 8 ஆனால் சீமோன் பேதுரு இதைக் கண்டு,
இயேசுவின் முழங்கால்களண்டை விழுந்து: ஆண்டவரே, என்னை
விட்டுப் புறப்படும்; ஏனென்றால் பாவியான மனுஷனாய் இருக்கி
றேன் என்றான். 9 ஏனெனில் அகப்பட்ட மீன் வேட்டையினாலே
அவனுக்கும் அவனுடனே கூட இருந்த யாவருக்குந் திகைப்புண்டா
யிற்று. 10 சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமா
ரராகிய யாக்கோபுக்கும் யோவானுக்கும் அந்தப்படி தானே. அப்
போது இயேசு சீமோனுடனே: பயப்படாதே, இது முதல் மனுஷ
ரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். 11 அவர்கள் படவுகளைக்
கரையிலே தட்டவைத்து, எல்லாத்தையும் விட்டு, அவரைப் பின்
சென்றார்கள்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியம் எதைப் பற்றியது.

சீமோன் பேதுருவின் பெரிய மீன் வேட்டையைப் பற்றியது.

2. இந்தப் பேதுரு ஆர்.

அவன் துவக்கத்திலே கலிலேயாதேசத்திலுள்ள கெனேசரேத் கடலிலே தன் சகோதரனாகிய அந்திரேயாவோடு



மீன்பிடிக்கும் தொழிலாளியாகிய செம்படவனாயிருந்தவன். அவன் அங்கே இந்தச் சுவிசேஷ வாக்கியத்தில சொல்லப்பட்ட பெரிய மீன்வேட்டையின்போது, இயேசுநாதரை அறிந்து, அவரால் மனுஷரைப் பிடிக்கிறவனாக, அதாவது போதகனாகவும், ஆம், சுவிசேஷத்தை லோகம் எங்கும் பிரசங்கிக்கும் அப்போஸ்தலனாகவுந் தெரிந்துகொள்ளப்பட்டான்.

3. இந்தப் பெரிய மீன் வேட்டை அவனுக்கு ஆராலே கிடைத்தது.

நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துவாலே.

4. எப்படி கிடைத்தது.

கிறிஸ்துநாதர் கலிலேயாவிலுள்ள கெனேசரேத்
தென்ற சிறு கடலண்டை நின்றிருந்து, பராபரனுடைய
வசனத்தைக்கேட்கும்படியாக வந்திருந்த திரள் சனங்களால்
நெருக்கப்பட்டபோது, அவர் சீமோன் பேதுருவினுடைய
தாயிருந்த ஒரு படவில் ஏறி, அதைக் கரையிலிருந்து சற்று
தள்ளக் கற்பித்து, அதிலிருந்து கும்புகளுக்குப் போதகம்
பண்ணினார். அதைப்பற்றி நமது சுவிசேஷ வாக்கியம் சொல்
லுகிறதாவது: பின்னையும் சம்பவித்ததேதென்றால், கும்பு
பராபரனுடைய வசனத்தைக் கேட்க அவரை நெருக்கி நிற்
கையில், அவர் கெனேசரேத்தென்ற சிறுகடலண்டை நின்றி
ருந்து, கடற்கரையிலே இரண்டு படவுகளை நிற்கக் கண்டார்.
மீன்பிடிக்கிறவர்களோவென்றால், அதுகளை விட்டு இறங்கி,
வலைகளை அலைசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்
தப் படவுகளில் ஒன்றுக்குள்ளே ஏறினார். அது சீமோனு
டையதாயிருந்தது. அதைக் கரையிலிருந்து சற்றே தள்ள
அவர் அவனை வேண்டிக் கொண்டு, அந்தப்படவில் உளுக்
கார்ந்திருந்து, கும்புகளைப் போதகம் பண்ணினார் (௧—௩).
அவர் தம்முடைய பிரசங்கத்தை முடித்தபிற்பாடு பேதுரு
வுக்கு நல்ல வேட்டை கிடைக்கும்படியாக: நீ படவை ஆழத்
திலே தள்ளிக் கொண்டுபோய், மீன் வேட்டைக்கு உங்கள்
வலைகளைத் தாழவிடுங்கள் என்று சொன்னார் (௪).

5. சீமோன் பேதுரு அப்படியே செய்தானா.

ஆம், அவனும் அவனுடைய தோழரும் மீன் படுகிற
தற்கு ஏற்ற நேரமாகிய இராமுழுதும் பிரயாசப்பட்டு ஒன்
றும் பிடிக்காதிருந்தும், அவன் இயேசுநாதருடைய வார்த்
தையை நம்பி: ஐயரே, நாங்கள் இராமுழுதும் பிரயாசப்பட்டு
ஒன்றும் பிடித்ததில்லை; உம்முடைய வார்த்தையின் படியோ
வென்றால் வலையைத் தாழவிடுவேன் என்று சொல்லி, கர்த்த
ருடைய கட்டளையின்படியே வலையைத் தாழவிட்டான்.

6. இந்தச் சமயத்திலே அவனுக்கு மீன் அகப்பட்டதா.

ஆம், அவர்கள் வெகு ஏராளமான மீன்களைச் சேர்த்துக்கொண்டார்கள், அவர்கள் வலையோ கிழிந்தது என்று நம்முடைய வாக்கியம் சொல்லுகிறது.

7. வலை கிழிந்தபோது அதிலே மீன் எப்படியிருக்கக்கூடும்.

அதுவும் இயேசுநாதர் செய்த அற்புதந்தான். ஏனென்றால் அவர் தம்முடைய கட்டளையினாலே அவ்வளவு மீன் வலையிலே படும்படிக்கும், வலை கிழிந்தபிறகும் அதில் இருக்கும்படிக்குஞ் செய்தார்.

8. பேதுரு இந்த மீன்களைப் படவில் எப்படி ஏற்றினான்.

அவன் தன் வேலைக்காரரோடு வலையை இழுக்கக் கூடாமல், அவன் தன் பங்காளிகளுக்கு, அதாவது வேறே படவிலிருக்கிற செபேதேயுவின் குமாரராகிய யாக்கோபு, யோவான் என்கிற தன் தொழிலாளிகளுக்குச் சைகைகாட்டி, அவர்கள் வந்து ஒத்தாசைபண்ணக் கேட்டுக்கொண்டான்.

9. அப்போது பேதுரு தன் பங்காளிகளுக்கு அந்த மீன் வேட்டையிலிருந்து எதையாவது கொடுத்தானா.

ஆம், அவர்கள் இரண்டு படவுகளையும் அமிழ்ந்தத் தக்கப் பாரமாக நிரப்பினார்களென்று நம்முடைய வாக்கியத்தில் எழுதியிருக்கிறது.

10. பேதுரு கர்த்தர் செய்த இந்த அற்புதத்தைக் கண்டு என்ன செய்தான்.

மற்றவர்களைப்போல் அவனும் கர்த்தருக்குப் பயந்து, அவர் ஒரு மனிதனாக மாத்திரம் இருக்கிறதில்லை என்று இந்த அற்புதத்தினால் அறிந்துகொண்டான். ஆதலால் அவர்கள் கிறிஸ்துநாதர் தங்களோடு படவிலிருக்கத் தாங்கள் பாத்திரவான்களல்லவென்று எண்ணினார்கள். இதைப்பற்றி நம்முடைய வாக்கியம் சொல்லுகிறதாவது: ஆனால் சீமோன் பேதுரு இதைக் கண்டு, இயேசுவின் முழங்கால்களண்டையிலே விழுந்து: ஆண்டவரே, என்னை விட்டுப் புறப்படும், ஏனென்றால் பாவியான மனுஷனாயிருக்கிறேன் என்றான். ஏனென்றால் அகப்பட்ட மீன் வேட்டையினாலே அவனுக்கும் அவனுடனே கூட இருந்த யாவருக்குந் திகைப்பு உண்டாயிற்று. சீமோனுக்குக் கூட்டாளிகளான செபேதேயுவின் குமாரராகிய யாக்கோபுக்கும் யோவானுக்கும் அந்தப்படிதானே (அ-ம).



11. அப்போது இயேசுநாதர் சீமோனுக்கு என்ன சொன்னார்.

பயப்படாதே, இதுமுதல் மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்.

12. மனுஷரைப் பிடிக்கிறதாவதென்ன.

பராபரனுடைய வசனத்தின் பிரசங்கத்தினாலே மனுஷரைக் குணப்படுத்தி, அவர்களைக் கிறிஸ்துவண்டைக்குக் கொண்டுவருகிறதாம். ஏனெனில் இவ்வுலகத்திலே இருக்கிற மனுஷர் சமுத்திரத்திலுள்ள மீன்களுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். போதகர் முதலான தேவ ஊழியர் மனுஷரைப் பிடிக்கிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் மனிதரை எதினால் பிடிக்கிறார்களென்றால், பராபரனுடைய வசனமாகிய வலையினாலே தான்.

13. பேதுருவுக்குச் சொன்ன இந்த வார்த்தையினால் கிறிஸ்துநாதர் என்னத்தைக் குறிப்பாய்க் காட்டுகிறார்.

பேதுரு இனிமேல் மீன்பிடிக்கிறவனாயிராமல், பராபரனால் அழைக்கப்பட்ட போதகனும், மனுஷரைப் பிடிக்கிறவனுமாயிருப்பான் என்பதை.

14. பேதுரு இயேசுநாதருடைய இந்த அழைப்புக்குக் கீழ்ப்படிந்தானா.

ஆம், கீழ்ப்படிந்தான். ஏனெனில் பேதுருவைக் குறித்து மாத்திரமல்ல, மீன்பிடிக்கிறவர்களாயிருந்த மற்றவர்களையும் அதாவது, பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயாவையும் செபேதேயுவின் இரண்டு குமாரராகிய யோவானையும் யாக்கோபையுங் குறித்து: அவர்கள் படவுகளைக் கரையிலே தட்டவைத்து, எல்லாத்தையும் விட்டு அவரைப் பின்சென்றார்கள் என்று நம்முடைய வாக்கியஞ் சொல்லுகிறது (யக).

## படிப்பினை.

இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

கிறிஸ்துவால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

I. க. அவர் தம்முடைய வசனத்தினாலே மனுஷர் இருதயங்களை அசைக்கவுங் குணப்படுத்தவும் வல்லவராயிருக்கிறார். ஏனெனில் ஜனங்கள் பராபரனுடைய வசனத்தைக் கேட்கும்படி அவரை நெருக்கினார்களென்று நம்முடைய வாக்கியஞ் சொல்லுகிறது. எசாயா தீர்க்கதரிசி சொன்ன வார்த்தை அவரில் நிறைவேறிற்று, அதாவது: கர்த்தராகிய பராபரனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். ஏனெனில் சிறுமையான

வர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் காயங் கட்டவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் காவல் நீங்குதலையுங் கூறவும், கர்த்தருடைய பிரியத்தின் வருஷத்தையும், நம்முடைய பராபரன் நீதியைச் சரிக்கட்டும் நாளையுங் கூறவும், துயரப்பட்ட அனைவரையுந் தேற்றரவு பண்ணவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும் அவர் என்னை அனுப்பினார் என்பதாம் (எசா. ௬௧, ௧. ௨).

௨. அவர் எல்லாச் சிருஷ்டிகளின் மேலும் வல்லமையுள்ள தேவனும் கர்த்தருமாயிருக்கிறார். ஏனென்றால் பேதுரு தன்னுடைய சுய பலத்தினாலே மீன்பிடிக்கப் பிரயாசப்பட்டும் ஒன்றுங் கிடைக்கவில்லை. அப்போது கர்த்தரே அவனுக்கு ஏராளமான மீன் கிடைக்கும்படியாகச் செய்தார். சமுத்திரத்தின் மீன்களும் அவருடைய வல்லமைக்குள்ளாயின. ஆடுமாடு முதலானதுகள் எல்லாத்தையும், அத்தோடே கூட வெளியின் மிருகங்களையும், ஆகாசத்துப்பட்சிகளையும், சமுத்திரத்து மச்சங்களையும் கடல்களின் பாதையில் நடமாடுகிறவையும் அவர் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று எழுதியிருக்கிறது (சங். ௮, ௮. ௬).

௩. அவர் மனுஷர் தமக்குச் செய்யும் ஊழியத்துக்கு நற்பலனைக் கொடுப்பார். ஏனெனில் இயேசுநாதர் உட்கார்ந்து போதகம் பண்ணுகிறதற்குப் பேதுரு தன் படவில் இடங்கொடுத்தது அவருக்குச் செய்த அற்ப ஊழியந்தான். அதேனென்றால் இந்தப் படகு முதலானதெல்லாங் கர்த்தருடையது. ஆகிலும் இயேசுநாதர் அவன் செய்த ஊழியத்துக்குப் பலனாக இவ்வளவு ஏராளமான மீன்வேட்டையினால் அவனை ஆசீர்வதித்ததுமல்லாமல், அவன் இனி மீன்பிடிக்கிற செம்படவனாயிராமல், மனுஷரைப் பிடிக்கும் போதகனாகவும் அப்போஸ்தலனாகவும் இருக்கும்படி கட்டளையிட்டார்.

௪. நம்முடைய சகல வேலைகளிலும் நமக்கு ஆசீர்வாதங்களை அருளுகிறவர் இயேசுநாதர்தான். பேதுரு தன் வேலைக்காரரோடு இராமுழுதும் பிரயாசப்பட்டும் ஒரு பிரயோசனமும் அடைந்ததில்லை. ஆனால் இயேசுநாதர் தம்முடைய ஆசீர்வாதத்தை மீன் வேட்டைக்குக் கொடுத்தவுடனே அவன் ஏராளமான மீன்களைப் பிடித்தான். கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியம் அடையப்பண்ணும் (வாக். ௰, ௨௨). அதைப்பற்றிச் சங்கீதக்காரனாகிய தாவீது சொல்லுகிறதாவது: நீங்கள் இருட்டோடே எழுந்து, நேரப்பட வேலையில் தரித்து, வருத்தங்களுள்ள அப்பத்தைச் சாப்பிடுகிறது



விருதா. தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரையை அளிக்கிறார் (சங். ௱௨௭, ௨).

II. சுவிசேஷ வாக்கியத்தில் சொல்லப்பட்ட சனங்களால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

பராபரனுடைய வசனத்தைக் கேட்க நமக்கு ஆசையிருக்க வேண்டும். அந்தச் சனங்கள் பராபரனுடைய வசனத்தைக் கேட்க அதிக ஆசையுள்ளவர்களாயிருந்ததால், பட்டணங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் வந்தார்கள். ஆம், அவர் படவில் ஏறி உட்காரும்படி அவரை நெருக்கத்தக்கதான அவ்வளவு சனம் கூட்டம் கூட்டமாக அவரண்டை வந்தது. நமக்கும் அப்படிப்பட்ட இருதயமும், பராபரனுடைய வசனத்தைக் கேட்க அப்படிப்பட்ட ஆசையும் இருக்க வேண்டும். ஏனெனில் அதினாலே நாம்: எதை விசுவாசிக்கவும், எப்படி கிறிஸ்தமான நடக்கையாய் நடந்து, துன்பங்களைப் பொறுமையாய்ச் சகித்து, பாக்கியமாய் மரிக்கவும் வேண்டுமென்பதைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

III. பேதுருவாலே நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது: நாம் நம்முடைய வேலையிலே பராபரனுடைய ஆசீர்வாதத்தை அடையும்படிக்குச் செய்ய வேண்டியதென்ன.

௧. பராபரன் தம்முடைய ஆசீர்வாதத்தை நம்முடைய வேலைகளுக்குக் கொடுக்கும்படிக்கு அவருடைய வசனத்தைச் சிநேகித்து, அதினாலே நாம் பராபரனாகிய கர்த்தரை அறிந்து, கிறிஸ்தமான நடக்கையாய் நடக்க வேண்டியதெப்படியென்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படியே பேதுரு நம்முடைய வாக்கியத்தின்படியே செய்தான். ஏனென்றால் அவன் ஆசீர்வதிக்கப்பட்ட அந்த மீன்வேட்டைக்கு, ஆழத்திலே தள்ளிக்கொண்டு போவதற்கு முன்னே கிறிஸ்துநாதருடைய பிரசங்கத்தைக் கேட்க வேண்டியவனாயிருந்தான். இந்தப் பிரகாரமாக எல்லாக் கிறிஸ்தவர்களும் தங்கள் ஆத்துமா பராபரனுடைய வசனத்தினாலே நித்திய சீவனுக்கென்று காப்பாற்றப்படும்படிக்கு முந்த முந்த அதுக்காகக் கவலைப்பட்டு, பிறகு சரீரப்பிழைப்புக்குத் தேவையானவைகளுக்காக வேலைசெய்து உழைக்க வேண்டும். அதைப்பற்றி கிறிஸ்துநாதர்: முந்தப் பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கள், அப்போது இதுகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று புத்தி சொல்லுகிறார் (மத். ௬, ௩௩).

௨. நாம் நம்முடைய வேலையில் ஆசீர்வாதம் அடையும்படிக்கு இயேசுவின் நாமத்திலே அதைத் துவக்க வேண்

டும். அதாவது, நாம் சுறுசுறுப்பாய்ச் செபம் பண்ணி, பராபரன் தம்முடைய ஆசீர்வாதத்தை நமக்குக் கொடுக்கும் படியாக இயேசுவின் நாமத்திலே வேண்டிக்கொள்ள வேண்டும். பேதுரு தன் பேரிலும் தன் பெலத்தின் பேரிலும் நம்பிக்கை வைத்து, இராமுழுதும் பிரயாசப்பட்டும், ஒன்றும் பிடித்ததில்லை. உம்முடைய வார்த்தையின்படியோ வலையைத் தாழவிடுவேன் என்று சொல்லி, கிறிஸ்துவின் உத்தரவின்படியே தன் வலையைத் தாழவிட்டபோது, ஏராளமான மீன்களைப்பிடித்தான். ஏனென்றால் சகல ஆசீர்வாதமும் நம்முடைய வேலையினாலும் பிரயாசத்தினாலுமல்ல, பராபரனாலே வரும்.

௩. நாம் பராபரனுடைய ஆசீர்வாதம் அடைய விரும்பினால் சுறுசுறுப்பாய் வேலைசெய்வது அவசியம். ஏனென்றால் இயேசுநாதர் பேதுருவின் பிரயாசத்தினால் அல்லாமல் அவருடைய வல்லமையுள்ள வார்த்தையினால் அவனுடைய வலையிலும் படவிலும் மீன்களை வரப்பண்ணக் கூடியவராயிருந்தும், அவர் அப்படியே செய்யாமல், அவன் பிரயாசத்தோடு வேலைசெய்யவேண்டுமென்று கற்பித்து: ஆழத்திலே தள்ளிக் கொண்டுபோய் மீன் வேட்டைக்கு உங்கள் வலைகளைத் தாழவிடுங்கள் என்றார். இதுதான் கர்த்தர் ஏற்படுத்தின ஒழுங்கு. ஏனெனில் நீ பூமிக்குள் திரும்புமட்டும் உன்முகத்தின் வேர்வையால் அப்பம் புசிக்கக்கடவாய் என்று பராபரன் ஆதாமுக்குச் சொன்னார் (௧ மோ. ௩, ௰௯). பவுல் அப்போஸ்தலனும்: ஒருத்தன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால், அவன் சாப்பிடவும் வேண்டாமென்கிறதை நாங்கள் உங்களிடத்திலிருக்கும்போது உங்களுக்குக் கற்பித்தும் இருக்கிறோமே என்கிறான் (௨ தெசலோ. ௩, ௰).

௪. நாம் பராபரனுடைய ஆசீர்வாதத்தை அடைய வேண்டுமானால், அவருடைய வேளைக்குப் பொறுமையுடனே காத்திருக்கவேண்டும். அவருடைய ஆசீர்வாதம் உடனே வரவில்லையென்று பொறுமையற்றவர்களாயிருக்கக் கூடாது. பேதுரு இராமுழுதும் பிரயாசப்பட்டு ஒன்றும் பிடியாதிருந்தும்: அவன் முறுமுறுத்தான், சபித்தான், தன் வேலையை விட்டுவிட்டான் என்ற இவைபோன்ற எதுவும் அவனைப் பற்றி இங்கே சொல்லப்படவில்லை. கர்த்தர் தன்னை மறுபடியும் மீன் பிடிக்க அழைக்குமட்டும் அவன் காத்திருந்து, வலையைத் தாழவிடு என்று சொன்னபோது, அவருக்குக் கீழ்ப்படிந்து உடனே அப்படிச் செய்தான். பராபரன் தமது ஆசீர்வாதத்தை நமக்குக் கொடுக்கத் தாமதஞ் செய்தாலும், எல்லாக் கிறிஸ்தவர்களும் அவருக்குக் காத்திருக்க வேண்டும்.



அவர் தாமதித்தால், அவருக்குக் காத்திரு; ஏனெனில் வரவே வருவார், அவர் பிந்தியிருப்பதில்லை (ஆபகூக் ௨, ௩).

௫. பராபரனுடைய ஆசீர்வாதத்தை அடைய விரும்புகிறவன் பொருமையுள்ளவனாகவாவது பிறத்தியான் பேரில் இரக்கமற்றவனாகவாவது இருக்கக் கூடாது. கர்த்தருடைய ஆசீர்வாதத்தினாலே பேதுருவுக்கு அவ்வளவு பெரிய மீன் வேட்டை கிடைத்தபோது, அவன் இரண்டு படவுகளையும் நிரப்பித் தன் கூட்டாளிகளுக்குங் கூடப் பங்குகொடுத்தான். அப்படியே உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் செய்யவேண்டும். அவர்கள் தனக்கானதுகளை மாத்திரந் தேடாமல், பிறத்தியானுக்கானதுகளைத் தேடி, பராபரன் தங்களுக்குக் கொடுத்த ஆசீர்வாதத்திலிருந்து பிறத்தியானுக்கும் பங்கு கொடுக்க வேண்டும். ஏனெனில் ஒருவன் பிறத்தியானுக்கு என்ன செய்கிறானோ, அதைப் பராபரன் அவனுக்குச் செய்வார். அதைப்பற்றிப் போன ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷவாக்கியத்திலே நமது இரட்சகர்: எந்த அளவால் அளக்கிறீர்களோ, அதினால் உங்களுக்குத் திரும்ப அளக்கப்படும் என்றார் (லூக். ௬, ௩௮).

௬. நாம் பராபரனுடைய ஆசீர்வாதத்தை அடைய விரும்பினால் அவருடைய உபகாரங்களை மனத்தாழ்மையோடு அறிக்கையிட்டு அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தவேண்டும். அப்படியே பேதுரு செய்தான். அவன் இயேசுவின் முழங்கால்களண்டையில் விழுந்து, தன்னுடைய பெரிய அபாத்திரத்தன்மையை அறிக்கையிட்டான். பராபரன் தம்முடைய ஆசீர்வாதத்தை நமக்குக் கொடுக்கும்போதெல்லாம் நாமும் அப்படியே செய்து, நம்மைப் பராபரனாகிய கர்த்தருக்குமுன்பாகத் தாழ்த்தி, அவருடைய சகல கிருபைகளுக்கும் நம்மை அபாத்திரராக எண்ணி: தேவரீர் உம்முடைய அடியானுக்குச் செய்துவந்த எல்லாக் கிருபைக்கும் எல்லா உண்மைக்கும் நான் எம்மாத்திரம் என்று சொல்வோமாக (௧ மோ. ௩௨, ௰). மேலும் நாம் நம்முடைய பராபரனாகிய கர்த்தருக்கு அவருடைய ஆசீர்வாதத்துக்காக ஸ்தோத்திரஞ் செலுத்த வேண்டுமென்று தாவீது சங்கீதக்காரன் சொல்லுகிறான். கர்த்தரைத் துதிக்கிறதும், உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுகிறதும், காலமே உம்முடைய கிருபையையும் இராமாறு உம்முடைய உண்மையையும் அறிவிக்கிறதும் நலமாயிருக்கும் (சங். ௯௨, ௩.௪). இஸ்தோத்திரத்தைப் பலியிடுகிறவன் நம்மை மகிமைப்படுத்துகிறான், இப்படி வழியை ஆயத்தப்படுத்துகிறவனுக்குப் பராபரனுடைய இரட்சிப்பைக் காண்பிப்போம் (சங். ௫௰, ௨௩).

௭. நாம் பராபரனுடைய ஆசீர்வாதத்தைச் சரியாய்க் கையாட வேண்டுமானால், பூமிக்கடுத்தவைகளைச் சிநேகியாமல், அவைகளைக் கர்த்தருடைய கட்டளையின்படியே விட்டுவிட ஆயத்தமாயிருக்க வேண்டும். பேதுருவுக்குப் பராபரனுடைய ஆசீர்வாதத்தினால் ஏராளமான மீன் கிடைத்திருந்தும், இயேசுநாதர் அவனைத் தம்முடைய ஊழியத்துக்கு அழைத்தபோது, எல்லாத்தையும் விட்டுவிட்டான். அதைக் குறித்துச் சங்கீதக்காரனாகிய தாவீது: ஆஸ்தி வளர்ந்தால் இருதயத்தை அதின்மேல் வைககாதேயுங்களென்று சொல்லுகிறான் (சங். ௬௨, ௰௧). மேலும் பராபரன் நமக்குண்டான பூமிக்கடுத்த நன்மைகளை எடுத்துக்கொண்டால், நாம் யோபோடு: கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக் கடவதென்று சொல்ல வேண்டும் (யோபு ௧, ௨௧).

௮. பராபரனாகிய கர்த்தர் நம்மை இந்த லோகத்திலிருந்து அழைக்கும்போது, நாம் சகலத்தையும் விட்டுவிட்டு, நமது அருமைப் பராபரனண்டைக்குப்போக ஆயத்தமாயிருக்க வேண்டும். பிரிந்துபோய் கிறிஸ்துவுடனே இருக்க எனக்கு ஆசையாயிருக்கிறது, ஏனெனில் அது மெத்தவும் நல்லது (பிலிப். ௧, ௨௩).

இந்த நம்முடைய அருமை இரட்சகருக்குப் பரம பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் என்றென்றைக்கும் கனமும் மகிமையுந் துதியும் உண்டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௬-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௱௮௨.)

### சுவி. மத். ௫. ௨௰—௨௬.

அதேனென்றால் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் நீதி வேதபாரகர் பரிசேயர் என்றவர்களின் நீதியைப் பார்க்க அதிகப்பட்டிருந்தாலொழிய, வானராச்சியத்துக்குள் பிரவேசிக்கமாட்டீர்கள். 21 கொலை செய்யாயாக என்பதும், ஆராகிலுங் கொலை செய்தால் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்குச் சொல்லப்பட்டது என்று கேட்டீர்கள். 22 ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் எல்லாம் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். ஆராகிலுந் தன் சகோதரனைச் சீ என்றால், ஆலோசனைச்சபைத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். ஆராகிலும் மதிகேடனே என்றால், எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான். 23 ஆகையால் நீ பீடத்தண்டை உன் காணிக்கையைச் செலுத்தவந்து, உன்



சகோதரனுக்கு உன்பேரில் குறையுண்டென்று அங்கே நினைவுகூர்ந்தாயாகில், 24 அவ்விடத்திலே பீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், உன் சகோதரனோடே முந்த ஒப்புரவாகி, பிற்பாடு வந்து உன் காணிக்கையைச் செலுத்து. 25 எதிரியானவன் உன்னை நியாயாதிபதிக்கு ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னை ஊழியக்காரனுக்கு ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலுமிருக்க, நீ சீக்கிரமாக உன் எதிரியோடே இன்னம் வழியில் இருக்கக்கொள்ள, அவனுடனே நல்மனம் பொருந்து. 26 மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், நீ கடைசிக் காசைக் கொடுத்துத்தீரும் மட்டாக அவ்விடத்திலிருந்து புறப்பட மாட்டாய் என்றார்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தை எத்தனை பங்காகப் பிரிக்கலாம்.

இரண்டு பங்காகப் பிரிக்கலாம்.

### முதலாம் பங்கு.

2. முதலாம் பங்கு எதைப்பற்றியது.

ஒரு கிறிஸ்தவன் இரட்சிக்கப்படுவதற்கு அவனுக்குத் தேவையான மெய்யான நீதியைப்பற்றியது.

3. அந்த நீதியைப்பற்றி இந்த வாக்கியத்திலே பேசுகிறதார்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர். ஏனென்றால் அவர் தம்முடைய சீஷர்களுக்கும், வான இராச்சியம் என்ற நித்திய சீவனை அடைய விரும்புகிற விசுவாசமுள்ள யாவருக்கும் சொல்லுகிறதாவது: உங்கள் நீதி வேதபாரகர் பரிசேயர் என்றவர்களின் நீதியைப்பார்க்க அதிகப்பட்டிருந்தால் ஒழிய வான ராச்சியத்துக்குள்பிரவேசிக்கமாட்டீர்கள் (௨௰).

4. மெய்யான கிறிஸ்தவர்களுடைய நீதியைப்பற்றி நம்முடைய இரட்சகர் என்ன சொல்லுகிறார்.

அது வேதபாரகர் பரிசேயருடைய நீதியைப் பார்க்க அதிகப்பட்டிருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்.

5. வேதபாரகர் பரிசேயருடைய நீதி எப்படிப்பட்டதாயிருந்தது.

௧. அது நியாயப்பிரமாணத்தின் புறம்பான கிரியைகளில் மாத்திரம் அடங்கியிருக்கிறது. ஏனெனில் பரிசேயர் என்ன நினைத்தார்கள் என்றால், கொலை, விபசாரம், களவு முதலிய புறம்பான அக்கிரமங்களைச் செய்யாதபடிக்குத் தங்களைக் காத்துக்கொண்டால், தாங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாகப் பூரண நீதியுள்ளவர்களென்று பாவித்துக் கொண்டார்கள்.

௨. அது தாங்களே தங்கள் இஷ்டப்படி தெரிந்துகொண்ட கிரியைகளில் அடங்கியிருந்தது. ஏனெனில் பரிசேயர் தங்கள் நடக்கைக்கு நூலாயிருக்கும் அநேக பிரமாணங்களைத் தங்கள் இஷ்டப்படிச் செய்திருந்தார்கள். திருஷ்டாந்தமாக, அவர்கள் வெகுவாய் உபவாசம்பண்ணி, தெருக்களில் மற்றவர்கள் காணும்படியாகச் செபம் பண்ணினார்கள். இவை முதலான கிரியைகளினால் தாங்கள் நீதியுள்ளவர்களாகி இரட்சிக்கப்படுவோமென்று நினைத்தார்கள்.

௩. அது சுயமேன்மை பாராட்டலிலும் வேஷத்திலும் அடங்கியிருந்தது. அவர்கள் இந்தக் கிரியைகளை என்ன நோக்கத்திற்கென்று செய்தார்களென்றால், மற்ற மனுஷர் யாவரும் அவர்களைக் கண்டு, பரிசேயர் பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்களென்று எண்ணி, அவர்களைக் கனம் பண்ணும்படியாகத் தான்.

6. அப்படிப்பட்ட நீதி நல்லதல்லவா.

அல்ல. ஏனெனில் நியாயப்பிரமாணம் புறம்பான கிரியைகளை மாத்திரமல்ல, மனுஷன் யாதொரு பாவத்திற்கும் சம்மதிக்காதபடிக்கு இருதயத்தின் உள்ளான கீழ்ப்படிதலையுங் கேட்கிறது. நியாயப்பிரமாணஞ் சொல்லுகிறதென்னவென்றால்: உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தினாலும், உன் முழு ஆத்துமாவினாலும், உன் முழு வினைவினாலும் சிநேகிப்பாயாக. இது முதலாம் பெரிய கற்பனையாயிருக்கிறது. அத்தோடொத்த இரண்டாங் கற்பனையோ உனக்கடுத்தவனை உன்னைப்போல் சிநேகிப்பாயாக என்பது (மத். ௨௨, ௩௭-௩௯). மேலும் மனுஷர் தங்கள் இஷ்டப்படியே தெரிந்துகொள்ளுகிற கிரியைகள் மெய்யான நீதியல்ல. அதைப்பற்றிப் பராபரன்: மனுஷரின் கற்பனைகளாகிய போதகங்களைப் போதிக்கிறவர்களாய் விருதாவிலே நமக்கு ஆராதனை செய்கிறார்கள் என்கிறார் (மத். ௰௫, ௯). பராபரனுக்கு முன்பாக நீதியாயிருக்க வேண்டுமானால், நமக்குப் பராபரனுடைய வசனத்துக்கொத்த நீதி தேவையாம். இதுவுமல்லாமல் நம்முடைய கிரியைகளின்மேல் மேன்மை பாராட்டுகிறது மெய்யான நீதியல்ல. ஏனென்றால் நம்முடைய கிரியைகளெல்லாம் குறைவுள்ளவைகளாயிருக்கிறபடியால்: நாங்கள் அனைவருந் தீட்டானவைகளைப்போலிருக்கிறோம், எங்களுடைய நீதிகளெல்லாந் தீட்டான வஸ்திரத்தைப்போலவும் இருக்கிறது என்று சொல்ல வேண்டியது (எசா. ௬௪, ௬). ஆதலால் நம்முடைய இரட்சகர் பரிசேயருடைய இந்த நீதியை முழுதுந் தள்ளிப்போட்டு, நாம் இரட்சிக்கப்படும்படியாக வேறொரு நீதி தேவை என்று சொல்லுகிறார்.



7. நாம் பராபரனுக்கு முன் நீதிமான்களாக்கப்பட்டு இரட்சிக்கப்படும்படியாக நமக்குத் தேவையான நீதி என்ன.

விசுவாசத்தின் நீதிதான். ஏனென்றால் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் பராபரனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுகிறான். அதைப்பற்றிச் சத்தியவேதம் சொல்லுகிறதாவது: விசுவாசிக்கிறவனுக்கெல்லாம் நீதியுண்டாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறார் (ரோ. ௰, ௪). கிறிஸ்து பராபரனாலே நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தப்படுத்தலும் மீட்புமாக்கப்பட்டார் (௧ கொரி. ௧, ௩௰).

8. ஆனால் ஒரு கிறிஸ்தவன் தன் நடக்கையிலும் நீதியுள்ளவனாயிருக்க வேண்டியதில்லையா.

அவன் தன் நடக்கையிலும் நீதியுள்ளவனாயிருக்க வேண்டியதுதான். ஆம், ஒவ்வொரு கிறிஸ்தவனும் நீதியைத் தேடி, தான் நீதியும் பரிசுத்தமுமான நடக்கையாய் நடக்கப்பிரயாசப்படவேண்டும். இந்த நம்முடைய நீதியோ எப்போதுங் குறைவுள்ளதாயிருக்கும். ஆதலால் தெய்வபத்தியுள்ள யாவரும் முறையிட்டு: நன்மை செய்யவேணுமென்பது என்னுடனே இருக்கிறது, ஆனால் அதை நடப்பிக்குதலைக் காணேன் என்று சொல்லுகிறார்கள் (ரோ. ௭, ௰௮). அதினிமித்தம் ஒரு கிறிஸ்தவன் ஒருபோதும் இந்தத் தன் புறம்பான நீதியின் பேரில் நம்பிக்கைவைக்காமல், இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவரைப்பற்றும் விசுவாசத்தினாலே இரட்சிப்பைத் தேடி, பவுல் அப்போஸ்தலனோடு: இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே ஒழிய, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளால் மனிதன் நீதிமானாகிறதில்லை என்று சொல்லவேண்டியது (கலா. ௨, ௰௬).

## படிப்பினை.

9. சுவிசேஷ வாக்கியத்தின் இந்த முதலாம் பங்கினாலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. பரிசேயரால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

நாம் நமது இஷ்டப்படி புறம்பான கிரியைகளிலும் சுயமேன்மை பாராட்டுதலிலும் புறம்பான வேஷத்திலும் மாத்திரம் அடங்கியிருக்கிற கள்ள நீதிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஏனென்றால் அப்படிப்பட்ட நீதி பராபரனுக்கு அருவருப்பாயிருக்கிறது.

II. ஏஷர்களால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. நாம் நம்முடைய நீதியை இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலே மாத்திரந் தேட வேண்டும். ஏனென்

ருல் இந்த நீதியினாலே நாம் பராபரனுடைய இராச்சியத்துக்குள் பிரவேசிக்கக் கூடும். இந்த நீதியைக் குறித்து [illegible] இயேசுநாதர்: உங்கள் நீதி வேதபாரகர், பரிசேயர் என்பவர்களின் நீதியைப் பார்க்க அதிகப்பட்டிருந்தாலொழிய வானராச்சியத்துக்குள் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று சொல்லுகிறார். இந்த நீதியைப்பற்றி அப்போஸ்தலனாகிய பவுல்: மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல், விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம் என்கிறான் (ரோ. ங, உஅ).

உ. நம்முடைய புறம்பான நடக்கையின் நீதியைப் பற்றியும் நாம் கவலைப்படவேண்டும். ஏனெனில் மெய்யான விசுவாசம் எங்கேயோ, அங்கே பரிசுத்த நடக்கையும் உண்டு. இந்த நம்முடைய பரிசுத்த நடக்கையினாலே நாம் நீதிமான்களாகாதிருந்தும், அது விசுவாசத்தினால் உண்டான மெய்யான நீதிக்கு அத்தாட்சியாம். சகல நல்ல ஈவும் குறையற்ற சகல வரமும் உயர இருந்து உண்டாகி, ஒரு மாறுதலாகிலும் ஒரு வேற்றுமையின் நிழலாகிலும் இல்லாத வெளிச்சங்களுடைய பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது.

### இரண்டாம் பங்கு.

10. சுவிசேஷ வாக்கியத்தின் இந்த இரண்டாம் பங்கிலே என்ன அடங்கியிருக்கிறது.

ஐந்தாம் கற்பனையின் விஸ்தரிப்புத் தான்.

11. ஐந்தாங் கற்பனையை விஸ்தரித்தது யார்.

நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துநாதர். எப்படியெனில், நாம் மெய்யான உயிருள்ள நீதியை அடையும்படிக்குப் புறம்பான கிரியைகளினாலே மாத்திரம் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறதும், அப்படியே பராபரனாகிய கர்த்தருக்கு ஊழியஞ் செய்கிறதும் போதாது என்றும், அதற்கு இருதயத்தின் உள்ளான கீழ்ப்படிதலே தேவை என்றும் அவர் காண்பிக்கிறார். அப்படியே இயேசுநாதர் பராபரனுடைய நியாயப்பிரமாணத்தின் ஐந்தாங் கற்பனையை விஸ்தரித்து, மனுஷன் தனக்கடுத்தவனை தன் கையினால் கொன்று போடுகிறது மாத்திரமல்ல, அவனைத் தன் வாயினால் தூஷணித்து, அவன் பேரில் பின்புறணி பேசுகிறதினாலும், தன் இருதயத்தில் அவன் பேரில் கோபமாயிருந்து பகைக்கிறதினாலும் ஐந்தாங் கற்பனையை மீறுகிறானென்று காட்டுகிறார். ஏனெனில், நம்முடைய வாக்கியத்திலே கர்த்தர் சொல்லுகிறதாவது: கொலை செய்யாயாக என்பதும், யாராகிலுங் கொலை செய்தால், நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்ப



தும் பூர்வத்தாருக்குச் சொல்லப்பட்டதென்று கேட்டீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் எல்லாம் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் (உக. உஉ).

12. பூர்வத்தாருக்குச் சொல்லப்பட்டது என்கிற வார்த்தையினாலே நம்முடைய இரட்சகர் எதைக் குறிக்கிறார்.

அவர் அதினால் பரிசேயர் ஐந்தாங் கற்பனைக்குக் கொடுத்த விஸ்தரிப்பைக் குறிக்கிறார். ஏனெனில் அவர்கள் பராபரனுடைய நியாயப்பிரமாணத்தைக் கர்த்தருடைய வசனத்தின்படி யல்ல, பிதாக்களுடைய சட்டத்தின் படியே, அதாவது பூர்வத்தார் சொன்னதின்படியே விஸ்தரித்தார்கள்.

13. பரிசேயர் ஐந்தாங் கற்பனையை எப்படி விஸ்தரித்தார்கள்.

எவன் தன் பிறத்தியானைக் கொலை செய்தானோ, அவன் மாத்திரம் இக்கற்பனையை மீறினான், அவன் முதலிடத்திலே நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறானென்று சொன்னார்கள்.

14. இந்த விஸ்தரிப்புச் சரியாயிருக்கிறதா.

இல்லை. ஏனென்றால் நம்முடைய இரட்சகர் தன் சகோதரன் பேரில் கோபமாயிருக்கிறவன் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாயிக்கிறான் என்றும், தன் சகோதரனைச் சீ என்கிறவன், அதாவது தூஷணவார்த்தைகளினால் அசட்டைபண்ணுகிறவன் ஆலோசனைச் சபைத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், அதாவது தாழ்ந்த நியாயாதிபதியல்ல, எருசலேமிலுள்ள பெரிய ஆலோசனைச்சங்கமாத்திரம் விசாரிக்கக் கூடிய பாவத்தைச் செய்தான் என்றும், தன் சகோதரனைத் திட்டி, இன்னம் அதிகத் தூஷணமான வார்த்தைகளினாலே அவனை நிந்தித்து, மதிகேடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான் என்றும் சொல்லுகிறார்.

15. ஒரு கிறிஸ்தவன் தன் பிறத்தியான் பேரில் கோபமாயிருந்து, அவன் பேரில் நிந்தையான வார்த்தைகளைச் சொல்லக் கூடாதவனாயிருந்தால், கிறிஸ்துநாதர் தாமே மாயக்காரப் பரிசேயர் பேரில் கோபமாகி, அவர்கள் பேரில்: உங்களுக்கு ஐயோ என்று கூறுவானேன்.

பரிசுத்தமுள்ள கோபத்துக்கும் பாவமுள்ள கோபத்துக்கும் வித்தியாசம் உண்டு. ஒரு மனுஷன் தன் உத்தியோகத்திலே குணப்படாதவர்களுடைய பாவங்களுக்காகக் கோபமாயிருந்து, அவர்களை அவைகளினிமித்தங் கடிந்துகொண்டு தண்டித்தால், அது நியாயமும் நலமுமான கோபமாம். அப்படிப்பட்ட கோபம் கிறிஸ்துவுக்கு இருந்தது. அவர் உண்

மையுள்ள போதகராகப் பரிசேயருடைய மனக்கடினத்தின் பேரில் கோபமாயிருந்தார். ஆனால் ஒரு மனுஷன் பிறத்தியான் பேரில் அதிகாரமில்லாதவனாயிருந்தும், தன் இருதயத்திலே அவன் பேரில் கோபம் நிறைந்தவனாயிருந்து அவனைப் பகைத்தால், அது பாவமான கோபமாம். அப்படிப்பட்ட கோபமும் பகையும் இந்தக் கற்பனையிலே விலக்கப்பட்டிருக்கிறது.

16. அப்போது மற்ற மனுஷர் நம்மைக் கோபப்படுத்தின நிமித்தம் நமது இருதயங்களில் கோபம் இருக்குமேயானால், நாம் என்ன செய்ய வேண்டும்.

நாம் தாமதப்படாமல் அவர்களோடு ஒப்புரவாக வேண்டும்.

17. இந்த ஒப்புரவாகுதலைத் துவக்க வேண்டியதார்.

மற்றவர்களைக் கோபப்படுத்தினவர்கள் தான். அவர்கள் கோபப்படுத்தின பிறத்தியானிடத்தில் போய், தன் குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்.

18. அவன் அதை எப்போது செய்ய வேண்டும்.

அவன் தப்பிதஞ் செய்தவுடனே, விசேஷமாய், அவன் செபம் அல்லது கர்த்தருடைய இராப்போசன மூலமாய்ப் பராபரனைச் சேருமுன்னே. அப்படியே பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்த இஸ்ரவேலர் தங்கள் காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்துகிறதற்கு முந்திச் செய்யவேண்டியவர்களாயிருந்தார்கள். ஏனெனில் ஒப்புரவாக்கப்படாத கோபமுள்ள இருதயத்தோடு பராபரனாகிய கர்த்தரண்டைக்கு வருகிறவன் அவருக்கு ஏற்றவனல்ல. ஆதலால் கிறிஸ்துநாதர்; நீ பீடத்தண்டை உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் சகோதரனுக்கு உன் பேரில் குறையுண்டென்று அங்கே நினைவுகூர்ந்தாயாகில், அவ்விடத்திலே பீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப்போய், உன் சகோதரனோடே முந்த ஒப்புரவாகிப் பிற்பாடு வந்து, உன் காணிக்கையைச் செலுத்து என்று சொல்லுகிறார்.

19. அநியாயத்தைச் சகித்தவன் செய்யவேண்டியதென்ன.

அவன் பிறத்தியான் தனக்குச் செய்த பொல்லாப்பை எல்லாம் மன்னிக்க வேண்டும். அப்படியே கிறிஸ்துநாதர்: நீ சீக்கிரமாக உன் எதிரியோடு இன்னும் வழியிலிருக்கக் கொள்ள, அதாவது இச்சீவனில் பிழைத்திருக்கிறவரையில் அவனுடனே நல்மனம் பொருந்து என்று கற்பிக்கிறார்.

20. ஒப்புரவாக மாட்டேன் என்று சொல்லுகிறவர்களுக்கு என்ன சம்பவிக்கும்.



அவர்கள் என்றென்றைக்கும் விடுதலையடையாமல் சிறைச்சாலையிலே வைக்கப்படுவார்கள். ஏனென்றால் கிறிஸ்துநாதர் நம்முடைய வாக்கியத்தில் சொல்லுகிறதாவது: எதிரியானவன் உன்னை நியாயாதிபதிக்கு ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னை ஊழியக்காரனுக்கு ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்க, நீ சீக்கிரமாக உன் எதிரியோடே இன்னம் வழியிலிருக்கக்கொள்ள அவனுடனே நல்மனம் பொருந்து. மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், நீ கடைசிக் காசைக் கொடுத்துத் தீருமட்டாக அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்றார் (௨௫. ௨௬).

21. இங்கே சொல்லப்பட்ட எதிரியானவன் ஆர்.

நமக்குப் பொல்லாப்புச் செய்த மனுஷன் தான்.

22. நியாயாதிபதி யார்.

சர்வ லோகத்தின் நியாயாதிபதியும் கர்த்தருமாகிய பராபரன் (௧மோ. ௰௮, ௨௫). விசேஷமாய்ச் சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்க வரும் இயேசுநாதர் தான்.

23. ஊழியக்காரன் ஆர்.

பொல்லாத சாத்தான்தான். அவன் பராபரனுடைய உத்தரவின்படியே அவருடைய ஊழியக்காரனாகக் குணப்படாதவர்களை, விசேஷமாய் ஒப்புரவாக்கப்படாதவர்களைத் துன்பப்படுத்துவான்.

24. சிறைச்சாலையாவதென்ன.

நரகந்தான். அதிலிருந்து குணப்படாதவர்களும் ஒப்புரவாக்கப்படாதவர்களும் அவர்கள் கடைசிக் காசைக்கொடுத்துத் தீருமட்டாகப் புறப்படமாட்டார்கள்.

25. கடைசிக் காசு எப்போது கொடுத்துத்தீரும்.

அது ஒருக்காலும் கொடுத்துத் தீரமாட்டாது. ஆதலால் ஒப்புரவாக்கப்படாத மனுஷன் என்றென்றைக்கும் நரகச் சிறைச்சாலையிலிருக்க வேண்டுமாம்.

## படிப்பினை.

26. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கினால் நாம் கற்றுக்கொள்ளுகிறதென்ன.

௧. பராபரன் நம்மிடத்தில் புறம்பான கீழ்ப்படிதலை மாத்திரமல்ல, உள்ளான கீழ்ப்படிதலையுங் கேட்கிறார் என்றும், நாம் பொல்லாத கிரியைகளுக்கு மாத்திரமல்ல, பொல்லாத வார்த்தைகளுக்கும் நினைவுகளுக்கும் எச்சரிக்கையா

யிருக்க வேண்டுமென்றுங் கற்றுக்கொள்ளுகிறோம். அது கிறிஸ்துநாதர் ஐந்தாங் கற்பனைக்குக் கொடுத்த விஸ்தரிப்பினால் விளங்கும்.

உ. பிறத்தியான் பேரில் கோபமாயிருத்தல் பெரிய பாவம். ஆதலால் நாம் அதற்கு அதிக எச்சரிக்கையாயிருப்போமாக. ஏனெனில் தன் சகோதரன் பேரில் கோபமாயிருக்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பானென்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார். மேலும் இயேசுநாதர், ஒப்பரவாக்கப்படாத கோபமுள்ள மனுஷன் தன் பராபரனாகிய கர்த்தருக்கு உண்மையுள்ள இருதயத்தோடு ஊழியஞ் செய்யக் கூடாதென்றும், பராபரன் அப்படிப்பட்ட மனுஷனுடைய காணிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் அவனை நரகத்திலே தள்ளுகிறார் என்றுங் காட்டுகிறார்.

ங. நாம் பிறத்தியானைத் தூஷணிக்காதபடிக்கும் கடினமான வார்த்தையினால் அவனை விசனப்படுத்தாதபடிக்கும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஏனென்றால் அப்படிச் செய்கிறவன் ஆலோசனைச் சபைத்தீர்ப்புக்கு, அதாவது நரக அக்கினிக்கு ஏதுவாயிருப்பானென்று நமது இரட்சகர் சொல்லுகிறார். ஆதலால் நமது சகோதரன் நமக்கு விரோதமாகத் தப்பிதஞ் செய்தால், பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறபடியே அவனை மெத்தனவின் ஆவியாலே சீர்பொருந்தப் பண்ண வேண்டும் (கலா. சு, க).

ச. நாம் பிறத்தியானோடு ஒப்பரவாகி, நமக்குப் பொல்லாப்புச் செய்தவர்களுக்குங் கூட மன்னிக்க வேண்டும். அப்படிப்பட்ட குணத்தைக் கிறிஸ்துநாதர் நம்மிடத்தில் கேட்டு: மனுஷருக்கு அவர்கள் தப்பிதங்களை மன்னியாதே போனீர்களேயாகில், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் என்றார் (மத். சு, யரு). பவுல் அப்போஸ்தலன் புத்தி சொல்லி ஏவி எழுப்புகிறதின்படியே, ஒரு கிறிஸ்தவன் சூரியனைத் தன் கோபத்தின்மேல் ஒருபோதும் அஸ்தமிக்கவொட்டாமல், அந்த நாளிலேதானே பிறத்தியானோடு ஒப்பரவாக வேண்டும். நீங்கள் சினம் அடைந்தால், பாவஞ் செய்யாதிருங்கள், உங்கள் எரிச்சலின்மேல் சூரியனை அஸ்தமிக்க வொட்டாமலும் இருங்கள் (எபே. ச, உசு).

27. அப்படிப்பட்ட சிநேகத்துக்கும் சமாதானத்துக்கும் நம்மை ஏவி எழுப்பக்கூடியவரார்.

பரிசுத்த ஆவியானவர்தான். ஆதலால் நாம் அவரை நோக்கி, அவர் அப்படிப்பட்ட சிநேகமுள்ள இருதயத்தை நமக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுச் சொல்ல வேண்டியதென்னவென்றால்:



அன்பான ஆவிநேசத்தால்
நாங்கள் ஒன்றுக்கொன்று உள்ளநாள்
ஏக சிந்தையாக இருந்தெல்லாரும்
கிறிஸ்துக்குள் ஒன்றாயிருக்கும் அன்பைத்தாரும்,
தேவாவியே (ஞானப்பாட்டு அச, ங).

பரிசுத்த ஆவியானவராகிய இவருக்குப் பிதாவோடும் குமாரனோடும் என்றென்றைக்கும் துதியும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக, ஆமென்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின எ-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு உள.)

சுவி. மாற்கு அ, க—கூ.

அந்நாட்களிலே திரள்கும்பிருந்து அவர்களுக்குப் புசிக்க ஒன்றும் இல்லாதபோது, இயேசு தம்முடைய சீஷரைச் சேரவழைத்து, அவர்களுடனே: 2 கும்பின்மேல் மனதுருகுகிறேன்; ஏனெனில் அவர்கள் இப்போது மூன்று நாளாய் என்னண்டை தரித்து, புசிக்க ஒன்றும் இல்லாதிருக்கிறார்கள். 3 நான் அவர்களைப் பட்டினியாக அவர்கள் வீட்டுக்கு அனுப்பினால் வழியிலே தொய்ந்துபோவார்கள்; ஏனென்றால் அவர்களில் சிலர் தூரத்திலேயிருந்து வந்தார்கள் என்றார். 4 அவருடைய சீஷர் அவருக்குப் பிரத்தியுத்தரமாக: இவர்களை ஒருவன் இங்கே வனாந்தரத்தில் அப்பங்களினாலே திருப்தி பண்ண எங்கே இருந்து வரும் என்றார்கள். 5 அவர்களை: உங்களுக்கு எத்தனை அப்பங்கள் உண்டென்று கேட்டார்; அவர்கள்: ஏழு என்றார்கள். 6 அப்போது அவர் சனம் தரையிலே பந்தியிருக்கக் கட்டளையிட்டு, ஏழப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, பிட்டு, அவர்கள் முன்னே வைக்கத் தம்முடைய சீஷருக்குக் கொடுத்தார். அவர்கள் சனத்தின் முன்னே வைத்தார்கள். 7 கொஞ்சஞ் சிறு மீன்கள் அவர்களுக்கு உண்டாயிருந்தது. அவர் ஸ்தோத்திரம் பண்ணி, அதுகளையும் அவர்கள் முன்னே வைக்கச் சொன்னார். 8 ஆனால் அவர்கள் புசித்து, திருப்தியடைந்து, மீந்த துணிக்கைகளை ஏழுகூடை எடுத்தார்கள். 9 புசித்தவர்களோவெனில் ஏறக்குறைய நாலாயிரம் பேராயிருந்தார்கள். அவர் இவர்களை அனுப்பி விட்டார்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியம் எதைப் பற்றியது.

கிறிஸ்துநாதர் நாலாயிரம் மனிதரைப் போஷிப்பித்த அற்புதத்தைப் பற்றியது.

2. கர்த்தர் அந்த அற்புதத்தை எந்த இடத்தில் செய்தார்.

வீடுகடை முதலானதுகளில்லாத வனாந்தரத்தில்.

3. சனங்கள் அந்த இடத்துக்கு வரும்படியாய் அவர்களை ஏவி எழுப்பின முகாந்தரம் என்ன.

கர்த்தரையும் அவர் வசனத்தையுஞ் சிநேகிக்கிற சிநேகந்தான்.

4. அது எதினால் விளங்கும்.

க. அவர்கள் ஒன்றும் சம்பாதியாமல் தங்கள் வேலையை விட்டு வந்திருந்தார்கள்.

உ. அவர்கள் தங்கள் வீடுவாசல்களை விட்டு வருத்தமுள்ள பிரயாணஞ் செய்தார்கள்.

ங. வனாந்தரம் மோசமுள்ள இடமாயிருந்தும், அங்கேயும் கர்த்தரைப் பின்சென்றார்கள்.

ச. அவர்களுக்குச் சாப்பாட்டுக்கு வழியில்லாதிருந்தும், மூன்றுநாள் அவரோடு தங்கியிருந்தார்கள்.

5. அவர்கள் கர்த்தரண்டைக்கு வந்து, அங்கே அவரோடு தங்கினதினால் எந்த வருத்தம் உண்டாயிற்று.

அவர்களுக்குப் புசிக்க ஒன்றுமில்லை என்று நமது வாக்கியஞ் சொல்லுகிறது. எப்படியெனில், அவர்கள் தங்கள் வீடுகளை விட்டுப் புறப்படுகிறபோது, இரண்டொரு நாளுக்குக் கொஞ்சங் கட்டுச்சாதங் கொண்டு வந்திருந்தபோதிலும், அதைச் சாப்பிட்டுத் தீர்ந்தபின், வனாந்தரமான அந்த இடத்தில் கிரயத்திற்குச் சாப்பாடாவது வேறு தின்பண்டமாவது அகப்படாது. சிலருக்கு அவர்களுடைய வீடு தூரமாயுமிருந்தது. இப்படியாக அவர்கள் புசிக்க ஒன்றுமில்லாமல் வருத்தப்பட்டார்கள்.

6. இந்த அவர்களுடைய வருத்தத்தை நீக்கி அவர்களுக்கு ஒத்தாசை செய்ததார்.

இயேசு இரட்சகர்தான். அவர் அற்புதமாக அவர்களைப் போஷிப்பித்து, அவர்களுடைய வருத்தத்தை நீக்கினார்.

7. அவர்களைப் போஷிப்பிக்க அவரை ஏவி எழுப்பினதென்ன.

அவருடைய இரக்கமே. ஏனென்றால் கூட்டத்தின்மேல் மனதுருகுகிறேன். ஏனெனில் அவர்கள் இப்போது மூன்றுநாளாய் என்னண்டை தரித்துப் புசிக்க ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். நான் அவர்களைப் பட்டினியாக அவர்கள் வீட்டுக்கு அனுப்பினால், வழியில் தொய்ந்துபோவார்கள், ஏனென்றால் அவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தார்கள் என்றார் (உ. ங). அப்படியே அவர் அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணி, அவர்கள் ஆத்துமத்துக்காகக் கவலைப்பட்டதோடு கூட அவர்களுடைய சரீரத்துக்காகவுங் கவலைப்பட்டு, ஒருவனுந் தம்மைக் கேளாததற்கு முன்னே சாப்பாடு கொடுக்கச் சித்தமாயிருந்தார்.



8. இந்தத் தமது கிருபையுள்ள சித்தத்தை முதல் முதல் ஆருக்குத் தெரிவித்தார்.

தம்முடைய சீஷர்களுக்குத்தான். ஏனென்றால் இயேசுநாதர் தம்முடைய சீஷர்களைச் சேரவழைத்து, அவர்களுடனே: கூட்டத்தின்மேல் மனதுருகுகிறேன் என்று சொன்னார்.

9. அந்தச் சனத்தைப் போஷிப்பிப்பதைப் பற்றிச் சீஷர்கள் என்ன நினைத்தார்கள்.

அது கூடாத காரியம் என்று நினைத்தார்கள். ஏனென்றால் ஏராளமான சனத்துக்குத் திரட்சியான அப்பம் தேவை. அது வனாந்தரமான இந்த இடத்தில் கிடைப்பதெப்படியென்று தங்கள் புத்தியின்படி எண்ணினார்கள். ஆதலால் அவர்கள் கர்த்தருக்குப் பிரத்தியுத்தாரமாக: இவர்களை ஒருவன் இங்கே வனாந்தரத்திலே அப்பங்களினால் திருப்திபண்ண எங்கேயிருந்து வரும் என்றார்கள் (ச).

10. சீஷர்களுடைய இந்த வார்த்தையினால் விசேஷமாய் நமக்கு என்ன விளங்கும்.

அவர்கள் விசுவாசம் பெலவீனமாயிருந்ததென்பது விளங்கும். ஏனென்றால் இயேசு இரட்சகர் அநேகம் அற்புதங்களைச் செய்திருந்ததை அவர்கள் கண்டிருந்தும், பரம காரியங்களை முந்தித் தேடுகிறவர்களுக்கு இச்சீவனுக்கடுத்த நன்மைகளுங்கூட கொடுக்கப்படுமென்கிற வாக்குத்தத்தத்தைக் கேட்டிருந்தும், ஆம், சில காலத்துக்கு முன்னே ஐயாயிரம் பேரை ஐந்து அப்பங்களினால் போஷிப்பித்த அற்புதத்தைப் பார்த்திருந்தும், இந்தச் சமயத்திலும் சனத்தை அற்புதமாய்ப் போஷிப்பார் என்பதை விசுவாசியாமல் போனார்கள்.

11. இயேசுநாதர் இந்த நாலாயிரம் மனிதரை எதினாலே போஷிப்பித்தார்.

சீஷர்களிடத்திலிருந்த ஏழு அப்பங்களினாலும் சில மீன்களினாலுந்தான்.

12. அவர் அவர்களைப் போஷிப்பிக்கையில் என்ன நடந்தது.

அவர் சனந் தரையிலே பந்தியிருக்கக் கட்டளையிட்டு, ஏழு அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணிப் பிட்டு அவர்கள் முன்னே வைக்கத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் சனத்தின் முன்னே வைத்தார்கள். கொஞ்சம் சிறு மீன்கள் அவர்களுக்கு உண்டாயிருந்தது. அவர் ஸ்தோத்திரம்பண்ணி அதுகளையும் அவர்கள் முன்னே வைக்கச் சொன்னார் (சு. எ).

13. அவர்கள் எல்லாருந் திருப்தியடைந்தார்களா.

ஆம், அவர்கள் புசித்துத் திருப்தியடைந்ததுமல்லாமல், மீந்த துணிக்கைகளை ஏழு கூடை எடுத்தார்கள்.

14. அவர்கள் புசித்துத் திருப்தியடைந்த பிற்பாடு அவ்வளவு மீதி எப்படியிருக்கக் கூடும்.

அது சர்வத்திற்கும் வல்ல கர்த்தருடைய அற்புதத்தினுல் உண்டாயிற்று.

## படிப்பினை.

15. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினுல் நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. கர்த்தராகிய கிறிஸ்துவால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. அவர் தம்மையுந் தமது வசனத்தையுஞ் சிநேகிக்கிறவர்கள் பேரில் மிகவுங் கிருபையுள்ளவராயிருக்கிறார். ஏனென்றால் அவர் இந்த நாலாயிரம் மனுஷரையும் போஷிப்பித்தது பெரிய இரக்கமல்லவா. இந்த அவருடைய இரக்கத்தைப் பற்றிச் சங்கீதக்காரனாகிய தாவீது: தகப்பன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல், கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறாரென்று சொல்லுகிறார் (சங். ளங, யங). நம்முடைய இரட்சகர் இப்பூமியிலிருந்த காலத்தில் பசியையுந் தாகத்தையுஞ் சகித்தார். ஆகையால் அவர் தம்முடையவர்களைப் பட்டினியாக அனுப்ப மனமில்லாமல், அவர்மேல் மனதுருகி ஆகாரத்தைக் கொடுக்கச் சித்தமுள்ளவராயிருந்தார்.

உ. அவர் கொஞ்சம் அப்பத்தினுலே தம்முடையவர்களை ஆதரிக்கக்கூடிய சர்வத்திற்கும்வல்ல பராபரனுயிருக்கிறார். அவர் இந்தச் சமயத்திலே ஏழு அப்பங்களினுலும் கொஞ்சம் மீன்களினுலும் நாலாயிரம் பேரைப் போஷித்தார். வானத்திலும் பூமியிலும் அவருக்குச் சகல அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத். உஅ, யஅ). ஆதலால் இஸ்ரவேல் சனத்துக்கு வனந்தரத்திலே மன்னவையும் கன்மலையிலிருந்து தண்ணீரையுங் கொடுத்த அவர், தம்முடையவர்களை, அவர்கள் ஒன்றுமில்லாதே போனுலுங் காப்பாற்றக் கூடியவராயிருக்கிறார்.

ந. நம்முடைய போசனம் நமக்கு ஆசீர்வதிக்கப்பட வேண்டியதானுல், நாம் கர்த்தரை நோக்கிச் செபம் பண்ணி ஸ்தோத்திரிக்க வேண்டும். இயேசுநாதரும் இந்தச் சனத்துக்குப் போசனத்தைக் கொடுக்கப் போகிறபோது



அப்படிச் செய்தாரென்றால் போசனம் முதலான நல்ல ஈவுகளெல்லாம் பராபரனிடத்திலிருந்து வருகிறதாயிருக்கிறது. ஆதலால் தாவீது சங்கீதக்காரன்: எல்லாச் சீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது. தேவரீர் ஏற்ற வேளையிலே அவைகளின் போசனத்தை அவைகளுக்குக் கொடுக்கிறீர். உம்முடைய கையைத் திறந்து சீவனுள்ளதெல்லாத்தையும் இதமியமாய்த் திருத்தியடையப் பண்ணுகிறீர் என்கிறார் (சங். ளசரு, யரு. யசு). அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும் என்று சொலி, கர்த்தரிடத்தில் நாம் நமது அன்றாடக அப்பத்தைத்தேடி, அதை அவருடைய கையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் இயேசுநாதர் பராபரனுடைய குமாரனுயிருந்தும், தாம் இந்தச் சனத்துக்குக் கொடுத்த சொற்ப அப்பத்துக்காகத் தமது பிதாவுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினுரானுல், நாம் எத்தனைபதிகமாக அவர் நமக்குக் கொடுத்த சகல நன்மைகளுக்காகவும் அவருக்கு நன்றியறிந்தவர்களாய் அவரை ஸ்தோத்திரிக்க வேண்டும்.

II. இயேசுநாதருடைய சீஷர்களால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. தரித்திரம் முதலான துன்பகாலங்களிலே விசுவாசிகளும் அநேகம் விசை விசுவாச பெலவீனராயிருக்கிறார்கள். அப்படியே கர்த்தருடைய சீஷரும் விசுவாச பெலவீனராயிருந்து: இவர்களை ஒருவன் இங்கே வனந்தரத்தில் அப்பங்களினுலே திருப்திபண்ண எங்கேயிருந்து வருமென்று கேட்டார்கள் (ச).

உ. கர்த்தர் நமக்குக் கொடுத்த நன்மைகளை நமக்காக மாத்திரஞ் செலவழிக்காமல், நமது எளிய பிறத்தியாருக்கும் அதினுல் நன்மை செய்ய வேண்டும். அப்படியே சீஷர்களும் கர்த்தர் அவர்கள் கையில் கொடுத்த அப்பத்தைச் சனத்தின் முன் வைத்தார்கள். அதற்கென்று கர்த்தர்: பசியுள்ளவனுக்கு உன் அப்பத்தைப் பிட்டுக்கொடுத்து, துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொண்டு, அம்மணமானவனைக் கண்டாயானுல், அவனுக்கு வஸ்திரங் கொடுத்து, உன் மாமிசமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருந்தால், அதுவல்லவோ நாம் தெரிந்துகொள்ளுகிற உபவாசம் என்கிறார் (எசா. ருஅ, எ).

III. சனங்களால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. நாம் பராபரனுடைய வசனத்தைச் சிநேகித்து, முந்தமுந்த நமது ஆத்தும போசனத்தைத் தேடவேண்டும்.

அப்படிச்செய்த மரியாளைக் கர்த்தர் புகழ்ந்து: ஒன்றே தேவை. மரியாளோவெனில் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்று சொன்னார் (லூக். ௰, ௪௨). அப்படியே அந்தச் சனமுஞ் செய்தது. ஏனெனில் அநேகர் பூமிக்கடுத்த காரியங்களைத் தேடுகிறதினாலே, பரம காரியங்களை அசட்டைசெய்து, சரீரப்போசனத்துக்காக அதிகக் கவலைப்படுகிறதினால் ஆத்துமபோசனத்தை மறந்து விடுகிறார்கள். இந்தச் சனமோ பரம காரியங்களைத் தேடுகையில் பூமிக்கடுத்ததை அற்பமாக எண்ணி, ஆத்தும போசனத்தின் வாஞ்சையால் சரீரபோசனத்தை மறந்துவிட்டார்கள். ஏனென்றால் அவர்கள் தங்கள் ஊரையும் வீடுகளையும் விட்டுப் புறப்பட்டு வனாந்தரமான இடத்துக்கு வந்து மூன்றுநாட்களாய் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டார்களே. அப்படியே நாமும் கர்த்தருடைய வசனத்தைச் சிநேகித்துச் சமயமிருக்கும்போதெல்லாம் அவருடைய வசனத்தை ஆவலாய்க் கேட்க வேண்டும். இதற்குத் தடையான எந்த வருத்தமிருந்தாலும், நாம் அவைகளைப் பொறுமையாய்ச் சகித்து, கர்த்தருடைய வசனத்தைச் சிநேகிக்கிறதில் பின்னிடையாதிருக்க வேண்டும்.

௨. பராபரனுடைய வசனத்தைச் சிநேகிக்கிறவனுக்கு அன்றாடக அப்பங் கிடையாமல் போகாது. ஆம், இந்தச் சனத்துக்கு நடந்ததுபோல் அவனுக்குச் சம்பவித்தாலும், அதாவது அவன் பராபரனுடைய வசனத்தைச் சிநேகித்து, இயேசு இரட்சகரைத் தேடுகிறதினால் துன்பத்தில் அகப்பட்டாலும், அவர் அவனைப் பட்டினியாக அனுப்பமாட்டார். இதற்குத் திருஷ்டாந்தம்: யாக்கோபும் அவன் வீட்டாரும் கானான் தேசத்திலே பஞ்சத்தினால் வருத்தம் அனுபவியாதபடிக்கு எகிப்து தேசத்திலிருந்து அவர்களுக்கு அப்பம் வந்தது. எலியாதீர்க்கதரிசி பசியினால் சாகாதபடிக்குக் காகங்கள் அவனுக்கு அப்பங் கொண்டுவந்து கொடுத்தது. இயேசுவும் அவருடைய தாய்தகப்பன்மாரும் எகிப்து தேசத்துக்கு ஓடிப்போகையில் வருத்தப்படாதபடிக்குக் கிழக்கத்திச் சாஸ்திரிகள் தங்கள் பொக்கிஷங்களிலிருந்து பொன்னைக் கொடுத்தார்கள். அப்படியே கர்த்தருடைய வசனத்தைச் சிநேகிக்கிற தெய்வபத்தியுள்ளவர்கள் சிலவிசை பசியினால் வருத்தப்பட்டாலும் சாகமாட்டார்கள்.

௩. நாம் மனரம்மியமாயிருக்க வேண்டும். அப்படியே நமது வாக்கியத்தில் சொல்லப்பட்ட சனம் தங்களுக்குக் கிடைத்த போசனம் போதாதென்று முறுமுறுக்காமலும் அதிகமாய் இச்சிக்காமலும் கர்த்தர் கொடுத்ததை வாங்கிப்



புசித்துத் திருப்தியடைந்தார்கள். நாம் ஒன்றுக்கும் பாத்திரராயிராதவர்களாயிருப்பதினால், கர்த்தர் மற்றவர்களுக்குக் கொடுக்கிறதுபோல் நமக்குக் கொடாதே போனாலும், நாம் விரும்பியது கிடையாதே போனாலும், கர்த்தர் நமக்குக் கொடுத்ததே போதுமென்று சொல்லி, மனரம்மியமாயிருக்கக் கடவோம். ஏனெனில் இஸ்ரவேல் சனம் பராபரன் வனாந்தரத்தில் கொடுத்த மன்னாவென்ற அப்பத்தின் பேரில் வெறுப்படைந்து: இந்த மன்னாவைத் தவிர நம்முடைய கண்களுக்கு முன்பாகப் பின் ஒன்றுமில்லை (௪ மோ. ௰௧, ௬) யென்று முறுமுறுத்தபோது, அவருடைய கோபமுந் தண்டனையும் அவர்கள்மேல் இறங்கிற்று. போதுமென்ற மனதுடனே கூடிய தெய்வபத்தியே பெரிய ஆதாயம். ஏனெனில் நாம் லோகத்தில் ஒன்றுங் கொண்டுவந்ததில்லை, அதிலிருந்து ஏதாகிலுங் கொண்டுபோகவுங் கூடாது என்கிறது வெளியரங்கமாயிருக்கிறது. உண்ணவும் உடுக்கவும் நமக்கு இருந்ததேயானால், அதுவே போதும் என்றிருக்கக்கடவோம் (௧ தீமோ. ௬, ௬-௮).

௪. நாம் வீண் செலவு செய்யக் கூடாது. சுவிசேஷ வாக்கியத்தில் [illegible] எழுதியிருக்கிறபடியே, சனம் புசித்துத் திருப்தியடைந்து, மீந்த துணிக்கைகளை அதுகள் வீணாய்ப் போகாதபடிக்குச் சேர்த்தார்களே. அப்படியே நாமும் மட்டாய்ச் செலவு செய்து, மீதியானதைப் பத்திரப்படுத்த வேண்டும். திருப்தியடைந்தவனுக்கு மறுபடியும் பசிவரும் என்றும், கொண்டிருக்கிற ஐசுவரியத்துக்குத் திரும்ப தரித்திரம் வருமென்றும் அடிக்கடி நினைவுகூருவதே புத்தி என்று ஏசுசீராக் சொன்ன வார்த்தையைக் கவனிக்க வேண்டும் (ஏசுசீராக். ௰௮, ௨௫) இயேசுநாதர் சனத்தைப் போஷிப்பித்த பிற்பாடு மீந்த துணிக்கைகளைச் சேர்க்க உத்தரவு கொடுத்தார். அதுபோல் நாமும் பொருளாசையினாலல்ல, மற்றவர்களுக்கு உதவிசெய்ய நமக்குச் சமயமிருக்கும்படியாக, வீண்செலவு செய்யாமல் மீதியானதைக் காப்பாற்ற வேண்டும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, அற்புதங்களைச் செய்ய வல்லமையுள்ள ரட்சகரே, தேவரீர் எங்களுடைய ஆத்துமாக்களை உமது திருவசனத்தினாலும், உமது திருச்சரீரம் இரத்தத்தினாலும் போஷிப்பிக்கிறதுமல்லாமல், எங்களுக்குக் குறைச்சலில்லாதபடிக்கு எங்கள் சரீரங்களையுங் காப்பாற்றுகிறீர். இந்த உம்முடைய பட்சமுள்ள பராமரிப்புக்காக உமக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். கர்த்தாவே, நாங்கள் இன்னம் ஆத்துமப்பிரகாரமாகவும் சரீரப்பிர

காரமாகவும் உம்மால் ஆதரிக்கப்பட்டு, கடைசியிலே பரம நன்மைகளால் நித்திய காலமாகத் திருப்தியடையும்படிக்கு, கர்த்தாவே, நாங்கள் எப்போதும் உமக்கு நன்றியறிந்தவர்களாயிருந்து, உம்முடைய வசனத்தைச் சிநேகித்து, உம்மைப் பின்செல்லுகிறதற்கு உமது அளவற்ற சிநேகத்தினிமித்தம் எங்களுக்குக் கிருபை செய்ய வேண்டும் என்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், சுவாமி. ஆமென்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின அ-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௱உஎ.)

**சுவி. மத். எ, யரு—உங.**

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாய் இருங்கள். அவர்
கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு, உங்களண்டைக்கு வரு
கிறார்கள்; உள்ளேயோ கவ்வுகிற ஓநாய்களாயிருக்கிறார்கள்.
16 அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்களாக. முள்ளுச்
செடிகளில் திராட்சப் பழங்களையும் முள்ளுப்பூண்டுகளில் அத்
திப்பழங்களையும் அறுக்கிறார்களோ. 17 அந்தப்படி நல்ல மரமெல்
லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; ஆகாத மரமோ ஆகாத கனிக
ளைக் கொடுக்கும். 18 நல்ல மரம் ஆகாத கனிகளைக் கொடுக்கக்கூடா
து; ஆகாத மரம் நல்ல கனிகளைக் கொடுக்கவுங் கூடாது. 19 நல்ல
கனி கொடாத மரம் எல்லாம் வெட்டப்பட்டு, அக்கினியிலே போ
டப்படும். 20 ஆனது கொண்டு அவர்கள் கனிகளினாலே அவர்களை
அறிவீர்களாக. 21 என்னுடனே: ஆண்டவரே, ஆண்டவரே என்
று சொல்லுகிற எவனும் அல்ல, பரமண்டலங்களிலிருக்கிற என் பிதா
வின் சித்தத்தைச் செய்கிறவனே வானராச்சியத்துக்குள் பிரவே
சிப்பான். 22 அந்த நாளில் அநேகம் பேர் என்னுடனே: ஆண்டவ
ரே, ஆண்டவரே, உமது நாமத்திலே தீர்க்கதரிசனம் உரைத்தோம்
அல்லவோ, உமது நாமத்திலே பிசாசுகளைத் துரத்திவிட்டோம்
அல்லவோ, உமது நாமத்திலே அநேகம் அற்புதங்களைச்செய்தோம்
அல்லவோ என்பார்கள். 23 அப்பொழுது நான்: ஒருக்காலும் உங்
களை அறிந்தேன் இல்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு
அகன்று போங்கள் என்று அவர்களுக்கு அறிக்கை பண்ணுவேனென்
றார்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்திலே அடங்கியிருக்கிறதென்ன.

நாம் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று நமது இரட்சகர் சொன்ன நல்ல புத்திமதிகள்.

2. கள்ளத்தீர்க்கதரிசிகள் ஆர்.



தப்பிதமாய்ப் போதிக்கிற எல்லாக் கள்ளப்போதகரும். தீர்க்கதரிசிகள் ஆர் என்றால், பழைய ஏற்பாட்டின் காலத்திலே பராபரனுடைய கட்டளையின்படியே பராபரனுடைய வசனத்தைப் பிரசங்கித்து, மனுஷருக்கு இரட்சிப்பின் வழியைப் போதித்த தேவ ஊழியராம். ஆதலால் நம்முடைய வாக்கியத்தில் தீர்க்கதரிசிகள் என்பது போதகரையும், கள்ளத்தீர்க்கதரிசிகள் என்பது கள்ளப்போதகரையுங் குறிக்கிறது.

3. கள்ளப்போதகர் ஆர்.

பராபரனுடைய பரிசுத்த வசனத்துக்கு, அதாவது சத்தியவேதத்துக்கு விரோதமாகப் போதிக்கிறவர்களெல்லாருங் கள்ளப்போதகராம். ஏனெனில் மெய்ப்போதகர் ஆர் என்றால், கர்த்தருடைய வசனத்துக்கொத்தபடி, அதாவது பராபரன் சத்திய வேதத்தில் வெளிப்படுத்தின தமது திருச்சித்தத்தின்படியே போதிக்கிறவர்கள் மெய்ப்போதகராம்.

4. இப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகளும் போதகரும் இன்னம் உண்டா.

ஆம், இன்னம் உண்டு. லோகத்தின் முடிவுகாலத்திலே அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்புவார்களென்று இயேசுநாதர் சொல்லுகிறார். கள்ளக்கிறிஸ்துகளும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை முதலாய் மோசம் போக்கத் தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அதிசயங்களையுஞ் செய்வார்கள் (மத். உச, உச). அப்போஸ்தலனாகிய பவுல் நாம் இருக்கிற இந்தக் கடைசிக்காலத்தைப் பற்றிச் சொல்லுகிறதாவது: கடையாந்தரகாலங்களில் சிலர் மோசம் போக்குகிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் போதகங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு மருளவிழுவார்களென்று ஆவியானவர் வெளிப்பொருளாய்ச் சொல்லுகிறார் (க தீமோ. ச, க).

5. இந்தக் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு யார் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

எல்லாக் கிறிஸ்தவர்களும். ஏனென்றால் அவர்களுக்கு நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று நம்முடைய இரட்சகர் நமது வாக்கியத்திலே: கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களண்டைக்கு வருகிறார்கள், உள்ளேயோ கவ்வுகிற ஓநாய்களாயிருக்கிறார்களென்று நமக்குப் புத்தி சொல்லுகிறார் (யரு).

6. நாம் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்குங் கள்ளப்போதகருக்கும் ஏன் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

க. அவர்கள் தந்திரமுள்ளவர்களாயிருந்து, பரிசுத்தமும் தெய்வபத்தியுமுள்ள பராபரனுடைய ஊழியக்காரராகவும் போதகராகவும் வேஷம் போட்டு வருகிறபடியால் தான். அதைப்பற்றி நமது இரட்சகர்: கள்ளத்தீர்க்கதரிசிகள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு வருகிறார்கள், அதாவது அவர்கள் கிறிஸ்துவின் மெய்யான ஆடுகளாகவும் பராபரனுடைய சுத்த வசனத்தை உண்மையாய்ப் பிரசங்கிக்கிறவர்களாகவும் வருவார்கள் என்கிறார்.

உ. கள்ளப்போதகர் மிகவும் மோசமுள்ளவர்களாயிருப்பதினால் தான். அதைப்பற்றிக் கர்த்தர்: அவர்கள் உள்ளேயோ கவ்வுகிற ஓநாய்களாயிருக்கிறார்களென்று சொல்லுகிறார். ஒரு ஓநாய் ஆட்டுத்தொழுத்தில் வரும்போது, ஆடுகளை எப்படிப் பீறிக் கொன்றுபோடுகிறதோ, அப்படிக் கள்ளப்போதகர் கிறிஸ்தமான சபையில் வரும்போதும் செய்வார்கள். ஏனென்றால் அவர்கள் கள்ளப்போதகம் ஏற்றுக்கொள்ளப்பட்டதானால், அவர்கள் அதினாலே மனுஷருடைய ஆத்துமாக்களைக் கொன்றுபோட்டு, அவர்களை நித்திய அக்கினிக்குள்ளாக்குகிறார்கள்.

7. கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு நாம் எப்படி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

நாம் அவர்கள் போதகத்தை ஏற்றுக்கொள்ள அவர்களை நம்பவுங் கூடாது. ஏனென்றால் நம்முடைய இரட்சகர்: யாதொருவன் உங்களுடனே, இதோ, கிறிஸ்து இங்கே, அதோ, அங்கே என்று சொன்னால் நம்பாதேயுங்கள் என்கிறார் (மத். உச, உரு).

8. கள்ளத்தீர்க்கதரிசிகளை நாம் எப்படியறியலாம்.

அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்களாக என்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார். அதைப்பற்றி அவர் உவமையாய் ஒரு மரத்தைக் காட்டி: அது நல்லதோ, கெட்டதோ என்பதை அதின் கனிகளின் மூலமாய் அறியலாம் என்கிறார். ஏனெனில் கனி நல்லதானால் மரமும் நல்லது; கனி கெட்டதானால், மரமுங் கெட்டதாயிருந்து, ஒன்றுக்கும் உதவாமல் அக்கினிக்கு இரையாகும். அப்படியே கள்ளத்தீர்க்கதரிசிகளை அவர்கள் கொடுக்கிற கனிகளினால் அறியலாம். மேலும் முட்செடிகளில் திராட்சப்பழங்களையும் முள்ளுப் பூண்டுகளில் அத்திப்பழங்களையும் அறுக்கிறார்களோ. அதாவது முட்செடி திராட்சப்பழங்களையும் முட்பூண்டு அத்திப்பழங்களையுங் கொடுக்கிறதேயில்லையென்று நமது இரட்சகர் சொல்லுகிறார். அப்படி நல்லமரம் எல்லாம் நல்ல கனிகளைக்கொடுக்கும், ஆகாதமர



மோ ஆகாத கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் ஆகாத கனிகளைக் கொடுக்கக் கூடாது. ஆகாதமரம் நல்ல கனிகளைக் கொடுக்கவுங் கூடாது. நல்ல கனிகொடாத மரம் எல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும். ஆனதுகொண்டு அவர்கள் கனிகளினாலே அவர்களை அறிவீர்களாக என்றார் (யஅ-உய).

9. கள்ளத்தீர்க்கதரிசிகள் கொடுக்கிற கெட்ட கனிகள் என்ன.

க. வாயின் கனி, அதாவது கள்ளப்போதகம்.

உ. நடக்கையின் கனி, அதாவது கிறிஸ்து மார்க்கத்துக்கு அடாத துர் நடக்கை.

10. ஒரு கிறிஸ்தவன் அந்தக் கள்ளப்போதகத்தை எப்படி அறியலாம்.

பராபரனுடைய வசனமாகிய சத்திய வேதத்தினாலே. ஏனென்றால் பராபரனுடைய வசனத்துக்கு விரோதமான எந்தப் போதகமுங் கள்ளப்போதகமாம். திருஷ்டாந்தமாக, அரியானர் முதலிய அவிசுவாசிகள்: கிறிஸ்துநாதர் மெய்யான தேவன் அல்லவென்று சொல்லுகிறார்கள். இது கள்ளப்போதகம். ஏனென்றால் இவர் மெய்யான பராபரனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது (க யோ. ரு, உய). பாப்புமார்க்கத்தார்: நற்கிரியைகளினால் மோட்சம் சம்பாதிக்கலாமென்றும், இறந்துபோன அர்ச்சய சிஷ்டவான்களை வணங்கி, அவர்களை நோக்கிச் செபித்தல் முதலிய இன்னம் இவைபோன்ற அநேக காரியங்களைப் போதிக்கிறது கள்ளப்போதகமாயிருக்கிறது. ஏனென்றால் கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதும் அல்ல, இது பராபரனுடைய ஈவு. யாதொருத்தன் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல என்றும் (எபேசி. உ, அ. கூ), பராபரனாகிய கர்த்தரைப் பணிந்து, அவர் ஒருவருக்கு ஆராதனை செய்வாயாகவென்றும் வேதம் சொல்லுகிறது (மத். ச, ய). மேலும் ரெபோர்மீத்தர்: பராபரனுக்கு எல்லாமனிதரையும் இரட்சிக்க மனமில்லை என்றும், கிறிஸ்துநாதர் எல்லா மனிதருக்காகவும் அல்ல, தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக மாத்திரம் பாடுபட்டார் என்றும் போதிக்கிறது கள்ளப்போதகம். ஏனென்றால் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட்டுச் சத்தியத்தின் அறிவுக்கு வரச் சித்தமுள்ளவராயிருக்கிறாரென்றும் (க தீமோ. உ, ச), அவர் நம்முடைய பாவங்களின் நிமித்தம் கிருபையுண்டாக்குதலாயிருக்கிறார், ஆனால் நம்முடைய பாவங்கள் நிமித்தம் மாத்திரமல்ல, சர்வலோகத்தின்

பாவங்கள் நிமித்தமுந் தானே என்றும் வேதம் சொல்லுகிறது (௧ யோ. ௨, ௨).

11. கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய தகாத துர் நடக்கையை எதினால் அறியலாம்.

அதையுங்கூட பராபரனுடைய வசனத்தினால் அறியலாம். ஏனென்றால் பராபரனுடைய வார்த்தைக்குங் கட்டளைக்கும் விரோதமாக பெருமை, அகந்தை, பொருளாசை, அநியாயம், பெருந்தீனி, வெறி, சண்டை, பொறாமை, தூஷணம் முதலான பாவங்களிலே பிழைக்கிறவன் துர் நடக்கையாய் நடந்து, கள்ளத்தீர்க்கதரிசியும் போதகனுமாயிருக்கிறான். அவன் தன் பொல்லாத துர் நடக்கையினிமித்தம் ஆகாத மரத்தைப்போல் நரகத்தின் அக்கினியிலே போடப்படுவான். மாமிசத்தின் கிரியைகளோவெனில் வெளியரங்கமாயிருக்கிறது. அதாவது: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரக ஆராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பேதகங்கள், அமார்க்கங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், பெருந்திண்டிகள் முதலானதுகள் தானே. இப்படிக் கொத்ததுகளைச் செய்கிறவர்கள் பராபரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை யென்று நான் முந்திச் சொன்னதுபோல் இப்போது அதுகளைக்குறித்து உங்களுக்கு முன்னறச் சொல்லுகிறேன் (கலா. ௫, ௰௯-௨௧).

12. ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகள் தாங்களும் பராபரனுடைய வசனத்தைப் போதிக்கிறவர்களாகச் [illegible] வார்களே. அவர்கள் தங்கள் வாயினால் இயேசுவின் நாமத்தைச் சொல்வதுமல்லாமல் அவர்கள் சிலவேளை அற்புத அடையாளங்களையுஞ் செய்வார்களே. இதெல்லாம் அவர்களை இரட்சிக்கமாட்டாதா.

அது அவர்களை ஒருக்காலும் இரட்சிக்கிறதில்லை. ஏனென்றால் நம்முடைய இரட்சகர் தம்மை வாயினால் புகழ்ந்து கிரியைகளினாலே மறுதலிக்கிற இப்படிப்பட்ட மாயக்காரரைத் தம்மை விட்டுத் தள்ளிப்போடுவோம் [illegible] தெளிவாய்ச் சொல்லுகிறார். அதைப்பற்றி அவர்: [illegible]ன்னுடனே ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லுகிற எவனுமல்ல, பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்தத்தைச் செய்கிறவனே வானராச்சியத்துக்குள் பிரவேசிப்பான். அந்த நாளில் அநேகம்பேர் என்னுடனே: ஆண்டவரே, ஆண்டவரே, உமது நாமத்திலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவோ, உமது நாமத்திலே பிசாசுகளைத் துரத்திவிட்டோம் அல்லவோ, [illegible] நாமத்திலே அநேக அற்புதங்களைச் [illegible]



தோம் அல்லவோ என்பார்கள். அப்போது நான்: ஒருக்காலும் உங்களை அறிந்ததில்லை; அக்கிரமசெய்கைக்காரரே, என்னை விட்டகன்று போங்களென்று அவர்களுக்கு அறிக்கை பண்ணுவேன் என்றார் (௨௧-௨௩).

13. கிறிஸ்துநாதர் எல்லாவற்றையும் அறிந்தவராயிருக்கக்கொள்ள தாம் இந்த அக்கிரமக்காரரை அறிந்ததில்லை என்று எப்படிச் சொல்லக்கூடும்.

கர்த்தர் உங்களை அறிந்தேன் இல்லை என்கிற வார்த்தையினாலே தாம் அவர்களைத் தமது உண்மையுள்ள ஊழியக்காரராக அறியவில்லை என்று தெரிவிக்கிறார். ஆதலால் குணப்படாதவர்கள் தாங்கள் இயேசுநாதருக்கு ஊழியஞ்செய்கிறதாக நினைத்தாலும், அவர் அவர்களுக்கு: ஒருக்காலும் நான் உங்களை அறிந்தேன் இல்லை என்று சொல்லுவாரேயன்றி, அவர்களைத் தமது உண்மையுள்ள ஊழியக்காரராக அறிக்கையிட மாட்டார்.

## படிப்பினை.

14. இந்தச் சுவிசேஷவாக்கியத்தினால் நாம் கற்றுக்கொள்ளுகிறதென்ன.

௧. தங்களுடைய கள்ளப்போதகத்தினாலே மனுஷரை மாறுபாடாக்குகிற கள்ளத்தீர்க்கதரிசிகளும் கள்ளப்போதகரும் கிறிஸ்தமான சபையிலே எப்போதும் இருக்கிறார்கள்.

௨. கள்ளப்போதகர் பொதுவாய் மாயக்காரராயிருக்கிறார்கள். அவர்களைக் குறித்து இயேசுநாதர்: அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு வருகிறார்கள் என்றும், அப்போஸதலனாகிய பவுல்: அவர்கள் நீதியின் பிரசங்கிகளாக வருவார்களென்றும் சொல்லுகிறார். சாத்தான் தானே வெளிச்சத் தூதனுடைய வேஷம் எடுக்கிறது. ஆனபடியினாலே அதின் ஊழியக்காரரும் நீதியினுடைய ஊழியக்காரரின் வேஷம் எடுத்தால், பெரிய அதிசயமல்ல. அவர்கள் முடிவோ அவர்கள் [illegible]யகளுக்குத் தக்கதாயிருக்கும் (௨ கொரி. ௰௧, ௰௩. ௰[illegible]).

௩. கள்ளத்தீர்க்கதரிசிகள் மகா பெரிய கேட்டை உண்டுபண்ணுவார்கள். அவர்கள் உள்ளே கவ்வுகிற ஓநாய்களாயிருக்கிறார்களென்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார். ஏனெனில் ஓநாய் ஆட்டுத்தொழுத்திலே எப்படிப் பெரிய மோசத்தை உண்டாக்குகிறதோ, அப்படியே கள்ளத்தீர்க்கதரிசிகள் ஞான ஆடுகளாகிய கிறிஸ்தவர்களுக்குள்ளே பெரிய கேட்டை உண்டுபண்ணுகிறார்கள். பவுல் அப்போஸ்தலன் எபேசுவிலுள்ள மூப்பரை விட்டு வரும்போது, அவன்

அவர்களை எச்சரித்துப் புத்தி சொல்லி: நான் போன பிற்பாடு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வருமென்கிறதை நான் அறிவேன். உங்களில் தானுந் தங்களைப் பின் செல்லச் சீஷரைப்போதிக்கிறதற்காக மாறுபாடானவைகளைப்பேசுகிற மனுஷர் எழும்புவார்கள் (நடபடி உ௰, உகூ. ௩௰) என்கிறான்.

ச. நாம் கள்ளப்போதகருக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அதற்கென்று கிறிஸ்துநாதர்: கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களண்டைக்கு வருகிறார்களென்று சொல்லி எச்சரிக்கிறார். நம்முடைய இரட்சிப்பு நமக்கு எவ்வளவு அவசரமாயிருக்கிறதோ, அவ்வளவு நாம் கள்ளப்போதகருக்கு எச்சரிக்கையாயிருக்கிறது, அதாவது நாம் அவர்களால் கெட்டுப்போகாதபடிக்கு, அவர்களை விட்டு விடுகிறது அவசரமாயிருக்கிறது.

ரு. நாம் சுறுசுறுப்பாய்ப் பராபரனுடைய வசனத்தை ஆராய்ந்து பார்த்து, அதுக்கொத்த மெய்ப்போதகத்திலே ஊன்றி நிற்கவேண்டும். ஏனெனில் பராபரனுடைய வசனத்தினால், அதாவது சத்திய வேதத்தினால் மாத்திரம் நாம் மெய்ப்போதகம் இன்னதென்று அறியக்கூடும். வேதமெழுத்தெல்லாந் தேவ ஆவியால் உண்டானதும், பராபரனுடைய மனுஷன் சற்கிரியைக்கெல்லாந் தேர்ந்த சீருள்ளவனாயிருக்க, உபதேசத்துக்குங் கடிந்து கொள்ளுதலுக்குஞ் சீர்திருத்துதலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோசனமாயிருக்கிறது (உ தீமோ. ங, ௰சு. ௰எ). நாம் யாதொரு மனுஷனுடைய ஏவுதலால் இந்தப் பராபரனுடைய வசனத்தை விட்டுவிடாதபடிக்கு அதிலே உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும். மேலும் லுத்தரன் சபையின் போதகம் பராபரனுடைய சுத்த வார்த்தையாயிருக்கிறதென்று நாம் சத்திய வேதத்தின் தெளிவான சாட்சிகளினாலே அறிந்திருக்கிறபடியால், நாம் ஒருக்காலும் அதைவிட்டுப் பிரிந்துபோகாமல் அதிலேயே மரணபரியந்தம் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும்.

சா. நாம் நல்ல மரங்களாயிருந்து நல்ல கனிகளைக் கொடுக்கும்படியாகப் பிரயாசப்படவேண்டும். ஏனெனில் நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படுமென்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார். ஆகையால் நாம் நல்ல கனிகொடாமல் கெட்ட கனிகளைமாத்திரங் கொடுக்கிற இப்பேர்ப்பட்ட மரங்களுக்கு ஒப்பாயிராதபடிக்கு நாம் கவலைப்படவேண்டும். ஏனென்றால்



பவுல் அப்போஸ்தலன் எச்சரித்துச் சொல்லுகிறதாவது: மாம்சத்தின் கிரியைகளோவெனில் வெளியரங்கமாயிருக்கிறது. அதாவது: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரக ஆராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பேதகங்கள், அமார்க்கங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், பெருந்தீண்டிகள் முதலானதுகள் தானே. இப்படிக்கொத்தவைகளைச் செய்கிறவர்கள் பராபரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை (கலா. ரு, ௰கூ-உக). அப்படிப்பட்ட கனிகளுக்கு நாம் எச்சரிக்கையாயிருந்து, நீர்வாய்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்திலே தன் கனியைத் தருகிற நல்ல மரத்துக்கொப்பாயிருக்கும்படி பிரயாசப்பட வேண்டும். ஆதலால் நாம் அ[illegible] தினமும் நமது பராபரனுடைய [illegible]மைக்கென்று நீதியின் [illegible] கனிகளைக் கொடுக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் உண்டாக்குகிற அவருடைய இந்தக் கனிகள் என்னவெனில், சிநேகம், சந்தோஷம், சமாதானம், நீ[illegible] சாந்தம், தயவு, நற்குணம், விசுவாசம், மெத்தனவு, இச்சையடக்கம். இப்படிப்பட்ட கனிகள் பராபரனுக்குப் பிரியமாயிருக்கிறபடியால், நாமும் அவைகளைக் கொடுக்க அதிகமதிகமாய்ப் பிரயாசப்படவேண்டும்.

எ. நாம் விசேஷமாய் மாய்மைக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஆதலால் நாம் நம்மைத் தெய்வபத்தியுள்ளவர்களாகக் காட்டி, நம்முடைய வாயினாலே கிறிஸ்துவை ஆண்டவர் என்று சொல்லி, அவரைப் புகழுகிறது போதாது. நாம் முழு இருதயத்தினாலும் உண்மையுள்ள தேவபக்தராயிருந்து, நம்முடைய கிரியைகளினாலே நம்மைக் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரராக விளங்கப்பண்ணவேண்டும். ஏனெனில் என்னுடனே: ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லுகிற எவனுமல்ல, பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்தத்தைச் செய்கிறவனே வானராச்சியத்துக்குள் பிரவேசிப்பானென்று இரட்சகர் சொல்லுகிறார். ஆம், கடைசி நாளிலே அவர் அப்படிப்பட்ட மாயக்காரரை நோக்கி: ஒருக்காலும் உங்களை அறிந்தேன் இல்லை, அக்கிரமசெய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்களென்று சொல்லுவார். உன்னுடைய பத்தி மாயமற்றதும், நீ கர்த்தருக்குச் செய்யும் ஊழியம் கபடற்றதுமாயிருக்கப் பார் (ஏசுசீராக் க, ௩௩.)

அ. இப்படிப்பட்ட நல்லகனிகளை நாமே கொடுக்கக் கூடுமா.

[illegible]டாது. அவைகள் பரிசுத்த ஆ[illegible]யானவரின் கனிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறதினால், [illegible] அவரே

உண்டு பண்ண வேண்டும். ஆகலால் நாம் பரிசுத்த ஆவியானவருடைய ஒத்தாசையைத் தேடி அடிக்கடி பெருமூச்சுவிட்டுக் கேட்கவேண்டியதென்னவென்றால்:

வெளிச்சமே, ஒளிவிடும்;
இயேசுவை நன்றாய் அறிவியும்,
மோட்சத்தைத் திறந்த அவர்க்குள்ளாக
நிற்கவும் அடியார் வாத்தியாவீராக,
தேவாவியே (ஞானப்பாட்டு அச, உ).

நமது ஒன்றான தேற்றரவாளராகிய அவருக்குப் பிதாவாகிய பராபரனோடும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடும் சதாகாலங்களாய் ஸ்தோத்திரமுந் துதியும் உண்டாவதாக, ஆமென்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின கூ-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு உ௱ச.)

சுவி. லூக். யசு, க—கூ.

அவர் தம்முடைய சீஷரோடுஞ் சொன்னதாவது: ஐசுவரியவானான ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான்; இவன் அவனுடைய ஆஸ்திகளை அழித்துப்போட்டவனாய் அவனுக்கு அறிவிக்கப்பட்டான். 2 அப்பொழுது அவனை அழைத்து, அவனுடனே: உன்பேரில் நான் இதைக் கேட்கிறதேது; உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி, ஏனெனில் இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக் கூடாது என்றான். 3 உக்கிராணக்காரனோவென்றால் தனக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது: என்ன செய்வேன், என் எசமான் உக்கிராண விசாரிப்பை என்னை விட்டு வாங்கிப்போடுகிறானே; கொத்துகிறதற்கு எனக்குப் பெலன் இல்லை, இரக்கவும் வெட்கப்படுகிறேன். 4 நான் உக்கிராண விசாரிப்புக்குப் புறம்பாய்த் தள்ளப்படும்போது, என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாக, நான் செய்யவேண்டியது இன்னதென்று அறிவேன் என்று சொல்லி, 5 தன் எசமானுக்குக் கடன் பட்டவர்களில் ஒவ்வொருவனை வரவழைத்து, முந்தினவனுடனே: நீ என் எசமானுக்குப் பட்ட கடன் எத்தனை என்றான். 6 அவன்: நூறு குடம் எண்ணெய் என்றான். அப்பொழுது அவனுடனே: நீ உன் சீட்டை வாங்கி உட்கார்ந்து, ஐம்பது என்று சீக்கிரமாய் எழுது என்றான். 7 பிறகு வேறொருவனுடனே: நீயோ பட்ட கடன் எத்தனை என்றான்; அவன் நூறு கலங் கோதும்பை என்றான். அப்பொழுது அவனுடனே: நீ உன் சீட்டை வாங்கி, எண்பது என்று எழுது என்றான். அநீத உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எசமான் அவனைப் புகழ்ந்தான், ஏனெனில் வெளிச்சத்தின் பிள்ளைகளைப் பார்க்க இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்களுடைய சந்ததிக்குப் புத்திமானக



ளாயிருப்பார்கள். 9 நானும் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் மாளும்போது, உங்களை நித்திய கூடாரங்களில் ஏற்றுக்கொள்ளுவார் உண்டாக, அநீத லோகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள் என்றார்.

1. இந்நாளின் சுவிசேஷவாக்கியத்திலே அடங்கியிருக்கிறதென்ன.

அநீத உக்கிராணக்காரனைப் பற்றிய உவமை.

2. அந்த உவமையைச் சொன்னதார்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர். நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தின்படியே: அவர் தம்முடைய சீஷரோடும் சொன்னதாவது: ஐசுவரியவானான ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான் (க).

3. உக்கிராணக்காரன் ஆர்.

எசமானுடைய நிலங்களையும் சொத்துக்களையும் மேல் விசாரிக்கும்படியாய் வைக்கப்பட்ட மனுஷன். தனக்கு ஒப்புவிக்கப்பட்ட பொருளைப் பத்திரமாய்க் காப்பாற்றி, அவைகளைத் தன் எசமானுடைய பிரயோசனத்துக்கென்று கையாடுகிறதே உக்கிராணக்காரனுடைய கடமை.

4. இந்த உக்கிராணக்காரன் அப்படியே செய்தானா.

இல்லை. அவன் அப்படிச் செய்யாமல் எசமானுடைய ஆஸ்திகளைச் செலவழித்துச் சிதறப்பண்ணி அழித்துப்போட்டான். அதினிமித்தம் எசமானுக்கு முன் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டான்.

5. எசமான் அதைக்கேட்டு என்ன செய்தான்.

க. அவன் உக்கிராணக் கணக்கை ஒப்புவிக்கும்படியாக அழைத்தான்.

உ. அவனை உத்தியோகத்தைவிட்டுத் தள்ளிப்போட்டான். அதைப்பற்றி நம்முடைய வாக்கியம் சொல்லுகிறதாவது: அப்பொழுது அவனை அழைத்து, அவனுடனே: உன்பேரில் நான் இதைக் கேட்கிறதேது, உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி, ஏனெனில் இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக் கூடாது என்றான் (உ).

6. அப்பொழுது உக்கிராணக்காரன் என்ன செய்தான்.

தான் பிற்காலத்திலே வருத்தப்படாதபடிக்கும் பசியினாலே சாகாதபடிக்கும் என்ன செய்வதென்று உடனே சிந்தித்துக்கொண்டான். ஆனால் அவன் அப்படிச் செய்த யோசனை மோசமானது. எப்படியெனில், உண்மையான வேலையினாலும் பிரயோசனத்தினாலும், தன்னையுந் தன்னுடையவர்களையுங் காப்பாற்றுவது அவனுடைய நோக்கமல்ல.

அவன் வேலை செய்து வழக்கப்பட்டவனுமல்ல. இரந்து சாப்பிடவும் அவனுக்குப் பிரியமில்லை, அது அவனுக்கு வெட்கமாகக் காணப்பட்டது. ஆதலால் அவன் செய்த யோசனை என்னவென்றால், சனங்கள் நன்றியறிந்தவர்களாய்த் தன்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொண்டு காப்பாற்றும்படியாக அவர்களுக்கு எசமானுடைய சொத்துக்களில் சிலதைக் கொடுக்கத் தீர்மானித்தான். அதைப்பற்றி நம்முடைய வாக்கியஞ் சொல்லுகிறதாவது: உக்கிராணக்காரனோ வென்றால் தனக்குள்ளே சொல்லிக் கொண்டதாவது: என்ன செய்வேன், என் எசமான் உக்கிராண விசாரிப்பை என்னை விட்டு வாங்கிப்போடுகிறானே, கொத்துகிறதற்கு எனக்குப் பெலனில்லை, இரக்கவும் வெட்கப்படுகிறேன். நான் உக்கிராண விசாரிப்புக்குப் புறம்பாய்த் தள்ளப்படும்போது, என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாக, நான் செய்யவேண்டியது இன்னதென்று அறிவேன் என்பதே (௩. ௪).

7. உக்கிராணக்காரன் இந்தத் தன்னுடைய தீர்மானத்தை நிறைவேற்றினனா.

ஆம், அவன் தன் எசமானுடைய கடன்காரரை அழைத்து, முந்தினவனுக்கு: நீ என் எசமானுக்குப் பட்ட கடன் எத்தனை என்றான். அவன் நூறு குடம் எண்ணெய் என்றான். அப்போது அவனுடனே: நீ உன் சீட்டைவாங்கி, உட்கார்ந்து, ஐம்பது என்று சீக்கிரமாய் எழுது என்றான். பிறகு வேறொருவனோடே: நீயோ பட்ட கடன் எத்தனை என்றான். அவன் நூறு கலம் கோதும்பை என்றான். அப்போது அவனுடனே: நீ உன் சீட்டை வாங்கி, எண்பது என்று எழுது என்றான் என்பதே (௫-௭). ஆதலால் அவன் முந்தினவனுக்கு ஐம்பது குடம் எண்ணெயையும், பிந்தினவனுக்கு இருபது கலம் கோதும்பையும் கொடுத்தான்.

8. அவன் இப்படிச் செய்தது சரியா.

இல்லை. அவன் இப்படிச் செய்தது மோசம். அது பராபரன் ஏழாங் கற்பனையிலே விலக்கின களவு. உக்கிராணக்காரன் இந்தக் கடன்காரருக்குக் கொடுத்ததெல்லாத்தையும் தன் எசமானுடைய சொத்திலிருந்து திருடினான்.

9. அப்படி அநியாயஞ்செய்த இந்த உக்கிராணக்காரனைக் கர்த்தர் ஏன் புகழ்ந்தார்.

அவர் அவன் செய்த அநியாயத்தின் நிமித்தமல்ல, அவன் வருங்காலத்துக்கென்று தன்னைக் காப்பாற்றும்படிக்குச் செய்த உபாயத்திலே காட்டின புத்தியினிமித்தமும் சுறுசுறுப்பினிமித்தமும் அவனைப் புகழ்ந்தார். அதைப்பற்றி



நம்முடைய வாக்கியஞ் சொல்லுகிறதாவது: அநீத உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எசமான் அவனைப் புகழ்ந்தான். ஏனெனில் வெளிச்சத்தின் பிள்ளைகளைப் பார்க்க இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்களுடைய சந்ததிக்குப் புத்திமான்களாயிருக்கிறார்கள் (அ).

10. இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் ஆர்.

விசேஷமாய் இந்த லோகத்தைச் சிநேகிக்கிற குணப்படாத மனிதர். அவர்களுக்கு இந்த அநீத உக்கிராணக்காரன் ஒரு திருஷ்டாந்தம்.

11. வெளிச்சத்தின் பிள்ளைகள் ஆர்.

விசுவாசத்தின் வெளிச்சத்திலும், கிறிஸ்தவமான நற்கிரியைகளின் வெளிச்சத்திலும் நடக்கிற தேவபக்தியுள்ளவர்களே வெளிச்சத்தின் பிள்ளைகள்.

12. ஆனால் தேவபக்தியுள்ளவர்கள் பராபரனாகிய கர்த்தரை அறிவார்களே, குணப்படாதவர்களுக்கோ பரிசுத்த ஆவியால் வரும் உணர்வில்லையே. அப்படியிருக்க அவர்களைப் பார்க்க இவர்களே புத்திமான்களாயிருக்கிறார்களென்று எப்படிச் சொல்லக்கூடும்.

நம்முடைய இரட்சகர்: குணப்படாதவர்களைத் தேவபக்தியுள்ளவர்களைப் பார்க்கச் சகலத்திலும் புத்திமான்களென்று சொல்லாமல், அவர்கள் தங்களுடைய சந்ததிக்கு, அதாவது சுபாவத்திற்கு அவர்களைப் பார்க்கப் புத்திமான்களாயிருக்கிறார்களென்று சொல்லுகிறார். அப்படியே ஒரு எறும்பு தன்னுடைய சந்ததிக்கு, அதாவது சுபாவத்துக்கு மனுஷனைப் பார்க்கச் சுறுசுறுப்புள்ளதென்று சொல்லலாம். நம்முடைய இரட்சகர் இந்த வார்த்தையினாலே குணப்படாதவர்கள் தங்களுடைய லௌகீக காரியங்களிலேயும் வேலைகளிலேயும், தேவபக்தியுள்ளவர்கள் தங்களுடைய ஞான காரியங்களிலே காண்பிக்காத புத்தியையும் கவலையையுங் காண்பிக்கிறார்களென்று சொல்லுகிறார். திருஷ்டாந்தமாக, இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பூமிக்கடுத்த காரியங்களிலே காட்டுகிற சுறுசுறுப்பையும் யோசனையையும், பராபரனுடைய பிள்ளைகள் பரம ஐசுவரியத்தையும் பராபரனிடத்தில் மகிமையையும் மோட்சமாகிய அவருடைய நித்திய வாசஸ்தலத்தையும் அடையும்படிக்குக் காட்டுகிறதில்லை.

13. இந்த உவமையினால் நம்முடைய இரட்சகர் நமக்குப் போதிக்கிறதென்ன.

நாம் இச்சீவியத்திலே எப்படி நடக்கவேண்டுமென்றும், பராபரன் நமக்குக் கொடுத்த நன்மைகளை எப்படிக் கையாடவேண்டுமென்றும் போதிக்கிறார்.

**14.** அந்த ஐசுவரியமுள்ள மனுஷன் ஆர்.

பராபரனாகிய கர்த்தர். சர்வலோகமும் அதிலுள்ள சகல ஐசுவரியமும் பொக்கிஷமும் அவருடையது.

**15.** உக்கிராணக்காரன் ஆர்.

மனுஷர் எல்லாரும். ஏனென்றால் பராபரன் அவர்களுக்கு லோகத்திலுள்ள தம்முடைய நன்மைகளை, அவர்கள் அவைகளை அவருடைய மகிமைக்கென்றும், பிறத்தியானுடைய பிரயோசனத்துக்கென்றும் உபயோகப்படுத்தும்படிக்கு ஒப்புவித்தார்.

**16.** பராபரன் மனுஷருக்குக் கொடுக்கிற நன்மைகள் என்ன.

அவர் தமது பரிசுத்த வசனத்தையும் சாக்கிரமெந்துகளையும் அளித்து, அவைகளினால் நமக்குத் தம்முடைய கிருபை, பரிசுத்த ஆவி, நித்திய [illegible] முதலான ஞானாவுகளைக் கொடுக்கிறார். இதுவுமல்லாமல் அவர் இச்சீவனுக்கடுத்த சரீர நன்மைகளையுங் கூடக் கொடுக்கிறார். அதாவது:

க. ஞானம், புத்தி, நல்ல ஞாபகம் முதலான ஆத்து[illegible]சணங்களையும்,

உ. சுகம், பெலன், அழகு முதலான சரீர நன்மைகளையும்,

ங. ஐசுவரியம், கனம், நல்ல சிநேகிதர் முதலான வாழ்வின் நன்மைகளையுங் கொடுக்கிறார்.

**17.** ஒரு கிறிஸ்தவன் பராபரனுடைய இந்த ஈவுகளை எப்படிக் கையாட வேண்டும்.

க. பராபரனுடைய மகிமைக்கென்று. எப்படியெனில், அவன் அவைகளுக்காக எப்போதும் பராபரனை [illegible]தோத்திரித்துப் புகழ வேண்டும்.

உ. தன்னுடைய இரட்சிப்புக்கென்று. அவன் அவைகளால் பராபரனையும் நித்திய சீவனையும் தேட ஏவப்பட வேண்டும்.

ங. பிறத்தியானுடைய பிரயோசனத்துக்கென்று கையாடவேண்டும். அவன் அவைகளினாலே பிறத்தியானுக்கு நன்மை செய்வது அவசியம். அப்படியே அவைகளைக் கையாடாமலிருக்கிறவர்கள் பொல்லாத உக்கிராணக்காரராயிருக்கிறார்கள். ஆனால் அவர்களும் பராபரனுக்கு அறிவிக்கப்பட்டு, அவருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாயிருப்பார்கள்.

**18.** மனுஷரைப்பற்றி பராபரனுக்கு அறிவித்து அவர்கள் பேரில் குற்றஞ்சாட்டுகிறவர்கள் ஆர்.



க. மனுஷனுடைய அக்கிரமங்களினிமித்தம் விசனப்படுகிற பரிசுத்த தேவ தூதர்கள்.

உ. குணப்படாதவர்களுடைய அக்கிரமங்களினிமித்தம் பெருமூச்சுவிட்டுப் பராபரனை நோக்கிக் கூப்பிடுகிற தெய்வபக்தியும் விசுவாசமுமுள்ள மனிதர்.

ங. பராபரன் மோசேயைக்கொண்டு கொடுத்த நியாயப்பிரமாணம். கிறிஸ்துநாதர்: உங்களைக் குற்றஞ் சுமத்துகிறவன் இருக்கிறான், அவன் நீங்கள் நம்பின மோசே தானே என்று தாம் சொன்ன வார்த்தையினாலே காண்பித்தபடியே, நியாயப்பிரமாணம் குணப்படாத எல்லாரையும் குற்றஞ் சுமத்தி ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது (யோவா. ரு, சரு).

ச. பொல்லாத சாத்தான். அதைப்பற்றிச் சத்திய வேதம் சொல்லுகிறதாவது: இரவும் பகலும் நம்முடைய சகோதரரைப் பராபரனுக்கு முன்பாக நேரஞ் சுமத்தக் குற்றஞ் சாட்டினது தாழத் தள்ளுண்டு போச்சுது (அறி. யஉ, ய).

**19.** மனுஷர் பராபரனாகிய கர்த்தருக்கு எப்போது கணக்கு ஒப்புவிக்கவேண்டியது.

மரணவேளையிலும் கடைசி நாளி[illegible]ம். அப்போது: இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக்கூடாது என்று அவர்களுக்குச் சொல்லப்படும். அவர்கள் உக்கிராண விசாரிப்பை விட்டுத் தள்ளப்படுவார்கள். உன் உக்கிராணக்கணக்கை ஒப்புவியென்று கர்த்தர் சொல்லுகிறபோது, அவர்கள் தங்கள் முழுச்சீவியத்துக்குங் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

**20.** ஆனால் ஒரு மனுஷன் தன் சீவ காலத்திலே தனுண்டிய பொல்லாத உக்கிராண விசாரிப்பை உணர்ந்தால் அவன் செய்யவேண்டியதென்ன.

அவன் அநீத உக்கிராணக்காரனுடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

**21.** அப்படியானால், ஒரு மனுஷன் அநீத உக்கிராணக்காரனைப்போல் தன் எசமானை மோசம் போக்கலாமா.

கூடாது. ஒரு மனுஷனும் எல்லாவற்றையும் அறிந்திருக்கிற கர்த்தரை மோசம்பண்ண முடியாது. ஆகிலும் நாம் அந்த உக்கிராணக்காரனாலே கற்றுக்கொள்ளவேண்டியதென்னவென்றால்:

க. கிறிஸ்[illegible] நல்ல புத்தியையும் சாக்கிரதையையும். கிறிஸ்துநாதர்: [illegible] குணப்படுங்கள் என்று சொன்னபடியால் (மத். ச, யச), நாம் நமது சீவ காலத்திலே நான்

என்ன செய்வேன் என்று சொல்லி, குணப்பட்டு, நம்முடைய இரட்சிப்பைத் தேடவேண்டும்.

உ. உபகாரஞ் செய்கிற கிறிஸ்தமான குணத்தை. ஏனெனில் பராபரன் நமக்குக் கொடுத்த ஈவுகளினால் நன்மை செய்யவேண்டும். உக்கிராணக்காரன் யாருக்கு நன்மை செய்தான் என்றால், எளியவர்களுக்குத் தான். ஆதலால் நம்முடைய இரட்சகர் சுவிசேஷவாக்கியத்தின் கடைசியில் சொல்லுகிறதாவது: நானும் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மாளும்போது, உங்களை நித்திய கூடாரங்களில் ஏற்றுக்கொள்வார் உண்டாக, அநீத லோகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள் என்பதே (கூ).

22. லோகப்பொருள் இங்கே ஏன் அநீதப் பொருள் என்று சொல்லப்படுகிறது.

அது அடிக்கடி அநியாயத்தோடு சம்பாதிக்கப்படுகிறபடியாலும், அநியாயமாய் உபயோகம் பண்ணப்படுகிறபடியாலுந்தான்.

23. சிநேகிதர் என்கிற வார்த்தையினால் கர்த்தர் இங்கே ஆரைக் குறிக்கிறார்.

நாம் நமது நன்மைகளைக் கொடுக்கிறதினாலே நமக்குச் சிநேகித[ரா]க்குகிற எளியவர்க[ளை]த் தான்.

24. நித்[திய] [கூடார]ங்களாவதென்ன.

விசுவாசிகள் இச்சீவனுக்குப் பிற்பாடு என்றென்றைக்கும் வாசமாயிருக்கிற மோட்ச இராச்சியந் தான்.

25. எளியவர்கள் நம்மை மோட்சத்தில் எப்படி ஏற்றுக்கொள்வார்கள்.

அவர்கள் தங்களுடைய புண்ணியங்களினாலே நம்மை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகிலும்,

க. அவர்கள் நமக்காகப் பராபரனை நோக்கிச் செய்கிற செபத்தினாலும்,

உ. அவர்கள் கடைசி நாளிலே பராபரனுக்கும் எல்லாப் பரிசுத்த தூதருக்கும் பரிசுத்தவா[ன்]களுக்கும் முன்பாக நாம் அவர்களுக்குச் செய்த உபகார[ங்]களை அறிவித்து, நமக்காகக் கொடுக்கிற நற்சாட்சியினாலே[யு]ம்,

ங. கர்த்தராகிய இயேசுகி[றி]ஸ்[து]வினாலும் நம்மை ஏற்றுக்கொள்ளுவார்கள். ஏனென்றால் [அ]வர் [இ]ந்த எல்லா எளியவர்களின் நிமித்தம் கடை[சி] நாளிலே அவர்களுக்கு நன்மை செய்தவர்களுக்குச் சொல்வதாவது: வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, லோகத்தோற்ற முதல் உங்களுக்கு ஆயத்தம்ப[ண்]ணப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். [ஏ]தேனென்றால் பசியாயி



ருந்தேன், எனக்குச் சாப்பாடு கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; பரதேசியாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; அம்மணமாயிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னண்டைக்கு வந்தீர்கள் என்பதே (மத். உரு, ஙச-ஙசு).

### படிப்பினை.

26. இந்தச் சுவிசேஷவாக்கியத்தினால் நாம் என்னத்தைக் கற்றுக் கொள்ளுகிறோம்.

I. கர்த்தராகிய பராபரனால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

அவர் ஐசுவரியமுள்ள தேவனாயிருக்கிறார். ஏனென்றால் கிறிஸ்துநாதர் அவரை ஐசுவரியமுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுகிறார். அவர் தம்மைக் குறித்து: பரமண்டலங்கள் நம்முடைய ஆசனமும் பூமி நம்முடைய பாதபடியுமாயிருக்கிறதென்றும் (எசா. சுசு, க), சகல காட்டுச் சீவன்களும் பருவதங்களில் ஆயி[ர]ங்களாய்த் திரிகிற மிருகங்களும் நம்முடையவைகளே என்று [ச]ொல்லுகிறார் (சங், ருல, ய). ஆகையால் தம்முடைய ஐசுவரியத்தினா[லே] [ந]முடைய தரித்திரத்தில் நமக்கு ஒத்தாசை செய்யக்கூடிய பராபரன் பேரில் நம்முடைய முழு நம்பிக்கையையும் வைப்பது நல்லது.

II. உக்கிராணக்காரராயிருக்கிறவர்கள் இந்த அநீத உக்கிராணக்காரனாலே கற்றுக்கொள்ள வேண்டியதாவது:

க. அவர்கள் சகல உண்மைத் தாழ்ச்சிக்கும் மோசத்துக்கும் அநியாயத்துக்கும் எச்சரிக்கையாயிருந்து, தங்கள் எசமான்களுடைய சொத்துகளை உத்தரவில்லாமல் அபகரித்த இந்த உக்கிராணக்காரனைப் போலிராதபடிக்குக் கவலைப்படவேண்டும்.

உ. அவர்கள் சோம்பலுக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். கொத்துகிறதற்கு எனக்குப் பெலனில்லை என்று சொன்ன இந்த உக்கிராணக்காரனைப்போல் இருக்கக்கூடாது. ஏனென்றால் சோம்பேறிகளாய்த் திரிகிறதினாலே அவர்கள், பராபரனாகிய கர்த்தரிடத்தில் நாளைத் திருடிக்கொள்ளுகிறது மல்லாமல், தங்கள் எசமான்களிடத்தில் வேலைசெய்து சம்பாதிக்கக் கூடியதை வேறு விதத்தினாலும் ஏமாற்றி எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆதலால் அவர்கள் அப்போஸ்தலனுடைய புத்திமதியை நன்றாய்க் கவனிக்க வேண்டும். அதாவது:

வேலைக்காரரே, மாம்சத்தின்படி எசமான்களாயிருக்கிறவர்களுக்கு நீங்கள் எல்லாத்திலுங் கீழ்ப்படிந்து, மனுஷருக்கு இதமியக்காரர்போல் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், இருதயங் கபடில்லாமையாய்ப் பராபரனுக்குப் பயந்து ஊழியஞ் செய்யுங்கள் என்பதே (கொலோ. ௩, ௨௨).

III. எல்லா மனிதரும் அநீத உக்கிராணக்காரனாலே கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. அவர்கள் கையாடுகிற நன்மைகள் தங்களுக்குச் சொந்தமாயிராமல், அவர்களை விசாரிப்புக்காரராகவும் உக்கிராணக்காரராகவும் வைத்த பராபரனுடையதாயிருக்கிறது. நீ பெற்றிராதது எது உனக்கு இருக்கிறது. நீயும் பெற்றாயே யாகில் பெற்றிராதவன்போல ஏன் பெருமை பாராட்டுகிறாய் என்கிறவார்த்தையே இதைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது (௧ கொரி. ௪, ௭).

௨. அவர்கள் மரணவேளையிலும் நியாயத்தீர்ப்பின் நாளிலும், தாங்கள் அந்தந்த நிலைமையிலேயும் உத்தியோகத்திலேயும் பராபரனால் பெற்றுக்கொண்ட ஈவுகளுக்காகக் கணக்குக் கொடுக்க வேண்டும். அப்போது அவர்கள் எல்லாருக்கும்: உன் உக்கிராணக் [illegible] கை ஒப்புவி என்று சொல்லப்படும். [illegible] னால் அவனவன் தன் சரீரத்தினால் நடப்பித்த நன்மைக்காகிலுந் தீமைக்காகிலுந் தக்கதுகளை அடையும்படிக்கு நாம் எல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்பட வேண்டியது (௨ கொரி. ௫, ௰).

௩. பராபரன் நமக்குக் கொடுத்த நன்மைகளை நாம் பராபரனுடைய மகிமைக்கென்றும், பிறத்தியானுடைய பிரயோசனத்துக்கென்றும், ஆம், விசேஷமாய் நமக்கடுத்த எளியவர்களுடைய உதவிக்கென்றுங் கையாட வேண்டும். அதைக் குறித்தே இயேசுநாதர் உவமையாய்ச் சொல்லுகிறதாவது: நீங்கள் மாளும்போது உங்களை நித்திய கூடாரங்களில் ஏற்றுக்கொள்வார் உண்டாக அநீத லோகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள் (௯). விசுவாசிகள் செய்கிற உபகாரங்களினாலே அதிக ஆசீர்வாதம் அவர்களுக்கு வருகிறபடியால் தாவீது அதைப்பற்றிச் சொல்லுகிறதாவது: சிறுமைப்பட்டவன்மேல் கவனிப்பான சிந்தையுள்ளவன் பாக்கியவான், கர்த்தர் அவனைத் தீங்குநாளிலே விடுவிப்பார். கர்த்தர் அவனைத் தற்காத்து, அவனை உயிரோடே வைப்பார். பூமியின்மேலே பாக்கியவானாயிருப்பான். அவனை அவன் சத்துருக்களின் மனதுக்கு ஒப்புக்கொடார். கட்டிலின்மேல்



பிணியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார், அவனுடைய வியாதியிலே அவன் படுக்கையை எல்லாம் மாறப்பண்ணுவீர் என்கிறான் (சங். ௪௧, ௨-௪).

௪. நாம் புத்தியாயிருந்து, நம்முடைய உக்கிராணக் கணக்குச் சரியல்லவென்று நாம் கண்டவுடன் காலமிருக்கும்போதே: என்ன செய்வேனென்று சொல்லிச் செய்யத்தக்கதைச் செய்ய வேண்டும். அதாவது, நாம் குணப்பட்டு இயேசுகிறிஸ்துவினிமித்தம் பராபரனிடத்தில் பாவமன்னிப்பைத் தேடவேண்டும். பிறகு நாம் எச்சரிக்கையாய் நடந்து, நம்மிடத்தில் கணக்குக் கேட்கப்படும்போது, நாம் பயமில்லாமல் சந்தோஷத்தோடு கணக்கொப்புவிக்க ஆயத்தமாயிருக்கும்படி நம்முடைய நன்மைகளைச் சரியாய்க் கையாட வேண்டும். அதற்குக் கர்த்தர் நமக்குக் கிருபை அளிக்கக் கடவார்.

நம்முடைய பராபரனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவருக்கு என்றென்றைக்குங் கனமும் மகிமையும் உண்டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு உ௬௰.)

சுவி. லூக். ௰௯, ௪௧—௪௭.

அவர் சமீபித்தபோது பட்டணத்தைப் பார்த்து, அதின்மேல்
அழுது: 42 நீயும் இந்த உன்னுடைய நாளிலாகிலும் உன் சமாதா
னத்துக்கானதுகளை அறிந்தால், நாவிலை; இப்போதோவெனில் உன்
கண்களுக்கு மறைவாயிருக்கிறது. 43 அதேனென்றால், உன்னைச்
சந்திக்குங் காலத்தை நீ அறியாமல் போனபடியினாலே, உன் சத்
துருக்கள் உன்னைச் சூழக் கொத்தளம்போட்டு, உன்னை வளைந்து
கொண்டு, எங்கும் உன்னை இறுகப்பிடித்து, 44 உன்னையும் உன்னி
லிருக்கிற உன் பிள்ளைகளையுந் தரையாக்கிப்போட்டு, உன்னில் கல்
லின்மேல் கல்லை வைக்காதிருக்கும் நாட்கள் உன்மேல் வரும் என்
றார். 45 அவர் தேவாலயத்துக்குள் பிரவேசித்து, அதிலே விற்
கிறவர்களையுங் கொள்ளுகிறவர்களையும் புறம்பே துரத்தத் தொடங்
கி, அவர்களுடனே: 46 நம்முடைய வீடு செபத்தின் வீடாயிருக்
கிறது என்று எழுதியிருக்கிறது; ஆனால் நீங்கள் அதைக் கள்ளர்
கெபியாக்கினீர்கள் என்றார். 47 அவர் அனுதினமும் தெய்வாலயத்
தில் உபதேசித்துக் கொண்டிருந்தார். ஆனால் பிரதான ஆசாரியர்
களும் வேதபாரகருஞ் சனத்தின் மூப்பரும் அவரைக் கொன்று
போட வகைதேடி, 48 அதை எப்படி செய்வதென்று காணாமல்
போனார்கள்; ஏனெனில் சனமெல்லாம் அவரைக் கேட்டு அண்டிக்
கொண்டிருந்தது.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தில் எத்தனை பங்குண்டு.

இரண்டு பங்குண்டு.

## முதலாம் பங்கு.

2. முதலாம் பங்கு எதைப்பற்றியது.

நம்முடைய இரட்சகர் எருசலேம பட்டணத்தின் மேல் விட்ட கண்ணீரைப் பற்றியது.

3. இயேசுநாதர் அதின்மேல் எப்போது கண்ணீர் விட்டார்.

அவர் தம்முடைய பாடுகளுக்கு முந்தி கடைசிவிசையாக எருசலேம் பட்டணத்துக்குள் பிரவேசிக்கையில், அவரை ஏற்றுக்கொண்ட சனங்கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசியன்னா, கர்த்தரின் நாமத்திலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று அவரைப் புகழ்ந்து பாடின சமயத்தில்தான்.

4. அவர் அப்போது ஏன் அழுதார்.

க. எருசலேம் பட்டணத்தார் செய்த பாவ அக்கிரமங்களினிமித்தமும்,

உ. அவர்கள் குணப்படாமையினிமித்தமும். யூதர் குணப்பட மனதாயிராமல், அவர்களுடைய கிருபையுள்ள சந்திப்பின் காலத்தை அசட்டைபண்ணினதைப்பற்றி இயேசுநாதர்: நீயும் இந்த உன்னுடைய நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கானதுகளை அறிந்தால் நாவிலை. இப்போதோ அவை னில் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது என்று சொல்லுகிறார் (சஉ).

ந. அவர்கள்மேல் வரப்போகிற பெரிய தண்டனையினிமித்தமும். அதைப்பற்றி நம்முடைய வாக்கியத்திலே: உன்னைச் சந்திக்கும் காலத்தை நீ அறியாமல் போனபடியினாலே, உன் சத்துருக்கள் உன்னை வளைந்துகொண்டு, எங்கும் உன்னை இறுகப்பிடித்து, உன்னையும் உன்னிலிருக்கிற உன் பிள்ளைகளையுந் தரையாக்கிப்போட்டு, உன்னில் கல்லின்மேல் கல்லை வைக்காதிருக்கும் நாட்கள் உன்மேல் வரும் என்று இரட்சகர் சொன்னார் (சந. சச).

5. யூதர் அறியாத சந்திப்பின் காலம் என்ன.

அவர்களுக்கு அருளப்பட்ட கிருபையின் காலம், அதாவது அவர் அவர்களிடத்திலிருந்து அவர்களுக்குப் பிரசங்கித்துப் போதகம் பண்ணின காலமாம். அவர்கள் தங்கள் கிருபையின் காலத்தை அறியாமல், இயேசுநாதரைத் துன்பப்படுத்தி, அப்படியே தங்கள் சமாதானத்துக்கானதுகளை நினையாதபடியால் இந்தத் தண்டனை அவர்கள்மேல் வந்தது.



6. ஆனால் கர்த்தர்: அது உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறதென்று ஏன் சொல்லுகிறார். அவர் அதை அவர்களுக்கு வெளிப்படுத்தவில்லையா.

அவர்களுக்கு ஒரேவிசை மாத்திரமல்ல, அநேகம்விசை எல்லாவற்றையும் வெளிப்படுத்தி, அவர்களுடைய பட்டணம் அவர்கள் பாவங்களினிமித்தம் அழிக்கப்படுமென்று அறிவித்திருந்தார். ஆனால் அவர்கள் அதை விசுவாசிக்கவில்லை. ஆதலால் அவர்கள்மேல் வரப்போகிற இந்த ஆக்கினை அவர்களுடைய கண்களுக்கு மறைவாயிருந்ததற்கு அவர்களுடைய அவிசுவாசமே காரணம்.

7. அந்த ஆக்கினை அவர்கள்மேல் வந்ததா.

ஆம், இயேசுநாதர் சொன்னபடியே வந்தது. ஏனென்றால் நாற்பது வருஷத்துக்குப் பிந்தி யூதர்களுடைய சத்துருக்களாகிய ரோமர் வந்து, அந்தப் பட்டணத்தைச் சூழந்தெற்றுபோட்டு, வளைந்துகொண்டு எங்கும் இறுகப்பிடித்தார்கள். அப்படியே அப்பட்டணம் அவர்கள் கையிலே அகப்பட்டது. கல்லின்மேல் கல் வைக்கப்படாதபடிக்கு அதிலுள்ள தெய்வாலயத்தையும் மற்ற அலங்காரமான கட்டடங்களையும் முழுதும் அழித்துப்போட்டார்கள்.

8. இந்த ஆக்கினை யூதர்கள்மேல் ஏன் வந்தது.

அவர்கள் குணப்படாமலும், இயேசுநாதரும் அவருடைய அப்போஸ்தலரும் சொன்ன புத்திமதியைக் கேளாமலும், தங்கள் கிருபையின் காலத்தை நினையாமலும் இருந்தபடியால் தான். யூதர்கள் தங்களைச் சந்திக்கும் காலத்தை அறியாதபடியால் இந்த ஆக்கினை அவர்கள்மேல் வரும் என்று இயேசுநாதர் அறிவித்துச் சொல்லுகிறார்.

## படிப்பினை.

9. சுவிசேஷ வாக்கியத்தின் இந்த முதலாம் பங்கினாலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. கர்த்தராகிய கிறிஸ்துவால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. அவர் ஆகாதவனுடைய மாணத்தை விரும்பாமல், அவன் குணப்பட்டுப் பிழைப்பதையே விரும்புகிறார். அவர் அதைத் தாம் தண்டனைக்குள்ளாக்கப்போகிற யூதருக்காக விட்ட கண்ணீரினாலே காண்பிக்கிறார். ஆம், யூதர்கள் தங்கள் சமாதானத்துக்கானதுகளை அறிய வேண்டுமென்று விரும்பி, அவர் அதைத் தாம் சொன்ன வார்த்தையினாலே யுங் காண்பிக்கிறார். பாவிகளின்மேல் இருக்கும் தம்முடைய

இரக்கமுள்ள மனதை எசேக்கியேல் ௩௩, ௰௧-லுள்ள தெளிவான வார்த்தையினால் அறிவித்து: நாம் ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல், ஆகாதவன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறோமென்று நம்முடைய சீவனைக்கொண்டு சொல்லுகிறோம் என்கிறார்.

௨. மற்ற மனுஷர்களுக்கு வருந் துன்பங்களைப்பார்த்து நாம் நகைக்காமல் அழவேண்டும். இயேசுநாதர் தாமே யூதர்களுக்கு வரும் ஆக்கினையை நினைத்து அப்படியே செய்தார். நாமும் பவுல் அப்போஸ்தலனுடைய புத்திமதியின்படியே சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்பட்டு, அழுகிறவர்களுடனே அழவேண்டும் (ரோ. ௰௨, ௰௫).

௩. நாம் விசேஷமாய் நமது சுயபாவங்களுக்காக அழுது விசனப்பட வேண்டும். இயேசுநாதர் அந்நியருடைய பாவத்துக்காக அழுதாரானால், நாம் நம்முடைய சுயபாவங்களுக்காக அழுகிறது எத்தனை அதிக நியாயமாம். நாம் தாவீதோடு சொல்ல வேண்டியதென்னவெனில்: கர்த்தாவே, தாழ்வுகளிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். ஆண்டவரே, என் சத்தத்தைக் கேளும். உம்முடைய செவிகள் என் விண்ணப்பங்களின் சத்தத்துக்குக் கவனித்திருக்கக் கடவது. கர்த்தாவே, அக்கிரமங்களை நோக்கிக் கொண்டிருந்தீரானால், ஆர் நிலைநிற்பான், ஆண்டவரே. ஆனால் உமக்குப் பயப்படும்படிக்கு மன்னிப்பு தேவரீரிடத்திலிருக்கிறது (சங். ௱௩௰, ௧-௪).

II. யூதரால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. பாவமும் விசேஷமாய் குணப்படாமையும் நம்முடைய கேட்டுக்குக் காரணமாயிருக்கிறது. யூதர் ஏன் அப்படித் தண்டிக்கப்பட்டார்கள் என்று கேட்டால், அவர்கள் தங்கள் பாவங்களை விட்டுக் குணப்பட மனதில்லாததினால்தான். அப்படியே கிறிஸ்துநாதர் நம்மெல்லாருக்கும்: நீங்கள் குணப்படாதேபோனால், எல்லாரும் இப்படியே கெடுவீர்களென்று எச்சரித்துச் சொல்லுகிறார்.

௨. பாவத்தின் மேலிருக்கும் பராபரனுடைய கோபம் மகா பெரியதாயிருக்கிறது. பராபரனாகிய கர்த்தர் மற்றெல்லாச் சனங்களிலும் இஸ்ரவேல் சனத்தைத் தம்முடைய சனமாகத் தெரிந்துகொண்டு, அதற்கு அநேகம் உபகாரங்களைச் செய்து வந்தார். ஆனால் இஸ்ரவேல் பராபரனுக்கு முன்பாகப் பாவஞ்செய்து குணப்படாமல் போனபோது, கிருபையுள்ள பராபரன் கோபமாகி, தம்முடைய பயங்கரமான தண்டனையை அதின்மேல் இறங்கப்பண்ணினார். அப்படியே பராபரன் குணப்படாத எல்லாப் பாவிகளையுந் தண்



டிப்போமென்று பயமுறுத்துகிறார். பராபரன் நீதியுள்ள நியாயாதிபதியும் நாள்தோறும் சினத்திருக்கிற தேவனுமானவர். மனந்திரும்பாதிருந்தால், தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார். அவர் தம்முடைய வில்லை நாணேற்றி, அதை முஸ்திப்பாக்கி, அவனுக்குச் சாவுக்கினையான ஆயுதங்களை ஆயத்தம் பண்ணினார், தம்முடைய அம்புகளை அக்கினி அம்புகளாக்குவார் (சங். ௭, ௰௨-௰௪).

௩. யுத்தம் பராபரனால் வரும் பெரிய தண்டனையாம். யுத்தத்தினால் யூதர் எங்கும் இறுகப்பிடிக்கப்பட்டு, அவர்களுடைய பட்டணத்தை, அதில் கல்லின்மேல் கல் வைக்கப்படாதபடிக்கு அழிக்கும்படியாய் ஒப்புக்கொடுத்தார்.

௪. நாம் பாவங்களை விட்டுக் குணப்பட்டு, எச்சரிக்கையாய் நடக்க வேண்டும். நாம் புத்தியாயிருந்து கிருபையின் காலத்தை அசட்டைபண்ணாதபடிக்கு நம்முடைய இரட்சகர் இந்தக் கடினமான நீதியின் திருஷ்டாந்தத்தை நம்முடைய எச்சரிப்புக்கென்று நமது கண்களுக்கு முன்பாக வைக்கிறார். அப்படிப் பராபரன் சங்கீதம் ௯௫, ௭. ௮-ஆல் நம்மை எச்சரித்து: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்டீர்களானால், உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள் என்று புத்தி சொல்லுகிறார்.

## இரண்டாம் பங்கு.

10. சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கு எதைப்பற்றியது.

எருசலேம் தெய்வாலயத்தின் சுத்திகரிக்குதலைப் பற்றியது.

11. அதைச் சுத்திகரித்ததார்.

நமது இரட்சகராகிய இயேசுநாதர்.

12. அவர் எதை நீக்கிச் சுத்திகரித்தார்.

விற்கிறவர்களையுங் கொள்ளுகிறவர்களையும் வெளியே துரத்திச் சுத்திகரித்தார். அதைப்பற்றிச் சுவிசேஷவாக்கியம்: அவர் தெய்வாலயத்துக்குள் பிரவேசித்து, அதிலே விற்கிறவர்களையுங் கொள்ளுகிறவர்களையும் புறம்பே துரத்தத் தொடங்கினார் என்று சொல்லுகிறது (௪௫).

13. அவர்கள் எருசலேம் தெய்வாலயத்தில் விற்கப்பட்டதை வாங்கினார்கள்.

பலியிட வந்தவர்கள் தங்கள் பலிக்குத் தேவையான புறா, ஆடுமாடு முதலியதை வாங்கினார்கள். தெய்வாலயத்திலே அவைகளை கடைக்காரர் அவர்களுக்கு விற்றார்கள்.

14. விற்கிறதுங் கொள்ளுகிறதுங் குற்றமா.

இல்லை. ஆனால் அவர்கள் அதைத் தெய்வாலயத்தில் செய்தது குற்றம்.

15. இந்த மிருகங்கள் தேவாராதனைக்கு அவசியமாயிருக்கும்போது, யூதர்கள் அதைத் தெய்வாலயத்தில் விற்றது நல்ல கிரியையாயிருக்கிறதில்லையா.

இல்லை. ஏனெனில் யூதர் இந்த வியாபாரத்தில் தேவாராதனையைப் பார்க்காமல், தங்கள் லாபத்தை மாத்திரம் பார்த்தார்கள். மேலுந் தெய்வாலயம் மனுஷர் அதில் வியாபாரஞ் செய்யும்படியாக அல்ல, அவர்கள் அதிலே ஜெபம் பண்ணிப் பராபரனை வணங்கும்படியாகக் கட்டப்பட்டிருந்தது. ஆதலால் இயேசுநாதர் யூதருக்கு: நம்முடைய வீடு செபத்தின் வீடாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறது. ஆனால் நீங்கள் அதைக் கள்ளர் கெபியாக்கினீர்கள் என்றார் (௪௬).

16. யூதர் தெய்வாலயத்தை எதினாலே கள்ளர் கெபியாக்கினார்கள்.

பொருளாசையினாலும் அநியாயத்தினாலும். எப்படியெனில், அவர்கள் எளியவர்களுடையதை அபகரித்துக் கொலைபாதகரானார்கள். எளிமையானவர்களுக்குப் பிழைக்கத்தக்கவையானது மாத்திரம் உண்டு, அதை முதலாய்ப் பறித்துக்கொள்ளுகிறவன் கொலைபாதகன் (ஏசுசிராக் ௩௪, ௨௫).

17. இயேசுநாதர் அவர்களைத் துரத்தி விட்டுத் தெய்வாலயத்தைச் சுத்திகரித்தபின் என்ன செய்தார்.

அவர் அநுதினமுந் தெய்வாலயத்தில் உபதேசித்துக் கொண்டிருந்தார். சனமோ வந்து, அவரைக் கேட்டு அண்டிக்கொண்டிருந்தது.

18. பிரதான ஆசாரியர் அதற்கு இடங்கொடுத்தார்களா.

அவர்கள் அதற்கு இடங்கொடுக்க மனதாயிராமல், இயேசுநாதரை அப்போதே கொன்றுபோடச் சித்தமாயிருந்தும், சனங் கர்த்தரை அண்டிக்கொண்டிருந்தபடியால், அவர்கள் தங்களுடைய பொல்லாத நோக்கத்தை நிறைவேற்றக் கூடாமற் போயிற்று. அதைப்பற்றி நம்முடைய வாசகம்: ஆனால் பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும் சனத்தின் மூப்பரும் அவரைக் கொன்றுபோட வகைதேடி, அதை எப்படிச் செய்வதென்று காணாமல் போனார்கள். ஏனெனில் சனமெல்லாம் அவரைக் கேட்டு அண்டிக்கொண்டிருந்தது என்று சொல்லுகிறது (௪௭. ௪௮).



## படிப்பினை.

19. சுவிசேஷவாக்கியத்தின் இந்த இரண்டாம் பங்கில் நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. யூதரால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

பொருளாசை, வஞ்சனை மனுஷரை எப்போதும் சகல காரியங்களிலும் தங்களுடைய சுயலாபத்தைத் தேடும்படிக்கு ஏவிவிடுகிறது. அதை யூதருடைய திருஷ்டாந்தத்தினால் அறிகிறோம். ஏனென்றால் அவர்கள் பொருளாசையினால் ஏவப்பட்டு தெய்வாலயத்தில் கூட, ஆம், பராபரனுக்குக் கொடுக்கப்படும் பலியிலே தங்களுக்கு லாபத்தைச் சம்பாதிக்கப் பார்த்தார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறதென்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறது உண்மையான வார்த்தையாம் (௧ தீமோ. ௬, ௰).

II. பிரதான ஆசாரியர் முதலானவர்களால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

விசேஷமாய்ச் சனத்தின் மூப்பர் முதலான பெரியவர்களும் தங்கள் சமாதானத்துக்கானதுகளை நினையாதிருந்தார்கள். அப்படியே யூதருக்குள்ளே எளியவர்கள் இயேசுநாதரைக் கேட்டு அண்டிக்கொண்டிருந்தார்கள். பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் சனத்தின் மூப்பருமோவென்றால், அவரைக் கொன்றுபோட மனதாயிருந்தார்கள். அழைக்கப்பட்ட உங்களைப் பாருங்கள். மாம்சத்தின்படி ஞானிகளாயிருக்கிறவர்கள் அநேகர் இல்லை, வல்லவர்கள் அநேகர் இல்லை, நற்குலத்தார் அநேகர் இல்லை; ஞானிகளை வெட்கப்படுத்தப் பராபரன் லோகத்தில் பயித்தியமானதுகளைத் தெரிந்துகொண்டார். பெலனுள்ளதுகளை வெட்கப்படுத்தப் பராபரன் லோகத்தில் பெலவீனமானதுகளைத் தெரிந்துகொண்டார் (௧ கொரி. ௧, ௨௬. ௨௭).

III. கர்த்தராகிய கிறிஸ்துவால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. நாம் பராபரனுடைய தெய்வாலயத்தைச் சுத்தமாகக் காப்பாற்ற வேண்டும். கிறிஸ்துநாதர் எருசலேந் தெய்வாலயத்திலே விற்கிறவர்களையுங் கொள்ளுகிறவர்களையும் வெளியே துரத்திவிட்டு, அதை எப்படிச் சுத்திகரித்தாரோ, அப்படியே நாம் நமது கிறிஸ்தமான கோவில்களையும் செப வீடுகளையுஞ் சுத்தமாய்க் காக்கிறது நமது கடமையாயிருக்கிறது: ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவன் பாவக்கிரியைகளினாலும், துர்வார்த்தைகளினாலும், வாங்குகிறதுங் கொள்ளுகி

றதுமான லௌகிக வேலையினாலும் பராபரனுடைய தெய்வாலயத்தை அசுத்தம் பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

௨. நாம் நமது இருதயங்களைச் சுத்திகரிக்க வேண்டும். ஏனென்றால் நம்முடைய இருதயம் பராபரனுடைய தெய்வாலயமாயிருக்க வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பவுல் நமக்குப் போதித்து: உங்கள் சரீரம் நீங்கள் தேவனாலே பெற்றிருக்கிற உங்களிலுள்ள பரிசுத்த ஆவியினுடைய தெய்வாலயமாயிருக்கிறதென்று அறியீர்களோ என்கிறார். கிறிஸ்துநாதர் எருசலேம் தெய்வாலயத்திலிருந்து சகல லௌகிக வியாபாரத்தையும் நீக்கி அதைச் சுத்திகரித்ததுபோல், நாமும் நமது இருதயங்களில் இருக்கும் சகல பொல்லாத லௌகிக குணத்தையும் நீக்கி அவைகளைச் சுத்தம்பண்ண வேண்டும். அதற்கென்று யோவான் அப்போஸ்தலன் நமக்குப் புத்திசொல்லி எழுதுகிறதாவது: லோகத்தையாகிலும் லோகத்திலுள்ளதுகளையாகிலும் சிநேகியாதிருங்கள். ஒருவன் லோகத்தைச் சிநேகித்தால், அவனில் பிதாவின் சிநேகம் இல்லை. ஏனெனில் மாம்சத்தினுடைய இச்சையும், கண்களுடைய இச்சையும், ஜீவனத்தினுடைய பெருமையுமென்ற லோகத்திலுள்ளதெல்லாம் பிதாவினால் உண்டாயிராமல், லோகத்தினால் உண்டாயிருக்கிறது. லோகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் என்பதே (௧ யோவா. ௨, ௰௫-௰௭).

௩. நாம் தெய்வாலயத்திலே செபம் பண்ணி, கர்த்தருடைய வசனத்தைக் கேட்கவேண்டும். யூதர் எருசலேம் தெய்வாலயத்திலே அப்படிச் செய்யவேண்டுமென்று காண்பிக்கும்படி இயேசு இரட்சகர்: நம்முடைய வீடு செபத்தின் வீடாயிருக்கிறதென்று சொல்லுகிறார். நீ பராபரனுடைய வீட்டுக்குப் போகிறபோது உன் காலைக் காத்து, மூடரைப்போல் பலியையிடுவதைப் பார்க்கிலும் கேட்கிறதற்குச் சேர் என்று சாலொமோன் சொல்லுகிறான் (பிரசங்கி. ௫, ௧).

20. அதற்கு நம்மைச் சமர்த்தராக்குகிறதார்.

பரிசுத்த ஆவியானவர் தான். அவர் கிருபையினுடைய ஆவி என்னப்படுகிறார் (சகரி. ௰௨, ௰). ஆதலால் நாம் எப்போதும், விசேஷமாய்க் கோவிலில் இருக்கிற சமயங்களில் பராபரனாகிய கர்த்தரை நோக்கி, நாம் அவருடைய வசனத்தைக் கவனத்தோடு கேட்கும்படியாகவும், உண்மையாய்ச் செபம் பண்ணும்படியாகவும் அவர் நம்மை ஏவி நடத்தவேண்டுமென்று கேட்கவேண்டும். மேலும்



நாம் கேட்கவேண்டியதென்னவென்றால்: சுத்த இருதயத்தை எனக்குச் சிருஷ்டியும்; பராபரனே, நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதிதாய் உண்டாக்கும். உம்முடைய முகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். உம்முடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை எனக்குத் திரும்பக் கட்டளையிடும். உற்சாகமான ஆவி என்னைத் தாங்கட்டும் என்பதே (சங்கீ. ௫௧, ௰௨-௰௪).

நமது அருமைப் பராபரனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவிக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௧-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௱௫௭. ௱௭௰.)

### சுவி. லூக். ௰௮, ௯—௰௪.

பின்னையுந் தாங்கள் நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாய் எண்ணுகிற சிலருடனே அவர் சொன்ன உவமையாவது: 10 இரண்டு மனுஷர் செபம் பண்ணத் தெய்வாலயத்துக்குப் போய் ஏறினார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். 11 பரிசேயன் நின்று தனக்குள்ளே பண்ணின செபமாவது: பராபரனே, நான் பறிகாரர், அநீதக்காரர், விபசாரருமாகிய மற்ற மனுஷரைப் போலும் அல்ல, இந்த ஆயக்காரனைப்போலும் அல்ல என்கிறதுக்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறேன். 12 வாரத்துக்கு இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; எனக்குக் கைவசமானதெல்லாத்திலும் பத்தில் ஒன்றைச் செலுத்துகிறேன் என்றான். 13 ஆயக்காரன் தூர நின்று, தன் கண்களைமுதலாய் வானத்துக்கு ஏறெடுக்க மனதாயிராமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: பராபரனே, பாவியாகிய என் பேரிலே கிருபையுள்ளவராகும் என்றான். 14 அவனைப் பார்க்க இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்கு இறங்கிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் தன்னைத் தான் தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவான் என்றார்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தில் அடங்கியிருக்கிறதென்ன.

எருசலேம் தெய்வாலயத்தில் செபம் பண்ணப் போயேறின இரண்டு மனிதரைப் பற்றிய உவமை.

2. இந்த உவமையைச் சொன்னதார்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர்.

3. அவர் ஆருக்கு இந்த உவமையைச் சொன்னார்.

தங்களை மாத்திரம் நீதிமான்களென்றும், மற்றயாவரையும் ஆகாதவர்கள் என்றும் எண்ணுகிற பரிசேயர் முதலான மாயக்காரருக்கு. அதைப்பற்றி நமது விசேஷவாக்கியத்தில்: தாங்கள் நீதிமான்கள் என்று நம்பி, மற்றவர்களை அற்பமாய் எண்ணுகிற சிலருடனே அவர் சொன்ன உவமையாவது என்று சொல்லப்பட்டிருக்கிறது (௯).

4. இந்த உவமையின்படியே செபம் பண்ணின அந்த மனிதர் ஆர்.

ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்.

5. பரிசேயர் எப்பேர்ப்பட்டவர்கள்.

யூதருக்குள் ஒரு சட்டியார். அவர்கள் மற்றெல்லா மனிதரைப் பார்க்கிலும் தங்களை விசேஷித்தப் பரிசுத்தவான்களாக எண்ணினதுமல்லாமல் மற்றவர்களை அற்பமாகவும் எண்ணினார்கள்.

6. ஆயக்காரர் ஆர்.

அவர்கள் ரோமரிடத்தில் சுங்கத்தண்டலைக் குத்தகைக்கு ஒப்புக்கொண்டு சுங்கம் வாங்குகிறவர்களாயிருந்தார்கள். யூதரிடத்தில் அதிக அநியாய வரி வாங்கினதினால், அவர்கள் யூதராலே பொருளாசைக்காரராக மிகவும் பகைக்கப்பட்டார்கள்.

7. பரிசேயன் எப்படிச் செபம் பண்ணினான்.

அவன்: தான் பறிகாரன் அல்லது கொலைபாதகன், அநீதக்காரன், விபசாரக்காரன், ஆயக்காரனைப்போல் அல்ல என்கிறதற்காகப் பராபரனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான். மேலுந் தான் வாரத்தில் இரண்டு தரம் (திங்கள், வியாழன்) உபவாசம் பண்ணி, ஏழைகளுக்குப் பத்தில் ஒன்றைக் கொடுக்கிறதாகத் தன் நற்கிரியைகளைச் சொல்லிக் காட்டினான்.

8. ஆனால் ஆயக்காரன் எப்படிச் செபம்பண்ணினான்.

அவன் தேவாலயத்தில் பீடத்தண்டைக் கிட்டிவரத் துணியாமல் தூரமாய் நின்று, தன் கண்களை வானத்துக்கு ஏறெடுக்கத் தான் பாத்திரவானல்லவென்று எண்ணி, தன் மார்பில் அடித்துக்கொண்டு: பராபரனே, பாவியாகிய என்பேரில் கிருபையுள்ளவராகும் என்றான்.

9. அவன் தன் கண்களை ஏன் வானத்துக்கு ஏறெடுக்க இல்லை.

அவன் வானத்திலே வாசம் பண்ணுகிறவரைத் தன் பாவத்தினால் கோபப்படுத்தினதினிமித்தம் அங்கே பார்க்க வெட்கப்பட்டான்.



10. அவன் தன் மார்பில் அடித்துக்கொண்டது ஏன்.

௧. இருதயமே சகல பாவங்களும் ஊறுகிற ஊற்றாயிருக்கிறதென்பதைக் காண்பிக்கும்படியாக. இரட்சகரும் மத். ௰௫, ௰௯-ல்: இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளுங் கொலைகளும் விபசாரங்களும் வேசித்தனங்களும் களவுகளும் பொய்ச்சாட்சிகளுந் தூஷணங்களும் புறப்பட்டு வரும் என்று சொல்லுகிறார். மேலும் எல்லாப் பாவங்களின் ஊற்றாகிய இருதயம் மார்பில் இருக்கிறபடியால் அவன் அதிலே அடித்துக்கொண்டான்.

௨. தன் பெரிய குற்றத்தைக் காண்பிக்கும்படியாக. இந்த ஆயக்காரன் தான் செய்த அநேக பெரிய பாவங்களினிமித்தம் உண்மையாய் மனஸ்தாபப்பட்டுத் தன் மார்பில் அடித்துக்கொண்டதினாலே இருதயம் பாவத்தினிமித்தம் நோவுகிறது என்று காண்பிக்கிறான்.

11. ஆயக்காரன் கர்த்தரிடத்தில் கேட்டது என்ன.

அவன் கிருபையைக் கேட்டான். தன்னைப் பாவியென்று அழைத்து, தன் பாவங்களை அறிக்கையிட்டதுமல்லாமல், கிருபாசனத்தினால் முன்குறிக்கப்பட்ட கிறிஸ்துவினுடைய மீட்குதலினிமித்தம் பராபரன் தன்மேல் கிருபையாயிருக்கிறாரென்று உறுதியாய் நம்பினான். எப்படியெனில்: பராபரனே, பாவியாகிய என்பேரில் கிருபையுள்ளவராகும் என்று கேட்டான்.

12. இந்த இரண்டு மனிதருடைய செபமும் பராபரனுக்குப் பிரியமாயிருந்ததா.

இல்லை. ஆயக்காரன் மாத்திரங் கேட்கப்பட்டான். ஏனெனில் அவன் நீதிமானாக்கப்பட்டான், அதாவது அவனுடைய பாவங்கள் அவனுக்கு மன்னிக்கப்பட்டது, அவன் மெய்யான நீதியைப் பெற்றான். பரிசேயனோ தன் செபத்தோடு தள்ளப்பட்டான். ஏனென்றால் இரட்சகர் நமது வாக்கியத்திலே: அவனைப் பார்க்க இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பினான் என்று சொல்லுகிறார் (௰௪). அதற்கு அர்த்தம் என்னவென்றால்: ஆயக்காரனே நீதிமானாக்கப்பட்டுப் பாவமன்னிப்பை அடைந்தான்.

13. ஆனால் பரிசேயனுடைய செபம் பராபரனுக்கு ஏன் பிரியமானதாயில்லை, அவன் அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினதினிமித்தமா.

அல்ல. ஏனெனில் நாம் பெற்றுக்கொள்ளுகிற எல்லா நன்மைகளுக்காகவும் பராபரனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறது அவருடைய சித்தமாயிருக்கிறது. அப்படியே சங்கீதக்காரனாகிய தாவீது: பராபரனுக்கு ஸ்தோத்திரத்தைப்

பலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்து என்று சொல்லுகிறான் (சங். ௫௰, ௰௪).

14. பரிசேயன் பறிகாரன் கொலைகாரன் அநீதக்காரன் விபசாரக்காரனாயிராததினாலே அவன் செபம் ஏற்றுக்கொள்ளப்படவில்லையா.

அதன் நிமித்தமும் அல்ல. ஏனெனில் பராபரனாகிய கர்த்தர் தம்முடைய நியாயப்பிரமாணத்தினாலே நாம் கொலை செய்யவும் விபசாரம் பண்ணவும் திருடவுங் கூடாதென்று கற்பிக்கிறார்.

15. அல்லது, அவன் வாரத்தில் இரண்டுதரம் உபவாசம்பண்ணி, பத்தில் ஒன்றைச் செலுத்தினதுக்காக அவன் செபம் தள்ளப்பட்டதா.

அதின் நிமித்தமும் அல்ல. ஏனெனில் பராபரனாகிய கர்த்தர் தாமே பழைய ஏற்பாட்டில் பத்தில் ஒன்றைச் செலுத்த வேண்டுமென்று கற்பித்திருக்கிறார். அப்படியே உபவாசம்பண்ணுகிறதும் கர்த்தருக்கு விரோதமானதல்ல. அவர் தாமே பழைய ஏற்பாட்டின் காலத்தில் குணப்பட மனதாயிருந்த மனிதருக்கு: இப்போதும் உங்கள் முழு மனதினோடே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் நம்மண்டைக்கே திரும்புங்கள் என்று சொன்னார் (யோவேல் ௨, ௰௨).

16. அப்படியானால், பரிசேயனுடைய செபம் தள்ளப்பட்டதற்குக் காரணம் என்ன.

அவனுடைய பெருமைதான். ஏனெனில் அவன்

௧. தன்னைப்பாவி என்று அறிக்கையிட மனதாயிராமல், தான் மற்ற மனிதரைப்போன்றவன் அல்லவென்று தன்னைப் பாவித்தான்.

௨. தான் நியாயப்பிரமாணத்தை எல்லாங் கைக்கொண்டதாகப் பாவித்து, அதற்காகத் தன்னைப் பராபரனுக்கு முன்பாகப் புகழ்ந்தான்.

௩. தனக்கடுத்தவன் விசேஷமாய் அந்த ஆயக்காரனை அசட்டைபண்ணினான். அவன் நம்முடைய வாக்கியத்திலே சொல்லப்பட்டிருக்கிறபடி: நான் பறிகாரர், அநீதக்காரர், விபசாரருமாகிய மற்ற மனிதரைப்போலும் அல்ல, இந்த ஆயக்காரனைப்போலும் அல்ல என்பதாகச் சொல்லுகிறான். பரிசேயனுடைய இந்தப் பெருமையே அவன் செபம் கேட்கப்படாமைக்குக் காரணமாயிருந்ததென்று நம்முடைய இரட்சகர் தெளிவாய்க் காண்பித்து: தன்னைத்தான் உயர்த்துகிறவன் எல்லாந் தாழ்த்தப்படுவான்; தன்னைத்தான் தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவானென்று சொல்லுகிறார்.



படிப்பினை.

17. நாம் இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினாலே என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. நாம் பரிசேயனிடத்திலே கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. நாம் புறம்பான, அதாவது வெளியரங்கமான பாவங்களுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இந்தப் பரிசேயன் பறிகாரன், கொலைகாரன், அநீதக்காரன், விபசாரன் அல்லது அப்படிப்பட்ட புறம்பான பாவங்களைச் செய்யாதவனாயிருந்ததினாலே இதிலே புகழப்படத்தக்கவனாயிருக்கிறான். அப்படிக்கொத்த பாவங்களுக்கு எச்சரிக்கையாயிருப்பது அவசியம். ஏனெனில்: பாவமானது மரணத்துக்குரியதான உங்கள் சரீரத்திலே, நீங்கள் அதற்கு இதின் இச்சைகளின்படியே கீழ்ப்படியும்படிக்கு, ஆளாதிருப்பதாக என்று கர்த்தருடைய வசனம் எல்லாக் கிறிஸ்தவர்களுக்குஞ் சொல்லுகிறது (ரோ. ௬, ௰௨).

௨. நம்முடைய நற்கிரியைகளின் நிமித்தம் நாம் நம்மையே புகழ்ந்துகொள்ளக் கூடாது. பரிசேயன் தன் நற்கிரியைகளின் நிமித்தம் தன்னையே புகழ்ந்தபடியால் தள்ளப்பட்டான். ஆனால் எத்தனை நன்மைகளை ஒரு கிறிஸ்தவன் செய்தாலும், தான் ஒரு புகழ்ச்சிக்கும் பாத்திரனல்லவென்று அவன் எண்ண வேண்டும். ஏனெனில தன்னுடைய கடமையை மாத்திரம் செய்தான். அப்படியே இயேசு இரட்சகர்: நீங்களும் உங்களுக்குக் கற்பிக்கப்பட்டதை எல்லாஞ் செய்த பிற்பாடு: அபிரயோசன ஊழியக்காரராயிருக்கிறோம், நாங்கள் செய்யக் கடனாயிருந்ததைச் செய்தோம் என்று சொல்லுங்கள் என்கிறார் (லூக். ௰௭, ௰). ஆதலால் நாம் மகிமையையும் புகழ்ச்சியையும் நமது பராபரனாகிய கர்த்தருக்கு மாத்திரஞ் செலுத்தி: எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது நாமத்துக்கே, தவரீர் உமது கிருபையின் நிமித்தமும் உமது சத்தியத்தின் நிமித்தமும் மகிமை வரப்பண்ணும் என்று சொல்ல வேண்டும் (சங். ௱௰௫, ௧).

௩. நாம் பெருமைக்கு எச்சரிக்கையாயிருந்து பிறத்தியானை அற்பமாய் எண்ணக் கூடாது. பரிசேயன் தள்ளப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாயிருந்தது. அவன் மற்றவர்களைப் பார்க்கிலுந் தன்னைப் பெரியவனும் நல்லவனுமாக எண்ணினான். விசேஷமாய், அவன் தன்னை இந்த ஏழை ஆயக்காரனைப் பார்க்கிலும் பரிசுத்தவானென்று நினைத்தான். இந்த ஏழைப்பாவி கர்த்தரிடத்தில் எப்படிப்பட்ட கிருபை

யைப் பெற்றானென்று அவனுக்குத் தெரியாது. ஆகையால் நாம் எந்த மனிதனையும் அற்பமாய் எண்ணாமலும், நம்மையே உயர்த்தாமலும் இருக்க வேண்டும். நீ எத்தனை பெரியதனக்காரனாயிருக்கிறாயோ, அத்தனை அதிகத் தாழ்மையிலே நடந்துகொண்டு வா. அப்போது உன் கர்த்தர் உன்பேரில் தயவுபரியமாயிருப்பார் (சீராக் ௩, ௨௰). தங்களை உயர்த்துகிறவர்களைக் குறித்து: தன்னைத்தான் உயர்த்துகிறவன் எல்லாந் தாழ்த்தப்படுவான் என்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார்.

ச. நாம் நம்மை உத்தம மனிதராக எண்ணவே கூடாது. அப்படிப்பட்டவர்களுக்குத்தான் இயேசுநாதர் இந்த உவமையைச் சொன்னார். தன்னைத்தான் உத்தமன் என்று எண்ணுகிறவன் மாயக்காரன். உண்மையுள்ள கிறிஸ்தவனோ தனக்கு இன்னம் வெகு குறைவு இருக்கிறதென்றும், தான் அநுதினமும் பராபரனுக்கு விரோதமாக மிகுதியாய்ப் பாவங்களைச் செய்கிறேன் என்றும் அறிக்கையிட்டுப் பவுல் அப்போஸ்தலனோடு: எனக்குள்ளே, அதாவது என் மாமிசத்துக்குள்ளே நன்மை வாசமாயிருக்கிறதில்லை என்று அறிவேன்; ஏனெனில் நன்மை செய்யவேண்டுமென்குதல் என்னுடனே இருக்கிறது; ஆனால் அதை நடப்பிக்குதலைக் காணேன் என்று பெருமூச்சுவிட்டுச் சொல்லுகிறான் (ரோ. எ, ௰அ). ஆகையால் ஒரு கிறிஸ்தவன் எப்போதுந் தன்னைப் பாவி என்று எண்ணி, அநுதினமுந் தெய்வபத்தியுள்ளவனாயிருக்கப் பிரயாசப்பட வேண்டும்.

II. ஆயக்காரனிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. நாம் பராபரனுக்கு முன்பாக எப்படி நீதிமான்களாகலாம். இந்த ஆயக்காரனைக் குறித்து: இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குப் போனானென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நாம் நீதிமான்களாக்கப்பட அல்லது பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், குணப்பட்ட இந்த ஆயக்காரனைப்போல் செய்ய வேண்டும். அதாவது:

a. நாம் குணப்பட்டுப் பாவத்தை அறிக்கையிட வேண்டும். ஆயக்காரன் தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டு, அதற்காக மனஸ்தாபப்பட்டு, மனஸ்தாபத்துக்கு அடையாளமாகத் தன் மார்பிலே அடித்துக்கொண்டான். அப்படியே நாமுஞ் செய்யக் கடவோம். ஏனென்றால், நமக்குப் பாவமில்லை என்போமானால், உண்மை நமக்குள் இராமல், நம்மை நாமே மோசம் போக்குகிறோம். நம்முடைய



பாவங்களை நாம் அறிக்கையிட்டால், அவர் நமக்குப் பாவங்களை மன்னித்து, நம்மை எல்லா அநியாயமும் நீங்கச் சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (௧ யோ. ௧, அ. ௯).

b. நாம் பராபரனுடைய கிருபையைத் தேட வேண்டும். அந்த ஏழை ஆயக்காரன் பராபரனுடைய கிருபையிலே அடைக்கலம் புகுந்து, கிறிஸ்து இரட்சகர் மூலமாய்த் தனக்குக் கிருபை கிடைக்கும் என்று விசுவாசித்து: பராபரனே, பாவியாகிய என்பேரில் கிருபையுள்ளவராகுமென்று சொன்னான். அப்படியே நாமுஞ் செய்யக் கடவோம். நாம் பாவஞ் செய்தாலும், நாம் நம்முடைய பாவங்களிலே நம்பிக்கையற்றுப்போகாமல், விசுவாசத்தினாலே கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு, அவர் மூலமாய்ப் பராபரனுடைய கிருபையைத் தேடிக் கெஞ்சிக் கேட்க வேண்டியதென்னவென்றால்: பராபரனே, உம்முடைய கிருபையின்படி எனக்கு இரங்கி, உம்முடைய மிகுந்த இரக்கங்களின்படியே என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை மிகவுங் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். ஏனென்றால் என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன். என் பாவம் எப்போதும் எனக்கு முன்பாக நிற்கிறது (சங். ௫௧, ௩-௫).

c. இனி பாவத்துக்கு எச்சரிக்கையாயிருந்து பரிசுத்தமாய் நடக்க வேண்டும். ஆயக்காரன் தெய்வாலயத்திலே நீதிமானாக்கப்பட்டபின்பு தன் நடக்கையைச் சீர்படுத்தினான் என்பதற்குச் சந்தேகமில்லை. அவன் அதன்பின் தன்னுடைய பாவமான வழக்கங்களுக்கும், அதற்கு இனமான வேலைகளுக்கும் விலக்கமாயிருந்தான். அப்படியே நாமுஞ் செய்யக் கடவோம். நமது பாவங்கள் நமக்கு மன்னிக்கப்பட்ட பிற்பாடு அல்லது நாம் பாவமன்னிப்பைப் பெற்றபிறகு நமது சீவியத்தைச் சீர்படுத்த வேண்டும். அதைப்பற்றி யோவான்ஸ்நானன்: குணப்படுதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள் என்று சொல்லி, அதற்கு நம்மை ஏவி எழுப்புகிறான் (மத். ௩, அ).

ட. நமது செபம் கேட்கப்படும்படியாக நாம் எப்படிச் செபம் பண்ணலாம்.

a. மனத்தாழ்மையோடு. ஆயக்காரன் மகா பெரிய மனத்தாழ்மையோடே செபஞ் செய்து, தன் கண்களை முதலாய் வானத்துக்கு ஏறெடுக்க மனதில்லாதிருந்தான். பெருமைக்காரர் ஒருக்காலும் உமக்குப் பிரியமானவர்களல்ல. ஆனால் எளியவர்களுடைய மனத்தாழ்மையை அறிந்து அவர்களுடைய செபத்தைக் கேட்கிறீர் என்று சொல்லப்பட்டிருக்கிறது (யூதித். ௯, ௰௪). இதற்கு ஏற்றதாக இயேசுநாதர்

நமது சுவிசேஷ வாக்கியத்திலேயும்: தன்னைத்தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவனோ உயர்த்தப்படுவான் என்கிறார்.

b. குணப்படுகிற இருதயத்தோடும் பாவமன்னிப்பின் பேரில் ஆசையோடும். பாவமன்னிப்பின் பேரிலிருந்த ஆசையினால் அந்த ஆயக்காரன்: பராபரனே, பாவியாகிய என்பேரில் கிருபையுள்ளவராகுமென்று சொல்லிப் பாவமன்னிப்பைக் கேட்டான். அப்படியே நாமும் செய்ய வேண்டும். ஏனென்னில் நாம் அனுதினமும் பராபரனுக்கு விரோதமாகப் பாவஞ் செய்கிறபடியினாலே, நாம் தினந்தோறும் உத்தம மனஸ்தாபத்தோடு அவரிடத்தில் பாவமன்னிப்பைக் கேட்டு, நமது இரட்சகர் நமக்குக் கற்றுக்கொடுத்தபடி: பிதாவே, எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்து விடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்து விடும் என்று கெஞ்சிக் கேட்போமாக (மத். ௬, ௰௨).

c. மெய்விசுவாசத்தோடும் பராபரனுடைய கிருபையைத் தேடி அதைப்பற்றிக்கொள்ளும் நம்பிக்கையோடும். ஆயக்காரன்: பராபரனே, பாவியாகிய என்பேரில் கிருபையுள்ளவராகுமென்று சொல்லி, விசுவாசத்தோடு பராபரனுடைய கிருபையைக் கேட்டான். அப்படியே நாமும் எல்லாவற்றையும் பார்க்கப் பராபரனுடைய கிருபையைக் கேட்க வேண்டும். ஏனெனில் பராபரன் நமது பேரில் கிருபையாயிருந்தால், நாம் ஆசாப்போடு: உம்மோடே நான் இருக்கையில் பூமியில் எனக்கு வேறே விருப்பமில்லை. என் மாமிசமும் என் இருதயமும் மாளும்போது, பராபரன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறாரென்று சொல்லலாம் (சங். எ௩, உ௫. உ௬). ஆனால் விசுவாசத்தோடு செபம்பண்ண வேண்டும். ஏனென்றால் இயேசுநாதர்: நீங்கள் செபத்தில் எதைக் கேட்டாலும், விசுவாசித்தீர்களாகில் யாவையும் பெறுவீர்கள் என்றார் (மத். உக, உஉ).

III. நமது பராபரனாகிய கர்த்தரைப்பற்றி நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. அவர் குணப்படுகிற பாவிகளை ஏற்றுக்கொள்ளுகிறார். இந்த ஆயக்காரனைத் தமது கிருபையினால் எப்படியேற்றுக்கொண்டாரோ, அப்படியே அவர் எல்லாப் பாவிகளையும் அவர்கள் உண்மையான குணப்படுதலோடு தம்மண்டைக்கு வந்தால், ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறார். என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லையென்று இயேசு இரட்சகர் சொல்லுகிறார் (யோவா. ௬, ௩எ).



உ. அந்த ஆயக்காரனுடைய திருஷ்டாந்தத்தில் நாம் பார்க்கிறபடியே, குணப்படுகிறவர்களுடைய செபங்களை அவர் கேட்கிறார். சங்கீதக்காரனாகிய தாவீது: செபத்தைக் கேட்கிறவரே, உம்மண்டைக்குச் சகல மாமிசமும் வருவதாக என்று சொல்லுகிறான் (சங். ௬௫, ௩). இதின் நிமித்தம் விசுவாசிகள் மகிழ்ந்து சொல்வதாவது: பராபரன் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். அவர் என் செபத்தைத் தள்ளுகிறதுமில்லை, தம்முடைய தயவை என்னை விட்டு எடுக்கிறதும் இல்லை என்பார்கள்.

நம்முடைய பராபரனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற திரியேகப் பராபரனுக்கு மகிமை உண்டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰உ-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௱௬உ. உ௬௰.)

சுவி. மாற்கு. எ, ௩க—௩எ.

மறுபடியும் அவர் தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளை விட்
டுப் புறப்பட்டு, பத்துப்பட்டணங்களுடைய எல்லைகளின் நடுவாய்க்
கலிலேயாக் கடலண்டை வந்தார். 32 அப்போது பேசமாட்டாத ஒரு
செவிடனை அவரண்டைக்குக் கொண்டுவந்து, அவன் மேல் கையை
வைக்க அவரை வேண்டிக்கொண்டார்கள். 33 அப்போது அவர்
அவனைக் கும்பலைவிட்டு, தனியே அழைத்துப்போய், தம்முடைய
விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நா
வைத் தொட்டு, 34 வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சு
விட்டு: எப்பத்தா, அதாவது திறவுண்டுபோ என்றார். 35 உடனே
அவனுடைய செவிகள் திறவுண்டு, அவனுடைய நாவின் கட்டும்
அவிழ்ந்துபோய், செவ்வையாய்ப் பேசினான். 36 இதை யாருக்குஞ்
சொல்லாதிருக்க அவர்களுக்குக் கற்பித்தார். ஆனால் அவர்களுக்கு
எத்தனைக்குக் கற்பித்தாரோ, அத்தனைக்கு அதிகமாய் அவர்கள்
பிரசங்கித்து: 37 எல்லாத்தையும் நன்றாக்கினார், செவிடர் கேட்கவும்
ஊமையர் பேசவும் பண்ணுகிறார் என்று மட்டில்லாமல் ஆச்சரியப்
பட்டுச் சொன்னார்கள்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியம் எதைப்பற்றியது.

இயேசு இரட்சகர் பேசமாட்டாத ஒரு செவிடனைக் குணமாக்கின அற்புதத்தைப் பற்றியது.

2. இயேசுநாதர் இந்த அற்புதத்தை எந்தச் சமயத்தில் செய்தார்.

அவர் தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளை விட்டுப்போனபோது. இந்தப் பேர்பெற்ற வியாபாரப்பட்டணங்

துக்குப் போயிருந்த சமயத்தில் அவர் கானான் சாதியான இஸ்திரியின் மகளைச் சொஸ்தமாக்கி, தாம் யூதருக்காக மாத்திரமல்ல, அஞ்ஞானிகளுக்காகவும் இந்த லோகத்தில் வந்தோம் என்பதைக் காட்டினபின், அவர் அந்தப் பட்டணங்களின் எல்லைகளை விட்டு வரும்போது இந்த அடையாளத்தைச் செய்தார்.

3. அது எங்கே சம்பவித்தது.

பத்துப்பட்டணங்களுடைய எல்லைகளின் நடுவிலிருக்கும் கலிலேயாக் கடலண்டையில். இந்தப் பத்துப்பட்டணங்களும் ஒன்றுக்கொன்று சமீபமாயிருந்தபடியால் அந்த நாட்டுக்குத் தெக்கப்போலி, அதாவது பத்துப்பட்டணங்கள் என்கிற பேரால் அழைக்கப்பட்டது.

4. இந்த அடையாளத்தை இரட்சகர் எந்த மனிதனுக்குச் செய்தார்.

பேச மாட்டாத செவிடனுக்கு.

5. அவன் இயேசுவண்டை எப்படி வந்தான்.

வேறே மனிதர் அவனை இயேசுநாதரண்டைக்குக் கொண்டு வந்து, அவன்மேல் கைகளை வைக்க அவரை வேண்டிக்கொண்டார்கள்.

6. இயேசுநாதரை அவன்மேல் கையை வைக்க ஏன் வேண்டிக்கொண்டார்கள்.

வியாதியஸ்தரைத் தொட்டுக் குணமாக்கக் கூடிய வல்லமை அவர் கைக்கு மாத்திரம் இருக்கிறதென்று அவர்கள் அறிந்தபடியால்.

7. அந்த மனிதர் கேட்டுக்கொள்ளுதலின்படி இயேசுநாதர் செய்தாரா.

ஆம், அந்த மனிதனைச் சுகப்படுத்தினார்.

8. அவனை எந்த விதமாய்ச் சுகப்படுத்தினார்.

அவர் அவனைக் கும்பைவிட்டுத் தனியே அழைத்துப் போய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சுவிட்டு: எப்பத்தா, அதாவது திறவுண்டு போ என்றார்.

9. ஆனால் கர்த்தர் ஒரே வார்த்தையினால் மாத்திரம் அந்த மனிதனைச் சொஸ்தமாக்கக் கூடாதா.

ஆம், அவர் அதைச் செய்யக்கூடும். ஏனெனில் தாவீது சொல்லுகிறபடியே: அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும் (சங். ௩௩, [illegible]).

10. பின்னை ஏன் இயேசுநாதர் அத்தனை புறம்பான காரியங்களைச் செய்தார்.



௧. அந்த மனிதனுக்குண்டான நிர்ப்பந்தம் பெரிதென்பதைக் காண்பிக்கும்படியாக.

௨. கூட வந்திருந்த மனிதர் அவர் செய்த அற்புதத்தை நன்றாய்க் கவனிப்பதற்கு அவர்களை ஏவி எழுப்பும்படியாக.

11. அவர் அவனைக் கும்பை விட்டு ஏன் தனியே அழைத்துப்போனார்.

தாம் சனங்களால் தடைப்படாதபடிக்கும், அந்த மனிதன் கிறிஸ்து செய்கிற குணமாக்குதலின் கிரியையைக் கவனிக்கும் படிக்கும் அப்படிச் செய்தார்.

12. அவர் தம்முடைய விரல்களை ஏன் அவன் காதுகளில் வைத்தார்.

அற்புதங்களைச் செய்யத் தமது மனித சுபாவத்துக்கு அதிகாரம் உண்டென்பதையும், அவருடைய கையும் அவருடைய விரல்களுங்கூட இந்தச் செவிடனுடைய காதைத் திறக்கக் கூடுமென்பதையும் விளங்கப்பண்ணும்படியாக.

13. அவர் உமிழ்ந்து நாவைத் தொட்டது ஏன்.

தமக்குண்டான எந்தக் காரியமும், அது எவ்வளவு அற்பமானதாயிருந்தாலும், தெய்வ வல்லமையுள்ளதாயிருக்கிறதென்று காண்பிக்கும்படியாக. ஏனெனில் மனிதருடைய உமிழ்நீரைப் பார்க்க அதிக அற்பக்காரியம் இல்லை. ஆகிலும் அதினாலும் அவர் பேசமாட்டாத செவிடனைச் சொஸ்தமாக்கினார்.

14. அவர் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்தார்.

அந்த மனிதனுக்கு வானத்திலிருந்து ஒத்தாசை வர வேண்டுமென்பதைக் காண்பிக்க. ஏனென்றால் அவனுக்கு ஒத்தாசை செய்கிற இயேசுநாதர் வானத்திலிருந்து வந்தார்.

15. அவர் எதற்காகப் பெருமூச்சுவிட்டார்.

அந்த மனிதனுடைய மகா பெரிய நிர்ப்பந்தத்திற்காக. ஏனென்றால் அவன் செவிடனாயிருந்ததினால் கர்த்தருடைய வசனத்தைக் கேட்கவும், அவன் ஊமையனாயிருந்ததினால் கர்த்தரைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கவுங் கூடாதேபோயிற்று.

16. கர்த்தர் ஏன் எப்பத்தா என்றார்.

அவனுடைய காதையும் நாவையுந் திறக்கக் கூடிய தம்முடைய சத்தத்துக்கு உண்டாயிருக்கும் தேவ வல்லமையைக் காண்பிக்கும்படியாக. எப்பத்தா என்பதின் அர்த்தம் திறவுண்டுபோ என்பது.

17. அவர் சத்தமிட்டபோது அந்த மனுஷனுடைய நாவுங் காதுந் திறக்கப்பட்டது.

ஆம், உடனே அவனுடைய செவிகள் திறக்கப்பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து போயிற்று.

18. பேசமாட்டாத செவிடனாகிய அந்த மனிதன் குணமானபோது என்ன செய்தான்.

அவன் செவ்வையாய், அதாவது தெளிவாய்ப் பேசினான்.

19. அப்போது அவன் என்னத்தைப் பேசினான்.

தன் நிர்ப்பந்தத்தை நீக்கின இரட்சகருடைய தயவைப் புகழ்ந்து ஸ்தோத்திரம் பண்ணினான் என்பதற்குச் சந்தேகமில்லை.

20. இயேசுநாதர் அந்த மனிதனைச் சொஸ்தப்படுத்தின பிற்பாடு என்ன செய்தார்.

இதை யாருக்குஞ் சொல்லாதிருக்கும்படிக்குச் சனத்துக்குக் கற்பித்தார்.

21. ஏன் அப்படிக் கற்பித்தார்.

தாம் லோகத்தாருடைய புகழ்ச்சியை அல்ல, மனிதருடைய குணப்படுதலையும் இரட்சிப்பையும்மாத்திரந் தேடின, தம்முடைய மகா பெரிய மனத்தாழ்மையை அதினால் வெளிப்படுத்தினார்.

22. சனங்கள் அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்களா.

இல்லை. அவர்களுக்கு எத்தனையாய்க் கர்த்தர் கற்பித்தாரோ, அத்தனைக்கு அதிகமாய் அவர்கள் பிரசங்கித்து: எல்லாத்தையும் நன்றாக்கினார், செவிடர் கேட்கவும் ஊமையர் பேசவும் பண்ணுகிறாரென்று மட்டில்லாமல் ஆச்சரியப்பட்டுச் சொன்னார்கள்.

23. அவர்கள் இப்படிச் செய்தது சரியா.

சரியல்ல. கர்த்தர் இந்தப்பெரிய உபகாரத்தைச் செய்ததற்காக அவர்கள் அவரைப் புகழுகிறது நன்றாயிருந்தாலும், கர்த்தருடைய சித்தத்துக்கு விரோதமாக அவர்கள் மற்றவர்களுக்கு இதை அறிவித்தது சரியல்ல. ஏனென்றால் கர்த்தருக்குண்டான விசேஷித்த பரிசுத்த முகாந்தரங்களின் நிமித்தம் இது முதலிய அற்புதங்களை அப்போதே அறிவிக்க வேண்டாமென்கிற சித்தமுள்ளவராயிருந்தார்.

## படிப்பினை.

24. இந்தச் சுவிசேஷவாக்கியத்தினாலே நாம் கற்றுக்கொள்ளுகிறதென்ன.



I. இயேசு இரட்சகரிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. அவர் மனிதர் யாவருடைய இரட்சிப்புக்கென்றும் இந்த லோகத்திலே வந்தார். ஆதலால் அவர் யூதேயா தேசத்தைச் சுற்றி நடந்துவந்ததுமல்லாமல், அஞ்ஞானிகளின் பட்டணங்களாகிய தீரு சீதோன் எல்லைகளுக்குள்ளேயும் நடந்து வந்தார். அதினாலே அவர் யூதரும் அஞ்ஞானிகளுமாகிய எல்லா மனிதருடைய இரட்சகராயிருக்கிறாரென்று ரூபித்தார். பவுல் அப்போஸ்தலனும்: பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு லோகத்திலே வந்தார் என்கிற உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமான வார்த்தை என்று சொல்லுகிறார் (க தீமோ. க, ௰௫).

உ. அவர் நம்முடைய இக்கட்டிலே நமக்கு ஒத்தாசை செய்யக்கூடியவராயிருக்கிறார். அந்தச் செவிடும் ஊமையுமான மனுஷன் மனுஷரிடத்திலே ஒத்தாசை அடையாதே போனாலும், இயேசுநாதர் தமது வல்லமையினாலே அவனைக் குணமாக்கினார். நாம் எல்லாரும் மனுஷரிடத்தில் ஒத்தாசையடையக் கூடாதிருந்தாலும், இயேசு இரட்சகரிடத்தில் எப்போதும் ஒத்தாசை அடையக்கூடும். சுபாவத்தின்படியே பாவத்தினால் ஊமையும் செவிடுமான நமக்கு இயேசு இரட்சகர் ஒத்தாசை செய்தால் ஒழிய, என்றைக்கும் இந்த நிர்ப்பந்த நிலைமையிலிருந்து கெட்டுப்போவோம். வேறொருவரிடத்தில் இரட்சிப்பில்லை. வானத்தின் கீழே மனிதரில் வேறொரு நாமம் அதினால். நாம் இரட்சிக்கப்படவேண்டுமென்று கட்டளையிடப்பட்டதும் இல்லை (நடபடி. ச, ௰உ). நம்முடைய துன்பம் எவ்வளவு பெரிதாயிருந்தாலும், நம்முடைய சரீர இக்கட்டிலே ஒரு மனிதன் ஒத்தாசை செய்யக் கூடாதே போனாலும், பரம வயித்தியராகிய இயேசுநாதரிடத்திலே நமக்கு ஒத்தாசை உண்டு. இரட்சிப்பு கர்த்தருடையதே, தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய சனத்தின்மேல் இருப்பதாக என்று சொல்லப்பட்டிருக்கிறது (சங். ௩, ௮). ஆம், கர்த்தர் எல்லாத்தையும் நன்றாக்கினார், செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் பண்ணுகிறாரென்று சனங்கள் அவரைப்பற்றிச் சொன்னது உண்மைதான்.

௩. தம்முடைய மனித சுபாவத்தின்படியேயும் கூட அவருக்குத் தெய்வீக பெலனும் வல்லமையும் உண்டு. அவருடைய விரல் செவிடனுடைய காதைத் திறக்கவும், அவருடைய எச்சில் ஊமையனுடைய நாவின் கட்டை அவிழ்க்கவும் பெலனுள்ளதாயிருந்தது. அவருடைய சத்தம் அந்த மனிதனுடைய காதைத் திறந்து, நாவின் கட்டை அவிழ்க்

கவுங் கூடியது. இதினாலே கர்த்தராகிய இயேசுநாதர் வா
னத்திலும் பூமியிலும் தமக்குச் சகல அதிகாரமுங் கொடுக்
கப்பட்டிருக்கிறதென்பதைக் காண்பித்தார் (மத். உஅ, ௧அ.)

௪. நமக்குண்டாகும் சகல துன்பங்களிலும் நாம்
வானத்திலிருந்து ஒத்தாசையைத் தேட வேண்டும். இயேசு
இரட்சகர் அந்த மனிதனைக் குணமாக்கினபோது, வானத்தை
அண்ணாந்து பார்த்ததினால் உயரப் பார்க்கும்படி நம்மையும்
...கிறார். நாம் நமது இருதயங்களையும் கண்களையும் வானத்
துக்கு ஏறெடுத்து, சங்கீதக்காரனாகிய தாவீதோடு: எனக்கு
ஒத்தாசை வரும் பருவதங்களுக்கு நேராக என் கண்களை
ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின
கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும் என்று
சொல்லவேண்டும் (சங். ௧௨௧, ௧. ௨).

௫. நாம் வீண் பெருமையையும் லோகக்கனத்தை
யுந் தேடக்கூடாது. நமது கர்த்தராகிய இயேசுநாதர் அந்த
மனிதனிடத்தில் ஒரு பெரிய அற்புதஞ் செய்திருந்தும், அதி
னாலே தமக்கு யாதொரு புகழ்ச்சியையுந் தேடாமல், அதை
யாருக்குஞ் சொல்லாதிருக்கச் சனங்களுக்குக் கற்பித்தார்.
இந்த முன்மாதிரிப்படியே நாமும் நடந்து, பெரிய காரியங்க
ளைச் செய்தாலும், நமக்கென்று யாதொரு கனத்தையுந் தேடா
மல், சங்கீதக்காரனைப்போல்: எங்களுக்கல்ல, கர்த்தாவே,
எங்களுக்கல்ல. உம்முடைய நாமத்துக்கே தேவரீர் உமது
கிருபையினிமித்தமும் உமது சத்தியத்தினிமித்தமும் மகிமை
வரப்பண்ணும் என்று சொல்லவேண்டும் (சங். ௱௰௫, ௧).

௬. பராபரன் எப்போதுந் தம்முடையவர்களுக்கு
நன்மை செய்கிறார். இந்த மனிதன் பெரிய இக்கட்டிலே
இருந்தும், அவன் இயேசு இரட்சகராலே ஒத்தாசை அடைந்
தான். அவனுடைய பெரிய துன்பமே அவனுக்கு மகாப் பெ
ரிய ஆசீர்வாதமாயிற்று. அவன் சிநேகிதர் இரட்சகரண்டைக்
குக் கொண்டு வரப்பட்டு, அவரிடத்தில் சரீரப் பிரகாரமாத்
திரமல்ல, ஆத்துமப் பிரகாரமாகவும் ஒத்தாசை அடைந்
தான். அவ்விதமாகவே கர்த்தர் தம்முடையவர்கள் எல்லா
ருக்குஞ் செய்கிறார். ஏனென்றால் பராபரனைச் சிநேகிக்கிற
வர்களுக்கு எல்லாக் காரியங்களும் நன்மைக்கு உதவி செய்கி
றது (ரோ. ௮, ௨௮).

II. பேசமாட்டாத செவிடனிடத்தில் நாம் கற்றுக்
கொள்ளுகிறதாவது:

௧. நாம் பேசவுங் கேட்கவும் அதிகாரம் பெற்றது
பராபரனுடைய மகாப்பெரிய கிருபை. அந்த மனிதன் பரா
பரனுடைய வசனத்தைக் கேட்கவும், அவருக்கு ஸ்தோத்தி



ரஞ் செலுத்தவுங் கூடாதவனாயிருந்தபோது, அவனுடைய
நிர்ப்பந்தம் எவ்வளவு பெரிதாயிருந்தது. ஆனால் பராபரனு
டைய பரிசுத்த வசனத்திலே அவருடைய சத்தத்தைக் காதி
னாலே கேட்டு, அவரை அறிகிற இரட்சிப்புள்ள அறிவை
அடைந்து, நாவினாலே அவரைப் புகழ்ந்து ஸ்தோத்திரம்
பண்ண வரம் பெற்றவர்களாகிய நாம் எவ்வளவு பாக்கிய
வான்கள். பராபரனாகிய கர்த்தாவே, தேவரீர் எங்கள் மே
லே உம்முடைய அதிசயங்களையும் உம்முடைய யோசனை
களையும் பெருகப்பண்ணினீர். தேவரீருக்கு ஒப்பிடுவார்
இல்லை. நான் அவைகளை அறிவித்துச் சொல்லிப், அவை
கள் எண்ணிக்கைக்கு மேலானவைகள் என்று சங்கீதக்காரன்
சொல்லுகிறான் (சங். ௪௰, ௫).

௨. மனிதருடைய நிர்ப்பந்தம் மகா பெரியதாயிருக்
கிறது. அந்தப் பேசமாட்டாத செவிடன மனிதருக்கு வரக்
கூடிய சரீர நிர்ப்பந்தத்தை நம்முடைய கண்களுக்கு முன்
பாகக் காட்டுகிறதுமல்லாமல், அவன் நம்முடைய ஞான
நிர்ப்பந்தத்துக்கு அடையாளமாகவும் இருக்கிறான். நாம்
சுபாவத்தின்படியே பராபரன் தம்முடைய வசனத்தில் நமக்
குச் சொல்லுகிறதைக் கேட்கவும் உணரவுங் கூடாத செவி
டரும், அவருக்குப் பிரியமானதைப் பேசக் கூடாத ஊமைய
ரும், ஆம், அப்போஸ்தலன் சொல்லுகிறபடியே: நாம் பா
வத்திலே மரித்தவர்களுமாயிருக்கிறோம் (எபேசி. ௨, ௧;
ரோ. ௪௰, ௧).

௩. நாம் நம்மைக் கிறிஸ்துவண்டைக்குக் கொண்டு
போகிறதற்கு இடங் கொடுக்கவேண்டும். இந்தச் செவி
டன் தானாய்க் கிறிஸ்துவண்டை வரக்கூடாதேபோனாலும்,
அவன் தன்னைக் கிறிஸ்துவண்டைக்குக் கொண்டுபோக இடங்
கொடுத்தான். பராபரனாகிய கர்த்தர் நம்மைத் தம்முடைய
பரிசுத்த வசனத்தினாலே கிறிஸ்துவண்டைக்கு நடத்துகிற
போது, நாமும் அவராலே ஒத்தாசை அடையும்படியாக
அவரண்டைக்கு வரவேண்டும். கர்த்தராகிய இயேசு நம்
மைத் தம்மண்டைக்கு வரவழைத்து: பிரயாசப்பட்டுப் பா
ரஞ் சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு
வாருங்கள், நான் உங்களை இளைப்பாறுதலாக்குவேனென்று சொல்
லுகிறார் (மத். ௧௧, ௨௮).

௪. நாம் நம்முடைய நாவுகளைச் சரியாய் உபயோ
கம் பண்ணவேண்டும். அந்தப் பேசமாட்டாத செவிடன்
குணமாக்கப்பட்டபோது, செவ்வையாய்ப் பேசினான். அப்
படியே நாமும் செய்யவேண்டும். பராபரனாகிய கர்த்தர்
நமக்குச் சுகமுள்ள நாவுகளைக் கொடுத்திருக்கிறதினால், நாம்

தகாத வார்த்தைகளைப் பேசாமலும், பொய் சொல்லாமலும், மோசம் பண்ணாமலும், சரியானதையும், பராபரனுடைய மகிமைக்கும் பிறத்தியானுடைய பிரயோசனத்துக்குந் தக்கதுகளையும் பேசவேண்டும்.

III. பேசமாட்டாத செவிடனைக் கிறிஸ்துவண்டைக்குக் கொண்டுவந்த சனங்களிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. நாம் நமது பிறத்தியானுடைய நிர்ப்பந்தத்தின் பேரில் மனதுருகி, அவனுக்காகச் செபம் பண்ணவேண்டும். அந்தச் சனங்கள் செவிடும் ஊமையனுமாயிருந்த மனுஷனுக்குக் கிறிஸ்தமான இரக்கத்தைக் காட்டி, அவனுக்கு ஒத்தாசை செய்ய மனதாய் வேறுவழி காணாமல், கிறிஸ்துவண்டைக்கு வந்து, அவனுக்காக வேண்டிக்கொண்டார்கள். அப்படியே நாமும் செய்யக்கடவோம். நமது பிறத்தியான் இக்கட்டிலிருக்கிறதை நாம் கண்டால், அவனுடைய துன்பத்தின் பேரில் மனதுருகி, அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறபடி அழுகிறவர்களுடனே அழக்கடவோம் (ரோ. ௰௨, ௰௫). நாம் விசேஷமாய் நமது செய்கைகளினாலே அவனுக்கு ஒத்தாசை செய்யப் பிரயாசப்படவேண்டும். எல்லா மனிதருக்காகவும் இராசாக்களுக்காகவும் மேன்மையுள்ள அனைவருக்காகவும், விண்ணப்பங்களும் செபங்களும் வேண்டுதல்களும் இஸ்தோத்திரங்களுஞ் செய்யப்பட எல்லாத்துக்கும் முந்திப் புத்திசொல்லுகிறேன் என்று பவுல் சொல்லுகிறான் (௧ திமோ. ௨, ௨).

௨. நம்முடைய பராபரனாகிய கர்த்தர் நம்முடைய செபங்களைக் கேட்கிறதற்காக நாம் அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தவேண்டும். இந்த மனிதர் ரக்ஷகராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் ஒத்தாசை அடைந்தபோது அப்படியே செய்தார்கள். அவர்கள் மட்டில்லாமல் ஆச்சரியப்பட்டு: எல்லாத்தையும் நன்றாய்ச் செய்தார், செவிடர் கேட்கவும் ஊமையர் பேசவும் பண்ணுகிறாரென்று சொன்னார்கள். கர்த்தர்: நாம் தம்மை நோக்கிக் கூப்பிடவும், நாம் பெற்ற உபகாரத்துக்காக அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தவும் வேண்டுமென்கிற பிரிய சித்தமாய்: நெருக்கப்படுகிற நாளிலே நம்மை நோக்கிக்கூப்பிடு, அப்போது உன்னை விடுவிப்போம், அதற்காக நீ நம்மை மகிமைப்படுத்தக்கடவாய் என்று சொல்லுகிறார் (சங். ௫௰, ௰௫).

இச்சீவனிலே பராபரனை அவருடைய எல்லா உபகாரங்களுக்காகவும் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கிறவன் இப்போதே நித்திய சீவனின் துவக்கத்தை ருசித்துப்பார்க்கிறான்.



அவன் மோட்சத்திலே அவரைப் பரிபூரணமாய் ஸ்தோத்திரித்துச் சொல்லுவதாவது: ஆமேன், எங்கள் பராபரனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் உண்டாகக்கடவது, ஆமேன் (அபிவி. ௭, ௰௨).

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௩-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௱௭௮.)

### சுவி. லூக். ௰, ௨௩—௩௭.

அவர் சீஷரண்டைக்குத் திரும்பி, தனித்துச் சொன்னதாவது:
நீங்கள் பார்க்கிறதுகளைப் பார்க்குங் கண்கள் பாக்கியமுள்ளதுகள்.
24 ஏனெனில் அநேகந் தீர்க்கதரிசிகளும் இராசாக்களும் நீங்கள்
பார்க்கிறதுகளைக் காணவும், நீங்கள் கேட்கிறதுகளைக் கேட்கவும்,
ஆசையாயிருந்தும், காணாமலும் கேளாமலும் போனார்கள் என்று
உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். 25 இதோ, நியாயசாஸ்திரி
ஒருவன் எழுந்திருந்து: போதகரே, நான் என்னசெய்து நித்தியசீ
வனைச் சுதந்தரித்துக்கொள்ளுவேன் என்று அவரைச் சோதித்தான்.
26 அவரோவென்றால் அவனுடனே: நியாயப்பிரமாணத்தில் என்ன
எழுதியிருக்கிறது; எப்படி வாசிக்கிறாய் என்றார். 27 அவன் பிரத்
தியுத்தரமாக: உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்
தினாலும் உன் முழு ஆத்துமத்தினாலும் உன் முழுப் பலத்தினாலும்
உன் முழுச் சிந்தையினாலும், உனக்கு அடுத்தவனை உன்னைப்போ
லுஞ் சிநேகிப்பாயாக என்கிறதாய்த் தானே என்றான். 28 அவர்
அவனுடனே: நிதானமாய் மறு உத்தாரஞ் சொன்னாய்; இப்படிச்
செய், அப்போது பிழைப்பாய் என்றார். 29 அவனோவென்றால்
தன்னை நீதிமானாக்க மனதாய் இயேசுவுடனே: ஆனால் எனக்கு
அடுத்தவன் ஆர் என்றான். 30 இயேசு பிரத்தியுத்தாரங் கொடுத்துச்
சொன்னதாவது: ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்கு
இறங்கிப்போய், கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவனை
உரிந்துகொண்டு, காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள்.
31 ஆனால் தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழி இறங்கிவந்து,
அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப் போனான். 32 அந்தப்படியே
ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்க
மாய் விலகிப்போனான். 33 ஆனால் சமாரியன் ஒருவன் வழிப்பய
ணம் பண்ணி, அவனண்டை வந்து, அவனைக் கண்டு மனதுருகி,
34 சேர்ந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயுந் திவிதிராட்சப்
பழரசமும் வார்த்து, அவைகளைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்
தின் மேல் ஏற்றி, அவனை மண்டபத்திலே கொண்டுபோய், அவ
னைப் பராமரித்து, 35 மறுநாளிலே புறப்படும்போது, இரண்டு
வெள்ளிக்காசை எடுத்து, மண்டபத்தான் கையிலே கொடுத்து,
அவனுடனே: இவனைப் பராமரித்துக்கொள்; அதிகமாய் ஏதாகி
லுஞ் செலவழித்தால், அதை நான் திரும்ப வருகையில் உனக்குக்

கொடுப்பேன் என்றான். 36 இப்போதுங் கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேர்களில் ஆர் அயலானாக உனக்குக் காணுகிறது என்றார். 37 அவன்: இரக்கத்தை அவனிடத்தில் செய்தவனே என்றான். ஆகையால் இயேசு அவனுடனே: நீ போய், நீயும் அந்தப்படி செய் என்றார்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தில் எத்தனை பங்குண்டு.

இரண்டு பங்குண்டு.

## முதலாம் பங்கு.

2. முதலாம் பங்கு எதைப் பற்றியது.

இயேசுநாதருடைய சீஷரின் மெய்யான பாக்கியத்தைப் பற்றியது.

3. அந்தப் பாக்கியத்தை எடுத்துக்காட்டினவர் ஆர்.

நம்முடைய இரட்சகர். எதினால் அவர் நம்முடைய வாக்கியத்தின்படியே: நீங்கள் பார்க்கிறதுகளைப் பார்க்குங் கண்கள் பாக்கியமுள்ளதுகள் என்று தம்முடைய சீஷர்களிடத்தில் தனித்துச் சொன்னார்.

4. இயேசுவின் சீஷர்கள் யாரைப் பார்த்ததினால் பாக்கியமுள்ளவர்களாயிருந்தார்கள்.

பழைய ஏற்பாட்டின் விசுவாசிகளாகிய முற்பிதாக்கள் ஆயிரம் வருஷமாக எதிர்பார்த்திருந்தவரும், பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்த அநேகம் இராசாக்களும் தீர்க்கதரிசிகளும் பார்க்க ஆசையாயிருந்தும் பார்க்கக்கூடாதே போனவரும், மனிதவதாரமெடுத்த பராபரனுடைய குமாரனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவைப் பார்த்ததினால் பாக்கியமுள்ளவர்களாயிருந்தார்கள். அதைப்பற்றி நமது இரட்சகர் நமது வாக்கியத்திலே சொல்லுகிறதாவது: அநேகம் தீர்க்கதரிசிகளும் இராசாக்களும் நீங்கள் பார்க்கிறதுகளைக் காணவும், கேட்கிறதுகளைக் கேட்கவும் ஆசையாயிருந்துங் காணாமலும் கேளாமலும் போனார்கள் (௨௪).

5. இயேசுநாதரைச் சரீரக் கண்களாலே மாத்திரம் காண்கிறது பாக்கியமா.

இல்லை. மாயக்காரராகிய பரிசேயரும் குணப்படாத சதுசேயரும் காய்பா, ஏரோதே, பிலாத்து முதலியவர்களும் இயேசுநாதர் இவ்வுலகத்தில் சஞ்சரித்த காலத்தில் அவரைச் சரீரப்பிரகாரமாய்ப் பார்த்தவர்களாயிருந்தாலும் அவர்களை அவர் பாக்கியவான்களென்று சொல்லவில்லை.

6. இயேசுநாதர் தமது சீஷர்களைப் பாக்கியவான்களென்று ஏன் சொல்லுகிறார்.



அவர்கள் இயேசுவை சரீரக்கண்களினால் மாத்திரமல்ல, ஞானக்கண்களினாலுங் கண்டார்கள், அதாவது அவர்கள் அவரை விசுவாசித்தார்கள். இயேசுவை விசுவாசிக்கிற விசுவாசமே மனிதருடைய பாக்கியமாம். அப்படியே இரட்சகர்: குமாரன் பேரில் விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு, குமாரனை விசுவாசியாதவன் ஜீவனைக் காண்பதில்லை, பராபரனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்கிறார் (யோவா. ௩, ௩௬).

7. சீஷருக்குண்டாகிய இந்தப் பாக்கியத்தில் நமக்கும் பங்குண்டா.

ஆம். நாம் இரட்சகரை சரீரக் கண்களினால் பார்க்கக்கூடாதேபோனாலும், மெய்விசுவாசத்தினால் அவரைப்பற்றிக்கொண்டால், நாமும் பாக்கியமுள்ளவர்களாயிருப்போம். அது எதினால் விளங்குமென்றால், இயேசு தமது சீஷனாகிய தோமாவுக்கு: காணாமல் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்று சொன்னதினால் தான் (யோவா. ௨௰, ௨௯).

## படிப்பினை.

8. சுவிசேஷ வாக்கியத்தின் இந்த முதலாம் பங்கினாலே நாம் எதைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

௧. பழைய ஏற்பாட்டின் விசுவாசிகள் கர்த்தராகிய கிறிஸ்துவைக் காண வெகு ஆசையாயிருந்தார்கள். அதைப்பற்றி நம்முடைய சுவிசேஷ வாக்கியத்திலும்: அநேகம் தீர்க்கதரிசிகளும் இராசாக்களும் நீங்கள் பார்க்கிறதுகளைக் காணவும், கேட்கிறதுகளைக் கேட்கவும் ஆசையாயிருந்துங் காணாமலுங் கேளாமலும் போனார்களென்று சொல்லியிருக்கிறது. அவர்களுடைய இந்த வாஞ்சை மகா பெரியதாயிருந்ததினாலே அவர்கள் அடிக்கடி பெருமூச்சுவிட்டு: ஆ, சீயோனிலிருந்து இஸ்ரவேலுடைய இரட்சிப்பு வந்தால் தாவிலை, கர்த்தர் தம்முடைய சனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போது யாக்கோபுக்குக் களிப்பும் இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாம் என்று சொன்னார்கள் (சங். ௰௪, ௭).

௨. புதிய ஏற்பாட்டின் விசுவாசிகள் பழைய ஏற்பாட்டின் விசுவாசிகளைப் பார்க்க அதிக பாக்கியவான்களாயிருக்கிறார்கள். அதை நம்முடைய இரட்சகர்: நீங்கள் பார்க்கிறதுகளைப் பார்க்குங் கண்கள் பாக்கியமுள்ளதுகள் என்று சொன்னதினால் காண்பிக்கிறார். மெய்தான், பழைய ஏற்பாட்டின் பிதாக்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டார்கள். அதைப்பற்றிப் பேதுரு அப்போஸ்த

லன்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினுலே இரட்சிக்கப்படுவோம் என்று விசுவாசிக்கிறேம். அவர்களும், அதாவது பிதாக்களும் அந்தப்படி இரட்சிக்கப்பட்டார்களே என்று சொல்லுகிறுன் (அப். ௰௫, ௰௧). ஆகிலும் அவர்கள் இரட்சிப்புக்கடுத்த காரியம் அப்போது நிறைவேறவில்லை. ஏனென்றுல், கிறிஸ்து இன்னம் வந்து பாடுபடாதிருந்தான். ஆனுல் அவர்கள் நம்பிக்கையிலே அவருக்குக் காத்திருந்து விசுவாசித்தார்கள். நாமோ இதெல்லாம் முற்றுமுடிந்ததென்று அறிந்து, நமது இரட்சிப்புக்குவேண்டிய யாவையுஞ் செய்து நிறைவேற்றின இரட்சகரை விசுவாசிக்கிறேம். ஆதலால் அவர்களுடைய பாக்கியத்தைப் பார்க்க நம்முடைய பாக்கியம் மகா பெரியது.

௯. இயேசு இரட்சகரைப் பார்க்கிறதே மெய்யான பாக்கியமாயிருந்தது. நம்முடைய இரட்சகர் தம்முடைய சீஷருக்கு: நீங்கள் பார்க்கிறதுகளைப் பார்க்குங் கண்கள் பாக்கியமுள்ளதுகள் என்றுர். நாம் இச்சீவனிலே நமது இரட்சகரை விசுவாசக் கண்களால் பார்க்கிறதே நமது பாக்கியமாயிருக்கிறது. ஏனெனில் தமது பேரில் விசுவாசிக்கிறவனெல்லாங் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடைவான் என்று இரட்சகர் வாக்குக்கொடுக்கிறுர் (யோ. வா. ௯, ௰௬). வருஞ் சீவனிலேயோ நாம் இயேசுவை முகமுகமாய்ப் பார்க்கிறதினுல் பாக்கியவான்களாயிருப்போம். அப்போது நாம் விசுவாசத்தினுல் அல்ல, நம்முடைய மகிமையான சரீரக் கண்களினுலே நமது இரட்சக[illegible]போம். அதைப் பற்றி யோபு சந்தோஷமாய்ப் பேசி: என் மீட்பர் உயிரோடிருக்கிறுர் என்கிற[illegible]தயும், அவர் எருங் கடைசியானவராய்த் [illegible]றபார் என்பதையும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என்னுடைய தோல் முதலானவை அழுகிப்போன பிற்பாடு நான் என் மாமிசத்திலிருந்து பராபரனைப் பார்ப்பேன். அவரை நான் எனக்கென்று பார்ப்பேன். அந்நிய கண்ணல்ல, என்னுடைய கண்களே அவரைக் காணும். இந்த [illegible]சையாய் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் தொ[illegible] போகின்றன என்று சொல்லுகிறுன் (யோபு. [illegible], ௨௫-௨௭).

இரண்டாம் பங்கு.

9. சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கு எதைப் பற்றியது.

வேதபாரகன் ஒருவன் இயேசுவைக் கேட்ட கேள்விகளைப் பற்றியது.



10. வேதபாரகர் ஆர்.

சத்திய வேதத்தை ஆராய்ந்து பார்த்த மனிதர். அவர்கள் வேதத்துக்கடுத்த காரியங்களிலே மற்ற மனிதரைப் பார்க்கத் தங்களைத் தேறினவர்களும் புத்திமான்களுமாக எண்ணினுர்கள்.

11. இந்த வேதபாரகன் இயேசுவைக் கேள்வி கேட்டானே. அவரிடத்தில் எதையாவது கற்றுக்கொள்ள விரும்பினுனே.

இல்லை. இயேசுநாதர் தன்னுடைய கேள்விக்கு உத்தரவு கொடுக்க முடியாதென்று நினைத்து அவரைச் சோதித்தான்.

12. அவன் கேட்ட முதற் கேள்வி என்ன.

போதகரே, நான் என்ன செய்து நித்திய சீவனைச் சுதந்தரித்துக்கொள்ளுவேன் என்பதே.

13. அதற்கு இயேசுநாதருடைய உத்தரவென்ன.

அவர் நியாயப்பிரமாணத்தை, அதாவது பராபரனுடைய பத்துக்கற்பனைகளைக் காட்டி: நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது, எப்படி வாசிக்கிறுய் என்றுர்.

14. அதற்கு வேதபாரகன் என்ன சொன்னுன்.

நாம் பராபரனையும் பிறத்தியானையுஞ் சிநேகிக்கவேண்டிய சிநேகமாகிய நியாயப்பிரமாணத்தின் முழுப்பொருளை அவன் எடுத்துக்காட்டி, இயேசுநாதருக்கு: உன் பராபரனுகிய கர்த்தரை உன் முழு இரு[illegible]தயத்தோடும், உன் முழு ஆத்துமத்தினுலும், உன்[illegible]தினுலும், உன் முழுச் சிந்தையினுலும், உனக்கு அடுத்தவனை உன்னைப்போலும் சிநேகிப்பாயாக என்கிறதாய்த்தானே என்றுன் (உ[illegible]).

15. அப்போது இயேசுநாதர் அவனுக்கு[illegible]சொன்னதென்ன.

நிதானமாய் மறு உத்தரஞ் சொன்னுய்; இப்படிச் செய், அப்போது பிழைப்பாய் என்றுர்.

16. ஆனுல் ஒருவன் நியாயப்பிரமாணத்தினுலே இரட்சிக்[illegible]படக் கூடுமா.

மனிதன் [illegible]னிடத்தில் நியாயப்பிரமாணங் கேட்கிறயாவையுஞ் செய்யக்கூடுமானுல், அதினுல் மெய்யாகவே இரட்சிக்கப்படுவான். ஏனெனில் நமது இரட்சகர்: இப்படிச்செய், அப்போது பிழைப்பாய் என்று தெளிவாய்ச் சொல்லுகிறுர். அப்போஸ்தலனுகிய பவுலும்: நியாயப்பிரமாணமோ விசுவாச மார்க்கமானது அல்ல, அவைகளைச் செய்கிற மனிதன் அல்லவோ அவைகளால் பிழைப்பான் என்கிறுன் (கலா. ௩, ௰௨).

17. பராபரன் நியாயப்பிரமாணத்தில் கற்பிக்கிற எல்லாத்தையும் ஒருவன் செய்யக் கூடுமா.

கூடாது. நமது ஆதித்தாய் தகப்பன்மாருடைய பாவத்தினாலே மனித சுபாவங் கெட்டுப்போனபடியால், ஒரு மனிதனாவது கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றக் கூடாது. ஆகையால் பாவஞ் செய்யாத ஒருவனாவது பூமியில் இல்லை. அதினிமித்தம் நியாயப்பிரமாணம் இப்போது சீவனைக் கொடுக்கக் கூடாமல் சாபத்தைக் கொடுக்கிறது. ஏனெனில் இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை அவைகளின்படி செய்யும்படிக்குக் கைக்கொள்ளாதவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக என்று சொல்லப்பட்டிருக்கிறது (ரு மோ. உஎ, உகூ).

18. இந்தச் சாபத்தை நம்மைவிட்டு நீக்கினவர் ஆர்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து. எப்படியெனில், மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாகிய அவர் இவ்வுலகத்துக்கு வந்து, நியாயப்பிரமாணத்தின் சாபத்தைத் தமதுமேல் ஏற்றுக்கொண்டு, சிலுவைமரத்திலே நமக்காகச் சாபமானார். அதினால் அவர் நமக்காகவும் நமக்குப் பதிலாகவும் நியாயப்பிரமாண முழுவதையும் நிறைவேற்றினார். ஆகையால் கிறிஸ்துவை மெய்யான விசுவாசத்தினாலே அண்டிக்கொள்ளுகிறவன் எவனோ, அவன் பாவமன்னிப்பையும் நித்திய சீவனையும் அடைவான். ஏனெனில் பரிசுத்த பவுல்: விசுவாசிக்கிறவனுக்கெல்லாம் [illegible]யுண்டாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்[illegible]கிறார் என்று சொல்லுகிறான் (ரோ. ௰, ச).

19. [illegible] நியாயப்பிரமாணத்தினால் இரட்சிப்படையக் கூடாதிருந்தும், கர்த்தர் வேதபாரகனுக்கு நியாயப்பிரமாணத்தை எடுத்துக் காட்டின காரணமென்ன.

க. வேதபாரகன் கர்த்தரிடத்தில் கிரியைகளைக் குறித்துக் கேட்டு: போதகரே, நான் என்னசெய்து நித்திய சீவனை அடையலாமென்றபடியினாலே, கிறிஸ்து அவனுக்கு நியாயப்பிரமாணத்தின்படி செய்யவேண்டியது இன்னதென்பதைக் காட்டினார். அவன் கிரியைகளினால் இரட்சிக்கப்படவேண்டுமென்றிருந்ததினாலே அவன் என்னென்ன கிரியை செய்யவேண்டுமென்று சொல்லுகிறார். அதாவது, அவன் தன் பராபரனாகிய கர்த்தரைத் தன் முழு இருதயத்தினாலும், தன் முழு ஆத்துமத்தினாலும், தன் முழு பலத்தினாலும், தன் முழு சிந்தையினாலும், தனக்கடுத்தவனை தன்னைப்போலுஞ் சிநேகிக்க வேண்டும். அவன் இதெல்லாத்தையும் நிறைவேற்றினால் பிழைப்பான்.



உ. மேலும் இரட்சகர்: அவன் தான் பராபரனுடைய நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவில்லையென்று பார்க்கும்படிக்கும், அதினால் கர்த்தராகிய தம்மண்டைக்கு வந்து இரக்கத்தை தேடும்படிக்கும் அவனை ஏவி, பாவத்தை அறிகிற அறிவை அவனுக்கு உண்டுபண்ணப் பிரிய சித்தமானார்.

20. வேதபாரகன் கேட்ட இரண்டாங் கேள்வி என்ன.

தனக்கு அடுத்தவன் ஆர் என்பதே.

21. அவன் அதை ஏன் கேட்டான்.

தன்னை நீதிமானாக்க மனதாய், அதாவது தான் பராபரனுடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டவனாகவும், அதினாலே தான் பராபரனுக்கு முன்பாக நீதிமானாயிருக்கிறதாகவுங் காண்பிக்க மனதாயிருந்தான். ஆனால் நியாயப்பிரமாணம் மனிதன் தனக்கடுத்தவனைத் தன்னைப்போல் சிநேகிக்கவேண்டுமென்று கேட்கிறபடியினால், அவன் எனக்கடுத்தவன் ஆர் என்று கேட்டான்.

22. இந்தக் கேள்விக்கு இயேசுநாதர் எந்த உத்தரவு கொடுத்தார்.

அவர் வேதபாரகனுக்கு நம்முடைய சுவிசேஷ வாக்கியந் சொல்லுகிறபடி: எருசலேமிலிருந்து எரிகோவுக்கு இறங்கிப்போய் கள்ளர் கையில் அகப்பட்டு, காயமடைந்து, குற்றுயிராக விட்டு விடப்பட்டவனும், ஆசாரியனாலும் லேவியனாலும் கைவிடப்பட்டு, சமாரியனால் உதவிபெற்றவனுமாகிய ஒரு மனிதனுடைய உவமையைச் சொன்னார்.

23. எருசலேமி[illegible]ருந்து எரிகோவுக்கு இறங்கிப்போன அந்த மனிதன் ஆர்.

அவன் யூதனாயிருந்தான். ஏனெனில் அவன் எருசலேமிலிருந்து இறங்கிப்போனான் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

24. ஆசாரியரும் லேவியரும் ஆர்.

அவர்கள் யூதரும் லேவிக்கோத்திரத்தாருமாயிருந்தார்கள். இந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாகிய ஆரோனுடைய வமிசத்தார் பராபரனுடைய ஆசாரியராயிருந்தார்கள். மற்றவர்கள் லேவியராக அழைக்கப்பட்டு, ஆசாரியருடைய உதவிக்காரராய் மாத்திரம் இருந்தார்கள்.

25. சமாரியர் ஆர்.

அவர்கள் இஸ்ரவேலர் முந்தி வாசமாயிருந்த சமாரியா நாட்டிலுள்ள சனம். அவர்கள் அஞ்ஞானிகளிலும் யூதரிலுங் கலந்த சனமாயிருந்தபடியால், யூதர்களால் சத்துருக்களாக எண்ணப்பட்டார்கள்.

26. நமது இரட்சகர் வேதபாரகனுக்கு என் இந்த உவமையைச் சொன்னார்.

தனக்கடுத்தவன் இன்னானென்று காண்பிக்கும்படி. ஏனெனில் கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேர்களில் ஆர் அடுத்தவனாக உனக்குக் காணுகிறது என்றார். அந்த வேதபாரகன் அவருக்கு: இரக்கத்தை அவனிடத்தில் செய்தவனே, அதாவது சமாரியன் என்று சொன்னபோது, இயேசுநாதர்: நீ போய், நீயும் அந்தப்படி செய் என்றார்.

27. இதினாலே நமது இரட்சகர் நமக்குக் குறித்துக் காட்டுகிறதென்ன.

௧. வேதபாரகரும் பரிசேயரும் நினைத்தபடியே நமது சிநேகிதர் மாத்திரமல்ல, நமது சத்துருக்களும் நமது பிறத்தியாராயிருக்கிறார்கள். ஏனெனில் சமாரியன் யூதருடைய சத்துருவாயிருந்தும், அவன் குற்றுயிராய் விடப்பட்ட அந்த யூதனுக்குப் பிறத்தியானாக எண்ணப்பட வேண்டுமென்பதை நமது இரட்சகர் இவ்விடத்திலே காண்பிக்கிறார்.

௨. வேதபாரகன் பராபரனுடைய நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவில்லை. ஆதலால் அவன் தன்னுடைய சத்துருக்களைத் தன்னைப்போல் சிநேகித்தான் என்று மேன்மை பாராட்டக் கூடாதவனாய் இயேசுநாதருடைய உத்தரவுக்கு எதிர்ப்பேச வெட்கப்பட்டான்.

[illegible]ப்பினை.

28. சுவிசேஷ வாக்கியத்தின் இந்த இரண்டாம் பங்கினாலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. வேதபாரகனிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. நாம் நித்திய சீவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டும். இந்த வேதபாரகன் கபடமாய்க் கேட்டதை, அதாவது நான் என்ன செய்து நித்திய சீவனைச் சுதந்தரித்துக்கொள்ளுவேன் என்பதை நாம் உண்மையோடும் மாயமற்ற மனதோடுங் கேட்க வேண்டும். ஏனெனில் பராபரன் மனிதரை நித்திய சீவனுக்கென்று படைத்தார்.

௨. நாம் நியாயப்பிரமாணத்தினால் அல்ல, இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசத்தினாலே இரட்சிப்பைத் தேட வேண்டும். அந்த வேதபாரகன் தன்னுடைய கிரியைகளினால் இரட்சிக்கப்படலாமென்று எண்ணினது மிகவுந் தப்பு. ஏனெனில் அது கூடாத காரியம். ஆகையால் அப்போஸ்தலனாகிய பவுலோடு: இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் ஒழிய, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளால் மனுஷன் நீதிமானாகிறதில்லை என்று அறிந்து, நாமும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளாலல்ல, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாவதற்கு, கிறிஸ்து இயேசுவின் பேரிலே விசுவாசித்தோமே. ஏனெனில் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளால் ஒரு மாமிசமும் நீதியுள்ளதாகிறதில்லை என்று சொல்ல வேண்டும் (கலா. ௨, ௰௬).



II. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாலும் அவர் கொடுத்த உத்தரவாலும் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. நாம் நியாயப்பிரமாணத்தினாலே நம்முடைய பாவங்களை அறிய வேண்டும். அதினிமித்தம் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து வேதபாரகனை நியாயப்பிரமாணத்துக்கு விட்டிடுகிறார். ஏனென்றால் நியாயப்பிரமாணத்தினால் பாவத்தை அறிகிற அறிவு வரும் (ரோ. ௩, ௨௰).

௨. நாம் பராபரனுடைய நியாயப்பிரமாணத்தின்படியே, அவரை முழு இருதயத்தினாலும் பிறனை நம்மைப் போலும் சிநேகிக்க வேண்டும். ஏனெனில் அதுதான் நியாயப்பிரமாணத்தின் தொகை. நாம் இதெல்லாவற்றையும் நிறைவேற்றக் கூடாதேபோனாலும், பராபரனுடைய கிருபையால் கூடியமட்டும் அதற்கு ஒத்ததாக நடக்க அல்லது பிழைக்க வேண்டும்.

௩. நமது ஒத்தாசை தேவையாயிருக்கிற எல்லாரும் அவர்கள் சிநேகிதரானாலும், சத்துருக்களானாலும் சரி, அறிமுகமானவர்களானாலும் அறிமுகமற்றவர்களானாலும் சரி, அவர்கள் நமக்குப் பிறத்தியாராயிருக்கிறார்கள்.

௪. இந்தச் சமாரியன் செய்ததுபோல் நாம் நமது சத்துருக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். நீ போய், நீயும் அந்தப்படி செய் என்று அவர் சொன்ன வார்த்தையை இப்போது நமக்கும் கூடச் சொல்லுகிறார். மேலும், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களைத் துண்டரிக்கம் பண்ணுகிறவர்களுக்காகவும் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் செபம் பண்ணுங்கள். நீங்கள் பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவின் புத்திரராயிருக்கத் தக்கதாகத் தானே. அதேனென்றால் அவர் தீயோர் பேரிலும் நல்லோர் பேரிலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியர் பேரிலும் அநீதியர் பேரிலும் தமது மழையை வருஷிக்கப்பண்ணுகிறார் என்கிறார் (மத். ௫, ௪௪. ௪௫).

29. இந்தச் சிநேகத்தை நமது இருதயங்களில் உண்டுபண்ணுகிறவர் ஆர்.

பரிசுத்த ஆவியானவர் தான்.

அவருக்குப் பிதாவோடும் குமாரனோடும் என்றென்றைக்கும் புகழ்ச்சியுங் கனமும் மகிமையும் உண்டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௪-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௱௯௰. ௱௭௪.)

### சுவி. லூக். ௰௭, ௰௧—௰௯.

பின்னையுஞ் சம்பவித்ததேதென்றால், அவர் எருசலேமுக்குப் பயணம் பண்ணுகையில், அவர் சமாரியாவையுங் கலிலேயாவையும் நடுவழியாய் உருவநடந்து வந்தார். 12 அவர் ஒரு கிராமத்துக்குள் பிரவேசித்தபோது, குஷ்டரோகமுள்ள பத்து மனுஷர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று: 13 இயேசு ஐயரே, எங்கள்மேல் இரங்கும் என்று சத்தமிட்டார்கள். 14 அவர் கண்டு அவர்களுடனே: நீங்கள் போய், உங்களை ஆசாரியர்களுக்குக் காண்பியுங்கள் என்றார். அப்போது சம்பவித்ததேதென்றால், அவர்கள் போகையில் சுத்தமானார்கள். 15 ஆனால் அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பி வந்து, மகா சத்தத்துடனே பராபரனை மகிமைப்படுத்தி, 16 அவருடைய பாதத்தண்டையிலே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினான். அவன் சமாரியனாயிருந்தான். 17 ஆனால் இயேசு பிரத்தியுத்தரமாக: பத்துப் பேருஞ் சுத்தமானதில்லையோ, அந்த ஒன்பது பேரோ எங்கே. 18 இந்த மறுசாதியானையேயொழிய, மற்றொருவனும் பராபரனுக்கு மகிமைசெலுத்தவதற்குத் திரும்பி வரக் காணோமோ என்று சொல்லி, 19 அவனுடனே: எழுந்திருந்து போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

1. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தை எத்தனை பங்காகப் பிரிக்கலாம்.

இரண்டு பங்காக.

### முதலாம் பங்கு.

2. முதலாம் பங்கு எதைப் பற்றியது.

நமது இரட்சகர் பத்துக் குஷ்டரோகமுள்ள மனிதரைச் சொஸ்தப்படுத்தின அற்புதத்தைப் பற்றியது.

3. குஷ்டரோகமாவது என்ன.

அது ஒரு கொடிய தொத்துவியாதி. அதினாலே மனிதருடைய சரீரம் புண்ணாகி வரவர அழுகிப்போகிறது. குஷ்டரோகமுள்ளவர்கள் மற்ற மனிதரைத் தொடாதபடிக்கு, அவர்கள் மற்றவர்களோடு வாசம்பண்ணக் கூடாதென்று பராபரன் நியாயப்பிரமாணத்தினால் கற்பித்திருந்தார். அந்த வாதை அவனிலிருக்கும் நாள் எல்லாம் தீட்டாக எண்ணப்படுவானாக. அவன் தீட்டானவன், தனியே குடியிருப்பானாக. அவன் குடியிருப்பு பாளையத்துக்குப் புறம்பேயிருக்கக் கடவது என்று சொல்லியிருக்கிறது (௩ மோ. ௰௩, ௪௬).



4. இங்கே எத்தனை குஷ்டரோகமுள்ள மனிதர் இருந்தார்கள்.

பத்துக் குஷ்டரோகமுள்ள மனிதர் இருந்தார்கள்.

5. அவர்களைச் சொஸ்தப்படுத்தினதார்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர்.

6. அவர் இந்த அற்புதத்தை எங்கே செய்தார்.

இயேசு எருசலேமுக்குப் பயணம் பண்ணிச் சமாரியாவையுங் கலிலேயாவையும் நடுவழியாய் உருவ நடந்து வந்த ஒரு சமாரிய கிராமத்திலே.

7. அந்தப் பத்துக் குஷ்டரோகிகள் இயேசுநாதரால் சொஸ்தமடைந்ததற்குக் காரணம் என்ன.

அவருடைய பெரிய இரக்கமும் அவர்களுடைய செபமுந்தான். ஏனெனில் அவர்கள் தூர நின்று: இயேசு ஐயரே, எங்கள்மேல் இரங்கும் என்று சத்தமிட்டார்கள்.

8. இந்த மனிதர் ஏன் தூரமாய் நின்றார்கள்.

சுகமுள்ளவர்களண்டைக்கு வராதபடி நியாயப்பிரமாணத்தினால் தடுக்கப்பட்டிருந்தபடியால்.

9. அவர்கள் ஏன் சத்தமிட்டார்கள்.

அவர்கள் குஷ்டரோகத்தினால் வருத்தப்பட்டு உரத்த சத்தமாய்ப் பேசக் கூடாமல் சத்தமிட்டார்கள். அதாவது அதிகப் பிரயாசையோடே: இயேசு ஐயரே, எங்கள்மேல் இரங்குமென்று கூப்பிட்டார்கள்.

10. இயேசுவினிடத்தில் அவர்கள் கேட்டதென்ன.

அவர் தங்கள்மேல் இரங்க வேண்டுமென்று கேட்டார்கள். ஏனெனில் அவர் அதைச் செய்தாரானால், தாங்கள் உடனே ஒத்தாசையடைவோமென்று அவர்கள் நம்பியிருந்தார்கள்.

11. ஒத்தாசையைக் கண்டடைந்தார்களா.

ஆம், இயேசுநாதர் அவர்களுக்கு: நீங்கள் போய், உங்களை ஆசாரியருக்குக் காண்பியுங்கள் என்றார். அப்போது சம்பவித்ததேதென்றால், அவர்கள் போகையில் சுத்தமானார்கள்.

12. குஷ்டரோகிகள் ஏன் ஆசாரியனிடத்துக்குப் போக வேண்டும்.

தாங்கள் சுத்தமானவர்கள் என்பதை அவர்களுக்குக் காண்பிக்கும்படியாக. குஷ்டரோகமுள்ளவர்கள் தங்களை ஆசாரியருக்குக் காண்பிக்க வேண்டுமென்று பராபரன் பழைய ஏற்பாட்டில் கற்பித்திருக்கிறார். ஒருவன் இந்த வியாதியினால் அசுத்தமுள்ளவன் என்று, ஆசாரியன் கண்டபோது, அவன் சுத்தமாகிறவரையில் மற்ற மனிதரை விட்டுத் தனியே வாசம்பண்ண வேண்டும். ஆசாரியன் அவனைப் பார்வையிட்டு, அவன் சுத்தமுள்ளவனென்று கண்டு, அவனுக்காகக் குறிக்கப்பட்ட பலியைச் செலுத்தும் வரையில் அவன் மற்ற மனிதரோடு வாசம்பண்ணக் கூடாது.

13. அந்த மனிதர் சுத்தமாகுமுன்னே ஆசாரியனண்டைக்குப் போகக் கர்த்தர் ஏன் கற்பித்தார்.

தாம் தூரமாயிருந்தும் குணமாக்கக் கூடுமென்று அவர்கள் உண்மையாய் விசுவாசிக்கிறார்களோ, தம்முடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து ஆசாரியனண்டைக்குப் போகிறார்களோ என்று அவர்களைச் சோதிக்கும்படியாக.

படிப்பினை.

14. சுவிசேஷ வாக்கியத்தின் இந்த முதற்பங்கினாலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதரால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. அவர் ஏழைகள்மேல் இரக்கமுள்ளவராயிருக்கிறார். அந்த எளிய மனிதர் கர்த்தரை நோக்கி: இயேசு ஐயரே, எங்கள்மேல் இரங்குமென்று கூப்பிட்டபோது, அவர் அவர்கள்மேல் இரங்கி, அவர்களுக்கு ஒத்தாசை செய்தார். நாம் தாவீது இராசாவோடு: தகப்பன் பிள்ளைகளுக்கு இரங்குவதுபோல், கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார் என்று சொல்லலாம் (சங். ௱௩, ௰௩).

௨. இயேசுநாதர் நமக்குண்டான சகல இக்கட்டிலும் ஒத்தாசை செய்கிறவராயிருக்கிறார். அவரிடத்தில் அந்தக் குஷ்டரோகிகள் வந்து ஒத்தாசை அடைந்தார்கள். அவர் சரீரத்துக்கும் ஆத்துமத்துக்கும் உண்டாகும் சகல துன்பங்களிலும் நமக்கு ஒத்தாசை செய்யக் கூடிய சர்வத்திற்கும் வல்ல பராபரனாயிருக்கிறார். நம்மை நோக்கிக் கூப்பிடுவான், நாம் அவனுக்கு மறு உத்தரவு அருளிச் செய்வோம். நெருக்கத்தில் நாம் அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனை



மகிமைப்படுத்துவோம் என்று அவர் நமக்குச் சொல்லுகிறார் (சங். ௯௧, ௰௫). மேலும் அவர்: பயப்படாதிரு, ஏனெனில் உன்னை மீட்டுக்கொண்டோம், உன்னைப் பேர்சொல்லி அழைத்தோம், நீ நம்முடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது, நாம் உன்னோடிருக்கிறோம். நீ ஆறுகளைக் கடக்கும்போது, அவைகள் உன்மேல் புரளுவதில்லை. நீ அக்கினியைக் கடக்கும்போது வேகாதிருப்பாய். அக்கினிச்சுவாலை உன்னைக் கொளுத்துவதில்லை. ஏனெனில் நாம் இஸ்ரவேலின் பரிசுத்தரும் உன் இரட்சகருமாயிருக்கிற உன் பராபரனாகிய கர்த்தர் என்கிறார் (எசா. ௪௩, ௧-௩).

௩. நமக்குண்டாகும் சகல வியாதிகளிலும் இயேசுநாதர் நமது உத்தம வயித்தியராயிருக்கிறார். அந்தக் குஷ்டரோகிகள் ஒரு மனிதனாலும் ஒத்தாசையடையக் கூடாதே போனாலும், இயேசுநாதர் தமது வல்லமையினாலே அவர்களைச் சொஸ்தப்படுத்தி: நாம் உன் பரிகாரியாகிய கர்த்தர் என்கிற தமது வார்த்தை உண்மையானதென்று காண்பித்தார் (௨ மோ. ௰௫, ௨௬).

II. நாம் அந்தப் பத்துக் குஷ்டரோகிகளிடத்தில் கற்றுக் கொள்ளுகிறதாவது:

க. துன்பம் செபம்பண்ண நமக்குப் போதிக்கிறது. அந்தக் குஷ்டரோகிகளுக்கு அத்தனைபெரிய துன்பமும் வியாதியும் இல்லாதே போனால், அவர்கள் செபம் பண்ணவும், இயேசு ஐயரே எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிடவும் மாட்டார்கள். வியாதியினாலும் துன்பத்தினாலும் வரும் பிரயோசனம் என்னவென்றால், அது நம்மைப் பராபரனண்டைக்கு நடத்திச் செபம் பண்ணப் போதிக்கிறது. கர்த்தாவே, நெருக்கத்தில் உம்மைத் தேடுகிறார்கள். உம்முடைய தண்டனை அவர்கள் மேல் இருக்கையில அந்தரங்க வேண்டுதல்களை ஊற்றுகிறார்கள் என்று எசாயாதீர்க்கதரிசி சொல்லுகிறான் (எசா. ௨௬, ௰௬).

௨. நாம் துன்பத்திலே இயேசு இரட்சகரிடம் அடைக்கலங் தேடவேண்டும். அந்தக் குஷ்டரோகிகள் தங்கள் துன்பத்திலே இயேசுநாதரண்டை வந்து, அவரை நோக்கிச் செபம் பண்ணி, ஒத்தாசை தேடினார்கள். அப்படியே நாமும் செய்வோமாக: ஏனெனில்: நெருக்கப்படுகிற நாளிலே நம்மை நோக்கிக் கூப்பிடு, அப்போது உன்னை விடுவிப்போம், அதற்காக நீ நம்மை மகிமைப்படுத்தக் கடவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் (சங். ௫௰, ௰௫).

௩. ஒத்தாசையடையும் படிக்கு நாம் எப்படிச் செபம் பண்ணவேண்டும்.

a. மெய்விசுவாசத்தோடு செபம் பண்ணவேண்டும். அப்படியே அந்தக் குஷ்டரோகிகள் செய்தார்கள், ஏனென்றால் இயேசு இரட்சகர் தூரத்திலிருந்தும், தங்களுக்கு ஒத்தாசைசெய்யக் கூடுமென்று விசுவாசித்தார்கள்.

b. மெய்யான மனத்தாழ்மையோடு செபம் பண்ணவேண்டும். அப்படியே அந்தக் குஷ்டரோகிகள் செய்தார்கள். ஏனென்றால் அவர்கள் நற்கிரியைகளின் நிமித்தம் தங்களை உயர்த்தாமல், கிருபையையும் இரக்கத்தையுந் தேடி: இயேசு ஐயரே, எங்கள் மேல் இரங்குமென்று கூப்பிட்டார்கள்.

c. கிறிஸ்தமான பொறுமையோடு செபம் பண்ணவேண்டும். அப்படியே அந்தக் குஷ்டரோகிகள் செய்தார்கள். ஏனென்றால் தங்களுக்கு எப்படி இயேசுநாதர் ஒத்தாசை செய்யவேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. கர்த்தர் அவர்களை உடனே சுகப்படுத்தாமல்: நீங்கள் போய், உங்களை ஆசாரியருக்குக் காண்பியுங்கள் என்று சொல்லியும், அவர்கள் பொறுமையற்றவர்களாய் இருக்கவில்லை. அப்படியே நாமும் செய்யக்கடவோம்.—நாம் விசுவாசத்தோடு செபம் பண்ணவேண்டும். ஏனென்றால் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு மோதுண்ட கடல் அலைக்குச் சமானமானவன். அப்படிக்கொத்த மனுஷன் தான் கர்த்தரிடத்திலே ஏதாகிலும் பெறுவான் என்று நினைக்கவேண்டாம் (யாக். ௧, ௬. ௭).—நாம் மனத்தாழ்மையோடு செபம் பண்ணவேண்டும். ஏனென்றால் அகந்தையுள்ளவர்களோடே பராபரன் எதிர்த்து நின்று, தாழ்மையானவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் (௧ பேது. ௫, ௫).—நாம் பொறுமையோடு செபம் பண்ணவேண்டும். ஏனெனில் பராபரன் தாமதித்தால், அவருக்குக் காத்திரு என்று சொல்லியிருக்கிறது (ஆபகூக். ௨, ௩).

## இரண்டாம் பங்கு.

15. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கு எதைப் பற்றியது.

சமாரியனுடைய நன்றியறிதலைப் பற்றியது.

16. அந்தச் சமாரியன் ஆர்.

சுகமாக்கப்பட்ட பத்துக் குஷ்டரோகிகளில் இவன் ஒருவன். இவன் தனக்குச் சுகமானதைக் கண்டு தன் சுகம் கர்த்தராகிய கிறிஸ்துவாலே, அதாவது அவருடைய வல்லமையினாலே உண்டாயிற்றென்று அறிந்து, திரும்பிவந்து, அவருடைய இரக்கத்துக்காக நன்றியறிந்தவனாய் அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினான்: அதைப்பற்றி நமது சுவிசேஷ வாக்கியஞ் சொல்லுகிறதாவது: ஆனால் அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பி வந்து, மகா சத்தத்துடனே பராபரனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தண்டை முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினான். அவன் சமாரியனாயிருந்தான் (௰௫. ௰௬).



17. அந்தப் பத்துக் குஷ்டரோகிகளும் கிறிஸ்துநாதரண்டைக்கு வந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தவில்லையா.

இல்லை. அவர்களில் ஒன்பது பேர் நன்றிகெட்டவர்களாய்க் கர்த்தரண்டைக்குத் திரும்பி வந்ததில்லை. சமாரியன் ஒருவன் மாத்திரம் திரும்பி வந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினான். ஆகையால் நம்முடைய இரட்சகர்: பத்துப்பேரும் சுத்தமானதில்லையோ. அந்த ஒன்பது பேரோ எங்கே. இந்த மறுசாதியானையே யொழிய மற்றொருவனும் பராபரனுக்கு மகிமை செலுத்துவதற்குத் திரும்பிவரக்காணோமோ என்று சொன்னார் (௰௭. ௰௮).

18. கிறிஸ்துநாதர் அந்த ஒன்பது பேரைக்குறித்து ஏன் கேட்டார். அவர்கள் எங்கேயிருந்தார்களென்று அவருக்குத் தெரியாதா.

தெரியும். ஆனால் அவருடைய ஒத்தாசை அடைந்த அந்த மனிதர் அவ்வளவு நன்றிகெட்டவர்களாயிருந்தது தமக்கு விசனமாயிருக்கிறதென்பதைக் காண்பிக்க, அவர் இப்படிக் கேட்டார்.

19. நன்றி செலுத்தின அந்த மனிதனை ஏன் மறுசாதியான் என்றார்.

அவன் யூதனல்லாதபடியால். ஏனெனில் பழைய ஏற்பாட்டின் காலத்தில் யூதர் மாத்திரம் பராபரனுடைய சனமாக எண்ணப்பட்டார்கள். சமாரியர் முதலான அஞ்ஞானிகளோ: பராபரனுடைய சீவனுக்குப் புறம்பான அந்நியராயிருந்தார்கள் (எபேசி. ௪, ௰௭), அதாவது அவர்கள் பராபரனுடைய சனமாயிருந்ததில்லை.

20. மற்ற ஒன்பது பேர் ஆர்.

அவர்கள் யூதராயிருந்தார்கள் என்பதற்குச் சந்தேகம் இல்லை. ஏனெனில் நமது இரட்சகர் நன்றியறிந்த சமாரியனை மறுசாதியான் என்று அழைத்து, தம்மை நன்றாய் அறியக்கூடிய யூதர்களை அவர்களுடைய நன்றிகேட்டின் நிமித்தம் வெட்கப்படுத்துகிறார்.

21. நன்றியறிந்த சமாரியனுக்கு இயேசுநாதர் சொன்னதென்ன.

எழுந்திருந்து போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார் (௰௯).

## படிப்பினை.

22. சுவிசேஷ வாக்கியத்தின் இந்த இரண்டாம் பங்கிலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. நன்றியறிந்த சமாரியனிடத்தில் நாம் கற்றுக் கொள்ளுகிறதாவது:

௧. நாம் பராபரனாகிய கர்த்தருடைய எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும். அந்தச் சமாரியன் கிறிஸ்துநாதர் தனக்குச் செய்த ஒத்தாசையைக் கண்டு, திரும்பிவந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினதுபோல், நாமும் செய்யக்கடவோம். பராபரன் நம்முடைய செபத்தைக் கேட்டு, நமக்குக் கிருபை அளிக்கிறபோது, நாம் அதற்காக அவரை ஸ்தோத்திரித்துப் புகழ்ந்து மகிமைப்படுத்தக்கடவோம். இது அவருடைய பிரிய சித்தம். ஏனென்னில்: நெருக்கப்படுகிற நாளிலே நம்மை நோக்கிக் கூப்பிடு, அப்போது உன்னை விடுவிப்போம், அதற்காக நீ நம்மை மகிமைப்படுத்தக்கடவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் (சங். ௫௰, ௰௫). துன்பத்திலிருந்து பராபரனால் இரட்சிக்கப்பட்ட யாவரும் நன்றியறிந்தவர்களாயிருக்கவேண்டுமென்று தாவீது சங்கீதக்காரன் புத்திசொல்லி எழுதுகிறதாவது: தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில், இவர் தங்கள் இக்கட்டுகளுக்கு நீங்கலாக்கி விடுவித்தாரே. அவர்கள் அவரை மனுஷருக்கு முன்பாக அவருடைய கிருபையினிமித்தமும் அதிசயங்களினிமித்தமும் துதிக்கக் கடவார்கள் என்றும் (சங். ௱௭, ௮. ௯), கர்த்தரை எல்லாக் காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன், அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மை பாராட்டும், சிறுமையானவர்கள் அதைக் கேட்டு மகிழுவார்கள். என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள், நாம் ஏகமித்து அவர் நாமத்தை உயர்த்துவோம் என்றும் (சங். ௩௪, ௨-௪) தன் சுயமுன்மாதிரியினாலே நம்மை ஏவி எழுப்புகிறான்.

௨. நாம் எப்போதும் மனத்தாழ்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். இக்கட்டிலும் சஞ்சலத்திலுமிருந்த இந்தச் சமாரியன்: இயேசு ஐயரே, எனக்கு இரங்குமென்று கூப்பிட்டபோது மாத்திரமல்ல, அவன் ஒத்தாசை அடைந்த



பிற்பாடும் மனத்தாழ்மையுள்ளவனாய் இயேசுவின் பாதத்தண்டை விழுந்து, அவர் எழுந்திருக்கச் சொல்லும் வரையில் அவருக்குக் காத்திருந்தான். அப்படியே நாமும் தாழ்வில் மாத்திரமல்ல, வாழ்விலும் மனத்தாழ்மையாயிருக்கவேண்டும். நீ எத்தனை பெரியதனக்காரனாயிருக்கிறாயோ, அத்தனை அதிகத் தாழ்மையிலே நடந்து கொண்டு வா, அப்போ கர்த்தர் உன் பேரில் தாற்பரியமாயிருப்பார் (சீராக் ௩, ௨௰).

௩. பொல்லாதவர்களின் கெட்ட முன்மாதிரியினாலே கெட்டுப்போகாதபடிக்கு நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். சுவிசேஷ வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஒன்பது பேர் நன்றிகெட்டவர்களாயிருந்தார்கள். சமாரியன் அவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றவில்லை. அவனைப் போல் நாமும் செய்யக்கடவோம். அதற்கு சாலொமோன் இராசா புத்திசொல்லி: பொல்லாத மனுஷர்மேல் பொறாமையாகாதே, அவர்களோடிருக்க ஆசையுமாயிராதே என்றான் (வாக். ௨௪, ௧).

௪. விசுவாசமே சகல இக்கட்டிலும் நம்மை இரட்சிக்கிறது. ஏனெனில், அந்தச் சமாரியனுக்கு: போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்று இயேசுநாதர் சொல்லுகிறார். ஆதலால் அவர் எல்லா விசுவாசிகளுக்கும்: நீங்கள் செபத்திலே எதைக் கேட்டாலும், விசுவாசித்தீர்களானால் யாவையும் பெறுவீர்கள் என்கிறார் (மத். ௨௧, ௨௨).

II. அந்த ஒன்பது குஷ்டரோகிகளிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. மனிதரில் மிச்சமானவர்கள் நன்றிகெட்டவர்களாயிருக்கிறார்கள். அந்தப் பத்துப்பேரில் ஒருவன் மாத்திரம் கர்த்தரண்டைக்குத் திரும்பி வந்து, ஸ்தோத்திரஞ் செலுத்தினான். மற்றவர்கள் எல்லாரும் நன்றிகெட்டவர்களாயிருந்தார்கள். அப்படியே பொதுவாய் இன்னம் நடந்துவருகிறது. பத்துப்பேரில் ஒருவன் ஒருவேளை கர்த்தருடைய உபகாரங்களுக்காக அவருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செலுத்துகிறான். மிச்சமானவர்களோ அவைகளை நினையாமல், பராபரனாகிய கர்த்தரைத் தங்கள் நடக்கையினாலே தூஷணிக்கிறார்கள். அவர்களுக்குக் கர்த்தருடைய வசனம்: ஞானமற்ற பயித்திய சனமே, இப்படி கர்த்தருக்குப் பதில் அளிக்கிறீர்களோ. அவர் உன்னைத் தம்முடைய கைவசமாக்கின உன் எசமானாகிய உன்னுடைய பிதாவல்லவோ. அவர் உன்னை உண்டாக்கினவரும் உன்னைத் திடப்படுத்தினவரும் அல்லவோ என்கிறது (௫ மோசே. ௩௨, ௬).

உ. குணப்படாத மனிதருடைய ஐக்கியம் கெட்டுப் போக ஏது உண்டாகும். அந்த ஒன்பதுபேரும் நன்றி கெட்டவர்கள். அதற்கு ஒருவனை ஒருவன் ஏவி எழுப்பி னான். கீலைத் தொடுகிறவன் கறைப்பட்டுப் போகிறதுப்போ லே, பெருமைக்காரனோடு கூட்டுறவாயிருக்கிறவன் அவனுக் குச் சரிசாயலாவான் (சிராக் ௰௩, க).

III. கர்த்தராகிய கிறிஸ்துவினிடத்தில் நாம் கற்றுக் கொள்ளுகிறதாவது:

நன்றிகேடு கர்த்தருக்கு அருவருப்பான காரியம். நம் முடைய இரட்சகர் அந்த ஒன்பது பேருடைய நன்றிகேட் டின் நிமித்தம் முறையிட்டு: பத்துப்பேரும் சுத்தமானதில் லையோ, அந்த ஒன்பதுபேரோ எங்கே. இந்த மறுசாதியா னையே ஒழிய மற்றொருவனும் பராபரனுக்கு மகிமை செலுத் துவதற்குத் திரும்பிவரக் காணேமோ என்று விசாரிக்கிறார். நன்றிகெட்டவர்களைக் குறித்து: நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டுகிறவனுடைய வீட்டைத் தீமை விட்டுப் பிரியாது என்று சாலொமோன் [illegible]லுகிறான் (வாக்கி. ௰எ, ௰௩). ஆகையால் நாம் நன்றி[illegible]கட்[illegible]க்கு [illegible]ச்சரிக்கையாயிருக்[illegible] நமது பராபரனாகிய க[illegible]த்தர் [illegible]செய்த [illegible]ல்லா உபகாரங்களு[illegible] காகவும் [illegible]ப்போதும் அவ[illegible]ரப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்க வேண்டும். மறுமையிலே நாம் அதைப் பரிபூரணமாய்ச் [illegible], ஓயாமல் சொல்[illegible]தென்ன வென்றால்: ஆமென், எங் கள் பராபரனுக்குத் [illegible]யும் மகிமையும் ஞானமும் ஸ்தோத் திரமும் கனமும் வல்லமையும் பெலனும் என்றென்றைக்கு முள்ள சதாகாலங்களிலும் உண்டாகக்கடவது, ஆமென் (அபிவி. எ, ௰௨).

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௫-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௭௧.)

சுவிசேஷம். மத். ௬, ௨௪—௩௪.

ஒருவனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்யக் கூடா து. ஏனென்றால், ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு, மற்றவனை அசட்டைபண்ணு வான். நீங்கள் பராபரனுக்கும் லோகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்யக் கூடாது. 25 ஆனதுகொண்டு உங்களுக்குச் சொல்லுகி றேன், என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போமென்று உங்கள் சீவனுக்காகவும், என்னத்தை உடுப்போமென்று உங்கள்



சரீரத்துக்காகவும், கவலைப்படாதேயுங்கள். ஆகாரத்தைப்பார்க்கச் சீவனும் உடையைப் பார்க்கச் சரீரமும் அதிகமாயிருக்கிறது அல் லவோ. 26 ஆகாசத்தின் பட்சிகளை நோக்கிப்பாருங்கள். அதுகள் விதைக்கிறதும் அறுக்கிறதுங் களஞ்சியங்களில் கூட்டிவைக்கிறதும் இல்லை. இல்லாவிட்டாலும் உங்கள் பரமபிதா அதுகளைப் பிழைப் பூட்டுகிறார். அதுகளைப்பார்க்க நீங்கள் விசேஷித்திருக்கிறீர்கள் அல்லவோ. 27 ஆனால் உங்களில் ஆர் கவலைப்படுகிறதினால் தன் அளவோடு ஒரே முழத்தைக் கூட்டலாம். 28 உடைக்காகவும் நீங் கள் கவலைப்படுகிறது என்ன. வெளியிலே லீலிய புஷ்பங்கள் எப் படி வளருகிறதென்று அதுகளைக் கவனித்துப் பாருங்கள். அதுகள் உழைக்கிறதும் இல்லை, நூற்கிறதும் இல்லை. 29 இல்லாவிட்டாலும், சாலொமோன் தானே தன் சர்வமகிமையிலும் இதுகளில் ஒன் றைப்போலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லு கிறேன். 30 இப்போதும் இன்றைக்கு இருந்து, நாளைக்கு அடுப்பிலே போடப்படும் வெளியின் புல்லைப் பராபரன் இவ்விதமாக உடுத்து வித்தால், வெகு அதிகமாய் உங்களை உடுத்துவிப்பார் அல்லவோ, அற்பவிசுவாசிகளே. 31 ஆனபடியால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று சொல லிக் கவலைப்படாதேயுங்கள். 32 ஏனென்றால் இதுகள் எல்லாத்தை யும் அஞ்ஞானிகள் நாடித் தேட[illegible]. உங்கள் பரம பிதாவோ இதுகளெல்லாம் உங்களுக்குத் தேவை என்று அறிவார். [illegible] ஆனால் முந்தப் பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கள்; அப்போது இதுகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். 34 [illegible]கையால் நாளையத்தினத்துக்காகக் கவலைப்படாதேயுங்கள்; ஏனெனில் நாளையத்தினம் தன்னுடையது[illegible] களுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போ தும் என்றார்.

1. இந்நாளின் சுவிசேஷவாக்கியத்தில் அடங்கியிருக் கிறதென்ன.

அவசரமற்ற பிழைப்பின் கவலையைப்பற்றிய நல்ல புத்திமதி.

2. இந்தப் புத்திமதியைச் சொன்னதார்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர்.

3. அவசரமற்ற பிழைப்பின் கவலை என்ன.

மனுஷன் அன்ன வஸ்திரம் முதலிய சரீரப்பிழைப் புக்கு வேண்டிய காரியங்களைப்பற்றி விசன[illegible]டு கவலை[illegible] டுகிறது தான். இப்படிப்பட்ட கவலைக்கு விசுவாசிகள் [illegible]ல லாரும் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று நம்முடைய இரட்சகர் இந்தச் சுவிசேஷ வாக்கியத்திலே போதித்து: என் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என் னத்தை உடுப்போம் என்று சொல்லிக் கவலைப்பட[illegible]ங்க ளென்று புத்தி சொல்லுகிறார் (௩௧).

4. மனுஷன் தன் சரீரப்பிழைப்புக்காகக் கவலைப்பட்டு, அன்னவஸ்திரங் கிடைக்கும்படியாக வேலைசெய்ய வேண்டியதில்லையா.

வேலைசெய்ய வேண்டாம் என்பது கர்த்தருடைய இந்த வார்த்தையின் அர்த்தமல்ல. ஆனால் பிழைப்பின் கவலை இரண்டு விதம். க) ஒருவன் தன் உத்தியோகத்தில் சுறுசுறுப்புள்ளவனாயிருந்து, தனக்கு அன்ன வஸ்திரம் முதலியவைகளைச் சம்பாதித்துக் கொள்ளும்படியாகக் கர்த்தர் தனக்குக் குறித்த வேலையை உண்மையாய்ச் செய்தால், அது நல்லதும் அவசரமுமான கவலையாம். எனெனில் நம்முடைய ஆதித்தாய் தகப்பன்மார் பாவத்திலே விழுந்த பின் அந்தந்த நிலைமையிலிருக்கிற மனிதர் யாவருக்கும் பராபரன் பிரயோசனமான வேலையை நிரந்து கொடுத்து: நீ உன் முகத்தின் வேர்வையால் அப்பம் புசிக்கக் கடவாயென்று சொல்லியிருக்கிறார் (௧ மோ. ௩, ௰௯). அப்போஸ்தலனாகிய பவுலும்: ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால், அவன் சாப்பிடவும் வேண்டாம் என்கிறான் (௨ தெச. ௩, ௰).

௨. மனிதன் பராபரனுடைய ஒத்தாசையைப்பற்றி நம்பிக்கையற்றவனாயிருந்து, அவமானம், பசிதாகத்தினால் நாசமாக நேரிடுமென்று பயந்து, விசனப்பட்டு: என்னத்தை உண்பேன், என்னத்தைக் குடிப்பேன், என்னத்தை உடுப்பேன் என்று சஞ்சலப்பட்டுத் துவக்கும்போது, அவனுக்குக் கெட்ட துக்கக்கவலை உண்டாகிறது. வயிற்றின் துக்கக்கவலை என்னப்பட்ட இந்தக் கெட்ட கவலைக்கு நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று இரட்சகர் இந்த வாக்கியத்தில் சொல்லுகிறார்.

5. ஒரு கிறிஸ்தவன் அவசரமற்ற பிழைப்பின் கவலைக்கு விலக்கமாயிருக்க வேண்டியதேன்.

அதற்கு நம்முடைய இரட்சகர் சுவிசேஷ வாக்கியத்திலே அநேக முகாந்தரங்களைச் சொல்லுகிறார்.

6. முதலாம் முகாந்தரம் என்ன.

துக்கக் கவலைகளுக்கு இடங்கொடுக்கிறவன் எவனோ அவன் தன் பராபரனாகிய கர்த்தருக்கு ஊழியஞ் செய்யக்கூடாது. இதைக் குறித்து நமது வாக்கியத்தில்: ஒருவனும் இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ்செய்யக் கூடாது. ஏனென்றால் ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான். நீங்கள் பராபரனுக்கும் லோகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்யக் கூடாது என்று கர்த்தர் சொல்லுகிறார் (௨௪).

7. லோகப் பொருளுக்கு ஊழியஞ் செய்கிறதாவதென்ன.



ஐசுவரியத்தை நாடித்தேடி: எப்படிப் பிழைக்கலாம், எப்படி ஆஸ்தியை அடையலாம் என்று இரவும் பகலும் சஞ்சலத்தோடே விசாரப்படுகிறதாம்.

8. அப்படிக்கொத்த மனிதன் பராபரனுக்கு ஊழியஞ்செய்யக் கூடாதா.

கூடாது. ஏனெனில் ஒருவனும் இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ்செய்யக் கூடாதென்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார். ஒரு ஊழியக்காரன் ஒருவனைச் சார்ந்துகொண்டு, மற்றவனை அசட்டைசெய்து, இப்படியாக இரண்டு எசமான்களுக்கு எப்படி ஊழியஞ் செய்யக்கூடாதவனாயிருக்கிறானோ, அப்படியே ஒருவன் பராபரனுக்கும் லோகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்யக்கூடாது. ஐசுவரியவானாயிருக்க விரும்பிப் பிரயாசப்படுகிறவன் பராபரனுடைய பராமரிப்பை மறந்துவிட்டு அவருக்குப் பயப்படாமல், அவரைப் பகைத்து அசட்டைபண்ணுகிறான். ஏனெனில் அவன் பராபரனையும் அவருடைய வசனத்தையும் பார்க்கப் பணத்தைச் சிநேகிக்கிறான். ஆகையால் அப்போஸ்தலனாகிய பவுல்: ஐசுவரியவான்களாக வேண்டுமென்றிருக்கிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான வெகு இச்சைகளிலும் விழுகிறார்கள். ஏனெனில் பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது என்று சொல்லுகிறான். (௧ தீமோ. ௬, ௯. ௰).

9. இரண்டாம் முகாந்தரம் என்ன.

பராபரனாகிய கர்த்தர் நமக்கு அன்னவஸ்திரத்தைப் பார்க்கப் பெரிதான நன்மைகளைக் கொடுத்தாரானால், அதிலும் அற்ப சொற்பமானதையும் நமக்குக் கொடுப்பாரென்று நாம் நம்பியிருக்கவேண்டும். ஆகாரத்தைப்பார்க்கச் சீவனும் உடையைப்பார்க்கச் சரீரமும் விசேஷித்திருக்கிறபடியால், சீவனையும் சரீரத்தையுங் கொடுத்தவர் அதற்கு வேண்டிய ஆகாரத்தையும் உடையையுங் கொடுப்பார் என்று நாம் நம்பலாம். அதைப்பற்றி இயேசுநாதர்: என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போமென்று உங்கள் சீவனுக்காகவும், என்னத்தை உடுப்போமென்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதேயுங்கள். ஆகாரத்தைப்பார்க்கச் சீவனும் உடையைப் பார்க்கச் சரீரமும் அதிகமாயிருக்கிறதல்லவோ என்கிறார் (௨௫).

10. மூன்றாம் முகாந்தரம் என்ன.

மனிதரைப் பார்க்க அற்பமான சீவஜெந்துக்களுடைய பிழைப்புக்கு வேண்டியதைப் பரம பிதாவானவர் அருளி

ழுங் கொடுக்கிறார். ஆகையால் இயேசுநாதர் ஆகாசத்துப் பட்சிகளை நமக்குக் காட்டி: ஆகாசத்துப் பட்சிகளை நோக்கிப் பாருங்கள். அவைகள் விதைக்கிறதும் அறுக்கிறதும் களஞ்சியங்களில் கூட்டிவைக்கிறதும் இல்லை. இல்லாவிட்டாலும் உங்கள் பரமபிதா அவைகளைப் பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்க நீங்கள் விசேஷித்திருக்கிறீர்கள் அல்லவோ என்றும், லீலிய புஷ்பங்களைக் காட்டி: உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன. வெளியிலே லீலிய புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று அவைகளைக் கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை. இல்லாவிட்டாலும், சாலொமோன் தானே தன் சர்வ மகிமையிலும் இவைகளில் ஒன்றைப்போலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்போதும் இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் வெளியின் புல்லைப் பராபரன் இவ்விதமாக உடுத்துவித்தால், வெகு அதிகமாய் உங்களை உடுத்துவிப்பார் அல்லவோ, அற்பவிசுவாசிகளே என்றும் சொல்லுகிறார் (௬. ௨௬-௩௰).

11. இந்த வார்த்தைகளின் அர்த்தம் என்ன.

நம்முடைய பரமபிதாவாகிய பராபரன் ஆகாசத்துப் பட்சிகளை, அவைகளில் ஒன்றாகிலும் பசியினால் வருந்திச் சாகாதபடிக்குப் பிழைப்பூட்டுகிறார். பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்த சாலொமோன் ஐசுவரியத்திலும் வல்லமையிலும் அக்காலத்து அரசர்கள் யாவரிலும் பேர்பெற்று மகிமையுடையவனாயிருந்தும், வெளியின் புல்லும் புஷ்பங்களும் உடுத்தியிருக்கிற அவ்வளவு நேர்த்தியாய் அவன் உடுத்தியிருந்ததில்லை. கர்த்தராகிய பராபரன் பட்சிகளுக்கும் புஷ்பங்களுக்கும் இவ்விதமாய்ச் செய்தாரானால், தமது நேசகுமாரனைக் கொடுத்து அத்தன்மையாய்ச் சிநேகித்த மனிதரை மறப்பாரா. அவர் அநுதினமும் பட்சிகளையும் புஷ்பங்களையும் பிழைப்பூட்டி உடுத்தி அலங்கரிப்பாரானால், தமது நேசகுமாரனைக்கொண்டு மீட்டிரட்சித்த தமது அருமைப்பிள்ளைகளைப் போஷிப்பித்து உடுத்துவிக்கமாட்டாரா.

12. நாலாம் முகாந்தரம் என்ன.

நமது கவலையும் சஞ்சலமுமெல்லாம் வீணாயிருக்கிறது. நம்முடைய ஜீவன் போகும்படியான அவ்வளவாய் நாம் கவலைப்பட்டாலும், நமது கவலையினால் யாதொரு பிரயோசனமும் இல்லை. கர்த்தர் இதை ஒரு உவமையினால் தெரிவித்து: உங்களில் ஆர் கவலைப்படுகிறதினால் தன் அளவிலே ஒரே முழத்தைக் கூட்டலாம் என்று கேட்கிறார் (௨௭).



13. கர்த்தர் இதினால் நமக்குப் போதிக்கிறதென்ன.

மனிதன் தன் சகல கவலையினாலும் தன் சரீர அளவுக்குமேல் ஒரு முழத்தைக் கூட்டக்கூடாது. அப்படி தன் கவலையினால் ஒரு முழத்தைக் கூட்டக்கூடாதிருக்கிற அவன் விசனப்படுகிறது வீண். அதுபோல் பராபரனால் இந்த லோகப் பொருளில் கொஞ்சம் அடைந்த மனிதன் விசனங்கொண்டு விசாரம் பிடித்திருக்கிறதும், பொருளாசையினால் ஏவப்பட்டு இரவும் பகலும் வேலைசெய்கிறதும் வீணாகவே இருக்கும். ஏனெனில் பராபரனாகிய கர்த்தர் தாவீதைக்கொண்டு: நீங்கள் இருட்டோடே எழுந்து, நேரப்பட வேலையில் தரித்து, வருத்தங்களுள்ள அப்பத்தைச் சாப்பிடுகிறது விருதா. தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரையை அளிக்கிறார் என்கிறார் (சங். ௱௨௭, ௨).

14. ஐந்தாம் முகாந்தரம் என்ன.

அக்கியானிகளுக்கடுத்த இந்தக் காரியம் கிறிஸ்தவர்களுக்குத் தகாதது. ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போமென்று சொல்லிக் கவலைப்படாதேயுங்கள். ஏனென்றால் இதுகள் எல்லாத்தையும் அக்கியானிகள் நாடித் தேடுகிறார்களென்று இயேசு இரட்சகர் சொல்லுகிறார் (௩௧ ௩௨).

15. இதற்கு அர்த்தம் என்ன.

அக்கியானிகள் கர்த்தராகிய பராபரனையும், அவர் தங்களுக்காகக் கவலைப்படுகிறதையும் அறியாதிருக்கிறபடியால், இந்தச் சஞ்சலமான கேள்விகளைக் கேட்கிறதற்கு அவர்களுக்கு முகாந்தரமுண்டு. பரமபிதாவாகிய பராபரனையும், அவர் உங்களுக்காக விசாரிப்பாயிருக்கிறதையும் அறிந்திருக்கிற நீங்கள் அப்படிக் கவலைப்படுகிறது தகாது.

16. ஆறாம் முகாந்தரம் என்ன.

நமது பரமபிதாவாகிய பராபரன் நமக்காகக் கவலைப்படுகையில் நாம் அவர்பேரில் நமது முழு நம்பிக்கையையும் வைத்தால், அவர் நமக்குத் தேவையான யாவையுங் கொடுப்பார். ஏனெனில் நமது இரட்சகர்: உங்கள் பரமபிதாவே இவைகள் எல்லாம் உங்களுக்குத் தேவை என்று அறிவார். ஆனால் முந்தப் பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கள். அப்போது இதுகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார் (௩௨. ௩௩).

17. அதினால் அவர் குறிக்கிறதென்ன.

உங்களுக்காகக் கவலைப்படுகிறவர் ஒருவர் இருக்கிறார். அவர் உங்கள் பரமபிதாவானவர். ஆகையால் நீங்கள் அவ

ருக்குப் பிரியமான பிள்ளைகளாய்ப் பிழைக்கும்படிக்குக் கவலைப்பட்டு, முந்தப் பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கள். மற்றதெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

18. இதிலே சொல்லப்பட்ட பராபரனுடைய இராச்சியமாவதென்ன.

க. அது சகல கிருபையின் பொக்கிஷங்களும் நிறைந்த கிருபையின் இராச்சியம்.

உ. மகிமையின் இராச்சியம், அதாவது மோட்ச இராச்சியம்.

19. இங்கே சொல்லப்பட்ட நீதியாவதென்ன.

க. விசுவாசத்தின் நீதி. அதாவது: நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறதினாலே நீதிமான்களாக்கப்பட்டு இரட்சிக்கப்படுகிறது.

உ. நடக்கையின் நீதி. அதாவது: நாம் பராபரனுடைய கிருபையினாலும் பெலத்தினாலும் நீதியும் பரிசுத்தமுமாய் நடக்கிறது.

20. பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுகிறதாவதென்ன.

நாம் இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டு, கிறிஸ்துமான சபையிலே பரிசுத்தமும் பராபரனுக்குப் பிரியமுமாய் நடந்து, கடைசியாக அவருடைய பரம இராச்சியத்துக்கு, அதாவது நித்திய மோட்சத்துக்கு வருவதாம்.

21. அப்போது மற்றதெல்லாங் கூடக் கொடுக்கப்படும் என்கிற வார்த்தைக்கு அர்த்தம் என்ன.

நீங்கள் உங்கள் ஆத்துமம் இரட்சிக்கப்பட்டு காக்கப்படுவதற்கு மாத்திரம் வகை தேடுங்கள். அப்போது உங்கள் சரீரப்பிழைப்புக்கு வேண்டியதெல்லாம உங்களுக்குக் கொடுக்கப்படும் என்பதாம்.

22. ஏழாம் முகாந்தரம் என்ன.

நமக்கு வயிற்றின் துக்கக்கவலை தவிர வேறு கவலையும் உண்டு. ஏனெனில் ஒவ்வொருநாளுக்கு அதின் அதின் சொந்தக் கவலையும் வருத்தமும் இருக்கிறது. நாம் அநுதினமும் பராபரனுடைய சித்தத்தின்படி நடந்து, நமது உத்தியோக வேலையை நிறைவேற்றக் கவலைப்படவேண்டும். நாம் வருங் காரியங்களுக்காகச் சஞ்சலத்தோடு கவலைப்பட்டு, நமது வருத்தத்தை நமக்குப் பெரிதாக்கிக் கொள்ளுகிறது மகா பெரிய பைத்தியமே. ஆகையால்: நாளையத்தினத்துக்காகக் கவலைப்படாதேயுங்கள், ஏனெனில் நாளையத்தினந் தன்னு



டையதுகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும் என்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார்.

படிப்பினை.

23. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் நாம் என்னத்தைக கற்றுக்கொள்ளுகிறோம்.

க. நாம் பராபரனாகிய கர்த்தருக்கு மாத்திரம் ஊழியஞ் செய்யவேண்டும் ஏனெனில் பராபரனுக்கும் லோகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்யக் கூடாதபடியினாலே நாம் கர்த்தருக்கு மாத்திரம் ஊழியஞ் செய்கிறது அவசியம். லோகத்துக்கு ஊழியஞ் செய்கிறவன் அதின் பொருளாசை, பெருமையோடும், சீவனத்தின் செல்விக்கையை நாடித் தேடுகிறவன் தன்னுடைய சகல ஆசையோடும் ஒழிந்து போவான். பராபரனுக்கு ஊழியஞ் செய்கிறவனோ, அதாவது கர்த்தருடைய சித்தத்தைச் செய்கிறவனோ க யோவான் உ, ௰௭-ல சொல்லியிருக்கிறதின்படியே, என்றென்றைக்கும் பிழைத்திருப்பான்.

உ. பராபரனாகிய கர்த்தர் தாம் சிருஷ்டித்த தம்முடைய எல்லா வஸ்துக்களுக்காவுங் கவலைப்படுகிறார். பட்சிகளைப் போஷிப்பிக்கிறவரும் புஷ்பங்களை உடுத்துவிக்கிறவரும் அவரே. கர்த்தரைத் துதியுங்கள் ஏனெனில் அவர் நல்லவர், அவருடைய கிருபை என்றுமுள்ளது, அவர் எல்லா மாமிசத்திற்கும் ஆகாரங் கொடுக்கிறவராமே, அவர் மிருகசீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்காய்க் குஞ்சுகளுக்கும் அவைகளின் ஆகாரத்தைக் கொடுக்கிறார் என்று சொல்லியிருக்கிறது (சங். ௱௪௭, ௯).

ங. ஒரு தகப்பன் தன் பிரிய பிள்ளைகளை எப்படி நடத்திவருகிறானோ, அப்படியே கர்த்தர் விசுவாசமுள்ளவர்களையும் நடத்திவருகிறார். அதைப்பற்றி நம்முடைய இரட்சகர்: உங்கள் பரம பிதாவோவெனில், இவைகளெல்லாம் உங்களுக்குத் தேவை என்று அறிவார் என்கிறார். ஆகையால் நாம் அநுதினமும் அவரை நோக்கி: பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே என்று சொல்லவேண்டும் (மத். ௬, ௩௨). அவர் தம்முடையவர்களை அறிந்து, அவர்களுக்காகக் கவலைப்பட்டு, அவர்களைக் காப்பாற்றிவருகிறார். அதற்கொத்ததாகவே: தகப்பன் பிள்ளைகளுக்கு இரங்குவதுபோல் கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (சங். ௱௩, ௰௩).

ச. நம்முடைய இச்சீவன் அதிக வருத்தமுள்ளதாயிருக்கிறது. அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும

என்று நமது இரட்சகர் சொல்லுகிறார். எல்லா மனுஷரும் இருக்கிற இச்சீவன் மகாப் பாதாபந் தான். தாய்வயிற்றிலிருந்து பிறந்த நாள் துவக்கி நம்மெல்லாருடைய தாயாகிய பூமியிலே அடக்கப்படுமட்டாகத் தானே. ஏனென்றால் கவலைகள் பயம் நம்பிக்கை கடையாந்தரம் மரணமுமே இச்சீவனுக் கடுத்த காரியங்களாம். மகிமையாகப் பிழைத்துக்கொண்டு வருகிற பெரியோர்களுக்கு மாத்திரமல்ல, சிறியோர்களுக்கு முதலாய் இவைகள் எல்லாம் சம்பவிக்கிறதுமுண்டு. சகலாத்து வஸ்திரங்களையும் கிரீடத்தையும் தரித்துக் கொண்டிருக்கிறவர்களுக்கும், பழந்துணியை உடுத்திக் கொண்டிருக்கிறவர்களுக்கும் வித்தியாசமில்லை. கோபமும் எரிச்சலும் உபத்திரவங்களும் சண்டையும் பிராணபயமும் எரிப்பும் வழக்கும் மிச்சமானது உண்டு (ஏசுசீராக் ௪௰, ௧—௪).

௫. நம்முடைய முக்கியமான கவலை நமது ஆத்துமத்தைப் பற்றியதாகவே இருக்கவேண்டும். ஏனெனில் நமது இரட்சகர் நம்முடைய வாக்கியத்திலே: முந்தப் பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கள். அப்போது இதுகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படுமென்று சொல்லுகிறார். நமக்கு இந்த லோகத்திலே எவ்வளவு ஐசுவரியம் இருந்தாலும், மெய்யான ஐசுவரியமாகிய இயேசுவின் நீதியும், பராபரனுடைய இராச்சியத்தைச் சேர்ந்ததாகிய மெய்யான மகிமையும் இல்லாதேபோனால், அவைகளால் ஒன்றும் நமக்கென்ன பிரயோசனம். மனுஷன் லோகத்தை எல்லாம் ஆதாயப்படுத்திக்கொண்டு, தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்தினால், அவனுக்கு லாபம் என்ன (மத். ௰௬, ௨௬). ஆனபடியினாலே நாம் முந்தமுந்த நம்முடைய ஆத்துமத்துக்காகவே கவலைப்படவேண்டும். அதை நாம் செய்யவேண்டியதெப்படியென்றால், இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் மெய்யான நீதியையுந் தேடி, பரிசுத்தமும் நீதியும் தெய்வபக்தியுமாய் இப்பிரபஞ்சத்தில் பிழைக்கிறதுதான். இவ்விதமாகப் பராபரனுடைய இராச்சியத்தையும் நித்திய மோட்சத்தையுந் தேடவேண்டும். அதற்கென்று அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை எவி எழுப்பி: பூமியின் மேல் உள்ளதுகளையல்ல, மேலானதுகளைச் சிந்தியுங்கள் என்று புத்திசொல்லுகிறான் (கொலோ. ௩, ௨).

௬. நாம் இப்பூமிக்கடுத்த காரியங்களுக்காக அதிகக் கவலைப்படக் கூடாது. நாம் நம்முடைய பிழைப்புக்காகவும் நம்முடையவர்கள் பிழைப்புக்காகவும் சஞ்சலப்படாமல், பராபரன் பேரிலே நமது முழு நம்பிக்கையையும் வைக்கக்கட



வோம். ஏனெனில் அவர் நமக்குச் சீவனையும் சரீரத்தையுங் கொடுத்திருக்கிறதினால், அன்ன வஸ்திரத்தையுங் கொடுப்பார். பட்சிகளைப் போஷித்துப் புஷ்பங்களை உடுத்துவிக்கிற நமது பரம தகப்பன் நமக்கு எத்தனை யதிகமாய்ச் செய்வார். இதெல்லாம் நமக்குத் தேவை என்று அவர் அறிவாரே. ஆதலால் தாவீது: கர்த்தர்மேல் உன் பாரத்தைப்போடு, அவர் உன்னைப் பராமரிப்பார், நீதிமானை என்றென்றைக்குந் தள்ளாடவொட்டார் என்றும் (சங். ௫௫, ௨௩), உன் வழியைக் கர்த்தருக்குச் சாட்டிவிடு, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை நடப்பிப்பார் என்றும் (சங். ௩௭, ௫), அப்போஸ்தலனாகிய பேதுரு: உங்கள் கவலையை எல்லாம் அவர் மேல் எறிந்துவிடுங்கள், அவர் உங்களுக்காக விசாரிப்பாயிருக்கிறாரென்றும் சொல்லுகிறதைக் கவனிக்கக் கடவோம் (௧ பேது. ௫, ௭).

நம்முடைய பராபரனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியேக பராபரனுக்கு என்றென்றைக்குங் கனமும் மகிமையும் உண்டாவதாக, ஆமென்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௬-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ஙாகூ.)

### சுவி. லூக். ௭, ௰௧—௰௭.

மறுநாளில் சம்பவித்ததேதென்றால், நாயீன் என்று சொல்லப்
பட்ட ஒரு ஊருக்குப் போனார். அவருடைய சீஷர் அநேகரும் வெகு
ஜனங்களும் அவருடனே கூடப் போனார்கள். 12 அவர் ஊர்வாசலுக்
குச் சமீபித்தபோதேதென்றால், இதோ, தன் தாய்க்கு ஒன்றான
குமாரனாகிய மரித்த ஒருவன் வெளியே எடுத்துவரப்பட்டான்.
அவளோவெனில் விதவையானவள்; ஊரார் வெகு கும்பு அவளுட
னே கூட வந்தார்கள். 13 கர்த்தர் அவளைப் பார்த்து, அவள்மேல்
மனதுருகி, அவளுடனே: அழாதே என்று சொல்லி, 14 சேரவந்து,
பாடையைத் தொட்டார். சுமந்தவர்களோவென்றால் நின்றார்கள்.
அப்போது அவர்: வாலிபா, எழுந்திரு என்று உனக்குச் சொல்லு
கிறேன் என்றார். 15 அப்போது மரித்தவன் எழுந்து உட்கார்ந்து,
பேசத் தொடங்கினான். அவர் அவனை அவன் தாய்க்கு ஒப்புவித்
தார். 16 ஆனால் எல்லாருக்கும் பயம்பிடித்து: மகா தீர்க்கதரிசி
நமக்குள்ளே எழும்பியிருந்தார் என்றும், பராபரன் தம்முடைய சனத்
தைக் கண்டு சந்தித்தார் என்றும், பராபரனை மகிமைப்படுத்தினார்
கள். 17 இந்த அவருடைய வர்த்தமானம் யூதேயா முழுவதிலும் சுற்
றுத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியம் எதைப் பற்றியது.

நாயீன் ஊரில் மரித்து எழுப்பப்பட்ட ஒரு வாலிபனைப் பற்றியது.

2. அவனை எழுப்பினதார்.

நமது இரட்சகராகிய இயேசுநாதர்.

3. அவர் அதை எங்கே செய்தார்.

சமாரியாவிலுள்ள நாயீன் என்னப்பட்ட ஒரு நேர்த்தியான ஊரிலே. அங்கே அவருடைய சீஷரில் அநேகரும் வெகு கும்பும் வந்திருந்தார்கள்.

4. அந்த வாலிபன் ஆர்.

அவன் ஒரு விதவைக்கு ஒன்றான குமாரன். இதோ, தன் தாய்க்கு ஒன்றான குமாரனாகிய மரித்த ஒருவன் வெளியே எடுத்து வரப்பட்டான், அவளோவெனில், விதவையானவள் (௰௨).

5. சனம் மரித்துப்போனவனை எங்கே எடுத்துப் போனார்கள்.

அவனைக் கல்லறைக்குக் கொண்டுபோனார்கள். அவனுடைய அடக்கத்துக்கு ஊரார் வெகு கும்பு வந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறது.

6. இயேசுநாதர் இறந்த அந்த ...னை எழுப்பின ... முகாந்தரம் என்ன.

கர்த்தரின் இரக்கமும், விதவையாகிய அவன் தாயின் கண்ணீருந்தான். ஏனெனில் மகா வியாகுலமாயிருந்த இந்த விதவை தன் விருத்தாப்பியத்திலே தனக்கு ஆதாரமாயிருக்க வேண்டிய தன் அருமை மகன் செத்து, கல்லறைக்குக் கொண்டுபோகப்படுகிறதற்காக மிகவும் அழுதாள். கர்த்தர் அவளை அழக் கண்டபோது, அவள்மேல் மனதுருகி, அவளுடனே: அழாதே என்றார்.

7. இயேசுநாதர் அவ்வாலிபனை எழுப்பும்படி என்ன செய்தார்.

அவர் பிரேதத்தண்டை வந்து, பாடையைத் தொட்டார். சுமந்தவர்கள் நின்றபோது, அவர்: வாலிபா, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்போது மரித்தவன் எழுந்து, உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவர் அவனை அவன் தாய்க்கு ஒப்புவித்தார்.

8. அவன் ஏன உடனே பேசத்தொடங்கினான்.

தான் மெய்யாக உயிரோடிருக்கிறதைக் காண்பிக்கும்படியாகத்தான்.



9. கிறிஸ்துநாதர் அந்த வாலிபனை ஏன் அவன் தாய்க்கு ஒப்புவித்தார்.

க. இந்த ஈவினால் அவளைச் சந்தோஷப்படுத்தும்படியாக. ஏனெனில் அந்த விதவைக்குப் பொன் வெள்ளி முதலிய மிகவும் ஏராளமான விலையுயர்ந்த பொக்கிஷங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், அவள் தன் குமாரனைச் சிநேகித்ததுபோல் அதை ஒருக்காலும் சிநேகிக்கவும் அதற்காக அவ்வளவு சந்தோஷப்படவுமாட்டாள்.

உ. அந்த வாலிபன் தன் தாய்க்குக் கீழடங்கி, பிள்ளைகளுக்கொத்த கீழ்ப்படிதலோடு அவளுடன் பிழைக்க வேண்டுமென்று அவனுக்குக் காண்பிக்கும்படியாக.

10. இந்த அற்புதத்தைக் கண்ட சனங்கள் என்ன செய்தார்கள்.

க. பயந்திருந்தார்கள். ஏனெனில் எல்லாருக்கும் பயம்பிடித்ததென்று நமது வாக்கியம் சொல்லுகிறது.

உ. பராபரன் இறந்துபோன இந்த விதவையின் மகனைத் திரும்ப உயிர்ப்பித்து அவளுக்குக் கொடுத்த கிருபைக்காக அவரைப் புகழ்ந்து ஸ்தோத்திரித்தார்கள்.

ங. கிறிஸ்துநாதர் லோகத்திலே வரப்போகிற ... ரிய தீர்க்கதரிசி, அதாவது லோகத்தி... இரட்சகரா... மேசியாவாயிருக்கிறாரென்று நிதானித்தார்கள். ஏனெனில்: மகா தீர்க்கதரி... நமக்குள்ளே எழும்பியிருந்தார் என்றும், ப... தம்முடைய சனத்தைக் கண்டு சந்தித்தார் என்றும் சொ...னார்கள்.

ச. யூதேயாவில் மாத்திரமல்ல, சுற்றிலுமிருந்த மற்ற தேசங்களிலுங் கூட இந்த அற்புதத்தைக் குறித்துப் பேசப்படும்படியாக அவர்கள் போன இடத்தில் எங்கும் பிரசித்தம் பண்ணினார்கள்.

11. இயேசுநாதர் செய்த அந்த அற்புதத்தினாலே அவர் லோக இரட்சகராயிருக்கிறார் என்று சனங்கள் எப்படி நிதானிக்கலாம்.

எசாயா தீர்க்கதரிசி கிறிஸ்து என்கிற மேசியா வரும் செய்வாரென்
போது, அவர் அப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்வாரென்
று முன்னறிவித்திருந்தான். அதாவது: இதோ, உங்கள் பரா
பரன் நீதியைச் சரிக்கட்டவும், பராபரன் பதிலுக்குக் கொ
டுக்கவும் வருவார். அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று
சொல்லுங்கள். அப்போது குருடரின் கண்கள் திறக்கப்பட்
டுச் செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். அப்போது சப்
பாணி மானைப்போல் குதிப்பான். ஊமையன் நாவும் கெம்பீ
ரிக்கும் என்பதாம் (எசா. ௩௫, ௪-௬).

படிப்பினை.

12. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. கிறிஸ்துவினிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. அவர் நிர்ப்பந்தப்படுகிற யாவர்மேலும் இரக்கமுள்ளவராயிருக்கிறார். நிர்ப்பந்தமும் வியாகுலமுமுள்ளவளாயிருந்த அந்த விதவையை அவர் கண்டபோது, இரக்கமற்றவராய் அவளைவிட்டு விலகிப்போகாமல், அவள்மேல் மனதுருகி, அவளுக்கு ஒத்தாசை செய்தார். இவ்விதமாகவே அவர் இன்னம் விசனப்படுகிற யாவர்மேலும் கிருபைகூர்ந்து: பிரயாசப்பட்டுப் பாரஞ் சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள், நான் உங்களை முசிப்பாற்றுவேனென்று சொல்லி, அவர்களைத் தம்மண்டைக்கு வரவழைக்கிறார் (மத். ௰௧, ௨௮).

௨. நாம் விசனப்படுகிறவர்களை ஆற்றித்தேற்ற வேண்டும். கர்த்தர் விசனப்பட்ட அந்த விதவையைக் கண்டபோது, அவர் அவள்மேல் மனதுருகி, அவளை ஆற்றித்தேற்றி: அழாதே என்று சொன்னார். அப்படியே நாமும் செய்ய வேண்டும். நாம் துக்கப்படுகிற நமக்கடுத்தவர்கள்மேல் இரக்[illegible]ந்து, பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறபடியே அழுகிறவர்களுடனே அழுது (ரோ. ௰௨, ௰௫), ஆற்றித்தேற்றி, நம்மால் கூடியமட்டும் ஒத்தாசை செய்ய வேண்டும். அதற்கு யோபு நமக்கு நல்ல திருஷ்டாந்தமாயிருக்கிறான். ஏனெனில் அவன்: நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்தது முதல் அப்படிப்பட்டவர்களைக் கைலாகு கொடுத்து நடத்தினேன் என்கிறான் (யோபு ௩௧, ௰௮).

௩. கர்த்தராகிய கிறிஸ்து சர்வத்திற்கும் வல்ல பராபரனாயிருக்கிறார். மனிதனுக்கு ஜீவனைக்கொடுத்த பராபரனாகிய கர்த்தரைத் தவிர, வேறொருவனும் செத்தவர்களை எழுப்பக் கூடாது. ஆகையால் இஸ்ரவேலின் இராசா: நான் கொல்லவும் உயிர்ப்பிக்கவுந் தக்க தேவனோ என்றான் (௨ இரா. ௫, ௭). நம்முடைய இரட்சகர் இந்த வாலிபனை உயிர்ப்பித்தாரே. அப்படியே கடைசிநாளில் தமது சர்வவல்லமையுள்ள சத்தத்தினாலே பூமியின் தூளிலே நித்திரை செய்கிற மரித்தவர்கள் எல்லாரையும் எழுப்புவார். அதனால் அவர் சர்வத்திற்கும் வல்ல பராபரன், ஆம், என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான பராபரனாயிருக்கிறார் என்பது விளங்கும் (ரோ. ௯, ௫).



௪. இயேசுநாதர் மெய்யான மேசியாவாயிருக்கிறார். அதைச் சனங்கள் விசுவாசித்து, மகா பெரிய தீர்க்கதரிசி நமக்குள்ளே எழுந்திருந்தார் என்றும், பராபரன் தம்முடைய சனத்தைக் கண்டு சந்தித்தார் என்றும் சொன்னார்கள்.

II. அந்த வாலிபனுடைய தாயாகிய விதவையினிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. பொதுவாகத் துன்பத்தின்மேல் துன்பம் வரும். அப்படியே அந்த விதவைக்கும் நடந்திருந்தது. அவள் முன்னமே கண்ணீரோடு தன் புருஷனைக் கல்லறைக்குக் கொண்டுபோனாள். அதன்பின் அவள் விசனமும் விருத்தாப்பியமுமுள்ள விதவையாகப் பிழைக்க நேரிட்டது. ஆனால் முந்தின அவளுடைய விசனத்தோடு வேறொரு பெரிய வியாகுலமும் கூடிற்று. அதாவது தன் ஒன்றான குமாரனைச் சாகக் கொடுத்ததுதான். இப்படிப் பொதுவாக மனுஷர்யாவருக்கும், விசேஷமாய்த் தெய்வபத்தியுள்ளவர்களுக்கும் நடக்கும். அவர் எனக்கு நொறுக்குதலின்மேல் நொறுக்குதலை வரப்பண்ணினார் என்று யோபு அலறுகிறான் (யோபு ௰௬, ௰௪). அப்படியே தாவீதும்: உம்முடைய வெள்ளங்களும் அலைகளும் எல்லாம் என்மேல் புரளுகின்றனவென்று கூப்பிடுகிறான் (சங். ௪௨, ௮).

௨. நாம் இறந்துபோன நம்முடையவர்களை[illegible] அழுகைக்கும், ஆறுதலுக்கும் இடங்கொடுக்க வேண்டும். இரட்சகர் இறந்துபோன தன் குமாரனினிமித்தம் அழுத விதவையின்மேல் கோபமாகாமல், அவளுடைய பெரிய நிர்ப்பந்தத்தின்மேல் மனதுருகிறார். ஆனால் அவள் அதிகமாய் விசனப்படாதபடிக்கு அழாதே என்று சொன்னார். கிறிஸ்தவர்கள் இறந்துபோன தங்களுடையவர்களின் உயிர்த்தெழுதலைப்பற்றி நம்பிக்கையற்ற அஞ்ஞானிகளைப்போல் துயரப்பட வேண்டாம் என்று பவுல் அப்போஸ்தலன் போதித்து: சகோதரரே, நித்திரை அடைந்தவர்களின் நிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்ற மற்றவர்களைப்போலே துக்கித்து அறியில்லாதிருக்க எனக்கு மனதில்லை என்று சொல்லுகிறான் (௧ தெசலோ. ௪, ௰௩). ஏசுசீராக்கும் அதைப்பற்றி: என் குமாரனே, செத்துப்போன எவனுக்காகிலும் நீ கண்ணீர் விட்டு அழுது, உனக்கு விசேஷித்த இளப்பம் சம்பவித்ததாகப் புலம்பு. ஆகிலும் நீ துக்கத்திலே அமிழ்ந்துபோகாதபடிக்கு உன்னை மறுபடியும் ஆற்றித்தேற்றவும் பார். ஏனெனில் துக்கத்தினாலே மரணம் வருகிறதும் உண்டு. மனவியாகுலம் பெலத்தையும் பெலட்சயமாக்குகிறதுமுண்டு என்கிறான் (ஏசுசீராக். ௩௮, ௰௬-௰௮).

௩. இறந்துபோன நம்முடையவர்களை நாம் மரியாதையாய் அடக்கம்பண்ண வேண்டும். அப்படியே அந்த விதவை செய்தாள். செத்துப்போனவர்களுடைய சரீரத்தைச் சரியாய் உடுத்துவித்து மரியாதையாய்க் கல்லறைக்குக் கொண்டுபோ என்று ஏகசிராக்கு சொல்லுகிறான்.

௪. பராபரனாகிய கர்த்தர் விதவைகளை விசேஷமாய்ப் பராமரிக்கிறார். இயேசுநாதர் அந்த விதவையைக் கண்டபோது, அவளை ஆற்றித்தேற்றி, அவளுக்கு ஒத்தாசை செய்தார். அப்படியே அவர் [illegible] எல்லா தெய்வபத்தியுள்ள விதவைகளுக்குஞ் செய்யச் சித்தமாயிருக்கிறார். அவர்களுடைய செபங்களுங் கண்ணீரும் பராபரனுடைய இருதயத்தை உருகப்பண்ணத் தக்கப் பெலனுள்ளதாயிருக்கிறது. ஆகையால் தாவீது: அவர் திக்கற்றவர்களுக்குப் பிதாவும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாய்த் தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற பராபரன் என்று சொல்லுகிறான் (சங். ௬௮, ௫).

III. நாயீனூரிலுள்ள அந்த வாலிபனிடத்தில் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. மரணம் வாலிபன் என்று பார்க்கிறதில்லை. அந்த [illegible] வாலிபனாயிருந்தும், திடீரென்று நினையாமல் மரணத்தினால் பிடிக்கப்பட்டான். மனிதனுடைய [illegible] ஒரு புஷ்பத்துக்கொப்பாயிருக்கிறது. மனிதன் தன் நாட்களினால் புல்லுக்கொப்பாயிருக்கிறான். வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான். ஏனெனில் காற்று அதின் மேல் வீசிக் கடந்தவுடனே அது போயிற்று. அதின் தலம் அப்புறம் அதை அறிந்திராது என்று தாவீது சொல்லுகிறான் (சங். ௱௩, ௰௫. ௰௬). ஆகையால் ஒவ்வொரு மனிதனும் எந்நேரமுந் தன்னை மரணத்துக்கு ஆயத்தம் பண்ணி, தாவீதோடு கேட்கவேண்டியதென்னவென்றால்: கர்த்தாவே, நான் எத்தனையாய் நிலையற்றவன் என்று நான் உணர, என் முடிவையும் என் நாட்களின் அளவு எம்மாத்திர மென்கிறதையும் எனக்குத் தெரிவியும் (சங். ௩௯, ௫).

௨. மனுஷராகிய நாம் கல்லறையிலே நிலைத்திராமல், கடைசி நாளில் உயிரோடெழுப்பப்படுவோம். நம்முடைய இரட்சகர் இறந்துபோன அந்த வாலிபனை நோக்கி: வாலிபா, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்போது மரித்தவன் எழுந்திருந்தான். அதுபோல் கடைசிநாளிலே மரித்த எல்லாரும் எழுந்திருப்பார்கள். ஏனெனில் வேளைவரும், அப்போது பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக்கேட்டு, நன்மை செய்த



வர்கள் ஜீவனுக்கு எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்களோ ஆக்கினைக்கு எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்களென்று நமது இரட்சகர் சொல்லுகிறார் (யோவா. ௫, ௨௮. ௨௯). இந்த உயிர்த்தெழுதலை நோக்கிப்பார்த்து ஒரு தெய்வபத்தியுள்ள கிறிஸ்தவன் தன்னை ஆற்றித்தேற்றி, நிலுவையின் காலத்திலும் மரணவேளையிலுங் கூட யோபோடு: என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்கிறதையும், அவர் எழுந்[illegible]வராய்த் தூளின் மேல் நிற்பார் என்கிறதையும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என்னுடைய தோல் முதலானவை அழுகிப்போனபிற்பாடு, நான் என் மாமிசத்திலிருந்து பராபரனைப் பார்ப்பேன். அவரை நான் எனக்கென்று பார்ப்பேன். அந்நியகண்ணல்ல, என்னுடைய கண்களே அவரைக் காணும் என்று சொல்லலாம் (யோபு. ௰௯, ௨௫—௨௭).

௩. பிள்ளைகள் தங்கள் தாய்தகப்பன்மாருக்கும், அவர்களுக்குப் பதிலாகத் தங்களுக்கு மேலாயிருக்கிறவர்களுக்குங் கீழ்ப்படியவேண்டும். நம்முடைய இரட்சகர் அந்த வாலிபனை ஏன் அவன் தாய்க்கு ஒப்புக்கொடுத்தார் என்றால், அவன் அவளுக்குக் கீழ்ப்படிந்து, அவளுடைய விதவை[illegible]ருப்பிலே அவளுக்கு ஒத்தாசை செய்யும்படியாக[illegible] தான். பராபரனுடைய வசனம் இதை எல்லாப் பிள்ளைகளிடத்திலுங் கேட்கிறது. பவுல் அப்போஸ்தலனைக்கொண்டு [illegible]ன்: பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். ஏனெனில் இது நீதி. உனக்கு நன்றாயிருக்கிறதற்கும், உன் நாட்கள் பூமியிலே நீடித்திருக்கிறதற்கும் உன் தகப்பனையுந் தாயையுங் கனம் பண்ணு. இதுவாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறதென்று சொல்லுகிறார் (எபேசி. ௬, ௧—௩).

IV. நமது சுவிசேஷ வாக்கியத்தில் சொல்லப்பட்ட சனங்களிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. உன்னதமான பராபரனுடைய அற்புதங்களை நாம் பெரிதாக எண்ண வேண்டும். அந்தச் சனங்கள் இயேசுநாதர் இறந்துபோன அந்த வாலிபனை உயிரோடெழுப்பின அற்புதத்தைக் கண்டு, மகா சத்தமாய்ப் புகழ்ந்து, அவரைப்பற்றி எங்கும் பிரசித்தம் பண்ணினார்கள். அப்படியே நாமும் பராபரன் நமக்கும் நமக்கடுத்தவர்களுக்கும் செய்கிற எல்லா அற்புதங்களையும் உபகாரங்களையுந் தெரிவித்து, தாவீதோடு: என் பராபரனாகிய கர்த்தாவே, தேவரீர் எங்கள் மேலே உம்முடைய அதிசயங்களையும் உம்முடைய யோசனைகளையும் பெருகப்பண்ணினீர். தேவரீருக்கு ஒப்பிடுதலில்லை. நான் அவை

களை அறிவித்துச் சொல்லியும், அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள் என்று சொல்லவேண்டும் (சங். ௪௰, ௯).

௨. நம்முடைய பராபரனாகிய கர்த்தரைப் புகழ்ந்து ஸ்தோத்திரம் பண்ணவேண்டும். அந்தச் சனங்கள் மகா தீர்க்கதரிசி நமக்குள்ளே எழுந்திருந்தார் என்றும், பராபரன் தம்முடைய சனத்தைக் கண்டு சந்தித்தார் என்றும் சொல்லிப் புகழ்ந்ததுபோல், நாமும் பராபரனுடைய எல்லா உபகாரங்களுக்காகவும் அவரை ஸ்தோத்திரித்து, தாவீது: நான் கர்த்தரை எல்லாக் காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன், அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும். சிறுமையானவர்கள் அதைக் கேட்டு மகிழுவார்கள். என்னோடு கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோம் என்று சொல்ல வேண்டும் (சங். ௩௪, ௨-௪). நாம் நமது ஆத்துமாவையும் கர்த்தரை ஸ்தோத்திரிக்க ஏவி எழுப்பி: என் ஆத்துமாவே, கர்த்தரையும், என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தையும் ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதிரு என்று சொல்வோமாக (சங். ௱௩, ௧. ௨). இந்த நம்முடைய ஸ்தோத்திரம் பராபரனுக்குப் பிரியமாயிருக்கும். நாம் இப்படிச் செய்வோமானால், நாம் மறுமையிலும் பரிசுத்த தேவதூதர்களோடுந் தெரிந்துகொள்ளப்பட்டயாவரோடுஞ் சேர்ந்து, என்றென்றைக்கும் பரிபூரணமாய்ப் பராபரனைப் புகழ்ந்து: சேனைகளுடைய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறதென்று சொல்லுவோம் (எசா. ௬, ௩).

நம்முடைய பராபரனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியேக பராபரனுக்குச் சதாகாலங்களிலும் ஸ்தோத்திரமும் மகிமையும் உண்டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௭-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௱௪௫. ௱௪௬.)

சுவி. லூக். ௰௪, ௧-௰௧.

பின்னையுஞ் சம்பவித்ததேதென்றால், பரிசேயரில் தலைவனாகிய ஒருவன் வீட்டிலே அவர் ஓய்வுநாளிலே அப்பம் புசிக்க வருகையில், அவர்கள் அவரைச் சர்ப்பனையாகக் காத்திருந்தார்கள். 2 இதோ, நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் அவருக்கு முன்பாக



இருந்தான். 3 இயேசு நியாயசாஸ்திரிகளுக்கும் பரிசேயருக்கும்
பிரத்தியுத்தரமாக: ஓய்வுநாளிலே குணமாக்குகிறது நியாயமோ
என்றார். 4 அவர்களோவெனில் பேசாதிருந்தார்கள். அப்போது
அவர் அவனைப் பிடித்துக் குணமாக்கிவிட்டு, 5 அவர்களுடனே:
உங்களில் ஒருவனுடைய கழுதையாகிலும் எருதாகிலும் ஒரு குழி
யிலே விழுந்தால் அதை அவன் உடனே ஓய்வுநாளிலே தூக்கி
விடானோ என்றார். 6 இதற்கு அவர்கள் எதிர்உத்தரஞ் சொல்ல
மாட்டாதே போனார்கள். 7 ஆனால் விருந்துக்கு அழைக்கப்பட்ட
வர்கள், பந்தியில் முதல் இடங்களை எப்படித் தெரிந்துகொண்டார்க
ளென்கிறதை அவர் கவனித்துப் பார்த்து, அவர்களுக்குச் சொன்ன
உவமையாவது: 8 ஒருவனால் கலியாணத்துக்கு அழைக்கப்பட்
டால், பந்தியில் முதல் இடத்தில் உட்காராதே; ஏனெனில் ஒரு
வேளை உன்னிலுங் கனமுள்ளவன் அவனால் அழைக்கப்பட்டிருக்கக்
கொள்ள, 9 உன்னையும் அவனையும் அழைத்தவன் வந்து, உன்னுட
னே: இவனுக்கு இடங்கொடு என்பான். அப்போது நீ வெட்கத்துட
னே கடைசி இடம் பிடிக்கத் துவக்குவாய். 10 நீ அழைக்கப்பட்
டால், போய்க் கடைசி இடத்தில் உட்காரு; அப்போது உன்னை
அழைத்தவன் வந்து, உன்னுடனே: சிநேகிதனே, உயரப்போயிரு
என்றால், உன்னுடனே கூடப் பந்தியிருக்கிறவர்களுக்கு முன்பாக
உனக்குக் கனம் உண்டாம். 11 அதேதென்றால் தன்னைத் தான்
உயர்த்துகிறவனெல்லாந் தாழ்த்தப்படுவான், தன்னைத் தான் தாழ்த்
துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தை எத்தனை பங்காகப் பிரிக்கலாம்.

இரண்டு பங்காக.

### முதலாம் பங்கு.

2. முதலாம் பங்கு எதைப் பற்றியது.

நீர்க்கோவை வியாதியுள்ள மனிதன் சொஸ்தமாக்கப்பட்டதைப் பற்றியது.

3. நீர்க்கோவை என்பது என்ன.

அது ஒரு பொல்லாத வியாதி. அவ்வியாதியுள்ள மனிதனுடைய தோலுக்கும் மாமிசத்துக்கும் நடுவே நீர் சுரக்கிறதால் அவன் தேகமுழுவதும் வீங்கி, அதினால் இரத்த ஓட்டம் வரவர நின்று போகிறதுமல்லாமல் மரணமும் வரும்.

4. அந்த நீர்க்கோவை வியாதியுள்ள மனிதன் எங்கேயிருந்தான்.

பரிசேயரில் தலைவனாகிய ஒருவன் வீட்டிலே.

5. இயேசு இரட்சகர் அங்கே ஏன் வந்தார்.

பரிசேயன் அப்பம் புசிக்க அவரை அழைத்திருந்தான்.

6. அது எந்த நாளில் நடந்தது.

ஒரு ஓய்வுநாளில்.

7. அந்த ஓய்வுநாள் எந்தக் கிழமை.

அது பழைய ஏற்பாட்டின் காலத்திலே பராபரன் ஓய்வுநாளாகப் பரிசுத்தமாக்கின வாரத்தின் ஏழாம் நாளாகிய சனிக்கிழமை.

8. புதிய ஏற்பாட்டின் காலத்திலே கிறிஸ்தவர்கள் அந்த ஏழாம் நாளை ஓய்வுநாளாக ஆசரிக்கக் கடமைப்பட்டவர்களல்லவா.

அல்ல. ஏனென்றால் மூன்றாம் கற்பனையின்படியே நாம் வாரத்தில் ஒரு நாளைக் கர்த்தருடைய ஊழியத்துக்கென்று ஆசரிக்கக் கடமைப்பட்டவர்களாயிருந்தும், எந்த நாளை அதுக்காக நேமிக்கலாமென்பது கிறிஸ்தமான விடுதலைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இதினிமித்தம் இயேசுநாதர் ஞாயிற்றுக்கிழமையில மரித்தோரிலிருந்தெழுந்தபடியாலும், பரிசுத்த ஆவி அந்த நாளில் ஊற்றப்பட்டபடியாலும் கிறிஸ்தமான சபை அந்த நாளை ஓய்வுநாளாகத் தெரிந்துகொண்டது. ஆனபடியால் நாம் நிதானமாய் இந்த நாளைக் கொண்டாடி, அதிலே அவசரமும் கிறிஸ்தமான சிநேகம் கேட்கிறதுமான விசேஷித்த வே[illegible]ல்லாமல் வேறெந்த வேலையையுஞ் செய்யக் கூடாது.

9. அந்தப் பரிசேயன் கர்த்தரைச் சிநேகித்த சிநேகத்தினாலே அவரை விருந்துக்கு அழைத்தானா.

இல்லை. அவன் அவரைச் சோதிக்க மனதாயிருந்ததினாலே அழைத்தான்; ஏனெனில்: அவர்கள் அவரைச் சர்ப்பனையாகக் காத்திருந்தார்களென்று நமது வாக்கியம் சொல்லுகிறது. அதாவது, அவர்கள் தாங்கள் கொண்டுவந்த இந்த நீர்க்கோவையுள்ள மனிதனுக்குக் கர்த்தர் என்ன செய்வாரென்று கவனித்திருந்தார்கள்.

10. அப்போது இயேசுநாதர் என்ன செய்தார்.

அவர் அந்த நியாயசாஸ்திரிகளோடும் பரிசேயரோடும் பேசி: ஓய்வுநாளில் குணமாக்குகிறது நியாயமோ என்று கேட்டார்.

11. அவர் ஏன் அதைக் கேட்டார்.

ஓய்வுநாளிலே மனிதன் என்ன செய்யலாமென்று அவர்களுக்கு அதிகத் தெளிவாகப் போதிக்கும்படிக்குத்தான்.

12. பரிசேயர் என்ன உத்தரவு சொன்னார்கள்.

அவர்கள் மௌனமாயிருந்தார்கள்.

13. அவர்கள் ஏன் அப்படியிருந்தார்கள்.

இயேசுநாதரைக் குற்றப்படுத்தத் தங்களுக்கு நல்ல சமயங் கிடைக்கும்படி. ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளே: கிறிஸ்துநாதர் இந்த வியாதியுள்ள மனிதனைச் சொஸ்தமாக்



காதேபோனால், அவர் அதைச் செய்யக்கூடவில்லை. அல்லது இரக்கமில்லாமையினாலே அவர் அதைச் செய்ய மனதில்லாதிருந்தார் என்று சனங்களை இலேசாய் நம்பப்பண்ணலாம். ஆனால் அவர் வியாதியுள்ள அந்த மனிதனைச் சொஸ்தப்படுத்தினாரானால், அவரை ஓய்வுநாளை மீறுகிறவன், அல்லது கர்த்தருடைய கற்பனைக்கு விரோதமாய் நடந்து, ஓய்வுநாளை ஆசரிக்காதவனாக அவரைப் பிரஸ்தாபப்படுத்தலாம் என்று எண்ணியிருந்தார்கள்.

14. அப்போது கர்த்தர் நீர்க்கோவை வியாதியுள்ள மனிதனை என்ன செய்தார்.

அவர் அவனைப் பிடித்துக் குணமாக்கிவிட்டு, ஓய்வுநாளில் வியாதியுள்ளவனைக் குணமாக்குகிறது நியாயமும் சரியானதுமென்று பரிசேயருக்கு ரூபித்தார்.

15. கர்த்தர் அதை எதினாலே ரூபித்தார்.

ஒரு உவமையினாலே. ஏனெனில் உங்களில் எவனுடைய கழுதையாகிலும் எருதென்கிலும் ஒரு துரவிலே விழுந்தால், அதை அவன் உடனே ஓய்வுநாளிலே தூக்கிவிடானோ என்று சொன்னார் (௫).

16. இந்த உவமையினாலே கர்த்தர் என்னத்தைக் குறிக்கிறார்.

நீங்கள் ஓய்வுநாளிலே கிணற்றிலே விழுந்த எருதையாவது கழுதையையாவது அவைகள் அமிழ்ந்திச் சாகாதபடிக்குத் தூக்கிவிடுகிறதினால் குற்றஞ் செய்யாதேபோனால், நான் ஓய்வுநாளிலே தன் வியாதியினால் திடீரென்று சாகக்கூடிய அந்த மனிதனைக் குணமாக்கினதினாலே குற்றஞ் செய்யவில்லையென்று நீங்கள் அறிய வேண்டுமென்பதே அதின் அர்த்தம்.

17. பரிசேயர் அதற்கு என்ன சொன்னார்கள்.

அவர்கள் அதற்கு எதிர்உத்தரஞ் சொல்ல மாட்டாதேபோனார்கள். ஏனெனில் அவர்கள் ஒன்றும் எதிர்பேசாதபடிக்கு இயேசுநாதருடைய ஞானமுள்ள வார்த்தை அதிகத் தெளிவாயிருந்தது.

## படிப்பினை.

18. சுவிசேஷவாக்கியத்தின் இந்த முதலாம் பங்கினாலே [illegible]தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. கர்த்தராகிய கிறிஸ்துவினிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. ஓய்வுநாளிலே ஒரு கிறிஸ்தவன் வேறொரு மனிதனைச் சந்திக்கலாம். ஏனெனில் நம்முடைய இரட்சகர் ஓய்வு

நாளிலே இந்தப் பரிசேயனுடைய விருந்துக்குப் போகக் கூடுமானால், கிறிஸ்தவர்களும் அப்பேர்ப்பட்ட விருந்துக்கு, அது கர்த்தருக்குப் பிரியமும் தெய்வபத்திக்கு அடுத்ததுமாயிருந்தால், போகலாம்.

௨. நம்முடைய வியாதியிலே இயேசுநாதர் உண்மையும் உத்தமுமான வயித்தியராயிருக்கிறார். நீர்க்கோவை பொதுவாகக் குணமாக்கக்கூடாத வியாதியாயிருக்கிறது. ஆனால் இயேசு இரட்சகர் நீர்க்கோவை வியாதியுள்ள மனிதனைத் தொட்டதினாலேயே அவனைக் குணமாக்கி, தமக்குத் தெய்வீக வல்லமையிருக்கிறதென்று அதினால் காட்டினார்.

௩. விசுவாசமுள்ளவர்கள் புதிய ஏற்பாட்டின் காலத்திலே ஓய்வுநாளாகிய ஞாயிற்றுக்கிழமையையும் மற்றப் பண்டிகை நாட்களையும் எப்படிக் கொண்டாட வேண்டுமென்றும், அந்த நாளிலே என்னென்ன கிரியை செய்ய வேண்டும் என்றும் கிறிஸ்துநாதர் இதினால் நமக்குக் காட்டுகிறார். ஒரு கிறிஸ்தவன் இந்த நாளிலே செய்ய வேண்டிய கிரியை என்னவென்று கேட்டால்:

a. தெய்வ ஊழியத்துக்கடுத்த கிரியை. அதாவது, அவன் அந்த நாளிலே பராபரனுடைய வசனத்தைக் கேட்டுத் தியானம்பண்ணி, செபஞ்செய்து, பாடி இவை முதலிய தெய்வ ஊழியத்துக்கடுத்த கிரியையைச் செய்யலாம். ஏனெனில் கிறிஸ்துநாதர் தாமே மற்றவர்கள் கேட்கப் பராபரனுடைய வசனத்தைப் பிரசங்கித்து: தேவ ஊழியத்துக்கடுத்த இந்தக் கிரியையைச் செய்தாரென்று எழுதியிருக்கிறது.

b. கிறிஸ்தமான சிநேகத்துக்கடுத்த கிரியை. அதாவது, வியாதிஸ்தரைச் சந்தித்து, அவர்களுக்காகக் கவலைப்பட்டு தர்மங் கொடுக்கிறது முதலியதுதான். கிறிஸ்துநாதர் அப்படியே ஓய்வுநாளிலே இந்த வியாதியுள்ள மனிதனைக் குணமாக்கினாரென்று இங்கே பார்க்கிறோம்.

c. நிறுத்தக்கூடாத அவசரமான கிரியைகள். அதாவது, நம்முடைய அவசரத்துக்குத் தேவையான சாப்பாட்டை ஆயத்தம் பண்ணுகிறதும், மிருக சீவன்களுக்கு ஆகாரந் தண்ணீர் கொடுக்கிறதும், கிணற்றில் விழுந்த எருது முதலிய மிருக சீவன்களைத் தூக்கிவிடுகிறதுந் தான். கர்த்தர் அதை நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் எருதை... வைத்தையும் பற்றிய உவமையினால் காண்பிக்கிறார். ஆனால் பராபரனுடைய வசனத்தின் தியானத்துக்குத் தடுக்கவும், வேறு நாளுக்கென்று நிறுத்தக் கூடியதுமான மற்றெல்லாக் கிரியைகளை ஓய்வுநாளிலே விலக்கவும், திருநாளை ஆசரிப்பா



யாக என்கிற பராபரனுடைய கற்பனையைக் கவனிக்கவும் வேண்டும்.

II. பரிசேயரிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. மாயமுள்ள மனிதர் சிநேகிதராக வந்தாலும் அடுத்தவனைக் கெடுக்கத் தேடுகிறார்கள். அப்படியே இந்தப் பரிசேயர் இயேசுநாதரண்டையில் சிநேகிதரைப்போல் வந்து, அப்பம் புசிக்க வீட்டுக்கழைத்தாலும், சர்ப்பனையாகக் காத்திருந்தார்கள். இப்படிப்பட்ட மாயமுள்ள மனிதரைப்பற்றி தாவீது இராசா சொல்லுகிறதாவது: அவன் வாயின் சொற்கள் வெண்ணெய்யைப்போல் மெதுவானவைகள், அவன் இருதயமோ யுத்தம். அவன் வார்த்தைகள் எண்ணெய்யிலும் மிருதுவானவைகள், ஆனால் அவைகளே உருவின பட்டையங்கள் (சங். ௫௫, ௨௨).

௨. அநீதக்காரர் நீதிமான்களுக்கு விரோதமாகச் செய்கிற யோசனைகள் பொதுவாய் நிறைவேறுகிறதில்லை. பரிசேயர் நமது வாக்கியஞ் சொல்லுகிறதின்படியே கர்த்தராகிய கிறிஸ்துவுக்கு விரோதமாக ஒரு கெட்ட யோசனை பண்ணி, அவருக்குப் பதில் உத்தரவு சொல்லாமல் போனார்கள். ஆனால் அவர்களுடைய யோசனை நிறைவேறாமல், அவர்கள் அவருக்கு ஒரு வார்த்தையையும் சொல்லக் கூடாதவர்களாய் வெட்கப்பட்டுப் போனார்கள். தெய்வபத்தியில்லாத யாவருக்கும் பொதுவாக அப்படி வரும். ஆகையால் தெய்வபத்தியுள்ளவர்கள் அவர்களுக்கு: யோசனையை யோசியுங்கள், அது அவத்தமாகும். வார்த்தையை வசனியுங்கள், அது நிற்காது. ஏனெனில் எங்களுடனே பராபரன் இருக்கிறார் என்று சொல்லலாம் (எசா. ...).

இரண்டாம் பங்கு.

19. நமது சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கிலே என்ன அடங்கியிருக்கிறது.

மனத்தாழ்மையைப் பற்றிய நல்ல புத்திமதி.

20. அதைப் போதிக்கிறவர் ஆர்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர். தம்முடைய முழுச் சீவனிலே மெய்யான மனத்தாழ்மைக்கு நல்ல முன்மாதிரி கொடுத்தவரும்: என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அதேதென்றால் நான் மெத்தனவும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன் என்று சொன்னவருமாகிய அவர் (மத். ௰௧, ௨௯) தமது வார்த்தையினாலும் நடக்கையினாலும் மனத்தாழ்மையைப் போதிக்கிறார்.

21. அவர் ஆருக்கு மனத்தாழ்மையைப் பற்றி புத்தி சொன்னார்.

அந்தப் பெருமையுள்ள பரிசேயருக்கு.

22. அவர் அதை அவர்களுக்குச் சொல்லுகிறதற்கான முகாந்தரம் என்ன:

அவர்களுடைய பெருமைதான். ஏனெனில் அவர்கள் பந்தியில் முதல் இடங்களை எப்படித் தெரிந்துகொண்டார்கள், அதாவது விருந்திலே அவனவன் முந்தினவனாயிருக்கப் பிரயாசப்பட்டதைக் கிறிஸ்துநாதர் கவனித்துப் பார்த்தார்.

23. கர்த்தர் அவர்களை மனத்தாழ்மைக்கு ஏவ எப்படி புத்தி சொல்லுகிறார்.

கலியாணத்துக்கடுத்த ஒரு உவமையைச் சொல்லி: நீ ஒருவனால் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டால், பந்தியில் முதல் இடத்தில் உட்காராதே. ஏனெனில் ஒருவேளை உன்னிலும் கனமுள்ளவன் அவனால் அழைக்கப்பட்டிருக்கக்கொள்ள, உன்னையும் அவனையும் அழைத்தவன் வந்து, உன்னுடனே: இவனுக்கு இடங்கொடு என்பான். அப்போது நீ வெட்கத்துடனே கடைசியிடம் பிடிக்கத் துவக்குவாய். நீ அழைக்கப்பட்டால், போய், கடைசியிடத்திலே உட்காரு. அப்போது உன்னை அழைத்தவன் வந்து, உன்னுடனே: சிநேகிதனே, உயரப்போயிரு என்றால், உன்னுடனே பந்தியிருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக் கனம் உண்டாம் என்றார் (அ—ய).

24. இந்த உவமையின் அர்த்தம் என்ன.

ஒருவன் பெருமையாயிராமலும் முதல் இடத்தை அடையப் பிரயாசப்படாமலும் தான் நியாயமாய் உயர்த்தப்படுவதற்குக் காத்திருக்க வேண்டும். அதைக் குறித்து நம்முடைய இரட்சகர்: தன்னைத்தான் உயர்த்துகிறவன் எல்லாம் தாழ்த்தப்படுவான், தன்னைத் தான் தாழ்த்துகிறவனோ உயர்த்தப்படுவான் என்று சொல்லுகிறார் (௧௧).

25. தங்களை உயர்த்துகிறவர்கள் ஆர்.

இந்த லோகத்திலே பெரியவர்களாயிருக்க விரும்புகிற பெருமையுள்ள மனிதர்.

26. ஆனால் தங்களைத் தாழ்த்துகிறவர்கள் ஆர்.

மனத்தாழ்மையுள்ளவர்கள். அவர்கள் தங்களையே அற்பமாக எண்ணியிருப்பதால், மற்றவர்கள் அவர்களைத் தாழ்மையாய் எண்ணுகிறதற்காக இடறல்படுகிறதில்லை.



## படிப்பினை.

27. சுவிசேஷ வாக்கியத்தின் இந்த இரண்டாம் பங்கினாலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளலாம்.

I. பரிசேயரிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

சண்டையும் சச்சரவும் பொதுவாக மனிதருடைய பெருமையினால் வரும். அநேகம் பெருமையுள்ள பரிசேயர் கூடிவந்த இந்த விருந்திலே அப்படித்தான் இருந்தது. ஏனெனில் முதல் இடத்தில் ஆர் உட்காரலாம் என்று தங்களுக்குள் சண்டை செய்தார்கள். அகந்தையாலே மாத்திரம் வாது பிறக்கும் என்று சாலொமோன் இராசா சொல்லுகிறான் (வாக். ௰௩, ௰).

II. கர்த்தராகிய கிறிஸ்துவாலும் அவர் சொன்ன நல்ல புத்தியினாலும் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. நாம் இசைவினிலே உண்மையான மனத்தாழ்மையைக் காட்டவேண்டும். அதற்குக் கர்த்தர் இந்தச் சுவிசேஷ வாக்கியத்திலே நமக்குப் புத்திசொல்லி, தமது சீவியத்திலே நமக்கு நல்ல முன்மாதிரி கொடுத்து அதற்கு நம்மை ஏவி எழுப்புகிறார். இந்த விருந்திலே இயேசுநாதர் எல்லாரிலும் முக்கியமானவராயிருந்தார் என்பதற்குச் சந்தேகம் இல்லை. ஏனெனில் தமது சுபாவத்தின்படியே மனிதனாய் மாத்திரமல்ல, மெய்யான தேவனும், தமது உத்தியோகத்தின்படியே சகல இராசாக்களிலும் பெரிய இராசாவும், ஆம், இராசாதி இராசாவுமாயிருந்தார். ஆகிலும் அவர் முதல் இடத்தில் உட்கார வேண்டுமென்று விரும்பாமல், பெருமையுள்ள பரிசேயர் அதைப்பற்றி எப்படி சண்டை செய்தார்களென்று பார்த்து, அதற்காக அவர்களை எச்சரிக்கிறார். அப்படிப்பட்ட சிந்தை நமக்கும் இருக்க வேண்டும். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது. அவர் பராபரனுடைய ரூபாயிருந்தும், பராபரனுக்குச் சரியாயிருக்குதலைக் கொள்ளையாடின உடைமையாக எண்ணாமல், தம்மைத் தாம் வெறுமையாக்கி, ஊழியக்காரன் ரூபெடுத்து, மனுஷர் சாயலாகி, வேஷத்திலே மனுஷனாகக் காணப்பட்டு, தம்மைத் தாம் தாழ்த்தி, மரணபரியந்தம் சிலுவையினுடைய மரணபரியந்தமே கீழ்ப்படிந்தவரானார் என்றும் (பிலிப். உ, ரு—அ), ஒன்றுக்கொன்று ஏக சிந்தையாயிருங்கள், மேட்டிமையானதுகளைச் சிந்தியாமல், தாழ்மையானதுகளுக்கு உடன்படுங்கள் என்றும் (ரோ. ௰உ, ௰சு) பவுல்

அப்போஸ்தலன் புத்தி சொல்லி, எல்லாக் கிறிஸ்தவர்களையும் மனத்தாழ்மைக்கு ஏவிவிடுகிறான்.

௨. பெருமைக்காரர் பொதுவாக விழுவார்கள். தன்னைத் தான் உயர்த்துகிறவன் எல்லாந் தாழ்த்தப்படுவான் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தராகிய பராபரன் பெருமைக்காரரோடு எதிர்த்து நிற்கிறபடியினாலே அவர்கள் தங்களை எல்லாரைப் பார்க்கிலும் பெரியவர்களென்று எண்ணுகிறபோது, அவர்கள் விழவேண்டியது அவசியம். அப்படியே தெய்வதூதரும் தங்கள் பெருமையினாலே வானத்திலிருந்து நரகத்துக்குத் தள்ளப்பட்டு பிசாசானார்கள். அவ்விதமே நம்முடைய ஆதித்தாய் தகப்பன்மாரும் பெருமையினால் பாதிசியிருந்து துரத்தப்பட்டு இவ்வழுகையின் பள்ளத்தாக்குக்கு வந்தார்கள். மனிதருடைய பெருமையைக் குறித்து சாலொமோன்: நொறுங்குதலுக்கு முன்னானது அகந்தை, விழுகுதலுக்கு முன்னானது மனமேட்டிமை என்று சொல்லுகிறான் (வாக். ௰௬, ௰௮).

௩. மனத்தாழ்மையுள்ளவர்கள் பராபரனாலே உயர்த்தப்படுவார்கள். ஏனெனில் சத்தியவாசனாகிய இயேசுநாதர்: தன்னைத் தாழ்த்துகிறவன் எல்லாம் உயர்த்தப்படுவான் என்று சொல்லுகிறார். அப்படியே தன்னுடைய எல்லாச் சகோதரரிலும் மனத்தாழ்மையுள்ளவனாயிருந்த யோசேப்பு அவர்களில் முதன்மையானவனாயிருக்க உயர்த்தப்பட்டான். தன் சகோதரரில் எல்லாம் சிறியவனாயிருந்த தாவீது இராசாவானான். தாய்தகப்பனற்ற மனத்தாழ்மையுள்ள எஸ்தர் இராசாத்தியானாள். இவ்விதமாகப் பராபரன் மனத்தாழ்மையுள்ளவர்களை இச்சீவனிலுஞ் சிலவேளை உயர்த்துகிறார். ஆனால் பாக்கியமான நித்திய [illegible] அவர் அவர்கள் எல்லாரையும் உயர்த்தி: தமது வலதுபக்கத்திலே நிறுத்தி வைத்து: வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, லோகத்தோற்றம் முதல் உங்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுவார் (மத். ௨௫, ௩௪). கடைசியாக நாம் பேதுரு அப்போஸ்தலனுடைய புத்திமதியை இருதயத்திலே வைக்கக்கடவோம். அதாவது: மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள். ஏனெனில் அகந்தையுள்ளவர்களோடே பராபரன் எதிர்த்து நின்று, தாழ்மையானவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆனபடியினாலே பராபரன் ஏற்றகாலத்தில் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய வல்லமையான கைக்குக் கீழாகத் தாழுங்கள் என்பதே (௧ பேது. ௫, ௫. ௬). அப்படியே நாம் எல்லாரும் உயர்த்தப்படும்படிக்குப் பிதா குமாரன் பரி



சுத்த ஆவியாகிய திரியேக பராபரனை நோக்கிச் செபஞ்செய்வோமாக.

திரியேக தெய்வமாகிய அவருக்கே துதியும் மகிமையும் உண்டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௮-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௱௨.)

சுவி. மத். ௨௨, ௩௪ — ௪௬.

அவர் சதுசேயருடைய வாயை அடைத்தார் என்று பரிசேயர்
கேட்டு, ஒன்றாய்க் கூடினார்கள். 35 அவர்களில் நியாயசாஸ்திரி
ஒருவன் அவரைச் சோதித்து: 36. போதகரே, நியாயப்பிரமா
ணத்தில் எந்தக் கற்பனை பெரியதென்று கேட்டான். 37 ஆனால்
இயேசு அவனுக்குச் சொன்னதாவது: உன் பராபரனாகிய கர்த்த
ரை உன் முழு இருதயத்தாலும் உன் முழு ஆத்துமத்தாலும் உன்
முழு விளங்கினாலுஞ் சிநேகிப்பாயாக. 38 இது முதலாம் பெரிய
கற்பனையாயிருக்கிறது. 39 அத்தோடொத்த இரண்டாம் கற்பனை
யோ: உனக்கு அடுத்தவனை உன்னைப்போல் சிநேகிப்பாயாக என்
பது. 40 இவ்விரண்டு கற்பனைகளில் எல்லா நியாயப்பிரமாணமும்
தீர்க்கதரிசனங்களுந் தொங்குகிறது என்றார். 41 ஆனால் பரிசே
யர் கூடியிருக்கையில், இயேசு அவர்களை: 42 கிறிஸ்துவுக்காக உங்
களுக்கு என்னமாய்க் காணுகிறது; ஆருடைய குமாரனாயிருக்கிறார்
என்று கேட்டார். அவருடனே: தாவீதினுடைய குமாரன் என்றார்
கள். 43 அப்போது அவர் இவர்களுக்குச் சொன்னதாவது: இப்
போதும் தாவீது ஆவியினாலே அவரை ஆண்டவரென்று சொல்லு
கிறதெப்படி. 44 கர்த்தர் என் ஆண்டவருடனே: நாம் உம்முடைய
சத்துருக்களை உம்முடைய பாதபடியாக்கப்போடும் மட்டும் நம்மு
டைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திரும் என்றாரென்று சொன்னா
னே. 45 தாவீது அவரை ஆண்டவர் என்று சொன்னானேயாகில்,
இவர் அவனுடைய குமாரனாயிருக்கிறது எப்படி என்றார். 46 ஒரு
வனும் அவருக்கு ஒரு வார்த்தையும் மறு உத்தரமாகச் சொல்லக்
கூடாதிருந்தது. அந்நாள் முதல்கொண்டு அப்புறம் ஆரும் அவ
ரைக் கேட்கத் துணிந்ததும் இல்லை.

1. இந்த நாளின் சுவிசேஷ வாக்கியத்திலே அடங்கியிருக்கிறதென்ன.

முழுச் சத்தியவேதத்தின் பொருள் சுருக்கமாய் அடங்கியிருக்கிறது.

2. சத்தியவேதத்தில் எத்தனை பங்குண்டு.

நியாயப்பிரமாணம், சுவிசேஷம் என்கிற இரண்டு பங்குண்டு.

3. நியாயப்பிரமாணம் போதிக்கிறதென்ன.

நாம் எப்படி நடக்க வேண்டுமென்று போதிக்கிறது.

4. சுவிசேஷம் போதிக்கிறதென்ன.

நாம் இரட்சிக்கப்படும்படி விசுவாசிக்க வேண்டியது இன்னதென்று போதிக்கிறது.

5. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தை எத்தனை பங்காகப் பிரிக்கலாம்.

அதிலே நியாயப்பிரமாணமும் சுவிசேஷமும் சுருக்கமாய் அடங்கியிருக்கிறபடியால், அதை இரண்டு பங்காகப் பிரிக்கலாம்.

## முதலாம் பங்கு.

6. முதலாம் பங்கு காண்பிக்கிறதென்ன.

பராபரனுடைய நியாயப்பிரமாணத்திலே முக்கியமான கற்பனை ஏதென்று காண்பிக்கிறது.

7. அதைப் பற்றிக் கேட்டதார்.

பரிசேயரும், அவர்களில் விசேஷமாய் நியாயப்பிரமாணத்தைப் படித்து மற்றவர்களைப் பார்க்கிலும் சத்திய வேதத்தை அதிகமாய் அறிந்தவனாகத் தன்னை எண்ணின ஒரு நியாயசாஸ்திரியும்.

8. அந்த நியாயசாஸ்திரி அதைப் பற்றி ஆரிடத்தில் கேட்டான்.

இயேசுநாதரிடத்தில்.

9. அவன் அவரிடத்தில் கேட்டதற்கு முகாந்தரமென்ன. அவன் அதைக் கர்த்தராலே கற்றுக்கொள்ள விரும்பிக் கேட்டானு.

இல்லை. அவன் அவரைக் கேட்டதற்கு முகாந்தரம் என்னவென்றால்:

க. கோபமும் பொறாமையும். ஏனென்றால் நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர் சதுசேயருடைய வாயை அடைத்தபோது, இந்த கனத்தைப் பற்றிப் பரிசேயர் கர்த்தர் பேரிலே பொறாமைப்பட்டார்கள். ஆதலால் அவர் சதுசேயருடைய வாயை அடைத்தார் என்று பரிசேயர் கேட்டு, ஒன்றாய்க் கூடினார்களென்று நம்முடைய வாக்கியம் சொல்லுகிறது.

உ. கர்த்தரைச் சோதிக்கும்படியாய் அவரைக் கேட்டான். ஏனென்றால் இந்தக் கேள்விக்குக் கர்த்தர் உத்தரவு கொடுக்க முடியாதென்று எண்ணினான். அவர்களில் நியாயசாஸ்திரி ஒருவன் அவரைச் சோதித்தான் என்று நம்முடைய வாக்கியம் சொல்லுகிறது.



10. சதுசேயர் ஆர்.

உயிர்த்தெழுதலும் தூதனும் ஆவியுமில்லை என்கிற யூதரில் ஒரு பிரிவார் (அப். உங, அ). கர்த்தர் அவர்களுடைய வாயை அடைத்தார் என்பதற்கு அர்த்தம் என்னவென்றால், கர்த்தர் கொடுத்த உத்தரவால் அவர்கள் மறுமொழி பேசக் கூடாதபடிக்குச் செயிக்கப்பட்டவர்களாக எண்ணப்பட்டதாம்.

11. இயேசுநாதர் எந்தக் கேள்வியிலே அவர்கள் வாயை அடைத்தார்.

மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப் பற்றிய கேள்வியிலே தான். சதுசேயர் தங்களுடைய பொய்யான நியாயங்களிலே மரித்தோருடைய உயிர்த்தெழுதல் இல்லையென்று ரூபித்து, கிறிஸ்துநாதரைச் சிக்கப்பண்ண நினைத்தபோது, அவர்கள் ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாதபடிக்கு அவர் மறுமொழி கொடுத்தார்.

12. சுவிசேஷ வாக்கியத்தின்படி அந்த நியாயசாஸ்திரி கேட்ட கேள்வி என்ன.

போதகரே, நியாயப்பிரமாணத்தில் எந்தக் கற்பனை பெரியது.

13. இந்தக் கேள்விக்கு உத்தரவு கொடுக்கிறது அரிதா.

ஆம். கர்த்தராகிய பராபரன் யூதசனத்துக்குப் பத்துக் கற்பனைகளைக் கொடுத்து, அவர்கள் தங்கள் ஆராதனைகளிலும் புறம்பான மற்றக் காரியங்களிலும் கைக்கொள்ள வேண்டிய வேறேக சட்டங்களையும் நியமங்களையுங் கொடுத்திருந்தார். ஆதலால் அவைகளில் சிலது அவர்கள் செய்ய வேண்டியது இன்னதென்றும், சிலது விலக்கவேண்டியது இன்னதென்றுங் கற்பிக்கிறதாயிருந்தது. முந்தினவைகளின் தொகை மனிதனுடைய சரீர அவயவங்களின் தொகைக்கேற்றபடி இருநூற்று நாற்பத்தெட்டு உண்டென்றும், பிந்தினவைகளின் தொகை ஒரு வருஷத்தின் நாட்களுக்கு ஒத்ததாக முந்நூற்று அறுபத்தைந்து உண்டென்றும் சொன்னார்கள். ஆதலால் யூதர் தங்கள் நியாயப்பிரமாணத்திலே அறுநூற்றுப்பதின்மூன்று கற்பனைகள் உண்டென்று எண்ணினார்கள். இந்த எல்லாக் கற்பனைகளிலும் முக்கியமான கற்பனை ஏதென்பதைக் குறித்து யூதர்களுக்குள்ளே மகா பெரிய தர்க்கம் நடந்தது.

14. இந்தக் கேள்விக்கு இயேசுநாதர் கொடுத்த மறுமொழி என்ன.

பராபரனைச் சிநேகிக்கிற சிநேகமும் (ரோ. ௬, ரு), அத்தோடு கூடிய பிறத்தியானைச் சிநேகிக்கிற சிநேகமும்

(௩ மோ. ௰௯, ௰௮) நியாயப்பிரமாணத்தில் முக்கிய கற்பனையாயிருக்கிறதென்று காண்பிக்கிறார். ஏனென்றால் இயேசுநாதர் நியாயசாஸ்திரிக்கு: உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தாலும், உன் முழு ஆத்துமத்தாலும், உன் முழு நினைவினாலும் சிநேகிப்பாயாக. இது முதலாம் பெரிய கற்பனையாயிருக்கிறது. அதற்கொத்த இரண்டாங் கற்பனையோ, உனக்கு அடுத்தவனை உன்னைப்போல் சிநேகிப்பாயாக என்று சொல்லுகிறார் (௩௭-...).

15. சிநேகத்தைப் பற்றிய இந்த கற்பனை ஏன் முதலாம் பெரிய கற்பனையாயிருக்கிறது.

அதிலே முழு நியாயப்பிரமாணம் அடங்கியிருக்கிறபடியால். நியாயப்பிரமாணம் அல்லது பத்துக்கற்பனை இரண்டு பலகைகளில் பிரித்து எழுதப்பட்டிருக்கிறது. முதற்பலகையில் எழுதப்பட்ட முந்தின மூன்று கற்பனை பராபரனைச் சிநேகிக்கிற சிநேகத்தையும், இரண்டாங் கற்பலகையில் எழுதப்பட்ட பிந்தின ஏழு கற்பனை பிறத்தியானைச் சிநேகிக்கிற சிநேகத்தையும் பற்றியது. ஆதலால் கிறிஸ்துநாதர் இந்த இரண்டு கற்பனைகளிலே எல்லா நியாயப்பிரமாணமுந் தீர்க்கதரிசனங்களுந் தொங்குகிறது, அதாவது மோசேயின் ஆகமங்களிலுந் தீர்க்கதரிசியின் புஸ்தகங்களிலுமுள்ள நியாயப்பிரமாணத்தைப் பற்றிய போதகம் இந்த இரண்டு கற்பலகைகளிலே அடங்கியிருக்கிறது என்றார்.

16. மனிதன் பராபரனாகிய கர்த்தரை எப்படிச் சிநேகிக்க வேண்டும்.

முழு இருதயத்தினாலும், முழு ஆத்துமத்தினாலும், முழு நினைவினாலுஞ் சிநேகிக்க வேண்டும். அதாவது, மனிதன் பராபரனைச் சிநேகிக்கிற அளவாய் வேறொன்றையும் சிநேகிக்கக் கூடாது. பராபரனுக்கு விரோதமானதைச் சிநேகிக்கவும், அவனுடைய முழு ஆத்துமத்திலேயும் இருதயத்திலேயும் சிந்தையிலேயும் பராபரனுக்கு விரோதமான எதுவும் இருக்கவுங் கூடாது.

17. மனிதன் தனக்கடுத்தவனை எப்படிச் சிநேகிக்க வேண்டும்.

தன்னைப்போல. அவன் வேறொருவன் தனக்குப் பொல்லாப்புச் செய்யாதிருக்க விரும்புவதுபோல், தானுந் தனக்கடுத்தவனுக்குப் பொல்லாப்புச் செய்யாதிருக்க வேண்டும். மேலும் அவன் உபத்திரவநாளிலே மற்றவர்களுடைய ஒத்தாசையை அடைய எப்படி விரும்புகிறானோ, அப்படியே அவன் தன்னாலே கூடியமட்டும் தன்னுடைய பிறத்தியானுக்கு அவனுடைய இக்கட்டிலே ஒத்தாசை செய்ய வேண்டும்.



ஆதலால் கிறிஸ்துநாதர் வேறொரு இடத்திலே: இப்போதும் மனுஷர் என்னென்னத்தை உங்களுக்குச் செய்ய வேண்டுமென்றிருக்கிறீர்களோ, அதை எல்லாம் நீங்கள் அவர்களுக்கும் அப்படியே செய்யுங்கள் என்று போதிக்கிறார் (மத். எ, ௰௨).

18. ஆனால் பிறத்தியானைச் சிநேகிக்கிற சிநேகத்தைப் பற்றிய இரண்டாங் கற்பனை பராபரனைச் சிநேகிக்கிற சிநேகத்தைப்பற்றிய முதலாங் கற்பனைக்கு ஒத்ததென்று கிறிஸ்துநாதர் ஏன் சொல்லுகிறார். மனிதன் பிறத்தியானைப் பார்க்கப் பராபரனை அதிகமாய்ச் சிநேகிக்க வேண்டியதில்லையா.

ஆம், நாம் எல்லாத்தையும் பார்க்கக் கர்த்தராகிய பராபரனைச் சிநேகிக்க வேண்டும். என்னிலும் அதிகமாகத் தகப்பனையாகிலுந் தாயையாகிலுஞ் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரவான் அல்ல, என்னிலும் அதிகமாக மகனையாகிலும் மகளையாகிலுஞ் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரவான் அல்லவென்று கிறிஸ்துநாதர் சொல்லுகிறார் (மத். ௰, ௩௭). ஆதலால் பராபரனைச் சிநேகிக்கிற சிநேகம் அதிகமாயிருக்க வேண்டும். ஆனால் பராபரனைச் சிநேகிக்கிற சிநேகத்தைப் பற்றிய கற்பனையும், பிறத்தியானைச் சிநேகிக்கிற சிநேகத்தைப் பற்றிய கற்பனையுமாகிய இவ்விரண்டும் பராபரனாகிய கர்த்தராலே கொடுக்கப்பட்டு, ஏகமாய்க் கைக்கொள்ளப்பட வேண்டியதாயிருக்கிறதினாலே, முந்தினதைப் பார்க்கப் பிந்தினது சிறியதாயிராமல், அதுக்கொத்ததாயிருக்கிறது. ஏனென்றால்: ஒருவன் பராபரனைச் சிநேகிக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; ஏனெனில் தான் கண்ட தன் சகோதரனைச் சிநேகியாதவன் தான் காணாத பராபரனை எப்படிச் சிநேகிக்கக் கூடும். பராபரனைச் சிநேகிக்கிறவன் தன் சகோதரனையுஞ் சிநேகிக்க வேண்டுமென்கிற கற்பனையை அவரால் அடைந்திருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது (௧ யோ. ௪, ௨௰. ௨௧).

படிப்பினை.

19. சுவிசேஷ வாக்கியத்தின் முதலாம் பங்கினாலே நாம் கற்றுக்கொள்ளுகிறதென்ன.

I. சதுசேயரிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

கள்ளப்போதகர் சத்தியத்தை விரோதித்தும், அதை மேற்கொள்ளக் கூடாது. சதுசேயருடைய வாய் மவுனமாயிருக்கும்படி கிறிஸ்துநாதராலே எப்படி அடைக்கப்பட்ட

தோ, அப்படி எல்லா கள்ளப்போதகருக்கும் சம்பவிக்கும். இவர்கள் சத்தியத்துக்கு விரோதமாக எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டாலும், நியாயம் நீதியாகத் திரும்பும். செம்மை இருதயத்தாரனைவரும் அதைப் பின்செல்லுவார்கள் என்கிற கர்த்தருடைய வார்த்தை உறுதியாய் நிற்கும் (சங். கஅச, ௰ரு).

II. பரிசேயரி[illegible]ல் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

தெய்வபத்தியற்றவர்கள் [illegible]களுக்கு விரோதமாக அடிக்கடி கெட்ட யோசனை பண்ணுவார்கள். பரிசேயர் கிறிஸ்துவுக்கு விரோதமாக இந்தச் சமயத்திலே கெட்டயோசனை செய்தார்களென்று நமது வாக்கியத்திலே பார்க்கிறோம். அப்படிப்பட்ட குணப்படாதவர்களைப்பற்றி தாவீது இராசா: அவர்கள் சமாதானமாய்ப் பேசாமல், தேசத்திலே அமர்ந்திருக்கிறவர்களுக்கு விரோதமாய்க் கபடான காரியங்களைத் தியானிக்கிறார்கள் என்று சொல்லுகிறான் (சங். கூரு, உ௰).

III. கர்த்தராகிய கிறிஸ்துவினிடத்திலும், அவர் கொடுத்த நல் உத்தரவாலும் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. முழு நியாயப்பிரமாணத்தின் தொகை பராபரனையும் பிறத்தியானையும் சிநேகிக்கிற சிநேகத்தில் அடங்கியிருக்கிறது. ஏனென்றால் நியாயசாஸ்திரி நியாயப்பிரமாணத்திலே முக்கியமான கற்பனை ஏதென்று கேட்டபோது, அவர்: உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தாலும், உன் முழு ஆத்துமத்தினாலும், உன் முழு வினைவினாலும் சிநேகிப்பாயாக. இது முதலாம் பெரிய கற்பனையாயிருக்கிறது. அத்தோடொத்த இரண்டாங் கற்பனையோ உனக்கடுத்தவனை உன்னைப்போல் சிநேகிப்பாயாக என்பது. இவ்விரண்டு கற்பனைகளில் எல்லா நியாயப்பிரமாணமுந் தீர்க்கதரிசனங்களுந் தொங்குகிறது என்று சொன்னார் (கூள—ச௰).

உ. நம்முடைய பராபரனாகிய கர்த்தரைப்போல் நாம் வேறொரு வஸ்துவைச் சிநேகிக்கக் கூடாது. நாம் பராபரனை முழு இருதயத்தினாலும் முழு ஆத்துமாவினாலும் முழு வினைவினாலும் சிநேகிக்க வேண்டுமென்று நியாயப்பிரமாணம் நம்மிடத்தில் கேட்கிறது. ஆதலால் ஒவ்வொரு கிறிஸ்தவனும்: என் பலமாகிய கர்த்தாவே, உம்மை உட்கருத்தாய்ச் சிநேகிப்பேன். கர்த்தர் என் கோட்டையும், என்னை விடுவிக்கிறவரும், என் பராபரனும், நான் நம்பியிருக்கிற என்னுடைய குன்றும், என் கேடையமும், என் இரட்சிப்பின் கொம்பும்,



என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார் என்று சொல்ல வேண்டும் (சங். ௰அ, உ. ௩.).

௩. நாம் நமக்கடுத்தவனுக்கு யாதொரு சேதமுஞ் செய்யாமல், நம்மாலானமட்டும் அவனுக்கு ஒத்தாசை செய்யவேண்டும். ஏனென்றால் நமக்கடுத்தவனை நம்மைப்போல் சிநேகிக்க வேண்டுமென்று நியாயப்பிரமாணம் நம்மிடத்தில் கேட்கிறது. ஆதலால் ஒரு கிறிஸ்தவன் பராபரனுக்குப் பிரியமாயிருக்க விரும்பினால், அவன் தன்னுடைய நடக்கையை இந்த இரண்டு கற்பனைகளுக்கு ஒத்ததாக்க வேண்டும். ஏனெனில் ஒரு மனிதனாவது பராபரனுடைய இந்த நியாயப்பிரமாணத்தை முழுதும் நிறைவேற்றினதாக மேன்மைபாராட்டக் கூடாததாயிருந்தும், ஆம், நாம் எல்லாரும் சுத்தக்கிருபையினாலே கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தைக் கொண்டு நீதிமான்களாக்கப்பட்டு இரட்சிக்கப்படுவோம் என்று நம்பினாலும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் பராபரனுடைய ஆவியின் கற்பனையின்படியே நடக்கப் பிரயாசப்படுகிறது அவசியம்.

இரண்டாம் பங்கு.

20. சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கு காண்பிக்கிறதென்ன.

சுவிசேஷத்தின் பொருளும் சாரமுமாகிய கிறிஸ்து நாதர் இன்னார், அவர் யாருடைய குமாரன் என்று காண்பிக்கிறது.

21. அதைப்பற்றிக் கேட்டதார்.

நம்முடைய இரட்சகர். ஏனென்றால் பரிசேயர் கூடியிருக்கையில் இயேசு அவர்களை: கிறிஸ்துவுக்காக உங்களுக்கு என்னமாய்க் காணுகிறது, ஆருடைய குமாரனாயிருக்கிறாரென்று கேட்டார் (சக. சஉ).

22. அவர் ஏன் கேட்டார், அவருக்கு அது தெரியாதா.

சந்தேகமில்லாமல் அவருக்கு அது தெரியும். தாமே அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவாகிய கிறிஸ்துவும், மனிதரை அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்போகிற உலக இரட்சகரும் என்பதை அவர் நன்றாய் அறிந்திருந்தார். பேதுருவும்: நீர் ஜீவனுள்ள பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்துவாயிருக்கிறீர் என்று சாட்சி கொடுத்திருந்தான் (மத். ௰௬, ௰௬). ஆகிலும், அவர் அதைப் பரிசேயருக்கு நன்றாய்ப் போதிக்கும்படிக்கும், அவர்களை மெய்யான வழியிலே நடத்தும்படிக்கும் அப்படிக் கேட்டார்.

23. கிறிஸ்துநாதர் யாருடைய குமாரன் என்று பரிசேயர் அறியார்களா.

இல்லை. அவர்கள் மேசியா, அதாவது கிறிஸ்து என்பவர் தாவீதின் வமிசத்திலிருந்து வருகிற மனுஷனாய் மாத்திரம் இருப்பார் என்று நினைத்தார்கள். ஆகலால் கர்த்தர்: கிறிஸ்துவுக்காக உங்களுக்கு என்னமாய்க் காணுகிறது, அவர் ஆருடைய குமாரனாயிருக்கிறாரென்று அவர்களைக் கேட்ட போது, அவர்கள்: தாவீதின் குமாரன் என்றார்கள்.

24. வழிதப்பிப்போன இந்தப் பரிசேயரை கிறிஸ்துநாதர் எப்படிப் போதித்தார்.

தாவீது இராசா பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு சங்கீதம் ௱௰-ல் சொல்லுகிற வார்த்தையை அவர்களுக்கு நினைப்பூட்டி, இந்த வார்த்தையினால்: இயேசு கிறிஸ்துவானவர் வெறும் மனிதனாக மாத்திரமல்ல, மெய்யான தேவனும், தாவீதின் குமாரனாக மாத்திரமல்ல, அவனுக்கு ஆண்டவனுமாயிருக்கிறார் என்று பரிசேயருக்கு விளங்கப்பண்ணினார். கர்த்தர் என் ஆண்டவருடனே: நான் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதபடியாக்கிப் போடுமட்டும் நம்முடைய வலதுபாரிசத்தில் உளுக்காரும் என்றாரென்று சொன்னானே. தாவீது அவரை ஆண்டவர் என்று சொன்னால், இவர் அவனுடைய குமாரனாயிருக்கிறதெப்படி என்றார் (௪௪. ௪௫).

25. தாவீது இந்த வார்த்தையில் ஆரைக் குறித்துப் பேசுகிறான்.

தான் ஆண்டவர் என்று அழைக்கிற கர்த்தராகிய கிறிஸ்துவைக் குறித்து. இந்தச் சங்கீதத்தில் தாவீது விசேஷமாய் இயேசுநாதருடைய மோக்ஷத்துக்கேறுதலையும், அவர் பிதாவாகிய பராபரனுடைய வலதுபாரிசத்தில் உளுக்காருவதையும் பற்றிப் பேசுகிறான்.

26. அவர் பிதாவாகிய பராபரனுடைய வலதுபாரிசத்தில் உளுக்காருகிறார் என்பதுக்கு அர்த்தம் என்ன.

அவர் தம்முடைய மனித சுபாவப்படியேயும் தேவவல்லமையையும் அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டு, தம்முடைய எல்லாச் சத்துருக்களையும் தமது பாதபடியாக்கிப்போடுமட்டும் இராசாவாக ஆண்டுகொண்டிருக்கிறார் என்பது அதற்கு அர்த்தமாம். கிறிஸ்துநாதருடைய சத்துருக்களாகிய மரணமும் பிசாசும் கடைசிநாளிலே தான் முழுதும் நரகத்தில் தள்ளப்பட்டு ஆக்கினைக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

27. ஆனால் கிறிஸ்துநாதர் மெய்யான தேவனாயிருக்கிறார் என்பதை எப்படி அறியலாம்.



தாவீது அவரைத் தன் ஆண்டவராகிய கிறிஸ்து என்று அழைக்கிறதினாலே தான். பூமியிலே அவனுக்கு வேறொரு ஆண்டவர் இல்லை. பராபரனாகிய கர்த்தர் மாத்திரம் அவனுடைய ஆண்டவர். ஆதலால் கிறிஸ்துநாதர் தாவீதின் ஆண்டவராயிருக்கிறபடியினால், அவர் மெய்யான தேவனாகவும் இருக்க வேண்டியது.

28. கிறிஸ்துவினுடைய இந்த வார்த்தைக்குப் பரிசேயர் கொடுத்த மறுமொழி என்ன.

ஒன்றுமில்லை. ஏனென்றால்: ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையையும் மறுஉத்தரமாகச் சொல்லக்கூடாதிருந்தது. அந்நாள் முதற்கொண்டு அப்புறம் ஆரும் அவரைக் கேட்கத் துணிந்ததுமில்லை என்று எழுதியிருக்கிறது (௪௬).

முடிப்பினை.

29. சுவிசேஷ வாக்கியத்தின் இந்த இரண்டாம் பங்கினாலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. பரிசேயரிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது: க. மேன்மையும் படிப்புமுள்ள மனிதர் சட வழி தப்பிப்போக ஏதுவானவர்கள். பரிசேயர் எருசலேமிலே உயர்ந்த நிலைமையிலிருந்தார்கள். அவர்கள் அதிக ஞானமும் புத்தியுமுள்ளவர்களாக எண்ணப்பட விரும்பினார்கள். ஆகிலும் இயேசு கிறிஸ்துவைப்பற்றிய முக்கிய போதகத்திலே அவர்கள் தப்பெண்ணங்கொண்டு, அவர் ஆருடைய குமாரனாயிருக்கிறார் என்பதை அறியாதே போனார்கள். மனுப்புத்திரர் மாயையுந் துரைமக்கள் பொய்யுந் தானே. தராசிலே அவர்கள் ஏகமாய் மாயையிலும் லேசாய் ஏறுகிறதற்கானவர்கள் என்ற வார்த்தை உண்மை என்பதற்கு இவர்களே திருஷ்டாந்தம் (சங். கூஉ, ௧).

உ. தெய்வபத்தியற்றவர்கள் நீதிமான்களுக்கு விரோதமாய்ச் செய்கிற தங்கள் ஆலோசனையில் வெட்கப்பட்டுப் போவார்கள். பரிசேயர் தங்கள் கேள்வியினாலே கிறிஸ்துநாதரை வெட்கப்படுத்த மனதாயிருந்தார்கள். ஆனால் அவருக்கு ஒரு வார்த்தையையும் மறுஉத்தரமாகச் சொல்லக்கூடாமல் போயிற்று. இப்படிப்பட்ட மனிதரைக் குறித்துத் தாவீது: இதோ, அக்கிரமத்தைப் பெறக் கர்ப்பவேதனைப்பட்டிருக்கிறான், தீவினையைக் கர்ப்பந் தரித்தான். அவன் அவத்தத்தைப் பெறுவான். குழியை வெட்டி அதைப் பள்ளமாக்கினான்; தான் பறித்த குழியிலே விழுவான் என்று சொல்லுகிறான் (சங். ௭, ௰௫. ௰௬).

II. கர்த்தராகிய கிறிஸ்துவினிடத்தில் நாம் கற்றுக் கொள்ளுகிறதாவது:

௧. கிறிஸ்துவை அறிகிற அறிவு சுவிசேஷத்தின் முழுத்தொகையாயிருக்கிறது. நம்முடைய இரட்சகர் பராபரனையும் பிறத்தியானையும் நேசிக்கிற சிநேகத்தைப்பற்றிய இரண்டு கற்பனைகளிலே நியாயப்பிரமாணத்தின் முழுத்தொகையை முன் எப்படிச் சேர்த்துக்கொண்டாரோ, அப்படியே அவர் இப்போதும் சுவிசேஷத்தின் முழுத்தொகையைச் சேர்த்துக்கொண்டு: கிறிஸ்துவுக்காக உங்களுக்கு என்னமாய்க் காணுகிறது என்று கேட்கிறார். இதை அவர்கள் அறிந்திருப்பது மிகவும் அவசியம். அவர்கள் ஒன்றான மெய்த்தெய்வமாகிய உம்மையும், நீர் அனுப்பின இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவனாயிருக்கிறது (யோவா. ௰௭, ௩).

௨. கிறிஸ்துநாதர் மெய்யான மனிதனாக மாத்திரமல்ல, மெய்யான தேவனாகவும் இருக்கிறார். அவர் தாவீதின் குமாரனாக மாத்திரமல்ல, அவனுடைய ஆண்டவருமாயிருக்கிறதை ரூபித்துக் காண்பிக்கிறார். பவுல் அப்போஸ்தலனும்: இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான பராபரன் என்று சாட்சியிட்டுத் திடப்படுத்துகிறான் (ரோ. ௯, ௫).

௩. கிறிஸ்துவானவருக்குத் தெய்வீகமும் மனுஷீகமுமாகிய இரண்டு சுபாவங்கள் இருந்தும், ஒரே ஆளாயிருக்கிறார். ஏனென்றால் அவர் தமது தெய்வ சுபாவத்தையும் மனித சுபாவத்தையும் பற்றிப் பேசும்போது, தம்மை ஒரே ஆளாகக் குறித்துப் பேசுகிறார். அதற்கொக்கப்படியே: ஒரே பராபரனும், பராபரனுக்கும் மனுஷருக்கும் ஒரே மத்தியஸ்தரும் உண்டு; இவர் எல்லாருக்காகவும் தம்மை மீட்கும் பொருளாக ஒப்புக்கொடுத்த மனுஷனான கிறிஸ்து இயேசு தானே என்று சொல்லப்பட்டிருக்கிறது (௧ தீமோ. ௨, ௫).

௪. கிறிஸ்துநாதர் தமது மனித சுபாவப்படியேயும் சர்வத்திற்கும் வல்லவரும் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவருமாயிருக்கிறார். தாவீது கர்த்தராகிய கிறிஸ்துவைப் பற்றிச் சாட்சிகொடுத்து: அவர் பராபரனுடைய வலதுபாரிசத்தில் உளுக்காருவார், அவர் நம்முடைய சத்துருக்களைத் தமக்குப் பாதபடியாக்கிப் போடுவாரென்று சொல்லிப்போகிறான். இயேசுநாதரும்: வானத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறார் (மத். ௨௮, ௰௮).

௫. நாம் நமது சுபாவத்தினாலே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்துகொள்ளக் கூடாதென்றும், பரிசுத்த



ஆவியின் ஒத்தாசை நமக்குத் தேவை என்றும் இதினாலே கற்றுக்கொள்ளுகிறோம். தாவீது பராபரனுடைய ஆவியினாலே பேசினானென்று இயேசுநாதர் சொல்லுகிறார். அப்படியே நாமும் இரட்சகரைப்பற்றிய பராபரனுடைய இந்த வசனத்தைச் சரியாய் விசுவாசிக்கும்படிக்குப் பரிசுத்த ஆவியானவருடைய ஒத்தாசையைத் தேடி அடையவேண்டும். ஏனென்றால் பரிசுத்த ஆவியினாலேயொழிய ஒருவனும் இயேசுவைக் கர்த்தரென்று சொல்லக்கூடாதென்று உங்களுக்கு அறிவிக்கிறேன் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறான் (௧ கொரி. ௰௨, ௩). ஆதலால் நாம் எப்போதும் பெருமூச்சுவிட்டுக் கேட்க வேண்டியதாவது:

பரத்தின் தூய்ய ஒளியே,
உம்மால் பராபரனையே
அறிந்தப்பா என்றுண்மையாக
அழைக்க நன்றாய்க் கற்போமாக,

அடியார் இயேசு கிறிஸ்துவை
அல்லாமல் வேறே மெய்ப்பரைத்
தேடாமல், அவர்மேல் எல்லாரும்
மாபத்தியாயிருக்கத் தாரும்.
(ஞானப்பாட்டு ௭௯, ௨.)

பரிசுத்த ஆவியாகிய அவருக்குப் பிதாவாகிய பராபரனோடும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடும் கனமும் புகழ்ச்சியும் உண்டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௯-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௨௯௰.)

சுவி. மத். ௯, ௧—௮.

அப்போது அவர் படவில் ஏறி, இக்கரைப்பட்டு, தம்முடைய பட்
டணத்தில் வந்தார். 2 இதோ, படுக்கையின்மேல் கிடக்கிற ஒரு
திமிர்வாதக்காரனை அவரண்டைக்குக் கொண்டுவந்தார்கள். இயேசு
அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனுடனே:
மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்ட
தென்றார். 3 அப்போது இதோ, வேதபாரகரில் சிலர் தங்கள் உள்ளத்
திலே: இவன் தேவதூஷணஞ் சொல்லுகிறான் என்றார்கள். 4 ஆனால்
இயேசு அவர்கள் நினைவுகளைக் கண்டு சொன்னதாவது: நீங்கள்
உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளை நினைக்கிறதேன். 5 ஏனெ
ன்றால்: பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்ட
தென்று சொல்வது எளிதோ, எழுந்திருந்து நடவென்று சொல்
வது எளிதோ. 6 ஆனால் பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ
னுடைய குமாரனுக்கு அதிகாரம் உண்டென்கிறதை நீங்கள் அறிய
வேண்டுமென்று சொல்லி, திமிர்வாதக்காரனுடனே: நீ எழுந்திருந்
து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்
றார். 7 அப்போது அவன் எழுந்திருந்து, தன் வீட்டுக்குப் போனான்.

8 கும்புகள் இதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு அப்படிக் கொத்த அதிகாரத்தைக் கொடுத்த பராபரனை மகிமைப்படுத்தினார்கள்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியம் எதைப்பற்றியது.

திமிர்வாதக்காரனுடைய குணப்படுதலைப்பற்றியது.

2. அந்த மனிதனுக்கிருந்த வியாதியென்ன.

அவன் தான் அசையவும் புரளவும் எழுந்திருக்கவுங் கூடாதபடிக்குத் திமிர்வாதத்தினாலும் சன்னியினாலும் அதிக வருத்தப்பட்டான். இதினிமித்தம் மற்ற மனிதர் அவனை ஒரு கட்டிலில் கிடத்தி தூக்கிக்கொண்டு வரும்படி நேரிட்டது.

3. இவன் எங்கேயிருந்தான்.

கப்பர்நகூமில். அங்கே இரட்சகர் அடிக்கடி வந்து வாசமாயிருந்தபடியால், அது கிறிஸ்துவின் பட்டணம் என்று சொல்லப்பட்டது.

4. அவனைக் குணமாக்கினதார்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர். நமது வாக்கியம் சொல்லுகிறபடியே, அவர்படவில் ஏறி, இக்கரைப்பட்டு, கலிலேயா கடலோரத்திலிருக்கிற தம்முடைய பட்டணமாகிய கப்பர்நகூமுக்கு வந்தபோது, அங்கே அவனைக் குணமாக்கினார்.

5. கர்த்தர் இதற்கு முன் எங்கே போயிருந்தார்.

அவர் கலிலேயாக் கடலின் அக்கரையிலிருக்கிற கெர்கேசேனருடைய தேசத்துக்குப்போய், அங்கேயிருந்த இரண்டு மனுஷரைப் பிடித்திருந்த பிசாசுக்களைத் துரத்திவிட்டார். இந்தப் பிசாசுக்கள் பன்றிக்கூட்டத்துக்குள் புகுந்ததினால், அப்பன்றிகள் கடலில் பாய்ந்து மாண்டது. அதினிமித்தம் கெர்கேசேனர் மனஸ்தாபப்பட்டு, தங்கள் எல்லைகளைவிட்டுப் போகக் கர்த்தரைக் கேட்டார்கள். அப்போது இயேசுநாதர்: தம்மைப் பார்க்கத் தங்கள் பன்றிகளை அதிமாய்ச் சிநேகித்த அந்தச் சனத்தின் நன்றியறியாமைக்காக அங்கே தங்கப் பிரியமில்லாமல், கப்பலேறி கலிலேயாக் கடலுக்கு இக்கரைப்பட்டு கப்பர்நகூமுக்கு வந்தார்.

6. எழுந்திருக்கக்கூடாமல் திமிர்வாதமாய்க் கிடந்த மனுஷன் கர்த்தரண்டைக்கு வந்ததெப்படி.

மற்ற மனுஷர் அவனைக் கட்டிலின்மேல் கிடத்தித் தூக்கிக்கொண்டு வந்தார்கள். ஆனால் இவர்கள் மற்றச் சுவிசேஷகர் சொல்லுகிறபடியே, வெகு கும்பிருந்தபடியினாலே அருகே சேரக்கூடாமல், கர்த்தர் இருந்த வீட்டின் தளத்



தைத் திறப்பாக்கி, அவனைப் படுக்கையுடனே கூட கிறிஸ்துவின் பாதத்தண்டை இறக்கினார்கள்.

7. அவர்கள் அவனைக் கிறிஸ்து நாதரண்டைக்கு என் கொண்டுவந்தார்கள்.

அவர் அவனைக் குணமாக்கும் படிக்கு.

8. அவர் அவனைக் குணமாக்கினாரா.

ஆம். அவர் அவனைச் சரீரத்தின்படி மாத்திரமல்ல, ஆத்துமத்தின்படியும் குணமாக்கினார்.

9. ஆத்துமத்தின்படி கர்த்தர் அவனைக் குணமாக்கினதெப்படி.

அவனுக்கு அவன் பாவங்களை மன்னித்ததினாலே தான். ஏனென்றால் இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனுடனே: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார் என்று நமது வாக்கியத்திலே வாசிக்கிறோம்.

10. ஆருடைய விசுவாசத்தினாலே திமிர்வாதக்காரன் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டான்.

தன்னுடைய சொந்த விசுவாசத்தினாலே தான். ஏனென்றால் நம்முடைய இரட்சகர் எல்லாருடைய விசுவாசத்தையும், அதாவது திமிர்வாதக்காரனைக் கொண்டுவந்தவர்களுடைய விசுவாசத்தையும், திமிர்வாதக்காரனுடைய சொந்த விசுவாசத்தையுங் கண்டார். ஆதலால் அவர் அவனை: மகனே, திடன்கொள் என்று சொன்னார். விசுவாசமில்லாமல் ஒருவனும் பராபரனுடைய மகன், அதாவது பிள்ளையாயிருக்கிறதில்லை. ஏனென்றால் எத்தனை பேர் அவரை ஏற்றுக்கொண்டார்களோ, தமது நாமத்தின் பேரில் விசுவாசிக்கிற அத்தனை பேருக்கும் அவர் பராபரனுடைய பிள்ளைகளாகிறதற்கு அதிகாரங் கொடுத்தார் (யோவா. க, ௰௨).

11. கர்த்தருடைய இந்தக் குணமாக்குதலைப் பற்றி வேதபாரகர் என்ன நினைத்தார்கள்.

கிறிஸ்துநாதர் பராபரனைத் தூஷணித்தார் என்று நினைத்தார்கள். ஏனென்றால் வேதபாரகரில் சிலர் தங்கள் உள்ளத்திலே: இவன் தேவதூஷணஞ் சொல்லுகிறான் என்று சொன்னார்கள் என்று நம்முடைய வாக்கியத்திலே சொல்லியிருக்கிறது.

12. தேவதூஷணஞ் சொல்லுகிறதாவதென்ன.

பராபரனுக்கு விரோதமாகத் தூஷணமும் நிந்தையுமான வார்த்தையைப் பேசுகிறதும், அவரைப்பற்றி மாத்திரம் சொல்லக்கூடிய ஒரு காரியத்தை ஒருவன் தன்னைக்குறித்துச் சொல்லுகிறதும் தேவதூஷணமாம்.

13. கிறிஸ்துநாதர் தேவதூஷணம் சொன்னார் என்கிற எண்ணம் வேதபாரகருக்கு எதினாலே வந்தது.

அவர்கள் அவரை வெறும் மனிதனென்று எண்ணினபடியினாலே. பராபரன் தவிர வேறொருவனும் பாவங்களை மன்னிக்கக்கூடாதென்கிறதை அவர்கள் வேதத்தினாலே அறிந்திருந்தார்கள். ஆதலால் கிறிஸ்துநாதர் இந்தத் திமிர்வாதக்காரனுடைய பாவங்களை மன்னித்தபோது, பராபரனுக்கு மாத்திரம் உரிய இந்த அதிகாரத்தை, மனுஷனாகிய இவர் தமக்கு உரித்தாக்கிக்கொண்டாரென்று பாவித்து, தங்கள் உள்ளத்திலே, அதாவது இருதயத்திலே: இவன் தேவதூஷணம் சொல்லுகிறான் என்றார்கள்.

14. அவர்கள் அப்படி நினைத்தபோது, இயேசுநாதர் என்ன செய்தார்.

அவர் உடனே அவர்களுடைய நினைவுகளைக் கண்டு: நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாததுகளை நினைக்கிறதேது என்று சொல்லி, பாவங்களை மன்னிக்கத் தமக்கு அதிகாரம் உண்டென்றும், தாம் தேவதூஷணம் சொல்லவில்லையென்றும் ரூபித்தார்.

15. அதை எப்படி ரூபித்தார்.

திமிர்வாதக்காரனைத் தம்முடைய வார்த்தையினாலே சொஸ்தப்படுத்தி, அவனை எழுந்திருக்கப்பண்ணின அற்புதத்தினாலே தான். ஏனென்றால் கர்த்தர் வேதபாரகருக்கு அப்புறம் சொல்லுகிறதாவது: எது எளிதாயிருக்கிறது, பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வது எளிதோ, எழுந்திருந்து நடவென்று சொல்வது எளிதோ. ஆனால் பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷனுடைய குமாரனுக்கு அதிகாரம் உண்டென்கிறதை நீங்கள் அறியவேண்டுமென்று சொல்லி, திமிர்வாதக்காரனுடனே: நீ எழுந்திருந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வளவுக்குப் போ என்றார். அப்போது அவன் எழுந்திருந்து, தன் வளவுக்குப் போனான் (ரு-எ).

16. பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வது எளிதோ, எழுந்திருந்து நடவென்று சொல்வது எளிதோ என்று இயேசுநாதர் ஏன் கேட்டார்.

பாவங்களை மன்னிக்கத் தமக்கு அதிகாரம் உண்டென்பதை ரூபித்து நிச்சயப்படுத்தும் படிக்குத் தான். ஏனென்றால் கர்த்தருடைய இந்த வார்த்தையின் பொருளாவது: நான் திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்திருந்து நடவென்று சொல்லுகிற இந்த வார்த்தைக்கு அது கிரியையினால் நிறைவேற்றப்பட அவ்வளவு பெலன் இருக்குமேயானால், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்லுகிற அந்த என்னுடைய வார்த்தைக்கும் அவ்வளவு பெலனே இருக்கும் என்பதுக்கு என்ன சந்தேகம். ஏனென்றால் அதைப் பார்க்க இது உங்கள் கண்களுக்கு முன்பாக எளிதாயிருக்கிறது என்பதாம்.



17. கிறிஸ்துநாதர் அந்தத் திமிர்வாதக்காரனுக்கு: நீ உன் படுக்கையை எடுத்துக்கொண்டு போ என்று ஏன் உத்தரவு கொடுத்தார்.

முன் எழுந்திருக்கக்கூடாதிருந்த இந்த மனுஷன் இப்போது நடக்கிறதற்கு மாத்திரமல்ல, தன் சுய படுக்கையைச் சுமக்கிறதற்கும் சுகத்தையும் பலத்தையும் அடைந்தான் என்று சனங்கள் கண்டு, கிறிஸ்துநாதருடைய வல்லமையை அறிந்து அவரைப் புகழும்படியாக.

18. அப்போது சனங்கள் அவருடைய வல்லமையைக் கண்டு, என்ன செய்தார்கள்.

கும்புகள் இதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு அப்படிக்கொத்த அதிகாரத்தைக் கொடுத்த பராபரனை மகிமைப்படுத்தினார்கள் என்று சுவிசேஷவாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

19. அவர்கள் எந்த அதிகாரத்தைக் குறித்துப் பேசுகிறார்கள்.

வியாதியுள்ளவர்களைச் சொஸ்தப்படுத்தின வல்லமையை மாத்திரமல்ல, பாவங்களை மன்னிக்கக்கூடிய அதிகாரத்தையுங் குறித்துப்பேசுகிறார்கள். ஏனென்றால் கர்த்தராகிய கிறிஸ்துவுக்குத் தமது மனித சுபாவத்தின்படியேயும் பாவங்களை மன்னிக்க அதிகாரம் உண்டென்பதை இந்த அற்புதத்தினாலே அவர்கள் உணர்ந்தார்கள்.

20. பாவங்களை மன்னிக்கிற அதிகாரம் வேறு மனுஷருக்கு உண்டா.

உண்டு. இயேசுநாதர் தம்முடைய சீஷர்களை நோக்கி: பரிசுத்த ஆவியை வாங்குங்கள், எவர்கள் பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவர்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லித் தம்முடைய சீஷர்களுக்குந் திருச்சபைக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார் (யோவா. உ0, உஉ. உங). ஆகிலும் கர்த்தருக்குண்டான அதிகாரத்துக்கும் அவர் தம்முடைய சீஷருக்குக் கொடுத்த அதிகாரத்துக்கும் பெரிய வித்தியாசம் உண்டு. ஏனென்னில் கிறிஸ்துநாதர் தம்முடைய சுயமாய் பாவங்களை மன்னிக்கிறார். கிறிஸ்துவின் ஊழியக்காரரோ கிறிஸ்துவின் நாமத்தினாலே அப்படிச் செய்கிறார்கள். அதாவது, கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரைக்

கொண்டு குணப்படுகிற பாவிக்குப் பாவமன்னிப்பை அறிவிக்கிறார்.

## படிப்பினை.

21. இந்தச் சுவிசேஷவாக்கியத்தினாலே நாம் என்னதைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. திமிர்வாதக்காரனை இயேசுவண்டைக்குக் கொண்டுவந்த மனுஷரிடத்திலே நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. நாம் நமது ஏழைப் பிறத்தியாருடைய நிர்ப்பாக்கியத்தின் மேல் மனதுருகி, நம்மாலானமட்டும் அவனுக்கு உதவிசெய்யவேண்டும். திமிர்வாதக்காரன் தானே நடக்கக் கூடாதபடியால், மற்றவர்கள் அவனுக்கு ஒத்தாசையாக வந்து, அவனைக் கர்த்தரண்டைக்குச் சுமந்துகொண்டு போனார்கள். இந்த இரக்கம் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் இருக்கவேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பவுல்: ஒருவர் பாரங்களை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் என்று புத்திசொல்லுகிறான் (கலா. ௬, ௨). இந்தக் கற்பனையைக் கிறிஸ்துநாதரும் எல்லா விசுவாசிகளுக்கும் கொடுத்து: நான் உங்களைச் சிநேகித்ததுபோல் நீங்களும் ஒருவரை ஒருவர் சிநேகியுங்கள் என்கிற புதுக் கற்பனையை உங்களுக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறார் (யோவா. ௰௩, ௩௪).

௨. நாம் நமக்குண்டான சகல இக்கட்டிலேயும் கர்த்தராகிய கிறிஸ்துவினிடத்தில் ஒத்தாசை தேடவேண்டும். அந்த மனுஷர் திமிர்வாதக்காரனை இயேசுவண்டையில் கொண்டுவந்து ஒத்தாசை அடைந்தார்கள். இவரிடத்தில் நாமும் நமக்குண்டான சகல துன்பங்களிலும் அடைக்கலம் புகுந்து, தாவீதோடு: பராபரன் நமக்கு அடைக்கலமும் பெலனும் நெருக்கங்களில் பரிபூரணமாய்க் கிடைக்கிற அநுகூலமுமானவர் என்று சொல்லவேண்டும் (சங். ௪௬, ௨).

II. திமிர்வாதக்காரனிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. மனுஷருடைய நிர்ப்பந்தம் மகா பெரிதாயிருக்கிறது, ஏனென்றால் பாவத்தினாலே மனுஷருக்கு வந்த நிர்ப்பந்தத்துக்கு இந்தத் திமிர்வாதக்காரன் ஒரு அடையாளமாயிருக்கிறான். அவன் கை கால் அசைக்கக்கூடாமல் மற்ற மனுஷர்களால் அவர்கள் இஷ்டத்தின்படியே அவன் தூக்கப்பட்டதெப்படியோ, அப்படியே எல்லா மனுஷருந் தங்கள்



பாவங்களினாலே முழுவதும் வியாதியுள்ளவர்களும் பெலவீனருமாயிருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் தலையெல்லாம் வியாதியும், இருதயம் எல்லாம் பெலட்சயமுமாயிருக்கிறது. உள்ளங்கால் துவக்கித் தலைமட்டுக்கும் காயமும் வீக்கமும் நொதிக்கிற இரணமுமேயல்லாமல் ஒரு ஆரோக்கியமுமில்லை என்று சொல்லி முறையிடுவது நியாயம் (எசா. ௧, ௫. ௬). ஆம், நம்முடைய சுபாவ நிலைமையிலே நாம் அக்கிரமங்களாலும் பாவங்களாலும் மரித்தவர்களாயிருக்கிறோம் (எபேசி. ௨, ௧). ஆதலால் நாம் அந்த நிலைமையிலிருக்கக்கொள்ள நல்வழியில் நடக்கவும், நாமாய் மெய்யான நன்மைக்குத் திரும்பவும் கூடாமல், பிசாசும் நம்முடைய சுய துர் இச்சைகளும் நம்மை எங்கே கொண்டுபோகிறதோ, அங்கே நாம் போகிறவர்களாயிருக்கிறோம்.

௨. இப்படிப்பட்ட நிலைமையிலிருக்கிறவர்கள் இயேசு இரட்சகரிடத்தில் மாத்திரம் ஒத்தாசை அடையக் கூடும். திமிர்வாதக்காரன் கிறிஸ்துவினிடத்தில் மாத்திரம் எப்படி ஒத்தாசை அடைந்தானோ, அப்படியே நமது வியாதியுள்ள ஆத்துமத்துக்குக் கிறிஸ்துவினிடத்திலல்லாமல் வேறெங்கும் ஒத்தாசை கிடைக்காது. ஏனென்றால்: வேறொருவரிடத்திலும் இரட்சிப்பில்லை, வானத்தின் கீழே மனுஷரில் வேறொரு நாமம் அதினால் நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்று கட்டளையிடப்பட்டதுமில்லை என்று வேதம் சொல்லுகிறது (நடபடி ௪, ௰௨).

௩. நாம் சிலுவையின் கீழ்ப் பொறுமையுள்ளவர்களாயிருக்க வேண்டும். அப்படியே இந்தத் திமிர்வாதக்காரன் பொறுமையாயிருந்து, மற்ற மனிதர் அவனை எங்கே தூக்கிக்கொண்டுபோனார்களோ, அதற்கெல்லாம் அவன் சம்மதித்துப் பொறுமையாயிருந்தான். அப்படியே நாமும் நமக்குண்டான சகல துன்பங்களிலேயும் பொறுமையாயிருந்து: நீங்கள் பராபரனுடைய சித்தத்தைச் செய்து வந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்குத் தேவையாயிருக்கிறது என்கிற அப்போஸ்தலனுடைய இந்த வார்த்தைகளை மனதிலே வைப்பது மிகவும் அவசரமாயிருக்கிறது (எபிரே. ௰, ௩௬).

௪. நமக்குச் சரீர அசௌக்கியம் இருக்கும்போது, முதல்முதல் நமது ஆத்தும சுகத்துக்காகக் கவலைப்பட்டுப் பாவமன்னிப்பைத் தேடவேண்டும். திமிர்வாதக்காரன் சரீரத்தின்படி வியாதியுள்ளவனாயிருந்தும், கிறிஸ்து அவனுடைய ஆத்துமத்தைச் சுகப்படுத்தி: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொன்னார்.

தன்னுடைய இந்த ஆத்தும சுகத்தின்பேரில் திமிர்வாதக்காரனுக்கு அதிக ஆசையிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. ஏனென்றால் தன்னுடைய பாவத்தினாலே இந்த வியாதி வந்ததென்று அவன் உணர்ந்திருந்தான். பராபரன் நமக்கு வியாதியை அனுப்பினால், நாம் உடனே நம்முடைய ஆத்தும வியாதியை நினைத்து, பராபரனிடத்தில் பாவமன்னிப்பைக் கேட்க வேண்டும். அப்படியே சீராக்கு: என் குமாரனே, நீ வியாதிப்படும் வேளையிலே எல்லாத்தையும் நீ அற்பமாய எண்ணாதே. கர்த்தாவையும் வேண்டிக்கொள். அப்போது அவர் உன்னைச் சொஸ்தமாக்குவார். நீ பு..வத்தை விட்டு, உன் கைகளைச் செவ்வைபண்ணி, உன் இருதயத்தை எல்லா அக்கிரமங்களுக்கும் *நீங்கலாகச் சுத்திகரி..க்கொண்டிரு என்று சொல்லுகிறான் (சீராக். ௩௮, ௯, ௰).

௫. நாம் மெய்யான விசுவாசத்தோடு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்பேரில் நம்பிக்கையாயிருக்க வேண்டும். விசுவாசத்தினாலே திமிர்வாதக்காரன் பாவமன்னிப்பையும் சரீரசௌக்கியத்தையும் அடைந்தான். ஏனென்றால் கர்த்தர் அவனுடைய விசுவாசத்தைக் கண்டு: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். அப்படியே நாம் ஆத்தும இரட்சிப்பிலேயாவது, சரீர இரட்சிப்பிலேயாவது, கர்த்தராகிய கிறிஸ்துவிடத்தில் வந்து ஒத்தாசை தேடும்போது, நமக்கும் அப்படிப்பட்ட விசுவாசம் இருக்கவேண்டும். ஏனென்றால் தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று வேதம் சொல்லுகிறது (ஆபகூக் ௨, ௪).

III. அந்த வேதபாரகரிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. குணப்படாத மனிதர் பொதுவாகத் தெய்வபக்தியுள்ள விசுவாசிகளைத் தூஷணித்து, நிந்திப்பார்கள். இந்த வேதபாரகர் இயேசுநாதரை: தெய்வதூஷணம் சொல்லுகிறவன் என்றார்கள். ஆதலால் கிறிஸ்துவினுடைய சீஷர் லோகத்தாராலே நிந்திக்கப்படுகிறபோது, அவர்கள் முறையிட காரணமில்லை. அதைப்பற்றி நம்முடைய இரட்சகர்: சீஷன் தன் போதகனிலும், பணிவிடைக்காரன் தன் எசமானிலும் மேற்பட்டவனல்ல. சீஷன் தன் போதகனைப்போலவும், பணிவிடைக்காரன் தன் எசமானைப்போலவும் இருக்கிறது அவனுக்குப் போதும். வீட்டெசமானைப் பெயெல்செபூலென்று சொன்னார்களானால், அவர் வீட்டாரை எத்தனை அதிகம் என்று சொல்லுகிறார் (மத். ௰, ௨௪. ௨௫).



௨. பொல்லாத எண்ணங்கள் கூட கர்த்தருக்கு முன்பாகப் பாவமாயிருக்கிறது. அதின் நிமித்தம் கர்த்தராகிய கிறிஸ்து வேதபாரகரைக் கண்டித்து: நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளை நினைக்கிறதேது என்றார். ஆதலால் நாம் பொல்லாத வார்த்தை, கிரியைக்கு மாத்திரமல்ல, பொல்லாத நினைவுகளுக்கும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

IV. கர்த்தராகிய கிறிஸ்துவினிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. அவர் மெய்யான தேவனாயிருக்கிறார். அதை நாம் எதினால் அறியலாம் என்றால், அவர் எல்லாவற்றையும் அறிந்தவராய் வேதபாரகருடைய நினைவுகளைக் கண்டு, அவர்களைக் கண்டித்ததினாலும், தம்முடைய வார்த்தையினால் அற்புதமாகத் திமிர்வாதக்காரனைச் சொஸ்தப்படுத்தினதினாலும், அவனுடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்ததினாலுந் தான். ஏனென்றால் இதைப் பராபரனாகிய கர்த்தர் மாத்திரம் செய்யக்கூடும். அவரைக் குறித்து: அக்கிரமத்தை நீக்கிப் போட்டுத் தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுக்கு மீறுதலை மன்னித்து விடுகிற தேவரீரைப் போலொத்த தேவன் யார். ஏனெனில் அவர் கிருபை செய்ய விரும்புகிறார் என்று சொல்லப்படுகிறது (மீகா ௭, ௰௮).

௨. கிறிஸ்துநாதர் மனிதனை பின்பும் பாவங்களை மன்னிக்கத் தெய்வ அதிகாரமுள்ளவராயிருந்தார். ஏனென்றால் பூமியிலே பாவங்களை மன்னிக்க மனிதனுடைய குமாரனுக்கு அதிகாரம் உண்டென்று அவர் தாமே சொல்லுகிறார்.

V. சுவிசேஷ வாக்கியத்தில் சொல்லப்பட்ட சனங்களிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

பராபரன் நமக்கும் மற்றவர்களுக்கும் செய்கிற உபகாரங்களுக்காக நாம் அவரைப் புகழ்ந்து ஸ்தோத்திரம் பண்ண வேண்டும். அப்படியே அந்தச் சனங்கள் செய்தார்கள். ஏனென்றால் அவர்கள் திமிர்வாதக்காரன் சொஸ்தமானதைக் கண்டு, ஆச்சரியப்பட்டு, மனிதருக்கு அப்படிக்கொத்த அதிகாரத்தைக் கொடுத்த பராபரனை மகிமைப்படுத்தினார்கள். அப்படியே நாமும் செய்ய வேண்டும். கர்த்தரைத் துதிக்கிறதும், உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுகிறதும், காலமே உமது கிருபையையும் இராமாறு உம்முடைய உண்மையையும் அறிவிக்கிறதும் நலமாயிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது (சங். ௯௨, ௧. ௨).

நம்முடைய பராபரனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவருக்குத் கனமும் ஸ்தோத்திரமும் புகழ்ச்சியும் என்றென்றைக்கும் உண்டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின உய-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ... ாஅய.)

சுவி. மத். உஉ, க—யச.

இயேசு மறு உத்தரவு கொடுத்து, திரும்ப அவர்களுக்குச் சொன்
ன உவமை வார்த்தைகளாவது: 2 வான இராச்சியந் தன் குமார
னுக்குக் கலியாணஞ் செய்த இராசாவாகிய மனுஷனுக்கு ஒப்பா
யிருக்கிறது. 3 அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்துக்கு வரச்
சொல்ல, அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான்; ஆனால் அவர்
கள்: வர மாட்டோம் என்றார்கள். 4 மறுதரம் அவன் வேறே
ஊழியக்காரரை அனுப்பி, அழைக்கப்பட்டவர்களுக்கு: இதோ, என்
விருந்தை ஆயத்தம் பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த
செந்துக்களும் அடிக்கப்பட்டு, எல்லாம் ஆயத்தமாயிற்று; கலியா
ணத்துக்கு வாருங்கள் என்று சொல்லுங்கள் என்றான். 5 ஆனால்
அவர்கள் அசட்டை பண்ணி, ஒருவன் தன் வயலுக்கும் பின்னொரு
வன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். 6 மற்றவர்களோ
அவன் ஊழியக்காரரைப் பிடித்து, நிந்தித்து, கொன்றுபோட்டார்
கள். 7 இராசா அதைக் கேட்டபோதோவெனில் கோபம் அடைந்து,
தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்
கள் பட்டணத்தைச் சுட்டுப்போட்டான். 8 அப்போது தன் ஊழி
யக்காரருடனே: கலியாணமோ ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்
பட்டவர்களோவென்றால் அதுக்குப் பாத்திரவான்களாயிருந்த
தில்லை. 9 ஆனபடியால் நீங்கள் வழிப்பிரிவுகளிலே போய், அகப்
பட்ட யாவரையுங் கலியாணத்துக்கு அழையுங்கள் என்றான்.
10 அந்த ஊழியக்காரர் வழிகளில் புறப்பட்டுப் போய், அகப்பட்ட
பொல்லார் நல்லார் யாவரையுங் கூட்டிவந்தார்கள்; கலியாணம்
பந்தியிருக்கிறவர்களால் நிறைந்தது. 11 ஆனால் பந்தியிருக்கிறவர்
களைப் பார்க்கிறதுக்கு இராசா உட்பிரவேசித்தபோது, கலியாண
வஸ்திரந் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு, 12 அவனுட
னே: சிநேகிதனே, கலியாணவஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்
படி உட்பிரவேசித்தாய் என்றான். அவனுக்கோவெனில் வார்த்தை
யடைத்துப் போயிற்று. 13 அப்போது இராசா பணிவிடைக்காரரு
டனே: அவன் கால்களையுங் கைகளையுங் கட்டி, அவனை எடுத்துப்
போய், எல்லாத்துக்கும் புறம்பான இருளிலே போடுங்கள்; அங்கே
அழுகையும் பல்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான். 14 அதே
னெனில் அழைக்கப்பட்டவர்கள் அநேகம், தெரிந்துகொள்ளப்பட்ட
வர்களோ கொஞ்சம் என்றார்.



1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியம் எதைப்பற்றியது.

கலியாண உவமையைப் பற்றியது.

2. அந்த உவமையைச் சொன்னதார்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர் மறுஉத்தரவு கொடுத்துத் திரும்ப அவர்களுக்குச் சொன்ன உவமை வார்த்தைகளாவது: வான இராச்சியம் தன் குமாரனுக்குக் கலியாணஞ் செய்த இராசாவாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றார் (க. உ).

3. இங்கே சொல்லப்பட்ட கலியாணம் என்பதின் அர்த்தம் என்ன.

கிறிஸ்தமான சபையினுடைய நிலைமையாம். ஏனென்றால் வானராச்சியம் தன் குமாரனுக்குக் கலியாணஞ் செய்த இராசாவாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது என்று சொல்லுகிற வானராச்சியம் திருச்சபை தான்.

4. கிறிஸ்தமான சபை ஏன் வானராச்சியம் என்று சொல்லப்படுகிறது.

கர்த்தராகிய கிறிஸ்து ஆளுகைசெய்கிற அவருடைய இந்த இராச்சியம் பூமிக்கடுத்த இராச்சியமாயிராமல், பரலோக ராச்சியமாயிருக்கிறதினாலே தான். அது இப்பூமியிலிருக்கிற கிருபையின் இராச்சியமும் பிற்பாடு வானத்திலிருக்கும் மகிமையின் இராச்சியமுமாம்.

5. இந்தக் கலியாணத்தைச் செய்ததார்.

பரம பிதாவாகிய பராபரன். இராசாதி இராசாவாகிய அவர் தம்முடைய குமாரனுக்குக் கலியாணஞ் செய்தார் என்று நம்முடைய வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

6. இந்தக் கலியாணத்திலே மணவாளன் ஆர்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர். பராபரனுடைய குமாரனாகிய அவரை அவருடைய பிதாவானவர் இந்த லோகத்திலே மணவாளனாக அனுப்பியிருக்கிறார். அவரைப்பற்றி: மணவாளன் மணவாளியின் மேல் மகிழ்ச்சியாயிருக்கிறதுபோல் உன் பராபரன் உன் மேல் மகிழ்ச்சியாயிருப்பார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (எசா. சஉ, ரு).

7. இந்தப் பரம மணவாளனுக்கு மணவாளி ஆர்.

கிறிஸ்தமான சபை, அதாவது விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் தான். ஓசெயா உ, யசு. உய—ல் கர்த்தர் சொல்லுகிறபடியே, இவளைக் கர்த்தர் தமக்கு நிச்சயித்துக் கொண்டார்.

8. பரம இராசா தமது குமாரனுக்கு எப்போது இந்தக் கலியாணத்தைச் செய்தார்.

இயேசுநாதர் மாம்சத்தையும் இரத்தத்தையும் ஏற்றுக்கொண்டு இந்த லோகத்திலே வந்தபோது.

9. இந்தக் கலியாணத்துக்குப் பராபரன் ஆரை அழைத்தார்.

எல்லா மனிதரையும்.

10. அவர் அவர்களை ஆரைக்கொண்டு அழைத்தார்.

பரிசுத்த அப்போஸ்தலர், எல்லா விசுவாசமுள்ள போதகர் முதலிய நமது ஊழியக்காரரைக்கொண்டு. ஏனென்றால் இராசா அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்துக்கு வரச்சொல்ல தன் ஊழியக்காரரை அனுப்பினான் என்று நமது வாக்கியம் சொல்லுகிறது.

11. இந்தக் கலியாணத்திலே பராபரன் எந்தப் பதார்த்தங்களைக் கொடுக்கிறார்.

பாவமன்னிப்பு, மெய்யான நீதி, நித்திய பாக்கியம் முதலான மோட்சத்துக்கடுத்த சகல காரியங்களையுந் தான். ஏனென்றால் அந்த ஊழியக்காரர் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு: இதோ, என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன், எருதுகளுங் கொழுத்த செந்துக்களும் அடிக்கப்பட்டு, எல்லாம் ஆயத்தமாயிற்று, கலியாணத்துக்கு வாருங்கள் என்று சொல்ல இராசா உத்தரவு கொடுத்தான்.

12. கலியாணத்துக்கு அழைக்கப்பட்டவர்களெல்லாரும் வந்தார்களா.

இல்லை. சிலர் கலியாணத்தை அசட்டைபண்ணி, அதற்கு வர முற்றிலும் மனதற்றவர்களாய், ஒருவன் தன் வயலுக்கும், பின்னொருவன் தன் வியாபாரத்துக்கும் போய் விட்டார்கள். சிலரோ பராபரனுடைய ஊழியக்காரரை நிந்தித்துத் துன்பப்படுத்திக் கொன்று போட்டார்கள்.

13. கர்த்தர் சொல்லுகிற இந்த நன்றிகெட்ட மனிதர் யார்.

யூதர்கள் தான். ஏனென்றால் அவர்களே பராபரனுடைய இராச்சியத்துக்கு முந்தி அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் வர மனதில்லாமல் பரிசுத்த அப்போஸ்தலரைத் துன்பப்படுத்தி, அவர்களையும் மகிமையின் கர்த்தராகிய இயேசுநாதரையுங் கூடக் கொன்றுபோட்டார்கள்.

14. அப்படிப்பட்ட நன்றியறியாமையைக் குறித்துப் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறதென்ன.

இராசா அதைக் கேட்டபோது, கோபம் அடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தைச் சுட்டுப் போட்டான் (எ).

15. அப்படியே யூதருக்குச் சம்பவித்ததா.



ஆம், கர்த்தராகிய பராபரன் ரோம நடையச் சேனைகளை அனுப்பி, யூதரை அழித்து, அவர்கள் பட்டணமாகிய எருசலேமைச் சுட்டுப்போட்டார்.

16. யூதர் வரமனதில்லாதே போனபோது, கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரை எங்கே அனுப்பினார்.

அவர் அவர்களை வழிப்பிரிவுகளிலே, அதாவது அக்கியானிகளண்டைக்கு அனுப்பினார். அப்போது தன் ஊழியக்காரருக்கு அவன்: கலியாணமோ ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோவென்றால, அதற்குப் பாத்திரவான்களாயிருந்ததில்லை. ஆனபடியால் நீங்கள் வழிப்பிரிவுகளிலேபோய், அகப்பட்ட யாவரையும் கலியாணத்துக்கு அழையுங்கள் என்றான் (அ. கூ).

17. அக்கியானிகள் அந்தக் கலியாணத்துக்கு வந்தார்களா.

ஆம், அநேகம் ஆயிரம் அக்கியானிகள் சுவிசேஷத்தின் பிரசங்கத்தினாலே கர்த்தராகிய கிறிஸ்துவண்டைக்குத் திருப்பப்பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி நமது வாக்கியம் சொல்லுகிறதாவது: அந்த ஊழியக்காரர் வழிகளில் புறப்பட்டுப்போய், அகப்பட்ட பொல்லார் நல்லார் யாவரையுங் கூட்டிவந்தார்கள். கலியாணம் பந்தியிருக்கிறவர்களால் நிறைந்தது (ய).

18. இந்தக் கலியாணத்துக்கு வந்தவர்கள் எல்லாரும் நல்லவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருந்தார்களா.

இல்லை. இந்தக்கலியாணத்திலே, அதாவது கிறிஸ்தமான சபையிலே பொல்லாரும் நல்லாரும் இருக்கிறார்கள். அவர்களில் கலியாணவஸ்திரந் தரித்திராதவர்களுங் கூட உட்கார்ந்திருந்தார்கள். ஏனென்றால் பந்தியிருக்கிறவர்களைப் பார்க்கிறதற்கு இராசா உட்பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரந் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டார் என்று நமது வாக்கியம் சொல்லுகிறது (யக).

19. அந்தக் கலியாண வஸ்திரமாவதென்ன.

இயேசுகிறிஸ்துவைப் பற்றும் மெய்விசுவாசமாம். ஏனென்றால் நமது சுபாவ நிருவாணம் மூடப்படும்படிக்கு விசுவாசத்தினாலே இயேசுகிறிஸ்துவை நமது ஆத்துமாக்களின் மெய்யான கலியாண வஸ்திரமாகத் தரித்துக்கொள்ளுகிறோம். அப்படியே விசுவாசிகள்: கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன். என் பராபரனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது. ஏனெனில் மணவாளன் ஆசாரியனடைவாய் சிங்காரித்துக்கொள்ளுகிறதற்கும், மணவாட்டி தன் ஆபரணங்களால் அலங்கரித்துக்கொள்ளுகிறதற்கும் ஒப்பாக

அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின்
சால்வையை எனக்குத் தரித்தார் என்று சொல்லக்கூடும்
(எசா. சுக, ய).

20. கலியாண வஸ்திரமில்லாமல் கலியாணத்துக்கு
வந்த அந்த மனிதனுக்குச் சம்பவித்ததென்ன.

அவன் புறம்பே தள்ளப்பட்டான். ஏனென்றால் இரா
சா உட்பிரவேசித்து, கலியாணவஸ்திரந் தரிக்காத ஒரு
மனுஷனை அங்கே கண்டு, அவனுடனே: சிநேகிதனே, கலி
யாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி உட்பிரவேசித்
தாய் என்றான். அவனுக்கோ வார்த்தை அற்றுப்போச்சுது.
அப்போது இராசா பணிவிடைக்காரருடனே: அவன் கைக
ளையுங் கால்களையுங் கட்டி, அவனை எடுத்துப்போய், எல்லாத்
துக்கும் புறம்பான இருளிலே போடுங்கள்; அங்கே அழுகை
யும் பல்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான் (யக-யந).

21. எல்லாத்துக்கும் புறம்பான இருளாவதென்ன.

அது நரகந்தான். ஏனென்றால் குணப்படாதவர்களை
வேதனைப்படுத்தும் ஒருவித அக்கினி அங்கேயிருந்தும், வெ
ளிச்சமில்லை. நித்திய காரிருள் மாத்திரம் உண்டு.

22. இந்த உவமையினால் கர்த்தராகிய கிறிஸ்து என்
னத்தைக் குறித்துக் காட்டுகிறார்.

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படக் கூடியவர்களாயி
ருந்தும், எல்லாரும் இரட்சிக்கப்படுகிறதில்லை என்பதைத்
தான். ஆதலால் அவர் கடைசியாக: அழைக்கப்பட்டவர்கள்
அநேகம், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ கொஞ்சம் என்
றார் (யச).

23. அழைக்கப்பட்டவர்கள் ஆர்.

எல்லா மனிதரும்.

24. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் ஆர்.

இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலே முடி
வுபரியந்தம் உறுதியாய் நிலைத்திருக்கிறவர்கள் தான்.

## படிப்பினை.

25. இந்தச் சுவிசேஷவாக்கியத்தினால் நாம் என்னத்
தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. கர்த்தராகிய பராபரனிடத்தில் நாம் கற்றுக்
கொள்ளுகிறதாவது:

க. அவர் மனுஷசாதியை உருக்கமான சிநேகத்தி
னால் சிநேகிக்கிறார். ஏனென்றால் பராபரனாகிய கர்த்தர் மனி



தரைச் சிநேகித்தபடியினால்தான் தம்முடைய குமாரன் மனி
தவதாரமெடுத்து, அவர்களோடு ஐக்கியமாயிருந்து, ஞானப்
பிரகாரமாக அவர்களோடு கலியாணம் பண்ணும்படிக்கு அவ
ரை உலகத்திலே அனுப்பினார். இந்தச் சிநேகத்தைப்பற்றி
இயேசு இரட்சகர் சொல்லுகிறதாவது: பராபரன் தம்மு
டைய ஒரேபேறான குமாரனை, அவர் பேரில் விசுவாசிக்கி
றவனெவனும் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை அடைவ
தற்காகத் தந்த அத்தன்மையாய் லோகத்தைச் சிநேகித்தார்
என்றார் (யோவா. ங, யசு).

உ. எல்லா மனிதரும் இரட்சிப்பை அடையவேண்டு
மென்று பராபரன் விரும்புகிறார். அதினிமித்தமாகவே அவர்
எல்லா மனிதரையும் அழைக்கிறதுமல்லாமல்: வாருங்கள்,
எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது என்று அழைக்கப்பட்டவர்க
ளுக்குச் சொல்லத் தம்முடைய ஊழியக்காரரை ஒரு விசை
மாத்திரமல்ல, அநேக விசை அனுப்பினார். அதினாலே
அவர் ஒரு மனுஷனையாவது தம்முடைய நித்திய பாக்கியத்
துக்குப் புறம்பாக்க மனதில்லை என்பதைக் காண்பிக்கிறார்.
ஆதலால் பராபரன் எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட்டுச்
சத்தியத்தின் அறிவுக்கு வரச் சித்தமுள்ளவராயிருக்கிறார்
என்று பவுல் அப்போஸ்தலனும் (க தீமோ. உ, ங), யாதொ
ருவர் கெட்டுப்போக அல்ல, எல்லாருங் குணப்படுதலுக்கு
வரச் சித்தமாயிருக்கிறார் என்று பேதுரு அப்போஸ்தலனும்
சொல்லுகிறார்கள் (உ பேது. ங, கூ).

ங. பராபரனாகிய கர்த்தர் தம்முடைய கிருபையை
அசட்டை பண்ணுகிறவர்களைக் கடினமாய்த் தண்டிக்கிறார்.
நன்றியறியாத அந்த மனிதர் கலியாணத்துக்கு வர மனதாயி
ராமல், பராபரனுடைய ஊழியக்காரரை நிந்தித்தபோது,
இராசா கோபமாகி, தன்னுடைய சேனைகளை அனுப்பி, அந்
தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தைச் சுட்
டெரிப்பிச்சான். அவ்விதமாகவே கர்த்தர் இந்நாள்வரைக்
கும் தம்முடைய கிருபையை அசட்டைபண்ணுகிற எல்லா
ரையுந் தண்டிக்கிறார். ஏனென்றால் அவர் எரிவந்தமுள்ள
தேவனாயிருந்து; பிதாக்கள் செய்த அநியாயத்தைப் பிள்ளை
களிடத்தில் மூன்று நாலு தலைமுறை மட்டும் தண்டிக்கிறவரா
யிருக்கிறார் (௨ மோ. உய, ரு). அதற்கொத்தபடியே தாவீது
இராசா: பராபரன் நீதியுள்ள நியாயாதிபதியும், நாள்தோ
றும் சினந்திருக்கிற தேவனுமானவர். மனந்திரும்பாதிருந்
தால், தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார். அவர்
தம்முடைய வில்லை நாணேற்றி, அதை முஸ்திப்பாக்கி, அவ
னுக்குச் சாவுக்கினமான ஆயுதங்களை ஆயத்தம் பண்ணினார்.

தம்முடைய அம்புகளை அக்கினி அம்புகளாக்குவார் என்று சொல்லுகிறான் (சங். எ, யஉ-யச).

II. கலியாணத்துக்கு அழைக்கப்பட்ட அந்த நன்றியறியாத மனிதரிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. குணப்படாத மனிதர் கெட்டுப்போகிறது அவர்கள் சொந்த குற்றமாயிருக்கிறது. பரம இரா[illegible] எல்லா மனிதரையும் அழைக்கிறார். ஆனால் அநேகர் வர மனதாயிராமல், பராபரனுடைய கிருபையை அசட்டைபண்ணி, அவருடைய கோபத்தையும் நீதியுள்ள தண்டனையையும் நரகாக்கினையையுங் கூடத் தங்கள் மேல் குவித்துக்கொள்ளுகிறார்கள். இந்த மனிதருக்குக் கர்த்தர்: இஸ்ரவேலே, நீ உன் சகாயமாகிய நமக்கு விரோதமானது உன்னுடைய கேடு என்று சொல்லுகிறார் (ஓசெ. யங, கூ).

உ. மனுஷர் பொதுவாய்ப் பரம காரியத்தையும் மோட்சத்தையும் பார்க்கத் தங்கள் சரீரப்பிழைப்பு, கனம், ஐசுவரியம் முதலியவைகளை அதிகமாய்ச் சிநேகிக்கிறார்கள். அப்படியே இந்த மனிதரும் செய்தார்கள். ஆதலால் அவர்கள் பரம கலியாணத்துக்கு வர மனதாயிராமல், ஒருவன் தன் வயலுக்கும் வேறொருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். ஆம், அப்படியே மனிதர் இன்னம் பொதுவாகச் செய்து, இப்பிரபஞ்ச பாக்கியத்தைப் பார்க்க நித்திய மோட்சபாக்கியம் முக்கியமென்பதை நினையாதே போகிறார்கள். ஆனால் மனிதன் லோகத்தை எல்லாம் ஆதாயப்படுத்திக் கொண்டு, தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்தினால், அவனுக்கு லாபமென்ன என்று இயேசு இரட்சகர் சொல்லுகிறதை நாம் நன்றாய்க் கவனிக்கவேண்டும் (மத். யசு, உசு).

III. கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. மனிதரைக் கிறிஸ்துவண்டைக்கும் நித்திய பாக்கியத்தண்டைக்குங் கொண்டுவருகிறது எல்லா உண்மையுள்ள போதகரும் தேவ ஊழியரும் செய்யவேண்டிய விசேஷித்த வேலையாயிருக்கிறது. அதை இராசா இங்கே தம்முடைய ஊழியக்காரரிடத்திலே கேட்டார். ஏனென்றால் கலியாணத்துக்கு, அதாவது பர[illegible]வாளனாகிய இயேசு கிறிஸ்துவண்டைக்கு வரும்படியாக மனிதரை அழைக்கவேண்டுமென்கிறார். ஆம், அவர்கள்: வாருங்கள், எல்லாம் ஆயத்தமாயிருக்கிறதென்று கூப்பிடவேண்டியது.



உ. இந்த லோகத்திலே உண்மையுள்ள போதகருக்கு வரும் பலன் பொதுவாக இகழ்ச்சியுந் துன்பமுமாயிருக்கிறது. இராசாவின் இந்த ஊழியக்காரருக்கும் அப்படியே வந்தது. ஏனென்றால் அழைக்கப்பட்டவர்களில் சிலர் அவர்களைப் பிடித்து நிந்தித்துக் கொன்றுபோட்டார்கள். உண்மையுள்ள எல்லா தெய்வ ஊழியருக்கும் இ[illegible]க்கும் அப்படியே நடந்து வருகிறது. அதைக்குறித்து ஆண்டவர் யேசுநாதர்: ஊழியக்காரன் தன் எசமானிலும் பெரியவன் அல்ல. அவர்கள் என்னைத் துன்பப்படுத்[illegible]துண்டானால், உங்களையுந் துன்பப்படுத்துவார்களென்று சொல்லுகிறார் (யோவா. யரு, உய).

IV. கலியாண வஸ்திரமில்லாத மனிதனிடத்திலே நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. கிறிஸ்தமான சபையிலிருக்கிற யாவரும் உண்மையுள்ள கிறிஸ்தவர்களல்ல. ஆகையால் எல்லாரும் இரட்சிக்கப்படமாட்டார்கள். இந்தக் கலியாணத்திலே நல்லாரும் பொல்லாரும் இருந்தார்கள். கலியாண வஸ்திரந் தரித்திராத ஒருவனுங்கூட அங்கேயிருந்தான். அப்படியே கிறிஸ்தமான சபையில் தெய்வபத்தியுள்ளவர்களுந் தெய்வபத்தியற்றவர்களும், கோதும்பையுங் களைகளும் உண்டு. அதிலே அநேக மாயக்காரரும், துன்மார்க்கமாய் நடந்து தங்கள் வாயினாலே தங்களைக் கிறிஸ்தவர்களாக மேன்மைபாராட்டுகிற அநேக பேர்க்கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களைக் குறித்து இயேசுநாதர்: ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லுகிற எவனுமல்ல, பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்தத்தைச் செய்கிறவனே வான் ராச்சியத்துக்குள் பிரவேசிப்பான் என்று சொல்லுகிறார் (மத். எ, உக).

உ. குணப்படாதவர்களுக்கும் மாயக்காரர் யாவருக்கும் ப[illegible]பரன் பயங்கரமான தண்டனையை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். ஏனென்றால் கலியாண வஸ்திரந் தரித்திராத இந்த மனிதன் அழுகையும் பற்கடிப்பும் இருக்கும் எல்லாத்துக்கும் புறம்பான இருளிலே தள்ளப்பட்டான். நரகம் என்கிற இந்த இடத்துக்குக் குணப்படாத யாவரும் வரவேண்டும். கர்த்தர் அவர்களைப் பார்த்து: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டுப் பிசாசுக்கும் அதின் தூதருக்கும் ஆயத்தம் பண்ணப்பட்ட நித்திய அக்கினியிலே [illegible]ள் என்று சொல்லுவார் (மத். உரு, சக).

ங. நாம் இந்தப் பரம கலியாணத்திலே பங்குள்ளவர்களாயிருக்க வேண்டுமானால், என்ன செய்யவேண்டும் என்று இந்தக் கலியாணவஸ்திரம் இல்லாதவனிடத்தில் கற்றுக்

கொள்ளலாம். அவன் கலியாணவஸ்திரம் தரித்திராததினால் தள்ளப்பட்டான். ஆகையால் நாம் மெய்யாகவே அந்தப்பந்தியில் பங்கடைய வேண்டுமானால், இயேசு கிறிஸ்துவண்டைக்கு வருவதுமல்லாமல், கலியாண வஸ்திரந் தரித்தவர்களாக, அதாவது இயேசு கிறிஸ்துவை உண்மையாய் விசுவாசிக்கிறவர்களாக இருக்கவேண்டும். ஏனென்றால் பராபரனுடைய குமாரனை மேலே விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று இயேசு சொல்லுகிறார் (யோவா. ௩, ௩௬). இந்த வஸ்திரத்தை நாம் துணிகரமான பாவங்களினாலே அழுக்குப்படுத்தி அசுத்தம் பண்ணாமல், நீதியிலும் பரிசுத்தத்திலும் நடக்கவேண்டும். முடிவுபரியந்தம் ஆத்துமவஸ்திரத்தைத் துணிகர பாவங்களினாலே கெடுக்காமல், அதைக் காப்பாற்றி, இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலே உறுதியாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனாகிய பரம கலியாண வீட்டுக்குள் பிரவேசிப்பான்; அவன் தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் ஒருவனாயிருப்பான். அவர்களுக்கு இயேசுநாதர்: என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, லோகத்தோற்றமுதல் உங்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுவார் (மத். ௨௫, ௩௪). இதற்குப் பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியேக பராபரன் நம்மெல்லாருக்குங் கிருபை அளிப்பாராக.

திரியேக பராபரனாகிய அவருக்கு இப்போதும் எப்போதும் கனமும் புகழ்ச்சியும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக, ஆமென்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின உக-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ளஎரு.)

சுவி. யோவா. ௪, ௪௬—௫௪.

இராசாவின் மனுஷன் ஒருவன் இருந்தான்; அவன் குமாரன்
கப்பர்நகூமிலே வியாதியாயிருந்தான். 47 இயேசு யூதேயாவிலிருந்
து கலிலேயாவுக்கு வந்ததை இவன் கேட்டபோது, அவரண்டைக்
குப் போய், அவர் இறங்கிவந்து, தன் மகனைக் குணமாக்க அவரை
வேண்டிக்கொண்டான். ஏனெனில் சாகச் சமீபமாயிருந்தான்.
48 அப்போது இயேசு அவனுடனே: நீங்கள் அடையாளங்களையும்
அற்புதங்களையுங் காணாதிருந்தால், விசுவாசியீர்கள் என்றார். 49 இரா
சாவின் மனுஷன் அவருடனே: ஆண்டவரே, என் பிள்ளை சாகிற



தற்கு முன்னே இறங்கிவாரும் என்றான். 50 இயேசு அவனுடனே:
போ, உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். இயேசு தனக்
குச் சொன்ன வார்த்தையை அந்த மனுஷன் நம்பிப் போனான்.
51 ஆனால் அவன் இறங்கிப்போகையில், அவனுடைய ஊழியக்கா
ரர் அவனுக்கு எதிர்கொண்டுவந்து: உம்முடைய குமாரன் பிழைத்
திருக்கிறானென்று அறிவித்தார்கள். 52 அப்பொழுது எந்த மணிவே
ளையிலே அவனுக்குக் குணமாயிற்று என்று அவர்களிடத்திலே வி
சாரித்தான். அவர்கள் அவனுடனே: நேற்று ஏழாம் மணிவே
ளையில் சுரம் அவனை விட்டது என்றார்கள். 53 அப்போது: உன் குமா
ரன் பிழைத்திருக்கிறானென்கிறதை இயேசு தன்னுடனே சொன்ன
மணிவேளை அதுவே என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன்
வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள். 54 இந்த இரண்டாம் அடை
யாளத்தை இயேசு மறுபடியும் யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு
வந்தபோது செய்தார்.

1. இந்த நாளின் சுவிசேஷவாக்கியம் எதைப்பற்றியது.

இயேசுநாதர் குணமாக்கின ஒரு இராசாவின் மனுஷனுடைய குமாரனைப்பற்றியது.

2. அந்த இராசாவின் மனிதன் ஆர்.

அவன் ஏரோதே இராசாவின் அரண்மனை உத்தியோகஸ்தரில் ஒருவன். அதினிமித்தம் அவன் இராசாவின் மனுஷன் என்னப்படுகிறான்.

3. அவன் எங்கே வாசம் பண்ணினான்.

இயேசுநாதர் அடிக்கடி வந்து தங்கின கப்பர்நகூமிலே.

4. அந்த இராசாவின் மனுஷனுக்கு இருந்த குறை என்ன.

அவனுடைய மகன் வியாதியாயிருந்ததினாலே அவன் வீட்டில் அதிகத் துக்கம் இருந்தது.

5. அவன் மகனுக்கிருந்த வியாதி என்ன.

அவன் கொடூரமான காய்ச்சலினால் வருத்தப்பட்டான். அதினால் அவன் செத்துப்போவானென்று அவன் தகப்பன் நினைத்தான்.

6. அவன் தன் மகனுக்காக ஆரிடத்தில் ஒத்தாசை தேடினான்.

நமது இரட்சகராகிய இயேசுநாதரிடத்தில். ஏனென்றால் அவரைக் குறித்து அவன் அநேகமாய்க் கேட்டிருந்தான்.

7. அந்தச் சமயத்தில் இயேசுநாதர் கப்பர்நகூமிலிருந்தாரா.

இல்லை. அவர் முன்னே யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குத் திரும்பி, அப்போது கானாவூரில் இருந்தார்.

8. இயேசுநாதர் வியாதியாயிருந்த தன் மகனைக் குணமாக்கும்படியாக இராசாவின் மனிதன் என்ன செய்தான்.

அவன் இயேசுநாதர் யூதேயாவிலிருந்து திரும்பிவந்ததைக் கேட்டு, மரணப்படுக்கையிலிருக்கிற தன் மகனைக் குணமாக்க வேண்டிக்கொண்டான்.

9. இயேசுநாதர் அவன் மகனை உடனே சுகமாக்கினாரா.

இல்லை. அவர் துவக்கத்திலே இராசாவின் மனிதனோடு கடினமாய்ப் பேசி: நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையுங் காணாதிருந்தால், விசுவாசியீர்கள் என்றார்.

10. அவர் அவனோடு ஏன் அவ்வளவு கடினமாய்ப் பேசினார்.

௧. அவனுடைய அவிச்வாசத்தின் நிமித்தம். இந்த இராசாவின் மனுஷன் இயேசுநாதர் வாசமாயிருந்த கப்பர்நகூமிலே அவரைக்குறித்து அதிகமாய்க் கேட்டிருப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் இதுவரைக்கும் அவன் கிறிஸ்துவை விசுவாசிக்கவுமில்லை, அவரைப்பற்றிக் கவலைப்பட்டதுமில்லை. இப்போதோ இந்தத் துன்பம் [illegible]மாய்க் கிறிஸ்துவண்டைக்கு வந்து, தன் மகனிடத்தில் அவருடைய அடையாளங்களையும் அற்புதங்களையும் காண விரும்பினான். ஆதலால் இயேசுநாதர்: நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையுங் காணாதிருந்தால் விசுவாசியீர்கள் என்று சொன்னார் (௪௮).

௨. அவன் தன் செபத்திலே தன் மகனை இயேசுநாதருக்கு முற்றிலும் ஒப்புக்கொடுக்காமல், அவர் எவ்விதமாய்த் தன் மகனைச் சொஸ்தமாக்க வேண்டுமென்று, தானே அவருக்கு ஒரு பிரமாணம் காண்பிக்கிறான். கிறிஸ்துநாதர் தூரமாயிருக்கையிலும் தன் மகனைச் சொஸ்தமாக்கக் கூடுமென்று அவன் விசுவாசிக்கவில்லை. ஆதலால் கர்த்தர் இறங்கி வந்து தன் மகனைச் சொஸ்தமாக்கவேண்டுமென்று கேட்கிறான்.

11. ஆனால் இயேசுநாதருடைய இந்தக் கடினமான வார்த்தையினாலே இராசாவின் மனுஷன் பயந்து பின்னிடையவில்லையா.

இல்லை. அவன் செபத்திலே உறுதியாயிருந்து, இன்னொரு விசை கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என்பிள்ளை சாகிறதற்குமுன்னே இறங்கிவாரும் என்று கூப்பிட்டான்.

12. அப்போது இயேசுநாதர் அவன் செபத்தைக் கேட்டாரா.



ஆம், அவர் அதைக் கேட்டு: போ, உன் குமாரன் பிழைத்திருக்கிறான், அதாவது சுகமாயிருக்கிறான் என்று சொன்னார்.

13. இராசாவின் மனிதன் இயேசுநாதருடைய இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தானா.

ஆம், இயேசு தனக்குச் சொன்ன வார்த்தையை நம்பிப் போனானென்று இங்கே எழுதியிருக்கிறது.

14. இயேசுநாதருடைய வார்த்தையின்படி அவன் மகன் அப்போதே குணமானானா.

ஆம், இராசாவின் மனுஷன் வீட்டுக்கு இறங்கிப் போகையில் அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வந்து: உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறானென்று அறிவித்தார்கள் (௫௧).

15. எந்த மணிவேளையிலே அவனுக்குக் குணமாச்சுது.

உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று கிறிஸ்துநாதர் அவன் தகப்பனுக்குச் சொன்ன அந்த மணிவேளையிலே தான் (௫௩).

16. அது இராசாவின் மனுஷனுக்கு யாராலே தெரிவிக்கப்பட்டது.

அவன் இறங்கிப்போகையில் அவனுக்கு எதிர்கொண்டு வந்து: உம்முடைய மகன் சுகமானான் என்கிற சந்தோஷ செய்தியை அறிவித்த அவன் ஊழியக்காரராலே தான். அப்போது எந்த மணிவேளையிலே அவனுக்குக் குணமாயிற்றென்று அவர்களிடத்தில் விசாரித்தான். அவர்கள் அவனுடனே: நேற்று ஏழாம் மணிவேளையில் சுரம் அவனை விட்டது என்றார்கள். அப்போது: உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று இயேசு தன்னுடனே சொன்ன மணிவேளை அதுவேயென்கிறதை தகப்பன் அறிந்தான் (௫௨. ௫௩).

17. அதினால் இராசாவின் மனிதனுக்கும் அவன் வீட்டாருக்கும் வந்த பிரயோசனம் என்ன.

அவனும் அவனுடைய வீட்டாரும் விசுவாசித்தார்கள், அதாவது முன்னே அவிசுவாசிகளாயிருந்த தகப்பனும் மகனும் வீட்டிலிருந்த மற்ற யாவரும் இப்போது இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தார்கள்.

18. இயேசுநாதர் இதற்குமுன் இந்த ஊரிலே ஒரு அற்புதம் செய்தாரா.

ஆம், இந்த இரண்டாம் அடையாளத்தை இயேசு மறுபடியும் யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தபோது செய்தார் என்று நம்முடைய வாக்கியம் சொல்லுகிறது (௫௪).

19. அவர் அங்கே செய்த முதலாம் அடையாளம்
என்ன.
கானாவூரில் நடந்த கலியாணத்தில் தண்ணீரை இரச
மாக்கின அடையாளந் தான்.

பாடிப்பினை.

20. இந்தச் சுவிசேஷ வாக்கியத்திலல் நாம் என்னத்
தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.
I. இராசாவின் மனுஷனிடத்திலே நாம் கற்றுக்
கொள்ளுகிறதாவது:
க. [illegible] நிலைமையிலிருக்கிற மனிதரும் துன்பத்
துக்கும் சிறுமைக்கும் நீங்கினவர்களல்ல. இந்த இராசாவின்
நுக்கும் சிறுமைக்கும் நீங்கினவர்கள். எம் [illegible] இராச
[illegible] கள் கப்பர்நகூமிலே பெரியமனிதனும், சிறுமையற்றவ
அரண்மனை உத்தியோகஸ்தனுமாயிருந்தும், [illegible] பிள்ளையாயி
ருயிருக்கவில்லை. ஒருவேளை அவனுக்கு ஒன்றான பிள்ளையாயி
ருந்த அவன் மகனுக்கு வந்த மரணத்துக்கேதுவான வியாதி
யினால் அதிகத் துக்கம் உண்டாயிருக்கும். எல்லா மனுஷரும்
இருக்கிற இச்சீவன் மகா பரதாபந் தான். தாய் வயிற்றிலி
ருந்து பிறந்த நாள் துவக்கி நம்மெல்லாருடைய தாயாகிய பூமி
யிலே அடக்கப்படுமட்டாகத் தானே. ஏனென்றால் கவலைகள்
பயம் நம்பிக்கை கடையாந்தரம் மரணமுமே இச்சீவனுக்க
டுத்த காரியங்களாம். மகிமையாகப் பிழைத்துக்கொண்டு வரு
கிற பெரியோர்களுக்கு மாத்திரமல்ல, சிறியோர்களுக்கு முத
லாய் இதுகளெல்லாம் சம்பவிக்கிறதும் உண்டு என்று சீராக்
சொல்லுகிறான் (சீராக் சய, க—ச).
உ. பிள்ளைகள் வருத்தம் அநுபவிக்கிறது பெற்
றோருக்கு விசேஷித்த மனநோவாயிருக்கிறது. இந்தத் தகப்
பன் வியாதியாயிருந்த தன் மகனிமித்தம் சஞ்சலப்பட்டு,
அநேக மைல் தூரத்திலிருந்த இயேசு இரட்சகரண்டை வந்
து, அவனுக்காக ஒத்தாசை தேடினான். பிள்ளைகளைப்பற்றி
அப்படிப்பட்ட உருக்கமான இருதயம் எல்லாத் தாய் தகப்
பன்மாருக்கும் உண்டு. தகப்பன் பிள்ளைகளுக்கு இரங்குகி
றான் என்று வேதம் சொல்லுகிறது (சங். ளங, யங). எசா
யாவைக் கொண்டு பராபரன்: ஒரு ஸ்திரி தன் கர்ப்பத்தின்
பிள்ளைக்கு இரங்காதபடிக்கு தன் பாலகனை மறப்பாளோ
என்று சொல்லுகிறார் (எசா. சகூ, யரு).
ங. துன்பம் கர்த்தராகிய பராபரனைத் தேட நம்மை
ஏவி எழுப்புகிறது. இந்த இராசாவின் மனுஷன் துன்பமற்று
வாழ்ந்திருக்கும் போது, கிறிஸ்துவைப்பற்றிய கவலை அவ
னுக்கு இல்லை. அவன் இவ்வூரிலிருந்தும் அவரண்டைக்கு



வந்தவனல்ல. இப்போதோ துன்பம் வந்தபடியினாலும்,
அவன் மகன் சாகச் சமீபமாயிருந்தபடியினாலும், அநேக
மைல் தூரத்திலிருந்து இயேசு இரட்சகரண்டைக்குப்போய்,
அவருடைய ஒத்தாசையைத் தேடினான். அப்படியே மனிதர்
பொதுவாய்ச் செய்கிறார்கள். ஆகையால் எசாயா தீர்க்கத
ரிசி: கர்த்தாவே, நெருக்கத்தில் உம்மைத் தேடுகிறார்கள். உம்
முடைய தண்டனை அவர்கள் மேல் இருக்கையில், அந்தரங்க
வேண்டுதலை ஊற்றுகிறார்கள் என்று சொல்லுகிறான் (எசா.
உசு, யசு).
ச. நாம் கேட்கப்படும்படிக்கு எப்படிச் செபம் பண்
ணவேண்டும்.
a. மெய்விசுவாசத்தோடு செபம் பண்ணவேண்டும்.
கிறிஸ்துநாதர் [illegible] இராசாவின் மனுஷனோடு ஏன் அவ்
வளவு கடினமாய்ப்பேசுகிறார் என்றால், அவன் சரியாய் விசுவா
சிக்காமல், கர்த்தர் ஒத்தாசை செய்யும்படிக்கு அவர் தன்
வீட்டுக்கு இறங்கிவரவேண்டியது அவசரம் என்று நினைத்த
படியால் தான். ஆனால் நம்முடைய செபம் கேட்கப்படவேண்
டுமானால், கர்த்தர் நமக்கு ஒத்தாசை செய்ய வல்லவர் என்
றும், சித்தமாயிருக்கிறாரென்றும் விசுவாசிக்கவேண்டும்.
ஏனென்றால்: நீங்கள் செபத்தில் எதைக் கேட்டாலும், விசு
வாசித்தீர்களாகில் யாவையும் பெறுவீர்கள் என்று கர்த்தர்
சொல்லுகிறார் (மத். உக, உஉ).
b. கிறிஸ்தமான மனத்தாழ்மையோடு செபம் பண்
ணவேண்டும். இந்த இராசாவின் மனுஷன் கர்த்தர் எப்படி,
எங்கே, எப்போது, தன் மகனுக்கு ஒத்தாசை செய்யவேண்
டுமென்று பிரமாணம் வைக்கிறான். இயேசுநாதர் தன் வீட்
டுக்கு வரவேண்டுமென்றும், அவர் சீக்கிரமாய்த் தன் மகன்
சாகிறதற்குமுன்னே வரவேண்டுமென்றும் சொல்லுகிறான்.
அவன் அப்படிப்பட்ட பிரமாணத்தை நியமிக்கிறபடியால்,
கர்த்தர் அவனோடு கடினமாய்ப் பேசுகிறார். ஆதலால் துன்ப
காலத்திலே நமக்கு ஒத்தாசை வரவேண்டுமானால், கர்த்தரா
கிய பராபரன் எந்த விதத்திலே, எந்த இடத்திலே நமக்கு ஒத்
தாசைசெய்யவேண்டுமென்று குறிக்காமல், அதை அவருக்கு
ஒப்புக்கொடுத்து: உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக
என்று சொல்லவேண்டும் (மத். சு, ய). நாம் அவருடைய
சித்தத்தின்படியே ஒரு காரியங்கேட்டால், நமக்குச் செவி
கொடுக்கிறாரென்கிறதே நாம் அவரை நோக்கிப் பெற்றிருக்
கிற தைரியம் (க யோ. ரு, யச).
c. கிறிஸ்தமான பொறுமையோடு செபம்பண்ண
வேண்டும். இந்த இராசாவின் மனுஷன் உடனே கேட்கப்

பட்டாதே போனாலும், அவன் துவக்கத்திலே கடினமான உத்தரவு பெற்றாலும், அவன் தன் செபத்திலே உறுதியாய்த் தரித்திருந்தான். அப்படியே நாமும் செய்ய வேண்டும். ஏனென்றால் கர்த்தர் தாமதித்தாலும், நாம் அவருடைய ஒத்தாசைக்குப் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். அவர் வரவே வருவார், அவர் பிந்தியிருப்பதில்லை (ஆபகூக் ௨, ௩).

௫. விசுவாசிகள் சரியாய் நடந்தால், அவர்கள் விசுவாசம் வளர்ந்து பெலப்படும். அந்த இராசாவின் மனுஷனுக்கும் பெலவீன விசுவாசந்தான் இருந்தது. கிறிஸ்துநாதர் தூரத்திலிருக்கிறதினால் தனக்கு ஒத்தாசை செய்ய முடியாதென்று நினைத்தான். ஆதலால் கர்த்தர்: நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையுங் காணாதிருந்தால் விசுவாசியீர்கள் என்று கடிந்துகொண்டார். ஆனாலும் அப்பால் அவனே விசுவாசம் பெலன்கொண்டு: போ, உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று கர்த்தர் தனக்குச் சொன்ன வார்த்தையை உறுதியாய் நம்பினான். அவன் மகனும் சுகமானான். அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள்.

௬. நாம் நம்முடைய பிறத்தியானைக் குணப்படுத்தப் பிரயாசப்பட வேண்டும். இந்த இராசாவின் மனுஷன் இயேசுவின்பேரில் விசுவாசம் அடைந்தபிற்பாடு தன் வீட்டாருடைய குணப்படுதலுக்குக் காரணமாயிருந்தான் என்பது நிச்சயம். ஏனென்றால் அவனும் அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே நாமும் வழிதப்பிப்போகிற பிறத்தியானை விசுவாசத்தின் வழிக்குக் கொண்டுவரப் பிரயாசப்பட வேண்டும். ஏனென்றால் நீ மனந்திரும்பினபின் உன் சகோதரரைத் திடப்படுத்து என்று பேதுருவுக்குக் கிறிஸ்துநாதர் சொன்ன வார்த்தைகள் நம்மெல்லாருக்கும் அடுத்ததாயிருக்கிறது. விசேஷமாய் வீட்டெசமான்கள் அதற்காகப் பிரயாசப்பட வேண்டும். அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் வேலைக்காரரையும் அந்த இராசாவின் மனிதன் செய்ததுபோல் மெய்விசுவாசத்துக்குந் தெய்வபத்திக்குங் கொண்டுவந்து வளர்க்க வேண்டும். பாதகருக்கு உம்முடைய வழிகளை உபதேசிப்பேன், பாவிகள் உம்மண்டைக்குத் திரும்புவார்கள் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான் (சங். ௫௧, ௰௫).

II. கர்த்தராகிய கிறிஸ்துவினிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. அவர் சகல வியாதிகளிலும் மெய்யான வயித்தியரும், சகல துன்பங்களிலும் உத்தம இரட்சகருமாயிருக்கிறார். இராசாவின் மனிதன் வியாதியாயிருந்த தன் மகனுக்காக



இயேசுவினிடத்திலல்லாமல் வேறொரிடத்திலும் ஒத்தாசையைக் கண்டதில்லை அவர் ஒரே வார்த்தையினாலே அவனைச் சொஸ்தப்படுத்தி, தாம் பூமியின் நடுவிலே இரட்சிப்புகளைச் செய்கிற பராபரனாயிருக்கிறோம் என்பதைக் காண்பிக்கிறார் (சங். ௭௪, ௰௨).

௨. பராபரனாகிய கர்த்தர் விசுவாசிகளுடைய செபங்களைச் சிலவேளை உடனே கேட்கிறதில்லை. இந்த இராசாவின் மனுஷன் தன் மகனுடைய சுகத்துக்காக வேண்டினான். ஆகிலும் அவன் செபம் உடனே கேட்கப்பட்டதில்லை. அதற்குப் பதிலாகத் துவக்கத்திலே கடினமான உத்தரவு அவனுக்குச் சொல்லப்பட்டது. அப்படியே பராபரன் அநேகவிசை தம்முடையவர்களுக்குச் செய்கிறார். ஆகலால் இவர்கள் தங்கள் இக்கட்டு[illegible]னத்திலும் அடிக்கடி முறையிட்டு: கர்த்தாவே, ஏன் தூரத்திலே நிற்கிறீர், நெருக்கப்படுகிற காலங்களில் ஏன் உம்மை மறைக்கிறீர் என்று சொல்லுகிறார்கள் (சங். ௰, ௧).

௩. பராபரனாகிய கர்த்தர் தம்முடைய விசுவாசிகளுக்குச் சிலவிசை அவர்கள் கேட்டதைக் கொடாமலிருந்தும், அதைப் பார்க்க உத்தம நன்மைகளைக் கொடுக்கிறார். இந்த இராசாவின் மனுஷன் இயேசுநாதரைத் தன் வீட்டுக்கு வரவேண்டினான். அவர் போகாதிருந்தும் அதிக நன்மை செய்தார். எப்படியெனில், அவர் அவனுடைய ஆத்துமத்தில் வந்து, அவனும் அவன் வீட்டாரனைவரும் தம்மை விசுவாசிக்கும்படிக்கு அவனை மெய்விசுவாசத்துக்குத் திருப்பினார். அப்படியே கர்த்தர் தம்முடையவர்களுக்குச் செய்கிறார். ஆகையால் அவர் அவர்களுக்கு அநேகவிசை: நீங்கள் கேட்கிறது ஏது என்று அறியீர்கள் என்று சொல்லி (மத். ௨௰, ௨௨), அவர்கள் கேட்டதிலும் அதிக நன்மைகளை, அதாவது தம்முடைய ஆறுதலையுங் கிருபையையும் கொடுக்கிறார். அவர்கள் அதை அடைந்து, ஆசாப்போடு: பின்னை ஆர் எனக்குப் பரமண்டலங்களிலிருக்கிறார். உம்மோடே நான் இருக்கையில் பூமியில் எனக்கு வேறே விருப்பமில்லை. என் மாமிசமும் என் இருதயமும் மாளும்போது, பராபரன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார் என்று சொல்லக் கூடும் (சங். ௭௩, ௨௫. ௨௬).

III. இராசாவின் மனுஷனுடைய வேலைக்காரரிடத்தில் எல்லா வேலைக்காரரும் வேலைக்காரிகளும் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. அவர்கள் தங்கள் எசமான்களுக்கு உண்மையுங் கீழ்ப்படிதலுமாய் ஊழியஞ் செய்யவேண்டும். இராசாவின்

மனுஷனாகிய இவர்கள் எசமான் வீட்டிலில்லாத காலத்திலே யும் தங்கள் எசமான் மகனை வாதித்த சுரம் எந்தமணிவேளை யில் விட்டது என்று சொல்லக் கூடும்படியான அவ்வளவு சாக்கிரதையாய் இந்த ஊழியக்காரர் காத்திருந்தார்கள். அவன் சொஸ்தமானான் என்கிற செய்தியையுந் தங்கள் எசமா னுக்கு அறிவிக்க அவர்கள் சந்தோஷமாய் அவனுக்கு எதிர் கொண்டு வந்தார்கள். அப்படியே எல்லா வேலைக்காரரும தங்கள் எசமான்களுக்குச் செய்து, அப்போஸ்தலனுடைய புத்திமதியை நினைக்கவேண்டும். அதாவது: வேலைக்காரரே, மாம்சத்தின்படி எசமான்களாயிருக்கிறவர்களுக்கு நீங்கள் எல்லாத்திலுங் கீழ்ப்படிந்து, மனுஷருக்கு இதமியக்காரர் போல் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், இருதயங் கபடில் லாமையாய்ப் பராபரனுக்குப் பயந்து ஊழியஞ் செய்யுங்கள் (கொலோ. ௩, ௨௨).

௨. எசமான்களும் எசமானிச்சிகளும் தங்கள் வே லைக்காரரை மெய்த் தேவபத்திக்கு ஏவி எழுப்பும்போது, இவர்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து பின்செல்லவேண்டும், இந்த இராசாவின் மனுஷன் கிறிஸ்துவை விசுவாசித்தபோ து, அவன் வீட்டாரனைவரும் வேலைக்காரருங் கூட விசுவா சித்தார்கள். அப்படியே எசமான்கள்: நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல், நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்க ளாகுங்கள் என்று பவுல் அப்போஸ்தலன் சொன்னபடியே (௧ கொரி. ௰௧, ௧) தங்கள் வேலைக்காரருக்குப் புத்திசொல் லும்போது, இவர்கள் அவர்களைப் பின்செல்ல வேண்டும்.

IV. இராசாவின் மனுஷனுடைய குமாரனிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. நாம் பராபரனுடைய எல்லா உபகாரங்களுக்காக வும் அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்த வேண்டும. ஆனால் மனிதர் வியாதியாயிருந்து நல்ல சுகமடைந்தபின் அவர்கள் பொதுவாக முன்னிலும் அதிகக் கெட்டவர்களாகிறார்கள்; இராசமனிதனின் இந்த மகனோ அப்படிச்செய்யாமல், பரா பரனை ஸ்தோத்திரித்து, தன் பரம பிதாவின்பேரில் விசுவா சித்தான். அவ்விதமாக மனிதர் யாவரும் பராபரனாலே ஒத் தாசையையும் விசேஷமாகச் சரீரசுகத்தையும் அடைகிற போது செய்யவேண்டும். இவர்களுக்கு இயேசுநாதர்: இதோ, குணமானாய், அதிகக் கேடானதொன்றும் வராதபடிக்கு இனி பாவஞ் செய்யாதே என்று சொல்லுகிறார் (யோவா. ரு, ௰௪).

௨. இராச மனிதனின் மகனிடத்தில் விசேஷமாய் எல்லாப் பிள்ளைகளும், தங்கள் தாய்தகப்பன்மாருக்குச் சகல



காரியங்களிலும் கீழ்ப்படிந்து, அவர்களைப் பின்செல்ல வேண்டுமென்று கற்றுக்கொள்ளுகிறார்கள். இந்த இராசா வின் மனுஷன் கிறிஸ்துவை விசுவாசித்தபோது, அவன் மக னும் அந்த விசுவாசத்தை ஏற்றுக்கொண்டான். அப்படியே எல்லாத் தெய்வபத்தியுள்ள பிள்ளைகளும் செய்ய வேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தெய்வபத்தியிலுங் கர்த்தரு டைய புத்தியிலும் வளர்க்க வேண்டும். பிள்ளைகளோ தங் கள் தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படிய வேண்டும். உனக்கு நன்றாயிருக்கிறதற்கும் உன் நாட்கள் பூமியிலே நீடித்திருக் கிறதற்கும் உன் தகப்பனையுந் தாயையுங் கனம்பண்ணு. இது வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது (எபே. ௬, ௨. ௩).

21. இந்த நற்குணங்களை நம்முடைய இருதயத்திலே உண்டுபண்ணக் கூடியவர் ஆர்.

பரிசுத்த ஆவியாகிய பராபரன் தான். ஆதலால் நாம் எப்போதும் பராபரனை நோக்கி, அவர் நமக்குத் தமது பரி சுத்த ஆவியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு: உமக் குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் படிப்பியும். எனெ னில் தேவரீர் என் பராபரன்; உம்முடைய நல்ல ஆவி என் னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக என்று சொல் வோமாக (சங். ௱௪௩, ௰).

பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய இந்த நம்முடைய பராபரனுக்கு என்றென்றைக்குங் கனமும் புகழ்ச்சியும் உண் டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௨௨-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௨௱எ. ௨௨௨.)

### சுவி. மத். ௰அ, ௨௩—௩ரு.

ஆனபடியால் வானராச்சியம் தன் பணிவிடைக்காரரோடு கணக் குப் பார்க்க வேண்டுமென்றிருந்த இராசாவாகிய மனுஷனுக்கு ஒப் பாயிருக்கிறது. 24 அவன் கணக்குப் பார்க்கத் துவக்கினபோது, பதினாயிரந் தாலந்து கடன்பட்ட ஒருவன் அவனுக்கு முன்பா கக் கொண்டுவந்து விடப்பட்டான். 25 ஆனால் கொடுத்துத் தீர்க்க அவனுக்கு இல்லாமையால், அவன் எசமான் அவனையும் அவன் பெண்சாதி பிள்ளைகளையும் அவனுக்கு உண்டானதெல்லாத்தையும் விற்று, கடனைத் தீர்க்கக் கட்டளையிட்டான். 26 ஆகையால் அந்தப் பணிவிடைக்காரன் தாழ விழுந்து: ஆண்டவனே, எனக்காக மனம் பொறும்; உமக்கு எல்லாத்தையுங் கொடுத்துத் தீர்ப்பேனென்று

அவனைப் பணிந்துகொண்டான். 27 எசமானோவென்றால் அந்தப் பணிவிடைக்காரன்பேரில் மனதுருகி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். 28 ஆனால் அந்தப் பணிவிடைக்காரன் புறப்பட்டு, தன் பணிவிடைத் தோழரில் தனக்கு நூறு வெள்ளிக்காசு கடன்பட்டிருந்த ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்டகடனை எனக்குக் [illegible]டுத்துத்தீர் என்றான். 29 ஆகையால் அவனுடைய பணிவிடைத் தோழன் அவன் காலிலே விழுந்து: எனக்காக மனம் பொறு; உனக்கு எல்லாத்தையுங் கொடுத்துத் தீர்ப்பேனென்று அவனை வேண்டிக்கொண்டான். 30 ஆனால் அவன் மாட்டேனென்று போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைச் சிறைச்சாலையிலே போடுவித்தான். 31 அவன் பணிவிடைத் தோழரோவென்றால் சம்பவித்ததைக் கண்டு, மிகுந்த துக்கம் அடைந்து, வந்து சம்பவித்ததெல்லாத்தையும் எசமானுக்கு அ[illegible]பண்ணினார்கள். 32 அப்போது அவன் எசமான் அவனை அழைப்பித்து, அவனுக்குச் சொன்னதாவது: பொல்லாத பணிவிடைக்காரா, நீ என்னை வேண்டிக்கொண்டதினால் அந்தக் கடன் யாவையும் உனக்கு மன்னித்துவிட்டேனே. 33 நான் உனக்கு இரங்கினதுபோல் நீயும் உன் பணிவிடைத்தோழனுக்கு இரங்கவேண்டியதாய் இருந்ததில்லையோ என்று, 34 அவனுடைய எசமான் கோபமடைந்து, அவன் தனக்குப் பட்ட கடனையெல்லாங் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனை உபாதிக்கிறவர்களுக்கு ஒப்புக்கொடுத்தான். 35 நீங்கள் உங்கள் மனப்பூர்வமாய் அவனவன் தன் சகோதரனுக்கு அவன் தப்பிதங்களை மன்னியாதே போனால், இந்தப் பிரகாரமாக என் பரம பிதா உங்களுக்குச் செய்வார் என்றார்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியம் எதைப் பற்றியது.

தன்னுடைய பணிவிடைக்காரரோடு கணக்குப்பார்க்க வேண்டுமென்றிருந்த இராசாவைப் பற்றிய உவமை. ஏனென்றால் இந்த வாக்கியத்திலே இரட்சகர்: வான இராச்சியந் தன் பணிவிடைக்காரரோடு கணக்குப் பார்க்க வேண்டுமென்றிருந்த இராசாவாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது என்று சொல்லுகிறார் (உ௩).

2. வான இராச்சியமாவதென்ன.

அது திருச்சபைதான். ஞான இராச்சியமும் பரம இராச்சியமுமாகிய இந்தத் திருச்சபையின் இராச்சியத்திலே இயேசுநாதர் இராசாவாக ஆளுகை செய்கிறார்.

3. அவருடைய ஊழியக்காரர் யார்.

எல்லா மனிதருந்தான். எல்லா மனிதரும் பராபரனைத் தங்கள் இராசாவாக அறிக்கையிட்டு, தாவீதோடே சொல்ல வேண்டியதாவது: ஆ, கர்த்தாவே, நான் உம்முடைய ஊழியக்காரன், நான் உம்முடைய அடியாளின் பிள்ளையாகிய உம்முடைய ஊழியக்காரன் (சங். ௱௰௬, ௰௬).



4. இராசா தமது ஊழியக்காரரை எப்போது கணக்குக் கேட்கிறார்.

௧. இச்சீவனிலே. பராபரனாகிய கர்த்தர் தமது பரிசுத்த வசனத்தினாலே மனிதருடைய பாவங்களை அவர்களுடைய [illegible]ன்களுக்கு முன்பாக எடுத்துக்காட்டி, அல்லது அவர்களைச் சிலுவையினாலுந் துன்பத்தினாலுந் தூண்டிவிட்டு, அவர்கள் பாவங்களை அவர்களுக்கு நினைப்பூட்டும்போது, அவர்களிடத்தில் கணக்குக் கேட்கிறார்.

௨. மரண வேளையிலே. கர்த்தர் எல்லா மனிதரிடத்திலுங் கணக்குக் கேட்டு: உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி, ஏனெனில் இனி நீ உக்கிராணக் காரனாயிருக்கக் கூடாது என்கிறார் (லூக். ௧௬, ௨).

௩. கடைசிநாளிலே. இயேசுநாதர் சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்க வரும்போது, ஒவ்வொரு மனிதனுந் தன் சீவியத்துக்காகக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். அதைப்பற்றி அப்போஸ்தலனாகிய பவுல்: அவனவன் தன் சரீரத்தினால் நடப்பித்த நன்மைக்காகிலுந் தீமைக்காகிலுந் தக்கதுகளை அடையும்படிக்கு, நாம் எல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்பட வேண்டியது என்று சொல்லுகிறான் (உ கொரி. ரு, ௰).

5. எந்தக் கணக்கைப் பற்றி நமது இரட்சகர் இவ்விடத்திலே பேசுகிறார்.

முதலாவதாகச் சொல்லியிருக்கிற கணக்கைப் பற்றித்தான்: அதாவது, பராபரன் இச்சீவனிலே மனிதனுக்கு அவன் பாவங்களை நினைப்பூட்டி கணக்குக் கேட்கிறது. ஏனென்றால் கர்த்தர் இவ்வாக்கியத்தில் மனிதனுடைய கடன்களை, அதாவது பாவங்களை மன்னிக்கக் கூடிய இக்காலத்தின் கணக்கைக் குறித்துப் பேசுகிறார். ஏனென்றால் பாவங்கள் மரணவேளையிலும் அதற்குப் பிற்பாடும் அல்ல, இச்சீவனில் மாத்திரம் மன்னிக்கப்படும்.

6. இந்த விசாரணையில் மனிதன் எப்படிப்பட்டவனாக நிற்கிறான்.

கர்த்தருக்குப் பெரிய கடன்காரனாக நிற்கிறான். அவன் கணக்குப் பார்க்கத் துவக்கினபோது, பதினாயிரந் தாலந்து கடன்பட்ட ஒருவன் அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்துவிடப்பட்டான் என்று நமது வாக்கியத்திலே சொல்லப்பட்டிருக்கிறது (உ௪).

7. அந்தக் கடன் என்ன.

மனிதருடைய பாவங்கள்தான். கர்த்தருடைய செபத்தில் பாவங்களைக் கடன் என்று சொல்லி: எங்கள் கடன்கார

ருக்கு நாங்கள் மன்னித்து விடுகிறதுபோல், நீரும் எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னித்து விடும் என்று கேட்கிறோம் (மத். ௬, ௰௨).

8. மனிதருடைய பாவங்கள் ஏன் பதினாயிரந் தாலந்துக்கொப்பாயிருக்கிறது.

௧. அந்தப் பாவங்கள் பெரிய தொகையாயிருக்கிறதினால். ஏனென்றால் நம்முடைய பாவங்கள் கடற்கரை மணலைப்பார்க்க அதிகமாயிருக்கிறது.

௨. மனிதன் தன் பாவங்களினாலே கர்த்தருடைய பத்துகற்பனைகளை மீறினதினால். மனிதன் ஒவ்வொரு கற்பனைக்கும் விரோதமாகப் பத்துவிசைக்கதிகமாய் அதை மீறி நடந்து பாவஞ்செய்திருக்கிறபடியால் பதினாயிரந் தாலந்துக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது.

9. அந்த ஊழியக்காரன் அந்தக் கடனைத் தீர்க்கக் கூடுமா.

கூடாது.

10. அப்போது இராசா அவனுக்கு என்ன செய்தார்.

அவன் கொடுத்துத் தீர்க்க அவனுக்கு இல்லாமையால், அவன் எசமான் அவனையும் அவன் பெண்சாதி பிள்ளைகளையும் அவனுக்குண்டானதெல்லாத்தையும் விற்று, கடனைத் தீர்க்கக் கட்டளையிட்டான் (௨௫).

11. அதினால் நமது இரட்சகர் குறித்துக் காட்டுகிறதென்ன.

மனிதர் தங்களுடைய கடனைத் தீர்க்கக் கூடாதென்றும், அவர்கள் தங்கள் பாவங்களின் நிமித்தம் என்றென்றைக்குங் கெட்டுப்போகிறது நியாயம் என்றுங் காட்டுகிறார்.

12. இந்த இராசா அவர்கள் கடனுக்காக அவர்களை விற்கச் சொல்லுகிறதினால் அவ்வளவு இரக்கமில்லாதவராயிருக்கிறாரா.

இல்லை. அவர் இரக்கமில்லாமையினாலல்ல, அந்தப் பணிவிடைக்காரன் தன்னுடைய கடனை அறிந்து, அவருடைய இரக்கத்தைத் தேடும்படியாக அப்படிச் செய்கிறார்.

13. பணிவிடைக்காரன் அப்படியே செய்தானா.

ஆம், அவன் தாழ விழுந்து: ஆண்டவனே எனக்காக மனம் பொறும்; உமக்கு எல்லாத்தையுங் கொடுத்துத் தீர்ப்பேன் என்று அவனைப் பணிந்துகொண்டான் (௨௬).

14. இந்தப் பணிவிடைக்காரன் ஒன்றுமில்லாதவனாயிருக்கையில் கடனை எப்படித் தீர்ப்பான்.

அவனுக்குப் பெலனில்லாதிருந்தும், அவன் அதைச் செய்யச் சித்தமாயிருந்தான்.



15. அப்படியானால் அவனுக்கு அந்தக் கடன் தீர்ந்ததெப்படி.

இராசாவின் தயவினாலே. எசமானனென்றால் அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்து விட்டான் (௨௭).

16. இதினாலே இயேசுநாதர் என்னத்தைக் குறித்துக் காட்டுகிறார்.

மனிதர் பராபரனிடத்தில் உண்மையாய் அவருடைய கிருபையைத் தேடினால், தங்கள் பாவங்களுக்கு மன்னிப்பை அடைவார்கள்.

17. ஆனால் இந்தப்பணிவிடைக்காரன் தன் எசமானுடைய கிருபைக்காக நன்றியறிந்தவனாயிருந்தானா.

இல்லை. அவனுடைய கடன் அவனுக்கு மன்னிக்கப்பட்டபோது, அவன் உடனே வெளிப்புறப்பட்டுத் தன் பணிவிடைத்தோழரில் தனக்கு நூறுவெள்ளிக்காசு கடன்பட்டிருந்த ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்துத் தொண்டையை நெறித்து: நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத்தீர் என்றான். ஆகையால் அவனுடைய பணிவிடைத்தோழன் அவன் காலிலே விழுந்து: எனக்காக மனம்பொறு, உனக்கு எல்லாத்தையுங் கொடுத்துத் தீர்ப்பேன் என்று அவனை வேண்டிக்கொண்டான். ஆனால் அவன் மாட்டேன் என்று போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைச் சிறைச்சாலையில் போடுவித்தான் (௨௮—௩௰).

18. இங்கே சொல்லப்பட்ட பணிவிடைத்தோழன் யார்.

நமக்கு விரோதமாகக் குற்றஞ் செய்கிற நம்முடைய பிறத்தியான்.

19. நம்முடைய பிறத்தியான் நமக்கு விரோதமாகச் செய்கிற குற்றங்கள் ஏன் நூறு வெள்ளிக்காசாக மாத்திரம் எண்ணப்படுகிறது.

அவைகளை நாம் பராபரனுக்கு விரோதமாகச் செய்கிற பாவங்களோடு ஒத்துப்பார்த்தால், அவைகள் மிகவும் சொற்பமாயிருக்கிறது. ஏனென்றால் அந்த நூறு வெள்ளிக்காசு ஏறக்குறைய பதினெட்டு ரூபாய், பதினாயிரந்தாலந்து ஏறக்குறைய இரண்டு கோடிரூபாய். ஆதலால் இதைப் பார்க்க அது மெத்த சின்னத்தொகை.

20. தன்னுடைய பணிவிடைத்தோழனுக்கு மன்னிக்கமாட்டேன் என்ற பணிவிடைக்காரனுடைய தூர்க்குணம் என்னத்தைக் குறிக்கிறது.

தங்களுடைய பிறத்தியாருக்கு அவர்கள் குற்றங்களை மன்னிக்க மனதில்லாமல், சரிக்குச்சரிக்கட்ட வேண்டுமென்கிற மனிதருடைய இரக்கமில்லாமையையுந் துர்க்குணத்தையுங் குறிக்கிறது.

21. இந்த இரக்கமில்லாத பணிவிடைக்காரனுக்குச் சம்பவித்ததென்ன.

அவன் பணிவிடைத்தோழர் சம்பவித்ததைக் கண்டு, மிகுந்த துக்கம் அடைந்து, வந்து, சம்பவித்ததெல்லாத்தையும் எசமானுக்கு அறிக்கைபண்ணினார்கள். அப்போது அவன் எசமான் அவனை அழைப்பித்து, அவனுக்குச் சொன்னதாவது: பொல்லாத பணிவிடைக்காரா, நீ என்னை வேண்டிக்கொண்டதினால் அந்தக் கடனை யாவையும் உனக்கு மன்னித்து விட்டேனே. நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் பணிவிடைத்தோழனுக்கு இரங்கவேண்டியதாயிருந்ததில்லையோ என்று அவனுடைய எசமான் கோபமடைந்து, அவன் தனக்குப்பட்ட கடனை எல்லாங் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனை உபாதிக்கிறவர்களுக்கு ஒப்புக்கொடுத்தான் (௩௧—௩௪).

22. அந்த மற்றப் பணிவிடைத்தோழர் ஆர்.

இரக்கமில்லாதவர்களும் சமாதானத்துக்கு வராதவர்களுமான மனிதரைக் குறித்துப் பராபரனிடத்தில் முறையிடுகிற பரிசுத்த தேவதூதர்.

23. இங்கே சொல்லப்படுகிற உபாதிக்கிறவர்கள் ஆர்.

பொல்லாத பிசாசுகள். அவர்கள் இரக்கமில்லாதவர்களும் சமாதானமாகப் பிரியமில்லாதவர்களுமான மனிதரை உபத்திரவப்படுத்துவார்கள். நம்முடைய இரட்சகர் கடைசியாகச் சொல்லுகிறதாவது: நீங்கள் உங்கள் மனப்பூர்வமாய் அவனவன் தன் சகோதரனுக்கு அவன் தப்பிதங்களை மன்னியாதேபோனால், இந்தப் பிரகாரமாக என் பரமபிதா உங்களுக்குஞ் செய்வார் என்றார் (௩௫).

24. எதுவரையில் அவர்கள் உபாதிக்கிறவர்களால் துன்பப்படுவார்கள்.

அவர்கள் தாங்கள் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும், அதாவது நித்தியகாலமாக. ஏனென்றால் அவர்கள் ஒருக்காலும் கடனைக் கொடுத்துத் தீர்க்கக் கூடாதபடியினால் என்றென்றைக்கும் உபத்திரவப் படுவார்களாம்.

## படிப்பினை.

25. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் நாம் கற்றுக் கொள்ளுகிறதென்ன.



I. இராசாவினிடத்தில் நாம் கற்றுக் கொள்ளுகிறதாவது:

௧. மனிதர் உண்மையாய்க் குணப்பட்டு, கர்த்தரா
கிய பராபரனண்டைக்கு வந்தால், அவர்களுடைய பாவங்
களை மன்னிக்க அவர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறார். இந்த
இராசாவுக்குத் தன்னால் கொடுத்துத் தீர்க்கக் கூடாத தொ
கையாகிய பதினாயிரந் தாலந்து கடன்பட்ட ஒரு பணிவிடைக்
காரன் இருந்தான். இவன் தாழ்மையாய் அவனுக்கு முன்பாக
விழுந்து: ஆண்டவனே, எனக்காக மனம் பொறும். உமக்கு
எல்லாத்தையுங் கொடுத்துத் தீர்ப்பேன் என்று. வேண்டிக்
கொண்டபோது, அவன் இவனுக்கு எல்லாத்தையும் மன்
னித்துவிட்டான். அப்படியே பராபரனாகிய கர்த்தர் மனித
ருக்குச் செய்கிறார். ஒரு மனிதனுக்கு எவ்வளவான பாவக்
கடன் இருந்தாலும், அவன் தன் பாவத்தின் நிமித்தம் என்
றென்றைக்குங் கெட்டுப்போகப் பாத்திரவானாயிருந்தாலும்,
அவன் குணப்படுதலும் விசுவாசமுமுள்ள இருதயத்தோடு
அவரண்டைக்கு வந்தால், அவனுடைய பாவங்கள் மன்னிக்
கப்படும். அதைப் பராபரனாகிய கர்த்தர் ஆணையுடனே உறுதிப்படுத்தி: நாம் ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல், ஆகாதவன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறோமென்று நம்முடைய சீவனைக்கொண்டு சொல்லுகிறோம் என்கிறார் (எசேக். ௩௩, ௰௧).

௨. பராபரனாகிய கர்த்தர் குணப்படாத மனிதர் பேரிலும், விசேஷமாய்ச் சமாதானப்படாத பாவிகள் பேரிலும் கோபமும் நீதியுமுள்ள தேவனாயிருக்கிறார். இந்த இராசா இரக்கமுள்ளவன் தான். அவன் தன் பணிவிடைக்காரன் பேரில் மனதுருகி, அவன் பட்ட கடனை எல்லாம் மன்னித்து விடுதலையாக்கினான். ஆனால் இந்தப் பொல்லாத பணிவிடைக்காரன் தனக்கு நூறு வெள்ளிக்காசு மாத்திரம் கடன்பட்ட தன் பணிவிடைத்தோழன்மேல் இரக்கமில்லாதவனானபோது, இராசா கோபமடைந்து, அவனை அவன் பட்டகடனை எல்லாங் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களுக்கு ஒப்புக்கொடுத்தான். அப்படியே பராபரன் மனிதருக்குக் கிருபையும் இரக்கமுமுள்ளவர்தான். ஆனால் மனிதர் அவருடைய கிருபையை விருதாவாக்கி, தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாகத் துணிகரமான பாவங்களிலே நடந்து, குணப்பட மனதில்லாதேபோனால், அவர் அவர்களைத் தண்டியாமல் விடார். பராபரன், இம்மையிலேயும் மறுமையிலேயும் குணப்படாதவர்களைத் தண்டிக்கிற நீதியுள்ள நியாயாதிபதியும் எரிச்சலுள்ள தேவனுமாயிருக்கிறார்.

அதைப்பற்றி ஏசுசி[illegible] நான் எத்தனை பாவஞ் செய்திருந்தாலும், கர்த்தர் இரக்கமுள்ளவர், என்னைத் தண்டியாரென்று மோசமாக நினையாதே. ஏனென்றால் அவர் எத்தனை கிருபையுள்ளவராயிருக்கிறாரோ, அத்தனை நீதியுள்ளவருமாயிருக்கிறார். பொல்லாரின்மேல் வரும் அவருடைய தேவகோபாக்கினைக்கு முடிவில்லை (சீராக் ரு, கூ. எ).

II. அந்தப் பதினாயிரந் தாலந்து கடன்பட்ட வேலைக்காரனிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. மனிதராகிய நம்மெல்லாருக்கும் மகாப் பெரிய பாவக்கடன் இருக்கிறது. இந்தப் பணிவிடைக்காரன் தன் எசமானுக்குப் பதினாயிரந் தாலந்து கடன்பட்டிருந்தான். அது மகா பெரிய தொகை. அப்படியே நம்முடைய பாவக்கடன்களும் பராபரனுக்கு முன்பாகத் தீர்க்கக் கூடாதபடிக்கு மகா பெரிதாயிருக்கிறது. நாம் பத்துக்கற்பனைகளை மீறி, ஆயிரம் விசைக்கு அதிகமாய் நினைவுகளினாலும் வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும் கற்பிக்கிற நன்மையைச் செய்யாமல், விலக்கின தீமையால் பாவஞ் செய்தோம். ஆகையால் நாம் தாவீதோடு: பிழைகளை உணருகிறவன் யார். மறைவானவைகளுக்கு என்னை நீங்கலாக்கியருளும் என்றும் (சங். யகூ, யங), என் பாவங்கள் என் தலையின் மயிர்களிலும் அதிகமாயிருக்கிறது என்றும் சொல்வது நியாயம் (சங். சய, யங).

உ. மனிதராகிய நாம் நமது பாவக்கடன்களைத் தீர்க்கக் கூடாது. இந்தப் பணிவிடைக்காரன் தன்னுடைய கடனைத்தீர்க்கக் கூடாதவனாயிருந்தான். ஆதலால் அவன் எசமான் நியாயமானபடி அவனையும் அவனுக்குண்டானதுகள் யாவையும் விற்கவேண்டும். அப்படியே மனுஷராகிய நம்மெல்லாருக்கும் இருக்கிறது. நமது பாவக்கடன் நாம் என்றென்றைக்குந் தீர்க்கக் கூடாதபடி பெரிதாயிருக்கிறது. ஆதலால் பராபரன் தமது நீதியின்படி செய்தால், அவர் நம்மை நரகத்திலே என்றென்றைக்குந் தள்ள வேண்டும். ஆதலால் நாம் தாவீதுடனே: உம்முடைய அடியானோடே நியாயத்தீர்ப்புக்குள் பிரவேசியாதிரும், ஏனெனில் சீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமானல்ல என்றும் (சங். யசங. உ), கர்த்தாவே, அக்கிரமங்களை நோக்கி[illegible]ருந்தீரானால், ஆர் நிலைநிற்பான் ஆண்டவரே என்றும் சொல்வோமாக (சங். யஙய, ங).

ங. நம்முடைய பாவக்கடன் நமக்கு மன்னிக்கப்படும்படிக்கு நாம் என்ன செய்யவேண்டும். அந்தப் பணிவிடைக்காரன் தன் கடனைத் தீர்க்கக் கூடாதபோது, தனக்குக் கடன் இல்லை என்று சொல்லாமல், தன் கடனை எல்லாம்



அறிக்கையிட்டு, தன் எசமானுக்கு முன்பாகத் தாழவிழுந்து: ஆண்டவனே, எனக்காக மனம் பொறும், உமக்கு எல்லாத்தையுங் கொடுத்துத் தீர்ப்பேனென்று அவனைப் பணிந்துகொண்டான் (உகூ). அப்படியே நாமும் செய்யக் கடவோம். எப்படியென்றால்:

a. நாம் நமது பாவக்கடன்களை அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்கவேண்டும். ஏனென்றால் நமக்குப் பாவம் இல்லை என்றோமானால் உண்மை நமக்குள் இராமல், நம்மை நாமே மோசம் போக்குகிறோம். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், அவர் நமக்குப் பாவங்களை மன்னித்து, நம்மை எல்லா அவநியாயமும் நீங்கச் சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (க யோ. க, அ. கூ).

b. மெய்யான விசுவாசத்தினால் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளவேண்டும். இந்தப் பணிவிடைக்காரன் கடனைத் தீர்க்க மனதாயிருந்தான். ஆனால் அவனால் கூடாதே போயிற்று. நாமுங்கூட நமது பாவக்கடன்களைத் தீர்க்கமுடியாது. ஆனால் நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர் தம்முடைய மரணத்தினாலும் இரத்தத்தினாலும் நமது பாவக்கடன்களை நமக்காகத் தீர்த்தார். என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இதுகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஒருவன் பாவஞ் செய்தானேயாகில், நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்கிற காரியக் கர்த்தர் நமக்குப் பிதாவினிடத்திலிருக்கிறார். அவர் நம்முடைய பாவங்கள் நிமித்தம் கிருபையுண்டாக்குதலாயிருக்கிறார். ஆனால் நம்முடைய பாவங்கள் நிமித்தம் மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்கள் நிமித்தமுந் தானே என்று சொல்லப்பட்டிருக்கிறது (க யோ. உ, க. உ). ஆதலால் மெய்விசுவாசத்தினால் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளுகிறவன் எவனோ அவனுடைய பாவக்கடன்கள் எவ்வளவு பெரிதாயிருந்தாலும் அதெல்லாம் மன்னிக்கப்படும். ஏனென்றால் இவர் பேரில் விசுவாசிக்கிறவன் எல்லாம் இவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுகிறான் என்று தீர்க்கதரிசிகள் எல்லாரும் இவருக்குச் சாட்சிகொடுக்கிறார்கள் என்று எழுதியிருக்கிறது (நடபடி [illegible] ங).

ச. தன் பிறத்தியானோடு சமாதானமாகி அவனுக்கு மன்னிக்காதிருக்கிறவன் பராபரனால் தண்டிக்கப்படுவான். அந்தப் பணிவிடைக்காரன் இரக்கமில்லாதவனாயிருந்து, தன் பணிவிடைத்தோழனுடைய சொற்பத்தொகையை மன்னிக்க மனதில்லாதவனாயிருந்தபோது இராசா கோபமாகி, அவனை உபாதிக்கிறவர்களுக்கு ஒப்புக்கொடுத்தான். ஏனென்றால்

இரக்கஞ் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பு உண்டாகும். நியாயத்தீர்ப்புக்கு எதிராக இரக்கம் மேன்மை பாராட்டும் (யாக். உ, ௰௩). தன் பிறத்தியானுக்கு மன்னியாதவன் எவனோ, அவனுடைய பாவங்களைக் கர்த்தராகிய பராபரன் மன்னிக்கமாட்டார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் மனிதருக்கு அவர்கள் தப்பிதங்களை மன்னியாதேபோனீர்களேயாகில், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் என்று சொல்லுகிறார். ஆதலால் பராபரனுடைய கிருபையை அடைய விரும்புகிற ஒவ்வொரு கிறிஸ்தவனும் மனப்பூர்வமாய் அவனுடைய பிறத்தியான் செய்த குற்றத்தை அவனுக்கு மன்னிக்கவேண்டும். அதைப் பற்றி இயேசு இரட்சகர்: எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல், நீரும் எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும் என்று செபிக்கக் கற்றுக்கொடுத்தார்.

III. அந்தப் பணிவிடைத்தோழனிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

தன்னுடைய பிறத்தியானைக் கோபப்படுத்தி, அவனுக்குச் சேதம் உண்டுபண்ணினவன் அவனிடத்தில் மன்னிப்பு கேட்கவேண்டும். இந்தப் பணிவிடைத்தோழன் அந்தப் பணிவிடைக்காரனுக்குக் கடன் பட்டவனாயிருந்ததினால் அவன் காலிலே விழுந்து: எனக்காக மனம் பொறு, உனக்கு எல்லாத்தையுங் கொடுத்துத் தீர்ப்பேன் என்றான். அப்படியே நாம் எல்லாரும் செய்யவேண்டும். தன் பிறத்தியானாலே சேதப்பட்டவனும் கோபப்படுத்தப்பட்டவனும் தான் பராபரனிடத்தில் மன்னிப்படைய தன் கடன்காரனுக்கு மன்னிக்க வேண்டியதெப்படி அவசரமாயிருக்கிறதோ, அப்படியே தன் பிறத்தியானுக்குச் சேதமும் கோபமும் உண்டுபண்ணினவனும் அவனிடத்தில் மன்னிப்பைக் கேட்க வேண்டியதும் அவசரமாயிருக்கிறது. அவ்விதமாகக் கிறிஸ்தவர்கள்: நீங்கள் சினம் அடைந்தால் பாவஞ் செய்யாதேயுங்கள், உங்கள் எரிச்சலின்மேலே சூரியன் அஸ்தமிக்க ஒட்டாமல் இருங்கள் என்கிற அப்போஸ்தலனுடைய வார்த்தையை நிறைவேற்ற வேண்டும் (எபேசி. ச, உ௬).

IV. மற்ற பணிவிடைத்தோழரிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

மனிதருடைய பாவங்கள் நிமித்தம் பரிசுத்த தேவதூதர்கள் விசனப்படுவார்கள். அவனுடைய மற்றப் பணிவிடைத்தோழர் அவனுடைய பொருளாசையைக் கண்டு மிகுந்த துக்கம் அடைந்து, வந்து, சம்பவித்ததெல்லாத்தை



யும் எசமானுக்கு அறிக்கைபண்ணினார்கள். அப்படியே நம்முடைய பணிவிடைத்தோழராகிய தேவதூதர் நாம் செய்கிற பாவங்களை கர்த்தருக்கு அறிக்கை பண்ணுகிறார்கள். நமது தேவபத்தியினிமித்தம் சந்தோஷப்பட்டு, நமது பாவங்களினிமித்தந் துக்கப்படுகிறார்கள். ஆதலால் நாம் பரிசுத்த தேவதூதரையும் பராபரனாகிய கர்த்தரையும் சந்தோஷப்படுத்தும்படிக்கு நாம் மெய்யான தெய்வபத்தியில் நடக்க வேண்டும்.

26. ஆனால் நம்மை மெய்யான தெய்வபத்தியில் நடத்துகிறவர் ஆர்.

பரிசுத்த ஆவியானவர் தான். ஆதலால் நாம் எப்போதும் பராபரன் நமக்குத் தம்முடைய ஆவியைக் கொடுத்தருள வேண்டுமென்று செபம்பணணவேண்டும்.

நமது அன்புள்ள திரியேக பராபரனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவருக்குச் சதாகாலங்களாய் மகிமை உண்டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின உ௩-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௱அ௰. ௱அ௫.)

சுவி. மத். உஉ, ௰௫—உஉ.

அப்போது பரிசேயர் போய், வசனத்திலே அவரைச் சிக்கப்
பண்ண யோசனைபண்ணி, 16 தங்கள் சீஷர்களை எரோதேயின்
மனுஷரோடே கூட அவரண்டைக்கு அனுப்பினார்கள். இவர்கள்:
போதகரே, நீர் சத்தியமுள்ளவராயிருந்து, பராபரனுடைய வழி
யைச் சத்தியமாய்ப் போதிக்கிறீரென்றும், எவனென்றும் உமக்
குக் கவை இல்லை என்றும் அறிவோம்; அதேனெனில் நீர் மனுஷமுக
மாட்டம் பார்க்கிறதில்லை. 17 ஆகையால் [illegible] எப்படி காணு
கிறது, இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ என்று
எங்களுக்குச் சொல்லும் என்றார்கள். 18 ஆனால் இயேசு அவர்கள்
துர்க்குணத்தை அறிந்து: மாயக்காரரே, நீங்கள் என்னைச் சோதிக்
கிறதேன்; 19 வரிக்காசை எனக்குக் காட்டுங்கள் என்றார். அவர்கள்
ஒரு பணத்தை அவருக்குக் கொண்டுவந்தார்கள். 20 அப்போது
அவர்களுடனே: இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் ஆருடையது
[illegible] 21 அவர்களுடனே: இராயனுடையது என்றார்கள். அப்போது
அவர்களுடனே: ஆகையால் இராயனுடையதை இராயனுக்கும்
பராபரனுடையதைப் பராபரனுக்குஞ் செலுத்துங்கள் என்றார்.
22 அவர்கள் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, அவரை விட்டுப்
போய்விட்டார்கள்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தில் அடங்கியிருக்கிறதென்ன.

இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ என்று யூதர் கேட்ட கேள்விதான்.

2. அந்தக் கேள்வியைக் கேட்டதார்.

இயேசுநாதருடைய சத்துருக்களாகிய பரிசேயர்.

3. அவர்கள் ஆரை நோக்கி அப்படிக் கேட்டார்கள்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதரை நோக்கி.

4. [illegible]த அவர்கள் கர்த்தராலே ஏதாவது கற்றுக் கொள்ள வேணுமென்கிற நல்விருப்பத்தோடு கேட்டார்களா.

இல்லை. வசனத்திலே அவரைச் சிக்கப்பண்ணவும், அவருக்குக் கெடுதியையும் பொல்லாப்பையும் விளைவிக்கவும் அப்படி கேட்டார்கள். ஏனென்றால் சுவிசேஷ வாக்கியத்தின் துவக்கத்திலே: அப்போது பரிசேயர் போய், வசனத்திலே அவரைச் சிக்கப்பண்ண யோசனை பண்ணினார்கள் என்று எழுதியிருக்கிறது (௱௫).

5. இந்தக் கேள்வியினாலே இயேசுநாதரை எப்படிச் சிக்கப்பண்ணலாமென்று நினைத்தார்கள்.

அவர் இராயனுக்கு வரிகொடுக்க வேண்டும், அல்லது வரிகொடுக்க வேண்டாமென்று சொல்லுவாரென்று நினைத்தார்கள். அவர் இராயனுக்கு வரிகொடுக்க வேண்டுமென்று சொல்லுவாரானால், ரோம இராயனுக்குக் கீழ்ப்படியவும் அவனுக்கு வரிகொடுக்கவும் மனதில்லாத யூதசனம் அவரைப் பகைக்க நேரிடும் என்றும், இராயனுக்கு வரிகொடுக்க வேண்டாமென்று சொன்னாரானால், அவர்கள் அவரைக் கலகக்காரனாக இராயனுக்கு முன்பாக அவர்பேரில் குற்றஞ் சாட்டலாமென்றும் நினைத்தார்கள். அப்படியே அவர்கள் பிலாத்துவுக்கு முன்பாக: அவர் இராயனுக்கு வரிகொடுக்க வேண்டாமென்றதாக அவர்பேரில் பொய்க்குற்றஞ் சாட்டினார்கள்.

6. இந்தக் கேள்வியைக் கேட்கும்படிக்குப் பரிசேயரே நேராய் கிறிஸ்துவண்டைக்கு வந்தார்களா.

இல்லை. அவர்கள் தங்கள் சீஷர்களை எரோதேயின் மனிதரோடுங் கூட அவரண்டைக்கு அனுப்பினார்கள்.

7. எரோதேயின் மனிதர் யார்.

எரோதே இராசாவினிடத்திலிருந்து அவனுடைய கள்ளமார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர்கள் தான். இந்த எரோதே அகுஸ்து இராயனுடைய தயவினால் இராசனாகி, அவனுக்குச் சார்பாயிருந்து, யூதமார்க்கத்தையும் அஞ்ஞான மார்க்கத்தையுங் கலந்து, ஓர் புதிய மார்க்கத்தை ஏற்படுத்தினான். இந்தப் புதியமார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர்கள் தான் எரோதேயின் மனிதர்.



8. இந்தக் கேள்வியைப்பற்றிப் பரிசேயருக்கும் எரோதேயின் மனிதருக்கும் ஒரே மனதிருந்ததா.

இல்லை. யூதருக்குச் சார்பாயிருந்த பரிசேயர் இராயனுக்கு வரிகொடுக்க வேண்டாம் என்றும், இராயனுக்குச் சார்பாயிருந்த எரோதே இராசாவும் அவன் மனிதருமோ இராயனுக்கு வரிகொடுக்க வேணுமென்றும் சொன்னார்கள்.

9. அப்படியானால் பரிசேயர் எரோதேயின் மனிதரை ஏன் அழைத்துப்போனார்கள்.

கிறிஸ்துநாதர் இராயனுக்கு வரிகொடுக்க வேண்டாமென்று சொன்னாரானால், உடனே அவர்பேரில் எரோதே இராசாவினிடத்தில் குற்றஞ் சாட்டும்படியாகத்தான்.

10. அனுப்பப்பட்டவர்கள் தங்கள் கேள்வியை எப்படிக் கேட்டார்கள்.

அவர்கள் முதல் முதல்: போதகரே, நீர் சத்தியமுள்ள ராயிருந்து, பராபரனுடைய வழியைச் சத்தியமாய்ப் போதிக்கிறீர் என்றும், எவன் என்றும் உமக்குக் கவையில்லையென்றும் அறிவோம்; அதேனெனில் நீர் மனுஷர் முகமாட்டம் பார்க்கிறதில்லை என்று சொல்லி (௱௬), கர்த்தராகிய கிறிஸ்துவை: அவருடைய சத்தியத்தின் நிமித்தமும் நீதியின் நிமித்தமும் அவர் ஒருவருக்கும் பயப்படாதிருக்கிறதின் நிமித்தமும் புகழுகிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள்: உமக்கு எப்படிக் காணுகிறது, இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ என்று எங்களுக்குச் சொல்லும் என்கிற வார்த்தையினாலே வினவினார்கள்.

11. அவர்கள் இயேசு இரட்சகரை ஏன் புகழ்ந்தார்கள். சத்தியத்தைச் சிநேகிக்கிற உண்மையான சிநேகத்தினாலே அப்படிச் செய்தார்களா.

இல்லை. அவரை அதிக லேசாய்ச் சிக்கப்பண்ணும்படியாகத் தான். அவர்கள் புகழ்ச்சி மாயமான இருதயத்திலிருந்து வந்தது. எரோதேயின் மனிதருக்கும் இராயனுக்கும் விரோதமாய் அவரைப் பேசப்பண்ணும்படியாக, அவர் மனுஷமுகமாட்டம் பார்க்கிறதில்லை என்று அவரைப் புகழ்ந்தார்கள்.

12. இங்கே சொல்லப்பட்ட இராயன் ஆர்.

அக்காலத்திலே யூதரை ஆண்ட ரோம இராயன்.

13. அவர்கள் சொல்லுகிற வரியென்ன.

சனங்கள் ரோம இராயனுக்காவது, அவனுடைய தானாபதிகளுக்காவது கொடுக்கவேண்டிய தீர்வைதான்.

14. கிறிஸ்துநாதர் தமது பொல்லாத சத்துருக்களுடைய துர்க்குணத்தை அறிந்திருந்தாரா.

ஆம், அவர் அதை நன்றாய் அறிந்திருந்தார். ஆதலால் அவர் அவர்களுக்கு உடனே: மாயக்காரரே, நீங்கள் என்னைச் சோதிக்கிறதேது என்றார்.

15. ஏன் அவர்களை மாயக்காரரென்று அழைக்கிறார்.

அவர்கள் தங்கள் இருதயங்களிலே அவருக்கு விரோதமாகப் பொல்லாத யோசனைகளையும் சதிசர்ப்பனைகளையும் வைத்திருந்து, புறம்பாக அவருக்கு முன் தங்களைத் தெய்வபத்தியுள்ளவர்களாகக் காண்பித்து, அவரைப் புகழ்ந்ததினாலேதான்.

16. இயேசுநாதர் அவர்களுடைய கேள்விக்குக் கொடுத்த உத்தரவு என்ன.

இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயம் என்று சொன்னார்.

17. அதை அவர் அவர்களுக்கு எப்படி ரூபித்தார்.

அவர்கள் வரியாகக் கொடுக்கும் பணத்தைத் தமக்கு முன்னில் கொண்டுவந்து காண்பிக்கும்படி செய்தார். அவர்கள் கொண்டுவந்த பணத்திலே வழக்கம்போல் சுரூபமும் மேலெழுத்தும் இருந்தது. இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் ஆருடையது என்று அவர் பரிசேயருடைய சீஷரைக் கேட்டார். அதற்கு அவர்கள்: அது இராயனுடையதென்று சொன்னார்கள். அப்போது அவர்: இராயனுடையதை இராயனுக்கும், பராபரனுடையதைப் பராபரனுக்கும் செலுத்துங்கள் என்றார்.

18. கர்த்தருடைய இந்த வார்த்தையின் அர்த்தம் என்ன.

யூதராகிய நீங்கள் உங்கள் தேசத்தில் இராயனுடைய நாணயத்தை உபயோகிக்கிறதினால், நீங்கள் இராயனுடைய குடிகள் என்று அறிக்கையிடுகிறீர்கள். ஆதலால் உங்கள் அதிகாரியும் இராயனுமாகிய அவனுக்கு வரிகொடுக்கிறது நியாயமும் நீதியுமாயிருக்கிறது என்பதே.

19. கிறிஸ்துநாதர்: பராபரனுடையதைப் பராபரனுக்குச் செலுத்துங்கள் என்று ஏன் சொல்லுகிறார்.

யூதருடைய பொதுவான எதிர்பேச்சுக்கு இடங்கொடாதபடிக்கு. ஏனென்றால் அவர்கள்: நாம் தேவாராதனைக்கடுத்ததைக் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டியவர்களாயிருப்பதினால், இராயனுக்கு வரிகொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். அதற்குக் கிறிஸ்துநாதர் உத்தரவுகொடுத்து: இரண்டு காரியங்களையும் செய்யலாம், அதாவது வரியை இராயனுக்கும், தெய்வாராதனைக்கடுத்ததைப் பராபரனுக்குஞ் செலுத்தலாம் என்று சொன்னார்.



20. கிறிஸ்துவின் இந்த உத்தரவுக்குப் பரிசேயருடைய சீஷர்கள் எதிர்பேசக் கூடியதாயிருந்ததா.

இல்லை. அவர்கள் தங்கள் சுயவார்த்தையினாலே சிக்கப்பண்ணப்பட்டவர்களாக்கப்பட்டு, அவருடைய உத்தரவைக் கேட்டவுடனே ஆச்சரியப்பட்டு அவரை விட்டுப்போய் விட்டார்கள்.

படிப்பினை.

21. இந்தச் சுவிசேஷவாக்கியத்தினாலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. நாம் குணப்படாத மனிதரைப்பற்றிக் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. குணப்படாதவர்கள் தங்களுடையவர்களைப் பொய்யாகப் பாவத்துக்கு ஏவி எழுப்புவார்கள். அப்படியே இங்கே பரிசேயர் செய்தார்கள். அவர்களே கிறிஸ்துநாதரைப் பகைத்து அவரைச் சிக்கப்பண்ணத் தேடினதுமல்லாமல் தங்களுடைய சீஷரும் அவரைப் பகைக்கவும், குற்றப்படுத்தவும், அவருக்குமுன் சர்ப்பனைகளை வைக்கவுமாக அவர்களை ஏவி விட்டார்கள்.

௨. குணப்படாதவர்கள் விசுவாசிகளை மோசப்படுத்தவும் அவர்களைக் கெடுக்கவும் வகைதேடுவார்கள். அப்படியே இந்த வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி, வார்த்தைகளிலே இயேசுநாதரைச் சிக்கப்பண்ண யோசனைபண்ணினார்கள். தாவீது இராசா இப்படிப்பட்டவர்கள் பேரில் முறையிட்டுச் சொல்லுகிறதாவது: முகாந்தரமில்லாமல் குழிக்குட்படுத்தத் தங்கள் வலையை எனக்கு ஒளித்துவைத்தார்கள், முகாந்தரமில்லாமல் என் ஆத்துமாவுக்குக் குழி வெட்டினார்கள் (சங். ௩௫, ௭).

௩. குணப்படாதவர்கள் மற்றச் சமயங்களில் ஒருவருக்கொருவர் விரோதமாயிருந்தும், தேவபத்தியுள்ளவர்களுக்கு விரோதமாக ஒன்றாய்க் கூடிக்கொள்ளுவார்கள். அப்படியே பரிசேயர் ஏரோதே மனிதரின் சத்துருக்களாயிருந்தும், இயேசுநாதரைத் துன்பப்படுத்தும்படியாகச் சிநேகிதரானார்கள். இந்நாள்வரைக்கும் கிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும் விரோதமாகக் கூடிவருகிறார்கள்.

௪. மாயக்காரர் நல்லவார்த்தைகளைப் பேசினாலும், இருதயங்களில் பொல்லாத சிந்தனைகளால் நிறைந்திருக்கிறார்கள். அதை இந்தப் பரிசேயருடைய திருஷ்டாந்தத்தினாலே கற்றுக்கொள்ளுகிறோம். ஏனென்றால் பரிசேயர்: போதகரே, நீர் சத்தியமுள்ளவராயிருந்து, பராபரனுடைய வழி

யைச் சத்தியமாய்ப் போதிக்கிறீர் என்றும், எவனென்றும் உமக்குக் கவையில்லை என்றும் அறிவோம். அதேனெனில் நீர் மனுஷமுகமாட்டம் பார்க்கிறதில்லை என்று கிறிஸ்துநாதருக்கு நல்லவார்த்தைகளைச் சொன்னாலும், தங்கள் இருதயங்களில் அவரை எப்படிச் சிக்கப்பண்ணலாமென்று யோசிக்கிறார்கள். இப்படிப்பட்ட குணப்படாத மாயக்காரரைப்பற்றித் தாவீது: அவன் வாயின் சொற்கள் வெண்ணெய்யைப் போல் மெதுவானவைகள், அவன் இருதயமோ யுத்தம். அவன் வார்த்தைகள் எண்ணெயிலும் மிருதுவானவைகள், ஆனால் அவைகளே உருவின பட்டயங்கள் என்று சொல்லுகிறான். (சங். ருரு, உக).

ரு. குணப்படாதவர்கள் பொதுவாகத் தங்கள் மாயமான தீவினைகளோடு வெட்கத்துக்குள்ளாவார்கள். கிறிஸ்துவை வசனத்திலே சிக்கப்பண்ணத் தேடின இந்தப் பரிசேயர் ஒரு வார்த்தையும் எதிர்பேசக் கூடாதபடிக்குச் சிக்குண்டார்களே. அவர்களுக்கும் குணப்படாத மாயக்காரருக்கும் தாவீது சொன்னபடியே வரும். அதாவது: அவன் அறியாமல் பாழ்க்கடிப்பு அவனுக்கு வந்து, அவன் மறைவாய் வைத்த அவன் வலை அவனையே பிடிக்கவும், அவனே பாழ்க்கடிப்பாய் அதிலே தான் விழவும்வேணும் (சங். ஙரு, அ).

II. கர்த்தராகிய கிறிஸ்துவினிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. அவர் எல்லாவற்றையும் அறிந்தவரும் மனிதருடைய சிந்தனைகளைப் பார்க்கிறவருமாயிருக்கிறார். பரிசேயர் தங்கள் வார்த்தையினால் கர்த்தருக்குச் சிநேகிதராகத் தங்களைக் காண்பித்தார்கள். ஆனால் இயேசு அவர்கள் மாயமுள்ள சிந்தனைகளை அறிந்து: மாயக்காரரே, நீங்கள் என்னைச் சோதிக்கிறதேது என்று கேட்டார். இப்படியே இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியினாலே, நம்பிக்கையாய் அவர்களுடனே இணங்கினதில்லை. ஒரு மனுஷனுக்கு ஒருவன் சாட்சி கொடுக்க அவருக்குத் தேவையாயிருந்ததில்லை. ஏனெனில் மனுஷனுக்குள் இருந்ததைத் தாமே அறிந்திருந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (யோவா. உ, உச. உரு).

உ. ஒரு கிறிஸ்தவன் குணப்படாதவர்களுக்கு எச்சரிக்கையாயிருந்து, எல்லாக் காரியங்களிலும் அவர்களை நம்பக்கூடாது. பரிசேயர் அவருக்கு முன்பாக நல்ல வார்த்தைகளைச் சொல்லியும், அவர் அவர்களை நம்பவில்லை. இவ்விதமாக மெய்க்கிறிஸ்தவர்கள் குணப்படாதவர்களுடைய நல்ல வார்த்தையினாலே மோசம்போய்ப் பாவத்துக்கு ஏவப்படாதபடிக்குப் பாம்புகளைப்போல் வினாவுள்ளவர்களும், புறாக்களைப்



போல் கபடற்றவர்களுமாயிருங்கள் என்று கர்த்தர் தமது சீஷருக்குச் சொன்ன புத்தியின்படியே நடக்கவேண்டும் (மத். ய, யசு).

ங. நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர் சத்தியமும் உண்மையுமுள்ள போதகராயிருக்கிறார். பரிசேயர்: போதகரே, நீர் சத்தியமுள்ளவராயிருந்து, பராபரனுடைய வழியைச் சத்தியமாய்ப் போதிக்கிறீர் என்று நற்சாட்சி கொடுத்தார்கள். அவர்கள் தங்கள் பொய்யும் கபடுமான இருதயத்தினாலே கொடுத்த அந்த நற்சாட்சி சத்தியமுள்ளதாகவேயிருக்கிறது. ஏனென்றால் கிறிஸ்துநாதர் பராபரன் இந்த லோகத்திலே அனுப்பின மெய்யான போதகரும் குருவுமாயிருக்கிறார். ஆதலால் பிதாவாகிய பராபரன்: இவர் நாம் பிரியமாயிருக்கிற நம்முடைய நேச குமாரனாயிருக்கிறார், இவர் சொல் கேளுங்கள் என்று தமது குமாரனைக்குறித்து வானத்திலிருந்து சத்தமிட்டபடி, எல்லா மனிதரும் அவரைக் கேட்கவேண்டும் (மத். யஎ, ரு). அவர் சத்தியமுள்ள போதகராயிருக்கிறதுமல்லாமல், சத்தியமாயும் இருக்கிறார் (யோவா. யச, சு).

ச. கிறிஸ்துநாதருக்கு யாராயிருந்தாலும் கவையில்லை. அவருடைய சத்துருக்கள் பொய்யும் கபடுமுள்ள இருதயமுள்ளவர்களாயிருந்தும்: எவன் என்றும் உமக்குக் கவையில்லை. அதேனெனில் நீர் மனுஷமுகமாட்டம் பார்க்கிறதில்லை என்று அவருக்கு நற்சாட்சிகொடுத்தார்கள். அப்படியே இயேசுநாதர்: இவன் ஐசுவரியவான், வல்லமையுள்ளவன், இவன் உயர்ந்தவன், ஞானமுள்ளவனென்று பாராமலும் வித்தியாசம் பண்ணாமலும் எல்லாருக்கும் சத்தியத்தைப் போதிக்கிறார். கடைசிநாளிலும் கர்த்தர் அப்படியே செய்வார். அப்போது அவர் மனுஷமுகமாட்டம் பாராமல் எல்லாரையும் நியாயந்தீர்ப்பார். உண்மையாய் விசுவாசித்து தெய்வபத்தியில் நிலைத்திருந்தவன் மாத்திரம் அப்போது கிருபை பெற்றுக்கொள்ளுவான்.

III. கிறிஸ்துவினுடைய உத்தரவால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. குடிகள் அதிகாரிகளுக்கு வரிகொடுக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். அதை நம்முடைய இரட்சகர், இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ என்ற பரிசேயரின் கேள்விக்கு: இராயனுடையதை இராயனுக்குக் கொடுங்கள் என்று சொன்ன உத்தரவால் தெளிவாய்க் காண்பிக்கிறார். குடிகள் அதிகாரிகளுக்கு [illegible] வண்டியதேதென்றால் வரி, கனம், கீழ்ப்படிதல், செபம் [illegible] தலானவை

கள் தான். அதற்கு அப்போஸ்தலனாகிய பவுல் புத்திசொல்லி எழுதுகிறதாவது: எந்த ஆத்துமாவும் மேல்பட்ட அதிகாரங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கக்கடவது. ஏனென்றால் பராபரனால் உண்டாகாத அதிகாரம் இல்லை. உண்டான அதிகாரங்கள் பராபரனாலே கட்டளையிடப்பட்டதுகள். ஆனதுகொண்டு அதிகாரத்துக்கு எதிர்க்கிறவன் பராபரனுடைய கட்டளைக்கு எதிர்க்கிறான். எதிர்க்கிறவர்களோவென்றால், தங்களுக்குத்தானே ஆக்கினையைச் சம்பாதிக்கிறார்கள் (ரோ. ௰௩, ௧. ௨). ஆகையால் எல்லாருக்கும் செலுத்தவேண்டியதைச் செலுத்துங்கள். இறையைச் செலுத்தவேண்டியவனுக்கு இறையையும், தீர்வையைச் செலுத்தவேண்டியவனுக்குத் தீர்வையையும், பயத்தைச் செலுத்தவேண்டியவனுக்குப் பயத்தையும், கனத்தைச் செலுத்தவேண்டியவனுக்குக் கனத்தையும் செலுத்துங்கள் என்பதே (ரோ. ௰௩, ௭).

௨. நாம் பராபரனுடையதைப் பராபரனுக்குச் செலுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துநாதர்: பராபரனுடையதைப் பராபரனுக்குச் செலுத்துங்களென்று சொல்லுகிறார். பராபரனாகிய கர்த்தருக்கு நாம் செலுத்த வேண்டியதென்னவென்றால்:

௧. நமது சரீரத்தையும் ஆத்துமாவையும். நாம் நம்முடைய எல்லா அவயவங்களாலும் கர்த்தருக்கு ஊழியஞ் செய்யும்படிக்கு, நம்முடைய ஆத்துமாவை அவருடைய வாசஸ்தலமாகவும், நம்முடைய சரீரத்தை அவருடைய ஊழியத்துக்கென்றுங் கொடுக்கவேண்டும். இது பராபரனுடைய சித்தமாயிருப்பதால்: மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா என்கிறார் (வாக். ௨௩, ௨௬). அதைப்பற்றிப் பவுல் அப்போஸ்தலன்: இப்போதும் சகோதரரே, நீங்கள் புத்தியுள்ள ஆராதனை பண்ணுகிறவர்களாய் உங்கள் சரீரங்களைச் சீவனும் பரிசுத்தமும் பராபரனுக்கு நற்பிரியமுமான பலியாக நிறுத்த பராபரனுடைய இரக்கங்களுக்காக உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன் என்கிறான் (ரோ. ௰௨, ௧). நாம் மரணவேளையிலே நம்முடைய ஆத்துமத்தைப் பராபரனாகிய கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து, கிறிஸ்துவோடே: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று சொல்வோமாக (லூக். ௨௩, ௪௬).

௨. நமக்குண்டானதெல்லாத்தையும். நமக்குண்டானதெல்லாம் பராபரனால் உண்டானபடியால், அதை நாம் அவருடைய ஊழியத்துக்கென்றும், அவருடைய இராச்சியம் பரம்புகிறதற்கென்றும், ஏழைகளின் ஆதரிப்புக்கென்றுந் திரும்பக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம்.



ஒருவேளை பராபரன் நமக்குத் துன்பத்தைக் கட்டளையிட்டு, நம்முடைய சொத்துக்களை எடுத்துக்கொள்ளச் சித்தங்கொண்டால், நாம் யோபோடு: கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக் கடவது என்று சொல்லவேண்டும் (யோபு. ௧, ௨௧).

இந்த நமது அருமையுள்ள பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவருக்கு என்றென்றைக்குந் துதியுண்டாவதாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௨௪-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௭௭௭, ௩௭௪.)

சுவி. மத். ௯, ௰௮—௨௬.

அவர் இவைகளை அவர்களோடே பேசுகிறபோது, இதோ, ஒரு
தலைவன் சேர்ந்து, அவரைப் பணிந்து: என் மகள் இந்நேரத்திலே
செத்துப்போனாள். ஆகிலும் நீர் வந்து அவள் பேரிலே உமது கையை
வையும்; அப்போது பிழைப்பாள் என்றான். 19 இயேசு எழுந்திருந்
து, தம்முடைய சீஷர்களோடுங் கூட அவன் பிறகே போனார்.
20 இதோ, பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு இஸ்
திரி பிறகே சேர்ந்து வந்து, அவர் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்
டாள். 21 ஏனெனில் தன் உள்ளத்திலே: அவருடைய வஸ்திரத்தை
மாத்திரந் தொட்டேனாகில், சொஸ்தமாவேன் என்றாள். 22 இயேசு
வோவென்றால் திரும்பி அவளைக் கண்டு: மகளே, திடன்கொள், உன்
விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேர முதல் இஸ்திரி
சொஸ்தமானாள். 23 இயேசு தலைவன் வீட்டிலே வந்து, தாரைக்
காரரையும் இரைகிற சந்தடியையுங் கண்டு, 24 அவர்களுடனே:
அகலப்போங்கள், ஏனெனில் சிறு பெண் மரித்திராமல், நித்திரை
பண்ணுகிறது என்றார். ஆனால் அவரை நகைத்தார்கள். 25 கும்பு
வெளியே துரத்தப்பட்ட பின்பு, அவர் உள்ளே பிரவேசித்து, அதின்
கையைப் பிடித்தார். அப்போது சிறு பெண் எழுந்திருந்தது. 26 இந்
தக் கீர்த்தி அத்தேசத்தில் எங்கும் பிரபலியமாயிற்று.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தில் எத்தனை பங்குண்டு.

இரண்டு பங்கு.

### முதலாம் பங்கு.

2. முதலாம் பங்கு எதைப் பற்றியது.

ஆலயத்தலைவனுடைய மகளை உயிரோடெழுப்பினதைப் பற்றியது.

3. அந்தத் தலைவன் ஆர்.

யூதருடைய ஆலயத்தலைவனாகிய யவீரு என்னப்பட்டவன் (லூக். ௮, ௪௧). யூதர் வருஷந்தோறும் மூன்று விசை தரிசிக்கவேண்டிய எருசலேம தெய்வாலயத்தை யல்லாமல், அவர்கள் ஓய்வுநாளில் கூடி ஆராதனை செய்யும்படிக்கு, அந்தந்தப் பட்டணங்களிலும் கிராமங்களிலும் அவர்களுக்குப் பள்ளிக்கூடங்களும் ஆலயங்களும் இருந்தது. அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள், ஆலயங்களின் மேல்விசாரணைக்காரன் தலைவன் என்று அழைக்கப்பட்டான்.

4. இந்தத் தலைவனுக்கிருந்த குறையென்ன.

லூக்கா சொல்லுகிறபடி பன்னிரண்டு வயதுள்ள தன் ஒரே குமாரத்தியை இழந்தவனாயிருந்தான்.

5. அப்போது அவன் என்ன செய்தான்.

அவன் தீவிரமாய் இயேசு இரட்சகரண்டைக்கு வந்து, தன் மகளை உயிரோடெழுப்பிக்கொடுக்க அவரை வேண்டிக்கொண்டான். அதைப்பற்றி நம்முடைய சுவிசேஷவாக்கியம் சொல்லுகிறதாவது: அவர் இதுகளை அவர்களோடே பேசுகிறபோது, இதோ, ஒரு தலைவன் சேர்ந்து, அவரைப் பணிந்து, என் மகள் இந்நேரத்திலே சென்றுபோனாள், ஆகிலும் நீர் வந்து, அவள்பேரில் உமது கையை வையும், அப்போது பிழைப்பாள் என்றான் (௰௮).

6. யவீரு வருகிறபோது இயேசுநாதர் யாரோடு பேசிக்கொண்டிருந்தார்.

யோவான்ஸ்நானகனின் சீஷரோடு.

7. எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

உபவாசத்தைப்பற்றி. ஏனென்றால் யோவானுடைய சீஷர் கிறிஸ்துநாதரை: ஏன் உம்முடைய சீஷர்கள் உபவாசம் பண்ணாமல் இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர்: மணவாளனாகிய தாம் அவர்களோடிருக்கிற காலத்திலே அவர்களுக்கு விசேஷித்த துன்பம் விசனம் சோதனை முதலியவைகள் இல்லாதபடியால், அவர்கள் உபவாசிக்கவேண்டிய அவசரமில்லை, ஆனால் மணவாளன் அவர்களை விட்டு எடுக்கப்படும் வேளைவரும், அப்போது அவர்களுக்குத் துன்பங்களும் துக்கங்களும் இக்கட்டுகளும் உண்டாகும். அந்தக்காலத்தில் அவர்கள் உபவாசம் பண்ணுவார்கள் என்று சொல்லி, இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, யவீரு என்ற தலைவன் அவரண்டை வந்து, பணிந்து, வேண்டிக்கொண்டான்.

8. யவீரு கிறிஸ்துவண்டைக்கு வருகையில் அவன் மகள் மரண அவஸ்தைப்பட்டதாக லூக்கா சொல்லக்கொள்ள, மத்தேயு அவள் மரித்தாள் என்று சொல்லுகிறதெப்படி.



இரண்டும் சரிதான். ஏனென்றால் யவீரு கிறிஸ்துவண்டைக்கு வருகிறபோது மரண அவஸ்தைப்பட்டிருந்த தன் மகள் தான் அவரோடு தன் வீட்டுக்குப் போகிறதற்குள் மரித்துப்போவாள் என்று அவன் அறிந்ததினால், தன் மகளை உயிரோடெழுப்பக் கேட்டுக்கொண்டான்.

9. இந்தத் தலைவன் இயேசுநாதரண்டைக்கு வரும்படி அவனை ஏவி எழுப்பினதென்ன.

அவனுடைய விசுவாசமே. ஏனென்றால் இயேசுநாதர் தன் மகள்பேரில் தம்முடைய கையை வைப்பாரானால், அவள் உயிரோடெழுந்திருப்பாள் என்று அவருடைய சர்வவல்லமையை நம்பி விசுவாசித்தான்.

10. கர்த்தர் இந்தத் தலைவனுடைய செபத்தைக் கேட்டாரா.

ஆம். கேட்டு, தம்முடைய சீஷர்களோடே கூட அவன் பிறகே போனார்.

11. இயேசுநாதர் தலைவன் வீட்டுக்கு வந்தபோது, அவர் செய்ததென்ன.

தாரைக்காரரையும் இரைகிற சந்தடியையுங் கண்டு, அவர்களுடனே: அகலப் போங்கள், ஏனெனில் சிறுபெண் மரித்திராமல், நித்திரை பண்ணுகிறது என்றார். ஆனால் அவரை நகைத்தார்கள். கும்பு வெளியே துரத்தப்பட்டபின்பு அவர் உட்பிரவேசித்து, அதின் கையைப் பிடித்தார். அப்போது சிறுபெண் எழுந்திருந்தது (௨௩-௨௫).

12. தாரைக்காரர் செய்ததென்ன.

துக்கவீட்டில் கூடிவந்தவர்களுக்குத் துக்கம் வியாகுலம் உண்டாகும்படி துயரமான பல இராகங்களை ஊதினார்கள்.

13. இரைகிற சந்தடி என்ன.

ஒப்பாரிசொல்லி அழுகிறதினால் மற்றவர்களையும் விசனத்துக்கு ஏவிவிடுகிற கூலிக்காரப் பெண்டுகள்தான்.

14. மரண சமயத்தில் நடக்கும் இந்தக் காரியம் விசேஷமாய் யாரிடத்தில் வழக்கமாயிருந்தது.

அக்கியானிகளிடத்தில். ஆனால் இந்த அக்கியான துர்வழக்கம் யூதருக்குள்ளும் நுழைந்து, ஆலயத்தலைவர் முதலிய பெரிய மனிதரிடத்திலும் சாதாரண வழக்கமாயிற்று.

15. கிறிஸ்துநாதர் அவர்களை ஏன் துரத்திவிட்டார்.

௧. இந்த அக்கியான வழக்கம் தமக்குப் பிரியமில்லை என்றும்,

௨. சீக்கிரம் எழுந்திருக்கப்போகிற இறந்த இப்பெண்ணுக்காக அழவுந் துக்கப்படவுந் தேவையில்லை என்றும்,

௩. தம்மை அசட்டைபண்ணி பரிகாசித்த இந்த மனிதர் தம்முடைய அற்புதத்தைக் காணப் பாத்திரரல்ல என்றுங் காண்பிக்கும்படியாகத்தான்.

16. கிறிஸ்துநாதர்: சிறுபெண் மரித்திராமல் நித்திரைபண்ணுகிறதென்றாரே, அவள் மெய்யாக மரித்திருக்கவில்லையா.

ஆம், மெய்யாகவே மரித்திருந்தாள். ஆனால் அவள் சீக்கிரமாய் எழுந்திருப்பாள் என்றும், தூங்குகிற மனிதனை எழுப்பிவிடுகிறது நமக்கு எவ்வளவு சுளுவாயிருக்கிறதோ, அவ்வளவாக இறந்துபோன இப்பெண்ணை உயிரோடெழுப்புகிறது தமக்குச் சுளுவென்றும் காண்பிக்கும்படியாக அப்படிச் சொன்னார் (௨௪. ௨௫).

17. அவர் இறந்துபோன இப்பெண்ணை எப்படி எழுப்பினார்.

அவர் அதின் கையைப் பிடித்தார், அப்போது சிறுபெண் எழுந்திருந்தது.

18. கிறிஸ்துவின் இந்த அற்புதம் மற்றவர்களுக்கும் அறிவிக்கப்பட்டதா.

ஆம். இந்தக் கீர்த்தி அத்தேசத்தில் எங்கும் பிரபலியமாயிற்று (௨௬).

## படிப்பினை.

I. இந்த முதலாம் பங்கினால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது.

க. சிலுவையுந் துன்பமும் நாம் பராபரனண்டைக்கு ஓடிவர நம்மை ஏவிவிடுகிறது. இந்த யவீரு என்பவன் அநேகவிசை இயேசுநாதரைப்பற்றிக் கேட்டிருப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் அவன் இதுவரைக்கும் அவரண்டைக்கு வந்ததில்லை. இப்போதோ தனக்குத் துன்பம்வந்தபடியாலும், தன் ஒன்றான மகள் ...விட்டு எடுக்கப்பட்டபடியாலும் அவன் கிறிஸ்துவண்டைசேர்ந்து: ஆண்டவரே, என் மகள் இந்நேரத்திலே செத்துபோனாள், ஆகிலும் நீர் வந்து, அவள் பேரிலே உம்முடைய கையை வையும், அப்போது பிழைப்பாள் என்று அவரைப் பணிந்து கொண்டான். மனிதராகிய ...க்கும் பொதுவாக அப்படியிருக்கும். ஆதலால் ஏசாயா தீர்க்கதரிசி: கர்த்தாவே, நெருக்கத்தில் உம்மைத் தேடுகிறார்கள்; உம்முடைய கண்டனை அவர்கள்மேல் இருக்கையில் அந்தரங்கவேண்டுதலை ஊற்றுகிறார்கள் என்கிறான் (ஏசா. ௨௬, ௰௬).



௨. தங்கள் பிள்ளைகளைச் சிநேகிக்கிற பெற்றாருடைய சிநேகம் பெரிதாயிருக்கிறது. ஏனென்றால் இந்தத் தலைவன் இயேசுநாதரண்டைக்கு வர அவனை ஏவி எழுப்பினதென்ன. மரணத்திலிருந்து எழுப்பப்படவேண்டிய அந்தப் பிள்ளையைச் சிநேகிக்கிற சிநேகந்தான். ஆதலால் பராபரன் தம்முடைய சிநேகத்தைத் தெளிவாய்க் காண்பிக்கும்படிக்கு அவர் தம்மை ஒரு தகப்பனுக்கு ஒப்பிட்டு: தகப்பன் பிள்ளைகளுக்கு இரங்குவதுபோல், கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார் என்று சொல்லுகிறார் (சங். ௱௩, ௰௩). பராபரன் தம்மைப் பட்சமுள்ள தாய்க்கும் ஒப்பிட்டு: ஒரு ஸ்திரி தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காதபடிக்குத் தன் பாலகனை மறப்பாளோ, அப்படிப்பட்டவள் அதை மறந்தாலும், நாம் உன்னை மறப்பதில்லை. இதோ, உள்ளங்கைகளில் உன்னைப் பதித்தோம் என்கிறார் (ஏசா. ௪௯, ௰௫. ௰௬).

௩. பராபரனாகிய கர்த்தர் பெலவீன விசுவாசிகளைத் தள்ளுகிறதில்லை. யவீருவினுடைய விசுவாசம் பெலவீனமாயிருப்பதால்தான் இயேசுநாதர் வந்து, தமது கையை அவள் மேல் வைக்க வேண்டுமென்று கேட்டான். ஆகிலும் கிறிஸ்துநாதர் அவனைத் தள்ளாமல், அவனைத் திடப்படுத்தினார். எப்படியென்னில் வழியிலே அவனுடைய வேலைக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வந்து: உம்முடைய குமாரத்தி மரித்தாள். இனி ஏன் போதகரை பிரயாசப்படுத்துகிறீர் என்று சொன்னபோது (மாற். ௫, ௩௫), இயேசுநாதர் ஆலயத்தலைவனோடே: பயப்படாதே, விசுவாசித்தே இரு என்று சொன்னார். மேலும், பெலவீன விசுவாசிகளைக் குறித்து: அவர் நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கி எரிகிற திரியை அவிக்காமலும் இருக்கிறார் என்று சொல்லப்படுகிறது (ஏசா. ௪௨, ௩).

II. கர்த்தராகிய கிறிஸ்துவினிடத்தில் நாம் கற்றுக் கொள்ளுகிறதாவது:

க. அவர் சர்வத்திற்கும் வல்ல தேவனாயிருக்கிறார். ஏனென்றால் சீவனைக் கொடுத்த பராபரனாகிய கர்த்தரே ஒழிய வேறொருவனுந் தன் சுய ம...த்தினாலே மரித்த யாரையும் உயிரோடெழுப்பக் கூடாது. இப்போதோ கிறிஸ்துநாதர் தமது சுய வல்லமையினாலே இறந்துபோன இந்த யவீருவின் மகளை உயிரோடெழுப்பினார் என்று கேட்கிறோம். ஆதலால் நாம் அவரைக் குறித்து நிதானித்து: இவர் என்றென்றைக்கும் இஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் வல்லமேலான ப...ம், ஆமேன் என்று சொல்லவேண்டும் (ரோ. ௯, ௫).

௨. இவர் மனித சுபாவத்தின்படியேயுங் கூட சர்வத்
திற்கும் வல்லவராயிருக்கிறார். ஏனென்றால் அவர் இறந்து
போன பெண்ணின் கையைப் பிடித்தவுடனே அவள் எழுந்
திருக்கும்படி செய்யும் வல்லமை அவருடைய கைக்கு இருந்
தது. அவர் தாமே தம்மைக் குறித்து அறிக்கையிட்டுச் சொல்
லுகிறதாவது: வானத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதி
காரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத். ௨௮, ௰௮).

௩. கர்த்தராகிய கிறிஸ்து கடைசிநாளிலே இறந்து
போன யாவரையும் எழுப்புவார். ஏனென்றால் இறந்துபோன
இந்தப் பெண்ணை எப்படி எழுப்பினாரோ, அப்படியே கடைசி
நாளில் இறந்துபோன யாவரையும் எழுப்புவார். வேளை
வரும், அப்போது பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவ
ருடைய சத்தத்தைக் கேட்டு, நன்மை செய்தவர்கள் சீவ
னுக்கு எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்களோ
ஆக்கினைக்கு எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்
(யோவா. ௫, ௨௮).

III. இந்தத் தலைவனுடைய இறந்துபோன மகளி
டத்தில் நாம கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. எல்லா மனிதரும், சிறுவரும் வாலிபருங்கூட
சாவுக்குரியவர்களாயிருக்கிறார்கள். இந்தப் பெண் பன்னி
ரண்டு வயதுள்ளவளாக மாத்திரமிருந்தாலும், அவளும்
சாகவேண்டியதாயிருந்தது. ஏனென்றால் எந்த விதத்திலா
கிலும் மரணத்துக்குத் தப்பிப்போக முடியாது. மனிதன்
எவ்வளவு அழகு, ஐசுவரியம், வல்லமையுள்ளவனாயிருந்
தும், ஒவ்வொருவனுக்கும்: மனிதனே, நீ சாகவேண்டும்
என்று சொல்லப்பட்டிருக்கிறது (ஏசுசீராக் ௰௪, ௰௮).

௨. விசுவாசிகளுடைய மரணம் நித்திரைக்கு ஒப்பா
யிருக்கிறது. அப்படியே கிறிஸ்துநாதர் இந்தச் சிறுபெண்
ணின் மரணத்தைக் குறித்துப் பேசி, இந்தப் பெண் மரிக்கிரா
மல், நித்திரை பண்ணுகிறதென்றார். மனிதன் நித்திரை பண்
ணுகையில் தன் வேலையைவிட்டு ஓய்ந்து இளைப்பாறி, பிறகு
அதிகச் சந்தோஷமாய் எழுந்திருக்கிறது எப்படியோ, அப்
படியே விசுவாசிகளுடைய மரணமும் இருக்கிறது. கர்த்த
ருக்குள் சாகிற மரித்தோர் இது முதலாய்ப் பாக்கியவான்
கள் என்று எழுது. ஆம், அவர்கள் வேலைகளைவிட்டு இளைப்
பாறத்தானே என்று ஆவியானவர் சொல்லுகிறார் என்று
எழுதியிருக்கிறபடியே (அப். ௰௪, ௰௩), விசுவாசிகள்
கள் மரணத்திலே நித்திரைபண்ணி ஓய்ந்திருக்கிறார்கள்.
ஆனால் கடைசிநாளில் அவர்கள் இன்பமான நித்திரையிலி



ருந்து எழுந்திருக்கிறதுபோல், நித்திய சீவனுக்கென்று எழுப்
பப்படுவார்கள்.

IV. அந்தத் தாரைக்காரரிடத்திலும் சந்தடியினிடத்
திலுங் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. கிறிஸ்தவர்கள் மரித்த தங்களுடையவர்களுக்காக
அஞ்ஞானிகளைப்போல் துக்கிக்க வேண்டியதில்லை. அவர்கள்
மரித்த தங்களுடையவர்களுக்காகத் துக்கிக்கிறது குற்றமல்ல.
ஏனென்றால் என் குமாரனே, செத்துப்போன எவனுக்காகி
லும் நீ கண்ணீர்விட்டு அழுது, உனக்கு விசேஷித்த இளப்
பம் சம்பவித்ததாகப் புலம்புகிறதும், அவன் உடலைப் பிரேத
அலங்காரம் பண்ணி மரியாதையாய் அடக்கம் பண்ணுகிறது
மே முறைமை என்று சீராக் சொல்லுகிறான் (சீராக். ௩௮,
௰௬). கிறிஸ்தவர்கள் தங்களை ஆற்றித்தேற்ற மனதில்லாத
அஞ்ஞானிகளைப்போல் துக்கிக்கக் கூடாதென்பதற்கு அடை
யாளமாக, இயேசுநாதர் தாரைக்காரரையும் இரைகிற சந்
தடியையுந் தலைவன் வீட்டிலிருந்து துரத்திவிட்டார். அப்
படியே அப்போஸ்தலனாகிய பவுல்: சகோதரரே, நித்திரை
யடைந்தவர்களின் நிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்ற மற்றவர்
களைப்போலே துக்கிக்கு அறிவில்லாதிருக்க எனக்கு மன
தில்லை என்று சொல்லுகிறான் (௧ தெச. ௪, ௰௩). ஏனென்
றால் அஞ்ஞானிகளுக்கு மரித்த தங்களுடையவர்களின்
உயிர்த்தெழுதலைக் குறித்து நம்பிக்கையில்லாதபடியால்,
அவர்களுக்காக மட்டில்லாமல் துக்கிக்க அவர்களுக்கும் நியா
யம் உண்டு. நாமோ விசுவாசத்திலே இறந்துபோன நம்
முடையவர்கள் நித்திரை மாத்திரம் பண்ணுகிறார்கள் என்
றும், தகுந்த வேளையிலே மறுபடியும் எழுந்திருப்பார்கள்
என்றும் அறிந்திருக்கிறபடியால், அவர்கள் நம்மை விட்டுப்
பிரிந்துபோகிறபோது: நான் உங்களை அழுகையோடும் புலம்பலோ
மாகப் போகவிட்டேன், பராபரன் என்றென்றைக்குமுள்ள
மகிழ்ச்சியோடும் களிப்போடேயும் உங்களைத் திரும்ப
எனக்குக் கொடுப்பார் என்று பாரூக் சொல்லுகிறதுபோல்
நம்மை ஆற்றித்தேற்றலாம் (பாரூக். ௪, ௨௩).

௨. குணப்படாதவர்கள் மரித்தோர் உயிர்த்தெழு
தல் உண்டென்று அடிக்கடி விசுவாசிக்கிறதில்லை. அப்படியே
தாரைக்காரரும் சந்தடி செய்தவர்களும் சிறுபெண் மரித்
திராமல் நித்திரை பண்ணுகிறதென்று இயேசுநாதர் சொன்
னதைக் கேட்டு நகைத்தார்கள். சதுசேயருக்கொத்த குணப்
பட்ட மனிதர் மரித்தோருடைய உயிர்த்தெழுதல் உண்டென்
பதை நம்பாமல், இது முதலான கிறிஸ்தமான போதகங்
களை அடிக்கடி பரிகாசம் பண்ணுகிறார்கள்.

## இரண்டாம் பங்கு.

19. சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கு எதைப் பற்றியது.

பெரும்பாடுள்ளவளாயிருந்து சொஸ்தமாக்கப்பட்ட இஸ்திரியைப் பற்றியது.

20. இந்த வியாதி அவளுக்கு எவ்வளவு காலம் இருந்தது.

பன்னிரண்டு வருஷமாய். அவளைக் குறித்து மாற்கு எழுதுகிறதாவது: அவள் அநேகம் பரிகாரிகளால் வெகு பாடுபட்டு, தன்னிடத்தில் உண்டானதெல்லாத்தையும் செலவழித்தும், இலாபம் ஒன்றுங் காணாமல், பின்னையும் அவளுக்குக் கேடாயிற்று (மாற். ௫, ௨௬).

21. அவள் கடைசியாக ஆரிடத்தில் ஒத்தாசை தேடினாள்.

இயேசு இரட்சகரிடத்தில்.

22. அவள் அவரண்டைக்கு எப்போது வந்தாள்.

அவர் தலைவன் வீட்டுக்குப் போகையில் தான்.

23. அவள் அவரை நோக்கி எப்படி விண்ணப்பம் செய்தாள்.

அவள் ஒரு வார்த்தையும் சொல்லாமல், இயேசுநாதருடைய வஸ்திரத்தை மாத்திரந் தொட்டேனாகில் சொஸ்தமாவேன் என்று உறுதியாய் விசுவாசித்து, அவர் பிறகே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்.

24. அவரைத் தொட்டதினால் அவளுக்குச் சுகம் வந்ததா.

ஆம். அவள் கிறிஸ்துவின் வஸ்திரத்தைத் தொட்டவுடனே தன் உதிரத்தின் ஊறல் நின்று அந்நேரமே சொஸ்தமானாள். ஆனால் அவள் தொட்டதினால் மாத்திரம் சுகப்படாமல், தன் விசுவாசத்தினாலே அப்படியானாள். அதை இயேசுநாதர்: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்று சொன்னதினால் காண்பிக்கிறார்.

## படிப்பினை.

I. கிறிஸ்துநாதரிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. அவர் சர்வத்துக்கும் வல்ல கர்த்தராயிருக்கிறார். அவருடைய வஸ்திரத்தைத் தொட்டதினால் வியாதிஸ்தர் சுகத்தையும் பெலனையும் அடையத்தக்கதாக அவருக்கு வல்லமையிருந்தது.



௨. அவர் உத்தம பரிகாரியாயிருக்கிறார். இந்த ஸ்திரீயானவள் பன்னிரண்டு வருஷமாய் வியாதியாயிருந்து, அநேக பரிகாரிகளைக் கேட்டும், மெய்யான பரிகாரியும் சகாயருமாகிய இயேசு இரட்சகரிடத்திலல்லாமல், வேறொருவரிடத்திலும் ஒத்தாசையடையவில்லை. அப்படியே அவர் தம்மைக் குறித்து: நாம் உன் பரிகாரியாகிய கர்த்தராயிருக்கிறோம் என்கிறார் (௨ மோ. ௰௫, ௨௬).

II. அந்தப் பெரும்பாடுள்ள ஸ்திரியினிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. பூமியிலுள்ள மருந்துகளுக்குப் பராபரன் தம்முடைய ஆசீர்வாதத்தைக் கொடுத்தாலொழிய பிரயோசனம் இல்லை. மருந்துகள் நல்லதும் மனிதருடைய சுகத்துக்கென்று பராபரனால் சிருஷ்டிக்கப்பட்டதுமாயிருக்கிறது. ஆதலால் நாம் அவைகளை அசட்டைபண்ணக்கூடாது. ஆகிலும் வியாதியுள்ளவன் மருந்துகளின் பேரிலல்ல, பராபரனேரில் நம்பிக்கை வைக்கவேண்டும். ஏனென்றால் பராபரன் அவனுக்கு ஒத்தாசை செய்தாலொழிய, சகல மருந்துகளும் வீணாயிருக்கிறதென்று இந்த ஸ்திரியினுடைய திருஷ்டாந்தமே தெளிவாய்க் காண்பிக்கிறது.

௨. நாம் நமக்குண்டாகும் சகல துன்பங்களிலும் விசேஷமாய் வியாதிகளிலும் மெய்யான விசுவாசத்தோடு இயேசுநாதரிடத்தில் ஒத்தாசை தேடவேண்டும். அப்படியே இந்த ஸ்திரி செய்து ஒத்தாசை அடைந்தாள். இயேசு இரட்சகர் அவளுக்கு: மகளே திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

௩. பராபரனாகிய கர்த்தர் விசுவாசமுள்ள ஆத்துமாவின் வார்த்தைகளை மாத்திரமல்ல, பெருமூச்சுகளையுங் கேட்கிறார். இந்த ஸ்திரி தன் விண்ணப்பத்தைத் தன் வார்த்தையினாலே சொல்லாமல், தன் இருதயத்தில் மாத்திரம இயேசுவினுடைய ஒத்தாசைக்காகப் பெருமூச்சுவிட்டு: நான் அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை மாத்திரந் தொட்டேனாகில், சொஸ்தமாவேன் என்றாள். இயேசுநாதரோ அவளுடைய பெருமூச்சைக் கேட்டார். அப்படியே பராபரன் தம்முடைய விசுவாசிகளுக்கெல்லாம் செய்கிறார். இதைக் குறித்து தாவீது: கர்த்தாவே, சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர், அவர்களுடைய இருதயத்தைத் திடப்படுத்துவீர் என்று சொல்லுகிறான் (சங். ௰, ௰௭).

ஆதலால் விசுவாசமுள்ள ஆத்துமாக்கள் யாவரும் தங்களுக்கு உண்டாகும் வருத்தமான துன்பங்களிலும் மரணத்திலும் தைரியமாய்ப் பெருமூச்சுவிட்டு:

நான் பேச்சு மூச்சில்லாமல் குளிர்ந்து போகையில்,
என் ஆசையைத் தள்ளாமல் கண்ணோக்கும், கர்த்தரே
என்று கெஞ்சிக்கொள்வார்களாக, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௨௫-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ருக. நாஅ.)

சுவி. மத். ௨௪, ௰௫—௨௮.

ஆனால் தானியேல் தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்ட பாழாக்கு
தலின் அருவருப்பைப் பரிசுத்த ஸ்தலத்திலே நிற்கக் கண்டீர்களா
னால், (அதை வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவான்,) 16 அப்போது
யூதேயாவிலுள்ளோர் பர்வதங்களின்மேல் ஓடிப்போகக் கடவார்
கள். 17 வீட்டின்மேல் இருப்பவன் தன் வீட்டிலே எதையாகிலும்
எடுப்பதற்கு இறங்க வேண்டாம். 18 வயலிலிருப்பவன் தன் வஸ்
திரங்களை எடுத்துக்கொள்ளப் பின்னிட்டுத் திரும்பவும் வேண்டாம்.
19 ஆனால் அந்த நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் முலைகொடுக்கிற
வர்களுக்கும் ஐயோ. 20 ஆனால் நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்
திலும் ஓய்வுநாளிலுஞ் சம்பவியாதபடிக்கு வேண்டிக் கொள்ளுங்
கள். 21 ஏனென்றால் மகா உபத்திரவம் அப்போது உண்டா
யிருக்கும். அப்படிப்பட்டது லோகத்தின் ஆதிகாலந்துவக்கி இந்
நாள்வரைக்குஞ் சம்பவித்ததும் இல்லை, இனி சம்பவிப்பதும் இல்லை.
22 அந்த நாட்கள் குறுக்கப்படாதேபோனால், ஒரு மாமிசமாகி
லுந் தப்பிப்போவதில்லை. தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்
தமோ அந்த நாட்கள் குறுக்கப்படும். 23 அப்போது யாதொரு
வன் உங்களுடனே: இதோ கிறிஸ்து இங்கே, இதோ அங்கே என்று
சொன்னால், நம்பாதேயுங்கள். 24 ஏனென்றால் கள்ளக்கிறிஸ்து
க்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து
கொள்ளப்பட்டவர்களை முதலாய் மோசம்போக்கத் தக்கதாகப்
பெரிய அடையாளங்களையும் அதிசயங்களையுஞ் செய்வார்கள்.
25 இதோ, உங்களுக்குச் சொன்னேன். 26 ஆகையால்: இதோ,
வனாந்தரத்திலிருக்கிறாரென்று உங்களுக்குச் சொன்னார்களானால்,
வெளிப்புறப்படாதேயுங்கள்; இதோ, அறைவீடுகளில் இருக்கிறார்
என்றால், நம்பாதேயுங்கள். 27 ஏனென்றால் மின்னல் கிழக்
கில் எழும்பி, மேற்கு மட்டும் பிரகாசிக்கிற வண்ணமாய் மனுஷனு
டைய குமாரன் வருகையும் இருக்கும். 28 ஏனெனில் பிணம் எங்
கே இருக்கிறதோ, அங்கே கழுகுகள் வந்து கூடும் என்றார்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தில் எத்தனை பங்குண்டு.

இரண்டு பங்கு.



### முதலாம் பங்கு.

2. முதலாம் பங்கு எதைப் பற்றியது.

எருசலேம் பட்டணத்தின் விசேஷமாய் எருசலேந் தேவாலயத்தின் அழிவுக்கு முன்வரும் அடையாளங்களைப் பற்றியது.

3. அந்த அடையாளங்களைக் குறித்துப் பேசுகிறவர் ஆர்.

நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துநாதர்.

4. அவர் அதைக் குறித்துப் பேசும்படியான முகாந்தரம் என்ன.

அவருடைய சீஷர்கள் அவருக்கு மகிமையான இந்தத் தேவாலயக் கட்டடத்தையும், அதில் உபயோகிக்கப்பட்டிருந்த விலையேறப்பெற்ற கற்களையுங் காட்டினபோது, அவர்: ஒரு கல்லின்மேல் வேறொரு கல் வைக்கப்படாதபடிக்கு இந்த மகிமையான தேவாலயம் அழிக்கப்படுங் காலம் வருமென்று அறிவித்தார். இது எப்போது சம்பவிக்கும் என்று சீஷர் கேட்டதற்கு: எருசலேம் பட்டணத்தின் அழிவும் தேவாலயத்தின் அழிவும் சமீபமாயிருக்கிறதை அவர்கள் அறிந்துகொள்ளும்படி அவர் அவைகளுக்கடுத்த சில விசேஷித்த அடையாளங்களைச் சொன்னார்.

5. இந்த அழிவுக்குமுன் வரும் எத்தனை அடையாளங்களை நமது இரட்சகர் சொல்லுகிறார்.

இரண்டு அடையாளங்களை.

6. அவர் சொன்ன முதலாம் அடையாளம் என்ன.

பாழாக்குதலின் அருவருப்பு. அதைக் குறித்து கிறிஸ்துநாதர் நமது வாக்கியத்திலே சொல்லுகிறதாவது: தானியேல் தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்ட பாழாக்குதலின் அருவருப்பைப் பரிசுத்தஸ்தலத்திலே நிற்கக் கண்டீர்களானால், (அதை வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவான்,) அப்போது யூதேயாவிலுள்ளோர் பருவதங்களின்மேல் ஓடிப்போகக் கடவார்கள். வீட்டின்மேலிருப்பவன் தன் வீட்டில் எதையாகிலும் எடுப்பதற்கு இறங்கவேண்டாம். வயலிலிருப்பவன் தன் வஸ்திரங்களை எடுத்துக்கொள்ளப் பின்னிட்டுத் திரும்பவும் வேண்டாம் (௰௫-௰௮).

7. பாழாக்குதலின் அருவருப்பு குறிக்கிறதென்ன.

அது பாழாக்குதலோடும் அழிவோடும் வரும் பயங்கரமான காரியங்கள் தான்.

8. அப்படிப்பட்ட பாழாக்குதலின் அருவருப்பு எருசலேமின் அழிவுக்குமுன் வரும் என்று சொல்லப்பட்டதா.

ஆம் தானியேல் தீர்க்கதரிசி அதை முன்னறிவித்தான், அவனுடைய தீர்க்கதரிசனத்தை முன்னிட்டுத்தான் கிறிஸ்துநாதர் நம்முடைய வாக்கியத்திலே: இதை வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவான் என்கிறார்.

9. இந்தத் தீர்க்கதரிசனம் எங்கே எழுதியிருக்கிறது.

தானியேல் கூ, உஎ-ல் அருவருப்பான செட்டைகளோடே பாழ்க்கடிக்கிறவன் வந்து இறங்குவான். நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலந் தீருமட்டும் பாழ்க்கடிக்கிற சனத்தின்மேல் சொரியும்.

10. இதிலே பாழாக்குதலின் அருவருப்பு எங்கே காணப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

நம்முடைய இரட்சகர் சொன்னபடியே அது பரிசுத்த ஸ்தலத்திலே, எருசலேம் பட்டணத்திலே, ஆம், உடன்படிக்கையின் பெட்டியுந் தங்கள் செட்டைகளை விரித்துக்கொண்டிருக்கிற கேருபீன்களும் இருக்கும் பரிசுத்தத்துக்குப் பரிசுத்தமான ஸ்தலத்திலே தான். அந்தப் பாழாக்குதல் செட்டைகளோடு இருக்கிறது என்று சொல்லுகிறார்.

11. அப்போது அங்கே வைக்கப்பட்ட பாழாக்குதலின் அருவருப்பு என்ன.

வருஷந்தோறும் பிரதான ஆசாரியனையல்லாமல் வேறொருவனும் பிரவேசிக்கத் துணியாத பரிசுத்தத்துக்குப் பரிசுத்தமான ஸ்தலத்திலே ரோமர் வைத்த விக்கிரகமாகிய ரோம இராயனுடைய சுரூபந்தான். இந்தச் சுரூபத்தை யூதர் ஒரு பெரிய அருவருப்பாகவும், ஆம், தேவாலயம் கொஞ்சநாளுக்குள் அழிக்கப்பட்டபடியால், பாழாக்குதலின் அருவருப்பாகவும் எண்ணினார்கள்.

12. ஆனால் இயேசுநாதர்: அதை வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவான் என்பதை ஏன் சேர்த்துச் சொன்னார்.

அவர் அதினாலே பாழாக்குதலின் அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்திலே காணப்படும்போது, அழிவின் காலம் சமீபமாயிருக்கிறதென்றும், அவர்கள் யூதேயா தேசத்தைவிட்டு, மலைதேசத்துக்கு ஓடிப்போய்த் தங்களை ஒளித்துக்கொள்ளுங் காலம் வந்ததென்றுங் காண்பிக்கப் பிரசித்தமாய் அப்படிச் சொன்னார். மேலும் வீட்டின்மேல் இருப்பவன் தன் வீட்டில் எதையாவது எடுப்பதற்கு இறங்கவும், வயலிலிருப்பவன் தன் வஸ்திரங்களை எடுத்துக்கொள்ளத் திரும்பவுங் கூடாத அவ்வளவு சீக்கிரமாய் இந்த அழிவு வரும் என்று காண்பிக்கிறார்.

13. எருசலேமின் அழிவுக்கு இரண்டாம் அடையாளம் என்ன.



அப்போது இருக்கும் பெரிய துன்பமும் [illegible]ருத்தமுந் தான். கிறிஸ்துநாதர் அதைப்பற்றி நமது [illegible]யத்திலே [illegible]லுகிறதாவது: ஆனால் அந்த நாட்[illegible] [illegible]ர்ப்பவதிகளுக்கும் முலைகொடுக்கிறவர்களுக்கும் ஐயோ [illegible]னால் நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலும் ஓய்வு[illegible] சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள். [illegible]னென்றால் மகா உபத்திரவம் அப்போது உண்டாயிருக்கும். அப்படிப்பட்டது லோகத்தின் ஆதிகாலந் துவக்கி இந்நாள் வரைக்கும் சம்பவித்ததுமில்லை, இனி சம்பவிப்பதுமில்லை. அந்த நாட்கள் குறைக்கப்படாதேபோனால், ஒரு மாமிசமானாலுந் தப்பிப்போவதில்லை. தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும் (யகூ-உஉ).

14. நமது இரட்சகர்: கர்ப்பவதிகளுக்கும் முலைகொடுக்கிறவர்களுக்கும் ஐயோ என்று ஏன் சொல்லுகிறார்.

அவர்கள் தங்களையே காக்க வேண்டியதுமல்லாமல், தாங்கள் ஓடிப்போகையில் தங்கள் கர்ப்பத்தின் கனிக்காகவும் சிறு குழந்தைகளுக்காகவுங் கவலைப்படுவது அவர்களுக்கு அதிகத் துன்பமாயிருக்கும் என்பதினால் தான்.

15. யூதர்கள் தாங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலும் ஓய்வுநாளிலும் சம்பவியாதபடிக்கு ஏன் வேண்டிக்கொள்ள வேண்டும்.

மாரிகாலத்தில் அவர்கள் மழையினாலுங் குளிரினாலும் தடைப்பட்டு, தங்கள் சத்துருவுக்குத் தப்பி ஒளித்துக்கொள்வது அதிகப் பிரயாசையும் கஷ்டமுமாய் இருக்குமாகையாலும், ஓய்வுநாளிலே யூதர் தூரப்பிரயாணஞ் செய்யக்கூடாதென்று விலக்கப்பட்டிருந்ததினாலுந் தான்.

16. அந்த நாட்கள் குறைக்கப்படாதேபோனால், ஒரு மாமிசமானாலுந் தப்பிப்போவதில்லையென்று கர்த்தர் சொன்ன தீர்க்கதரிசன வார்த்தையினால் குறிக்கப்படுகிறதென்ன.

அதினாலே வருகிற துன்பங்கள் எவ்வளவு பெரிதென்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் எருசலேம் பட்டணத்தின் முற்றிக்கை குறைக்கப்படாமல் இன்னம் சிலகாலம் இருந்திருக்குமேயானால், அதிலுள்ள மனிதர் யாவரும் நம்பிக்கையற்று கெட்டுப்போவார்கள்.

17. இந்தத் துன்பங்கள் நெடுநாள் இருக்குமா.

இல்லை. தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்தம், அதாவது எருசலேமிலுள்ள நீதியும் விசுவாசமுமுள்ள கிறிஸ்தவர்களின் நிமித்தம் அந்த நாட்கள் குறைக்கப்பட்டுப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

படிப்பினை.

18. ...ச் சுவிசேஷவாக்கியத்தின் முதற்பங்கினால் நாம் கற்று... ...கிறதென்ன.

...சலேம் பட்டணத்தாரிடத்தில் நாம் கற்றுக்கொ...கிறதாவது:

க. ...பெரிய பாவங்களுக்குத் தக்கதாகப் பெரிய தண்டனை வரும். எருசலேம் பட்டணத்தார் பராபரனுடைய சனத்தைத் துன்பப்படுத்தி, அப்போஸ்தலரைக் கொன்றுபோட்டதுந் தவிர, கர்த்தராகிய கிறிஸ்துவையும் சிலுவையில் அறைந்து, பராபரனுக்கு விரோதமாக மிகவும் பாவஞ் செய்தபடியால், அவர்கள் அவ...லே பயங்கரமாய்த் தண்டிக்கப்பட்டார்கள். லோகத்தின் ஆதிகாலமுதல் இதுவரையில் ...ம்பவித்திராத உபத்திரவம் அந்தப் பட்டணத்தின்மேல் வந்த... அப்படியே பராபரன் கடினக் கழுத்துள்ள குணப்படாத மனிதருக்குஞ் செய்கிறார். தேவரீர் ஆகாமியத்தை விரும்புகிற தேவன் அல்ல, பொல்லாதவன் உம்மிடத்திலே தரிகொள்ளமாட்டான் (சங். ரு, ரு).

உ. பராபரனாகிய கர்த்தர் பொல்லாதவர்களைத் தண்டிக்கையில், தமது விசுவாசிகளை மறவாமல், அவர்களுக்காக உண்மையாய்க் கவலைப்படுகிறார். அப்படியே அவர் எருசலேம் பட்டணம் அழிக்கப்படுகையில் துன்பம் ...திகமாயிருந்தபோது, தெரிந்துகொள்ளப்பட்ட த...ட...பவர்களாகிய விசுவாசிகளை நினைத்து, அவர்களின் நிமித்தம் அந்த உபத்திரவநாட்களைக் ...றுக்கினார். அந்தப்படியே ... ...கா லத்தில் லோகம் சலப்பிரளயத்தினால் தண்டிக்கப்படுகையில், நோவாவையும் அவன் வீட்டாரையும் பேழையில் பிரவேசிக்கப்பண்ணி அவர்களை இரட்சித்தார் (கமோ. அ). மேலும் சோதோம் கொமோராப் பட்டணங்களை அக்கினியினாலுங் கெந்தகத்தினாலும் அழிக்கையில், அவர் நீதிமானாகிய லோத்தைத் தம்முடைய தூதரைக்கொண்டு அதிலிருந்து மலையிலிருந்த ஊருக்கு அழைத்துப்போய் இரட்சி...தார் (கமோ. ௰௯, ௰௬). இதின் நிமித்தம் அவரைக் குறித்துப் பேதுரு அப்போஸ்தலன்: கர்த்தர் தெய்வபக்தியுள்ளவர்களைச் சோதனைக்கு நீங்கலாக்கி விடுவிக்கவும், அநீதக்காரரையோ நியாயந்தீர்க்கும் நாளுக்கு ஆக்கினைக்குள்ளானவர்களா... வைக்கவும் அறிவார் என்று சொல்லுகிறான் (உ பேது. உ, ௯).

இரண்டாம் பங்கு.

19. சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கு எதைப் பற்றியது.



கடைசி நாளில் கிறிஸ்துவினுடைய வரு...க்கு முன் வரும் அடையாளங்களைப் பற்றியது.

20. அந்த அடையாளங்களைக் குறித்து நம்மைப் போதிக்கிறதார்.

நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துநாதர்.

21. அவர் அவைகளைக் குறித்து நமக்குப் போதிக்கக் காரணமென்ன.

க. எருசலேம் பட்டணத்தின் அழிவு முழு லோகத்தின் அழிவுக்கு முன்னடையாளமாயிருப்பதினாலும்,

உ. அவருடைய சீஷர்கள் எருசலேமின் அழிவும், கடைசிநாளின் லோகமுடிவும் ஒருமிக்கச் சம்பவிக்குமென்று நி...த்து, இந்த இரண்டு காரியங்களையும் பற்றிய கேள்விகளை ஒன்றாய்ச் சேர்த்துக் கேட்டதினாலுந் தான். அவர்கள் எருசலேமின் அழிவை நினைத்து, இது எப்போது சம்பவிக்கும் என்று கேட்டதோடு கூட, லோகத்தின் முடிவுக்கும் ...மு...டைய வருகைக்கும் அடையாளம் என்னவென்றுங் கேட்டார்கள். சீஷர் இந்த இரு கேள்விகளையுஞ் சேர்த்துக் கேட்டபடியால், இயேசுநாதர் இந்த இரண்டுக்கும் உத்தரவு கொடுக்கிறார்.

22. நம்முடைய வாக்கிய...தின்படியே கடைசிநாளில் உண்டாகும் கிறிஸ்துவின் வருகைக்கு அடையாளம் என்ன.

கடைசிக்காலத்தில் லோகம் கிறிஸ்துவின் மேல் தங்களை உயர்த்தி, பெரிய அற்புதங்களைச் செய்கிற கள்ளப்போ...கரால் நிரப்பப்படுவதே அதற்கு அடையாளம் என்று கர்த்...ர் சொல்லுகிறார் (உச).

23. கிறிஸ்தவர்கள் அப்போர்ப்பட்ட போதகரை நம்பலாமா.

ந...க் கூடாது. ஏனென்றால் இதோ, வனாந்தரத்திலிருக்கிறார் என்று உங்களுக்குச் சொன்னார்களானால், வெளிப்புறப்படாதேயுங்கள், இதோ, அறைவீடுகளில் இருக்கிறார் என்றால், நம்பாதேயுங்கள் என்று இரட்சகர் சொல்லுகிறார் (உ...).

24. கள்ளப்போதகரை எதினால் அறியலாம்.

பராபரனுடைய வசனத்தினால் தான். ஏனென்றால் பராபர...டைய வசனத்துக்கு விரோதமாய்ப் போதிக்கிறவன் எல்லாம் கள்ளத்தீர்க்கதரிசி. கிறிஸ்துவை நாம் பராபரனுடைய வசனத்திலே தேடவேணும். ஏனென்றால்: வேத எழுத்துக்களை ஆராய்ந்து பாருங்கள், அதேனென்றால் அதுகளில் உங்களுக்கு நித்திய சீவன் உண்டென்று எண்ணுகிறீர்

களே. [illegible]ந்தச் சாட்சிகொடுக்கிறதுகள் அதுகள் தானே என்று இயேசுநாதர் சொல்லுகிறார் (யோவா. ௫, ௩௯). ஆதலால் சத்தியவேதத்தைத் தள்ளி கிறிஸ்துவை நமக்குப் போதிக்கிறவன் எவனோ, அவன் கள்ளத் தீர்க்கதரிசியாயிருக்கிறான். ஆதலால் கிறிஸ்து: இதோ, வனாந்தரத்திலிருக்கிறார் என்று உங்களுக்குச் சொன்னார்களானால் வெளிப்புறப்படாதேயுங்கள்; இதோ, அறைவீடுகளில் இருக்கிறார் என்றால் நம்பாதேயுங்கள் என்றார்.

25. கிறிஸ்துநாதர் அறைவீடுகளிலும் வனாந்தரத்திலும் இருக்கிறார் என்று இதுவரையில் விசேஷமாய்ப் போதித்தவர்கள் ஆர்.

பாப்புமார்க்க அநுசாரிகள் தான். எப்படியெனில் வனவாசிகளாக வனாந்தரத்துக்கு ஓடிப்போகிறவர்களும், சந்நியாசிகளாகத் தங்களை மடத்தின் அறைவீடுகளில் ஒளித்துக் கொள்ளுகிறவர்களும் விசேஷித்த பரிசுத்தவான்கள் என்றும், கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்கிறவர்கள் என்றும் பாவித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் நாம் இவர்களை நம்பக் கூடாது. அவர்களுடைய ஆராதனையைக்குறித்துக் கர்த்தர்: மனுஷரின் கற்பனைகளாகிய போதகங்களைப் போதிக்கிறவர்களாய் விருதாவிலே நமக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று சொல்லுகிறார் (மத். ௰௫, ௯).

26. இந்த அடையாளத்துக்குப்பின் கர்த்தர் சீக்கிரமாய் வருவாரா.

ஆம். அதேனென்றால் மின்னல் கிழக்கிலே எழும்பி மேற்குமட்டும் பிரகாசிக்கிற வண்ணமாய் மனுஷனுடைய குமாரன் வருகையிருக்கும் என்று சொல்லுகிறார் (௨௭).

27. கிறிஸ்துநாதர் தம்முடைய வருகையை ஏன் மின்னலுக்கு ஒப்பிடுகிறார்.

அது அசுப்பிலும் திடீரென்றும் மனிதர்மேல் வருகிறபடியால் தான். ஏனெனில் மின்னலானது நம்முடைய கண்களுக்கு முன்பாக நாம் ஒன்றும் அறியாதிருக்கும்போது திடீரென்று ஒரு நொடியில் வந்து, கிழக்கில் எழும்பி, மேற்குமட்டும் பிரகாசிக்கிற வண்ணமாகக் கிறிஸ்துவின் வருகையும் அசுப்பிலே திடீரென்று வரும்.

28. கிறிஸ்துநாதர் தம்முடைய வருகையைக் குறித்த இந்தத் தீர்க்கதரிசனத்தைச் சொன்னபொழுது, பிணம் எங்கேயிருக்கிறதோ, அங்கே கழுகுகள் வந்து கூடும் என்பதை ஏன் சேர்த்துச் சொல்லுகிறார்.

அது ஒரு பழமொழி. ஏனென்றால் பிரேதங்களைத் தின்கிற கழுகுகள் தூரத்திலிருந்தாலும், பிரேதம் எங்கே



யிருக்கிறதென்பதை மோப்பத்தினால் அறிந்து, அந்தத் திக்க வெகு சீக்கிரமாய்க் கூடிவருகிறதுண்டு. கிறிஸ்துநாதர் நமது பாவங்களுக்காக மரணத்தைச் சகித்தபடியால், தம்மைப் பிரேதத்துக்கும் விசுவாசிகளைக் கழுகுக்கும் ஒப்பிட்டு, கழுகுகள் எப்படிப் பிரேதத்தைச் சுற்றி கூடிவருகிறதோ, அப்படியே இவர்கள் கடைசிநாளில் தம்மண்டைக்கு வந்து சேருவார்கள் என்று காண்பிக்கிறார்.

## படிப்பினை.

சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கினால் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. எல்லாப் போதகரும் மெய்யான போதகர்களல்ல. ஏனென்றால் நம்முடைய இரட்சகர் இந்த வாக்கியத்திலே: அநேகக் கள்ளத் தீர்க்கதரிசிகள் எழும்புவார்கள் என்றும், அவர்கள் தம்மைக் குறித்துப் பிரசங்கித்தாலும் அவர்களை நம்ப வேண்டாம் என்றும் சொல்லுகிறார். இதற்கொத்தபடி பரிசுத்த யோவான்: பிரியமானவர்களே, நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், ஆவிகளைப் பராபரனால் உண்டானதுகளோவென்று சோதித்து அறியுங்கள் என்று சொல்லுகிறான் (௧ யோ. ௪, ௧).

௨. அவர்கள் நம்மைப் பராபரனுடைய வசனத்துக்கு விரோதமாகச் செய்யவும் விசுவசிக்கவும் ஏவி தாறுமாறுக்குகிற[illegible]து, நாம் அவர்களுடைய அற்புத அடையாளங்களை நம்பக்கூடாது. திருஷ்டாந்தமாக, பாப்புமார்க்கத்தார் தங்கள் கள்ளப்போதகத்தை ரூபிக்கும்படிக்கு அந்தந்தப் பரிசுத்த ரூபத்தில் நடந்த அற்புதங்களைச் சொல்லிக்காட்டித் தங்களை மேன்மைபாராட்டுகிற வழக்கம் உண்டு. ஆனால் கிறிஸ்துநாதர் இங்கே கள்ளத் தீர்க்கதரிசிகளுங்கூட பிசாசினுடைய ஒத்தாசையினாலே அற்புத அடையாளங்களைச் செய்யக்கூடும் என்று சொல்லுகிறார். ஆதலால் அப்படிப்பட்ட பொய்யான அற்புத அடையாளங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதென்னவென்றால்: நாங்களும் அல்லது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனும் நாங்கள் உங்களுக்கு அறிவித்த சுவிசேஷத்தையே யல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு அறிவித்தால், சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவான் என்பதே (கலாத். ௧, ௮).

௩. தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் முழுவதும், அதாவது முடிவுபரியந்தம் பெரிய தப்பறையிலே தாறுமாறுக்கப்பட மாட்டார்கள். ஏனென்றால் நாம் தாவீது, பேதுரு என்பவர்களுடைய திருஷ்டாந்தத்தில பார்க்கிறபடியே,

அவர்கள் தப்பிப் பராபரனுடைய கிருபையை விட்டு விழுந்தாலும், இந்தத் தப்பறையிலே முடிவு பரியந்தம் நிலைநிற்கமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் அதிலே நிலைத்திருந்தால், அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களல்ல. ஆகலால் கிறிஸ்துநாதர் நம்முடைய வாக்கியத்தில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளுடைய கள்ளப் போதகத்தினாலே மோசம் போகமாட்டார்கள் என்று சொல்லுகிறார். ஏனென்றால் எவன் இயேசு கிறிஸ்துவைப் பற்றும் மெய்யான விசுவாசத்திலே பாக்கியமான நித்திரையடைவான் என்று பராபரன் முன்னமே கண்டு, நித்திய ஜீவனுக்கென்று முன்னமே தெரிந்துகொண்டாரோ, அவன் தான் தெரிந்துகொள்ளப்பட்டவன்

௪. கடைசிநாள் இன்னந் தூரமாயிருக்கமாட்டாது. ஏனென்றால் நம்முடைய இரட்சகர் லோகம் கள்ளத்தீர்க்கதரிசிகளால் நிறையப்பட்டபோது அதன் முடிவு சமீபமாயிருக்கிறதென்று சொல்லுகிறார். இந்த நம்முடைய காலத்திலே எண்ணிக்கைக்குள் அடங்காத கள்ளமார்க்கங்களும் பிரிவுகளும் உண்டு. ஏனென்றால் நாம் நம்முடைய இந்த நாட்களைப்பற்றி யோவானோடு: பிள்ளைகளே, கடைசி நேரமாயிருக்கிறது என்று சொல்லலாம் (௧ யோவா. ௨, ௰௮).

௫. கடைசிநாள் யாவர்மேலும் அசுப்பிலே திடீரென்று வரும். அதை எண்பிக்க நம்முடைய இரட்சகர் தம்முடைய வருகையை மின்னலுக்கு ஒப்பிட்டு, மின்னல் கிழக்கில் எழும்பி மேற்குமட்டும் பிரகாசிக்கிறவண்ணமாய் மனுஷனுடைய குமாரனின் வருகையிருக்கும் என்கிறார் (௨௭). ஆகலால் நாம் ஒருபோதும் நிர்விசாராயிராமல், அந்தவேளை திடீரென்று நமதுமேல் வராதபடிக்கு எப்போதும் விழித்திருந்து செபம்பண்ணி ஆயத்தமாயிருக்கவேண்டும்.

௬. தெய்வபத்தியுள்ளவர்கள் கடைசிநாளுக்குப் பயப்படாமல் அதின் பேரில் சந்தோஷமாயிருக்கலாம். ஏனென்றால் கழுகு பிரேதத்துக்குப் பயப்படாமல், சந்தோஷமாய் அதினண்டை சேருகிறது எப்படியோ, அப்படியே விசுவாசிகள் கடைசிநாளில் கிறிஸ்துவண்டை சந்தோஷமாய்ச் சேருவார்கள். ஏனென்றால் மரணம் அவர்களைக் கிறிஸ்து இயேசுவினுடைய சிநேகத்திலிருந்து பிரிக்கக் கூடாதேபோனால், கடைசிநாளும் அவர்களை அதிலிருந்து பிரிக்கமாட்டாது. ஆதலால் அவர்கள் சொல்லக் கூடியதென்னவென்றால்: மரணமானாலும், ஜீவனானாலும், தூதரானாலும், துரைத்தனங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும் உயர்த்தியானாலும், தாழ்த்தியானாலும்,



வேறொரு சிருஷ்டி எதுவும், நம்மை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பராபரனுடைய சிநேகத்தைவிட்டுப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் என்பதைத் தான் (ரோ. ௮, ௩௮. ௩௯).

29. கிறிஸ்துவின் இந்த வருகைக்கு நம்மை ஆயத்தம் பண்ணக் கூடியவர் ஆர்.

பராபரனாகிய கர்த்தர்தாமே தம்முடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு நம்மை அதற்கு ஆயத்தம் பண்ணுகிறார்.

அன்புள்ள பராபரனாகிய கர்த்தாவே, உம்முடைய நேசகுமாரன் வரும்போது நாங்கள் அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கும் படிக்கும், தற்காலத்திலே நாங்கள் உமக்கு உண்மையுள்ள இருதயத்தோடு ஊழியஞ் செய்யும் படிக்கும், எங்களை ஏவி எழுப்பியருள வேண்டுமென்று இந்த உம்முடைய நேசகுமாரனும் எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம் சுவாமி, ஆமேன்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின உ௬-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௩௱௯௪.)

கவி. மத். உ௫, ௩௧—௪௬.

ஆனால் மனுஷனுடைய குமாரன் தமது மகிமையில் தம்முடைய சகல பரிசுத்த தூதரோடுங் கூட வரும்போது, அவர் தமது மகிமையினுடைய சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்திருப்பார். 32 அப்போது அவருக்கு முன்பாக எல்லாச் சாதிகளுங் கூட்டப்படுவார்கள். அவர் ஒரு மேய்ப்பன் ஆடுகளையும் வெள்ளாடுகளையும் பிரிக்கிறதுபோல அவர்களை வெவ்வேறாகப் பிரித்து, 33 ஆடுகளை தம்முடைய வலது பக்கத்திலும் வெள்ளாடுகளை இடது பக்கத்திலும் நிறுத்துவார். 34 அப்போது இராசா தம்முடைய வலது பக்கத்திலுள்ளவர்களுக்குச் சொல்வதாவது: வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, லோகத்தோற்றமுதல் உங்களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். 35 ஏனென்றால் பசியாயிருந்தேன், எனக்குச் சாப்பாடுகொடுத்தீர்கள். தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள். பரதேசியாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள். 36 அம்மணமாயிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள். வியாதியாயிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள். காவலில் இருந்தேன், என்னண்டைக்கு வந்தீர்கள் என்பார். 37 அப்போது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தாரமாகச் சொல்வதாவது: ஆண்டவரே, உம்மை நாங்கள் எப்போது பசியாயிருக்கக் கண்டு போஷித்தோம்; அல்லது

தாகமாயிருக்கக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்.
38 உம்மை நாங்கள் எப்போது பரதேசியாயிருக்கக் கண்டு சேர்த்
துக்கொண்டோம்; அல்லது அம்மணமாயிருக்கக் கண்டு உமக்கு வஸ்
திரங் கொடுத்தோம். 39 உம்மை நாங்கள் எப்போது வியாதியாக
வும் அல்லது காவலில் இருக்கிறவராகவுங் கண்டு உம்மண்டைக்கு
வந்தோம் என்பார்கள். 40 இராசா அவர்களுக்குப் பிரத்தியுத்தார
மாக: மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் எல்லாரி
லுஞ் சிறியரான இந்த என்னுடைய சகோதரரில் ஒருவனுக்கு என்ன
செய்தீர்களோ, அதை எனக்குச் செய்தீர்கள் என்பார். 41 அப்
போது இடதுபக்கத்திலுள்ளவர்களுக்குஞ் சொல்லுவார்: சபிக்
கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்கும் அதின் தூதருக்
கும் ஆயத்தம் பண்ணப்பட்ட நித்திய அக்கினியிலே போங்கள்.
42 ஏனெனில் பசியாயிருந்தேன், எனக்குச் சாப்பாடுகொடுத்தீர்கள்
இல்லை. தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள் இல்லை.
43 பரதேசியாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்
இல்லை. அம்மணமாயிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள்
இல்லை. வியாதியாகவுங் காவலிலும் இருந்தேன், என்னைப் பார்க்க
வந்தீர்கள் இல்லை என்பார். 44 அப்போது அவர்களும் அவருக்குப்
பிரத்தியுத்தாரமாக: ஆண்டவரே, உம்மை நாங்கள் எப்போது பசி
யாகவும் தாகமாகவும் பரதேசியாகவும் அம்மணமாகவும் வியாதி
யாகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உமக்கு ஊழியஞ் செய்
யாதிருந்தோம் என்பார்கள். 45 அப்போது அவர்களுக்குப் பிரத்தி
யுத்தாரமாக: மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள்
எல்லாரிலுஞ் சிறியரான இவர்களில் ஒருவனுக்கு என்ன செய்யா
திருந்தீர்களோ, அதை எனக்குஞ் செய்யாதிருந்தீர்கள் என்பார்.
46 அப்படியே இவர்கள் நித்திய வேதனையிலும், நீதிமான்களோ
நித்திய சீவனிலும் போவார்கள் என்றார்.

1. இந்நாளின் சுவிசேஷ வாக்கியம் எதைப் பற்றியது.

கடைசிநாளின் நியாயத்தீர்ப்பைப் பற்றியது.

2. கடைசிநாளின் நியாயத்தீர்ப்பில் நியாயாதிபதி யார்.

இயேசுநாதர் தான். ஏனென்றால் அவர் நம்முடைய வாக்கியத்திலே: மனுஷனுடைய குமாரன் தமது மகிமையிலே தம்முடைய சகல பரிசுத்த தூதரோடுங் கூட வரும்போது, அவர் தமது மகிமையினுடைய ஆசனத்தின் மேல் உட்கார்ந்திருப்பார் என்று சொல்லுகிறார்.

3. கிறிஸ்து தம்மை ஏன் மனுஷகுமாரன் என்று அழைக்கிறார்.

க. அவர் பிதாவிடத்தில் அநாதியாய்ப் பிறந்த மெய்யான தேவனு மாத்திரமல்ல, கன்னிமரியாளிடத்தில் பிறந்த மெய்யான மனுஷனுமாகவும் இருக்கிறபடியால்.

உ. அவர் கடைசிநாளின் நியாயத்தீர்ப்பைத் தம்முடைய தேவசுபாவப்படி மாத்திரமல்ல, மனித சுபாவப்படி-



யேயும் செய்கிறவராயிருப்பதால். நமது இரட்சகர்: பிதா ஆரையும் நியாயந்தீராமல், நியாயத்தீர்ப்பை எல்லாம் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்தார். அவர் மனுஷனுடைய குமாரனாயிருக்கிறபடியினாலே நியாயத்தீர்ப்பையும் செய்ய அவருக்கு அதிகாரங் கொடுத்தார் என்று சொல்லுகிறார் (யோவா. ரு, உஉ).

4. கிறிஸ்துநாதர் நியாயத்தீர்ப்புக்கு எப்போது வருவார்.

லோகமுடிவிலே, அதாவது கடைசிநாளிலே. அந்த நாள் எப்போது வரும் என்று பராபரனாகிய கர்த்தரே யல்லாமல், தேவதூதராவது மனிதராவது அறியார்கள்.

5. அவர் நியாயத்தீர்ப்புக்கு எப்படி வருவார்.

முன் வந்தது போல் தாழ்மையிலே வராமல், மகிமையிலே தம்முடைய எல்லா பரிசுத்த தூதர்களைத் தமக்கு ஊழியக்காரராக அழைத்துக்கொண்டு மகா பெரிய வல்லமையோடு வருவார். நமது வாக்கியம் சொல்லுகிறபடியே, அப்போது அவர் தமது மகிமையினுடைய ஆசனத்தின் மேல், அதாவது சர்வலோகத்தின் இராசாவாகவும் நியாயாதிபதியாகவும் மகிமையான சிம்மாசனத்தின் மேல் உட்கார்ந்திருப்பார்.

6. அவர் எப்போது நியாயத்தீர்ப்[illegible] எப்படித் து[illegible]

அவர் எல்லா மனுஷரையும் நல்லவர்களையும் பொல்லாதவர்களையுந் தமது ஆசனத்துக்கு முன்பாக வரவழைப்பார். ஆதலால் நம்முடைய வாக்கியத்தில்: அவருக்கு முன்பாக எல்லாச் சாதிகளுங் கூட்டப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறது.

7. ஆனால் கிறிஸ்துநாதர் நீதிமான்களுக்கும் அநீதிமான்களுக்கும் வித்தியாசம்பண்ணி, அவர்களை வெவ்வேறாகப் பிரிக்காரா.

ஆம். அவர் அவர்களை ஒரு மேய்ப்பன் ஆடுகளையுங் கிடாய்களையும் பிரிக்கிறதுபோலே வெவ்வேறாகப் பிரித்து, ஆடுகளைத் தமது வலதுபக்கத்திலுங் கிடாய்களை இடதுபக்கத்திலும் நிறுத்துவார். (௩உ. ௩௩).

8. ஆடுகள் என்று சொல்லப்படுகிறவர்கள் ஆர்.

கபடற்ற ஆடுகளாக இயேசுவாகிய நல்ல மேய்ப்பருடைய சத்தத்தைக் கேட்டு, அவரைப் பின்செல்லுகிற தெய்வபக்தியுள்ள விசுவாசிகள் தான்.

9. கிடாய்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் ஆர்.

தங்கள் கீழ்ப்படியாமை, கடின்மனது முதலிய பாவங்களில் நிலைத்திருந்த தெய்வபத்தியற்ற அவிசுவாசிகளாய்.

10. தெய்வபத்தியுள்ளவர்களுக்கு இயேசுநாதர் எந்தத் தீர்ப்பைக் கொடுப்பார்.

அவர் அவர்களுக்கு: வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே; லோகத்தோற்றமுதல் உங்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். ஏதேனென்றால் பசியாயிருந்தேன், எனக்குச் சாப்பாடு கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; பரதேசியாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; அம்மணமாயிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார் (ஙச—ஙசு).

11. நீதிமான்கள் சுதந்தரித்துக்கொள்ளுகிற இந்த இராச்சியம் என்ன.

அது அவர்கள் இச்சீவனுக்குப் பிற்பாடு அடையப் போகிற சந்தோஷமும் பாக்கியமுமாகிய நித்திய சீவனைக் குறிக்கிறது. ஆகையால் நமது இரட்சகர்: நீதிமான்கள் நித்தியசீவனுக்குப் போவார்கள் என்று நமது வாக்கியத்தின் கடைசியில் சொல்லுகிறார்.

12. நீதிமான்கள் இந்த நித்தியசீவனைத் தங்கள் நற்கிரியைகளினாலே சம்பாதித்துக் கொண்டார்களா.

இல்லை. இந்த நித்தியசீவன் கிருபையினாலே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஏனென்றால் கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதுமல்ல, இதுபராபரனுடைய ஈவு. யாதொருவன் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளால் உண்டானதல்ல என்று [illegible] முதலானகிய பவுல் எழுதுகிறான் (எபேசியர் உ, அ). நித்தியசீவன் சத்தியவேதத்திலே விசுவாசிகளுடைய சுதந்தரம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் சுதந்தரித்துக்கொள்ளுகிறதை நாம் சம்பாதிக்காமல், இலவசமாய் அடைகிறோம்.

13. நீதிமான்கள் நித்திய சீவனை எதினாலே அடைவார்கள்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசத்தினாலே தான். ஏனென்றால் குமாரன் பேரில் விசுவாசிக்கிறவனுக்கு நித்திய சீவன் உண்டென்று இயேசு இரட்சகர் சொல்லுகிறார் (யோவா. ங, ஙசு).

14. ஆனால் நமது இரட்சகர்: நான் பசியாயிருந்தேன், எனக்குச் சாப்பாடு கொடுத்தீர்கள். தாகமாயிருந்



தேன், என் தாகத்தை தீர்த்தீர்கள். பரதேசியாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள். அம்மணமாயிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள். வியாதியாயிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்று நீதிமான்கள் செய்த அநேக நற்கிரியைகளை நியாயத்தீர்ப்பிலே சொல்லிக் காண்பிக்கிறு ரே. அந்த அவர்களுடைய நற்கிரியைகள் எல்லாம் அவர்கள அடையும் நித்திய சீவனுக்குக் காரணமல்லவா.

அவைகள் அதற்குக் காரணமே அல்ல. நமது இரட்சகர் விசுவாசிகளின் நற்கிரியைகளைச் சொல்லிக் காட்டுகிறதி ஞல் அவைகள் நித்திய சீவனுக்குக் காரணம் என்று அவர் சொல்லாமல், நீதிமான்களுடைய மெய்விசுவாசத்துக்கு அவைகளே சாட்சி என்று சொல்லுகிறார். ஏனென்றால் ஒரு கிறிஸ்தவனுக்குண்டாயிருக்கிற மெய்விசுவாசம் நற்கிரியை செய்யாமல் ஓர்க்காலும் சும்மாயிராது. ஆதலால் மெய்விசு வாசத்திலிருந்து வருகிற நற்கிரியைகள் அதற்கு அடையாள மாம். விசுவாசம் கிரியைகள் இல்லாதிருந்தால் தன்னில் தானே செத்ததாயிருக்கிறது (யாக். உ, ௰எ).

15. விசுவாசிகள் தமக்கே அன்னவஸ்திரமுதலிய வைகளைக் கொடுத்தார்கள் என்று இயேசுநாதர் எப்படிச் சொல்லக் கூடும்.

தம்மைச் சிநேகிக்கிற விசுவாசிகள் எளிய கிறிஸ்தவர்களுக்கு என்னென்ன உபகாரங்களைச் செய்தார்களோ, அவை களைத் தமக்குச் செய்ததாக ஏற்றுக்கொள்ளுகிறார். ஆதலால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, உம்மை நாங்கள் எப்போது பசியாயிருக்கக் கண்டு போஷித்தோம்; அல்லது தாகமாயிருக்கக் கண்டு உம் முடைய தாகத்தைத் தீர்த்தோம்; உம்மை நாங்கள் எப்போது பரதேசியாயிருக்கக் கண்டு சேர்த்துக்கொண்டோம்; அல்லது அம்மணமாயிருக்கக் கண்டு உமக்கு வஸ்திரங் கொடுத்தோம். உம்மை நாங்கள் எப்போது வியாதியாகவும் காவலில் இருக் கிறவராகவுங் கண்டு, உம்மண்டைக்கு வந்தோம் என்று கேட் பார்கள் (ஙஎ-ஙசு). அப்போது இராசாவாகிய கிறிஸ்து நாதர் அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாக: மெய்யாகவே உங் களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் எல்லாரிலுஞ் சிறியரான இந்த என்னுடைய சகோதரரில் ஒருவனுக்கு என்ன செய் தீர்களோ, அதை எனக்குச் செய்தீர்கள் என்பார் (சய).

16. கிறிஸ்துநாதர் ஆரைச் சகோதரர் என்று அழைக் கிறார்.

தெய்வபத்தியுள்ள விசுவாசிகளை. ஏதேனெனில் பரவ ஞ்கிலும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்த

தைச் செய்தால், அவனே என் சகோதரனும் சகோதரியும் தாயுமாயிருக்கிறான் என்று கர்த்தர் சொல்லுகிறார் (மத். ௰௨, ௫௰).

17. இயேசுநாதருடைய இந்தச் சகோதரரில் சிறியர் என்று அழைக்கப்பட்டவர்கள் ஆர்.

எளியவர்களும் லோகத்திலே அற்பருமாக எண்ணப்பட்ட விசுவாசிகள்தான். இவர்களுக்கு இயேசுவைப் பற்றும் விசுவாசத்திலே நன்மைசெய்து, அன்னம் பானம் வஸ்திரம் முதலியவைகளைக் கொடுக்கிறவன் எவனோ, அவன் அவைகளை எல்லாங் கர்த்தராகிய கிறிஸ்துவுக்குக் கொடுத்ததாக அவர் எண்ணுகிறார்.

18. கிறிஸ்துநாதர் குணப்படாதவர்களுக்கு என்ன தீர்ப்புகொடுப்பார்.

இடதுபக்கத்திலுள்ள அவர்களுக்கு அவர் சொல்வதாவது: சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டுப் பிசாசுக்கும் அதின் தூதருக்கும் ஆயத்தம் பண்ணப்பட்ட நித்திய அக்கினியிலே போங்கள். ஏனெனில் பசியாயிருந்தேன், எனக்குச் சாப்பாடு கொடுத்தீர்கள் இல்லை; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள் இல்லை; பரதேசியாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள் இல்லை; அம்மணமாயிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள் இல்லை; வியாதியாகவுங் காவலிலும் இருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் இல்லை என்பதே (௪௧-௪௩).

19. நித்திய அக்கினியாவதென்ன.

குணப்படாதவர்கள் பிசாசோடும் அதின் தூதரோடும் வருத்தப்பட்டு வாதிக்கப்படுகிற இடமாகிய நரகந் தான். ஆதலால் குணப்படாதவர்கள் நித்திய வேதனையிலே போவார்கள் என்று கிறிஸ்துநாதர் நம்முடைய வாக்கியத்திலே சொல்லுகிறார்.

20. பிசாசினுடைய தூதர்கள் ஆர்.

பிசாசோடு பராபரனாகிய கர்த்தரைவிட்டு மருள விழுந்த பொல்லாத ஆவிகள் தான்.

21. குணப்படாதவர்களில் மிச்சமானவர்கள் கிறிஸ்துநாதரைக் கண்டிராதவர்களாயிருக்கிறார்கள், அவர்கள் தமக்குச் சாப்பாடுமுதலியது கொடுக்கவில்லை என்று அவர் எப்படி சொல்லலாம்.

அவர்கள் எளியவர்களுக்கும் வருத்தப்பட்ட விசுவாசிகளுக்கும் ஏதை அல்லத்தட்டினார்களோ, அந்தக் கர்த்தராகிய கிறிஸ்துவுக்கும் அல்லத்தட்டினார்கள். ஆகலால் குணப்படாதவர்கள் கர்த்தருக்கு: ஆண்டவரே, உம்மை நாங்



கள் எப்போது பசியாகவும் தாகமாகவும் அம்மணமாகவும் வியாதியாகவும் காவலில் இருக்கிறவராகவுங் கண்டு உமக்கு ஊழியஞ் செய்யாதிருந்தோம் என்பார்கள் (௪௪). இயேசு அவர்களுக்கு மறுமொழியாக: மெய்யாகவே, உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் எல்லாரிலுஞ் சிறியரான இவர்களில் ஒருவனுக்கு என்ன செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்குஞ் செய்யாதிருந்தீர்கள் என்பார் (௪௫).

22. கர்த்தராகிய கிறிஸ்துவின் இந்தத் தீர்ப்பு உடனே நிறைவேற்றப்படுமா.

ஆம், கிறிஸ்துநாதர் நீதிமான்களுக்கும் அநீதிமான்களுக்கும் எந்தத் தீர்ப்பைக் கொடுக்கிறாரோ, அது உடனே நிறைவேற்றப்படும். ஏனெனில் அவர் நமது வாக்கியத்தின் கடைசியில் சொல்லுகிறதின்படியே, அநீதிமான்கள் நித்திய வேதனையிலும் நீதிமான்கள் நித்திய சீவனிலும் போவார்கள்.

## படிப்பினை.

23. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

I. நாம் இயேசு இரட்சகரைப்பற்றிக் கற்றுக்கொள்ளுகிறதாவது:

௧. அவர் கடைசி நாளில் மனிதரை நியாயந் தீர்க்கிற நியாயாதிபதியாயிருக்கிறார். அவர் சீவனுள்ளோருக்கும் மரித்தோருக்கும் பராபரனால் குறிக்கப்பட்ட நியாயாதிபதி என்று பேதுரு அப்போஸ்தலன் சொல்லுகிறான். அதற்கொத்தபடியே நாம் நமது விசுவாசப் பிரமாணத்திலே: இயேசுகிறிஸ்து பரமண்டலங்களிலிருந்து சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்க வருவார் என்று அறிக்கையிடுகிறோம்.

௨. எல்லா மனுஷரும் கிறிஸ்துநாதராலே நியாயந் தீர்க்கப்படுவார்கள். ஏனென்றால் அவருக்கு முன்பாக எல்லாச் சாதிகளுங் கூட்டப்படுவார்கள் (௩௨). அவனவன் தன் சரீரத்தினால் நடப்பித்த நன்மைக்காகிலுந் தீமைக்காகிலுந் தக்கதுகளை அடையும்படிக்கு, நாம் எல்லாருங் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டியது என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறான் (௨ கொரி. ௫, ௰).

௩. கிறிஸ்துநாதர் எல்லா மனுஷருக்கும் நீதியுள்ள நியாயத்தீர்ப்பைக் கொடுப்பார். இவ்வுலகத்திலுள்ள மனிதர் அநேகம் விசை தங்கள் அபிப்பிராயங்களிலுந் தீர்ப்புகளிலும்

தவறிப்போகிறார்கள். இயேசுநாதரோ எல்லாவற்றையும் அறிந்த கர்த்தராயிருந்து நன்மைசெய்தவன் இன்னான் தீமை செய்தவன் இன்னான் என்று திட்டமாய் அறிந்து, மனுஷர் யாவருக்கும் நீதியுள்ள தீர்ப்புச்செய்வார். ஆதலால் எல்லாப் பரிசுத்தவான்களுந் தாவீதோடு: கர்த்தாவே, தேவரீர் நீதிபரர், உம்முடைய நியாயத்தீர்ப்புகள் செம்மையுமாயிருக்கின்றன என்று அறிக்கையிடக் கூடும் (சங். ாயகூ, ாஙஎ).

ச. கிறிஸ்துநாதர் கடைசிநாளிலே விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் சரியான பிரிவினையை உண்டுபண்ணுவார். இந்த உலகத்திலே குணப்படாதவர்களுந் தெய்வபக்தியுள்ளவர்களும் பிரிக்கப்படக் கூடாதபடிக்கு ஒருவரோடொருவர் கலந்து பிழைக்கிறார்கள். கடைசிநாளிலோ ஆடுகளும் கிடாய்களும் வெவ்வேறாகப் பிரிக்கப்படும். அப்போது கர்த்தராகிய பராபரன் மலகி. ங, யஎ. யஅ-ல் சொல்லுகிற வாக்கியம் நிறைவேறும். அவையாவன: சம்பத்தை நாம் பிரித்துக் கொள்ளும் நாளிலே இவர்கள் நம்முடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார். ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ் செய்கிற தன்னுடைய குமாரனைத் தப்பவிடுமாப்போலே அவர்களைத் தப்பவிடுவோம். அப்போது நீங்கள் திரும்பவும் நீதிமானுக்கும் ஆகாதவனுக்கும், பராபரனுக்கு ஊழியஞ் செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைக் காண்பீர்கள் என்பதே.

II. கர்த்தராகிய கிறிஸ்துவின் வலதுபாரிசத்தில் நிற்கிற விசுவாசிகளாகிய ஆடுகளிடத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. மெய்க் கிறிஸ்தவர்களுடைய பாக்கியம் வருஞ் சீவனிலே மகாப் பெரியதாயிருக்கும். அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றும், லோகத் தோற்றமுதல் அவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும் கிறிஸ்து சொல்லுகிறார். இந்த இராச்சியம் எவ்வளவு மகிமையுள்ளதாயிருக்கும் என்று இச்சீவனிலே ஒரு மனுஷனாலும் சொல்லக் கூடியதாயிராது. ஏனெனில் பராபரன் தம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினதுகளைக் கண் கண்டதுமில்லை, காது கேட்டதுமில்லை; அவைகள் மனுஷனுடைய இருதயத்துக்கு எட்டினதும் இல்லை என்று சொல்லப்படுகிறது (க கொரி. உ, கூ).

உ. நாம் எளியவர்களுக்குந் துன்பப்படுகிறவர்களுக்குங் காட்டுகிற இரக்கம் பராபரனாகிய கர்த்தருக்குப் பிரியமாயிருக்கிறது. ஏனென்றால், நீங்கள் எல்லாரிலும் சிறியரான



இந்த என் சகோதரரில் ஒருவனுக்கு என்ன செய்தீர்களோ, அதை எனக்குஞ் செய்தீர்கள் என்று நமது இரட்சகர் சொல்லுகிறார். அப்படிப்பட்ட இரக்கத்தைக் கர்த்தர் தமக்கே செய்ததாக எண்ணி ஏற்றுக்கொண்டு, அதற்காக நல்ல பலனைக் கொடுப்பார். சிறுமைப்பட்டவன் மேலே கவனிப்பான சிந்தையுள்ளவன் பாக்கியவான், கர்த்தர் அவனைத் தீங்குநாளிலே விடுவிப்பார். கர்த்தர் அவனைத் தற்காத்து, அவனை உயிரோடே வைப்பார், பூமியின் மேலே பாக்கியவானாயிருப்பான்; அவனை அவன் சத்துருக்களின் மனதுக்கு ஒப்புக்கொடீர். கட்டிலின் மேல் பிணியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார். அவனுடைய வியாதியிலே அவன் படுக்கையை எல்லாம் மாறப்பண்ணுவீர் என்று தாவீது சொல்லுகிறான் (சங். சக, உ-ச).

ங. நாம் நம்முடைய எளிய பிறத்தியானுடைய இக்கட்டிலே அவனுக்கு அன்னவஸ்திரங் கொடுத்து, ஆற்றித் தேற்றி இவைமுதலானவைகளை அவனுக்குச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நற்கிரியைகளை இயேசுநாதர் கடைசிநாளிலே புகழ்ந்து, அவைகளைச் செய்தவர்களுக்கு இரக்கங்காட்டச் சித்தமாயிருக்கிறார். அதைக் குறித்து அவர்: இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அதேனென்றால் அவர்கள் இரக்கம் பெறுவார்கள் என்று வாக்குத்தத்தங் கொடுத்தார். எசாயா அதற்கு நம்மை ஏவி எழுப்பிச் சொல்லுகிறதாவது: பசியுள்ளவனுக்கு உன் அப்பத்தைப் பிட்டுக் கொடுத்து, துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொண்டு, அம்மணமானவனைக் கண்டாயானால் அவனுக்கு வஸ்திரங்கொடுத்து, உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமல் இருந்தால், அதுவல்லவோ நாம் தெரிந்துகொள்ளுகிற உபவாசம் என்கிறான் (எசா. ருஅ, எ).

III. கிறிஸ்துவின் இடதுபக்கத்திலுள்ள குணப்படாதவர்களாகிய கிடாய்களிடத்தில் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. குணப்படாதவர்களுடைய நிர்ப்பந்தமும் இக்கட்டும் வருஞ் சீவனிலே சொல்லமுடியாததாயிருக்கும். ஏனென்றால் அவர்கள் அப்போது: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டுப் பிசாசுக்கும் அவன் தூதருக்கும் ஆயத்தம் பண்ணப்பட்ட நித்திய அக்கினியிலே போங்கள் என்கிற இயேசுவானவருடைய பயங்கரமான தீர்ப்பை நடுக்கத்தோடே கேட்பார்கள். அவர்களுடைய நிர்ப்பந்தம் ஏன் அவ்வளவு பெரிதாயிருக்கும் என்று கேட்டால்:

க. அவர்கள் பராபரனாகிய கர்த்தருடைய ஐக்கியத்தை விட்டுப்பிரிந்து, இயேசுநாதருடைய பார்வைக்குத் தூரமாய்ப் போவார்கள்.

௦. பராபரனுடைய சாபம் அவர்கள்மேல் நிலைநிற்கும். அதினிமித்தம் அவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்னப்படுகிறார்கள்.

ங. அவர்கள் நரக அக்கினியிலே ஆத்துமசரீரத்தின்படி வேதனைப்படுவார்கள்.

ச. அவர்கள் சபிக்கப்பட்ட ஆவிகளாகிய பிசாசுகளோடும் அதின் தூதரோடும் இருப்பார்கள்.

ரு. இந்த அவர்களுடைய நிர்ப்பந்தம் என்றென்றைக்கும் நிரந்தரமாயிருக்கும். ஏனென்றால் நமது இரட்சகர் சொல்லுகிறபடியே அவர்களுக்கு நித்திய வேதனையும் நித்திய அக்கினியும் இருக்கும். அவர்களுடைய பூச்சி சாகாமலும் அக்கினி அவியாமலும் இருக்கும் (எசா. [illegible], உச).

உ. நாம் நமது எளிய [illegible]னுக்கு இரக்கங் காட்டாமல் இருப்பதற்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஏனென்றால் கிறிஸ்துநாதர் கடைசிநாளிலே குணப்படாதவர்கள் மேல் விசேஷமாய் என்ன குற்றஞ் சாட்டுவார் என்றால், அவர்களுடைய இரக்கமில்லாமையேயாம். அப்போது அவர் சொல்வதாவது: நான் பசியாயிருந்தேன், எனக்குச் சாப்பாடு கொடுத்தீர்கள் இல்லை; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள் இல்லை; பரதேசியாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள் இல்லை; அம்மணமாயிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள் இல்லை; வியாதியாகவுங் காவலிலும் இருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் இல்லை என்பதே. இப்போது இரக்கஞ் செய்யாதவனுக்கு [illegible] மில்லாத நியாயத்தீர்ப்பு உண்டாகும் என்ற வார்த்தை நிறைவேறும் (யாக். ௨, ௰௩). ஆகலால் நாம் இப்படிப்பட்ட பாவங்களுக்கு மெத்த எச்சரிக்கையாயிருந்து, நமது இரட்சகர் சொல்லுகிற புத்திமின்படியே நடப்போமாக. அதாவது: உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்க[illegible]ங்கள் (லூக். ௬, ௩௬).

24. நமது பிறத்தியானுக்கு மெய்யான சிநேகத்தையும் இரக்கத்தையுங் காண்பிக்கும்படி நம்மை ஏவி எழுப்பி நடத்துகிறவர் ஆர்.

சிநேகத்தின் ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர்தான். ஆகலால் நாம் உண்மையும் சுறுசுறுப்புமாய் அவரை நோக்கி நெஞ்சி: வாரும், பரிசுத்த ஆவியானவரே, உமது விசுவாசிகளின் நெஞ்சுகளை நிரப்பி, அதுகளிலே உமது அன்பின்



தீயை மூட்டிவிடும். வேற்றுப்பாஷைகளின் மூலமாய்ச் சாதிகளை விசுவாசத்தின் ஒருமைக்குக் கூட்டிச் சேர்த்தீர், சுவாமி என்று வேண்டிக் கொள்வோமாக, ஆமென்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின உள-ம் ஞாயிறு.

(ஞானப்பாட்டு ௱கரு. ௩உக.)

சுவி. மத். உரு, க—௰௩.

அப்போது வானராச்சியந் தங்கள் தீவட்டிகளைப் பிடித்து, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுகிற பத்துக் கன்னியாஸ்திரிகளுக்கு ஒப்பாயிருக்கும். 2 அவர்களில் ஐந்துபேர் புத்தியுற்றோரும், ஐந்துபேர் புத்தியற்றோருமாயிருந்தார்கள். 3 புத்தியற்றோரானவர்கள் தங்கள் தீவட்டிகளைப் பிடித்தும், கையோடே எண்ணெய் கொண்டுபோனதில்லை. 4 புத்தியுற்றோரோ தங்கள் தீவட்டிகளோடுங் கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெய் கொண்டுபோனார்கள். 5 மணவாளன் தாமதித்தபோதோவென்றில், எல்லாரும் நித்திரையக்கமாகித் தூங்கிவிட்டார்கள். 6 ஆனால் பாதிராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற கூக்குரல் உண்டாச்சுது. 7 அப்போது அந்தக் கன்னியாஸ்திரிகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளைச் சோடித்தார்கள். 8 புத்தியற்றோரோவென்றால் புத்தியுற்றோருடனே: உங்கள் எண்ணெயிலே எங்களுக்குக் கொஞ்சந் தாருங்கள்; ஏனெனில் எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறது என்றார்கள். 9 ஆனால் புத்தியுற்றோர் பிரத்தியுத்தாரமாக: அப்படி வேண்டாம்; எங்களுக்கும் உங்களுக்கும் போதாமல் போகாதபடிக்கு, நீங்கள் விற்கிறவர்களிடத்திலே போய், உங்களுக்குக் கொள்ளுங்கள் என்றார்கள். 10 அவர்கள் கொள்ளப் போகிறபோதோவென்றில் மணவாளன் வந்தார். அப்போது ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் கலியாணத்துக்கு உட்பிரவேசித்தார்கள்; கதவும் பூட்டப்பட்டது. 11 பின்பு மற்றக் கன்னியாஸ்திரிகளும்வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறவும் என்றார்கள். 12 ஆனால் அவர் பிரத்தியுத்தாரமாக: உங்களை அறியேனென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். 13 ஆனபடியினால் விழித்திருங்கள்; ஏனெனில் மனுஷனுடைய குமாரன் வரும் நாளையாகிலும் நாழிகையையென்கிலும் அறியீர்கள் என்றார்.

இன்றைக்கு என்ன ஞாயிற்றுக்கிழமை.

திருச்சபைவருஷத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை. ஆதலால் வருகிற ஞாயிற்றுக்கிழமையாகிய கிறிஸ்துவருகையின் முதல் ஞாயிறோடு திருச்சபையின் புதுவருஷம் துவக்குகிறது.

2. திருச்சபை வருஷத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் எந்த விசேஷித்த காரியங்களைக் குறித்து வாசித்துக் கேட்கிறோம்.

மரணம், நியாயத்தீர்ப்பு, நித்திய சீவன், நித்தியமரணம் என்கிற கடைசிக் காரியங்களைக் குறித்துத்தான்.

3. இந்தநாளின் சுவிசேஷ வாக்கியத்திலே கடைசிக் காரியங்களைக் குறித்து ஏதாகிலும் சொல்லப்பட்டிருக்கிறதா.

ஆம், கிறிஸ்துநாதர் கடைசிநாளில் வரும்போது, திருச்சபை எந்த நிலைமையிலிருக்கும் என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

4. அதைப்பற்றி நம்முடைய வாக்கியத்தில் பேசுகிறவர் ஆர்.

நமது இரட்சகராகிய இயேசுநாதர். அவர் அதில் பத்துக் கன்னியாஸ்திரிகளின் உவமையைக் குறித்துப் பேசுகிறார். அப்போது வான ராச்சியந் தங்கள் தீவட்டிகளைப் பிடித்து, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுகிற பத்துக் கன்னியாஸ்திரிகளுக்கு ஒப்பாயிருக்கும் என்கிறார். அவர் இந்த உவமையினாலே காண்பிக்கிறதென்னவென்றால்: நாம் எப்போதும் நம்முடைய முடிவை நினைத்து, அதற்கு நம்மை ஆயத்தம் பண்ணுகிறது எவ்வளவு அவசரமாயிருக்கிறதென்றும், அதற்குத் தங்களை ஆயத்தம் பண்ணாதவர்கள் எவ்வளவு பயங்கரமான முடிவை அடைவார்கள் என்றுங் காண்பிக்கிறார்.

5. வாக்கியத்தில் சொல்லப்பட்ட மணவாளன் ஆர்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதர். அவர் தாம் சிநேகித்து, தமது இரத்தத்தினாலே மீட்டு இரட்சித்து, தமது ஐக்கியத்தில் ஏற்றுக்கொண்ட விசுவாசிகளின் ஞான மணவாளனும் ஞான பத்தாவுமாயிருக்கிறார்.

6. பத்துக் கன்னியாஸ்திரிகள் என்பதினாலே அவர் ஆரைக் குறிக்கிறார்.

வான இராச்சியமாகிய திருச்சபையிலிருக்கிற கிறிஸ்தவர்களாகிய நம்மை.

7. அந்தக் கன்னியாஸ்திரிகள் எத்தனை விதம்.

இரண்டு விதம். அவர்களில் ஐந்துபேர் புத்தியுற்றோரும், ஐந்துபேர் புத்தியற்றோருமாயிருந்தார்கள் என்று நம்முடைய வாக்கியம் சொல்லுகிறது.

8. புத்தியுள்ள கன்னியாஸ்திரிகள் என்றதினால் கர்த்தர் யாரைக் குறிக்கிறார்.

இயேசு இரட்சகரை உண்மையாய் அறிந்து விசுவாசித்து, பாக்கியமாய் மரித்து நித்திய சீவனை அடைகிற மெய்க்



கிறிஸ்தவர்களைத்தான். இவர்கள் லோகத்திலே அநேகவிசை புத்தியில்லாதவர்களும் பைத்தியக்காரருமாக எண்ணப்பட்டும், இவர்களே மெய்யாக புத்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

9. அந்தப் புத்தியுள்ள கன்னியாஸ்திரிகள் நம்முடைய வாக்கியத்தின்படியே முதலாவது எதினாலே தங்கள் புத்தியைக் காண்பித்தார்கள்.

எண்ணெய் கொண்டுபோனதினால். அதைப் பற்றி: புத்தியுற்றோரோ தங்கள் தீவட்டிகளோடுங் கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெய் கொண்டுபோனார்கள் என்று நம முடைய வாக்கியத்தில் எழுதியிருக்கிறது (ச). இவ்விடத் தில் எண்ணெய் என்பது பரிசுத்த ஆவியின் கிருபையையும் மெய்விசுவாசத்தையுங் குறிக்கிறது. அது எதினால் விளங்கும் என்றால், நம்முடைய வாக்கியத்தின்படியே புத்தியுள்ள கன் னியாஸ்திரிகளுக்கு எண்ணெய் இருப்பதால் கலியாணத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். புத்தியற்ற கன்னியாஸ்திரிக ளுக்கோ எண்ணெய் இல்லாதபடியால் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. குமாரன் பேரில் விசுவாசிக்கிறவனுக்கு நித்திய சீவன் உண்டு. குமாரனை விசுவாசியாதவனோ சீவனைக் காண்பதில்லை. பராபரனுடைய கோபம் அவன்மேல் நிலை நிற்கும் (யோ. வா. ௩, ௩௬). ஆதலால் இந்தப் புத்தியுள்ள கன்னியாஸ்திரிகள் விசுவாசமுள்ள மெய்க்கிறிஸ்தவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் ஞானஸ்நானம் பெற்றுத் திருச் சபையில் சேர்ந்து, கிருபையின் எத்தனங்களைக் கையாடுகிற துமல்லாமல், அவைகளினால் மெய்விசுவாசம் அடைந்து, கர்த் தருக்குள் பிழைத்திருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட மெய்க் கிறிஸ்தவர்கள் பராபரனுடைய பார்வைக்குப் புத்தியுள்ள வர்களாய் இருக்கிறார்கள்.

10. புத்தியுள்ள கன்னியாஸ்திரிகள் இரண்டாவது எதினாலே தங்கள் புத்தியைக் காண்பித்தார்கள்.

அவர்கள் தங்கள் தீவட்டிகள் எரிந்துகொண்டேயிருக்கும்படி செய்ததினால். அதற்காகவே அவர்கள் தங்கள் பாத்திரங்களில் எண்ணெய் கொண்டுபோனார்கள். ஆதலால் புத்தியற்ற கன்னியாஸ்திரிகளின் தீவட்டிகள் அணைந்துபோ னாலும் இவர்கள் தீவட்டிகள் அணைந்து போகவில்லை. இதினாலே நமக்கு விளங்குகிறதென்னவென்றால், உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் விசுவாசித்து, தங்கள் வெளிச்சத்தைப் பிரகாசிக்கப்பண்ணி, நற்கிரியைகளினாலும் பரிசுத்த நடக்கையினாலுந் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்துவார்கள். இதற் கென்று இயேசு இரட்சகர் நம்மை ஏவி எழுப்பி: மனுஷர்

உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துகிறதற்காக உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவதென்று புத்தி சொல்லுகிறார் (மத். ௫, ௧௬). அவர்கள் விசுவாசம் வெறும் அறிவும் எண்ணமுமாய் மாத்திரமிராமல், உயிருள்ளதாயிருப்பதால், அது நற்கிரியைகளைச் செய்யும். ஏனென்றால் விசுவாசம் கிரியைகள் இல்லாதிருந்தால், தன்னில் தானே செத்ததாயிருக்கிறது (யாக். ௨, ௧௭). அப்படியே குணப்படாத மாயக்காரர் செய்வதுபோல் தேவபக்தியின் வேஷத்தைத் தரிக்காமல், பராபரனுடைய மகிமைக்காக நற்கிரியைகளைச் செய்யும் உயிருள்ள மெய்விசுவாசத்தோடு நடக்கிற கிறிஸ்தவர்களைப் புத்தியுள்ள கிறிஸ்தவர்கள் என்று சொல்லலாம்.

11. புத்தியுள்ள கன்னியாஸ்திரிகள் மூன்றாவது எதினாலே தங்கள் புத்தியைக் காண்பித்தார்கள்.

அவர்கள் நித்திரை பண்ணும்போது கூடத் தங்கள் தீவட்டிகளை அணையவிடாமல் எரியும்படி செய்தார்கள். இதினால் நமக்கு விளங்குகிறதென்னவென்றால், மெய்க்கிறிஸ்தவர்கள் துன்பகாலத்திலும் சோதனைவேளையிலும் தங்கள் ஞான மணவாளனாகிய இயேசு இரட்சகரின் உதவியும் ஒத்தாசையும் தாமதப்படும்போது, அநேக மாயக்காரர் செய்கிறதுபோல் விசுவாசத்தை விட்டு மருளவிழாமல், தங்கள் தேவபத்தியில் உறுதியாய் நிலைத்திருந்து, செபம் பண்ணிக் காத்திருக்கிறார்கள். அப்படியே கர்த்தரை விடாமல், அவரை விசுவாசிக்கிற விசுவாசத்திலும் அவருடைய பூரண ஐக்கியத்திலும் துன்பநாளிலே உறுதியாய் நிலைத்திருக்கிறது புத்திதான். ஏனெனில் அவரிடத்தில் மாத்திரம் நித்தியசீவனின் வசனங்கள் உண்டு. மேலும் முடிவுபரியந்தம் நிலைநிற்கிறவனே இரட்சிக்கப்படுவான் என்று இயேசு இரட்சகர் சொல்லுகிறார்.

12. புத்தியுள்ள கன்னியாஸ்திரிகள் நாலாவது எதினாலே தங்கள் புத்தியைக் காண்பித்தார்கள்.

அவர்கள் மணவாளனுக்கு எதிர்கொண்டுபோய், அவருக்குக் காத்திருந்து, அவரைச் சேர ஆயத்தமாயிருந்ததினால். அதினாலே மெய்க்கிறிஸ்தவர்களுக்குண்டான பரம சிந்தை எப்படிப்பட்டதென்று நமக்குத் தெரிவிக்கப்படுகிறது. புத்தியுள்ள கன்னியாஸ்திரிகளுக்கு மணவாளனின் நினைவேயன்றி வேறில்லை. அவர்கள் அவரைக் குறித்தே ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் மணவாளனண்டைக்குப் போய், அவரோடேகூட கலியாணத்துக்குள் பிரவேசிக்கவேண்டும் என்கிற நோக்கத்தோடு எல்லாவற்



றையும் செய்தார்கள். ஆகலால் மணவாளன் தாமதித்தும், அவர்கள் அவரை மறவாமல் அவருக்குக் காத்திருந்தார்கள். அவர்கள் காத்திருக்கையில் நித்திரைமயக்கமாயிருந்தும் தூங்கிவிடாமல், பாதி இராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டானவுடனே அவர்கள் சந்தோஷமாய் எழுந்திருந்து, அவரண்டை சேர ஆயத்தமாயிருந்தார்கள். இதுவே மெய்க்கிறிஸ்தவர்களின் பரமசிந்தைக்கு அடையாளம். ஏனென்றால் அவர்கள் தங்கள் ஆத்தும மணவாளனும் சிநேகிதருமாகிய இயேசு இரட்சகரைச் சிநேகித்து அவருக்குக் காத்திருக்கிறார்கள். அவர்கள் லோகத்தை வெறுத்து, பூமிக்கடுத்த காரியங்களை அற்பமாக எண்ணி, மேலானதைச் சிந்தித்துத் தேடுகிறார்கள். அவர்கள் தங்கள் இருதயங்களிலும் இயேசு இரட்சகரோடு சஞ்சரித்து, அவருடைய வருகைக்கு ஆவலோடு காத்திருக்கிறார்கள். அப்படியே நாம் இப்பூமியிலிருக்கையில் இயேசு இரட்சகரோடு பிழைக்கிறதுதான் புத்தி.

13. புத்தியற்ற கன்னியாஸ்திரிகள் என்றதினால் குறிக்கப்படுகிறவர்கள் ஆர்.

மாயக்காரர் முதலிய பொய்க்கிறிஸ்தவர்கள் தான். இவர்கள் தங்களுக்கு மோட்சங்கிடைக்கும் என்று நம்பியிருந்தும் தங்கள் ஆத்தும இரட்சிப்பை உண்மையாய்த் தேடாததினாலும், மணவாளனாகிய இயேசுநாதர் வரும்போது அவரைச் சேர ஆயத்தமில்லாதவர்களாயிருப்பதாலும் புறம்பாக்கப்பட்டு கெட்டுப்போவார்கள். லோகத்தில் இவர்களே ஒருவேளை புத்தியுள்ளவர்களும் ஞானிகளுமாய் எண்ணப்பட்டிருந்தாலும், பராபரனுடைய வசனத்தின்படியே இவர்கள் புத்தியற்றவர்கள் தான்.

14. இயேசுநாதர் இந்த உவமையிலே குணப்படாத சகல மனிதரையும் புத்தியற்ற கன்னியாஸ்திரிகள் என்று அழைக்கிறாரா.

ஆம், குணப்படாத சகல மனிதரையும் புத்தியற்றவர்கள் என்று அழைக்கிறதே நியாயம். ஏனென்றால் ஆத்துமாவுக்காகக் கவலைப்படாமல் சரீரத்துக்காக மாத்திரம் கவலைப்படுகிறதும், பரமண்டலத்தின் நித்திய நன்மைகளை உண்மையாய்த் தேடாமல், அழிந்துபோகிற பூமியின் நன்மைகளை மாத்திரம் தேடுகிறதும், மோட்சத்தின் அளவற்ற சந்தோஷத்தை அசட்டைபண்ணிப் பாவத்துக்குச் சந்தோஷப்படுகிறதும், பராபரன் கையளிக்கிற நித்திய சீவனின் பாக்கியத்தைத் தள்ளி, பிசாசோடு நரகத்திலே படும் வேதனையைத் தெரிந்துகொள்ளுகிறதும் மெய்யாகவே புத்தியீனமும்

பைத்தியமுமாயிருக்கிறது. ஆகிலும் இந்த உவமையிலே இயேசு இரட்சகர் குணப்படாத எல்லா மனுஷரையும் பற்றிப் பேசாமல், பூமியிலுள்ள திருச்சபையிலே மெய்க்கிறிஸ்தவர்களோடு இருந்து, கிருபையின் எத்தனங்களைக் கையாடி கிறிஸ்துநாதரை வாயினால் அறிக்கையிட்டு, தெய்வபத்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்ட மெய்விசுவாசமும் தெய்வபத்தியுமற்ற பொய்க்கிறிஸ்தவர்களைக் குறித்துப் பேசுகிறார் அவர்களையே அவர் புத்தியற்ற கன்னியாஸ்திரிகள் என்று அழைக்கிறார்.

15. புத்தியற்ற கன்னியாஸ்திரிகள் முதலாவது எதினாலே தங்கள் புத்தியில்லாமையைக் காண்பித்தார்கள்.

அவர்கள் தங்கள் பாத்திரங்களில் எண்ணெய் கொண்டுபோகாததினால். ஏனெனில் புத்தியற்றோரானவர்கள் தங்கள் தீவட்டிகளைப் பிடித்தும் கையோடு எண்ணெய் கொண்டுபோனதில்லையென்று வேத வாக்கியம் சொல்லுகிறது. இது எந்தக் கிறிஸ்தவர்களைக் குறிக்கிறதென்றால், மனுஷர் பார்வைக்குக் கிறிஸ்தவர்களாக நடந்து, தங்களுக்கு மோட்சங் கிடைக்குமென்று நம்பிக்கையாயிருக்கிற மெய்விசுவாசமற்ற பொய்க்கிறிஸ்தவர்களைத்தான். அவர்கள் புத்தியற்றவர்கள்தான். ஏனென்றால் விசுவாசமில்லாமல் பராபரனுக்குப் பிரியமாயிருக்கக் கூடாது என்றும் (எபிரே. ௰௧. ௬), விசுவாசியாதவன் பராபரனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசியாமல் போனபடியினாலே, அப்போதே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருக்கிறான் என்றும் எழுதியிருக்கிறது (யோவா. ௩, ௰௮).

16. புத்தியற்ற கன்னியாஸ்திரிகள் இரண்டாவது எதினாலே தங்கள் புத்தியீனத்தைக் காண்பித்தார்கள்.

தங்களுக்கு எண்ணெய் இல்லை என்பதை அவர்கள் உடனே கவனியாததினாலும், சரியான வேளையிலும் சரியான பிரகாரமாகவும் எண்ணெய் சம்பாதிக்கப் பிரயாசப்படாததினாலுந்தான். இதினால் அநேக உள்ளக் கிறிஸ்தவர்களின் புத்தியீனமும் கவலையின்மையுங் குறிக்கப்படுகிறது. எப்படியெனில் அவர்கள் கவலையற்றவர்களாகத் தங்கள் நிலைமையைச் சோதித்தறியாமல் போகிறார்கள். ஆம், அவர்கள் விசுவாசமற்றவர்களாயிருந்தும், அதைக் கவனியாமலும் நேரமிருக்கும்போதே விசுவாசத்தின் எண்ணெய்யையடையப் பிரயாசப்படாமலும் இருக்கிறார்கள், அவர்கள் அப்படிச் செய்வது எவ்வளவு புத்தியீனம்.

17. அவர்கள் மூன்றாவது எதினாலே தங்கள் புத்தியில்லாமையைக் காண்பித்தார்கள்.



அவர்கள் புத்தியுள்ள கன்னியாஸ்திரிகளின் ஐக்கியத்திலே இருந்து, இவர்கள் செய்ததுபோல் செய்து, இவர்களுக்குச் சில காரியங்களில் ஒப்பானவர்களாயிருக்கிறதே தாங்கள் மணவாளனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குப் போதுமென்று நினைத்தார்கள். புத்தியற்ற அவர்களும் கன்னியாஸ்திரிகளாயிருந்தார்கள். அவர்களும் தங்கள் தீவட்டிகளோடு மணவாளனுக்கு எதிர்கொண்டு போனார்கள். புத்தியுள்ள கன்னியாஸ்திரிகள் செய்ததை இவர்களும் செய்திருப்பதால், தாங்களும் அவர்களைப்போல் நல்ல ஆயத்தமாயிருப்பதாக வீணாய் நினைத்தார்கள். அப்படியே அநேகப் பொய்க்கிறிஸ்தவர்களும் ஞானப்பிரகாரமாகச் செய்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்குக் குணப்படுதலும் விசுவாசமும் இல்லாதிருந்தும், தாங்கள் கிறிஸ்தமான சபையில் சேர்ந்து, வாயினால் கர்த்தருடைய நாமத்தை அறிக்கைபண்ணி, கிறிஸ்தமான சில சடங்குகளைச் செய்திருப்பதினாலேயே இரட்சிக்கப்படுவோம் என்று நினைக்கிறார்கள்.

18. புத்தியற்றோர் நாலாவது எதினாலே தங்கள் புத்தியீனத்தைக் காண்பித்தார்கள்.

மணவாளன் வரும்போது அவர்கள் தீவட்டிகள் அணைந்து போகிறதாயிருந்தபடியால், புத்தியுள்ள கன்னியாஸ்திரிகளிடத்தில் கடனாக எண்ணெய் வாங்க நினைத்ததினாலேதான். அதைப்பற்றி நாம் நம்முடைய வாக்கியத்தில் வாசிக்கிறதாவது: ஆனால் பாதி இராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற கூக்குரல் உண்டாயிற்று. அப்போது அந்தக் கன்னியாஸ்திரிகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளைச் சோடித்தார்கள். புத்தியற்றோரோவென்றால் புத்தியுள்ளோருடனே: உங்கள் எண்ணெயிலே எங்களுக்குக் கொஞ்சந் தாருங்கள். ஏனெனில் எங்கள் தீவட்டிகள் அணைந்து போகிறதென்றார்கள் (௬—௮).

19. புத்தியுள்ள கன்னியாஸ்திரிகள் தங்கள் எண்ணெயில் அவர்களுக்குக் கொடுக்கச் சம்மதித்தார்களா.

இல்லை. அதைப்பற்றி நம்முடைய வாக்கியத்தில்: ஆனால் புத்தியுள்ளோர் பிரத்தியுத்தாரமாக: அப்படி வேண்டாம்; எங்களுக்கும் உங்களுக்கும் போதாமல் போகாதபடிக்கு, நீங்கள் விற்கிறவர்களிடத்திலே போய், உங்களுக்குக் கொள்ளுங்கள் என்றார்கள் என்று எழுதியிருக்கிறது. இதினால் நமக்கு என்ன விளங்குகிறதென்றால், ஒருவன் தன் விசுவாசத்தினாலாவது தெய்வபக்தியினாலாவது வேறொருவனை இரட்சிக்கக் கூடாது. ஆம், ஒருவன் தன் புண்ணியத்தினாலே

தன்னையே இரட்சித்துக் கொள்ளக் கூடாதிருக்கும்போது, மற்றவனுடைய இரட்சிப்புக்கு உதவி செய்யக் கூடியதெப்படி. அது கூடாத காரியம்.

20. மணவாளன் வந்தபோது புத்தியுற்ற கன்னியாஸ்திரிகளுக்கு என்ன சம்பவித்தது.

அவர்களுடைய தீவட்டிகளில் எண்ணெய் இருந்ததாலும், அவர்கள் மணவாளனைச் சேர ஆயத்தமாயிருந்ததினாலும் அவர்கள் அவரோடு கூட கலியாணத்துக்குள் பிரவேசித்தார்கள். அதைப்பற்றி: அவர்கள் போகிறபோது மணவாளன் வந்தார். அப்போது ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடு கூட கலியாணத்துக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் பூட்டப்பட்டது என்று நம்முடைய வாக்கியம் சொல்லுகிறது.

21. இங்கே சொல்லப்பட்ட கலியாணம் என்ன.

பரமண்டலத்திலே பராபரனோடு பூரணஐக்கியமாயிருக்கிற விசுவாசிகளுடைய நித்திய பாக்கியந்தான். அது ஏன் கலியாணம் என்று அழைக்கப்படுகிறதென்றால்:

க. அதிலே கொடுக்கப்படுகிற பரிபூரண சந்தோஷத்தின் நிமித்தம்.

உ. அதிலே விசுவாசிகள் பராபரனோடு பூரணஐக்கியப்பட்டிருப்பதின் நிமித்தம்.

ந. அதிலே அவர்கள் ஆத்துமம் பரிபூர்ணதிருப்தியடைந்திருப்பதின் நிமித்தம்.

ச. அவர்கள் அங்கே சகல பரிசுத்தவான்களோடும் முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலரோடும் சேர்ந்து ஐக்கியமாயிருப்பதின் நிமித்தம்.

ரு. அவர்களுக்கு அங்கே கொடுக்கப்படும் விலையேறப்பெற்ற மகிமையான வஸ்திரத்தின் நிமித்தம். இவைமுதலான முகாந்தரங்களினால் அது கலியாணம் என்று அழைக்கப்படுகிறது.

22. இந்த நம்முடைய வாக்கியத்திலே சொல்லப்பட்ட கலியாணமும், மத்தேயு உஉ-ம் அதிகாரத்திலே சொல்லப்பட்ட கலியாணமும் ஒன்றுதானா.

இல்லை. மத். உஉ-ம் அதிகாரத்தில் கலியாண வஸ்திரம் இல்லாத ஒருவன் கலியாணத்துக்கு வந்தான் என்றும், புறம்பே தள்ளப்பட்டான் என்றும் வாசிக்கிறோம். ஆதலால் அங்கே சொல்லப்பட்ட கலியாணம் பூமியிலிருக்கிற கிருபையின் இராச்சியத்தைக் குறிக்கிறதேயொழிய வானத்திலிருக்கிற மகிமையின் இராச்சியத்தைக் குறிக்கிறதில்லை. ஏனெனில் இதிலே கலியாண வஸ்திரம் இல்லாதவன் உட்பிரவே



சிக்க முடியாது. அதற்கு வந்த ஒருவனும் புறம்பே தள்ளப்படுவதுமில்லை. அதற்கு அடையாளமாகக் கதவும் பூட்டப்பட்டதென்று நமது வாக்கியத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

23. மணவாளன் வந்தபோது புத்தியற்ற கன்னியாஸ்திரிகளுக்கு என்ன சம்பவித்தது.

அவர்கள் மணவாளனைச் சேர ஆயத்தமில்லாதவர்களாயிருந்தபடியால், கலியாணத்துக்குள் பிரவேசிக்கக் கூடாதவர்களாயிருந்தார்கள். அதைப்பற்றி நம்முடைய வாக்கியஞ் சொல்லுகிறதாவது: பின்பு மற்றக் கன்னியாஸ்திரிகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறவும் என்றார்கள். ஆனால் அவர் பிரத்தியுத்தாரமாக: உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (யக, யஉ).

24. இயேசுநாதர் எல்லாவற்றையும் அறிந்த பராபரனாயிருக்கக்கொள்ள, நான் உங்களை அறியேன் என்று அவர் எப்படிச் சொல்லக் கூடும்.

நான் உங்களை என்னுடையவர்களாக அறியேன் என்பதே அவர் சொன்ன இந்த வார்த்தையின் அர்த்தமாம். இயேசு இரட்சகரை மெய்யான விசுவாசத்தினாலே தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் மாத்திரம் அவருக்குச் சொந்தமானவர்களாயிருக்கிறார்கள். அவர்களையே அவர் தம்முடையவர்களாக அறிந்து அறிக்கையிட்டு ஏற்றுக் கொள்ளுகிறார்.

25. பத்துக் கன்னியாஸ்திரிகளைப் பற்றி இயேசுநாதர் சொன்ன இந்த உவமையின் கருத்தென்ன.

நாம் நமது ஆத்தும இரட்சிப்புக்காகக் கவலைப்பட்டு, ஏற்ற காலத்தில் நம்முடைய முடிவுக்கும், அவருடைய வருகைக்கும் நம்மை ஆயத்தம் பண்ணி, ஏவி எழுப்ப அவர் தேடுகிறார். ஆகையால் விழித்திருங்கள், ஏனெனில் மனுஷனுடைய குமாரன் வரும் நாளையாவது நாழிகையை என்கிலும் அறியீர்கள் என்று அவர் இந்த வாக்கியத்தின் கடைசியில் நம்மை எச்சரிக்கிறார் (யந).

படிப்பினை.

26. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

க. கர்த்தர் வருமட்டுந் திருச்சபையில் மெய்க்கிறிஸ்தவர்களும் பொய்க்கிறிஸ்தவர்களும் இருப்பார்கள். கிறிஸ்

யிலே கோதும்பையோடு களையும், வலையிலே நல்ல மீன்களோடு கெட்ட மீன்களுங் கலந்திருப்பது போல், கிறிஸ்தமான சபையிலே விசுவாசிகளும் அவிசுவாசிகளுங் கலந்திருப்பார்கள்.

௨. கர்த்தர் வரும்போது, பொய்க்கிறிஸ்தவர்களை விட்டு மெய்க்கிறிஸ்தவர்கள் பிரிக்கப்படுவார்கள். ஏனென்றால் இவர்கள் கலியாணத்துக்குப் பிரவேசிக்கையில் அவர்கள் வெளியே நின்றிருந்து, பிரவேசிக்கிறவர்களைக் கண்டுகொண்டிருப்பார்கள். அவர்கள் தங்கள் ஜீவகாலத்திலே தெய்வபக்தியின் வேஷத்தைத் தரித்துகொண்டு மற்ற மனுஷராலே தெய்வபக்தியுள்ளவர்களாக எண்ணப்பட்டிருந்தும், இயேசுநாதர் அவர்களை ஏற்றுக்கொள்ளாமல்: உங்களை அறியேன் என்று அவர்களுக்குச் சொல்லுவார்.

௩. கிறிஸ்துநாதர் விசுவாசிகளின் ஞானமணவாளனாயிருக்கிறார். ஆதலால் அவர்கள் அவருடைய சத்தத்தைக் கேட்டு, அவரை விசுவாசத்தினாலும் சிநேகத்தினாலும் முத்தமிட்டு, அவருக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய வருகைக்கு ஆயத்தமாய்க் காத்திருக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

௪. இப்பூமியில் விசுவாசிகளின் சஞ்சரிப்பு கர்த்தருடைய வருகைக்கு அன்றாட ஆயத்தம் பண்ணுதலாயிருக்க வேண்டும். மணவாட்டி மணவாளனுக்குக் காத்திருப்பது போல், அவர்கள் கர்த்தருக்குக் காத்திருந்து, அவரைச் சேரும்படிக்கு நித்தந் தங்களை ஆயத்தம் பண்ணவேண்டும்.

௫. மெய்க்கிறிஸ்தவர்களும் இன்னம் பெலவீனரும் குறைவுள்ளவர்களுமாயிருப்பார்கள். புத்தியற்ற கன்னியாஸ்திரிகள் மாத்திரமல்ல, புத்தியுற்ற கன்னியாஸ்திரிகளும் நித்திரைமயக்கமாயிருந்தார்கள் என்று நமது வாக்கியம் சொல்லுகிறது. அப்படியே விசுவாசிகளும் பெலவீனத்தினால் தொய்ந்து போகிறவர்களாயிருப்பதால், சிலவேளை அவ்வளவு சுறுசுறுப்பாய்ச் செபம்பண்ணாமலும், நன்றாய்ப் போராடாமலும், கர்த்தருக்கு ஊழியஞ் செய்யாமலும் தூங்குகிறவர்களுக்கு ஒப்பாயிருப்பார்கள். ஆனால் அவர்கள் விசுவாசத்தையும் பராபரனுடைய கிருபையையும் இழந்து, பாவ நித்திரையிலே முழுதும் அமிழ்ந்திப் போகாதபடிக்கு உண்மையுள்ள கர்த்தர் அவர்களைப் பலவிதங்களினாலே தட்டி எழுப்புகிறார்.

௬. இயேசுநாதர் நடுத்தீர்க்க வரும் போது, புத்தியுள்ளவர்கள் இன்னார், புத்தியில்லாதவர்கள் இன்னார் என்று தெளிவாய் விளங்கும். ஏனென்றால் அவர் மனுஷர் நினைக்கிறபடியே நியாயந்தீர்க்காமல், அவர்களுடைய இருதய நிலைமை-



யின்படியும் கிரியையின்படியும் உண்மையாய் நியாயந்தீர்ப்பார்.

௭. கர்த்தருடைய வருகை மனுஷர் நினையாத நேரத்திலும் திடீரென்றும் வரும். பாதி இராத்திரியிலே, அதாவது மனிதர் நன்றாய்த் தூங்குகிற நேரத்திலே மணவாளன் வந்தார் என்று நமது வாக்கியத்திலே எழுதியிருக்கிறது. அவர் திடீரென்று மனுஷர் நினையாத நேரத்திலே வருகிறபடியால் தான் நாம் எப்போதும் விழித்திருந்து, ஆயத்தமாயிருக்க வேண்டும். அதற்கென்றே பராபரன் வேத எழுத்துக்களைக் கொண்டும் உண்மையுள்ள போதகரைக்கொண்டும், நமக்குச் சம்பவிக்கிற அந்தந்த சந்தோஷ, துக்க சம்பவங்கள், இவை முதலான காரியங்களினாலும் நம்மைத் தட்டி எழுப்பி, நமக்கு: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போங்கள் என்று கூப்பிடுகிறார்.

இந்த நமது அருமை மணவாளனாகிய இயேசு இரட்சகருக்கும் அவருடைய பரம பிதாவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் என்றென்றைக்கும் கனமும் மகிமையுந் துதியும் உண்டாவதாக, ஆமேன்.

## மிசியோன் ஸ்தோத்திரப்பண்டிகை.

(ஞானப்பாட்டு ௱௨௬. ௨௮௩.)

### சுவி. மத். ௨௮, ௰௮—௨௰.

அப்போது இயேசு சேர்ந்து, அவர்களுடனே பேசிச் சொன்னதாவது: வானத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறது. 19 ஆகையால் நீங்கள் போய், பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, 20 நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாத்தையுங் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள். இதோ, நான் லோக முடிவுமட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமேன்.

1. நாம் இன்றைக்கு எந்தப் பண்டிகையைக் கொண்டாடுகிறோம்.

இத்தேசத்தில் சுத்த சுவிசேஷ மிசியோன் கிரியையைத் துவக்கினவரும் நமது தமிழ் லுத்தரான் சபையை ஸ்தாபித்தவருமாகிய சீகன்பால்க் சிரேஷ்டர் 1706—ம் வருஷம் ஜூலை 9உ இந்தத் தேசத்துக்கு வந்தபடியால், பராபரன் அவரைக்கொண்டு ஆரம்பித்த மிசியோன் கிரியையினால் நமக்குச் செய்து வந்திருக்கிற சகல உபகாரங்களுக்காகவும் அவ

யை ஸ்தோத்திரிக்கும்படிக்கு, நாம் இன்றைக்கு மிசியோன் ஸ்தோத்திரப்பண்டிகையைக் கொண்டாடுகிறோம்.

2. சீகன்பால்க் சிரேஷ்டர் ஆர்.

அவர் கர்த்தருடைய உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரன். அவர் 1683-ம் வருஷம் கெர்மானியா தேசத்தில் பிறந்து, பிராயமானபோது விசேஷித்த பிரகாரம் அவருடைய ஊழியத்துக்கென்று ஆயத்தம் பண்ணப்பட்டு, தென்மார்க்கு தேச இராசாவாகிய நாலாம் பிரதரிக என்பவனால் அக்காலத்தில் டேனிஷ்காரர் அதிகாரத்துக்குள்ளாயிருந்த தரங்கம்பாடியிலுள்ள அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி இத்தேசத்துக்கு அனுப்பப்பட்டார். இவர் தம் தோழனாகிய பிளிச்சௌ என்பவரோடு தன் பிறந்த தேசத்தை விட்டு, இத்தேசத்துக்கு வந்து, 1706-ம் வருஷமுதல் உண்மையும் சுறுசுறுப்புமாய் மிசியோன் வேலையை நடப்பித்து, 1719-ம் வருஷம் தரங்கம்பாடியிலே மரித்து அடக்கம் பண்ணப்பட்டார்.

3. கர்த்தர் மிசியோன் கிரியையால் நமக்குச் செய்து வந்திருக்கிற உபகாரங்களுக்காக நாம் எப்படி அவரை ஸ்தோத்திரிக்கவேண்டும்.

க. நாம் நமது இருதயத்தை அவருக்கு ஈவாகக் கொடுத்து, இருதயத்தினாலும் வாயினாலும் அவரைப் புகழ்ந்து ஸ்தோத்திரம் பண்ணவேண்டும். இருதயத்தில் நன்றியறிதலுள்ளவர்களாகி, உதடுகளின் கனியாகிய துதியின் பலியைச் செலுத்தக்கடவோம்.

உ. நாம் நமது பரிசுத்த நடக்கையினால் நம்மை அஞ்ஞான மார்க்கத்தின் அந்தகாரக்கிரியைகளை விட்டு தம்முடைய ஆச்சரியமான வெளிச்சத்துக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கவேண்டும். அதற்கென்று பேதுரு அப்போஸ்தலன் நம்மை ஏவி எழுப்பி: புறச்சாதியார் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, கண்காணிப்பின் நாளிலே பராபரனை மகிமைப்படுத்தும்படிக்கு நீங்கள் அவர்களுக்குள்ளே நல் நடக்கையாய் நடக்க உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன் என்கிறான் (௧ பேது. ௨, ௰௨).

௩. பராபரனுடைய இராச்சியம் பரம்பும்படிக்கும் மிசியோன் கிரியை விர்த்தியடையும்படிக்கும் நாம் நம்மால் கூடியமட்டும் உதவிசெய்யவேண்டும். ஆகலால் நம்மில் ஒவ்வொருவனும் அஞ்ஞானிகளின் குணப்படுதலுக்காகச் செபம் பண்ணுவதுமல்லாமல், சமயமிருக்கும் போதெல்லாம் அஞ்ஞானிகளுக்கு முன் கிறிஸ்துவை அறிக்கையிட்டு, அவர்கள் ஆத்தும இரட்சிப்பைக் குறித்து அவர்களோடு பேசி, அவர்களை நர்த்தராண்டைக்கு அழைக்கவேண்டும். மேலும் கர்த்தர் மிசியோன் கிரியையைக் கொண்டு பரம ஆசீர்வாதத்தால் நம்மையும் ஆசீர்வதித்து, நமக்கு அநேக நன்மைகளைச் செய்திருக்கிறபடியால், இந்தக் கிரியை நடபிக்கப்படுவதற்கென்று நாம் உற்சாகத்தோடு பொருள் உதவிசெய்யவேண்டும்.



4. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தில் என்ன அடங்கியிருக்கிறது.

இயேசு இரட்சகர் பரத்துக்கு ஏறின சமயத்தில் தமது சீஷருக்குச் சொன்ன கடைசி வார்த்தையாம். இந்த வார்த்தையிலே அவர் அஸ்திபாரமும் ஆதாரமும் இன்னதென்று காண்பிக்கிறார்.

5. மிசியோன் கிரியையின் அஸ்திபாரத்தைக் கர்த்தர் எந்த வார்த்தையினால் காண்பிக்கிறார்.

நமது சுவிசேஷ வாக்கியத்தின் துவக்கவார்த்தையினால் தான். அதாவது: வானத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது. ஆதலால் மனுஷ இரட்சிப்புக்கென்று பாடுபட்டு மரித்து, மரணத்திலிருந்து எழுந்த இயேசு இரட்சகர் பரத்துக்கு ஏறி, சகல அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டு, பிதாவின் வலது பாரிசத்தில் உயர்த்தப்பட்டதே மிசியோன் கிரியையின் அஸ்திபாரம். ஏனென்றால் அவர் இப்பூமியிலே தமது தாழ்ந்த நிலைமையில் இருந்திருப்பாரானால், நமக்கு இரட்சிப்பில்லை. அப்போது இரட்சிப்பினுடைய விசேஷம் பிரசங்கிக்கப்படவுமில்லை, மிசியோன் கிரியை நடப்பிக்கப்படுவதும் இல்லை. ஆனாலும், அவர் உயர்த்தப்பட்டுச் சகல அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டிருக்கிறபடியால், அவர் தமது பாடுகளாலும் மரணத்தாலும் மீட்டு இரட்சித்துத் தமக்குச் சம்பாதித்துக்கொண்ட மனிதசாதி பிசாசின் அடிமைத்தனத்திலிருக்கச் சகிக்காமல், அவர்களை விடுதலையாக்கித் தமது இராச்சியத்திலே சேர்த்துக்கொண்டு இரட்சிக்கும்படிக்கு மிசியோன் கிரியையை ஏற்படுத்தினார்.

6. கிறிஸ்துநாதர் சர்வத்திற்றும் வல்ல நித்திய பராபரனாயிருக்க, அவர்: எனக்குச் சகல அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று எப்படிச் சொல்லக் கூடும்.

அவருக்குள்ள இரண்டு சுபாவங்களில் தெய்வ சுபாவத்தின்படியே அவருக்குச் சகல அதிகாரமும் இருக்கிறது. ஆனால் பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறபடியே, அவர் தேவரூபமாயிருந்தும், பராபரனுக்குச் சரியாயிருக்கிறதைக் கொள்ளையிடின உடைமையாக எண்ணாமல், தம்மைத் தாம் வெறுமையாக்கி ஊழியக்காரன் ரூபமெடுத்து, மனுஷ சாய

லாகி, வேஷத்திலே மனுஷனாகக் காணப்பட்டுத் தம்மைத் தாம் தாழ்த்தினார் (பிலிப். ௨, ௬-௮). அவர் இந்தத் தாழ்ந்த நிலைமையை விட்டு உயர்த்தப்பட்டபோது, தமது தேவ சுபாவத்தோடு இணைக்கப்பட்டிருக்கிற மனித சுபாவத்தின்படியேயுங் கூட சகல அதிகாரத்தையும் அடைந்தார். அதைப் பற்றிப் பவுல் அப்போஸ்தலன்: ஆனபடியினாலே பராபரன் அவரை மேலுக்கு மேலாகவும் உயர்த்தி, இயேசு என்கிற நாமத்துக்கு வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், நாவு யாவும் இயேசுகிறிஸ்து கர்த்தர் என்று பிதாவாகிய பராபரனுக்கு மகிமையாக அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்கு அருளிச் செய்தார் என்றும் (பிலிப். ௨. ௯—௰௧). நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருந்தால், எல்லாரையும் என்னண்டைக்கு இழுத்துக் கொள்ளுவேன் என்று கர்த்தர் சொன்னபடியே (யோவா. ௰௨, ௩௨), அவர் முந்திச் சிலுவையிலும் கர்த்தருடைய வலது பாரிசத்திலும் உயர்த்தப்பட்ட பிற்பாடுதான் சுவிசேஷத்தினாலும் மிசியோன் கிரியையினாலும் சாதிகளைத் தம்மண்டைக்கு இழுத்துக் கொள்ளத் துவக்கினார்.

7. எந்த வார்த்தையினால் மிசியோன் கிரியையை ஏற்படுத்தினார்.

நீங்கள் போய்ச் சகலசாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாத்தையுங் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள் என்ற வார்த்தையினால் (௰௯. ௨௰).

8. இந்தக் கட்டளையைக் கர்த்தர் ஆருக்குக் கொடுத்தார்.

தமது முந்தின சீஷர்களாகிய அப்போஸ்தலருக்கு மாத்திரமல்ல, தம்முடைய எல்லாச் சீஷரின் கூட்டமாகிய திருச்சபைக்குக் கொடுத்தார். ஏனென்றால் இந்தத் தமது சபைக்குக் கர்த்தர் தம்முடைய கிருபையின் எத்தனங்களை ஒப்புக் கொடுத்து, தமது கிருபையினுடைய பொக்கிஷங்களையுங் கட்டளையிட்டார். இந்தத் தமது திருச்சபைக்கும் அதின் தன்மையுள்ள எல்லா அவயவங்களுக்கும் அவர்: இதோ, நான் லோகமுடிவு மட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனேகூட இருக்கிறேன் என்கிற ஆறுதலான வாக்குத்தத்தத்தையுங் கொடுத்தார். ஆகலால் பராபரனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய இராச்சியம் பரம்பும்படிக்கு மிசியோன் கிரியையை நடப்பிக்கிறது எந்தக் காலத்திலும்



திருச்சபையின் கடமையாயிருப்பதால், அப்போஸ்தலர் துவக்கினதும் இந்நாள்வரைக்கும் நடப்பிக்கப்படுகிறதுமான மிசியோன் கிரியைக்குக் கிறிஸ்தவர்கள் யாவரும் உதவிசெய்யக் கடமையுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

9. கர்த்தருடைய கட்டளையின்படியே மிசியோன் கிரியையினால் ஆரைச் சேர்க்க வேண்டும்.

சகல சாதிகளையும். ஏனென்றால் இயேசு இரட்சகர் எல்லா மனிதருக்காகவும் மனுஷனாகிப் பாடுபட்டு மரித்து எல்லாரையும் மீட்டிரட்சித்திருக்கிறபடியால், அவர் எல்லாரும் சத்தியத்தின் அறிவுக்கு வரச் சித்தமுள்ளவராயிருந்து, தமது ஊழியக்காரரை லோகம் எங்கும் அனுப்பி, சகல சாதிகளையும், அதாவது யூதர் அக்கியானிகள், நாகரீகமுள்ளவர்கள் நாகரீகமற்றவர்கள், படிப்பாளிகள் படிப்பற்றவர்கள், உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் ஐசுவரியவான்கள் தரித்திரர் முதலிய எல்லாமனுஷரையும் சீஷராக்க வேண்டுமென்று உத்தரவுகொடுத்தார்.

10. சாதிகளைச் சீஷராக்குகிறதாவது என்ன.

அவர்களைக் கிறிஸ்தவர்கள், அதாவது கிறிஸ்துவின் சீஷராக்கி, அவருடைய சபையிலே சேர்க்கிறதாம். ஆதித் திருச்சபையில் கிறிஸ்தவர்கள் பொதுவாய்ச் சீஷர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

11. சாதிகள் எதினால் சீஷர், அதாவது கிறிஸ்தவர்களாக வேண்டும்.

பலவந்தத்தினாலும் லோகத்தடுத்த காரியங்களினாலுமல்ல, பராபரனுடைய வசனமும் பரிசுத்த சாக்கிரமெந்துகளுமாகிய கிருபையின் எத்தனங்களினால் தான். ஆகலால் நீங்கள் லோகம் எங்கும் போய்ச் சிருஷ்டியாயிருக்கிற யாவருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்றும் (மாற். ௰௬, ௰௫), நீங்கள் போய் அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள் என்றும் நமது வாக்கியத்திலே சொல்லுகிறார்.

12. சாதிகளுக்கு அறிவிக்கப்படவேண்டிய அந்தச் சுவிசேஷத்தினுடைய பொருள் என்ன.

குணப்படுதலும் பாவமன்னிப்புமாம். ஆதலால் கிறிஸ்துநாதர்: எருசலேம் துவக்கிச் சகல சாதிகளிடத்திலுங் குணப்படுதலும் பாவமன்னிப்பும் அவர் நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட வேண்டியதாயிருந்தது என்று சொல்லுகிறார் (லூக். ௨௪, ௪௭). இது தான் கிறிஸ்தமான பிரசங்கத்தின் முக்கிய பங்கு.

13. சாதிகள் எதினால் கிறிஸ்தமான சபையில் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்.

பரிசுத்த ஞானஸ்நானமாகிய கிருபையின் எத்தனத்தினால் தான். இயேசு இரட்சகர்: சகல சாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள் என்றார். திரியேக பராபரன் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறுகிறவன் அவிசுவாசத்தினால் பராபரனுடைய கிருபையைத் தள்ளிவிடாமல் பரிசுத்த ஆவிக்கு இடங்கொடுத்தால், அவன் திருச்சபையின் அவயவமாகி, அதின் சகல நன்மைகளுக்கும் பங்காளியாயிருந்து திரியேக பராபரனோடே ஐக்கியமாகிறான்.

14. அப்போது சாதிகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறது மாத்திரம் போதுமா.

இல்லை. விசுவாசியாதவனே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று கர்த்தர் சொல்லுகிறதால், அவர்கள் குணப்பட்டு விசுவாசித்து, அதிலே நிலைத்திருந்து பரிசுத்தராய் நடக்கவேண்டியது அவசியம். அதற்காகக் கர்த்தர் அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள் என்று சொன்னதுமல்லாமல், நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாத்தையுங் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள் என்று நமது வாக்கியத்திலே சொல்லுகிறார். ஆதலால் ஞானஸ்நானங் கொடுக்கிறது மாத்திரமல்ல, அவர்களுக்குப் போதகம் பண்ணுகிறதுங் கர்த்தருடைய சித்தம். அதின்படியே ஞானஸ்நானம் பெறப்போகிற அஞ்ஞானிகள் கிறிஸ்தமான போதகத்தைக் கேட்டுப்படிக்க வேண்டும். அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பிற்பாடும், கர்த்தரிடத்தில் உறுதியாய் நிலைத்திருந்து, அவரை அறிகிற மெய் அறிவிலும் கிருபையிலும் வளரும்படிக்குப் பராபரனுடைய வசனத்தையும் ஞானப்பிரசங்கத்தையும் சுறுசுறுப்பாய் வாசித்துக் கேட்டுப் படிக்கவேண்டும்.

15. ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்தமான சபையில் சேர்ந்தவர்கள் தாங்கள் மெய்க்கிறிஸ்தவர்கள் என்பதை எதினால் காண்பிக்கிறார்கள்.

கர்த்தர் கற்பித்ததை எல்லாங் கைக்கொள்ளுகிறதினாலாம். ஏனென்றால் ஒருவன் என்னைச் சிநேகித்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான் என்று கர்த்தர் சொல்லுகிறார் (௰௪, ௨௩). அவரைச் சிநேகியாமலும் அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளாமலும் போகிற கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானத்தினால் திருச்சபையில் சேர்க்கப்பட்டிருந்தாலும், அவர்கள் மெய்க்கிறிஸ்தவர்களாயிராமல், மாயக்காரரும் பேர்க்கிறிஸ்தவர்களுமாயிருக்கிறார்கள். திருச்சபையின் நிலத்திலே கோதுமையோடே வளருகிற களையாகிய



அவர்கள் குணப்படாதேபோனால், இரட்சிப்படையாமல் நரகாக்கினைக்கு ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்.

16. நமது சுவிசேஷ வாக்கியத்தில் கர்த்தர் மிசியோன் கிரியையின் ஆதாரத்தை எதினால் காண்பிக்கிறார்.

இதோ, நான் லோகமுடிவுமட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்கிற தம்முடைய வார்த்தையின்படியே, அவர் தாமே மிசியோன் கிரியையினுடைய ஆதாரமாம். சகல சாதிகளையுஞ் சீஷராக்குகிறது மனுஷராலே கூடாதகாரியமாயிருக்கிறது. ஆதலால் கர்த்தர் தமது சீஷர்களைச் சகல சாதிகளையும் சீஷராக்கும்படி லோகமெங்கும் அனுப்பினபோது: இதோ, நான் உங்களுடனே கூட இருக்கிறேனென்று சொல்லி, மிசியோன் கிரியையை நடப்பிக்கிறவன் மனிதனல்ல, கர்த்தராகிய நாம் தாமே என்று வெளிப்படுத்துகிறார். ஏனென்றால் கர்த்தருடைய ஊழியக்காரர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படிக்கும் பராபரனுடைய இராச்சியத்தைப் பரம்பச் செய்யும்படிக்கும் மிசியோன் வேலையை நடப்பிக்கும்போது, அவர்கள் அதைத் தனிமையாய்ச் செய்யாமல், வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் அடைந்த இயேசு இரட்சகர் தமது வல்லமையோடும், கிருபை, ஆசீர்வாதம், இரட்சிப்போடும் அவர்களோடு கூட இருந்து, அவர்களை ஆதரித்துக் காப்பாற்றி, ஆற்றித்தேற்றிப் பலப்படுத்தி, அவர்களுக்குச் செயங்கொடுக்கிறார். ஆதலால் அவர்கள் பயமின்றிச் சந்தோஷத்தோடும் தைரியத்தோடும் நம்பிக்கையோடும் தங்கள் வேலையை நடப்பிக்க வேண்டும்.

17. ஆனால் இயேசுநாதர் தமது சீஷருக்கு இந்த வாக்குத்தத்தத்தைக் கொடுத்தபோது, அவர் அவர்களை விட்டு வானத்துக்கு எழுகிறவராயிருந்தாரே, அப்புறம் அவர் அவர்களோடு எப்படியிருக்கக் கூடும்.

அவர் இதுவரையில் அவர்களோடு இருந்த பிரகாரம், அதாவது காணப்படுகிற பிரகாரமாக அவர்களோடிராமல், காணப்படாத பிரகாரமாக அவர்களோடு உலகமுடிவுமட்டாக இருக்கிறார்.

18. அவர் எந்தச் சுபாவத்தின்படி அவர்களோடிருக்கிறார்.

அவருக்குள் தேவ சுபாவமும் மனிதசுபாவமும் பிரிந்திராமல் ஒன்றித்திருக்கிறபடியால், தமது தேவ சுபாவப்படி மாத்திரமல்ல, மனித சுபாவப்படியேயும் இப்பூமியில் இருக்கிற தமது விசுவாசிகளுடனே கூட இருக்கிறார். ஆம், அவர் இந்தச் சுபாவத்தின்படியே வானத்திலும் பூமியிலும் சகல

அதிகாரத்தையும் அடைந்திருக்கிறபடியால், அவர் அதின்படியேயும் தம்முடைய இராச்சியத்திலிருக்கிற தம்முடையவர்களோடு கூட இருந்து அவர்களுடைய நன்மைக்கென்றும் இரட்சிப்புக்கென்றுந் தமது வல்லமையைக் கையாடுகிறார்.

19. அவர் எதினாலே அவர்களோடு கூட இருக்கிறார்.

தம்முடைய கிருபையின் எத்தனங்களினால். ஆதலால் அவர் ஞானஸ்நானத்தையும் போதகத்தையும், அதாவது தமது வசனத்தையுங் குறித்துப் பேசின பிற்பாடு: இதோ, நான் லோகமுடிவுமட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று வாக்குத்தத்தங் கொடுத்தார். ஆதலால் இந்தக் கிருபையினுடைய எத்தனங்கள் விசுவாசிகளுக்கு இருக்கக்கொள்ளும், அவைகள் அவர்களால் சரியாய்க் கையாடப்படும்போதும், கர்த்தர் அவர்களைக் கைவிடாமலும் அவர்கள் கெட்டுப்போகாமலும் இரட்சிக்கப்படும்படிக்குத் தமது வல்லமையோடு அவர்களைக் கிருபையாய்க் காப்பாற்றி வருவார்.

20. கர்த்தர் தங்களோடு இருக்கிறார் என்பது விசுவாசிகளுக்கு எப்போதும் விளங்குமா.

இல்லை. அவர் சிலவேளைத் தமது ஞானத்தின்படியே தம்மை அவர்களுக்கு மறைக்கிறார், அதாவது அவர் தமது சிநேகத்தை அவர்களுக்கு ருசிக்கக்கொடாமல், துன்பங்களை அனுப்பி, பயத்தையும் விசுவாசத்தையுங் கொடுக்கிறார். ஆகிலும் அவர் அப்படியே அவர்களைச் சிலவேளை சோதித்தாலும், ஓர்க்காலும் கைவிடாமல் சகல நாட்களிலும் அவர்களுடனே கூட இருக்கிறார்.

21. கர்த்தர் இந்தத் தம்முடைய வாக்குத்தத்தத்தினால் ஆரை ஆற்றித்தேற்றுகிறார்.

குணப்படாதவனையும் விசுவாசியாதவனையுமல்ல. கர்த்தர் அவனுடனே இராமல், அவனுக்கு விரோதமாயிருக்கிறார். பராபரனுடைய கோபமும் சாபமும் அவன்மேல நிலைநிற்கும். ஆனால் தன் இருதயத்தைக் கர்த்தருக்குக் கொடுத்து, அவரைச் சிநேகித்து, கீழ்ப்படிந்து, அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டு, அவருக்கு ஊழியஞ்செய்கிறவனையே அவர் இந்த வாக்குத்தத்தத்தினால் ஆற்றித்தேற்றுகிறார்.

## படிப்பினை.

22. இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.



I. பராபரனைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. அவர் பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியேகபராபரனாயிருக்கிறார். அது மகா இரகசியத்தில் அடங்கியிருக்கும் ஞானஸ்நானக் கட்டளையிலே விளங்கும். அதினிமித்தம் கிறிஸ்தவர்களாகிய நாம் அவரைத் திரியேக பராபரனாக அறிந்து, அழைத்து, அறிக்கையிட்டு வணங்குகிறோம்.

உ. திரியேக பராபரன் தம்முடைய கிருபையின் எத்தனங்களைக்கொண்டு நம்மண்டைக்கு வந்து, நம்மைத் தமது பாக்கியமான ஐக்கியத்தில் ஏற்றுக்கொள்ளுகிறார். பராபரனுடைய வசனமும் ஞானஇரகசியமுமாகிய இந்தக் கிருபையின் எத்தனங்களை அல்லாமல், நாம் அவரோடு ஐக்கியமாயிருந்து அவருடைய இரட்சிப்புக்குப் பங்குள்ளவர்களாகக் கூடாது. ஆதலால் நாம் இந்தத் தெய்வீக எத்தனங்களை மகாப் பெரிதாக எண்ணி அவைகளைச் சரியாய்க் கையாட வேண்டும்.

II. கிறிஸ்துநாதரைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. அவர் மெய்யான தேவனும் மனிதனுமாயிருக்கிறார். அவர் மனுஷனாயிருப்பதினால்தான் உயர்த்தப்பட்டு, வானத்துக்கும் பூமிக்கும் அதிகாரியானார். ஆனால் அவர் மெய்யான தேவனாகவும் இருக்கிறார். மற்றப்படி அவர் தம்முடைய நாமத்தை பிதாவாகிய பராபரனுடைய நாமத்தோடு சேர்த்துச்சொல்லக் கூடாது. அவரே: பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுங்கள் என்று நமது வாக்கியத்திலே சொல்லுகிறார்.

உ. அவர் எல்லா மனுஷருக்கும் இரட்சகராயிருக்கிறார். ஆதலால் அவர் எப்படி எல்லா மனுஷருடைய இரட்சிப்புக்கென்று தமது சீவனைக் கொடுத்தாரோ, அப்படியே அவர் பிதாவாகிய பராபரனுடைய வலது பாரிசத்திலே உயர்த்தப்பட்டபிற்பாடு தமது கிருபையின் எத்தனங்களைக் கொண்டும் தாமே ஏற்படுத்தின தேவ ஊழியத்தைக் கொண்டும் எல்லாரையுந் தம்முடைய இராச்சியத்திலே சேர்த்துக்கொண்டு இரட்சிக்கப் பிரிய சித்தமாயிருக்கிறார். ஆம், ஒருவனாவது தன்னாலேதான் இரட்சிப்பைத் தேடி கர்த்தரண்டைக்கு வரக் கூடாதபடியால், அவரே தமது ஊழியரை அனுப்பி எல்லாரையுந் தேடுகிறார்.

III. கிறிஸ்தவமான சபையைப்பற்றி நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது:

க. அது பொதுவான சபையாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டின் காலத்திலே பராபரன் ஒரே சாதியை, அதாவது இஸ்ரவேல் சந்ததியை மாத்திரம் தெரிந்துகொண்டு, அதை அஞ்ஞானிகளுடைய ஐக்கியத்தை விட்டுப் பிரித்தாலும், புதிய ஏற்பாட்டின் காலத்திலே அவர் சகல சாதிகளையும் சேகரிக்க, அதாவது தமது சபையில் சேர்த்துக்கொள்ளக் கற்பிக்கிறார். இந்தச் சபையிலே எந்தச்சாதியும் பிரவேசித்து, கர்த்தருடைய இராச்சியத்தின் நன்மைகளுக்குப் பங்குள்ளவர்களாகலாம்.

உ. அது லௌகிக இராச்சியமாயிராமல், ஞான இராச்சியமாயிருக்கிறது. ஏனென்றால் அவர் அதைப் பட்டையத்தினாலாவது, பூமிக்கடுத்த எந்த எத்தனத்தினாலாவது பரம்பச்செய்ய உத்தரவு கொடுக்காமல்: பிரசங்கியுங்கள், ஞானஸ்நானங் கொடுங்கள், போதியுங்கள் என்று சொன்னதினால், அதைக் கிருபையின் எத்தனங்களைக் கொண்டு பரம்பச்செய்யக் கட்டளையிட்டார்.

௩. திருச்சபை ஒரு மனுஷனுடைய அதிகாரத்தின் கீழ் இராமல், கர்த்தருடைய அதிகாரத்தில் மாத்திரம் இருக்கிறது. ஏனென்றால். எனக்குச் சகல அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நம்முடைய வாக்கியத்திலே சொல்லுகிறார். இந்தத் தம்முடைய அதிகாரத்தை அவர் ஒரு மனுஷனுக்கு ஒப்புக்கொடுக்காமல், தாமே திருச்சபையினுடைய தலைவரும் அதின் இராசாவுமாக ஆளுகைசெய்கிறார். அப்போஸ்தலர் முதலிய போதகர் சபையின் எசமான்களாயிராமல், கர்த்தருடைய மந்தையின் மேய்ப்பரும் அவருடைய ஊழியக்காரருமாயிருந்தார்கள்.

௪. கிறிஸ்துநாதர் தாமே எப்போதும் இப்பூமியிலுள்ள தமது சபையிலே இருக்கிறார். அவர் அதை ஒருக்காலும் விட்டு விடுகிறதில்லை. ஏனென்றால் இதோ நான் லோக முடிவுமட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று சொல்லுகிறார்.

இந்த நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், பரம பிதாவாகிய பராபரனுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் சதாகாலங்களாய் என்றென்றைக்கும் மகிமையுந் துதியும் உண்டாவதாக, ஆமேன்.



## திருச்சபை சீர்திருத்தப்பட்டதை நினைவுகூருந் திருநாள். (அக்டோபர் மீ ௩௧-ம்.)

(ஞானப்பாட்டு உ[illegible]க. உ. [illegible])

சுவி. மத். ௰க, உரு-௩௰.

அந்த வேளையிலே இயேசு மறுமொழியாகச் சொன்னதாவது;
பிதாவே, வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, இதுகளை ஞானிக
ளுக்குங் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்
தினீர் என்கிறதுக்காக உம்மை மகிமைப்படுத்துகிறேன். 26 ஆம்,
பிதாவே, அப்படியே உமக்கு முன்பாகப் பிரியமாயிருந்தது. 27 என்
பிதாவினால் எனக்குச் சகலமும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது.
பிதா தவிர ஆருங் குமாரனை அறியான்; குமாரனும் குமாரன் எவ
னுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுந் தவிர ஆரும்
பிதாவையும் அறியான். 28 பிரயாசப்பட்டுப் பாரஞ் சுமந்தவர்களா
யிருக்கிற நீங்களெல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள்; நான் உங்களை
முசிப்பாற்றுவேன். 29 என் நுகத்தடியை உங்கள் மேல் ஏற்றுக்
கொண்டு, என்னிடத்திலே கற்றுக்கொள்ளுங்கள். அதேனென்றால்
மெத்தனவும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். அப்படியே உங்
கள் ஆத்துமங்களுக்கு முசிப்பாறுதல் கிடைக்கும். 30 ஏனெனில்
என் நுகத்தடி மெதுவும் என் சுமை லேசுமாயிருக்கிறது என்றார்.

1. இன்றைக்கு எந்த விசேஷித்த நாள்.

திருச்சபை சீர்திருத்தப்பட்டதை நினைவுகூருந் திருநாள்.

2. திருச்சபை சீர்திருத்தப்பட வேண்டியதா.

நம்முடைய விசுவாசப்பிரமாணத்தில் நாம் அறிக்கையிடுகிறபடி, கர்த்தருடைய சபை பரிசுத்த சபைதான். இந்தச் சபைக்குக் கர்த்தர் கொடுத்த தமது பரிசுத்த வசனத்தினால் அவர் தாமே அதில் இருக்கிறார். ஆதலால் திருச்சபை பராபரனுடைய வசனத்தைக் காப்பாற்றி அதைச் சரியாய்க் கையாடுகிற வரையில், அது தவறிப்போகவுங் கெட்டுப்போகவுங் கூடாது. ஏனென்றால் அப்போது சபையின் தலைவரும் எசமானுமாகிய இயேசு இரட்சகர் தமது ஆவியைக்கொண்டு அதை எல்லாச் சத்தியத்திற்குள்ளும் நடத்தி, அதை நரகத்தின் ஒலிமுகவாசல்கள் மேற்கொள்ளாதபடிக்குக் காப்பாற்றி வருவார். ஆதலால் திருச்சபை எப்போதும் கர்த்தருடைய வசனத்தைச் சுத்தமாய்க் காத்து, நிதானமாய்க் கையாடிக் கொண்டிருக்குமேயானால், சபையின் சீர்திருத்தல் அவசியமில்லை. ஆனால் அப்போஸ்தலரும் ஆதித்திருச்சபையின் முற்பிதாக்களும் இறந்துபோன பிற்பாடு, பிசாசினுடைய மோசத்தினாலும் மனுஷருடைய துரோகத்தினாலும் பராபர

னுடைய பரிசுத்த வசனம் அதிகம் அதிகமாய் மறைக்கப்பட்டதுமல்லாமல், அத்தோடு மனுஷ வார்த்தைகளுங் கலந்ததால் அது கெடுக்கப்பட்டிருந்தது. அத்தோடும் அதினாலும் அநேகந் தப்பறைகள் திருச்சபையிலே நுழைந்ததுமன்றி, அதிலேயே ஆத்துமாக்களுக்குக் கெடுதலான அநேகக் கள்ளப்போதகங்கள் உற்பத்தியாகி, பராபரனுடைய வசனத்துக்கு விரோதமான அநேக ஏற்பாடுகள் உண்டாயிற்று. அதினாலே கர்த்தருடைய நாமம் அதிகமாய்த் தூஷணிக்கப்பட்டது. இரட்சிப்பைத் தேடின உண்மையுள்ள ஆத்துமாக்கள் அதின் சரியான வழியை அறியாமல், நிச்சயமும் சந்தோஷமுமற்றவர்களாய் இருளிலே தடுமாறினார்கள். இப்படித் திருச்சபை மகாப் பரிதாபமான நிலைமையிலிருந்ததினால் சபைக்கு ஒரு சீர்திருத்தல் மகா அவசியமாயிருந்தது.

[illegible]. திருச்சபை ஆராலே சீர்திருத்தப்பட்டது.

திருச்சபை சீர்திருத்தப்பட வேண்டுமென்று அநேக உத்தம போதகரும் சபையாரும் வெகுகாலமாக அறிந்து அறிக்கையிட்ட பிற்பாடு, கர்த்தர் அவசியமான இந்தச் சீர்திருத்தலை நிறைவேற்றும்படியாக மார்த்தீன் லூத்தர் சுவிஸ்திரியார் முதலிய தெய்வபத்தியுள்ள ஊழியரை எழுப்பினார்.

[illegible]. லூத்தர் திருச்சபையின் சீர்திருத்தலின் கிரியையை எப்படித் துவக்கினார்.

ரோமான் சபையின் தலைவராகிய அக்காலத்திலிருந்த பாப்பு தனக்குப் பணந் தேவையாயிருந்தபடியால், பணத்துக்காகப் பாவமன்னிப்புச் சீட்டை விற்கும்படிக்குத் தன் தானாபதிகளை இங்குமங்கும் அனுப்பியிருந்தான். லூத்தர் வாசமாயிருந்த இடத்திலும் கூடச் சேதின இந்தக் கெட்ட வியாபாரத்தினால் பெரிய இடறல் உண்டானபோது, அநேக ஆத்துமாக்கள் அதினால் இடறல்பட்டுக் கெட்டுப்போவார்கள் என்று லூத்தர் கண்டு, அதற்கு விரோதமாக தொண்ணூற்றைந்து நியாயங்களை எழுதி, பாவமன்னிப்புச் சீட்டு வியாபாரம் பராபரனுடைய வசனத்துக்கு விரோதம் என்று ரூபித்தார். மேற்சொன்ன ௯௫ நியாயங்களை அவர் 1517-ம் வருஷம் அக்டோபர் மீ ௩௧ உ விற்றன்பர்க் பட்டணத்தின் அரண்மனைக் கோவிலின் கதவிலே ஒட்டினதினால் சீர்திருத்தலின் கிரியை தொடங்கிற்று. லூத்தரால் சீர்திருத்தப்பட்டதும், அவர் பராபரனுடைய வசனத்தின்படியே போதித்த சுத்த சுவிசேஷ போதகத்தை ஏற்றுக்கொண்டு அறிக்கையிடுகிறதுமான நமது சபை சுவிசேஷ லூத்தரன் திருச்சபை என்று அழைக்கப்படுகிறது.



5. அப்படியானால் லூத்தரன் சபை லூத்தரால் ஸ்தாபிக்கப்பட்ட புதுச் சபையாயிருக்கிறதோ.

இல்லை; ஏனென்றால்:

௧. அப்போஸ்தலரும் ஆதித்திருச்சபையும் அறிக்கையிட்ட விசுவாசம் லூத்தரன் சபையிலும் உண்டு.

௨. ஆதித்திருச்சபையில் பராபரனுடைய வசனம் எப்படி சுத்தமாய்ப் பிரசங்கிக்கப்பட்டதோ, அப்படியே அது லூத்தரன் திருச்சபையிலும் கலப்புங் கவடுமற்றுப் போதிக்கப்படுகிறது.

௩. இயேசு இரட்சகர் ஸ்தாபித்த ஞானஸ்நானம் அதிலும் உண்டு.

௪. கர்த்தருடைய இராப்போசனம் அவர் ஏற்படுத்தின பிரகாரமே பரிமாறப்படுகிறது. இந்த ஞானத்திரவியங்களைப் பற்றிய போதகத்தில் லூத்தரன் சபை எதையுங் கூட்டவுமில்லை, குறைக்கவுமில்லை, மாற்றவுமில்லை.

௫. கர்த்தர் ஸ்தாபித்த தெய்வ ஊழியம் அதிலும் இருக்கிறது.

௬. கர்த்தருடைய செபம் அவர் நமக்குப் படித்துக் கொடுத்தபடியேயும், பழைய புதிய ஏற்பாட்டின் விசுவாசிகளின் முன்மாதிரிப்படியேயும் அதிலே செய்யப்படும். இவை முதலிய முகாந்தரங்களின் நிமித்தம் நம்முடைய போதகப் பிதாவாகிய லூத்தரின் பெயரின்படியே அழைக்கப்பட்ட நமது லூத்தரன் திருச்சபை சீர்திருத்தப்பட்ட சபையாக இருக்கிறதேயொழிய புதுச்சபையல்லவென்பது விளங்கும்.

6. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தில் எத்தனை பங்குண்டு.

மூன்று பங்குண்டு.

### முதலாம் பங்கு.

7. முதலாம் பங்கில் அடங்கியிருக்கிறதென்ன.

அதிலே இயேசு இரட்சகர் தமது பரமபிதாவை மகிமைப்படுத்துகிறார். ஏனென்றால்: அந்த வேளையிலே இயேசு மறுமொழியாகச் சொன்னதாவது: பிதாவே, வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, நீர் இவைகளை ஞானிகளுக்குங் கல்விமான்களுக்கும் மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்தினீர் என்கிறதற்காக உம்மை மகிமைப்படுத்துகிறேன். ஆம், பிதாவே, அப்படியே உமக்குப் பிரியமாயிருந்ததென்று நமது சுவிசேஷ வாக்கியத்தின் துவக்கத்திலே எழுதியிருக்கிறது.

8. இயேசுநாதர் தமது பரம பிதாவை என்னத்திற்காக மகிமைப்படுத்துகிறார்.

அவர் தம்முடைய சுவிசேஷத்தையம், தமது இராச்சியத்தின் இரகசியத்தையும் ஞானிகளுக்குங் கல்விமான்களுக்கும் மறைத்த அவருடைய அளவறுக்கப்படாத நியாயத்தீர்ப்புக்காகவும், அது அதைப் பாலகருக்கு வெளிப்படுத்தின பெரிய இரக்கத்துக்காகவும் அவரை மகிமைப்படுத்துகிறார்.

9. இங்கே சொல்லப்பட்ட ஞானிகளுங் கல்விமான்களும் ஆர்.

தங்கள் சுயபார்வையில் ஞானிகளும் பாரபரனுடைய பரிசுத்த ஆவியின் போதகத்துக்கு இடங்கொடாமலிருக்கிற பெருமையுள்ள மனிதருந் தான். அவர்கள் சுவிசேஷத்தினுடைய இரகசியத்தை அறியாமலும் அதின் ஆறுதலையும் இன்பத்தையும் உணராமலுமிருக்கும்படியாகக் கர்த்தர் அவர்களை அவர்கள் சுபாவ இருளிலே விட்டுவைத்துத் தண்டிக்கிறார். இப்படிப்பட்ட மனுஷரைப்பற்றிப் பவுல் அப்போஸ்தலன்: தங்களைத்தானே புகழுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவுந் துணியோம; தங்களாலே தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிடுகிற அவர்களோவென்றால் புத்திமான்களல்லவென்று சொல்லுகிறார் (௨ கொரி, ௰, ௰௨).

10. இங்கே பாலகர் என்று அழைக்கப்பட்டவர்கள் ஆர்.

தங்கள் பேரிலுந் தங்கள் சுயபுத்தியின் பேரிலும் நம்பிக்கை வையாமல், தங்கள் இருதயங்களைப் பாரபரனுடைய சத்தியவசனத்துக்குத் திறந்து, பிள்ளைகளுக்கொத்த உற்சாகமுங் கீழ்ப்படிதலுமுள்ள குணத்தோடு அதை ஏற்றுக்கொள்ளும் மனத்தாழ்மையுள்ள ஆத்துமாக்கள் தான். இவர்களுடைய சுபாவக்குருட்டாட்டத்தைப் பராபரன் நீக்கி, ஞானக்கண்களில் அவர்களைப் பிரகாசிப்பித்து, சுவிசேஷத்தையும் இரட்சிப்பினுடைய வழியையும் அறிகிற அறிவை அவர்களுக்குக் கொடுக்கிறார்.

11. பராபரன் அவர்களுக்குத் தம்முடைய இராச்சியத்தின் இரகசியங்களை எதினாலே வெளிப்படுத்துகிறார்.

தம்முடைய பரிசுத்த வசனத்தினாலும் அதைக்கொண்டு தமது கிரியையை நடப்பிக்கிற பரிசுத்த ஆவியினாலுந் தான். பராபரனுடைய வசனமும் பரிசுத்த ஆவியின் பிரகாசிப்பிக்குதலுமில்லாத மனிதன் லோககாரியங்களிலே எவ்வளவு புத்தியுள்ளவனும் படிப்பாளியுமாயிருந்தாலும், அவன் ஞான காரியங்களிலே குருடனாயிருக்கிறான்.



12. ஆனால் எல்லா மனிதரும் பராபரனுடைய வசனத்தை வாசித்து உணர்ந்துகொள்ளும்படி அது தெளிவானதாயிருக்கிறதா.

பரிசுத்த ஆவிக்கு இடங்கொடுத்து இரட்சிப்பின் பேரிலுள்ள ஆசையோடும சரியான பிரகாரமாகவும் பராபரனுடைய வசனத்தை வாசிக்கிற யாவரும் அதைத் தெளிவாய் அறியக் கூடும். ஏனென்றால் அதிலே நமது புத்திக்கு மேலான தேவ இரகசியங்கள் இருந்தாலும், நாம் பரிசுத்த ஆவியின் ஒத்தாசையினாலே அதிலுள்ள நமது இரட்சிப்புக்குத் தேவையானதெல்லாத்தையும் அறியலாம். ஆதலால் நாம் கர்த்தருடைய வசனமாகிய சத்திய வசனத்தை வாசிக்க வேண்டுமென்று கர்த்தர்தாமே நமக்குப் புத்திசொல்லுகிறார்.

13. பராபரன் தமது இராச்சியத்தின் இரகசியத்தை ஞானிகளுக்குங் கல்விமான்களுக்கும் மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்தினது நியாயமா.

ஆம், அது பராபரனுடைய பரிசுத்த சித்தமும் நீதியுள்ள ஒழுங்குந் தான். ஆதலால்: ஆம், பிதாவே, அப்படியே உமக்கு முன்பாகப் பிரியமாயிருந்தது என்று இயேசுநாதர் நமது வாக்கியத்திலே சொல்லுகிறார்.

## இரண்டாம் பங்கு

14. இரண்டாம் பங்கில் அடங்கியிருக்கிறதென்ன.

இயேசுநாதர் தம்மைக்குறித்துப் பேசி, தாமே நம்முடைய உத்தம இரட்சகரும் ஒன்றான மத்தியஸ்தருமென்று போதிக்கிறார். ஏனென்றால்: என் பிதாவினால் எனக்குச் சகலமும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. பிதா தவிர ஒருவனுங் குமாரனை அறியான். குமாரனும் குமாரன் எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ, அவனுந் தவிர ஒருவரும் பிதாவையும் அறியான் (௨௭). ஆதலால் நாம் இரட்சிக்கப்படுவதற்காகக் கிறிஸ்துநாதரை நமது இரட்சகராகப் பற்றிக்கொண்டு, அவர் பேரிலும் அவருடைய புண்ணியத்தின் பேரிலும் மாத்திரம் நமது முழு நம்பிக்கையை வைக்க வேண்டும்.

15. கிறிஸ்துவின் புண்ணியம் எல்லாமனிதருடைய இரட்சிப்புக்கும் போதுமானதாயிருக்கிறதா.

ஆம். அவர் மனிதனாக மாத்திரமல்ல, மெய்யான தேவனாகவும் இருப்பதால், அவர் சர்வலோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்த்து, எல்லாருக்கும் இரட்சிப்பைச் சம்பாதித்தார். அவருடைய அளவில்லாத புண்ணியத்தோடு நாம்

ஒன்றுங் கூட்டவேண்டியதில்லை. நாம் அதை மெய்யான விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டால் அதினாலேதானே, நாம் இரட்சிக்கப்படுவோம். ஏனென்றால் இயேசுநாதர் இரட்சகராயிருக்கிறார். அவருடைய புண்ணியம் குறைவற்றதாயிருக்கிறது. மேலும் அவர் இப்பூமியிலே தாழ்ந்த நிலைமையில் நிலைத்திராமல், தம்முடைய பிதாவின் வலதுபாரிசத்திலே உயர்த்தப்பட்டு, தமது மனிதசுபாவத்தின்படியேயும் கூட தெய்வீக வல்லமையையும் மகிமையையும் பெற்றுக்கொண்டார். இந்த உயர்ந்த நிலைமையைப்பற்றி அவர்: என்பிதாவினால் எனக்குச் சகலமும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறதென்று நமது வாக்கியத்திலே சொல்லுகிறார். ()

16. நாம் இயேசுநாதரை யல்லாமல் பராபரனோடு ஒப்பரவாகி, இரட்சிக்கப்படக் கூடாதா.

கூடாது. ஏனென்றால் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக்கொண்டும [illegible]குள்ளும் பராபரன் தம்மைப் பரிபூரணமாக வெளிப்படுத்துகிறார். ஆதலால் குமாரனும் குமாரன் எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ, அவனுந் தவிர ஆரும் பிதாவையும் அறியான் என்று கர்த்தர் நமது வாக்கியத்தில் சொல்லுகிறார். நம்மைப் பராபரனோடு ஒப்பரவாக்கி, நமக்கு இரட்சிப்பை உண்டுபண்ணின அவரைக்கொண்டு மாத்திரம் நாம் பராபரனுடைய ஐக்கியத்துக்குட்பட்டு இரட்சிப்படையக் கூடும். ஆகலால் பேதுரு அப்போஸ்தலன்: வேறொருவரிடத்திலும் இரட்சிப்பில்லை, வானத்தின் கீழே மனுஷரில் வேறொரு நாமம் அதினாலே நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்று கட்டளையிடப்பட்டதுமில்லை என்று சொல்லுகிறார் (நடபடி ௪, ௰௨).

17. நம்முடைய இரட்சகராகிய இயேசுநாதரை நாம் எப்படி அறிந்து இரட்சிப்படையக் கூடும்.

நம்முடைய புண்ணியத்தினாலும் பலத்தினாலுமல்ல, பராபரனுடைய கிருபையினாலும் பரிசுத்த ஆவியின் பிரகாசிப்பிக்குதலினாலுந் தான். ஆதலால்: பிதா தவிர ஆருங் குமாரனை அறியான் என்று இயேசுநாதர் நமது வாக்கியத்திலே சொல்லுகிறார். இயேசு இரட்சகரை அறிந்து அறிக்கையிட்ட பேதுருவுக்குக் கர்த்தர்: மாமிசமும் இரத்தமுமல்ல, பரமண்டலங்களில் இருக்கிற என்பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் என்றார் (மத். ௰௬, ௰௭).

## மூன்றாம் பங்கு.

18. சுவிசேஷ வாக்கியத்தின் மூன்றாம் பங்கிலே என்ன அடங்கியிருக்கிறது.



கிறிஸ்துநாதர் குணப்படுகிற ஆத்துமாக்களைக் கிருபையாய்த் தம்மண்டைக்கு அழைத்து, அவர்களை ஆற்றித்தேற்றுகிறார் என்பதே. எப்படியெனில்: பிரயாசப்பட்டுப் பாரம் சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள், நான் உங்களை இளைப்பாற்றுவேன் என்று நமது வாக்கியத்திலே சொல்லுகிறார் (௨௮).

19. கர்த்தருடைய இந்த வார்த்தையின்படியே உண்மையாய்க் குணப்படுகிற ஆத்துமாக்கள் ஆர்.

பிரயாசப்பட்டுப் பாரஞ்சுமந்த மனுஷர்தான்.

20. அவர்கள் எதுக்காகப் பிரயாசப்படுகிறார்கள்.

நரக ஆக்கினைக்குத் தப்பி, நித்திய சீவனையும் இரட்சிப்பையும் அடைய உண்மையாய்ப் பிரயாசப்படுகிறார்கள். ஆதலால் அவர்கள் குணப்படாதவர்களைப்போல் ஆத்துமாக்களுக்காகக் கவலையற்றவர்களும் நிர்விசாரருமாயிராமல்: நாங்கள் என்ன செய்து நித்திய சீவனையடைவோம் என்று விசாரித்துத் தங்கள் ஆத்தும இரட்சிப்பைத்தேடுகிறார்கள்.

21. அவர்கள் எந்தப் பாரத்தைச் சுமந்திருக்கிறார்கள்.

பாவப்பாரத்தைத் தான். ஏனென்றால் அவர்கள் பரிசுத்த ஆவியினாலே பிரகாசிப்பிக்கப்பட்டு, தங்கள் பாவங்களையும் அவைகளால் வரும் பராபரனுடைய கோபத்தையும் பிசாசினுடைய நித்திய சாபத்தையும் உணர்ந்து, அதற்காகத் தங்கள் இருதயங்களில் மனஸ்தாபப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களை அற்பமாக எண்ணாமல் மிகவும் பாரமுள்ளவைகளாக எண்ணி, மனஸ்தாபப்பட்டுப் பெருமூச்சுவிடுகிறார்கள். அப்படிப்பட்ட பாரஞ்சுமந்தவர்களில் தாவீது சங்கீதக்காரன் ஒருவன். ஏனென்றால் அவன்: நான் அடக்கிவைத்தமட்டும் நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோச்சுது. ஏனெனில் இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினாலே, என் சாரம் உஷ்ணகால வறட்சிகளைப்போல் வறண்டுபோச்சுது என்று சொல்லுகிறான் (சங். ௩௨, ௩, ௪). செபம்பண்ணத் தேவாலயத்துக்குப் போயின ஆயக்காரனும் அப்படிப்பட்ட பாரஞ்சுமந்தவனாயிருந்தான். ஏனென்றால் அவன் தூரநின்று, தன் மார்பிலே அடித்துக்கொண்டு: பராபரனே, பாவியாகிய என் பேரிலே கிருபையுள்ளவராகும் என்றான் (லூக். ௰௮, ௰௩).

22. குணப்படுகிற ஆத்துமா என்ன செய்ய வேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

௧. அவர்கள் கிறிஸ்துவண்டைக்கு வரவேண்டும். ஏனென்றால்: நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள் என்கிறார்.

உ. கிறிஸ்துவின் நுகத்தடியைத் தங்கள்மேல் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் என் நுகத்தடியை உங்கள்மேல் ஏற்றுக்கொள்ளுங்கள் என்கிறார்.

ங. கிறிஸ்துவினிடத்தில் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்கிறார்.

23. இயேசு இரட்சகர் காணப்படுகிற பிரகாரமாகப் பூமியில் இல்லையே. நாம் அவரண்டைக்கு எப்படி வரக்கூடும்.

அவர் தம்முடைய திருச்சரீரத்தோடே பரமண்டலத்தில் இருக்கிறபடியினால் நாம் ஞானப்பிரகாரம் விசுவாசத்தைக்கொண்டு அவரண்டைக்கு வரவேண்டும். அப்படி அவரண்டை வருகிறவன், அதாவது அவரை விசுவாசிக்கிறவன் இரட்சிக்கப்படுவான்.

24. நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய கிறிஸ்துவின் நுகத்தடி என்ன.

தன்னைத்தான் வெறுக்கிறதும், பராபரனுக்குக் கீழ்ப்படிகிறதும், துன்பங்களைப் பொறுமையாய்ச் சகிக்கிறதுமாகிய இவைகளே கர்த்தருடைய நுகத்தடி. ஏனென்றால் கர்த்தரண்டை வருகிறவன் தன் சுய இச்சையின்படி தனக்கு இன்பமான வழியில் நடக்கிறதை விட்டுத் தன்னைத்தான் வெறுத்துத் தன் இரட்சகருக்குக் கீழ்ப்படிந்து அவரைப் பின்செல்ல வேண்டும். அதைப் பற்றி: யாதொருவன் என் பிறகே வர வேண்டுமென்றால், தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்செல்லக்கடவான் என்று கர்த்தர் சொல்லுகிறார் (மத். கசு, உச). அதைக் குறித்து ராஅசு-ம் ஞானப்பாட்டில் பாடுகிறதாவது:

உங்கள் தலைவராகிற வழியில் நீங்கள் பாடும்
என் சத்தம் கேட்டெல்லாரும் உபத்திரவரும் என்னைப்போல்
நான் உங்களுக்குக் காட்டிய எடுத்துக்கொண்டு வாருங்கள் மு.

25. நான் அப்படிச் செய்ய யாரிடத்தில் கற்றுக்கொள்ள வேண்டும்.

இயேசு சுவாமியினிடத்தில் தான். ஆகலால் என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்கிறார். அப்படி பவுல் அப்போஸ்தலனும்: கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது என்று சொல்லி (பிலிப். உ, ரு), நம் கிறிஸ்துவினிடத்தில் மனத்தாழ்மை, மெத்தனவு, கீழ்ப்படிதல் முதலிய நற்குணங்களைக் கற்றுக்கொள்ள நமக்குப் புத்திசொல்லுகிறான்.

26. ஆனால் இது விசுவாசிகளுடைய ஜீவனை அதிக வருத்தமும் விசனமுமுள்ளதாக்குகிறதில்லையா.



இல்லை. என் நுகத்தடி மெதுவும் என் சுமை லேசுமாயிருக்கிறதென்று கர்த்தர் நமது வாக்கியத்திலே சொல்லுகிறார். பாவத்தை நடப்பிக்கிறதும் பிசாசுக்கு ஊழியஞ் செய்கிறதும் மாமிசத்துக்கு இன்பமாயிருந்தாலும், அது கஷ்டமுள்ள அடிமைத்தனமாம். கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்கிறதோ வருத்தங்களுந் துன்பங்களும் நேரிடுகிறதாயிருந்தாலும், இன்பமும் பாக்கியமுமுள்ள ஊழியமாம்.

27. கிறிஸ்து தம்மண்டைக்கு வருகிறவர்களுக்கு என்ன வாக்குத்தத்தம் கொடுக்கிறார்.

அவர்களுக்கு இளைப்பாறுதலைக் கொடுப்போம் என்று வாக்குத்தத்தம் கொடுக்கிறார். ஏனென்றால் நான் உங்களை இளைப்பாறுவேன் என்றும், உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்றும் கர்த்தர் நமது வாக்கியத்திலே சொல்லுகிறார்.

28. அவர் கொடுக்கிற இந்த ஞான இளைப்பாறுதல் என்ன.

க. அவர் அவர்களை நீதிமான்களாக்கிப் பாவமன்னிப்பைக் கொடுக்கிறார். அப்படிப் பராபரனுடைய கிருபையைத் தேடின ஆயக்காரன், நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குப் போனான். கிறிஸ்து தம்மண்டைக்கு வந்த திமிர்வாதக்காரனுக்கு; மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.

உ. மனச்சாட்சியிலே மெய்யான ஆறுதலையும் சமாதானத்தையுங் கொடுக்கிறார். எவ்வெனில் பராபரனுடைய கிருபையினாலே பாவத்தின் பாரச்சுமை நீக்கப்பட்ட மனுஷன் பராபரனுடைய கோபத்துக்கும் சாபத்திற்கும் பதிலாக அவருடைய சிநேகத்தையுந் தயவையும் ருசிபார்க்கிறான். ஆகலால் நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டபடியினாலே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய்ப் பராபரனிடத்திலே சமாதானம் பெற்றிருக்கிறோம் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறான் (ரோ. ரு, க).

ங. அவர் அவர்களுக்குப் பரம சந்தோஷத்தையும் வருஞ் ஜீவனின் நன்மைகளையும் முன்னதாக்கமாய் ருசிபார்க்கக் கொடுக்கிறார். ஏனென்றால் விசுவாசிகள் பூமியிலிருக்கக்கொள்ள நித்திய ஜீவனின் நன்மைகளைப் பரிபூரணமாய்ப் பெற்று அநுபவிக்கக் கூடாதவர்களாயிருந்தும், அவர் அவர்களைச் சிலவிசை அதின் முன்ருசியினால் இச்சீவனிலும் சந்தோஷிப்பிக்கிறார்.

ச. அவர் அவர்களுக்குப் பாக்கியமான மரணத்தையும் நித்திய ஜீவனையுங் கொடுக்கிறார். ஏனென்றால் இம்மை

யிலே இயேசு இரட்சகரண்டைக்கு வந்து, அவரிடத்தில் முடிவுபரியந்தம் நிலைத்திருக்கிறவன் மரணமடைந்தபின்பு கர்த்தரிடம் சேர்ந்து, அவருடைய நித்திய சந்தோஷபாக்கியத்தில் பங்கடைந்து அநுபவிப்பான். இதைப் பற்றித் தாவீது சங்கீதக்காரன்: நானோவெனில் நீதியில் உம்முடைய சமுகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன் என்கிறான் (சங். ௧௭, ௰௫).

29. நாம் பாவிகளாயிருக்கிறபோதே நாம் நேராக இயேசு இரட்சகரண்டை வந்து இந்த இளைப்பாறுதலை யடைவோமா.

ஆம். நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள் என்று அவர் தாமே நம்மைக் கூப்பிடுகிறார். அப்படியே பரிசுத்த அப்போஸ்தலன்: இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்துக்குச் சகாயமான கிருபையைக் கண்டடையவும் கிருபாசனத்தண்டைக்குத் தைரியத்துடனே சேரக்கடவோம் என்று சொல்லுகிறான் (எபி. ௪, ௰௬).

படிப்பினை.

30. இதினால் நாம் எவைகளைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

௧. திருச்சபையின் மேலும் அதிலிருக்கும் ஞானகாரியங்களின் மேலும் ஒரு மனுஷனுக்கல்ல, பராபரனுக்கு மாத்திரம் அதிகாரம் உண்டு. ஏனென்றால் அவரே சபையினுடைய தலையும் எசமானுமாயிருக்கிறார். என் பிதாவினால் எனக்குச் சகலமும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறதென்று கிறிஸ்துநாதர் சொல்லுகிறார். இந்த அதிகாரத்தை அவர் வேறொருவனுக்கும் கொடாமல், தாமே தமது திருச்சபையை ஆளுகிறவராயிருக்கிறார். ஆதலால் எல்லாரும் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

௨. பராபரனுக்குச் செலுத்தவேண்டிய மகிமையைத் தேவதூதருக்காவது பரிசுத்தவான்களுக்காவது வேறெந்த மனிதருக்காவது செலுத்தாமல், அவருக்கே செலுத்தவேண்டும். ஏனென்றால் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராகிய அவர் சகல மகிமைக்கும் ஸ்தோத்திரத்துக்கும் பாத்திரர். நீங்கள் பராபரனுக்குப் பயந்து, அவருக்கு மகிமையைச் செலுத்துங்கள் என்று இந்த நாளின் திருவாக்கியம் நமக்குச் சொல்லுகிறது. இயேசு இரட்சகர்: பிதாவே, வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்தினீர்: என்றிதற்காக உம்மை மகிமைப்படுத்துகிறேன் என்று நமது



சுவிசேஷ வாக்கியத்திலே சொல்லுகிறார். ஆதலால் அவருக்குச் செலுத்தவேண்டிய மகிமையைச் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களுக்குச் செலுத்துகிறது அவரைக் கனவீனப்படுத்துகிறதும் தூஷிக்கிறதுமாயிருக்கிறது.

௩. நாம் நமது சுயபுத்தியினாலும் ஞானத்தினாலும் இரட்சிப்பின் வழியையும் பராபரனுடைய இராச்சியத்தின் இரகசியங்களையும் அறியக் கூடாதவர்களாயிருக்கிறோம். நமக்கு அந்த அறிவைக் கொடுக்கிறவர் பரிசுத்த ஆவியானவர். ஆதலால் நாம் நம்மைத் தாழ்த்தி, கர்த்தர் நமக்கு அந்த அறிவைக் கொடுக்கும்படி கெஞ்சிக்கேட்டு ஞானபாலகராக பரிசுத்த ஆவியையும் அவருடைய போதகத்தையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

௪. சத்தியவேதத்தில் அடங்கியிருக்கிற பராபரனுடைய வசனம் பரம இராச்சியத்தின் அறிவுக்கும் மெய்விசுவாசத்துக்கும் ஒன்றான ஊற்றாயிருக்கிறது. ஏனென்றால் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலரும் சுவிசேஷகரும் பராபரனுடைய இரகசியங்களின் வெளிப்படுத்தலைச் சுவரூபபிரகாரமாக வேத எழுத்துக்களினால் தெரிவித்திருக்கிறார்கள்.

௫. இயேசு இரட்சகரை அறிகிற மெய் அறிவு எல்லாவற்றிலும் முக்கியமானதாயிருக்கிறது. ஏனென்றால் கிறிஸ்துவில் எல்லா ஞான இரகசியங்களும் அடங்கியிருக்கிறது. அவருக்குள் தெய்வத்துவத்தின் நிறைவெல்லாம் மெய்யாக வாசமாயிருக்கிறது (கொலோ. ௨, ௯). ஆதலால்: கிறிஸ்துவைக் குறித்து உங்களுக்கு என்னமாய்க் காணுதென்று அவர் தம்மை அறிகிற இந்த அறிவைப்பற்றி தாமே கேட்டார். அவர்: அவர்கள் ஒன்றான மெய்த்தெய்வமாகிய உம்மையும் நீர் அனுப்பின இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவனாயிருக்கிறதென்று சொல்லுகிறார் (யோவா. ௧௭, ௩).

௬. இரட்சிப்படைவதற்கு நமது சுயபுண்ணியமும் அல்ல, பரிசுத்தவான்களுடைய புண்ணியமும் அல்ல, கிறிஸ்துவின் பிராயச்சித்தப் புண்ணியம் மாத்திரமே உதவும். ஏனென்றால்: பிரயாசப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள் என்று அவரே நம்மை நோக்கிக் கூப்பிடுகிறார். மேலும் இவர் பேரில் விசுவாசிக்கிறவனெவனோ அவன் இவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் இவருக்குச் சாட்சிகொடுக்கிறார்கள் (நடபடி. ௰, ௪௩).

௭. இயேசு இரட்சகர் தம்மண்டைக்கு வந்து குணப்படுகிற ஆத்துமாக்கள் எல்லாரையும் கிருபையாய் ஏற்

டுக்கொள்ளுகிறார். பாவத்தையும் அக்கிரமத்தையும் நடப்பித்த கள்ளன் தன் உயிர் போகும் கடைசிநேரத்தில் குணப்பட்டு இயேசு இரட்சகரை நோக்கினபோது, அவர் அவனைக் கிருபையாய் ஏற்றுக்கொண்டு: இன்றைக்கு என்னுடனே பரதீசில் இருப்பாய் என்றாரே. ஆம், அவரண்டைக்கு வருகிறவன் முன் எப்படிப்பட்டவனாயிருந்தாலுஞ் சரி, கர்த்தர் அவனை உடனேதானே ஏற்றுக்கொண்டு இரட்சிக்கிறார்.

அ. இயேசு இரட்சகர் உண்மையாய்க் குணப்படுகிற ஆத்துமாக்களுக்குப் பரிபூரண ஆறுதலைக் கொடுக்கிறார். ஏனென்றால் அவர் அவர்களுக்குப் பாவமன்னிப்பையும் இரட்சிப்பின் நிச்சயத்தையும் தமது சமாதானத்தையும் அவர்களுக்குக் கொடுக்கிறார். நாம் அவருடைய இந்த ஆறுதலைப் பெற்றுக்கொண்டு அநுபவிக்கும்படிக்கும், நாம் சாகும் வேளையில் நித்திய ஜீவனை அடையும்படிக்கும் இந்த நமது அருமை இரட்சகராகிய இயேசுநாதரண்டைக்கு மெய்க்குணப்படுதலோடும் விசுவாசத்தோடும் வரவும், அவரிடத்தில் முடிவுபரியந்தம் நிலைத்திருக்கவும் கர்த்தர் நமக்குக் கிருபை செய்வாராக, ஆமேன்.

## அறுப்புக்காக இஸ்தோத்திரஞ் செலுத்தும் நாள்.

(ஞானப்பாட்டு உஅ. உஅ.)

### சுவி. லூக். ௰உ, ௰௫—௩௧.

அவர் பின்னையும் அவர்களுடனே: பொருளாசைக்கு எச்சரிக்கையாயிருக்கப் பாருங்கள்; ஏனென்றால் ஒருவனுக்கும் அவன் ஜீவன் அவன் ஆஸ்திகளின் திரட்சியினாலே உண்டாயிராது என்றார்.
16 அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார், அதாவது: ஐசுவரியமுள்ள ஒரு மனுஷனுடைய காணிபூமி நன்றாய் விளைந்தது.
17 அவன் தனக்குள்ளே சிந்தித்துக்கொண்டு சொன்னதாவது: என்ன செய்வேன்; என் தானியங்களைச் சேர்த்துவைக்க எனக்கு இடம் இல்லையே.
18 நான் ஒன்று செய்வேன்; என் களஞ்சியங்களை இடித்துப்போட்டு, பெரிதாய்க் கட்டி எனக்கு விளைந்த எல்லாத்தையும் என்னுடைய நல்ல வஸ்துக்களையும் அங்கே சேர்த்து வைத்து,
19 என் ஆத்துமத்துடனே: ஆத்துமமே. உனக்கு அநேகம் வருஷங்களுக்கு வேண்டிய நல்ல வஸ்துக்கள் சேர்த்திருக்கிறது; இளைப்பாறு, புசி, குடி, பூரிப்பாயிரு என்பேன் என்று சொன்னான்.
20 ஆனால் பராபரன் அவனுடனே: மதியற்றவனே, இந்த இராத்திரியிலே உன் ஆத்துமம் உன்னிடத்தில் கேட்டு வாங்கப்படும்; அப்போது நீ ஆயத்தம் பண்ணினவைகள் ஆருடையதாம் என்றார்.
21 பராபரனுக்குள் ஐசுவரியவானாயிராமல், தனக்குத் தானே பொக்கிஷங்களைச் சேர்க்கிறவன் அப்படி இருக்கிறான் என்றார்.
22 அவர் தம்முடைய சீஷருடனே சொன்னதாவது: ஆகையால் என்ன உண்



போமென்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போமென்று உங்கள் சரீரத்துக்காகவும், கவலைப்படாதேயுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
23 ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும் உடையைப் பார்க்கிலும் சரீரமும் அதிகமாயிருக்கிறது.
24 காகங்களைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதும் இல்லை, அறுக்கிறதும் இல்லை; அவைகளுக்குப் பண்டகசாலையும் இல்லை, களஞ்சியமும் இல்லை. இல்லாதிருந்தாலும், பராபரன் அவைகளைப் பிழைப்பூட்டுகிறார். பறவைகளைப் பார்க்கிலும் நீங்கள் எத்தனை விசேஷித்திருக்கிறீர்கள்.
25 உங்களில் எவன் கவலைப்படுகிறதினால் தன் வளர்த்தியோடே ஒரே முழத்தைக் கூட்டலாம்.
26 இப்போதும் எல்லாவற்றிலும் சிறியதும் உங்களால் ஆகாதிருக்கிறதுக்கொள்ள, மற்றதுகளைக் குறித்து நீங்கள் கவலைப்படுவானேன்.
27 லீலிய புஷ்பங்களை கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதும் இல்லை, நூற்கிறதும் இல்லை, இருந்தாலும், சாலொமோன் முதலாய்த் தன் சகல மகிமையிலும் இவைகளில் ஒன்றைப் போலும் உடுத்தியிருந்ததில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
28 இப்போதும் இன்றைக்கு இருந்து நாளை அடுப்பிலே போடப்படும் வெளியின் புல்லைப் பராபரன் இவ்விதமாய் உடுத்துவித்தால், அற்பவிசுவாசிகளே, உங்களை எத்தனை அதிகம்,
29 ஆனபடியால், நீங்கள் என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம் என்று தேடாமலும், மனதில் அனுமானப்படாமலும் இருங்கள்.
30 ஏனென்றால் இதுகள் எல்லாத்தையும் லோகச்சாதியார் நாடித் தேடுகிறார்கள். உங்கள் பிதாவோவெனில் இதுகள் உங்களுக்குத் தேவை என்று அறிந்திருக்கிறார்.
31 பராபரனுடைய இராச்சியத்தைத் தேடுங்கள்; அப்போது இதுகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்றார்.

1. நாம் இன்றைக்குக் கொண்டாடுகிற விசேஷித்த நாள் எங்ஙனே.

அறுப்புக்காக இஸ்தோத்திரம் செலுத்தும் நாள். இப்போது முடிந்த அறுப்புக்காலத்தில் நம்முடைய நிலங்களின் பலன் சேர்க்கப்பட்டபிறபாடு நாம் சந்தோஷத்தோடும் நன்றியறிதலோடும் இஸ்தோத்திரஞ் செலுத்தும் இந்த நாளைக் கொண்டாடுகிறது மிகவுந் தகுதியாயிருக்கும்.

2. அறுப்புக்காக நாம் ஆருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்த வேண்டும்.

உன்னத கர்த்தரும் நமது பரம பிதாவுமாகிய பராபரனுக்குத்தான்; ஏனென்றால் சகல நல்ல ஈவுகளையும் அருளுகிறவராகிய அவர் நம்மையுஞ் சகல ஜீவஜெந்துக்களையும் பராமரித்துக் காப்பாற்றுகிறார். அதைப் பற்றிப் பரிசுத்த சங்கீதக்காரன் சொல்லுகிறதாவது: எல்லாச் ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது. தேவரீர் ஏற்றவேளையிலே அவைகளின் போசனத்தை அவைகளுக்குக் கொடுக்கிறீர். உம்முடைய கையைத் திறந்து, ஜீவனுள்ள

தெல்லாவற்றையும் இதமியமாய்த் திருப்தியடையப் பண்ணுகிறீர் (என்பதே ... சங். ௱௪, ௰௪). ஆதலால் அவர் தேவையான ஆகாரத்துக்கென்று பூமியின் பலனையும் பலவித தானியங்களையும் நமக்குக் கொடுக்கிறவராயிருக்கிறார்.

3. பராபரன் அதை இப்போது எப்படி நமக்குக் கொடுக்கிறார்.

நாம் வாசமாயிருக்கிற இப்பூமி ஆதிமனிதருடைய பாவத்தின் நிமித்தம் சபிக்கப்பட்டுப் போனபின்பு அது தன்னிலேதான் முள்ளுங் குருக்கும் முளைப்பிக்கக் கூடியதாயிருந்தது. நாம் சாப்பிடத்தக்க தானியங்களையும் நமக்குத் தேவையான ஆகாரத்தையும் நம்மு[illegible]லையும் பிரயாசமும் இல்லா[illegible]லே தான் பொதுவாய் [illegible]கிறதில்லை. உன் முகத்தின் வேர்வையால் அப்பம் புசிக்கக் கடவாய் என்ற பராபரனுடைய வார்த்தையின்படியே, மனிதர் யாவரும் வேலைசெய்து உழைத்துச் சாப்பிட வேண்டும் என்பது பராபரன் ஏற்படுத்தின ஒழுங்கு. இதினால் நாம் நம்முடைய நிலங்களின் பலனை அடையும்படியாக உழவும் விதைக்கவும் அறுக்கவும் இவை முதலான வேலைகளைச் செய்யவும் அவசரமாயிருக்கிறது. ஆகிலும் நமக்குண்டான பூமியின் நன்[illegible]னுடைய ஈவாயிருக்கிறதேயொழிய வேறல்ல. ஏனென்றால் அவர் நமக்கு வேலைசெய்கிறதற்கு வேண்டிய பெலனையும் சுகத்தையும் புத்தியையும் கொடுக்கிறதோடு தமது ஆசீர்வாதத்தையும் நமக்கு அருளுகிறார். இதையன்றி நம்முடைய பிரயாசம் எல்லாம் வீணும் விருதாவுமாகும். [illegible]யையும் வெயிலையும் செழிப்பான காலங்களையுங் கட்டளையிடுகிறவர் அவரே. அதைப் பற்றிப் பவுல் அப்போஸ்தலன்: பராபரன் நன்மை செய்துவந்து, வானத்திலிருந்து நமக்கு [illegible]களையும் செழிந்த காலங்களையுங் கொடுத்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பினார் என்று சொல்லுகிறான். (அப். ௧௪, ௰௭).

4. இந்நாளின் சுவிசேஷ வாக்கியத்தில் எத்தனை பங்குண்டு.

இரண்டு பங்கு.

முதலாம் பங்கு.

5. முதலாம் பங்கில் அடங்கியிருக்கிறதென்ன.

பொருளாசைக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று இயேசு இரட்சகர் சொன்ன நல்ல புத்திமதி.

6. பொருளாசைக்கு ஆர் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.



நாம் எல்லாரும், விசேஷமாய் ஐசுவரியமுள்ள மனுஷரும். ஏனென்றால் அவர்களே பொருளாசை என்ற பாவத்துக்கு அதிகமாய்ச் சோதிக்கப்படுவார்கள். அவர்களுக்கும் நம்மெல்லாருக்கும் இயேசு இரட்சகர்: பொருளாசைக்கு எச்சரிக்கையாயிருக்கப் பாருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கும் அவன் ஜீவன் அவன் ஆஸ்திகளின் திரட்சியினாலே உண்டாயிராது என்று நம்முடைய வாக்கியத்திலே சொல்லுகிறார் (௰௫). அதாவது: ஒரு மனுஷன் அதிக லோக நன்மைகளை அடைந்திருப்பதின் நிமித்தம் அவன் வெகுநாளாயும் பாக்கியமாயும் பிழைத்திருக்கிறதில்லை. லோக நன்மை[illegible]யாத ஏழைகள் அநேகவிசை ஐசுவரியவான்களைப் பார்க்கப் பாக்கியவான்களாயிருந்து, நீடித்த நாட்களாய்ச் ஜீவித்திருக்கிறார்கள்.

7. நாம் பொருளாசைக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று கர்த்தர் நம்மை எச்சரித்து, எந்த உவமையைச் சொல்லுகிறார்.

ஐசுவரியமுள்ள ஒரு மனிதனைப் பற்றிய உவமையைத்தான்.

8. அந்த ஐசுவரியவானுக்கு எதினால் அதிக ஐசுவரியம் உண்டாயிருந்தது.

பராபரன் குடியானவனாகிய அவனுக்கு நல்ல விளைவையும் திரள்தானியங்களையுங் கொடுத்ததினால் தான். ஏனென்றால் ஐசுவரியமுள்ள ஒரு மனுஷனுடைய காணிபூமி நன்றாய் விளைந்தது என்று கர்த்தர் நம்முடைய வாக்கியத்திலே சொல்லுகிறார் (௰௬). தம்முடைய தயவினாலே இந்த மனுஷனைக் குணப்படுதலுக்கென்றும், பூமியின் நன்மைகளைக் கொடுத்ததினால் பரம நன்மைகளை நாடித்தேடுகிறதற்கென்றும் அவனை ஏவி எழுப்பும்படியாக[illegible]ன அவனுக்குப் பூமியின் பலன்களைத் திரளாகக் கொடுத்து, அவனை ஆசீர்வதித்தார்.

9. அந்த ஐசுவரியவான் பராபரன் கொடுத்த நன்மைக்கு ஏற்றாப்போல் நடந்து கொண்டானா.

இல்லை. அவன் அந்த நன்மையைக் கொடுத்த பராபரனை நினையாமலும் ஸ்தோத்திரிக்காமலும் அவரை மறந்துவிட்டான். நம்முடைய வாக்கியம் சொல்லுகிறபடியே அவன் தனக்குள் சிந்தித்துக்கொண்டு: என்ன செய்வேன், என் தானியங்களைச் சேர்த்துவைக்க எனக்கு இடம் இல்லையே என்று சொன்னான். அதின்படி அவன் தன் ஆத்துமத்துக்காகக் கொஞ்சம் என்கிலும் கவலைப்படாமலும், அது கெட்டுப்போகுமென்று பயப்படாமலும், தன் தானியங்கள் சேதப்

படாதபடிக்கு மிகுந்த கவலைப்பட்டு, அதை எப்படி காப்பாற்றலாம் என்று தனக்குள்ளே யோசித்துக் கொண்டான்.

10. அதற்கென்று அவன் என்ன யோசனை பண்ணினான்.

களஞ்சியங்கள் தானியங்களைச் சேர்த்துவைக்கப் போதாதிருப்பதால், அவைகளை இடித்து புதிதான பெரிய களஞ்சியங்களைக் கட்ட யோசனை பண்ணினான். அவன் சொன்னதாவது: நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்துப்போட்டு, பெரியவைகளைக் கட்டி, எனக்கு விளைந்ததெல்லாவற்றையும் என்னுடைய நல்ல வஸ்துக்களையும் அங்கே சேர்த்துவைப்பேன் என்றான் (௧௮).

11. அவனுடைய பிரதான கவலையும் விசேஷித்த ஆசையும் என்ன.

அவன் பரம காரியங்களைப் பற்றி முற்றிலுங் கவலையற்றவனாயிருந்து, தன்னால் கூடியமட்டும் சரீரத்துக்கடுத்த நன்மைகளையும் லோகப் பொருளையுமே சேர்த்துக்கொண்டு நன்றாய்ப் பத்திரப்படுத்தின பிற்பாடு, அவைகளை அநேக வருஷகாலங்களாய் யாதொரு பிரயாசமும் வேலையுமில்லாமல் அனுபவிக்க வாழ்ந்திருக்கலாம் என்ற யோசனையாய் இருந்தான். இதைப்பற்றி அவன் தன் ஆத்துமத்தோடு பேசி: ஆத்துமமே, உனக்கு அநேகம் வருஷங்களுக்கு வெகு நல்ல வஸ்துக்கள் வைத்திருக்கிறது; இளைப்பாறு, புசி; குடி, பூரிப்பாயிரு என்பேன் என்று சொன்னதினால் காண்பித்தான் (௰௯).

12. ஐசுவரியமுள்ள மனிதனுடைய இந்த விருப்பம் நிறைவேறிற்று.

இல்லை. நான் வெகு நாட்களுக்கு என்னுடைய ஆஸ்தியைச் சந்தோஷமாய் அனுபவித்து வாழ்ந்திருப்பேன் என்று அவன் நினைத்திருக்கும்போதே, மரணம் திடீரென்று வந்து, அவனுடைய வாழ்வுக்கும் சந்தோஷத்துக்கும் யோசனைக்கும் சீவனுக்கும் முடிவு செய்தது. அதைப்பற்றி இயேசு இரட்சகர் நம்முடைய வாக்கியத்திலே: ஆனால் பராபரன் அவனுடனே: மதியற்றவனே, இந்த இராத்திரியிலே உன் ஆத்துமம் உன்னிடத்தில் கேட்டு வாங்கப்படும்; அப்போது நீ ஆயத்தம்பண்ணினதுகள் ஆருடையதாம் என்றார் (உ௰). அதாவது, நீ இந்த இராத்திரியிலே சாவாய் என்றார் என்று சொல்லுகிறார்.

13. பராபரன் அவனை ஏன் மதியற்றவன் என்று அழைத்தார். அவன் தனக்காகப் புத்தியாய் நடந்து கவலைப்படவில்லையா.



அவன் தன் சரீரத்துக்கடுத்த நன்மைகளுக்காக அதிகக் கவலைப்பட்டிருந்தும், தன் ஆத்தும இரட்சிப்புக்காகக் கவலைப்படாமலும் அதை நாடித் தேடாலும் இருந்தது பெரிய பயித்தியந் தான். அவன் தன் மரணத்தை நினையாமலும் அதற்கென்று தன்னை ஆயத்தம் பண்ணாமலும், அது வர இன்னம் நாள் செல்லும் என்று நினைத்தது புத்தியீனமல்லவா. மேலும் அவன் சேர்த்துவைத்ததும் அதிசயமாய்ச் சிநேகித்ததுமான லோகபொக்கிஷங்களை அவன் தான் சாகிற நேரத்திலே மறுலோகத்துக்கு எடுத்துப்போகக் கூடாதபடியால் மற்றவர்களல்லவோ அதை எடுத்துக் கொண்டு அநுபவிக்கிறார்கள். ஆகையால் கர்த்தர் அந்த மனுஷனையும் மற்றெல்லாப் பொருளாசைக்காரரையுங் கேட்கிறது என்னவென்றால்: அப்போது, அதாவது நீ சாகிற நேரத்திலே நீ ஆயத்தம் பண்ணினதுகள் ஆருடையதாம். வேறோரிடத்திலே சொல்லப்பட்ட ஐசுவரியமுள்ள மனுஷன் தன் சீவகாலத்திலே அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்திருந்தும், சாகிற நேரத்திலே தன்னுடைய ஆஸ்திகளையெல்லாம் மற்ற மனுஷருடைய பிரயோசனத்துக்காக விட்டுவிட்டு மரித்து அடக்கப்பட்டு நரக சுவாலையிலே வேதனைகளில் இருந்தானே. அந்த வேதனைகளில் அவன் இருக்கையில் ஒரு துளி தண்ணீருக்கு ஏங்கி ஆசைப்பட்டும், அதை அடையக் கூடாமல் மிகவும் வருத்தப்பட்டானே. பராபரனுக்குள் ஐசுவரியவானாயிராமல் தனக்குத் தான் பொக்கிஷங்களைச் சேர்க்கிறவன் அப்படியிருக்கிறான் (உ௧).

14. பராபரனுக்குள் ஐசுவரிவான் ஆர்.

தெய்வபத்தியிலும் மெய்விசுவாசத்திலும் தேறின பரம சிந்தையுள்ள மனுஷன் தான். ஏனென்றால், அவன் பராபரனுடைய கிருபையைப் பெற்றுக்கொண்டு, பாவமன்னிப்பு நீதி தெய்வசமாதானம் முதலான ஞான பொக்கிஷங்களை அடைந்தவனாய் இருக்கிறான். அவன் பராபரனுடைய பிள்ளையும் மோட்ச இராச்சியத்தின் சுதந்தரனுமாயிருப்பதால், பூமியிலே அவனுக்கு ஒன்றுமில்லாதேபோனாலும், ஆம் அவன் அந்த ஏழைலாசருவைப்போல் தரித்திரத்திலே கொஞ்சக்காலம் வருத்தப்பட நேரிட்டாலும், மரணவேளையிலே நிலைநிற்கிற நித்திய பொக்கிஷம் அவனுக்காகப் பரமண்டலத்திலே வைக்கப்பட்டிருக்கும். வருஞ் சீவனிலே அவன் அதை முழுதும் அடைந்து பரிபூரணமாய் அநுபவிப்பான்.

## படிப்பினை.

15. சுவிசேஷ வாக்கியத்தின் முதலாம்பங்கினாலே நாம் என்னத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

க. பொருளாசை பெரிய பாவம். அதினிமித்தம் கர்த்தர்: பொருளாசைக்கு எச்சரிக்கையாய் இருங்கள் என்று புத்திசொல்லுகிறார். பொருளாசை வேதத்திலே விக்கிரக ஆராதனை என்று அழைக்கப்பட்டிருக்கிறது. பராபரனைப் பார்க்கிலும் பொருளை அதிகமாய்ச் சிநேகித்து, ஐசுவரியமுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்கிற ஆசையாய் ஆஸ்தியைச் சேர்க்கிறவர்களும், அதின் பேரில் நம்பிக்கை வைக்கிற யாவரும் விக்கிரக ஆராதனைக்காரராயிருக்கிறார்கள். அவர்களுக்கு மோட்ச இராச்சியத்திலே பங்கில்லை.

உ. பொருளாசை நமக்கு நாசமும் கேடுண்டாக்குகிறதாயிருக்கிறது: ஐசுவரியமுள்ள மனுஷன் எதினாலே குணப்படாமல் கெட்டுப்போனான் என்றால், பொருளாசையினால் தான். பொருளாசை சகல தீமைகளுக்கும் வேராயிருக்கிறதென்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறான் (க தீமோ. சு, ய). ஏனென்றால் அதினாலே கோபம் பகை பொறாமை அநியாயம் மோசம் திருட்டு பொய்ச்சாட்சி கொள்ளை முதலான பாவங்கள் வருகிறது. அப்படியே லாபான் பொருளாசையினால் தன் மருமகனாகிய யாக்கோபை மோசம் போக்கினான். ஆகான் பொருளாசையினால் ஏவப்பட்டு சாபத்தீடானதில் சிலதைத் திருடிக்கொண்டு, தன்மேலும் தனது குடும்பத்தின் மேலும் சாபத்தையும் ஆக்கினையையும் வருவித்துக்கொண்டான். எலீசா தீர்க்கதரிசியின் வேலைக்காரனாகிய கேயாசி பொருளாசையினால் ஏவப்பட்டு பொய்சொல்லி குஷ்டரோகத்தினால் தண்டிக்கப்பட்டான். சாமுவேலுடைய குமாரர் பொருளாசையினாலே லஞ்சம் வாங்கி நியாயத்தைப் புரட்டினார்கள். அனனியா சப்பீராள் என்றவர்கள் பொருளாசையினால் ஏவப்பட்டு பொய்சொல்லி, மாயமாய் நடந்து, பராபரனுடைய கோபத்துக்குள் அகப்பட்டார்கள். மேலும் பொருளாசையைப்பற்றிப் பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறதாவது: ஐசுவரியவான்களாக வேண்டும் என்றிருக்கிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும் மனுஷரைக்கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான வெகு இச்சைகளிலும் விழுகிறார்கள் என்கிறான் (க தீமோ. சு, கூ).

ங. பொருளாசை பெரும்பாலும் நம்முடைய கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. அதினிமித்தம் அதற்கு



எச்சரிக்கையாயிருக்கப் பாருங்கள், அதாவது பொருளாசை இருதயத்திலே நுழையாதபடிக்கும் வளராதபடிக்கும் அவனவன் தன்னைத் தானே சோதித்துப் பார்க்கவேண்டும். மரத்தின் வேர் நாம் அதைப் பார்க்காதபடிக்குப் பூமியின் கீழ் தன்னை மறைத்து வளர்ந்து பரம்புகிறதுபோல், பொருளாசை என்கிற கெட்ட வேரும் நாம் அறியாதபடிக்கு நமது இருதயங்களில் வளருகிறது.

ச. பொருளாசைக்காரன் புத்தியீனனும் நிர்ப்பாக்கியனுமாயிருக்கிறான். ஏனென்றால் அவன் வெகு கவலையோடும் பிரயாசத்தோடும் சேர்த்துவைத்த ஆஸ்தியை அவன்தானே அநுபவிக்கிறதில்லை. அவன் சாகிற நேரத்திலே அவன் பெந்துக்களோ அந்நியரோ அதைப் பெற்றநுபவிக்கிறார்கள்.

ரு. லோகப்பொருள் தன்னிலே தானே பாவமற்றதாயிருந்தும், அநேகர் குணப்பட்டு இரட்சிக்கப்படாதபடிக்குத் தடையாயிருக்கிறது. ஆதலால் ஐசுவரியவான்கள் இரட்சிக்கப்படுகிறது மிகவும் அரிதென்று கர்த்தர் சொல்லுகிறார்.

சு. பராபரனுடைய கிருபையைத் தேடி அடைந்த மெய்க்கிறிஸ்தவன் புத்தியுள்ளவனும் பராபரனுக்குள் ஐசுவரியவானுமாயிருக்கிறான். அவனுடைய ஆஸ்தியைப் பொட்டுந் தூருவும் கெடுக்கிறதில்லை. திருடர் கன்னமிடுகிறதுந் திருடுகிறதுமில்லை.

எ. கர்த்தர் நமக்குக் கொடுத்த பூமியின் நன்மைகளை நாம் சரியாய்க் கையாடவேண்டும். நாம் அவைகளுக்குச் சொந்தக்காரராயிராமல் உக்கிராணக்காரராய் மாத்திரம் இருப்பதால், நாம் அவைகளைச் சுய இஷ்டத்தின்படியல்ல, வீண் பெருமை குடிவெறி பெருந்தீனி முதலான பாவங்களுக்கும் அல்ல, கர்த்தருடைய பரிசுத்த சித்தத்தின்படி அவருடைய மகிமைக்கென்று கையாட கடனாளிகளாயிருக்கிறோம். ஆதலால் நாம் அவைகளை நம்முடைய சரீரசுகத்துக்கென்று அநுபவிக்கிறதோடு கூட அவைகளினால் பராபரனுக்கு ஊழியஞ் செய்து, பிறத்தியானுக்கு உதவி ஒத்தாசையாயிருந்து உபகாரம் பண்ணிக்கொண்டு வரவேண்டும். நன்மை செய்யவும் தானம் ஐக்கியமாயிருக்கவும் மறவாதேயுங்கள். ஏனென்றால் இப்படிக்கொத்த பலிகளுக்குப் பராபரன் இதமியப்படுகிறார் என்று பரிசுத்த அப்போஸ்தலன் சொல்லுகிறான் (எபிரே. யங, யசு). இந்நாளின் திருவாக்கியத்திலேயும் பவுல் அப்போஸ்தலன் தர்ம உபகாரத்தைச் செய்கிறதற்கு நம்மை ஏவி எழுப்பி: சிறுக விதைக்கிறவன் சிறுகவும் அறுப்பான்; ஆசீர்வாதங்களோடு விதைக்கிறவன் ஆசீர்வா

தங்களாமே அறுப்பான். சந்தோஷமாய்க் கொடுக்கிறவனைப் பராபரன் சிநேகிக்கிறார் என்று சொல்லுகிறான்.

## இரண்டாம் பங்கு.

16. சுவிசேஷ வாக்கியத்தின் இரண்டாம் பங்கில் அடங்கியிருக்கிறதென்ன.

வயிற்றின் துக்கக்கவலைக்கும் பிழைப்பின் கவலைக்கும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும் என்று இயேசுநாதர் தமது சீஷருக்குச் சொன்ன புத்திமதி.

17. அதற்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டியவர்கள் ஆர்.

எளிய சனங்களுக்கும் தங்கள் பிழைப்புக்காக வருந்தப்படுகிறவர்களுக்கும் பொதுவாக அதிகத் துக்கக் கவலை வரும். ஆகலால் அவர்கள் விசேஷமாய் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அதைப்பற்றிக் கர்த்தர் தமது எளிய சீஷருக்கு நம்முடைய வாக்கியத்திலே புத்திசொல்லுகிறார். ஆகிலும் அவர் அதை அவர்களுக்கு மாத்திரமல்ல, நமமெல்லாருக்கும்: என்ன உண்போம் என்று உங்கள் சீவனுக்காகவும், என்ன உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதேயுங்கள் என்று சொல்லுகிறார் (உஉ).

18. பிழைப்பின் துக்கக்கவலைக்குக் கர்த்தர் நம்மை எச்சரித்து, முதலாவது என்ன சொல்லுகிறார்.

அது அவசரமற்றதென்று சொல்லுகிறார். இதை ரூபிக்க அவர் நமது சரீரத்தையும் சீவனையும் ஆகாசத்துப் பறவைகளையும் வெளியின் புல் புஷ்பங்களையுஞ் சுட்டிக் காட்டுகிறார். இதை நாம் கவனித்துப்பார்த்தால், நாம் கவலைப்படுகிறது அவசியந் தேவையில்லை என்பது விளங்கும்.

19. நமது சரீரத்தையும் சீவனையுங் காட்டி கர்த்தர் நமக்குச் சொல்லுகிறதென்ன.

ஆகாரத்தைப் பார்க்கச் சீவனும், உடையைப் பார்க்கச் சரீரமும் அதிகமாயிருக்கிறது என்கிறார் (உரு). பராபரன் அதிக முக்கியமான காரியங்களாகிய சரீரத்தையும் சீவனையும் நமக்குக் கொடுத்திருப்பதால், அற்பகாரியங்களாகிய சரீரத்துக்கும் சீவனுக்கும் வேண்டிய ஆகாரமாகிய அன்னவஸ்திரம் முதலிய நன்மைகளையுங் கொடுப்பார் என்று நாம் நிச்சயித்து நம்பியிருக்கக் கூடும்.

20. ஆகாயத்தின் பறவைகளாகிய காகங்களை நமக்குக் காட்டி, கர்த்தர் என்ன சொல்லுகிறார்.

காகங்களைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதும் இல்லை, அறுக்கிறதும் இல்லை; அவைகளுக்



குப் பண்டகசாலைகளும் இல்லை, களஞ்சியமும் இல்லை; இல்லாவிட்டாலும் பராபரன் அவைகளைப் பிழைப்பூட்டுகிறார். பறவைகளைப் பார்க்க நீங்கள் விசேஷித்திருக்கிறீர்கள் என்கிறார் (உச). புத்தியற்றதும் வேலைசெய்து உழைக்கக் கூடாததுமான ஜந்துச் சிருஷ்டிகளைப் பராபரன் ஆதரித்துக் காப்பாற்றி வரக்கொள்ள, இவைகளிலும் விசேஷித்திருக்கிற மனிதராகிய நம்மை அவர் ஆதரித்துக் காப்பாற்றுகிறுப்பாரோ.

21. வெளியின் புஷ்பங்களைக் கர்த்தர் நமக்குக் காட்டிச் சொல்லுகிறதென்ன.

லீலிய புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதும் இல்லை, நூற்கிறதும் இல்லை. இல்லாவிட்டாலும் சாலொமோன் முதலாய்த் தன் சகல மகிமையோடும், இவைகளில் ஒன்றைப் போலும் உடுத்தியிருக்கவில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்போதும், இன்றைக்கு இருந்து நாளை அடுப்பிலே போடப்படும் வெளியின் புல்லைப் பராபரன் இவ்விதமாய் உடுத்துவித்தால், உங்களை எத்தனை அதிகம், அற்பவிசுவாசிகளே என்கிறார் (உஎ. உஅ). வெகு சீக்கிரம் அழியப்போகிற வெளியின் புஷ்பங்களுக்கு மகா ஐசுவரியமும் மகிமையுமுள்ள சாலொமோன் இராசா முதலாய் உடுத்தியிராதிருந்த மகா நேர்த்தியும் அலங்காரமுமான உடையைப் பராபரன் உடுத்துவித்தால், மனுஷராகிய நமக்குத் தேவையான உடையைக் கொடுப்பார் என்று நாம் உறுதியாய் நம்பியிருக்க வேண்டும்.

22. பிழைப்பின் துக்கக்கவலைக்குக் கர்த்தர் நம்மை எச்சரித்து, இரண்டாவது என்ன சொல்லுகிறார்.

அது முழுவதும் வீணாயிருக்கிறது என்கிறார். ஏனென்றால் உங்களில் ஆர் கவலைப்படுகிறதினாலே தன் அளவோடு ஒரே முழத்தைக் கூட்டலாம். இப்போதும் எல்லாத்திலும் சிறியதும் உங்களால் ஆகாதிருக்கக்கொள்ள, மற்றதுகளுக்காக நீங்கள் கவலைப்படுவானேன் என்கிறார் (உரு. உசு). நம்முடைய பிரயாசத்தினாலே நம்முடைய அளவோடு ஒரு முழத்தை நாம் கூட்டக் கூடாததுபோல், நாம் நம்முடைய கவலையினாலே நமக்குத் தேவையானதைச் சம்பாதிக்கக் கூடாது. நாம் என்னதான் செய்தாலும், கவலைப்பட்டாலும் கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்கள் விருதாவாய் அதில் உழைக்கிறார்கள். கர்த்தர் பட்டணத்தைக் காக்காராகில் சாமக்காரன் விருதாவாய் விழித்திருக்கிறான். நீங்கள் இருட்டோடு

எழுந்து, [illegible] வேலையில் தரித்து, வருத்தங்களுள்ள அப்பத்தைச் சாப்பிடுகிறது விருதா; தமக்குப் பிரியமானவனுக்கு அவர் நித்திரையை அளிக்கிறார் (சங். ௱உ௭, க. உ).

23. பிழைப்பின் துக்கக் கவலைக்கு நம்மை எச்சரிக்கக் கர்த்தர் மூன்றாவது சொல்லுகிறதென்ன.

அது நமக்கு மகா கெடுதலும் சேதமுமான காரியம் என்று காண்பிக்கிறார். கவலைப்படுகிறவர்களை அற்ப விசுவாசிகள் என்று அழைக்கிறார். வயிற்றின் துக்கக் கவலையினால் இருதயம் பா[illegible]டுகிறதால், விசுவாசம் வரவரக் குறைந்து கெட்டுப்போ[illegible]. கவலைப்படுகிறவன் செபம் பண்ணுகிறதற்கும் கர்த்தருடைய [illegible]த்தை வாசித்துக் கேட்கிறதற்கும் தடைப்படுவான். இந்தத் துக்கக் கவலை நல்ல விதையை நெருக்கும் முள்ளுகளுக்கு ஒப்பாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்.

24. பிழைப்பின் துக்கக் கவலைக்கு நம்மை எச்சரிக்கக் கர்த்தர் நாலாவது என்ன சொல்லுகிறார்.

அது பாவமும் கிறிஸ்தவர்களுக்கு அடாதகாரியமும் என்று காண்பிக்கிறார். ஏனென்றால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று நீங்கள் கேளாமலும், மனதில் அனுமானப்படாமலும் இருங்கள். ஏனென்றால் இதுகள் எல்லாத்தையும் லோகச் சா[illegible]யார், அதாவது பராபரனை அறியாத அஞ்ஞானிகள் முதலான அவிசுவாசிகள் நாடித் தேடுகிறார்கள் என்கிறார் (உக. [illegible]). கவலைப்படுகிறவன் பராபரனையும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் நம்பாமல், அவரைப் பொய்யராக அசட்டைபண்ணி, கனவீனப்படுத்துகிறான்.

25. இப்படியிருப்பதால் நாம் நம்முடைய பிழைப்புக்காக வீண்கவலைப்படாமல் செய்யவேண்டியதென்ன.

க. நாம் உண்மையும் சுறுசுறுப்புமாய் வேலைசெய்து செபம்பண்ணி, நம்முடைய கவலையை எல்லாம் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். ஏனென்றால் நம்முடைய பரம பிதாவாகிய அவர் நமக்காகக் கவலைப்படுகிறார். உங்கள் பிதாவோ இவைகள் உங்களுக்குத் தேவை என்று அறிந்திருக்கிறார் என்று கர்த்தர் நம்முடைய வாக்கியத்திலே சொல்லுகிறார் ([illegible]). நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாத்திலும் உங்கள் விண்ணப்பங்கள் ஸ்தோத்திரத்துடனே கூடிய செபத்தினாலும் வேண்டுதலினாலும் பராபரனுக்கு அறிவிக்கப்படக்கடவது என்று பவுல் அப்போஸ்தலனும் (பிலி. ச, சு); உங்கள் கவலையை எல்லாம் அவர்மேல் எறிந்துவிடுங்கள்; ஏனெனில் அவர் உங்களுக்காக விசாரிப்பாய்



இருக்கிறார் என்று பேதுரு அப்போஸ்தலனும் நமக்குப் புத்தி சொல்லுகிறார்கள் (க பேது. ரு, எ).

உ. நாம் நம்முடைய ஆத்துமத்துக்காகச் சரியாய்க் கவலைப்பட்டு, பராபரனுடைய இராச்சியத்தையும் அதினுடைய நன்மைகளையும் தேடவேண்டும். அதற்கென்று இயேசு இரட்சகர் நம்முடைய வாக்கியத்திலே பராபரனுடைய இராச்சியத்தையே தேடுங்கள் என்று நம்மை [illegible] எழுப்புகிறார் (கூக).

26. பராபரனுடைய [illegible]யத்தை நாம் எப்படித் தேடவேண்டும்.

குணப்பட்டு இ[illegible] இரட்சகரை விசுவாசிக்க வேண்டும். ஏனென்றால் இந்த இராச்சியத்தை ஸ்தாபித்தவரும் அதிலுள்ள பரம நன்மைகளை நமக்குச் சம்பாதித்துக் கொடுக்கிறவரும் அவர் தான்.

27. பராப[illegible]டைய இராச்சியத்தைத் தேடுகிறவர்களுக்குக் கர்த்தர் என்ன வாக்குத்தத்தங் கொடுக்கிறார்.

அப்போது இவைகள் எல்லாம், அதாவது சரீரப் பிழைப்புக்குத் தேவையான சகல நன்மைகளும் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று நம்முடைய வாக்கியத்தில் சொல்லுகிறார் (கூக).

[illegible]டிப்பினை.

28. சுவிசேஷ வாக்கியத்தின் இந்த இரண்டாம் பங்கினாலே நாம் என்னத்தைக் கற்றுக் கொள்ளுகிறோம்.

க. [illegible]ராபரன் தம்முடைய வரங்களையும் லோகத்துக்கடுத்த நன்மைகளையும் பலவிதமாய்க் கொடுக்கிறார். ஏனென்றால் அவர் தம்முடைய ஞானத்தின்படியே சிலருக்கு [illegible] அதிகமாயும் சிலருக்குக் கொஞ்சமாயுங் கொடுக்கிறார். ஆதலால் அவருடைய சித்தத்தின்படியே ஐசுவரியவான்களும் தரித்திரரும் பூமியிலே இருக்கிறார்கள். மேலும் அவர் ஒருவருக்கு நல்ல விளைச்சலையும், வேறொரு வருஷம் மட்டான விளைச்சலையும் அல்லது பஞ்சத்தையுங் கொடுக்கிறார்.

உ. கர்த்தர் கொடுக்கிற நன்மைகளை நாம் எப்போதும் மனத்தாழ்மையோடும் நன்றியறிதலோடும் ஏற்றுக் கொள்ளவேண்டும். நாம் யாதொரு நன்மைக்கும் பாத்திரரல்லாத நீசப்பாவிகளாயிருக்கிறோம். ஆதலால் கர்த்தர் நமக்கு எத்தனை அதிகமாய்த் த[illegible]டைய நன்மைகளைக் கொடுக்கிறாரோ அத்தனை அதிகமாய் நம்மையே தாழ்த்தி, யாக்கோபோடு: தேவரீர் உமது [illegible]யானுக்குச் செய்து வந்த எல்லாக் கிருபைகளுக்கும் எல்லா உண்மைகளுக்கும் நான் எம்

மாத்திரம் என்று சொல்ல வேண்டும். ஆம், அவர் நமக்குச் செல்வங்களைக் கொடுத்தாலும், நாம் முறுமுறுக்காமலும் அவ நம்பிக்கையாகாமலும் கர்த்தர் கொடுத்தது போதும் என்று நன்றியறிதலோடு பெற்றுக்கொண்டு, ஸ்தோத்திரிப்புடனே அநுபவித்து, அவர் பேரில் நம்பிக்கையாயிருக்கக் கடவோம்.

௩. [illegible]க்கருக்குள் ஐசுவரியமுள்ள விசுவாசிகள் பெரும்பாலும் லோகத்திலே தரித்திரராயிருக்கிறார்கள். அப்படியே கர்த்தருடைய [illegible] இருந்தார்கள். ஆம், அவர் தாமே நம் ஐசுவரியமுள்ளவர்களாகும்படிக்கு லோகத்திலே தரித்திரரானார். சிமிர்ன சபையின் தூதனுக்குக் கர்த்தர்: ஐசுவரியமுள்ள உனக்கு இருக்கிற தரித்திரத்தை அறிந்திருக்கிறேன் என்று சொல்லுகிறார் (அறிவி. உ, ௯).

௪. கர்த்தர் தம்முடையவர்களை எளியவர்களாக லோகத்திலே வைத்தாலும், அவர்களை மறவாமல், வேண்டிய நன்மைகளைக் கொடுத்து அவர்களைப் பராமரிக்கிற இரக்கமுள்ள தகப்பனாயிருக்கிறார். தம்முடைய குமாரனை அவர்களுக்காகக் கொடுத்த பராபரன் அவர்களுடைய பிழைப்புக்கு வேண்டிய ஆகாரத்தையுங் கொடாமலிருக்க மாட்டார். அவர் மிருக ஜீவன்களுக்கும், கூப்பிடுகிற காக்காய்க் குஞ்சுகளுக்கும் அவைகளின் ஆகாரத்தைக் கொடுக்கிறார் என்று பரிசுத்த சங்கீதக்காரன் சொல்லுகிறான் (௱சஎ, ௯). ஆதலால் அவர் எத்தனை யதிகமாய்த் தம்முடைய பிள்ளைகளுக்குத் தேவையானவைகளெல்லாவற்றையும் அவர்களுக்குக் கொடுப்பார்.

௫. கர்த்தர் இதுவரைக்கும் நமக்குச் செய்துவந்த உபகாரங்களையும் நன்மைகளையும் நாம் நம்முடைய எழுப்புதலுக்கென்றும் நமது விசுவாசத்தைப் பலப்படுத்துகிறதற்கென்றும் அடிக்கடி நினைவுகூரவேண்டும். ஆதலால் கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே என்று தாவீது சங்கீதக்காரன் சொல்லுகிறான் (௱௩, உ).

நம்முடைய பிதாவுடைய கிருபாகடாட்சத்தினாலேயும் சுத்த தயவினாலேயும் இந்நாள்வரைக்கும் நம்மை நன்றாய்ப் பராமரித்துக் காப்பாற்றின திரியேக பராபரனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவருக்குச் சதாகாலங்களாய் என்றென்றைக்கும் துதியும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக, ஆமேன்.

முற்றும்.

# BOOKS & TRACTS

PUBLISHED BY THE

## EVANGEL. LUTHERAN MISSION SOCIETY, TRANQUEBAR.

| | | | |
|---|---|---|---|
| *Luther's* Smaller Catechism. ஞான உபதேசக் குறிப்பிடம். | 0 | 1 | 0 |
| *Schwarz*, Catechism. சிறுவருக்காகச் செய்யப்பட்ட ஞான உபதேச வினாவிடை. | 0 | 2 | 0 |
| *Spener's* Catechism. லூத்தர் என்பவரின் ஞான உபதேசக் குறிப்பிடத்தை விஸ்தரிக்கும் வினாவிடை. | 0 | 4 | 0 |
| *Schanz*, ஞான உபதேசக் குறிப்பிடத்தைச் சார்ந்த [illegible] இடமாலை. | 0 | 4 | 0 |
| *Dietrich*, Catechism. ஞான உபதேச விஸ்தரிப்பு. | 0 | 8 | 0 |
| Concordia I. & II. ஒருமிப்பு. சுவிசேஷ லூத்தரன் சபையார் ஒருமித்து அங்கீகரிக்கிற விசுவாச அறிக்கைகள். | 1 | 2 | 0 |
| Augsb. Confession. அகுஸ்தாபுரி விசுவாச அறிக்கை. | 0 | 4 | 0 |
| *Ziegenbalg*, Theologia Thetica. வேதசாஸ்திரம். | 0 | 12 | 0 |
| *Graul's*, Distinctive Doctrines with an Abridgment of the Book of Concord. போதகவித்தியாசம். இதில் மெய்ப்போதக சாரம் அநுபந்தமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது. உ-ம் பதிப்பு. | 0 | [illegible] | 0 |
| Synopsis. Evangelica. சுவிசேஷக நாற்சந்தி. | 0 | 2 | 0 |
| *Hutter*, Compendium. தேவசாஸ்திரப் பொழிப்பின் மொழிபெயர்ப்பு. | 0 | 8 | 0 |
| *Packiam*, Salvation. கிறிஸ்து [illegible]க்க இரட்சண்ணிய மகத்துவம். | 0 | 2 | 0 |
| Script. Hist., O. T. வேதசரித்திரம் பழைய ஏற்பாடு. | 0 | 5 | 0 |
| Questions on the O. T. வேதசரித்திர வினாவிடை. பழைய ஏற்பாட்டின் சரித்திரம். | 0 | 1 | 0 |
| Script. Hist., N. T. வேதசரித்திரம். புதிய ஏற்பாடு. | [illegible] | [illegible] | 0 |
| Sacred History I. பரிசுத்தசரித்திரம். முதற்பங்கு. | 0 | 10 | 0 |
| Sacred Hist. II. பரிசுத்தசரித்திரம் இரண்டாம்பங்கு. | 0 | 6 | 0 |
| Passion History. இயேசுநாதர் பாடுபட்ட சரித்திரம். | [illegible] | [illegible] | 0 |
| *Samuel*, Lent-Meditations. ஒருசந்திகொள் தியானப்புத்தகம். | 0 | 5 | 0 |
| Church Hist. I. & II. திருச்சபைச்சரித்திரம். | 0 | 12 | 0 |
| *Fabricius'* Hymnbook, 375 Hymns. ஞானப்பாட்டுகளின் புஸ்தகம். [illegible] பாட்டுகள். | 0 | 12 | 0 |
| *Fabricius' Hymnbook* with Tunebook. ஞானப்பாட்டுகளின் புஸ்தகத்தோடுகூட இராக புஸ்தகமும். | [illegible] | 14 | 0 |
| School-Hymnbook with tunes. ஞானப்பாட்டுமாலை. | 0 | 6 | 0 |
| Tunebook to *Fabricius'* Hymnbook. ஞானப்பாட்டுகளின் இராகப் புஸ்தகம். | 0 | 3 | 0 |
| Church-Book. தேவாராதனை மாலை. | 0 | 12 | 0 |
| Formularies for Catechists etc. உபதேசி தேவாராதனை முறைமை. | 0 | 2 | 0 |
| Pocket Communion-Book. திருவிருந்தடி. | 0 | 2 | 0 |
| *Uhlefeld*, Sermons on the Gospels. சுவிசேஷ வாக்கியப் பிரசங்க புஸ்தகம். | 2 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| *Sandeg[illegible]en*, Catechetical Sermons on the Gospels. கேள்வி பிரசங்கப் புஸ்தகம். | 1 | 8 | 0 |
| *Schanz*, Epistle Postille. பொஸ்தில்லவென்ற நிருபவாக்கிய பிரசங்க புஸ்தகம். | 1 | 8 | 0 |
| *Samuel*, Reference Book of Bible Texts. சமயோசித வேதவாக்கிய குறிப்பு. | 0 | 4 | 0 |
| Golden Treasury. [illegible] ஞானபெட்டி. | 1 | 4 | 0 |
| *Müller's* Hours of Spiritual Refreshment. நாள் முசிப்பாற்றல் [illegible]ம். | 1 | 0 | 0 |
| *Löhe*, Prayerbook. ஜெபப்புஸ்தகம். | 0 | 6 | 0 |
| *Arndt's* Garden of Paradise. ஞானமந்திர சல்லப் பூங்காவனம். | 0 | 10 | 0 |
| *Arndt's* True Christ. I. ஞானக்கண்ணாடி[illegible]கம் பங்கு. | 0 | 8 | 0 |
| Old Testament. பழைய ஏற்பாடு. | 0 | 8 | 0 |
| New Testament. புதிய ஏற்பாடு, 8vo. | 0 | 12 | 0 |
| Apocrypha. அப்போகிரிப்பாகமங்களின் புஸ்தகம். | 1 | 8 | 0 |
| Spiritual Songs. இனிமையான ஞானப்பாட்டுகள். | 0 | 6 | 0 |
| Christian Proverbs and Maxims. [illegible] | 0 | 2 | 0 |
| No. 1. Exercises on Noun, Copula and Object. | 0 | 2 | 6 |
| No. 2. Exercises on the Regular Verb with grammatical Rules. | 0 | 4 | 0 |
| No. 3. Exercises on the compound and complex Sentence with grammatical Rules. | 0 | 6 | 0 |
| Cural, I. & II. இதிலே அறத்துப்பாலும் பொருட்பாலும் அடங்கியிருக்கிறது. | 0 | 8 | 0 |
| Children's Treasure. பாலர் பொக்கிஷம். | 0 | 1 | 6 |
| Abridgment of the Book of Concord. மெய்ப்போதக சாரம். | 0 | 0 | 6 |
| *Schwartz*, Dialogues. [illegible] பத்திக்காரனுக்கும் கிறிஸ்தவனுக்கும் உண்டான சம்பாஷணை. | 0 | 1 | 6 |
| Dr. Martin Luther. மார்ட்டீன் லுத்தர் என்ற வேத [illegible]திரியாரின் சீவிய சரித்திர சுருக்கம். | 0 | 1 | 0 |
| Life of Barth. Ziegenbalg. சீகன்பால்கு ஐயர் சீவிய சரித்திரம். | 0 | 1 | 0 |
| New Testament. புதிய ஏற்பாடு, 12mo. | 0 | 8 | 0 |
| Book of Psalms. [illegible] புஸ்தகம். | 0 | 1 | 0 |
| மத்தேயு. | 0 | 1 | 0 |
| மாற்கு. லூக்கா. யோவான். அப்போஸ்தலர் நடபடி. @ | 0 | 0 | 3 |
| First Book. ஆதிமூல புஸ்தகம். | 0 | 1 | 0 |
| Sheet Lessons. வாசகபாடம். Nr. 1—3. | 0 | 1 | 0 |
| do do. Nr. 1—10. | 0 | 2 | 0 |
| Astronomy. வானசாஸ்திர சுருக்கம். | 0 | 0 | 6 |
| True Wisdom. மெய்ஞ்ஞானம். | 0 | 0 | 6 |
| First Milk. கிறிஸ்தமார்க்க உபதேசத்தின் முதற்பால். | 0 | 0 | 3 |
| Seven Reasons. மோட்சபாக்கியத்தை அடைய விரும்புகிறவர்கள் கவனிக்கவேண்டிய [illegible] நியாயங்கள். | 0 | 0 | 1 |
| Customs of Native Christians. [illegible]பத்திவிலக்கு. | 0 | 0 | 6 |
| Tracts on Christian Missions. [illegible]யான் சரித்திரங்கள். இரண்டு பங்குகள். @ | 0 | 1 | 0 |